

பாரத அம்மானை

BHARATA AMMANAI

சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

T. 22307

சரசுவதிமகால் வெளியீடு எண் - 286

பாரத அம்மானை

டாக்டர், அ. மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.
பேராசிரியர் (ஓய்வு) திரு. புட்பம் கல்லூரி. பூண்டி.

வெளியீடு :
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகச்சங்கம், தஞ்சை.

1990

விலை : ரூ. 90-00

BIOGRAPHICAL DATA

Title of the Book	:	Bharata Ammanai
Editor	:	Dr. A. M. Parimanam
Publishers	:	Director, T. M. S. S. M. Library Society
Publication No	:	296
Language	:	Tamil
Edition	:	I St Edition
Date of Publication	:	August 1990
Paper used	:	10. 9 D. C. S. P. B.
Size of the Book	:	Double Crown. 1×4
Printing types used	:	12 Pt.
Numbers of Copies Printed	:	500
Number of Pages	:	IV + 470 + 16
Price	:	Rs. 90-00
Printer	:	Sakthi Printers, 208, South Main St., Thiruvaiyaru - Phone : 346
Binding	:	Half Calico
Subject	:	Folk - Lore

முன்னுரை

பாரத நாட்டின் இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதம் தமிழில் இன்னும் முழுமையாக மொழியாக்கம் செய்யப்பெறவில்லை. மற்றொரு இதிகாசமான இராமாயணத்தைக் கம்பர் முழுமையான காப்பியமாகத் தமிழில் வடித்துத் தந்துள்ளார். கம்பரின் காப்பியச் சிறப்பால் இராமாயணக் கதை தமிழர்களின் உள்ளத்தில் நிலைபெற்றுவிட்டது. அந்த அளவுக்குப் பாரதக்கதை தமிழர்களின் உள்ளத்தை ஈர்க்காது போயினும் பாரதக் கதையைச் சங்க காலத்திலிருந்தே தமிழர்கள் அறிந்து வந்திருக்கின்றனர். வில்லி பாரதம் சுவைமிக்க தமிழில் பாடப்பெற்றிருப்பினும் கம்பராமாயணத்தைப் போல் ஏனோ தமிழ் மக்களை அது கவரவில்லை, மேலும் பாரதத்திலுள்ள 18 பருவங்களில் வில்லி பாரதம் இறுதி எட்டு பருவங்களை விட்டுவிட்டது. அதனால் பாரதக் கதை முழுமை பெறவில்லை.

பாரதக் கதையின் பல பகுதிகள் பொதுமக்களைக் கவர்ந்து வந்திருப்பதால் நாட்டுப்புற இலக்கியங்களில் அவை இடம் பெற்றுள்ளன. பாரத நாடகம், பாரதக்கும்மி, பாரத அம்மானை போன்று பல நாட்டுப் புறப் பாடல் வடிவங்களைப் பெற்றுள்ளன. இவற்றுள் சரசுவதி மகாலின் மூலமாக வெளியிடப்பெறும் பாரத அம்மானை என்ற இந்நூல் இலக்கிய வளம் மிக்கதாக விளங்குகிறது. இந்நூல் வில்லி பாரதத்தை அடியொற்றிச் செல்கிறது. இந்நூலிலும் பாரதக்கதை முழுமையாக இல்லை.

இந்நூலை ஆராய்ச்சி முன்னுரையுடனும், அடிக்குறிப்புகளுடனும், அபிதான விளக்கத்துடனும் அருமையாகப் பதிப்பித்துத் தந்த முனைவர் **பரிமணம்** அவர்களுக்கும், அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது பல படிவங்களை மெய்ப்புப் பார்த்துத் தந்த சரசுவதி மகால் நூலகர் (இரண்டாம் நிலை திரு. **சீராளனுக்கும்** என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டுப்புற இலக்கிய வரிசையில் இந்நூல் சிறந்ததோர் இடத்தைப் பெறும் என்று நம்புகிறேன்.

இந்நூல் வெளியீட்டுக்குப் பொருளுதவி செய்த **நடுவண் அரசிற்கும்** நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. சதாசிவம்,
இயக்குநர்.

தஞ்சாவூர்
9 — 8 — 90

வேண்டுகோள்

கருணையுள்ளம் கொண்ட நம் முன்னோர்கள். அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரஸ்வதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர் களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரஸ்வதிமகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெருக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரஸ்வதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
9—8—90

மு. சதாசிவம். எம்.ஏ., எம்.லிட்.,
இயக்குநர்,
சரசுவதிமகால் நூலகம்.

பதிப்புரை

"பாட்டாள நல்ல தொண்டையாய் போற்றி"

ஆங்கிலேயர் இந்நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கு முன்னர்த் தஞ்சைத் தரணியை ஆண்டு வந்த மராத்திய மன்னர்கள், தாங்கள் ஆற்றிய பல்வேறு தொண்டுகளால், தமிழ் மக்களின் பாராட்டிற்கு உரியராகத் திகழ்ந்தனர். சமயம், கலை, கல்வி, பண்பாடு, மொழி போன்ற துறைகளில் அவர்கள் ஆற்றிய தொண்டின் சிறப்பினை இன்றும் அறிந்தின்புற முடிகிறது. தஞ்சையை ஆண்ட மராத்திய மாமன்னர் சரபோசியின் பன்முகத் தொண்டுகள் அவர்தம் புகழுடலை கனங்காட்டித் திகழ்கின்றன. தம் ஆட்சிக்குப் பன்னூறாண்டுகள் முன்னர் ஆண்ட தமிழ் மன்னர்கள் 'சரசுவதி பண்டாரம்' என்னும் பெயரில், கலைகள் பலவற்றையும் வகுத்து விளக்கும் களஞ்சியங்களான நூல்களைத் தொகுத்துப் போற்றி வந்துள்ளனர். இதனைக் கல்வெட்டுச் செய்திகளால் உணரலாம். அதனைப் பேணிக்காத்துப் பெருக்கி வளர்த்தளித்த பெருமை மாமன்னர் சரபோசியைச் சாரும். காவியம், ஓவியம், சிற்பம், மருத்துவம், இசை, நாடகம் போன்ற துறைகள் பற்றிய ஓலைச் சுவடிகளைத் திரட்டித் தொகுத்த பெருமை அவருக்குண்டு. மொழி வேறுபாடு பாராமல் தமிழ், சமசுகிருதம், தெலுங்கு, மராத்தி, ஆங்கிலம், பிரஞ்சு போன்ற மொழிகளிலமைந்த ஏடுகளைத் திரட்டிக் காத்த பெருமையும் அவருக்குண்டு.

சரபோசி மன்னரால் புரக்கப் பெற்றுச் 'சரசுவதி மகால்' என்னும் பெயரில், இந்தியப் புகழ் பெற்று விளங்கும் நூலகம் தன் குறைந்த செல்வ நிலையிலும், நிறைந்த பல நூல்களை வெளியிட்டு வருவது குறிப்பிடத் தக்கது. இந்தியப் பண்பாட்டு மூலங்களுள் ஒன்றாகத் திகழும் மகாபாரதத்தைப் பின்பற்றி, நாட்டுப் பாடல் வடிவில் உருவாகிய 'பாரத அம்மானை' என்னும் ஏட்டினைப் பதிப்பிக்கும் பணியினைச் சரசுவதி மகால் நூலகத்தார் எனக்கு அளித்துள்ளார்கள். நாட்டுப்புறப் பாடல் இயல்பு கொண்டிருந்தும் உணர்த்தும் கருத்தால் உயர்ந்து விளங்கும் பாரத அம்மானையைப் பதிப்பிக்கும் பணியினை எமக்கு நல்கிய, தஞ்சை மன்னர் சரபோசியின் சரசுவதி மகால் நூல் நிலையக் காப்பாளராகத் திகழும் தஞ்சை மாவட்ட ஆட்சியர் திரு மா. இராமு, இ.ஆ.ப அவர்களுக்கும் இந்நாலுக்கு அணிந்துரை வழங்கிய

தஞ்சை மாவட்ட ஆட்சியர் திரு **சு. மச்சேந்திரநாதன்**, இ. ஆ. ப. அவர்களுக்கும், நூலக நிர்வாக அலுவலர் திரு **சீ கிருஷ்ணன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பதிக்கும் பணியில், நான் தளர்வுற்றபோது ஊக்கமளித்து உரமூட்டிய, சரசுவதி மகால் வெளியீட்டு மேலாளர் திரு **அ. பஞ்சநதம்**. எம். ஏ. பி.லிப்.எஸ்.சி, அவர்களுக்கும், நூலகர் நிலை!! திரு **எம். சீராளன்**, பி.ஏ.,பி.எல். ஐ.எஸ். அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. பதிப்புத் துறையில், இலாபமே கருதும் வணிக மனம் இன்றித் தொண்டு நலம் ஒன்றே கருதிச் செயற்படும் சரசுவதி மகால் நூலகத்தின் பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

தஞ்சாவூர்
16 - 10 - 88

அன்பன்,
அ. மா. பரிமணம்

ஆய்வுரை

உலகிலுள்ள பல்வேறு நாட்டுப் பண்பாடுகளுள், பாரதப் பண்பாடு, மிகப் பழங்காலந்தொட்டே சிறந்து விளங்கி வரும் ஒன்றாகும் என்பதைச் சமுதாயவியலறிஞர் பலரும் குறிப்பிட்டுள்ளனர். வட இமயம் முதல் தென் குமரி வரை பரந்து பட்டிலங்கும் பாரத நாட்டில் உருவாகி வளர்ந்துள்ள பண்பாட்டினைக் காத்து, அதன் மக்களுக்கு வாழையடி வாழையாக வழங்கும் வாயில்களுள் இலக்கியம் சிறந்த ஒன்றாகும் பாரத நாட்டின் பழம் பெரும் இதிகாசங்களாக அமைந்துள்ள இராமாயணம், மகாபாரதம் என்னும் இரு பேரிலக்கியங்களும், இந்நாட்டுப் பண்பாட்டின் ஊற்றுக் கண்களாய், ஓடிப் பெருகும் ஆறுகளாய்த் திகழ்ந்து சமயத்தாலும் மொழியாலும் வேறுபட்டுள்ள பாரத மண்ணையும் மக்களையும் பண்படுத்தி வந்துள்ளன.

இராமாயணம் பாரதம் ஆகிய இருபேரிதிகாசங்களும் வைதிக அடிப்படையில் வடமொழியில் தோன்றியனவேனும், சமய, இன, மொழி வேறுபாடின்றி இந்திய மக்கள் அனைவராலும் தத்தம் மொழிகளில் ஆக்கப்பெற்று போற்றப்படுகின்றன. மேலுமவை அந்தந்த மொழிகளின் இயல்புக்கும் அவற்றைப் பேசும் மக்களின் இயல்புக்கும் தக்கவாறு கதை அமைப்பில் சிற்சில மாற்றங்களும் வளர்ச்சிகளும் இடம் பெற்ற போதிலும் மூலவடிவம் அடிப்படையாக அமைந்து நன்மையளித்து வருகின்றன.

இராமாயணம் இராமனைத் தலைவனாகக் கொண்டு ஏற்றம் பெற்றது. மகாபாரதம், கண்ணனை அடிப்படையாகக்கொண்டு ஏற்றம் பெற்றது. இராமனும், கண்ணனும் திருமால் அவதாரங்களாக அமைய, இரு கதைகளும் மேலோட்டமாகக் காணும்போது திருமால் சமயத்தை - வைணவ சமயத்தைச் சார்ந்தனவாகத் தோன்றினாலும், இந்தியாவிலுள்ள பல சமயங்களும் ஏற்றுப் போற்றிப் பயன்கொள்ளுமாறு அமைந்துள்ளன. அத்தகு சிறப்பினால் இவை இரண்டும், இந்தியாவில் மட்டுமேயன்றி, சுமத்திரா சாவா முதலிய தூரக்கிழக்கு நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன

இராமாயணம், சிறையிருந்த செல்வியாகிய சீதையின் ஏற்றம் கூறுகிறது. பாரதம், தூது சென்ற கண்ணனால் ஏற்றம் பெறுகிறது. இரண்டு நூல்களும் இந்திய மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளனவேனும்,

திவ்விய பிரபந்தங்களும் பாரதம் பற்றியக் குறிப்புக்களைக் கொண்டுள்ளன. கலிங்கத்துப் பரணி,

'தேவாசுர ராமாயண மாபாரதம் உளவென்று
ஓவா உரை ஓயும்படி உதைபொருகளமே என்று

பாரத போரையும், இராமாயண தேவாசுரப் போர்களையும் உடன் சுட்டிப் பேசுகின்றது.

தமிழ் கல்வெட்டுகள் சில பாரதம் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. ஒரு பாண்டிய மன்னன் தமிழில் பாரதத்தை அமைக்கச் செய்தான் என்னும் குறிப்பினை, 'மகாபாரதம் தமிழ்ப் படுத்து மதுராபுரிச் சங்கம் வைத்து' என வரும் தொடர் குறிப்பிடுகிறது.

தமிழகத்திலுள்ள பலவூர்களில் துரௌபதி அம்மன் கோவில்கள், இன்னும் சிறப்பான பூசைகளுடனும், வழிபாட்டோடும் திகழக் காணலாம், பாரதத்தில் இடம் பெறும் பாஞ்சாலியாகிய துரௌபதியின் நினைவால் அமைந்தது என்று பலரும் கருதி வருகின்றனர். இக்கோவில்களையும், அதன் தோற்ற வளர்ச்சியையும் ஆராய்ந்தோர் சிலர், இது, சங்க காலத்தை ஒட்டித் தமிழகத்தில் தோன்றிய கண்ணகி வழிபாடே காலபோக்கில் திரௌபதி வழிபாடாக மாற்றமெய்தியது என்று கூறுகின்றன. அக்கருத்து உண்மையாயின், ஒரு பத்தினித் தெய்வ வழிபாட்டினை மாற்றி அதனையே பிறிதொரு பத்தினித் தெய்வ வழிபாடாக ஏற்றுக்கொள்ளுமளவு தமிழகத்தில் பாரதச் செல்வாக்கு நிலவியது என்பது புலனாகும். மாமல்லையில் எடுக்கப்பட்ட ஒற்றைக் கற்கோவில்கள் ஐந்தும் பாரத மாந்தர்களாகிய பஞ்சபாண்டவர் பேரால் அழைக்கப்படுமாறு அமைந்ததும் அச்செல்வாக்கின் விளைவேயாகும். தமிழகத்திலுள்ள சில ஊர்ப்பெயர்கள் பாரத நிகழ்ச்சிகளோடு தொடர்புடையனவாக, அவ்வப்பகுதி மக்களால் பேசப்பட்டு வருவது, அச்செல்வாக்கினைக் காட்டும் மேலுமொரு எடுத்துக்காட்டாகும்.

சங்க காலத்து நூல்களில் இடையிடையே இடம்பெறும் குறிப்புகளால் இடம் பெற்ற பாரத இலக்கியம், இடைக் காலத்திலும் பிற்காலத்திலும் தனிப் பெரும் நூல்களாகவே உருவாகும் நிலையினை எய்தியது விழாக் காலத்தின் போது திருக்கோவில்களிலும் பொதுவிடங்களிலும் இரவுநேரங்களில் பாரதம் படிக்கும் பழக்கம் இருந்து வருகிறது. அவ்வாறு பாரதம் படித்து பொருள் கூறுவார்க்கு இறையிலியாக நிலக்கொடையும், பிற சிறப்புக்களும் அளிக்கப் பட்ட செய்தியினைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

வில்லி பாரதம்

கி. பி. 14-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கருதப் பெறும் வில்லி புத்தூரார் தமிழ் விருத்த யாப்பில் பாரதம் முழுவதையும் தனிப்பெரும் நூலாக இயற்றியுள்ளார். அவருக்கு முன்னரும் பின்னரும் சிலர் பாரதங்கள் பர்டியுள் ளனர். அவற்றை பெருந்தேவனார் பாடிய பாரத வெண்பா, பெருந்தேவனார் பாரதம்-மகாவிந்தம், அருணிலை விசாகன் பாரதம், வில்லிபுத்தூரார் பாரதம், ஆதிபருவத் தாதி பருவம், அரங்கநாதக் கவிராயர் பாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், பாரதசார வெண்பா என முறைப்படுத்தலாம். அவற்றுட் சிலவே முழுதும் கிடைக்கின்றன. சில பாரதப் பகுதிகளை மட்டும் பாடுவனவாக உள்ளன.

சந்தம் இனிய செந்தமிழ் விருத்தங்களாகிய வில்லிபாரதம் தமிழ் மக் களிடத்தே மிக்க செல்வாக்குப்பெற்று விளங்குகிறது. தம்பாரதத்தை ஆசிரியர் வில்லிபுத்தூரார். வடமொழியிலுள்ள பால பாரதத்தை அடியொற்றி அமைத் தார் என்று சிலர் கூறுகின்றனர். அதனை மறுப்பாரும், ஒரே வழி உடன்படு- வாரும் உளர். அது எவ்வாறாயினும், வில்லியாரின் ஒரு கருத்து, அவர் வியாச பாரதத்தை மனங்கொண்டு தம் நூலை இயற்றியுள்ளமையினைத் தெரிவிக்கின்றது.

'மண்ணில் கரணம் நிகரென வியாதனார் வகுத்த
எண்ணிலா நெடுங்கதையை யானறிந் தியம்பல்' என்னும்

வில்லிபாரதத் தற்சிறப்புப் பாயிரப் பகுதியில் அக்கருத்து இடம் பெற்றுள்ளது வில்லிபாரதம் ஆதிபருவம் சபாபருவம் முதலிய பத்துப்பருவங்கள் கொண்டது வியாச பாரதம் 18 பருவங்களைக் கொண்டது. வியாசரின் இறுதி எட்டுப் பரு வங்களைக் வில்லி பாடவில்லை. வில்லி பாடியனவாகக் கூறப்படும் 6000 பாடல்களுள் 4337 பாடல்களே இன்று கிடைக்கின்றன

பாரதக்கிளை நூல்கள்

மகாபாரதம் பல கிளைக் கதைகளைக் கொண்டுள்ளது. பாரத நிகழ்ச்சி யின் பலபகுதிகள் தனித்தனிக் கதைகள் எனக் கூறலாம் என்ற தகுதி பெற்ற ன. அதனால் சில புலவர்கள் பாரதம் முழுமையும் பாட விரும்பாமல், அதனுட் பொதிந்த யாதானுமோர் கிளைக்கதையினைக் கவிதை நூலின் கருவாகக் கொண்டுபாடியுள்ளனர். தமிழில் மாரிவாயில் பாஞ்சாலிசபதம் முதலியன பாரத நிகழ்ச்சிப் பகுதிகளை அவ்வாறுகொண்டு பாடப்பட்டது. நளவெண்பா, நைட தம் ஆகியன பாரதத்தில் இடம் பெற்ற கிளைக் கதைக் கருத்துக்களை கரு வாகக் கொண்டமைந்தன. துரியோதனன் அவையில் அவமானமுற்ற பாஞ் சாலி செய்த சபதம், தம் காலத்தே பாரதத்தாய் அடிமைப்பட்டு அவமான

முற்றுத் துன்புறும் நிலையினைப் பாரதிக்கு குறிப்பான் உணர்த்தியது. 'கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்' என்னும் கோட்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த அந்த சபதப் பகுதியை மகாகவிபாரதியார் அடிமைகளைத் தட்டி எழுப்பும் ஆற்றல் வாய்ந்த குறுங்காவியமாகப் படைத்தார். பாண்டியன் மகள் தன்னை மணந்து சென்ற, அருச்சுனன் பால் மேகத்தைத் தூதனுப்பும் பாங்கில் அமைக்கப்பட்டது மாரிவாயில்.

நாட்டுப் பாடல்

தமிழிலக்கிய வரலாற்றில் பிற்காலத்தே நாட்டுப்பாடல் இலக்கியங்கள் பல தோன்றிச் சிறப்படையலாயின. எளிமை, திரும்பத் திரும்பக் கூறல், இனிய ஓசையுடை போன்ற நாட்டுப் பாடலிலக்கியப் பண்புகளால் அத்தகைய இலக்கியங்கள் பாமர மக்களின் உள்ளங்களை எளிதில் கவர்ந்தனவாயின தெய்வங்கள், இறந்த மாவீரர்கள், புராணமாந்தர் போன்றவர்கள் அவ்வகையிலக்கியங்களின் பாடு பொருளாயின. அவ்வகையில் தெய்வத்தன்மை, வீரப்பாங்கு, புராண அமைதி போன்ற பண்புகள் ஒருங்கே பெற்ற கதை மாந்தர்களைக் கொண்ட பாரதமாந்தர்களும், நிகழ்ச்சிகளும் நாட்டுப்புற இலக்கியங்களில் எளிதில் பாடுபொருளாம் தகுதி பெறலாயின. பாரதத்தைச் சார்ந்தனவாக, இவ்வகையில் அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு மாலை, பொன்னுருவி மசக்கை, ஏணியேற்றம், புலந்திரன் தூது, கிருட்டிணன் தூது, பாண்டவர் வனவாசம் போன்ற நாட்டுப்புற இலக்கியங்கள் தோன்றலாயின.

அம்மானை

நாட்டுப் பாடலில் நெடிதாக அமையும் ஒருவகைப்பாடல் அம்மானை என்று இப்பொழுது கூறப்படுகிறது. எளிமையான, அதே சமயம் கேட்கும் பாமரரையும் எளிதில் கவரும் ஆற்றல் வாய்ந்த ஓசை நலமும் கொண்டு, யாப்புச் சிக்கல்கள் இல்லாதனவாய் அமைவது அம்மானை. படைப்பாளர் விரும்புமளவும், கதைப்போக்கு இடந்தரும் அளவும் பாடலை நீட்டிச் செல்லலாம் ஆதலின், நெடிய கதைகளை ஓசைத் தேனில் குழைத்துத் தர இந்த அம்மானை வகை மிக்க இடம் தருவதாய் அமைந்தது. அதனால் புராணம், வரலாறு முதலியவற்றில் இடம் பெறும் வீர மாந்தர்களின் சரித்திரத்தைக் கூறுவதற்கு எற்ற வாயிலாக அமைந்தது. அம்மானை இலக்கிய வகையில் மிகப்பல இலக்கியங்கள் தோன்றலாயின. அவற்றுட் பல தொடக்கக் காலத்தில் வாய்மொழிப் பாடலாக அமைந்து, செவிவழிச்சென்று சிந்தையை மகிழ்விப்பனவாக அமைந்தன. காலப் போக்கில், புலவர்கள் அவ்வகைப் பாடல்களை தொடக்கத்திலேயே ஏட்டில் அமைந்த பாடலாக உருவாக்கும் நிலையும் தோன்றியது.

பழங்காலத்தில் அம்மானை இவ்வாறு, நெடிய பாடலாகிய இலக்கிய வகையாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெண்டிர் இருவர் அல்லது மூவர் கூடி விளையாடும்போது பாடப்படும் பாடலாக அம்மானை அமைந்தது. அதில் பயன்படுத்தும் கருவியாகிய காய் அம்மானைக்காய் எனப்படும். ஐந்தாறு அடிகளால் அமையும் இசை நலம் வாய்ந்த விளையாட்டுப் பாடலின் இடையிலும் இறுதியிலும் அம்மானை என்னும் சொல் இடம்பெறக் காணலாம். பின்னர் அத்தகைய அம்மானைப் பாடல்கள் கலம்பகம் என்னும் சிற்றிலக்கியச் செய்யுட்களுள் ஒன்றாய், அவ்விலக்கிய உருப்பாய் மாறியது. பின்னர் மணிவாசகர் காலத்தில், பத்து அல்லது இருபது பாடல்களைக்கொண்டத் தொகுப்பிலக்கியமாக அமைந்தது. பிற்காலத்தில் அந்நிலை வளர்ந்து நெடிய கதைபொதி பாடலாக நீண்டது. அவ்வாறு வளர்ந்த நிலையில், முந்தைய அம்மானைச் செய்யுட்களின் இயல்புகள் பலவற்றை இழக்கலாயிற்று. பெண்டிர் பாடுவது, இருவர் அல்லது மூவர் கூடி வினா விடையாகப் பாடுவது, அம்மானைக் காய் வீசி விளையாடுவது போன்ற இயல்புகள் நீங்கின. அம்மானை என்னுஞ்சொல் அடியின் இறுதியில் இடம்பெறும் பண்பு நிலைத்தது. பாடலில் எங்கு வேண்டுமானாலும், அச்சொல், அடியின் இறுதியாக அமையும் சொற்றொடரின் ஈற்றில் அமையும் முற்றுப்புள்ளி போலவும், பாடுவோன் மூச்சுவிடுதற் கொடுக்கும் இடைவெளி போலவும் அம்மானை என்னுஞ்சொல் அமையலாயிற்று. ஆனால் தொடக்கமுதல் முடிவுவரை ஓசைகுன்றாமை அடிப்படை இலக்கணமாக அமையலாயிற்று.

பாரதஅம்மானை

தமிழகத்தில் பாரத இதிகாசத்தின் செல்வாக்கு முன்னரே குறிப்பிடப்பட்டது. இலக்கியம், இசை, நாடகம், சிற்பம், சித்திரம் வழிபாடு போன்ற பல நிலைகளின் அதன் செல்வாக்கு தமிழ் மக்களை ஆட்படுத்தியது. பாரதம் நடித்துப் பார்ப்பதையும் படித்துக் கேட்பதையும் மக்கள் புண்ணியச் செயலாகக் கருதினர். விராடபருவம் படித்தால் நாட்டில் மழைபெய்யும் என்பது போன்ற நம்பிக்கைகளும் மக்கள் மனதில் இடம் பெறலாயின,

அதன் விளைவாகப் பாரதத்தைப் பல வகையிலும் இலக்கியமாக்கி இன்புறும் முயற்சியின் பயனாக, 'பாரத அம்மானை' என்னும் இந்த நாட்டுப்புற இலக்கியம் தோன்றலாயிற்று பாரத அம்மானை என்னும் பெயரைக் காணுங்கால் இந்நூல் பாரதக்கதை முழுவதையும் அம்மானைப் பாடல் வகையில் கூறும் நூலாகத் தோன்றும். ஆனால் இந்த நூலில் பாரதக் கதையைத் தொடக்கமுதல் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது,

தங்களுக்கு உரிய நாட்டுப் பகுதியைத் தரவேண்டி பாண்டவர்கள் கண்ணனைத் துரியோதனனிடம் தூது அனுப்பும், "கிருட்டிணசாமி தூதுச் சருக்கம்" முதலாக இந்த அம்மானை நூல் தொடங்குகிறது. பாரதக்கதை முழுவதும் சிறப்புடையராயினும், பாரதப்போரும், போர் முடிவுமே தனிச் சிறப்புடையனவாய் விளங்குதலின் 'பாரத அம்மானை 'ஆசிரியர் சுருக்கம் கருதிக் கண்ணன் தூது தொடங்கித் தம் நூலினை இயற்றியிருக்கலாம் என் பது தெளிவு. பாரதக்கதை பலவாறாகவும் தமிழ் மக்கள் அறிந்த ஒன்றாக இருந்தமையால், இவ்வாசிரியரிடையே தொடங்கி நூலினை முடித்துள்ள போதிலும், தம் நூலுக்குப் பாரத அம்மானை என்றே பெயர் சூட்டியுள்ளார்.

பாரத அம்மானை ஆசிரியர் இலக்கிய இலக்கணப் புலமை சான்றவர் என்பதை நூல் காட்டுகிறது. எனினும் இவர் நாட்டுப் பாடல் வகை இலக்கி யத்தை எழுதுகிறோம் என்ற உணர்வால், அவ்விலக்கிய பண்புகள் அமையப் பாடியதோடு, நாட்டுப்புறச் சொற்கள், பாமரர் பேச்சுச் சொற்கள் போன்றன இடம் பெறுமாறும் அமைத்துள்ளார். மேலோட்டமாக பயிலுங்கால் புலமைச் செறிவிலாத நடோடிப் பாடற் கவிஞர் பாடியது என்று காணப்பட்டாலும், ஆழ்ந்து நோக்குங்கால் புலமை நலம் பொதியப் பாடும் சிறந்த புலவர் தம் புலமைத் திறம் அமைந்திருப்பது நன்கு புலனாகும்.

பெயரை அறிந்து கொள்ள முடியாத நிலையிலுள்ள இந்நூலாசிரியர் வில்லிபுத்தூரார் பாரதத்தை அடியொற்றித் தம் நூ லை இயற்றியுள்ளார். வில்லிபுத்தூராரின் சொல், தொடர், கருத்து ஆகியவற்றை மிகப்பல இடங் களில் கையாண்டுள்ளார், சில இடங்களில் விருத்தப்பாவின் அடிகளும், ஆசிரிய நடைக்கு ஏற்றாற் போல மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

வில்லிபாரதம் பதினெட்டாம் நாட் போர்ச் சருக்கத்தோடு முடிவுறுவ தாக மர்ரே பாரத பதிப்பு அமைகின்றது. வேறு சில பதிப்புகளில் மேலும் சில சருக்கங்கள் உள்ளனவாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றை மர்ரே பதிப்பு மிகைப் பாடல்கள் பகுதியில் தந்துள்ளது.

பாரத அம்மானை ஆசிரியர் பதினெட்டாம் போர்ச் சருக்கிற்கு மேலும் மூன்று சருக்கங்களை அமைத்துத் தம் நூலினை நிறைவு செய்துள்ளார். களங்காண் விவரச்சருக்கம், கங்கையாடிய சருக்கம், திரு அபிடேகத்திரு மா முடிசூட்டுச்சருக்கம் என்பன அவ்வாறு சேர்ந்தெழுதப்பட்ட சருக்கங்களாகும்.

வில்லிபாரதத்தினைப் போலவே இவ்வாசிரியரும் தன் நூலின் ஒவ் வொரு சருக்கத்தின் தொடக்கத்திலும், கடவுள் வாழ்த்துப்பாடல் ஒன்றினை இணைத்துள்ளார். அப்பாடலை ஆசிரியர் பாடாமை குறிப்பிடதக்கது, கிருட்

டிணன் தூது முதல் பதினெட்டாம் போர்ச்சருக்கம் வரையிலான சருக்கங்களுக்கு, அவ்வச்சருக்கங்களுக்கு வில்லிபுத்தூரார் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்களையே இணைத்துக் கொண்டுள்ளார். வில்லியில் இடம் பெறாத இறுதி மூன்று சருக்கங்களுக்கும் தாமே கடவுள் வாழ்த்துப்பாடல் இயற்றி இணைத்துள்ளார். கடவுள் வாழ்த்துப் பாடலேயன்றிச் சருக்கத்துள்ளும் சில வில்லி பாரதங் விருத்தங்களை அப்படியே எடுத்தாண்டுள்ளார். பதினாறாம் நாட் போர்ச்சருக்கத்தின், கடவுள் வாழ்த்திற்கு மேலும் பத்து விருத்தங்களை எடுத்தாண்டுள்ளார். சில பாடல்கள் தொடர்ச்சியாக எடுத்தாளப் பட்டுள்ளன. சொல் சொற்றொடர் கருத்து ஆகியவற்றை எடுத்தாண்டதோடு முழுப் பாடல்களையும் எடுத்தாண்டுள்ளமை இந்நூலாசியர், தம் முதல் நூலாசிரியராகிய வில்லிபுத்தூரார் பால் கொண்டுள்ள அளவற்ற மதிப்பினை புலப படுத்துவதாகும்.

நூலின் இடையே சிற்சில பகுதிகளை ஏடுகளில் மறைந்து போயுள்ளன சில சருக்கத்தின் ஈற்றுப்பகுதியும், சில சருக்கத்தின் தொடக்கப்பகுதியும் மறைந்துள்ளன தொடக்கம் மறைந்துள்ள பகுதியினை இதுவென அறிய மாட்டாமையால், அதற்குரிய கடவுள் வாழ்த்துப்பாடலை வில்லிபாரதத்தால் அறியலமாயினும் சேர்க்கப்படவில்லை. கடவுள் வாழ்த்து, பிற விருத்தங்கள் ஆக, ஏறத்தாழ முப்பது வில்லிபாரத விருத்தப் பாக்கள் இப்பாரத அம்மானையில் இடம் பெற்றுள்ளன,

நூலாசிரியர்

பொதுவாக நாட்டுப்பாடல் வகையில் அமையும் இலக்கியங்களின் பெயர் அறிய முடிவதில்லை. ஆக்கியோன் பெயர் முதலியன கூறும் சிறப்புப் பாயிரம் போன்ற செய்யுட்கள் இங்கில்லாமையால் ஆசிரியர் பெயர் முதலியவற்றை அறிய முடியாது போகின்றது. ஒருநூல் முதலில் செவிவழி வந்ததாக அமைந்து, பின்னர் ஏட்டில் இடம் பெற்றால் அதற்கு ஆசிரியர் பெயர் சுட்டுவது இயலாததாவது இயல்பாகும். ஆசிரியர் பெயர் அறியாத நிலையில் அவரது காலத்தைக் காண்பது அரிதாகும். எனினும் இவர் நிமிஷம் என்று சொல்லைப் பயன்படுத்துவதனால் நிமிஷம் முதலிய ஆங்கிலக் கால அளவை தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற காலத்தினராவார் என்று பொதுவாகக் கொள்ளலாம்

தம்மை புரந்த புலவர்களைத் தம் நூலில் குறிப்பிட்டுப் போற்றும் நன்றியறிதற் பண்பினைக் கம்பர் முதலிய கவிஞர் தம் படைப்புக்களிற் காணலாம். அவ்வாறே இந்நூலாசிரியரும் தம்மை புரந்த ஒரு வள்ளளை, காப்பியத் தலைவரோடும் நிகழ்ச்சியோடும் உவமைப்படுத்திப் பலவிடங்களில் பாராட்டியுள்ளார்.அவ் வள்ளல் தம்பை நாட்டு அதிபன் என்பதையும், அவன்

பெயர் மங்கைய பூபதி என்பதையும் குறிப்பிட்டுள்ளார். இறுதியில் தருமன் முடிசூட்டுதலையும்க் குறிக்குமிடத்து.

'மங்கைய பூபன் மரபுளோர் தாங்கொடுக்க' சூட்டினர் என்று கூறுவது, 'வசிட்டனே புனைந்தான் மௌலி' என்னும் கம்பன் தொடரை நினைவூட்டு வதாக உள்ளது. தருமனுடைய கொடைப்பண்பைக் கூறுமிடத்து அது,'பூபன் மகிழ்ச்சிபெற ஈவது போல்' இருந்தது என்கின்றார். தம்மைப் புரந்த வள்ளலை,

'பூபாலகன் தம்பை புண்ணிய நன் நாட்டதிபன்
மாபாலன் எனவாழ் மங்கைய பூபாலன்' என்றும்,
'பூபதியாம் மங்கைய பூபாலனாளும் புதல்வன்' என்றும்,
'சேர்ந்தவரைக் காக்கின்ற சீர்தம்பை நாடதிபன்
மாதர்களுக்கு அன்பு செறி மங்கை பூபாலகன்' என்றும்,
'நல்லோர் புகழ் தம்பை நாடாளும் அங்கையன்' என்றும்

பிறவாறும் கூறிப் பாராட்டுகின்றார். காந்தாரி அழுதமைக்கு உவமை கூறுங்கால் அவ்வரசனைச் சுட்டி,

'பாராளும் மங்கை பூபாலன் தனைப்பகைத்த
சேராரைப் போலத் திகைத்தழுதாள் காந்தாரி' என்கிறார்.

இவ்வாறு பலவிடங்களில் பலவாறாகப் போற்றப்பட்டிருப்பினும் அவை கொண்டு, மங்கைய பூபன், அவனது தம்பை நாடு பற்றி ஒன்றும் அறிய முடி யாமையரல் அவன் காலத்தையும் அறியமுடியாது உள்ளது. அதனால் நூலா சிரியரின் காலத்தையும் ஊகிக்க இயலவில்லை.

ஒவ்வொரு சருக்கத்தின் முதலிலும், முடிவிலும் வீரையன் துணை, சிவ சிதம்பரம்முன்னிற்க, வீரையன் தருமராசாக்கள் முன்னிற்க வேண்டியது. ஸ்ரீ ராமஜெயம், தருமராசாக்கள்துணை, சிவமயம், வீரையன்துணை, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி பாதார விந்தமே துணை போன்ற காப்பு வாசகங்களும் ஒன்றையோ பலவற்றையோ பயன்படுத்தியுள்ளனர். இக்காப்பு வாசகங்கள், நூலாசிரிய ரால் எழுதப்பட்டது என்று கூறுவதற்கு மிகுதியும் வாய்ப்பில்லை. பின்னர் ஏடெழுதியோரால் எழுதப்பட்டிருக்கலாம். இதனைச் சேர்ந்தவர் எவராயினும் அவர் சைவ வைணவ வேறுபாடு கருதாது ஒத்து நோக்கும் இயல்பினர் என் பது புலனாகிறது.

இந்த நூல் ஏட்டு வடிவில் தஞ்சைச் சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூல் நிலையத்தில், M No 756 எண்ணிட்ட சுவடியாகவும், 1665 எண் ணிட்ட படி எடுக்கப்பட்ட பிரதியாகவும் உள்ளது. நூலின் இடையிடையே சிற்சில பகுதிகள் சிதைந்தும், இல்லாமலும் இருந்த போதிலும், அவற்றால்

கதைத் தொடர்பும் கதை உணர்வும் கெடாதிருப்பதை நோக்கிச் சரசுவதி மகால் நூலகத்தார் வெளியிட முன்வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

பாரத அம்மானையின் கையெழுத்துப் பிரதி இரண்டு பாகமாகக் அமைக்கப்பட்டுள்ளது. பதினான்காம் நாள் போர்ச் சருக்கம் தொடங்கி உள்ள பகுதி இரண்டாம் பாகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மானையில் அடி எதுகை சிறப்பான இடம் பெறும். சில போது, செய்தி தொடர்ந்து எதுகை மாறியிருத்தல் உண்டு. மோனை மாறிவருவதும் உண்டு. இது மிகவும் அரிதாகவே காணப்படும். எதுகை இல்லாமை கொண்டு சிலசமயங்களில் அடி இடையிடு பட்டுள்ளமையை உணர்தல் கூடும்.

'வாதுற்ற மன்னவன்தேர் மாப்பாகனை அறுத்து
கொடித்தேர் உருக்குலையக் கொய்துவில்லும் நாணறுத்து'

என்று வருமிடத்தே, செய்தி தொடர்ந்து சென்றாலும் 'வாதுற்ற' என்னும் எதுகைக் கேற்ற எதுகை கொண்டவரி விடுபட்டுள்ளமை உணரக் கிடக்கின்றது

'தம்பித்தே வாயுதனைச் சிதரு துள்ளடக்கிச்
சோம்புற்று ஞானச் சுடர்க்கொழுந்து தான்செழிக்க'

என்னுமிடத்து, அடிமோனை மாறுபட்டமையைக் காணலாம்,

நூலினிடையே ஆசிரியர் சிறந்த உவமைகள், பழமொழிகள், உருவகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி நூலினைக் கவினுறுத்தியுள்ளார். பீமன் தன் கதாயுதத்தால் எதிரிப்படைகளைத் தாக்கலுற்றதைக் கூறும்போது, "மட் பாத்திரக் கடையில் மண்டு தடிகாரனை போல்" செயற்பட்டான் என்கின்றார். பீமன் செய்த போரில் எதிரிகள் சிதைந்தோடுவதற்கு, 'இரவியைக் கண்ட கமம் (பனி) என்பதனை உவமையாக்கியுள்ளார். அபிமன் போரில் பகைவர் மேற் சென்று தாக்கியதற்குப், 'பஞ்சுமலையில் படர் நெருப்பு பற்றியபோல்' என்னும் உவமையைக் கூறியுள்ளார்.

"மண்கலத்தின் குப்பலிலே வாரணங்கள்
பூந்தாற் போல்", "சிறைத்துப் பிழைப்போர்கள்
சென்னி அறுப்பதுபோல்" என்பன போன்ற உவமைகள் ஆங்காங்கே இடம் பெற்றுத் திகழ்கின்றன.

முன்னைய இதிகாசமாகிய இராமயணச் செய்திகளையும் உவமையாக ஆசிரியர் கண்டுள்ளார். பீமன் ஒரு யானையை எடுத்து வீசியதைக் கூறும் போது,

'பன்னாள் அனுமன் பறித்தெறிந்த நாகமென
இன்னாளில் வீமன் கபம் எறிந்தான் அம்மானை'

என்று உவமைப்படுத்தியுள்ளார். அருச்சுனன் படைகொடு செல்லுதலுக்கு,

"காவலர் அரக்கர் கணங்களைத் தேய்த்து
வாலால் அரக்கர்களை வவ்வியே தான்பிணித்து
மையாக மேதினியில் வாரியே தானடித்து
கையால் கசக்கிவிட்ட கால் குமரன் மாலனுமன்

சென்றமையை உவமித்துள்ளார். இவ்வாறே கந்தபுராணச் செய்திகளையும் உவமையாக ஆண்டுள்ளார்

சுவை மிகுந்த உருவகங்களை ஆசிரியர் பயன்படுத்தி நூலை, புலமை இன்பம் மிகுவிக்குமாறு செய்துள்ளார்.

'முற்று முற்றுமே சொரிந்த மொய்த்தகனை தைத்துருவ
ஏற்ற குருநிலம் எல்லாம்செந் நீர் பாய்ச்சிக்
கூற்ற னெனும் கூட்டாளி கொற்ற வயல்திருத்திப்
பார்த்தன் மகன்வில் பகழிமழை பொழியக்
கோத்த படைவாள் கொளுவாள் நிலங்களெல்லாம்
சேற்றுழவு செய்து மன்னர்ச் செய்யமுடி குலைத்து
நாற்று நடவி நரிநாய் குரவையிட
மீதிசைஎங்கும் அபிமன் வீரபயிரோங்க
தூது சமர் வெற்றிக் கதிர் விளைந்துதான் சாடப்
போத மிகுந்த வெற்றிப் போர்க்களஞ் செய்தே புகழ்"

என்னும் பகுதி அபிமன் ஈடுபட்ட போர்க்களத்தை ஏர்க்களமாகக் காட்டிய அழகிய உருவகமாகும்.

போர்க்களக் காட்சியைக் காட்டும் ஒரு இடத்தில் ஓடைகள் (முகபடாம், நீரோடை) காவணம் (பந்தல், சோலை) பாரிடம் (பூமியிடம், பூதகணம்), கந்தரம் (கழுத்து, மேகம்), முதலிய சொற்களை செம்மொழிச் சிலேடையாகவும், பிரிமொழிச் சிலேடையாகவும் அமைத்துப் பாடியிருப்பது நயமிக்கதாக உள்ளது.

வில்லிபாரதத்தில் சுருக்கமாகக் கூறிய பகுதியிற் சிலவற்றை இவர் மிக விரிவாகப் பாடியுள்ளார். அவ்வாறே விரிவாக உள்ளதனைச் சுருக்கியுமுள்ளார். விரிவாகப் பாடிய பகுதி போர் வருணனையிலும், இறந்தோர்க்கு இரங்கும் நிலையிலும் அமைந்துள்ளது.

கம்பராமாயணத்தில், இராம ராவணப்போரின் முதல் நாளிறுதியில் இராமன் இராவணனிடம் 'இன்றுபோய் நாளைவா' என்று கூறுயதனை, இவ்வாசிரியர் நினைவிற் கொண்டு, சேனுபதிப் பட்டம் பெற்றுவந்து போர் புரிந்து கர்ணனிடம், விசயன்,

"நன்று நீ பட்ட நடுக்கங்களைத்தீர
இன்றுபோய் நாளை இதற்கு வா என்றுரைத்தான்"

என்று கூறியிருப்பது உணர்ந்து மகிழத்தக்கது.

இந்நூலாசிரியர் பல குறள்களை இடமறிந்து தம் அம்மானையில் இடம் பெறச்செய்து நூலினை அழகுபடுத்தியுள்ளார். துரோணர் துரியோதன னுக்கு அறிவுரை கூறுங்கால்,

"எண்ணித் துணிதல் கருமம் துணிந்தற்பின்
எண்ணுவதெல்லால் இழுக்காம் இளைக்காமல்
துணிந்தபடியே துணிவாய் ஒருமனமாய்" என்று கூறுகின்றார்.

தருமன் புரிந்த போரைக் குறிப்பிடும் போது,

"குணமெனுங் குன்றேறி நின்றான் வெகுளியொரு
கணம தெனினுமதைக் காப்பரிது ஆதலினால்" என்கின்றார்.

இங்கெல்லாம் திருக்குறள் அப்படியே இடம் பெற்று, பொன்னிடைப் பொருந் திய மணிபோலப் பொழிவுற்று விளங்குதலைக் காணலாம்.

பாரதப்போரில் பங்குபெற்ற பாண்டிய சோழர் தம் போர்த்திறங் கூறுங்கால் ஆசிரியரின் தாய்நாட்டுப்பற்றும், மொழியுணர்வும் நன்கு புலப் படுகின்றன.

மிக்க கல்வியில்லாத பாமர மக்களுக்குரியதெனக் கருதப்படும் நாட்டுப் பாடல் வகையில் அமைந்த இலக்கியமாகப் பாரத அம்மானை விளங்கிய போதிலும், புலவர்களும் போற்றிக் கற்குமாறு புலமை நலம் பெற்றுத் திகழ் கிறது. இடையிடையே சில பகுதிகள் விடுபட்டிருந்த போதிலும், அறிந்த கதை அமைப்பால் இடையறவு படாது செல்வதாக இந்த அம்மானை அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

'பாரத அம்மானை' முடிந்த பின்னர், ஏடு எழுதியோரின் பிற்குறிப் பாகக் கூறப்பட்டிருக்கும் குறிப்புகள் சில செய்திகளை உணர்த்துவனவாக உள்ளன. அம்மானை ஏட்டினை எழுதி முடித்த நாள் சருவதார் வருடம் ஆனி மாதம் 17- உ சுக்கிரவாரம் என்று கூறப்பட்டுள்ளது. அது, தொண்டை மண்டல முதன்மை வேளாளர்களுக்குரிய அகரப்பட்டி சிதம்பர முதன்மையார்

மகன், முத்தைய முதன்மையார் மகன் சிதம்பர முதன்மையாரால் எழுதப்பட்டது. பாரத அம்மானை பால காண்டம் யுத்த காண்டம் என்னும் இரு பகுதியாக இருந்தது என்ற செய்தியும் அக்குறிப்புகளால் தெரிய வருகிறது.

முதன்மையார் எழுதிய ஏட்டின் தொகை 945 என்று காணப்படுவதால் இந்த அம்மானை தொடக்க நிலையில் பாண்டவ கௌரவர்களின் பிறப்பு முதல் கூறும் நூலாக இருந்திருக்க வேண்டும் எனபது தெரிகிறது, சருக்கங்களின் தொகை 60 என்ற குறிப்பும் இதனை வலியுறுத்துகிறது. விகாரி வருடம் கார்த்திகை மாதம் 30-ஆம் நாள், வேங்கட குளத்திலிருக்கும் முருகப்ப உடையார் மகன் சுப்பிரமணிய உடையாருக்கு "இந்த உயுத்த காண்டம் அறுதியாய்க் கொடுத்துவிட்டேன்" என்று காணப்படும் குறிப்பினால், பாலகாண்டமாகிய முற்பகுதி கொடுக்கப்படவில்லை என்றும், அதனால் இந்தப் பாரத அம்மானை அந்த முழு நூலின் பிற்பகுதியாக அமைகிறது என்றும், அதனையே நூலாகக்கொண்டு இப்பதிப்பு அமைகிறது என்றும் உய்த்துணரக் கிடக்கிறது.

இந்நூலாசிரியர் கற்று வல்ல புலவராக இருந்த போதிலும், இவர் நூலில் சில இலக்கண மாறுபாடுகள் காணப்படுவது சிந்திக்கத்தக்கதாகிறது. ஒருமை பன்மை முடிவு பொருந்தாமை சிலவிடங்களில் அமைந்துள்ளது.

"சில வெங்கணைகள் சிறகரிந்து நின்றதுவே
சில வெங்கணையைச் சிலது பிளந்தனவே"
"உம்பல் பல மாய்ந்ததுவே" என்றிங்ஙனம் பலவிடங்களில் வந்துள்ளன.

ஒரு சொல் வழக்கில் பெறும் திரிபினால் அடையும் வடிவங்கள் பலவற்றையும் கண்டுள்ளார். பார்த்தன் என்னும் பெயர் அருச்சுனனைக் குறிக்கும். அதனை பார்த்தன், பாத்தன், பாற்றன் என்னும் மூன்று வடிவிலும் வழங்கியுள்ளார். அவ்வாறே பார்ப்பான், பாப்பான் என்றும் குறிப்பிட்டுச் சொல்கின்றார்.

தொடரில் ஒரு உவமைச் சொல்லைப் பயன்படுத்தி அதனோடு மேலுமோர் உவமைச் சொல் சேர்த்து, 'மூண்டது போல் ஒத்ததுவே' என்கின்றார். எதுகைக்காகச் சொல்லைத் திரித்து வழங்கும் வழக்கம் இவர்பால் காணப்படுகிறது. 'வாய் மிஞ்சிப் பேசுமதம்' என்னும் தொடரின் எதுகைக்கேற்ப, நீ என்னுஞ் சொலல்லத் திரித்து "நீய் முந்திச் சொன்ன" என்று கற்கின்றார். நுங்களிலே என்பதனை நீங்களிலே என்றும், உவமையை உகமை என்றும் ஐம்பது என்பதனை அன்பது என்றும் கண்டுள்ளார். புரோசனம் (பிரயோசனம்) சாவாசு (சபாஷ்) என்பன போன்ற பிறமொழிச் சொல் திரிந்த வடிவங்களையும் ஏற்றுள்ளார்.

நூலினைப் பதிப்பிக்குங்கால் இடையில் ஒரு வரி விட்டுள்ளது என்று தெரிந்தால் அது அவ்விடத்தில் "X-X-X" என்று அடையாளமிட்டுக் காட்டப் பட்டுள்ளது. பலவரிகள் இடையீடு பட்டிருப்பின்

X X X X
X X X X
X X X X என்று உடுக்குறியிட்டும்,

ஒரு வரியில் ஓரெழுத்து அல்லது ஒரு சீர் கெட்டிருப்பின் XX என்ற அடையாள மிட்டும் காட்டப்பட்டுள்ளன.

எழுத்து, சொல் அல்லது ஒரு தொடர் ஐயமின்றித் தெரிந்தாலன்றி, அவ்விடம் நிரப்பப்படாமல் உடுக்குறியிட்டுக் காட்டப்பட்டது. வருங்காலத்தில் ஏடுகள் கிடைத்து, வாய்ப்புப் பெறின் உண்மையான பாடம் பெறவே இவ்வாறு விடப்பட்டது.

கிருட்டிணசாமி தூதுச் சருக்கம்

[தூதுவன் சஞ்சயன் சென்ற பின்னர், தருமர், கண்ணனைத் துரியோதனனிடம் தூதுவிட எண்ணிக் கூறியபோது, கண்ணன் பாண்டவர் ஒவ்வொருவரின் கருத்தினைக் கேட்கின்றார். தருமர் சமாதானத்தை விரும்பிய நிலையில் வீமன் முதலியோர் மறுத்துப் போர் செய்தல் வேண்டும் என்கின்றனர். கண்ணன் வீமனின் கோபத்தைத் தணிக்க அர்ச்சுனன் முதலியோர் போரையே விரும்புகின்றனர். கண்ணன் சகாதேவனைத் தனியே அழைத்து போரைத் தவிர்க்க உபாயம் கேட்கிறான். தன்னைக் கட்ட முடியுமா என்று கேட்ட கண்ணனை சகாதேவன் தன் கருத்தினால் கட்டி விடுகிறான். பின்னர் ஐவரையும் காக்குமாறு வரம் வேண்டிப் பெறுகிறான். சந்து செய்தல் இனிது என்று கூறக் கேட்ட பாஞ்சாலி அழுது முறையிடுகிறாள். காந்தாரியும் போரை வெறுக்கிறாள். தானே பாஞ்சாலியின் கூந்தலை முடித்து வைப்பேன் எனக் கூறிக் கண்ணன் அவளைத் தேற்றுகிறான். கண்ணன் தூதுவனாக அத்தினாபுரம் செல்கிறான். கண்ணன் தூதாக வந்த செய்தி துரியோதனனுக்குக் கூறப்படுகிறது. துரியோதனன் கண்ணனை வரவேற்க ஏற்பாடுகள் செய்ய, சகுநி அதனைத் தடுத்துவிடுகிறான், வீடுமர் முதலியோர் வரவேற்க, கண்ணன் விதுரன் மனையில் புகுகின்றான். விதுரன் மகிழ்ந்து உபசரிக்கின்றான். கண்ணன் அங்கு உணவருந்துகிறான். விதுரன், கண்ணன் வந்த காரணம் வினவ, தூது வந்தமையைத் தெரிவிக்கிறான். துரியோதனன் அரசு கொடாவிட்டால் அதனைப் பொருது அடைவர் என்று கண்ணன் கூறுகின்றான். விடிந்த பிறகு கண்ணன் துரியோதனன் அரண்மனைக்கு வரும்போது யாரும் வரவேற்கக் கூடாது என்று துரியோதனன் கட்டளையிடுகிறான். வீடுமர் வரவேற்கக், கண்ணன் சபையில் சென்று, இருக்கையில் அமர்கிறான். நேற்றே வராமல் விதுரன் இல்லில் தங்கக் காரணமேன் என்று துரியோதனன் வினவினான். விடை கூறிய கண்ணன் தான் தூதாக வந்த செய்தி கூறி ஐவர்க்கும் உரிய நாட்டைக் கொடுக்குமாறு கேட்டபோது ஈ இருக்கும் இடம்கூட தரத் துரியோதனன் மறுத்துவிடுகிறான். ஐந்து ஊரும் மறுக்கவே கண்ணன் போரை வேண்டுகிறான். துரியோதனன் சினந்து கண்ணனை இகழ்கிறான். கண்ணன் விதுரன் மனைக்கு வருகின்றான். விருந்தளித்தமையால் தன்னை இகழ்ந்த துரியோதனனைச் சினந்து கூறித் தன் வில்லை முறித்துவிட்டு துரியோதனனின் சபையிலிருந்து விதுரன் நீங்கினான். துரியோதனன் மேலும் இகழ்கிறான். வீடுமன் கன்னனைப் பழிக்க அவனும் இகழ்கிறான். விதுரன் வீரத்தைக் கண்ணன் பாராட்டி குந்தியின் இருப்பிடம்

செல்கிறான். குந்திக்குக் கன்னனின் பிறப்பு வரலாற்றைக் கண்ணன் உரைக்கிறான். அவனை ஐவரோடு கூட்டுமாறும், மறுத்தால் இருவரம் வாங்கி வருமாறும் கண்ணன் குந்தியை அனுப்புகிறான். கண்ணன் விதுரன் மனைக்கு மீளுகிறான். 'கண்ணனுக்கு என்னசெய்யலாம்' என்றுதுரியோதனன் சதித்திட்டம் செய்கிறான். கண்ணனை கொல்லவேண்டும் என்ற விகர்ணனை திருதராட்டிரன் தடுத்துக் கூறுகிறான். துச்சாதனன் போரிடப் புறப்படலாம் என்றனன். கண்ணனைச் சூழ்ச்சியால் சிறைப்படுத்துவது நல்லது என்று சகுனி கூறியதை ஏற்று நிலவறை அமைத்து அரக்கர்களை அதில் மறைந்திருக்கச் செய்தான் துரியோதனன். காலையில் கண்ணன் வந்தால் அவனை மட்டும் உள்ளே அனுப்புமாறு காவலர்க்குக் கூறினான். வந்த கண்ணனைத் துரியோதனன், பொய்யான இருக்கையில் இருக்கச் செய்கிறான். அது முறியவே கண்ணன் பேருருக் கொள்ள அரக்கர் அனைவரும் அழிகின்றனர். தேவர்வேண்டக் கண்ணன் தன் வடிவைச் சுருக்கிக் கொள்கிறான். திரும்பும் கண்ணன் தன்னுடன் வந்த கன்னனுக்கு அவன் வரலாறு கூறி, ஐவருடன் சேருமாறு உரைத்தான். மறுத்த கன்னனை அனுப்பி விட்டு, அசுவத்தாமனை அழைத்துத் துரியோதனன் வேண்டினாலும் நீ சேனாதிபதி ஆகாதே என்று கூறுகிறான். கண்ணன் தன் மோதிரத்தை நழுவவிட, அசுவத் தாமன் அதைக்குனிந்து எடுத்துக் கொடுக்க, கண்ணன் வானைப் பார்த்துக் கூறினான். அசுவத்தாமனும் வானை நோக்கத், தூரத்தில் கண்டோர் அசுவத் தாமன் அடிதொட்டுச் சூளுற்றான் எனக் கூறினர். அசுவத் தாமனை நம்பக்கூடாது என்று அவையில் கூற அவன் வருந்தினான். கண்ணன் விதுரன் மனை சென்றபின், இந்திரனை அழைத்து கன்னனுடைய கவச குண்டலங்களை வாங்கி வருமாறு கூறுகிறான். அவன் கிழவடிவில் சென்று அவற்றைப் பெற்று வருகிறான் இந்திரன் கன்னனுக்கு வேல் ஒன்றை அளிக்கிறான், கண்ணன் குந்தியை ஏவ, அவள் கன்னனிடம் சென்று, தான் அவனுக்குத் தாய் என்பதனை மெய்ப்பிக்கின்றாள். கன்னன் 'ஐவரோடு வந்து சேர வேண்டுகிறாள். மறுத்த கன்னன், குந்தி வந்த காரணத்தை வினவுகிறான், கன்னனிடம்' இருவரம் வேண்டிப் பெறுகிறாள். குந்தி கண்ணனிடம் வந்து அச்செய்தி கூறுகிறாள். கண்ணன் பாண்டவரிடம் வந்து நிகழ்ந்தன கூறுகின்றான்.

பேர்படைத்த விசயனுடன் மும்மை நெடும்
    பிறவியினும் பிரியா னாகிச்
சீர்படைத்த கேண்மையினால் தேரூர் தற்கு
    இசைந்தருளும் செங்கண் மாலைப்
பார்படைத்த சுயோதனற்குப் படையெடேன்
    அமரிலெனப் பணித்த கோவைக்
கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார்
    பிறவாழிக் கரைகண் டாரே.

வீரையன் துணை

ஞான மினிதுரைத்து ஞா ... ...
தேனுலவு மார்பன் திருமா ... ...
நா ன னு ம பு ... ... ந தூதுக்கு ... ...
தன்னிசை தத சோ ... ...
பந்தங்க ளில்லாத ... ...
சித்தந் தனிலே ... ...
சமர் செய் வதற் கவ ... ...
அமர் செய்வோ மோர் தூ ... ...
சொல்லுமெனக் கேட்க ... ...

கண்ணன் பாண்டவரைத் தனித்தனிக் கேட்டறிதல்

வெல்லும் துணைவருடன் மிக்கவரை ஒக்க வைத்து
மானமுள்ள தருமன் மதிமுகத்தைத் தானோக்கித்
தானுன் நினைவு தருங்குரு நாடாள வென்றோ
கானம்புக நினைவோ கண்டித் தமர்பொருது
மானம்பெற வஞ்சினம்[1] முடிக்கவே நினைவோ
மன்னவர் மன்னா வளரு முரசுயர்த்தோய்[2]
உன் நினை வென்னோடு உரையென்று மால் கேட்ப
மாலே எனது மன வயிர மாநெருப்பால்
காலான கோபமோ ... ...
மூங்கிலிளைத் தெரித்துமே ... ...
நாங்கள் இருதிறமும் நை ... ...

---

1 சபதம்

2 முரசக்கொடியுடைய தருமன்

ஆம்பல் விகற்பமு ... ...
தாம் பொருந்தல ... ...
அறன முத்து மோரு ... ...
விறலினங் குரவரையும் ... ...
பெய்த்துணையை மற்றுமு ... ...
உய்த்துலக மெல்லாம் ஒரு குடையில் ஆள்வதிலும்
காவுமனத்[1] தாதை கற்பித்த சொற்படியே
இரவும் பகலும் இடைந்து வனத்துறுதல்
சாலவும் நன்றெனது தன்னினைவு நீயுரைக்க

நீல னிணங்கி நெடும்புவிஈ யானா கில்
காளா[2] முரசம் கறங்கும் பெருங்களத்தில்
கூளத்தைத் தீநாடிக் கொன்றது போல்யாம்
வென்றாலும் தோத்தாலும் மேவாதொரு வசையும்
இன்றே தூதேகி எமதுநா டேகேளும்
மறுத்தால் அதிற்பாதி வன்மையுட னேகேளும்
கறுத்தான் இதுமறுக்கில் காதலூர் ஐந்தெனினும்
கேளும் அதுமறுத்தால் கேவலமில் லாதுசமர்
மூளும் எனவே முரசுயர்த்தோன் தானுரைத்தான்.

வீமன் முதலியோர் கருத்துரைத்தல்

மூத்தோன் உரைப்ப முதிர்சினம்மென் மேல்மூள
காத்தோன்[3] மகனும் கடுகடுத்துக் கண்சிவந்து
பதறிய சொல்லாற் படியளந்தோ னைப்பார்த்துக்
கதுமென் றெழுந் திருவர் காலும்அம் சிரசேத்தி[4]
ஊனமிலி மானமிலி ஓதுதற்கென் செய்வதென்று
மானபங்கம் தான்அவையில் மாதுதனைச் செய்யுமன்றுள்
சோபமுடன் முன்முறையாய்த் தோகை அழுதரற்றக்
கோபம் பொறுபொறென்று கொத்தியடக்கி வைத்துக்
குலமுள் ளளவுமிகு கோத்திரங்கள் உள்ளளவும்
உலகுள் ளளவும் ஒழியா வடுவேற்றுன்

1 வஞ்ச உள்ளம்

2 எக்காளம் — இசைக்கருவி

3 காத்தோன் மகன் — வாயுபுதல்வன் — வீமன்

4 தலையில் வைத்து

விருத்தம்

எரியுற்ற கானில் இடைந்துநா ளுங்கழித்துத்
திருகிப் பகைமுடிக்கத் தேனா திளைத்துநின்றான்
அரவத் துவசன்[1] அதீதக் கொடுமையினும்
முரசுயர்த் தோய்உன் மொழியன்புக் கேபயந்தேன்
கானாள விட்டதறு கண்ணன் மகாபாவி
தானாள்பூ வெல்லாம்நீ தானளச் செய்வனிப்போ
மேனாள் மொழிந்த விரதந் தனைமுடித்து
வானாள் செய்வனந்த வன்பாவை தன்னையென்ருன்.
போர்முடித்தான் வஞ்சினஞ்சொல் பூவை செழுங்கூந்தல்
கார்முடித்தான் பின்னோர் கவல்சபதந் தான்முடித்தான்
நீர்முடித்தோன் தன்னிரப்பை நீக்கினோய் எண்ணியபோல்
ஆர்முடித்தார் இங்கிவன்போல் ஆர்முடிக்க வல்லாரே.

நடை

ஒக்கப் பிறந்ததெண்டம் ஊனோ டுயிரோட
தக்கசபை யிடத்தில் சாகவைத்தான் தம்பியரைக்
கானில் உறையவைத்தான் கக்கிஷத்துள்[2] ஆக்கிவைத்தான்
மானப் புனற்றுறையில் மாண்டு பிழைக்கவைத்தான்
கொடிதான துன்பமொரு கோடி அனந்தமுண்டு
அடியேங்கள் பட்ட அவத்தைக்கும்[3] ஒத்திருந்தான்
படுத்திய துன்பமெல்லாம் பத்தாமல் இன்னமின்னம்
கெடுக்கத் துணிந்திருந்தான் கேவலமே செய்யலுற்றான்
பஞ்சவர்கள் என்றதெல்லாம் பஞ்சைபோ லாக்கிவைத்தான்
சஞ்சலங்கள் துன்பமெல்லாம் தாங்கிவாள் வென்றுவந்தான்
இனியாகி லும்இரங்கி எங்கள்துய ரைத்தீரும்,
மனதாரவே கெடுக்க வர்மந் தொடங்காதே
இப்பிகரும் பெள்ளனீதீர்ப் பலனீயா[4]
அப்படி மாய்ந்தால் அரவுயர்த்தோன் ஆடியவான்
நூறு பெயரும் நுவலும் பெருப்படையும்
நீறு படஅழித்து நீள்நிலத்தை ஆள்வதல்லால்
தண்மையாய் பேசித் தணிந்துறவு கொண்டாடி
வண்மையில் தூதால் வருந்திப் பணிந்திரந்து
ஏதிலார் போல இரந்தவனைத் தூரியத்தால்

---

1. பாம்புக் கொடியோன் — துரியோதனன்
2. துன்பம்
3. துன்பம்
1. இவ்வடி தெளிவாக இல்லை

போதுமெனவே பொருந்தினேன் உண்டிருக்கச்
சருகு பொசித்தலைந்து தான்பட்ட பாட்டாலே,
உருகிக் கருகிஇதற் கொற்ருனென் செய்வதென்ருன்
பின்னேன் வெகுளப் பெருமானும் கையமர்த்திப்
பொன்னர் குருகுலத்தோர் போரேறே நீ கேளாய்!
குத்தமே[1] பார்க்கிலொரு சுற்றமில்லை கோமானே
ஒத்துடன்பட் டேவாழ்தல் உத்தமம்காண் தம்பியரே
ஒருவங்கி ஷத்[2]துற்று உலகாளும் காரணமாய்
இருவங்கி ஷங்கெட் டிறந்தார் எனும்வசையாய்
கண்ணில் விரற்பட்டால் கரத்தைத் தறிப்பதுண்டோ!

தண்ணீர் தனக்குவலுத் தானளவோ தம்பியரே
தோத்தா மதியாலே துஷ்டனெரு துணைவனே
ஏத்தா வகையிலொரு ஏந்திழையை ஏந்தியதால்,
மனது பொறுக்காமல் வன்மமே பாராட்டிச்
சினமுடன் போரில் சிரமறுத்துத் தீமையுடன்,
கோட்டிபல செய்துமன்னர் கோடான கோடியையும்
தாட்டிகமாய்ப் போரில் சங்கரித்தா[3] ரென்றுவசை
ஊழியுள்ள காலம் ஒழியாது ஆதலினல்
பாழி[4]யுடன் இங்கிதற்குப் பாவியிசை யானுகில்
பொங்கி முரசொல்லிக்கும் போர்முகத்தி லேமுனைந்து

உங்கள் மனம் சம்மதிக்க உற்றுயுத்தம் செய்யுமென்ருர்
சூடும் துழாயோன்[5] சுரர்முனி வரும்பலரும்
தேடும் பதஞ்சிவப்பச் செல்வதேன் நாடிரந்து
ஈடுடன் தூதுசெல்ல வென்னையேவு என்றுரைத்தான்
எங்கைக் கதைவலியும் இந்திரன்சேய் வில்வலியும்
புங்கமுட னிருவர் போர்வலியும் கண்டிருந்து
காக்கும் பொருட்டாகக் காசாம்பூ மேனிவண்ணன்[4]
ஆக்கமுடன் நமக்கு ஆனதுணை யாயிருந்து
வண்ணங் கருகி மனங்கருகி வாள்நுதலாள்
கண்ணுந் தரளம் கலுழ்முத்து மாருமல்

---

1 இவ்வடி தெளிவாக இல்லை
2 குத்தம் குற்றம்
3 வங்கிஷம் — வமிசம்
4 சங்கரித்தார் — அழித்தார்
5 காசாம்பூமேனி வண்ணன் — கண்ணன்

மைக்கூந்த லைவிரித்து மாமுலைமேல் ஆறோடக்
கைக்காந்தள் சென்னிவைத்துக் கன்றிநிற்கக் கண்டிருந்தும்
கொற்ற முடனே கொடியோரை சங்கரித்து
வெற்றி நீ கொண்டு மிகமகிழ்ந்து வாழாமல்,
விடமும் டவமும் விரகோர் உருவெடுத்த
கொடியனிழற் குள்ளுயிர்வாழ் கொள்கைகுறிக் கின்றாயே
வீமன் சினமாய் வெகுண்டு வெகுண்டுரைப்பத்
தாமன்[1] பரிவாகத் தான்பிரிந்து கண்ணோக்கி
அறிவு நெறிமுறைமை அண்ணன் தெரிந்துரைத்தால்
மறுகி யதனை மறுத்தல்இளை யோர்க்கழகோ

பொறைக்குப் பொருப்பனைய புண்ணியன் பின்னோர்கள்
வெறுப்பற் றிருப்பதன்றோ வேந்தே கோபந்தீராய்
என்னமால் சொல்லஇது என்னவிதி எறிருந்தான்

அருச்சுனன் கூறுதல்

வன்னிதரு மிக்க வரம்பெற்ற வன்னிஅன்னான்[2]
தாரை விழியில் தழற்கொழுந்து தான்காட்ட
போரை மதியான் புலவன் தருகுமரன்
முன்னவனை மாலை முடியால் தொழுதிறைஞ்சி
என்னபொறை இக்காலம் யான்பொருதல் போதாதோ,
இன்னம் பொறையே இசைந்து நீ பாராட்டி
அன்னை பிதாவுக்கு அதிகமாம் அண்ணாவே

என்னமால் சொல்லஇது என்னவிதி என்றிருந்தான்
எக்காலம் போர்முடிப்போம் எப்போ குழல் முடிப்பாள்
மிக்கோனே நம்குலத்தில் மெய்ச்சபதம் பொய்த்ததுண்டோ
ஐவ ருயிரோ டழிந்தாற்போல் பார்த்திருக்கப்
பைவருஞ் சர்ப்பப் பதாகை[3]யான் மாபாவி
மானங் குலைய மனங்குலைய நாணங்குலைய
இன்னஞ் சபையில் இழைத்த பெறும்பிழைதான்
நம்மிதயம் ஆறுமல் நாளும் தழலெரிய
கொம்மைமுலையாள் துயரால் கோவிரண்டுந் தீயெரிய
நாட்டார்க்கு இறுங்கிடி[4]ப்போம் நமக்குத் தவிடிடிக்க

1. கண்ணன்
2. வன்னிஅன்னான் — அருச்சுனன்
3. சர்ப்பப் பதாகை — பாம்புக்கொடி
4. கறுப்புச்சோளம்

மாட்டாரைப் போல மதிமானங் குன்றுவதோ.

தொய்குழல் தொட்டுத் துயிலுரிந்த நாள்முதலாய்
நெய்கமழ் கூந்தல் நிலந்தாழ்ந் துரைத்தபடி
முடிப்போம் எனநினைந்து முன்னியிருக் கின்ருயோ
படப்பாரில் தாமம் பலித்தவிதம் கண்டோமே.
தேவர் பழைய தெயித்தியர் மற்ருே ரெனினும்
யாவரேனும் எதிர்ந்தோர் ஆவியுனும் என்வாளி[1]
ஏற்ப திகழ்ச்சி எனுமுறைமை ஓராமல்
காப்பதெனச் சென்றவன்பால் கையேற்கக் காரியமேன்
தீண்டாத கற்பின் திருவைத்[2] துகிலுரிய

மாண்டாரைப் போல மருகிஇருக்க வைத்தாய்
நீண்டோனே மாலே நெடியோய் எனஅரற்றக்
கூண்டோ டவையில் கொடியோர் நமைநகைக்க
மாலருளோ நின்னறமோ மாதுடைய கற்பாலே
கோலமுள்ள ஆடை குறித்தே வளர்ந்தவிதம்,
மூக்கறுத்தாய் எங்கள் முனையழித்தாய் மன்சபையில்
ஏக்கமுறச் செய்தாய் இடையும் படிகெடுத்தாய்
பத்துக் கிரண்டெனிலும் பண்பிலெங்கள் சொன்மொழியைச்
சித்தத்தில் நீகேட்டால் தீமைபடக் காரியமேன்?
உலகளந்தோன் சென்ருலும் ஓர்கோடி சொன்னுலும்

தலைகவிழப் பின்னும்நம்மைத் தண்மைசொல்வான் தப்பாது
ஒருசாண் நிலமும் உனக்கே அவன்ஈயான்
குரவோர் சொற்கேட்டாலிக் கோடிமுனங் கொள்வானே
பாம்புக்குப் பால்வார்த்தால் பல்விடங்கள் போவதுண்டோ.
வேம்புக்குத் தேன்சொரிந்தால் மிக்க கரும்பாமோ!
விதியின் படியாலே மேலாடுங் கெட்டமதி
பதுமைக் கொழுநன்மொழி பாம்புயர்த்தோன் கேட்பானே
என்பேச்சு நன்றென்று எவர்கேட்க வல்லார்காண்
மன்பேச்சைக் கேட்டுநெடு மாலே நடவுமென்றான்
பாத்தன்[3] இவை சொல்லப் பரிநகுலன் தானெழுந்து

1 வாளி — அம்பு
2 கற்பின்திரு — பாஞ்சாலி
3 பார்த்தன் — அர்ச்சுனன்

நகுலன் கருத்து

மூத்தவனை மாலை முடியாரத் தொழுதிறைஞ்சி
நாடிரந்தோம் என்றரசர் நம்மை நகையாமல்
காடுறைந்த என்வலியும் மனவலியும் காண்கவையா
அரம்பை தனையன்று அவுணன் சிறையெடுக்க
வரம்புடன் நங்குலத்து மன்சிறை மீட்டே கொடுத்தான்
நாம்காண நம்சிறையை நள்ளார் துகிலுரிய
ஏங்காணும் சேந்திருந்தோம் எழுத்தின் படியலவோ
என்முன் றனுவலியால் இந்திரனும் வாழ்வுபெற்றான்
வின்முன் னவனெதிரே வெல்லவல்லோ ருண்டோதான்
மரக்கோணல் வாச்சியிலே[1] வந்தால் தெரியுதென்று
இருக்காமல் இவ்வாறு இசைப்பதேன் ஐயாவே
கானலைந்து நந்துணைவர் காலங்கழித்து வந்தால்
ஈனம்நமக் கென்றவனுக் கீசிருக்கு மானாக்கால்
இரங்கி வளநாடு எல்லாம் அருளானோ
இரும்பு வன்நெஞ்சன் இளகானே மால் வசனம்
நன்றென்று கேளான் நடவான்காண் சொற்படியே
அன்றறியா னோபிறர்சொல் லாலறிவா னென்றுரைத்தான்

சகாதேவன் கருத்து

நால்வரும் இவ்வாறுரைக்க நன்சகா தேவனென்றும்
மேல்வசனம் சொல்லாமல் வீறாய் இருந்தமையால்
அறிவு திறலறிவு அழகு புகழுடையோய்
பிறிதி யவரவர்போல் பேசாத தென்னெனவே
மாயன் வினவநெடு மாலே நீ தான்தூது
போயே னிருந்தேன் புயங்ககேதன்[2] துணைக்கு
அவனி யளித்தென் அளியா திருந்தாலென்
இவன்கார் முடிந்தாலென் இப்படியே நின்றாலென்
உந்தன் மனக்குறிப்பில் உற்றபடி நடக்கும்
அந்த முடிவை அறிவனோ யாதவனே[3]
முருகின் துளப முடியாய்[3] படியளந்த
கரிய பெருமுகிலே காசாம்பு மேனியனே

---

1 வாச்சி — மரஞ்செதுக்கும் கேரடரி
2 புயங்கேதன் — துரியோதனன்
3 யாதவன், துளபமுடியான் — கண்ணன்

ஒருவர்க்குத் தோன்றாது உன்மாய்கை யானறிவேன்

தெரிநின் நினைவே அதுவேயென் சிந்தையென்றான்
சொன்ன சுவைகண்டு துளசியான் தானகைத்து

சகாதேவனைத் தனியே அழைத்து வினவல்

மன்னன் விபகறிந்து மற்றவனைக் கைப்பிடித்து
அந்தரங்க மாயோர் அறையிலே தானிருந்து,
கந்தரங் கொள் வண்ணன் கருணையாய்த் தானோக்கி
மாபா ரதப்போர் வாராமற் காக்கும்வகை.

விருத்தம்

நீபார்த்துச் சொல்லெனவே நீதியுடன் சொல்லற்றான்
நீபா ரதஅமரில் ஐவரையும் நீறாக்கு
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புகழ்மாலே
கோபாலா போரேறே கோவிந்தா நீயலது

மாபாரத தம்முடிக்க மற்றியார் வல்லாரே
பாராளக் கர்ணனிகல், பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார்குழல்களைந்து காலில் தளைபூட்டி
நேராக கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம் மகாபா ரதமென்றான்

கண்ணன் வினாவும் சகாதேவன் கட்டுதலும்

முன்னம் மொழிந்த முறையெல்லாம் செய்தாலும்
என்னைநீ கட்ட இயலுமோ என்றுரைத்தான்
அன்னவை யெல்லாம் அரிதெனக்கே யானாலும்
உன்னைத் தலைவன் ஒருநொடியில் என்றுரைத்தான்
மாயனும் அன்பன் மனதறிவான் கட்டுகென
ஆய வடிவு பதின யிரமானன்

தூயவனும் மூலமெனும் தோற்றமுணர்ந் தெவ்வுலகும்
தாய அடியிணையைத் தன்கருத்தி னுற்பிணித்தான்
நீதேவன் என்றறித்து நெஞ்சால் தளைந்துவைத்த
சாதேவன் கண்களிப்பத் தானேயாய் முன்னின்ருன்

பூதேவரும் கனகப் பூங்கா[1] நிலவிலுறும்
மாதேவரும் தேடிக் காணா மலரடியோன்

சகா தேவன் கண்ணனிடம் வரம் பேறல்

அன்பா யின்றெம்மை அறிந்தே பிணித்தல் நன்று
என்பாதம் தன்னை இனிவிடுநீ என்றுரைப்ப
வன்பா ரதப்போரில் வந்தடைந்தோம் ஐவரையும்

நின்பார்வை யாற்காக்க வேணும் நெடுமாலே
என்றென் றிறைஞ்சி இருதா மரைத்தாளில்

நடை

ஒன்றும் கதிர்முடியாற்கு ஓமென்று கையளித்து
இன்றிங் கிருவோரும் நாடியவை அணுக
நின்றங்கு வெம்பி நெடிய குழல்சோர
யேந்திய வேர்ப்பின் இடைகண்ணீர் ஆருேட
காந்தியே நிற்பாளைக் கண்டுருகிச் சாத்தகியும்
தூதிதுவே யல்லாது தூதுண்டோ பூவுலகில்
மாது வருந்தவிடும் வனத்தூதே நேத்திஎன்றான்
கண்ணனை நோக்கிக் கனகசபை யிற்சாதேவன்

அண்ணன் மனம்போல் அடியேன் மனதுமென்றான்
இன்ன தெனவிளங்க இச்சபையிற் கூறுகென்றான்
மன்னனுடன் பகைத்து வன்போர் புரிவதல்ல
ஒக்கலுடன் சேர்ந்து ஒழுகி அவன்கொடுத்த
தக்க நகராளச் சம்மதியென் றேயுரைத்தான்
இவ்வாறு எல்லோர்க் கிளையோன் உரைத்திடவே

பாஞ்சாலி கருத்துரைந்தல்

அவ்வாறு கேட்டணங்கு அச்சுதன்கால் மேல்வீழ்ந்து
அலறி அழுது அபயம் பெரிதாகிக்
குலவிய பாஞ்சாலி கோவென்றே ஏதுசொல்வாள்

விருத்தம்

காலக் கனகன் தனிமைந் தனைமுனிந்த

காலத் தவனஅறையும் கற்றூ னிடைஎழுந்தாய்

---

[1] கனகப் பூங்கா — கற்பகச் சோலை

மூலப்பேர் கொண்டு முறையிட்ட யானைமுன்னே
நீலக் கிரிபோலே நின்றாய் நெடுமாலே
கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றமகன்
பற்றித் துகிலுரியப் பஞ்சவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரி கோவிந்தா நீயலது
அன்றைக்கு என்மானம் ஆர்வேறு காத்தார்காண்
மன்றின் அழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பால்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தால்
அன்றுவிரித்த அலர்கூந்தல் வல்வினையேன்
என்று முடிப்பதினி எம்பெருமான் என்றழுதாள்

சாத்தகி கூற்று (நடை)

மாதழுகக் கண்டு மனமருகிச் சாத்தகியும்
பாதகமி தென்றே பதைபதைத்துச் சாத்தகியும்
அவன்கையில் தண்டிருக்க அவன்கையில் வில்லிருக்க
இவள்நொந் துருக்குலைந்து இவ்வேசங் கொண்டுநிற்கக்
கண்டிருந் தெல்லோரும் கருதார்பால் ஊர்வேண்டி
உண்டிருந்து வாழ்வதற்கோ உன்னிஉரைக் கின்றீர்கள்
சண்டஉரு மன்னன் சராசந்த னுக்கருண்டு
வண்டுவரை[1] சேர்ந்து வடமதுரை தானிழந்து
கொண்டல் வண்ணண் தன்மதியோ கோத்தருமன் தன்மதியோ
பண்டும் கருத்தறிந்து பார்போய் இரப்பதென்றான்
சாத்தகி யீதோதச் சடைக்குழலாள் நின்றரற்ற
கோத்தரும னோடு குலவேந்தர் ஐவரையும்

கண்ணன் கூற்று

பாத்து அருள்சுரந்து பங்கயக்கண் நீர்சோர
ஏத்தரிய கற்பின் இளையாட்கு இனிதுரைப்பான்
மைக்குழலாய் கேளாய் விரவார் உடற்புலத்துள்
புக்குழலா கும்கொழுவாம் போர்வாள் வீமனெறும்
தொக்குழலும் வெங்கோன்மைத் தொல்வேந்தர் தன்குலமும்
இக்குழலும் சேர விரைவில் முடுப்போம்காண்
என்பிறவி யன்ன இளையளே கற்புடையாய்

---

1 துவாரகை நகர்

உன் குழலை யான்முடிப்பேன் உற்றதுயர் நீங்கெனவே

விருத்தம்

பெண்ணீர்மை குன்றுப் பெருந்திருவின் செங்கமலக்
கண்ணீர் துடைத்தொருதன் கண்ணிற் கருணையெனும்
தெண்ணீர்மை யாலிருந்து தேற்றினுன் சாற்றுகின்ற
மண்ணீர் அனலனிலம் வான்[1]வடிவா மாமாயன்
துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதோர்
கன்றும் வயிரமனத்தோர் கல்லா தவரிளையோர்
ஒன்று முறைமை உணரா தவர் மகளிர்
என்றுமிவர் மந்தணத்தில்[2] எய்தப் பெருதாரே.

கண்ணன் தூது செல்லல்

என்னக் களரி இருந்தோ ருரைதவிர்த்து
நின்னெப்பொன் றில்லாதோய் நீயேகென உரைப்ப
மன்னர்க்கு மன்னவன்பால் மாயோனும் தூதாகிப்
பொன்னுற்ற நேமிப் பொருபரிதேர் மேலானான்
சங்கும் மணிமுரசும் தாரைகளும் சல்லரி[3]யும்
எங்கும் முழங்க எழில்வெண் குடைநிழற்ற
பொங்கு கவரி புடையிரட்ட எண்ணரிய
அங்க மொருநாலும் அவனிபரும் தற்சூழ

கண்ணன் கடந்து சென்ற நில இயற்கை

கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமும் பூங்காவும்
நல்வரைய நீர்நாடும் நாளிரண்டில் சென்றருளி
தொல்வரைய கோபுரமும் நீள்மதிலும் சூழ்ந்திலங்கும்
மல்வரைய தோளான் வளமா நகரிகண்டான்

நடை

முத்து மரகதமும் முரசசெம் பவளநிரை
வைத்தபந்தல் போற்கழுகு மாற்கெதிரே தோன்றியதே
சந்தணம் தேங்கு[4]தரு சண்பக மகிலும்
கந்த மகிழ்முல்லை கதலிமா வும்பலவும்
மொய்த்தண்ட முட்ட முகிற்படலந் தான்தவழ

---

1 மண்நீர் அனல் அனிலம் வான் — பஞ்சபூதங்கள்
2 மந்தணம் — இரகசியக் கூட்டம்
3 சல்லரி — இசைக்கருவி (தாளம் ஆகியது)
4 தேங்கு — தேக்கு

மைத்தண் டலை[1]யில் வரிபாட மயிலாட
சேர்ந்தவரைக் காக்கின்ற சீர்தம்பை நாடதிபன்
மாதர்களுக் கன்புசெறி மங்கைபூ பாலகன்போல்
அச்சோலை கண்டதிலே அச்சுதனும் தானிறங்கி

மெய்ச்சோ டெனவளைந்த வேந்தருடன் அங்கிருந்தார்
சீர்அத்தின புரிமான் செந்திருவின் கேள்வனுக்குச்
சார்வுற்ற நீராசனம் வைத்தது போலே
செங்குமுதஞ் செங்கமலத் தேமலர்கள் நீர்போற்ற
அங்கமலப் பொய்கை அழகாலத்தி போலிருந்த
ஏனமாய்ப்[2] பூமி கடந்தநாள் அவ்வழியே
மானநீர் தானெழுந்த வாருய் அகழிருந்தது
அப்புரிசை தன்னில் அதிலான முகிற்படலம்
மெய்ப்புரிசைக் கால்தனிலே மேகமூடு மண்டலங்கள்
அஞ்சலில் லாமல் அரிய புலவோர்கள்

இஞ்சி[3]முடிவை எவர்கணித்துச் சொல்லவல்லார்?
சக்ரவாளப் பொருப்புந்தான் புரிசைக் கொப்பிலதென்ருல்
மிக்களழில் நொச்சி[4] வியப்பினைஎன் னென்றுரைப்பாம்
பகலும் கதிர்க்காந்தி பாயா விதமாக
இகலும் பலகாற்று மேவிரவி ஏற்றுதலால்
தகமையின் மந்தாசிலைத் தரங்கம் போலாக
அகல்விசும்சு எங்கும் நிறைந்தாடும் கொடியாடை
நாக ருலகோ நலமான பொன்னிலகோ
ஆகுமள காபுரி[5]யோ அயோத்தி மாநகரோ
உயர்ந்தவரை முஞ்சிக்[5]குள் இருந்தோடும் புயல்போல்

வயந்த நறும்புகையாய் மாடம்தொறும் எழும்பும்
மன்னர் கரிபரிதேர் மானிடருந் தானெருங்கி
மன்னுமுன் பேமாடம் பேர்விடம் கிட்டாமல்

---

1 தண்டலை — சோலை
2 ஏனம் — பன்றி
3 இஞ்சி — மதில்
4 நொச்சி — கோட்டைமதில்
5 அளகாபுரி — குபேரபட்டணம்
6 மூஞ்சி — முகடு

துன்னி நின்று செலசெலெனும் சொன்முழங்கும்
மன்னுபஞ்ச வாத்தியங்கள் பல்திசையும் தான்முழங்கும்
வரையில் வனத்தில் வளர்கடலில் நன்னிலத்தில்
விரவியே யுண்டாகும் எப்பொருளு மேகுவித்து
நிறைகின்ற ஆவணத்தின்[1] நீர்மையைநா வாணர்பலர்
உரையெல்லாம் தான்தொடுத்து ஓதுகினும் முற்ருதே
கானமல ரிலைகாய் கண்டவகைக் காலாட்கள்

மானப் பரவை மணலின் பரிக்கூட்டம்[2]
மீனின் பலகூட்ட மேவுமத வாரணங்கள்
வானின் மழைத்துளியாம் வண்ணமுள்ள தேர்க்கூட்டம்
இவ்வித மாக எழிலோங்கும் மாநகரான்
செவ்வி யுடையான் திரியோதரப் பெருமான்
தானரிய வோடியின்று தாமனெயிற் புரத்தில்
தேனெழுகும் சோலையிடம் சேர்ந்தனர்கள் இன்றெனவே
பாதம் பணிந்து பணிக்கொடியோன் தான்கேட்க

துரியோதனன் நகரை அலங்கரிக்கச் செய்தல்

தூத ருரைக்கத் துரியோதனன் மகிழ்ந்து
யோசனையது ஏழ்நூறு உள்ளநகர் வட்டமெல்லாம்

தேசுடனே தானிலங்கச் சிங்காரஞ் செப்புமென்று
உத்தாரஞ் செய்த உடனே தெருக்களெல்லாம்
வித்தார மாக மிகவே அலங்கரித்தார்.
முகில்போல் திரைபோல் முழங்கவே பல்லியங்கள்
இகல் மன்னர்மன்னன் எழுந்தான் எதிர்கொள்ள

சகுனி தடுத்தல்

மன்னவர் மன்னன் வணங்கா முடியோன் நீ
சின்ன மனிதனெதிர் செல்வதேன் காண்பதுவேன்
கோதின் மருவார் கொடுஞ்சொல்லைக் கொண்டுவரும்
தூதன்தனை எதிர்போய் தோன்றலே காண்பதல
என்று சகுனி இயம்பவே தானெழிய

1 ஆவணம் — கடைவீதி
2 பரிக்கூட்டம் — குதிரைத்தொகுதி
3 வாரணங்கள் — யானைகள்

நின்றவரை யெல்லாம் நெடியோ னிடத்தனுப்பி
திகிரிக் கரன்[1]தனக்கும் சேனைப் படைகளுக்கும்
மகிழ்வுற்று மாளிகையும் மாண்பா யலங்கரித்துப்
பின்னவரும் மன்னவரும் பேணித் துதிபரவ
மன்னவர்கள் மன்னன் மகிழ்ந்து கொலுவிருந்தான்
கங்கை மகன்விதுரன் கைத்துரோணன் சேயன்
சங்கைசேர் கர்ணன் சகுனி சல்லியன்கிருபன்
மிக்கப்பட்ட வர்த்தனரும் மென்மகுட வர்த்தனரும்
தக்கபல சேனைச் சலதிப்படை நெருங்க
உந்தி மகிழ்திரண்டு யோசனைபோய் தானெதிர்ந்து

வந்துவந்து எம்மருங்கும் மன்னர் முறைவணங்க
பைந்துழா யான்அங்கண் பரப்பி நகரடைந்து

கண்ணன் விதுரன் மனைபுகுதல்

அந்தமன்னன் இல்பூதாதான் விதுரனிற் புகுதப்
புந்திதனி லேஅதிகப் புடைசூழ்ந்த மன்னவரை
சந்தமுடன் போகவிடை தானளித்து மாயவனும்
அன்பாய் விதுரன் அரிய மனைபுகுந்து
பொன்பாவோர் மண்டபத்திற் புக்கிருந்தா னம்மானை

விதுரன் உபசரிப்பு

அம்மண்ட பத்தில் அரியா சனமீதில்
செம்மல் தனைஇருத்திச் சிந்தைக் களிகூர்ந்து
என்பவமும் இன்றிழந்தேன் என்பிறப்பும் தான்தீர்ந்தேன்

நின்பதமும் பெற்றேன் நிசமாய்க் கதியடைந்தேன்
அருந்த அமரர்க்கு அமுதளித்தோய் என்மனையில்
விருந்தென்று வந்ததுஎன் மிக்கதவம் என்றுரைத்துப்
பஞ்சா யுதத்தோனை[2] பஞ்சவர்கள் தூதுவனை
மஞ்சான மேனியனை[3] மாமரக தச்சுடரைக்
கால்கரங்கள் ஆவிமுகம் கஞ்சமலர்த் தாளை
மால் கழற்கு மாலாகி மன்னவன்மேல் மேற்பணிந்து
இறப்பிறப்பும் இழந்தானேல் வீடு கண்டோர்

---

1 திகிரிக்கரன் — கண்ணன்

1 பஞ்சாயுதன் — சங்கு, சக்கரம், வில், வாள், கதைகொண்ட திருமால்

2 மஞ்சாள் மேனியன் — மேகவண்ணன்

இறப்பிறப் பதிலே இச்சித்ததில்லையதால்
உள்ளினன் உள்ளம் உருகி உணர்ந்தெழுந்து

துள்ளினன் வீழ்ந்தடிகள் சூடினன் தன்துயரைத்
தள்ளினன் பூங்கையினல் தத்துவமாய் நல்லமுதை
அள்ளினன் கையால், அருந்தினன் ஆசைகொண்டே

விருத்தம்

முன்னந் துயின்ற முதியதிருப் பாற்கடலோ
மன்னனந் தனே[1]நன் வடவா லிலைதானே
சொன்ன சதுர்மறை[2]யோ துய்யோ னிருதயமோ
என்னதவம் செய்ததுநீ எந்தன் புன்குடிலே
மும்மை யுலகம் முழுதும் எடுத்தருந்தும்
எம்மை யுடையான் விருந்துக் கிசைந்தானென்று
அம்மென ஆறு பதினயிர மடையர்[3]

கண்ணனுக்கு விருந்தளித்தல்

தம்மை யவனுக்கத் தான்சமைத்தா ரம்மானை.
வந்தபரிதோல் வருதினிக்[4]கும் மன்னவர்க்கும்
இந்திரர்க்கும் எய்தாத இன்னமுதாய்ச் செய்ததற்பின்

நடை

ஈசன் இரவொழித்த எம்பெருமான் மெய்மகிழ்ந்து
வாசமுறும் நீருடி வண்மையுள்ளான் இல்லகத்தில்
மாயன் முதலாக மற்றேரும் உற்றசனம்
நேய முடனருந்தி நீள்களபப் சேறணிந்து,
கற்பூரம் பாக்கிலையும் காட்சியுட னருந்திப்
பொற்பாகு மெய்யான் புளகாங் கிதமாகித்
தாரணிந்து ஈர்மருங்கும் சாமரைகள் தானிரட்ட

பூராணமாம் வெண்மதியம் போன்றகுடை நிழற்கீழ்
கேசவனும் ஓர்தவிசில் கேசரிபோ லேயிருக்கத்
தேசருணன்[5] மேல்திசையில் சென்றடைந்தான் அம்மானே

---

1 அனந்தன் — ஆதிசேடன்
2 சதுர்மறை — நூல்வேதம்
3 சமையற்காரர்
4 படை
5 ஒளிமிக்க சூரியன்

உரகன்[1] மணிமுடியை ஒத்தே ஒளிர்தீபம்
இருபுறம் நாரு யிரப்பத் தெடுத்தேந்த
அரியா சனத்தில் அரிகேசவன் இருப்பக்
குரவோன் விதுரன்வந்து கும்பிட்டுத் தான்தொழுது

விதுரன் கண்ணனை வந்த காரணம் வினவல்

கங்கை திருக் கால்வழியே கண்ட நெடுமாலே
இங்குவந்த தேது இசைத்தருள வேணுமென்ருன்
காட்டிலே சொன்னநாள் கழித்தோருண் டுங்கழித்து

நாட்டிருந் ஐவருக்கும் நண்பாய்க் குருநாடு
கேட்டுவந்தோம் என்னக் கிழவோனு மாலுடனே
மீட்டு மறுசொல் விளம்பலுற்ரு னம்மானை.
முழக்க முடைய முரசுயர்த்தோ[2]னுக்குரித்தாய்
வழக்கிலறிந் தரவ மன்னன் வழங்கறியான்
சமரப்பறை[3]திசைகள் தானெங்கும் நின்றதிர
அமருற் றவிந்ததற்பின் அருள்வா னென்றுரைத்தான்
நாளைவாழ் வோர்க்குரிய நாடீயான் தன்துரியன்
மூளைவாய் கோட்ட முடிப்பேன்போ என்றுரைத்தான்
வீரத்தின் மிக்கோர்கள் மிக்கோர்க்கு மொற்றிருக்கப்

பாரத்தை யெல்லாம் பரிந்தகத்தி லேயடக்கி
மெலிவுற்றிரப்போர் போல் வேண்டலும் நாடீயானேல்
பொலிவுற்ற செல்வமிகப் போக்கடிப்பார் என்றுரைத்து
வில்விதுரன் தன்னை விடைகொடுத்துத் தானனுப்பி
நல்விசைய நண்பனு[4]மே நன்கண் வளர்ந்தனனே
அப்பொழுது தான்கடிகை ஐயாறு சென்றதற்பின்

மறுநாள், துரியோதனன் அவைக்களத்திருத்தல்

இப்பொழுது கீழ்த்திசையில் இரவி எழுந்தன்னே
சோதி நதிமைந்தன்[5] துரோணன் அசுவத்தான்
ஓது கிருபன் உயர் விதுரன் விற்கிருதன்
கன்னன் சகுனி கருதரிய சல்லியனும்

---

1 ஆதிகேசன்
2 தருமன்
3 போர்ப்பறை
4 கண்ணன்
5 வீடுமர்

பன்னு சிந்துராசன், பகைதத்த னவன்பூரி
தன்னுயி ரொத்த தலையான மன்னவர்கள்
துன்னு திருத்துணைவர் தொண்ணூற்று ஒன்பதின்மர்
வீறுபெறத் தேசம் விளங்குபட்ட வர்த்தனரும்,
ஆறுநூ றுயிரத்து அறுபத்தோ ராயிரம்பேர்
தோன்றுங் கிரணச் சுடர்மகுட வர்த்தனரும்
மூன்றுநா றுயிரத்து மூவிருப தாயிரம்பேர்
அக்ரோணி[1] பன்னொன்று அதிகப் பெருஞ்சேனை
மிக்க கடல்போல் விரவிப் புடைசூழ,
வெண்கவரி ஆலவட்டம் வெண்சாமரை இரட்ட.

பண்டுகொள் விதமான பஞ்சவாத்தியங்கள் தான்முழங்க,
வாலரவி போல் வயங்குகா ளாஞ்சிகொடு
சாலமிகு கன்னியர்கள் தானடப்பங் கட்டிநிற்க
பட்டையம்[2] கோட்டை பலபடைகள் ஏந்திநிற்க
கட்டியக் காரர்கள் கனமுழக்க மேலாட
போர்ப் பிரம்பாளர் பொருசந் தடிவிலக்க
நாப்புல வோர்கள் நயந்துகவி பாராட்ட
மாத்தா யிரத்தெண் வளர்கனகப் பொற்சுவரும்
கோத்தூய மரகதத்தூண் கோடி நிரைக்குநிரை
பவளத்தினி லிசைத்த பற்பலநல் லுத்திரங்கள்

நவமுத்துள் பதுமராக வயிரத் தூலம்
வயிர வயிடூரியக் கோமளத் தரள
இயன்றபல கைவச்சிர வீருணி கொண்டிறுக்கி
முத்து நவரத்தின முதலாஞ் சரம்நிறைத்து
சித்திரமணிக் கூடநடு சிங்காதனத் தின்மிசை
மன்னவர் மன்னன் வணங்காத மாமுடியோன்
பொன்னக[3] ராளும் புரந்தனைப்[4]போ லிருந்தான்
முன்சொன்ன மன்னர் முறைமுறையாய்த் தாள்வணங்க

---

1 21 880 யானைகள், 65 610 குதிரைகள் 21 870 தேர்கள்,
10 93 50 காலாட்கள் கொண்ட படைத் தொகுதி.

2 வாள்

3 பொன்னகர் — இந்திரபுரி

4 புரந்தரன் — இந்திரன்

கண்ணன் வந்தால் மதியாமலிருக்க ஆணையிடல்

நன்செல்வன் அங்கிருக்க நாட்டங்கொடு காட்டி
மன்னர் முகங்கள்தோறும் மாமலர்க்கண் தான்பரப்பித்
துன்னலர்[1] தூதிடையன் தோன்றிஅவை யில்வந்தால்
அவனை ஒருபொருட்டா யாராகிலும் எழுந்து
தவனத்[2] துடனெதிர்ந்து சங்கைகொண்டு கண்டிறைஞ்சி
உறவு பரிந்தவர்கள் ஊரடங்கத் தீமுட்டி
கறுவி எரித்துவிடக் கட்டளைசெய் வேனெனவே
சீறினான் யாவரையும் செங்கண் அழல்பறக்கக்
கூறியே வற்புறுத்திக் கொண்டிருந்தன் மன்னர்மன்னன்
இந்த விதமாய் இராசாதி பனிருக்க

துரியோதனன் அவைக்குக் கண்ணன் வருதல்

கந்த மலர்முடியோன் காயாம்பு மேனியனும்
காலைக் கடன்முடித்துக் காவலன்தன் பேரவையில்
மாலச் சுதன்முகுந்தன் மாயவனும் சென்றளவில்
துன்னுகங்கை மைந்தன் துரோணன்மகன் விருதன்
மன்னர்மன்னன் தானொழிய மற்றுமுடி மன்னரெல்லாம்
முந்த வந்துவந்து முறையாய்த் தாள்தொழுதார்
சந்தமுறு கர்ணன் தலைகவிழ்ந்து தானிருந்தான்
சகுனி மனதில் தயுவாய்த் துதித்திருந்தான்
மகிமை யுடனிருந்தோர் வைத்தமணிப் பீடமதில்
பைந்துழாய் மாயன் பரிவாகத் தானிருந்தான்
மைந்துமுகங் கொடுக்கான் மன்னன் முகமாறி

துரியோதனன் கண்ணனை வினவல்

இந்நகரில் எய்தியும்நீ என்னகத்தில் எய்தாமல்
றென்னல் அயலிற்பூந் தோனிங்கு வந்ததேனெனவே

கண்ணன் கூற்று

மன்னனிவை சொல்ல நெடு மாலும் எதிருரைப்பான்
என்னிலகம் நின்னிலகம் என்றாலும் வில்விதுரன்

1 பகைவர்
2 பேராசை

முன்னமெதிர் வந்துகண்டான் மொய்ம்புடை யோனன்பதனால்
நென்னல்தனில் அங்கிருந்தோம் நின்னில் அதுவலவோ
உன்னில் இன்னமொன்று உளதுவகை கேளாய்
நின்மனதுக் கொவ்வா நிருபரெனும் பஞ்சவர்கள்[1]
தன்மொழிக் குள்ளாக வந்தாஞ பதியான்காண
நின்னில் அன்னமுண்டு நினைவெறுக்க நீதியுண்டோ
மன்னர்க் குடர்விளைக்கும் மந்திரியும் உற்ரூேர்சொல்

தன்னை மறுப்பவரும் தான்நன்றி மாறினரும்
உன்னிஒரு மனையில் உண்டவஞே டேபகைத்து
உரசுடன் வெம்போர் உயித்தந் தனைமூட்டில்
இரவிஇந்து[2] உள்ளளவுமே யுழல்வர் வெந்நரகில்
என்றுமால் சொல்ல இறைவன் எதிர்நகைத்து
நன்றுநீ தூதனென நாடிவந்த புன்மையினைச்
சொல்லென்று மன்னன் துடுக்காகத் தான்கேட்க

கண்ணன் வந்த செய்தி கூறல்

நல்லென்று பைந்துளப நாராயண ஞுரைப்பான்.
சூதில் அரசிழந்து சொன்மாறாது அக்காலம்
எதிலார் போல இடைந்துகா னிற்கழிந்து

தீதிலார் வந்து செகத்தில் வெளியாஞர்
கோதிலார் நாடு கொடுமன்ஞ வென்றுரைத்தான்.
சத்திய வீரன் தருமன்மு தலைவரையும்
புத்தியுடனே பொருந்தவழைத் தங்கவர்கள்
நாடு மளிந்து நன்மையுடன் ஒத்திருந்தால்
நீடு புகழோங்கும் நிருபன்உனைப் புகழ்வார்
அல்ல வெனிலே அறமல்ல ஆண்மையல்ல
மல்லற் புகழுமல்ல மன்னவர்க்கு மேருது
என்றுமால் சொல்ல இராசா திபனுரைப்பான்

துரியோதனன் கூறுவது

அன்று ரிமையால் அரசிழந்த ஐவர்கட்கும்

இன்றுன் விரகிரக்க எண்ணில்யான் ஏழையல்ல
சென்றுகான் இன்னம் திரிந்தலையச் சொல்லுகென்ருன்

---

1 பாண்டவர்கள்

2 சூரிய சந்திரர்

நீவெறுக்கி லென்ன நிருபர் திகைக்கிலென்ன
காய்வுடன் சூழ்ந்தோர் கலங்கி நகைக்கிலென்ன
பேய்நகைக்கில் என்னமொழி பொய்தானென் றோதிலென்ன
நீயவர்க்குத் தானுறவாய் நிட்டூரம்[1] பேசிலென்ன
தேயுவென ஐவர் திறற்போர் விளக்கிலென்ன
ஈயிருக்கும் அவ்விடமும் ஈயேன்என உரைத்தான்
கார்வழங்கும் ஏரிடிபோல் கண்ணிலான்[2] சேய்கழற
பார்வழங்கா யாகிலொரு பாதிதான் ஈயுமென்றான்

தார்வழங்கு மார்பன்அது தானும் மறுக்கவுமைந்து
ஊர்வழங்கு கென்ன உரைப்பான் உறுசினமாய்,
மாடளிக்கும் பைந்துளப மாலே பெருங்கடல்சூழ்
நாடளிக்க ஐந்து நகரளிக்கக் காரியமேன்
காடளிக்கப் பூந்து கசிந்தலைந்த பஞ்சவர்க்கோர்
வீடளிக்கில் வேண்டா மெனவேவெ றுப்பார்களோ?
பயனற்ற புன்சொல் படித்துப் படித்தேநீ
வியனுற் றுரைப்பதெல்லாம் வீண்வீண் நடவுமென்றான்.

கண்ணன் அறிவுரை

தந்தை விரகந் தனக்கிளைய தாய் சேய்க்கு
இந்தஉல களித்தோனின் குலத்தோன் இங்கிருக்க

உந்தை நிலத்துக்கு உரியதோ ரைவருக்கும்
ஐந்து நகரளிக்கா யாசிலென்ன நின்வாழ்வு
காட்டுக் கெறிந்தநிலா கானலுக்கே பேய்ந்தமழை
மேட்டுக் கிறைத்த விரையொக்கும் நின்வாழ்வு
ஒருவங்கி ஷத்தில் உறவர்இரு வர்பேரும்
வரமுந்து பாலகர்கள் வன்மையுடன் ஒத்தொழுகி
விரவியிருப்பதுவே மேன்மை புகழியாக்கை
ஒருவர் தனைவிரட்டி ஒருவர் உலகாள்தல்
நரரிற் குருகுலத்தோய் நன்றுநன்று நன்குலமே
நின்குலத்தின் நல்லியல்பு நின்னுளில் மங்குவதோ

புன்குலத்தோர் யார்க்கும் பொறுக்கா தெனவுரைத்தான்

துரியோதனன் கூற்று

சீதரன்அஞ் சொல்லாற் சினமூண்டு கண்சிவந்து

---

1 கொடுமை, அபாண்டம்
2 குருடன், திருதராட்டிரன்

பூதலத்தின் ஆசையந்தப் புன்மையுள்ளோர்க் குண்டானல்
நாடிரந்து வாழல் நற்பாலருக் கழகோ
பீடிழந்து நாடிழந்து பேய்போல் அலைந்தவர்கள்
மதத்துப் பகைத்துமிகு வஞ்சினங்கள் சொல்வாயால்
இதத்து நகரிரப்ப தென்னேஅரசுசே கட்டோர்
மன்னவர்கள் விந்தால் வருவோரே யாமாகில்
துன்னரிய வீரமுள்ள சூரரே யாமாகில்
ஆயுதங்கள் கையில் அறிந்தேற்ருேர் ஆமாகில்

வாயுஞ்சின முரசு மானமுள்ளோ ராமாகில்
வேலினுட கூர்முகத்தில் மேதினியல் லாதுமுண்டோ
காலில் விழுந்திரந்தோ காசினிதான் ஆள்வதென்ருன்
கெஞ்சிமன்னர் சீர்மை கிளர்ந்தாள்வ துண்டோதான்
வஞ்சமுடன் வைதுபிச்சை வாங்கலுண்டோ சொல்லுமென்ருன்

கண்ணன் துரியோதனனை போருக்கும் கரம் வேண்டல்

நின்வலியிற் சூழ்ந்த நிருபர் புய்வலியால்
தன்வலிகொண்டு டைவர்களைத் தள்ளுவதே மெய்யானல்
வீரர்கள் மெச்ச வெளியாங் குருநிலத்தில்
போர்இகல வாரமென்று போடுகரம் என்றுரைத்தான்

துரியோதனன் இகழ்ச்சியுரை

விம்மு சினமூண்டு வெங்கண் உறச்சிவந்து

அம்முன் உறுந்தூணில் அன்றறைந்தான் தீப்பரக்க
ஆடகன்[1] தூணில் அதிர அறைந்ததுபோல்
வேடை யுடன்தூண் வெடிக்கவே தானறைந்து
புன்குலத்திற் கீழாம்பொதுவ ரொடும் பொருந்தி
நன்கடறில் கன்றுபசு நாடோறும் மேய்த்தலைந்து
உரலோடு கட்டி யுனைத்தாம் மணிக்கயிற்ருல்
காமுற் றிடைச்சிகையால் கட்டியடி பட்டதையும்
எண்ணிப்பா ராமலச்சம் எள்ளளவு மில்லாமல்
அண்ணல் குழுவென்று அவையறிந்தும் பேசாமல்
கோபால ருக்கடுத்த கொள்கைச் சிறுமொழியைப்

பூபாலர் கேட்கப் புகன்றதுநின் புன்மதியோ
சொல்லிரண்டு பேசுவானே சொன்னமொழி மாறுவனே
புல்லருண்டு போமோ புன்மேயும் புல்வாய்கள்

[1] ஆடகன் — இரணியன்

சொன்ன மொழிசறுகிச் சோராது பஞ்சவர்கள்
துன்னி யமரில்வரில் தோன்ரு தொளிப்பேனே
சீயம் பயப்படுமோ சிந்துரங்கள் தான்பகைத்தால்
ஞாயமோ வீறோ நீ நன்கைபோ டென்றுரைத்தாய்
நன்று நன்று புத்தியிதோ நாவிரண்டு பேசுவனே
இன்றுநீ சொன்னதுனக் கேற்றதோ நேற்றவையில்

பாண்டவரைப் பழித்தல்

கூந்தல் பிடித்துக் குழறிக் குழறியழ
வேந்த ரவைதனில்நான் மிக்கபங்கஞ் செய்யுமந்நாள்
மாந்தி மயங்கி மறுகி மனம்வெருவி
காந்தி யருகிருந்து கண்ணிஞர்க் கண்டிலிரோ
செத்த உலைச் சுமந்துண்டி கொண்டலைந்து
இத்தை வரைக்கும் இருந்தாரோ பாவியர்கள்
அன்றிலா மானமவர்க்கு அந்தரமாய் வந்ததுண்டோ
இன்று செருவுக் கிடமாய்த் திறந்தாரோ
அன்னை இருபேராம் ஐந்துபேர் தாதையராம்
மின்னொன்றை ஐவர்களும் மேவிப் புணர்வாராம்
வேருமில்லைத் தூருமில்லை வேறு குலமுமில்லை
நேரில் குருகுலமாம் நீதியுள்ள மன்னவராம்,
என்னோடே ஒத்தவனாம் என்பாதி கொள்வானாம்,
அன்னோன் தனக்கிடையன் அன்பனாம் தூதுவனாம்
என்னை அவனோடு இணைவைத்துச் சொல்லுவனாம்
பின்னையும் பாதிப் பிரித்துக் கொடுப்பானாம்
மன்னவையில் வந்தாலும் வாய்தாங்கிப் பேசாமல்
சின்னமரபுக் கிசைந்த சேதியோ சொல்வதெல்லாம்
தூதனெனுந் தன்மையினால் சொன்னாய் நன்றேகுகென்று
நாதன் குருகுலமன் நாயகன்ஈ தோதிடவே

கண்ணன் விதுரன் இல் சேர்தல்

ஒன்றும் உரையாது உரைக்கெதிருஞ் சொல்லாமல்
நன்று நன்றென்று நகைத்தவையைத் தானீங்கிக்
கோவிந்தன் தானெழுந்து கோபமெல்லா முள்ளடக்கி
மாவிந்த மன்னன் வளர்விதுரன் இற்பூந்தான்

தாம மலர்கள் சருகாய்க் கருகிடவும்
பூ முகத்தில் வேர்வு பொலிந்துமிகச் சிந்திடவும்
செங்கண் சிவந்திடவும் செவ்வாய் துடித்திடவும்
அங்கந் துடித்திடவும் ஆறாத வெஞ்சினமாய்
என்பகை ஞனான இடையன் தனக்கழுது
அன்பினுடை னீந்தவனை யாட்பண்ணி னானிவனை
என்சொல்வேன் இங்கிவனை என்றழன்று தான்பார்த்து

வன்பின் விதுரன்முனம் வாய்பதறி யேதுசொல்வான்
என்தகப்பன் பின்பிறந்தும் என்கைஅனம் உண்டிருந்தும்
வன்பகைஞ னாய்த்தூது வந்தானைத் தான்மறித்து
என்பதம்உண் காதவண்ணம் ஈனன் விருந்தளித்தான்
வன்பகைக்கும் வன்பகைஞன் மற்றிவனல் லாதுமுண்டோ
ஒருவன் தனைத்தொடர்ந்து உள்ளமுதற் கொள்ளைகொண்டு
விரவும் பொருள்அதிகம் மீண்டொருவன் ஈந்தக்கால்
கொம்புவிட்டுக் கொம்புதத்தும் கோகிலங்கள் போலாக
வம்பன்நம் பரத்தை மகனல்லால் வேறுமுண்டோ
சதியன் கொடியன் தயவில்லான் தர்மமில்லான்

விதுரன் கொடுமையைப்போல் வேறுண்டோ வென்றுரைத்தான்

விதுரன் கூற்று

என்ன விதுரன் எழுந்துகொதித் தாக்கரித்துச்
சொன்ன வாய்ச்சோல சொரியச் சிரந்தறிப்பேன்
மன்னன் குருகுலத்தோன் மைந்தனைக்கொன் றான்எனவே
பன்னும் இமையோர்நற் பாலர் நகைப்பரென்று
என்னுட சினத்தை இசைந்தடக்கிக் கொண்டமையால்
இன்ன முயிர்கொண்டு இருந்தாயெனவெகுண்டு,
முன்னமொரு தூணில் முளைத்தமுகில் மேனியர்க்கு[1]
அன்னமிடில் நீயோ அடாது பகர்வதென்று
துர்க்குண முள்ள துரோகியுனைத் துறந்து

நற்குண மாகுமன் கண்ணனைய தோரைவரிடம்
சேர்ந்தால் எனையார் சினப்பார் நகைப்பருண்டோ
வேந்தா னவர்கள் வெறுப்பார் பழிப்பருண்டோ

---

1 தூணில் நரசிங்கமாக வந்த திருமால், கண்ணன்

விதுரன் தன் வில்லொடித்தல்

சொல்லிரண்டு பேசேன் தொடுத்துயித்தம் செய்யவென்று
வில்லிரண்டில் மேன்மையுள்ள வில்லைரெண்டாய் வெட்டினனே
ஒட்டிச் சினத்தால் உறைவிட்ட வாளால்வல்
வெட்டிச் சினத்தில் விதுரன் மனைபுகுந்தான்

வீடுமர் கூற்று

அச்சுதன் விற்கும் அரன்விற்கும் மேன்மையுள்ள
உச்சித வில்லை ஒடிக்கும்வகை செய்தாயே
வில்லுக் குயர்ந்தவரி வில்விசயன் போர்பூண்டால் 650
வல்லமையி னாலெதிர்க்க வல்லருண்டோ வில்லியரில்
காரனைத்தும் ஒக்கும் கணைவீசும் விற்கெடுத்தாய்
பாரனைத்து மைவருக்கே பண்பா யளித்துவிட்டாய்
உன்திறலும் உன்பெயரும் உன்படையும் இன்றொழிந்தாய்
இன்றுனது நன்குலங்கள் எல்லாம் இழந்ததென்று
வீடுமன் வெம்பிமிக உள்ளழிந்து சொல்ல,

துரியோதனன் மொழி

பீடுற்று நாசமுறும் பேர னெதிருரைப்பான்
வஞ்ச விதுரன் வரிவில்லுத் தானெழிந்தால்
மிஞ்சுவரி வில்லாளர் வேறொருத்தர் இங்கிலையோ
ஐவரையும் வெல்ல அருளுதாரப் பெருமான் 660
கைவரிவில் கர்ணனுட கார்முகம் ஒன்றேபோதும்
மற்றும் பெரும்படையும் அங்கவனே கொன்றிடுவன்
சற்றுமவன் விற்போர் தனக்கெதிரார் நிற்கவல்லார்
நீயிருக்க, விற்குருவாய் நின்றோ னிருக்கஅவன்
சேயிருக்கச் சல்லியனும் சிந்து பதியிருக்க
மாம னிருக்க வயமன்னர் திரண்டிருக்க
வீமன் விசயன்வந்து மேலாட வல்லாரோ
இடையன் தனக்குவிருந்து ஈயுகின்ற பொல்லாதான்
தடையின்றி வின்முறித்தேன் தான்சினந்தேன் போயிருந்தேன்

அங்கர்கோன் மொழி

என்றவன் சொல்ல எழுந்தங்கர் கோமானும்[1] 670
நன்றந்தப் பஞ்சவரை நான்கொல்ல வல்லேன்காண்

---

1 கர்ணன்

வென்றிமால் தேர்தூண்ட வில்விசையன் போர்மூண்டால்
அன்றுநீர் காணேன் அடற்போரில் ஆண்மைதனை
வானவரும் தானவரென் வன்பகழிக் காற்றுவரோ.
நானுரக வாளிதொட்டால் நன்றுநரனே பிழைப்பான்
மூவுலகி லெந்தன் முனிக்குமுன்னே நிற்பருண்டோ
பாவலரு மெச்சுமெந்தன் பாணிதனக் கென்றுரைத்தான்

வீடுமன் கூற்று

கண்டிருந்து மிண்டுரைக்கும் கர்ணா நின் வீரியம்கைம்
பெண்டுகளுமே நகைப்பார் பேதைமதி பேசுவதேன்
அரங்கத்திற் பட்டதுவும் அன்றுவரி வில்வளைத்துத்
தரங்கொள் மகுடபங்கம் தானாகி வீழ்ந்ததையும்.
பின்பொரு திக்கெட்டும் பின்போய்ப் பொருதியதும்
மனம்பதறம் புள்ளெடுத்த அன்றுநீ மீட்டதுவும்,
சித்தசனின்[1] மன்னைச் சிறைகொண்டு போகையிலே
உத்தமனே நீ சென்று உரம்கொண்டு மீட்டதையும்,
தேவருக் காகத் தெயித்தியரை வென்றதுவும்,
யாவரும் உந்தன் அடல்கண்டு மெச்சினர்காண்,
நென்னல் வலிய நிரை கொண்ட போர்தனிலே
கன்னனே நின் வலியைக் காவலர்கள்
ஆதித்த னுக்கெதிரோ அற்பமாம் மின்மினிதான்
சாதிக்குஞ் சிங்கந் தனக்கு மறிஎதிரோ
இடிக்குன் நொடிஎதிரோ இந்திரன்சேய்க் கோஎதிர்நீ
துடிக்குப் பெரியமிடா[2] தாரணியி லுண்டோதான்
படிக்குள் விசையனின்று பாரித்தமர் முனைந்தான்
நொடிக்கு மளவெனின் நொய்துயுத்தம் செய்வாயோ
விசையன் விசயனெனும் வெற்றிஎவர்க்குண்டெனவே
அசைவற்ற வீடுமனும் அவ்வா றுரைத்திடவே

கன்னன் மொழி

உரவன்ன மருந்தி உற்றவன்போ லொத்திருந்து
இரவன் அனைய இவன்பகையை மேன்மை சொன்னாய்
ஒன்றுபடப் புவனத்து உள்ளோர் எதிர்த்தாலும்
நின்றென் சமரில் நிமிஷம்எதிர் நிற்பாரோ

---

1 மன்மதன்

2 பானை

சிவனும் எனது சிலைக்கே நிலை கலங்கும்
எவனும் எனக் கெதிரோ என்றுருத்துச் சீறினனே.
கன்னன் இவையுரைக்கக் கங்கைமகன் வேறே யொரு
நன்னயமும் சொல்லாமல் நாளையறிவோ மெனவே
அவைவிட் டெழுந்து அவனுமனை புகுந்தான்
சவையுற்ற வரையெல்லாம் தானேகு மென்றுரைத்து
அரவக் கொடியோன் அவனும் மனைபுகுந்தான்

விதுரன் மனையில் கண்ணன் விதுரனிடம் வினவல்

வரிவில் விதுரன் மனைபோய் நெடியோன்தன்
சரணம் பணிந்ததற்பின் தாமன் எதிர்நோக்கி

இரண்டு சிலைக்கும் இகல்சேர் பெருஞ்சிலையை
துண்டித்த கோபமென்ன சொல்வீர் எனக் கேட்கக்
கண்டித்த சொல்லால் கதழ்வாய் துணித்தனென்று

விதுரன் மொழி

ஆவ தறியான் அமைச்சர் மொழிகேளான்
வீவ துணரான் விளைவுதனைக் குறியான்
நாவது காவா தவனுக்காய் நண்சமரில்
சாவது அறமெனச் சாற்றினரே மிக்கோர்கள்
செல்வம் மிகுங்காலம் தெய்வந்தனைப் பேணார்
சொல்வ தறிந்துரையார் சுற்றந்தனை நோக்கார்
வெல்வகையை உண்ணுவர்கள் வெம்பகைவீ னுன்னார்கள்

பல்வினையும் பாரார் பழுதுபடு மாந்தர்
மிக்கதவப் பேறாய் விருந்து வந்தாய் யான்மகிழ்ந்தேன்
துக்க முடைய துரோகிமிகத் தூசணித்து
வாயில் வாராத வடுக்கடுஞ்சொல் கூறியதால்
தீயிற் கொடிய சினத்தாற் சிலைமுறித்தேன்

கண்ணன் மொழி

என்ன மால்அன்பாய் இவனை முகம்நோக்கி
நின்னை ஒழிய நிருபன் அமர்கருதிக்
காற்றாய்க் கனலாய்க் கடும்படை கொண்டேவினும்
கூற்றாய்க் களத்தில் கொலைசெய்வேன் என்றுரைத்து
இன்றுன் சிலையோ இறுத்திங்கு நீயடைந்தாய்

இன்றே இவன்குலங்கள் எல்லாம் இறுத்ததன்றோ

கண்ணன் குந்தியிருப்பிடம் செல்லல்

என்று பகன்று எழிற்கர்ண னையீன்ற
மன்றல் செறிகுந்தி மனையடைந்தான் மாமாயன்
கானடைந்த மக்கள் முகம் கண்டாளைப் போலாகித்
தானெதிர்ந்து கண்டு தயவாய் மொழிப் பகர்ந்து

குந்தி கண்ணனை வினவுதலும், கண்ணன் மொழியும்

இந்நகரில் வந்தவிதம் ஏதென்று தான்கேட்க
மன்னவன்முன் தூதாக வந்ததும்போர் மூண்டதுவும்
நாளையே தான்போர் நடக்குமென வுரைத்துக்
காளையங் கர்ணன் கதிர்க்குநீர் பெற்றமகன்[1]
அன்னவன் கற்ற அரிய படைவலியால்

மன்னன் இசைந்து மகிழ்ந்தன்பு தான்பூண்டான்
கன்னன் தனைச்செயிக்கும் காவலர்கள் வேறுமுண்டோ?
முன்னம் விசையமுடன் மூண்டுரைத்த வஞ்சினத்தால்
உறவறியாமல் உயித்தத்தில் மாளாமல்
திறமையோடைவருமுன் சேவடியைத் தான்வணங்கி
ஓர்குடையின் நீழல் உலகங் குடியிருக்கச்
சீர்கவிய நீயரசு செய்யென்று நீ பகர்ந்தால்
மாறுவானிகலந்த மாசுணபா சந்தனை[2] நீ
ஒருகால் விடவும் உரகக்[3] கணைதவறில்
இருகால் விடாமல் இசைந்துவரம் பெற்றிடென்று

குந்தி வருந்தி மொழிதல்

சொல்ல மனங்கருகிச் சோபித் துளங்கலங்கி
அல்லல் மிகவாகி அன்றேதான் நீயுரைத்தால்
அவனங்கு சேராமல் ஐவருடன் சேர்த்து வைப்பேன்
இவனு மவனும் இகலுற்ற தின்பிறகு
சொல்வதேன் சொன்னாலும் சொன்னபடி கேட்பானோ
அல்லவெனில் கர்ணனுடன் அன்னையெனச் சொல்லேனேல்
தன்துணையென் றேயறியான் தானனுப்பான் பார்த்தனையே[4]
அன்றி உரைத்தால் அவனை இவர் வதைப்பார்
தீவினைக் குள்ளானேன் யான்செய்த கொடுமையிதோ
பாவிநான் பெற்ற பலனிதுவோ என்றயர்ந்தாள்

---

1 சூரியனுக்கு மகவாகப் பெற்ற கர்ணன்
2 பாம்புக்கணை
3 பாம்பு
4 அருச்சுனன்

வாடி விழுந்தாள் மனத்துயரைத் தானகற்றி

அதுகண்டு கண்ணன் கூறல்

நீடு புகழான் நிசமாக ஏதுசொல்வான்
ஐந்தலை நாகம் அனையதொரு ஐவர்களும்
மைந்து நடுத்தலையாம் வாள்விசையன்[1] ஆதலினால்
பாத்தன் உயிர்இறந்தால் பஞ்சவருமே இறப்பார்
காத்துமவன் மடிந்தால் சாகார்கள் ஐவர்களும்,
ஐவர்மடி தல்நன்றோ அங்கர்கோன்[2] மாய்தல்நன்றோ
தெய்வ மனையாய்நீ சீக்கிரம்போ என்றுரைத்தான்
மாயன்கண் டான்பின் மார்த்தாண்டன்[3] மேற்கடைந்தான்
தீயன்மனம் போலச் செறிந்தது இருட்படலம்

துரியோதனன் தூதீற்குப் பின் யாது செய்வது என்பது பற்றி வினவல்

தந்தை தம்பிமாரும் சகுனியுடன் கர்ணனையும்
அந்தரங்கம் பேச அரவுயர்த்தோன் தானழைத்து.
எல்லோரும் வந்தீர்கள் என்பகைவர் பஞ்சவர்க்கு
சொல்லாது சொல்லித் தொடர்ந்தாசு தான்மூட்டித்
தானுமவன் தூதாய்த் தனித்திங்கு வந்துரைத்தான்
மானமுடன் செய்யும் வழக்கே தெனக்கேட்டான்

திருதராட்டிரன் மறுமொழி

தீயன் உரைத்தமொழி திருஷ்டியிலான்[4] தான்கேட்டுப்
பாயும் புலிவயலிற் பட்டால் விடுவதுண்டோ
கங்கு லகலுமுன்னம் கண்ணன்தனை வளைந்து.
பங்கப்பட மடித்தல் பண்பாங் கருமமென்றான்

விதுரன் அறிவுரை

முன்பின்னு முண்டோ முறைமையோ தூதுவனார்
வன்பின் உயிர்பறித்தல் மன்னவர்க்குத் தானழகோ
மூற்றோர் இளையோர் முனிவர் பிணியாளர்
போற்றாம் புலவோர் புகழ்தூதரை வதைத்தால்
மன்னர்க் கிதுபோல் வன்பாவம் வேறுமில்லை

---

1 அருச்சுனன்
2 கர்ணன்
3 சூரியன்
4 குருடனான திருதராட்டிரன்

வன்னிப் பெருநகரில் வாழ்வரெந்த நாளுமல்லால்
பழிபா தகர்தன் பதியிலே வந்தாலும்
அழிவாகக் கோறல் அதிபாவம், ஆண்மையல்ல
சிந்துபோ லுன்படைகள் சேர வளைந்தாலும்
அந்தமுள்ள மாயன் அகப்படான் கண்டீரே

ஆகா நினைவால் அபகீர்த்திக் குள்ளாகி
போகாப் பெரும்பழிநீ பூணவகை செய்வதென்று
தம்பி விதரன் னிவைசாற்றத் துகிலுரிந்த

துச்சாதனன் கூற்று

வம்பன்[1] மிகச்சீறி வைது தமயனுடன்
ஏதுசெய்ய வென்று இளையோரை இங்கழைத்தாய்
வாதுடன் மாயன் மடிந்தழிய வேணுமென்றால்
நாலுவகைப் படைதான் நான்குதிக்கும் கோட்டையென
கோலி வளைந்து குறித்தே பலதிசையும்
வன்னிதனை இட்டெரித்தால் மாயன் விதுரனுமாய்
கன்னலினில் மாய்வனிது காரியமென் றேயுரைத்தான்

சகுனி மொழி

இரவி முனைந்தால் இருள்கூடி நிற்பதுண்டோ
விரவியுழல் மூட்ட வேணுமோ ஓர்கணையால்
கொல்வேன் இருவரையும் கூசாதெழுமி னென்று
பல்வாய்மை சொல்லப் பரிந்துசகு னிசொல்வான்
கொல்வதியல் பல்ல குழிசெய்து அரக்கரையும்
மல்லரையும் ஒக்கவைத்து வாய்மூடி யேயதிலே
அங்கவனை வைத்து அதில்வீழ்த்தி யேயதிக
பங்கப் படுத்திப் பருவிலங்கு தான்பூட்டில்
தூதர்க் கிதுமுறைமை தொல்லுலகோர்க் கேற்குமென்று

சகுனி மொழியினை ஏற்றுச் செயல்படல்

மாதுலன்[3] சொல்ல வசமான புத்தியென்று

தாழக்குழி பறித்துத் தாழ்வாம் நிலவறையில்
வாழிநூ றாயிரம்பேர் வாளரக்கரை நிறுத்தி
மல்லர் அதற்கிரட்டி வண்மையுடன் தானிறுத்தி

---

1 நெருப்பு
2 துச்சாதனன்
3 மாமன்

வில்லரசர் தங்களையும் மிக்கதற்கு ரெட்டிவைத்துப்
பற்பல படைஞரைப் பத்துமடங் கொக்கவைத்துப்
பன்மணி கொண்டு பரிந்தாசனங்கள் செய்து
நன்மலர் மாலை நறைவீசத் தான்தூக்கிச்
செய்து முடித்ததற்பின் செங்கதிருந் தோன்றியதே.

கண்ணனை அழைத்துவர ஆள் அனுப்புதல்

தாம மலர்மன்னன் சதிர்கூடி யேயிருந்து
மாமுகுந்[1] தனிங்கு வரவென்று தூதுவிட்டான்
தூத ருரைக்கத் துவரைப் பதியானும்[2]
நாதன் சபைக்கு நடந்தனன்காண் அம்மானை.

மன்னர்களை சபைக்கு வராமல் தடுத்தல்

மாயனைச் சூழ்ந்து வருகின்ற மன்னவரை
வாயல்கள் தோறும் வகையாய்த் தடுத்துவைத்தார்
செய்தவிரகும் திறல் வாயலோர் தடையும்
மைதவழு மெய்யான் மனதோடு தானறிந்து
புன்முறுவல் கொண்டு புனிதன் சபையடைந்தான்.

கண்ணன் சபையினை அடைதல்

மன்முகிலைக் கங்கை மகன் முதலாக் கைதொழுதான்
அரவத் துவசன் அதனில் இருக்கவென்று
விரகுற்றவன் கரத்தால் மேன்மைபெறக் காட்டினனே
இறைவன் தவிசில் இருந்தான் நெறுநெறென

இருக்கை முறியக் கண்ணன் பேருருக் கோளல்

முறியக் குரிசில் முதல்வனறை யிற்புகுமின்
விரகுற்ற தாலுலகம் மேனாள் அளந்தான்போல்
வரமுற்ற பாதாளமட்டும் பதம் படவே,
நின்றான் உயர்ந்தான் நிமிர்ந்தான் முகடுமுட்டிப்
பூண்டான் சிரமனந்தம் பொங்குகர மிக்கனந்தம்
ஆனான் உலகமெங்கும் ஆனா னவனாகத்
தானாய் உலகுயிரும் தானிறைந்த மாமாயன்
அஞ்சினோம் அஞ்சினமென்று அந்தரரும் தான்பணியத்
துஞ்சினோம் என்றமரர் துன்ப முழந்திடவும்

1 கண்ணன்
2 கண்ணன்

நஞ்சினான் செய்விரகு[1] நன்றுநன்று நன்றெனவே
நெஞ்சில் வெகுண் டெவ்வுலகும் நின்றுநிமிர்ந்தனனே
அரக்கர்கள் மல்லரையும் ஆறுவகைத் தானையையும்
உரப்பலத் தாலே உழக்கினான் அம்மானை.

அரக்கர் மாயக் சூழியில் அழிதல்

தொந்தக் கடலில் துரிதமுடன் தான்சுழன்ற
மந்தர[2] மொத்து மலர்க்கால் குழம்புதலால்
என்புதசை மாங்கிஷங்கள்[3] எல்லா அவயமும்
அன்பினொன்றுந் தோன்றாமல் அள்ளற் குழம்பையொத்த
எப்புவிகள் நிற்ப கடல் எக்கிரிகள் நிற்பதென்று
முப்புவனியில் உள்ளோர் முலையிட் டாற்றினரே

கொண்டல் முழக்கு அண்டம் குலைந்த முழக்கெனவே
சண்டன் முழக்குஊழித்தழல் காத்தெழு முழக்காய்
வண்டுளபக் கொண்டல்நிற மால்நகைத்தா ரம்மானை.
ஆணக்[4] கடல்நீரை அள்ளுஞ் சிலகரங்கள்
சேணில் தருமுறிக்கும் சென்று சிலகரங்கள்
வரையைச் சிலகரங்கள் வவ்வியே தான்பிடுங்கும்
பெருமையுற்ற மேருவைப் பிடுங்குஞ் சிலகரங்கள்
சங்கங்கள் வாயில் தரிக்கும் சிலகரங்கள்
எங்கெங்கும் தானதிர வேமுழக்கும் சங்கினங்கள்
விற்றுணி[5] செய்யும் விரவிச் சிலகரங்கள்

வெற்றிக் கணையெடுக்கும் வெம்மைச் சிலகரங்கள்
குந்த மெடுக்கும் குறித்தே சிலகரங்கள்
சந்தமுடன் வில்வளைக்கும் தானே சிலகரங்கள்
வேலெடுக்கும் பலகரங்கள் வெள்வாள் சிலகரங்கள்
கோலெடுக்கும் பலகரங்கள் குத்தீட்டிப் பலகரங்கள்
வச்சிரங்கள் பலகரங்கள் வன்பரசு பலகரங்கள்
கைச்சுரிகை[6] பலகரங்கள் கப்பணங்கள் பலகரங்கள்
சக்கரங்கள் பலகரங்கள் தற்சூலம் பலகரங்கள்

---

1 சூழ்ச்சி
2 மந்தரமலை
3 மாமிசம்
4 கொள்கலம்
5 வில்லும் அம்பறாத்தூணியும்
6 கழுத்தணி

தக்கபல ஆயுதத்தைத் தாங்கிநிற்கும் பலகரங்கள்
கேடய மேந்திக் கெழுமுஞ் சிலகரங்கள்
சாடையற வாள்வீசும் தானே சிலகரங்கள்

கவண வல்லையங்கள் கதித்தேந்தும் பலகரங்கள்
சவளத்[1] திரளேந்தும் தானே சிலகரங்கள்
சங்கத் திரள்முழக்கும் தானே பலவாய்கள்
சிங்கத்தைப் போலே செருக்குறிக்கும் பலவாய்கள்
நகைக்கும் சிலவாய்கள் நன்கைவைக்கும் பலவாய்கள்
பகைக்கும் பலவாய்கள் பல்லுறுக்கும் பலவாய்கள்
ஏசும் பலவாய் இதழ்கடிக்கும் பலவாய்கள்
பேசும் பலவாய்கள் பீடுரைக்கும் பலவாய்கள்
இன்னும் பலவிதவாய் எங்கோன் கரஞ்சிரங்கள்
வன்னம் பலவாய் வகைசெய்த தம்மானை

உம்பர் பலரும் உலகோரும் நாகருமாய்
எம்பரன் நீஎன் றிறைஞ்சலுற்றார் அம்மானை

விருத்தம்

தேவர்கள் வேண்டுதல்

ஆரணனே அரனே புவனங் களனைத் தும்அன் றுதவும்
காரணனே கருணா கரனே கமலா சீனிவா சனனே
வாரணமே பொதுவா யொருபேர் ரிடவந் தருளும் புயலே
நாரணனே முனியேல் முனியேலென நெஞ்சமும் நாவும்
நடுங்கினரே

மாதவனே முனியேல் எனையா ளுடைவா னவனே முனியேல்
யாதவனே முனியேல் இதயத் திலமைந் தவனே முனியேல்
ஆதவனே முனியேல் மதீவெங் கனலா யவனே முனியேல்
நீதவனே முனியேல் முனியே லெனநின் றுபணிந் தனரே

கங்கைமகன் கதிரோன் மகன்அம் பிகைகா தன்மகன் தனையர்
அங்கவை யின்க ணிருந்த நராதிப ரடைய வெழுந் தெதிரே
செங்கை குவித்த சிரத்தின ராயுணர் வொன்றிய சிந்தையராய்
எங்கள் பிழைப்பினை இன்று பொறுத்தருள் என்று பணிந்தனரே

---

1 சட்டி

நடை

கண்ண பொறுத்தருள்வாய் காசாம்பு மேனிமுகில்
வண்ண[1] பொறுத்தருள்வாய் வரதபொறுத் தருள்வாய்
திண்மை மனத்துணராத் தீயர்செய்த தீவினையை
அண்ணல் பொறுத்தருள் என்றுதுதித் தனரே
தேவ ரிஷிகள் திசைமுகனும் இந்திரனும்
யாவரும் அன்றாயிர நாமமும் புகழ்ந்தே
மூவரு மொன்றான மூர்த்தியே என்றிரப்ப
மீவளரு மெய்யதனை மீள ஒடுக்கினனே.

மதியாதிருந்த துரியோதனனுக்கு கண்ணன் கூறுதல்

தஞ்ச மனையான் சதுர்[2]வேதமும் புகழும்
அஞ்சன[3] மெய்யான் அருள்வடிவந்தான் பார்த்து
அஞ்சிலான் நெஞ்சம் அயர்ந்திலான் மெய்நடுங்கான்
தஞ்சம் நீயென்று சரணம் துதித்தறியான்
சற்றுந் துதித்தறியான் தன்கை குவித்தறியான்
மற்றும் உபசார வார்த்தை பகர்ந்தறியான்
ஒப்பிலாச் செல்வ முடையதிரி யோதனன்முன்
துப்பதாய் நெஞ்சும் துணுக்கா திருந்தமையால்
தூதன் தனைவிரகாய்த் துன்மதியால் துஞ்சுவிக்க
ஞாதியர்க்குச்[4] செய்தவைபோல் நன்றுநன்று செய்ததென்று
நாசமுற நிந்தனுட நற்குலமெல் லாஞ்சினத்தில்
பாசமுறக் கொல்வேன் படைநீஎன் மேலெடுக்க
வேண்டா மெனவரம் நீ வேண்டும் படியாலும்
பாண்டோர்கள் முன்சபதம் பண்ணினதற் காய்ப்
பொறுத்தேன்

கண்ணனும் மற்றவர்களும் சபையின் நீங்கச் செல்லல்

என்று பகர்ந்து எழுந்த நெடியவன்பின்
சென்றனர்கள் எல்லோரும் தீயோன் தனையொளித்தோர்
நின்று துதித்தோரை நில்லுநில்லென் றேநிறுத்தி

---

1 முகில்வண்ணன்—மேக நிறம் பொருந்திய கண்ணன்
2 நான்குமறை : இருக்கு, யசுர், சாமம், அதர்வனம்
3 மை
4 பங்காளிகள்

கண்ணன் பாண்டவர் கன்னன் ஆகியோர் வரலாறு கூறல்

வன்திறலின் கன்னனொடு வாய்மையாய்க் காதுதனில்,
சுற்றமுடன் பிறப்பு சொல்லுகிறேன் கேளுமென்று
உற்ற தொருசொல் உரைக்கலுற்றா ரம்மானை.
தாயுனக்குக் குந்தி தகப்பன் தினகரன்[1]காண்
வாய்மையுற்ற பஞ்சவர்கள் மற்றுனது தம்பியர்காண்
தருமன் றனக்கே தருமன் பிறந்தனன்காண்
விரவிற் சதாகதிக்கு[2] வீமன் பிறந்தனன்காண்
கோபதிக்கு[3] வில்விசயன் கொற்றமுடன் பிறந்தான்
பூபதியே மற்றிருவர் புத்திரர் மருத்துவர்க்கே
ஆதலால் நின்னினைய ஐவர்களும் தாள்வணங்கப்
பூதலத்தை ஓர்குடையில் புங்கமுடன் புரப்பாய்
உங்களில் நீங்கள் உறவனே ஒன்டுகண்டாய்
இங்குன் மனதுக்கு இசைவேது இயம்புகென்றான்
உங்களை யல்லால் உலகுக் குரியவரார்
மங்கில்லாத் தம்பியர்பால் வாழ்வதே யுற்றதென்றான்

கன்னன் கூறுதல்

குன்றால் மழைதடுத்த கோபாலா உன்னாலே
இன்றே பிறப்புணர்ந்தேன் என்றுருகி எம்பியர்பால்
சென்றேனால் நீயறியச் சேர நகையாரோ
கன்றால்விள வெறிந்தோய் காசினியில் என்றனையே
இன்னகுலம் இன்னான் எனவே அறிவதன்முன்
மன்ன னிவனென்று மணிமகுடந் தான்சூட்டித்
தன்னுடன்வைத் துண்டுமணி தான்பொறுக்கியே கோக்க
மன்னன்செய் நன்றி மறவேன் ஒருபோதும்
பன்னு மிளவாசுப் பட்டமெனத் தூக்கித்
தன்னை யொழியவரும் தம்பியரை மன்னவரை
என்னை வணங்க விதமான வாழ்வளித்தான்
நுண்ணறிவின் பஞ்சவர்க்கும் நூற்றுவர்க்கும் போர்மூண்ட
வேளை யறிந்து விலகி இளையோர்பால்

1 சூரியன்
2 வாயுதேவன்
3 இந்திரன்

காள முகிலே[1] கருதுவேனோ என்றுரைத்தான்
இரவி தருமதலை இவ்வாறு தானுரைக்க

கண்ணனுக்கு விடையளித்துக் கண்ணன் அசுவத்தாமாவை அழைத்துக் கூறல்

விரகின் நெடியோனும் வேறொன்றும் பேசாமல்
உரமுற் றுடையோய் யுறவனே ஏகுகென்று
புரவித்தா மாவென்னும் பூசுரனைக் கைப்பிடித்து
வாவென் றழைத்து மணிவண்ணன் சொல்லலுற்றான்
தாவுமழற் கானகந் திரிந்து தானலைந்து
புகன்ற விரதமொழி பொய்யாமல் மீண்டுவந்து
மிகுந்தவரை யைந்தூரும் வேண்டி மறுத்தவகை
செயகீர்த்தி யன்ன சிலைவீரர் போர்முகத்தில்

போருக்கு அசுவத்தாமாவைச் சாட்சியாக்கிக் கண்ணன் வேண்டுகோள்

நீசாக்கி யென்றான் நெடியோன் துழாய்முடியோன்
ஆனா லுனக்குநிகர் ஆர்பூவுல கிலுள்ளோர்
ஞானாதிபனே நமஸ்காரஞ் செய்து உன்னைச்
சேனா பதியா கென்றாசன் செப்புகினும்
தான்நீ மறுத்தாயேல் தான்பிழைப்பார் ஐவர்களும்
நல்லோர்க் கிரங்குதலே நன்மை மிகவளரும்
புல்லோர் சொல்மாறுகிலும் புண்ணியமேன் மேல்வளரும்
அல்லாது ஐவரிடம் அன்புண்டாம் நின்றனக்கு
வில்லா சரிக்குமிக மேன்மேலு மன்புமுண்டே

கண்ணன் செய்த ஓர் உத்தி

என்று பவுத்திரத்தை[2] இப்புவியி லேவீழ்த்தான்
அன்று கரத்தில் அசுபத்தா மனெடுத்து
ஆழி[3]யிங்கு வீழ்ந்ததென்று ஆழியான் கைகொடுப்ப
ஆழியுடன் வாங்காமல் வானோக்கி மால்பார்த்து
வன்கதிரை ஊர்கோள் வளைத்தவிதம் பார்த்தோயோ
புன்குலத்தால் மன்னவர்கள் போதமடி வார்களென்றான்

---

1 மேக நிறங்கொண்ட திருமால் - கண்ணன்
2, 3 மோதிரம்

ஆமாம் எனத்தலையை அன்றசைத்து மெய்யென்று
கோமான் கையாழி கொடுத்தான்காண் அம்மானை

அவையோர் அசுவத்தாமனை நம்பாது கூறல்

மாலு மறையோனும் வானோக்கி ஆழிதொட்டு
மேலுஞ் சூளுரைத்து மிகப்பிரித்தான் என்றவையோர்
சொன்னவைக் கேட்டுத் துரைமன்னர் கோமானும்.
என்ன விதமாய் இவனைத் தெளிவேன்யான்
தனிவந் தகல்தூதன் தன்னைத் தொடர்ந்தேகி
முனிமைந்தன் மோதிரத்தால் முன்சூளுற் றேமொழிந்தான்
இனிவந் தொருகோடி எந்தனுக்குச் சொன்னாலும்
பனிவந்த சேனா பதிப்பட்ட மீயேனெனச்
சொன்னான் இடிபோலச் சொற்கேட்டுச் சிற்சிலபேர்
முன்னாக வந்து முனிமைந்த னுக்குரைத்தார்
பேதித்தான் மாயனென்று பீடுடையோன் தானினைந்து
சாதிப்பான் இங்கிவன்தான் தானடந்த சூழ்ச்சியினால்
என்று நலதென்று இவன்மனதி லுற்றிருந்தான்
நன்று நினைத்தபடி நாமுடித்தோம் என்றுகண்ணன்

கண்ணன் விதுரன்மனை சென்று இந்திரனை அழைத்துக் கன்னனிடம் கவசகுண்டலம் வாங்கச் செய்தல்

போவென்று மாமுனியன் புத்திரனைத் தானனுப்பிக்
காவனென் றுயர்விதுரன் காவலன்தன் இற்புகுந்து
சிந்தித்தான் வாசவனை[1]த் தேவர்கோன் அங்குவந்து
சந்திந்தான் தாள்தொழுதான் தான்ஏது அழைத்ததென்றான்
வல்லார் கலைஞருக்கும் மன்மறைநூல் வாக்கிகட்கும்
இல்லார்க்கும் உள்ளார்க்கும் இறந்தார் துறந்தார்க்கும்
சொல்லார்க்கும் சொல்பவர்க்கும் சூழ்சமய வாதிகட்கும்
நல்லோர் புகழ்தம்பை நாடாளும் மங்கையன்போல்
கன்னனெனும் கற்பகப்பூங் கையான் வழங்கலுற்றான்
அன்னவன்பால் வச்சிரக் கவச[2]மணிக் குண்டலமும்[3]
வாங்கிநீ வந்தாலுன் மைந்த னுயிர்பிழைத்துப்
பாங்கி லவனைப் படுகளத்தில் கொன்றிடுவான்

---

[1] இந்திரன்
[2] வச்சிரத்தால் செய்யப்பட்ட மெய்க்காப்பு
[3] காதணி

இல்லையெனில் எண்ணிறந்த கற்பமிகல் செய்யுகினும்
வெல்லரிது அங்கவனும் வீவதில்லை மேலோனே
மாறா திருவோரும் வஞ்சினமுன் செய்தமையால்
நீறா யெரிபரவ நின்கான் எரித்திடும்நாள்
தக்கன் மகவான சர்ப்பமொன்று அங்கவன்பால்
மிக்க கணையாய் விசயன் பகையாகி
இருக்குதுக் குவகை எவ்விதமும் யான்காப்பேன்
அருக்கன் மகனம்பால் அதுவாங்கா யாமாகில்
பஞ்சவரில் நின்மகனைப் பானுசுதன்[1] கொன்றுவிட்டால்
வஞ்சினமும் தான்மாறும் மாய்ந்திடுவார் மற்றுமுள்ளோர்
நஞ்சுரக கேது[2]வுக்காம் நானிலமுண் டானதெல்லாம்
வெஞ்சமுள்ள வஞ்சினந்தான் வீமன் விசயனுக்கும்
மாறிவிடு மாறிலது வன்மம் பஞ்சவர்க்குமல்ல
பேறில் உனக்கே பிசகாது வந்துவிடும்
புத்திரன்மேல் அன்புனக்குப் போதவுண்டே யாமாகில்
மெய்த்த மணிக்கவசம் குண்டலம்வென் றேகுகென்றான்.

இந்திரன் அந்தண வடிவில், கன்னனிடம் சென்று கவச குண்டலம் பெறல்

தண்துழாய் கூனித் தாளிணைகள் தள்ளாட
கண்டபேர் கைகுவிக்கக் கையில் கடல்நுரையை
மொண்டு சொரிந்தநுரை மூப்போர் வடிவாகக்
கொண்டதொரு முனியாகக் கொற்றவன்தன் வாயில்புக்கான்
இன்ன பொழுதளவும் ஏத்தவர்க்குத் தான்வழங்கி
கன்னன் மனைபுகுந்தான், காணவா நாளையென்ன,
வாயிலோர் சொல்ல மதியா துட்பூந்தான்
நேயமுடன் கர்ணன் இயல்முனியைத் தானெதிர்ந்து
உற்றுப சாரம் உரைத்தே பதந்தொழுது,
இற்றெனத் தவம்புரிந்தேன் எம்பிரான் இங்குவர
என்னப் புகழ்ந்து எழிலா சனத்தேற்றிச்
சொன்னவை ஈவேன்நீ சொல்லு கெனக்கேட்கத்
தருவுஞ்[3] சுரபியுமே[4] தான்உதவா தென்நினைவு

---

1 கர்ணன்
2 துரியோதனன்
3 கற்பகதரு
4 அமுதசுரபி

விரவித் தருவாய்நீ வேண்டியதென் றிங்குவந்தேன்
எண்ணும் படியெனக்கு ஈவாயோ என்றுரைப்ப
மண்ணிலுயிர் கேட்டாலும் மாறேன் தருவன்னெ
நீநினைத்த தெல்லாம் நிமிடந்த ரேனாகில்
மேன்மையுற்ற போர்முகத்தில் வெந்நிடுவோன் ஆவனென்றான்
கோமானே உன்கவச குண்டலத்தை ஈந்திடென்றான்
மாமோகம் தீர வழங்கினன்காண் அம்மானை

அசரீரி தடுத்தும் கன்னன் கவச குண்டலம் ஈதல்

மாயன் வரவிட்ட பகவான் இவனெனவும்
ஆயிசுக் கீனம் அளிக்கும் பொருளிரண்டால்
உந்த னுயிர்க்காவல் உன்கவச குண்டலத்தை
வந்தவன் கையில் வழங்கல் தகாதெனவே
வான சரீரி[1] வழங்குவதும் கேளாமல்
தானந் தவறான் தருகாமல் ஈந்துவிட்டான்
தேவர் மலர்மாரி சீராகவே பொழிந்தார்

அவை பெற்ற இந்திரன் அருள் செய்து வரம் அளித்தல்

ஆவலுடன் வேஷம் அகற்றி மகவா[2]னும்
பாயிரங்கொள் செய்ய பதும[3] மலர்ந்ததென்ன
ஆயிரங் கண்ணால் அளியோடு எதிர்உறவே
கண்டு புளகம் கதித்தோங்கித் தான்முடியில்
கொண்டிருமாந்து குதித்துத் துதித்து நின்றான்
நீதி யுடையாய் நினதுயிர் ரெட்சிக்கின்ற
கோதில் மணிக்கவச குண்டலத்தை ஈந்துவிட்டாய்
மாயன் உரையால் மகன்மீதில் அன்பாலும்
நேயமுட னுன்எதிரே நின்றிசைந்து கைகொடுத்தேன்
ஆய னுரைப்படியே ஐவருடன் நீசேர்ந்தால்
காய மழியாமல் காப்பான்மால் என்றுரைத்தான்
வலக்கண்ணு நீயாகும் மால்விசயன் தானிடக்கண்
இலக்க முடனீ எனக்கு மகனல்லவோ

இந்திரன் கன்னனுக்கு வேல் கொடுத்தல்

விசயன் தவிரஇந்த வேலெவர்மேல் போட்டாலும்

---

1 வான் ஒலி
2 இந்திரன்
3 செந்தாமரை

அசைவின்றிக் கொல்லுமென அண்டர்கோன் தானீந்தான்
தாள்தொழுது போற்றித் தனுவீரன் வேலாற்றான்
பீடும் போகிப் பெருமானிடத்து வந்து
பன்மொழியும் நன்றாய்ப் பகர்ந்து கானசைந்தான்

கண்ணன் குந்தியைக் கன்னனிடம் அனுப்பல்

விண்முகிலின் மெய்யான விறற்குந்தி பாலடைந்து
தேற்றியே கண்ணனிடம் செல்லென் றனுப்பிவைத்தான்
கீர்த்திசேர் கர்ணனிடம் கேகயம்போல் வந்துநின்றாள்
வாயிலோர் குந்தி வரவுக்கர்ண னோடுரைப்ப
தாயார்பால் வந்து சரணம் சிரசேற்றி
ஆசனம் தன்னிலுகந்து அன்னைதனை ஏத்திப்
பாசமுடன் போற்றிநிற்கும் பானுசுதன் மெய்பார்த்து
அன்பு பெருகிவின் ஆறிரண்டு தானோட
முன்பு மதிமயங்கி மொய்குழலைத் தான்பார்த்து
அன்னையிங்கு வந்ததுமென் ஆனதவப் பாக்கியந்தான்
என்னநீ வந்தவிதம் எந்தனுக்குக் கூறுமென,

குந்தி வரலாறு கூறியும், தன் உண்மை நிறுவியும் வரம் பெறுதல்

கன்னி வயதிற் கதிர்க்[1]குன்னைப் பெற்றெடுத்தேன்
சின்ன மதியாலே சிந்து[2]மிசை விட்டனென்றாள்
தாயேநீ யாகுமென்னைத் தான்பெற்றேன் என்றமொழி
நீயேன் பகர்ந்தாய் நினக்கேது வேண்டுகினும்
இந்தச் சணமுன் இதயத்தில் வேண்டியவை
சிந்தைக் கிணங்கத் திறமாக யான்தருவேன்
பெற்றேன் என்றோதியதால் பேணிநான் சம்மதியேன்
மற்றோரும் நின்போல வந்திரந்தார் மாதர்பலர்
யானிருந்த வேளையினில் அன்றமைந்த பொற்றுகிலை[3]
தானணிந்து பறப்பமெனத் தான்மடிந்தார் பற்பலபேர்
செய்யாது செய்த தெரிவையர் போல் மாயாமல்
அய்யோ நீபறபமென ஆகாமல் நோகாமல்

---

7 சூரியன்
2 சிந்துநதி
3 பொன்னாடை

வந்தகருமம் வழுத்தி நீ பெற்றிடெனக்
கந்தமலர் மார்பன் கவல வெதிர்நகைத்து
அந்துகிலை என்கைக்கு அருளென்று தான்வாங்கி
முத்துநகை வாளோர் முந்தானைத் தானெடுத்து
பீடுடைய கர்ணனையான் பெற்றிலனே யாமாகில்
புனைந்து எதிர்வருந்தாம் பொற்பாதம் தான்பணிந்து
கனிந்தஅன்னை தன்முலைக் கண்கள்பால் சொரியப்
பார்த்துக் களிகூர்ந்து பாதம் பணிந்திறைஞ்சி
ஏற்றவிழி நீரால் இதுபாதமும் கழுவத்
கன்னன் தனைத்தழுவிக் கண்ணீர்ப் பெருமழையால்
அன்னவன் மேனி அடங்க முழுக்காட்டிப்
பெற்றேன் வளர்த்துப் பிரியமுடன் கண்குளிர
உற்றேநற் பாக்கியங்கள் ஊதாரி[2] செய்திலனே
பாவியேன் செய்த பலனிதோ என்மகனே

குந்தி கன்னனை ஐவர்பால் அழைத்தல்

ஆவியுடல்போல ஐவருடனே சேர்ந்து
ஒத்தொழுகிச் சார்ந்து உலகெல்லாம் நீயாள
மற்றையவரும் நின் மலர்த்தாள் பணிந்துறைவார்
மன்னவர்கள் எல்லோரும் வந்துன் கடைகாப்பப்
பொன்னுலகாள் இந்திரன்போல் பூவுலகாள் என்றுரைத்தான்

கன்னன் மறுத்து மொழிதல்

பெற்றன்றே விட்டீரே பெரும்பழிப்புக் கேநாணிக்
கொற்றமுடன் புனைந்து கூடவுண்டு தம்பியரும்
சுற்றமுள்ளோர் என்னைத்தோள் மேன்மைசெய்துவைத்தான்
சூதாடி ஓடுகின்ற தோகைமணி மேகலையை
வாதாடி யானிழுக்க மானபங்க மாய்க்கண்டான்
எந்தன் பயமும் எனது தளர்வறிந்து
அந்தமுடன் நண்பு ஆதரவு முறியாமல்
இந்த மணியை எடுக்கிறியோ கோக்கிறியோ
சிந்தையுடன் சொல்லுகென்று செப்பிப் பயந்தீர்த்த
மன்னவன் செய்நன்றி மறப்பனோ எப்பிறப்பும்
அன்னையே அங்கவன்தன் அன்னக் கடன்கழிக்க
வேணு மிதுதவிர வேண்டியது கேளுமென
ஆணில் அழகன் அருளன்னை பதம்பணிந்தான்
பெற்றநாள் நொந்தழுத பேதலியார் மனதில்

உற்ற சதமடங்காய் உள்நொந் தலறினளே
மைந்தனும் நொந்துதிரு மாதர்கண் ணீர்மாற்றிச்
சிந்தைதனைத் தேற்றிச் செல்வன்யான் ஏதுசொல்வேன்?
மூண்ட வினையை முயற்சியால் மாற்றலுண்டோ
வேண்டும் வரம்நீ விரும்பியே கேளுமென்றான்

குந்தி வரம் பெறல்

பா(ர்)த்தன் மேல்சர்ப்பப் பகழி[1] விடப்பிழைத்தால்
மாற்றி இருகாலம் மதித்து விடாதவரம்
நல்கென்றாள் நான்தொடுத்த நாகபாசந் தவறில்
மல்லலுடன் பார்த்தன் மகிழ்ந்துயிர் பெற்றானாகில்
தப்புங் கணையைச் சவங்கியே பின்தொடுத்தல்
துப்பு வலியோ துடாறமோ தற்புகழோ
மானமோ சேவகமோ மற்றெனுயிர் போனாலும்
ஈனமாய் மீண்டும் எடுத்தெய்யேன் பாம்பையென்றான்
பாத்தனையே யல்லாது பண்புடைய நால்வரையும்
சீத்தமுடன் கோறல் செய்யா தொழியென்றாள்
நன்றென்று அவ்வரமும் நற்றாய் தனக்கருளி

கன்னன் குந்தியிடம் கேட்டுப் பெற்ற வரங்கள்

இன்றெனக்கு ரெண்டுவரம் யீநீ யெனக்கேட்டான்.
பார்த்தனங் கணையால் படியில்நான் வீழ்ந்தளவில்
ஏற்றுன் தனையனென்று இவ்வுல கெலாமறியப்
பேர்விளங்கச் சொல்லிப் செருகுமுலைப் பாலளித்து
சீர்விளங்கும் ஐவருக்கும் செப்பியறி வித்திடுவாய்
இந்த உயித்தம் இவணில் முடியளவும்
ஐந்து பெயர்க்கும் அறியா தடக்கிவைப்பாய்
என்னைத் தமையனென அறிந்தா லைவர்களும்
பின்னைச் சமர்பொருதார் பேர்வஞ்சின முடியார்
எல்லா வுலகும் எனக்களித்துக் காடுறைவார்
மல்லா ருலகமெல்லாம் மன்னனு[2]க்கே ஈந்திடுவேன்
என்றவன் சொல்ல இருவரமும் தானீந்து
குன்றி மெலிந்து குலைந்தழுது கோபமொடு
வந்து நடந்தவகை மாலுக்கே உரைத்தான்

---

[1] நாகக் கணை

[2] துரியோதனன்

குந்தி வந்தவுடன் கண்ணன் பாண்டவரை அடைந்து நடந்தது கூறல்

குந்திதனை இருத்திக் கொண்டல்வண்ணன் தான்தொழுது
தேரேறிச் சேனையுடன் செய்யநகர் தானீங்கிக்
காரேறு மெய்யானுங் காடுவழித் தான்தொலைந்து
பஞ்சவர்கள் தானிருக்கும் பட்டினம்வந் தேசேர்ந்து
கஞ்சமலர்க் கண்ணன் கழறினான் சேதியெல்லாம்
வள்ளல் தமயனெனும் வாறொன்றும் தானொழிய
உள்ளபல சேதியெல்லாம் ஓதினன்காண் அம்மானை
கிருஷ்ணன் தூது கிளத்தி முடிந்ததற்பின்
இஷ்டப் படையின் எழுச்சி எடுத்துரைப்பாம்
தரும ராசாக்கள் வீரனுட தாட்டுணையே
ருவமுட னித்தூது பட்சமுடன் முற்றுமிதே

※※※※※※※※

படை எழுச்சிச் சருக்கம்

(தருமன் தன் துணை மன்னர்க்குத் தூது அனுப்ப அவர்கள் படைகளொடு வந்து கூடுகின்றனர். வர்தவரிடம், துரியோதனனின் செய்தி கூறிப் போருக்கு வாவி நப்பதனைக் கூறினார். மன்னர்கள் அவருக்கு உதவுவதாக உறுதிமொழி வழங்கினர். தருமர் சிவேதனைச் சேனாதிபதி ஆக்கினார் - இராவான் தான் ஆண்மை கூறுகிறான். துரியோதனன் படை வேண்டி நட்பரசர்களுக்குத் தூது அனுப்புகின்றான். அவர்கள் வந்து கூடுகின்றனர். துரியோதனன் வீடுமரைப் படைத் தலைவராக்கினான். மேலும் அவரிடம், களப்பலிக்கு உரியரரையும், அதற்கான நாளையும் கேட்-கின்றான். துரியோதனன் அதுபற்றிச் சகாதேவனுடன் வினவுகிறான். துரியோதனன் வேண்ட இராவான் களப்பலியாக இசைகின்றான். அது கேட்ட கண்ணன், தருமரிடம் தன்னைக் களப்பலி ஆக்க வேண்டுகின்றான். பாண்டவர் வேண்ட, இராவான் தன்னைப்பலி கொடுக்கக்கூறிப் பலியானபின் போரினைச் சிலநாள் கண்டபின் இறக்கும் வரத்தைக் கண்ணனிடம் வேண்டுகின்றான். காளிகோயில் முன் இராவான் தன்னையே பலி கொடுக்கிறான். பாண்டவர் பிறவகைப் பலி கொடுத்து, வரம் வேண்டித் திரும்புகின்றனர். கண்ணன் சிவேதனைப் படையெடுத்துச் செல்லுமாறு கூறுகிறான் அவன் படையினை அணி வகுத்தமைக்கிறான், பாண்டவரும் கண்ணனும் போர் முயற்சி மேற்கொள்ள, பலராமனும் விதுரனும் தீர்த்த யாத்திரை செல்கின்-றனர் படைகள் அணி வகுத்து நெருங்குகின்றன. துரியோதனன் வீடுமரிடம் அணி வகுக்குமாறு கூறுகிறான். வீடுமன் அணி வகுக்கும் போது, கன்னன் அவரோடு சினந்து, "நீ இறக்கும்வரை படை எடேன்" என்று சூளுரைக்கி-றான். துரியோதனன் படை, அணி வகுத்துப் புறப்படுகின்றது. இருவர் சேனையும் நெருங்குகின்றன போர் எத்தனை நாளில் முடியும் என வினவிய துரியோதனனுக்கு விடுயர் விடை கூறுகிறார். அருச்சுனன் எதிர்ப் பக்கத்துப் படையிலுள்ள குரவரையும் துணைவரையும் கண்டு, போர் செய்ய மயங்குகிறான். அவனைத் தேற்றிக் கண்ணன் உரைக்கத் தெளிவு அடைகிறான்.)

படர்ந்து கானகம் திரிந்து மீண்டன்புடன
பணிந்த பஞ்சவர்க் காகக்
கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக்
கழலி ணைசிவப் பேறத்
தொடர்ந்து நான்மறை பின்செலப் பன்னகத்
துவசன் மாநகர்த் தூது
நடந்த நாயகன் கருமுகில் வண்ணமென்
நயனம் விட்டக லாவே

வீரப்பன் துணையாக வேண்டியது

முகுந்தன்[1] உரைத்த மொழிகேட் பரன்முனமே
மிகுந்த சினத்தோடும் வெம்போர் முடிப்பனெனத்
தகுந்திறல் மன்னர் தமைச்சேர்ந் தவர்களுக்குப்
பகர்ந்த முடங்கல் பலர்தூது விட்டனரே

தருமன் அரசர்களுக்குத் தூது அனுப்பலும், அவர்கள் வருதலும்

தருமன் உரைத்தனுப்பும் தானா பதியோலை
நிருபன் உணர்ந்து நெடிதுப் பிரியமுற்றுத்
துருபதன்திஷ் டத்துய்மன் திட்டகேது சிகண்டி
உருமொத்த மோசாவு உதாமனுடன் பாஞ்சாலன்
வல்லியம்[3] ஒத்த வலியரசர் பற்பலரும்
வில்லியரில் வல்லோரும் வெம்படையும் வந்தனரே.
சூரன் விராடன் துணையாம் சதானிகனும்
தீரன் சிவேதன் திறல் வராககேதன்
மன்னுத் தரகுமரன் மச்சநாட்டார் பலரும்,
துன்னிப் பெரும்படையும் சூழவந்தா ரம்மானை.
மான வரம்பன் வளவனொடு பாண்டியனும்
தானைப் பெருங்கடலும் தான்வந்தா ரம்மானை
கேகய மன்னன் கிளரும் பெரும்படையும்
கோகனக வதனன்[4] குந்திபோ சேந்திரனும்
விருதுப் பறைமுழங்க வெம்படையோ டங்குவந்தார்
பொருசுத்தவீரர் பன்னெண் பூமியுள்ள மன்னவரும்

---

1 கண்ணன்
2 தூதன்
3 புலி
4 தாமரை முகத்தான்

அண்ணல் கடோற்கயனும் அபிமன் அரவானும்
வண்ணமகள் பெற்றெடுத்த வண்மையுள்ள புத்திரர்கள்
விந்தனுடன் சோமன் வீரகீர்த்திக் குரிசில்
சந்தமுள்ள புண்டலனும் தார்வீர சேனன்வந்தார்.
சீனர் மகதர் தெலுங்கர் கலிங்கேசர்
மான துளுவருடன் மத்திரரும் மாளவரும்
கொங்கணர்கள் காம்போசர் கோசலர்கள் குச்சரர்கள்
சிங்களர் மராடர் திராவிடர்கள் பப்பரவர்
வங்கர் துருக்கர் சிந்தர்மன்சாவகர் பதினெண்[1]
பங்க மிலாத பலபாசை மன்னவரும்
வருண முயர்ந்தபட்ட வர்த்தனர்கள் பற்பலரும்
அருணக் கிரண[2]ஒளி யார்சூர்ப குட வர்த்தனரும்
மந்திரிகள் சேனா பதிவீறு மண்டலீகர்[3]
தந்திர மிகுந்த சதுரங்கப் பெரும்படைகள்[4]
இதமுத்துச் சிந்தெனவே ஏழக்கு ரோணிபடை
உததிப்[5] பெருக்காய் உகாந்தப் பிரளயமாய்
சிந்தேழும் பொங்கிந் திரண்டெங்கும் மொய்த்ததுபோல்
வந்தே படைகள் வளைத்தெங்கும் பொங்கியதே
காடமுங்கி மேடமுங்கிக் காவினங்கள் தானமுங்கி
வீடமுங்கித் திக்கு வெளியமுங்கி வெற்பமுங்கி
அண்டந் தொடவெழுந்த அந்தக் காலப்பெருக்கம்
கொண்ட பிரளயம்போல் கோத்தபடை நிறைந்த
மேக முழக்கும் வெடிக்கும் இடிமுழக்கும்
ஏககா லத்திலெழும் ஊழிகா லமுழக்கும்
முன்னீரொலி முழக்கும் ஒத்தே முரசினங்கள்
மன்னால் திசையும் மறைந்து முழங்கிவர
வந்தபல மன்னரையும் வண்மையுடன் தருமன்
சந்தமுடன் சென்றெதிர்ந்து தாள்தொழுதா ரைத்தழுவி

---

1 பதினெட்டு நாட்டு மொழிகள் அவை அங்கம், அருணம், கலிங்கம், காம்போசம், கொங்கணம், கோசலம், கௌசிகம், சாவகம், சிங்களம், சிந்து சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்

2 அதிரவன் கதிர்

3 மண்டலத் தலைவர்

4 தேர், யானை, குதிரை, காலாட்படை

5 ஊழிக்கால வெள்ளம்

தான்வணங்கத் தக்கோரைத் தான்வணங்கிக் கூட்டிவைத்து

தருமன் கூற்று

தேன்வணங்குந் தாரான் திறல்மன்ன ரோடுரைப்பான்
என்நாடு தூதால் இரந்தேன் இரண்டுதரம்
மன்னா னவன்தான் மறுத்தான் அறிந்தீரேல்
ஐந்தூரு கேட்டேன் அரவக் கொடியோனும்
ஐந்தூஈ இருப்பிடமும் நான்கொடேன் என்றுரைத்தான்.
ஈசிலார் நாணமிலார் எண்ணமிலார் என்றுவசை
பேசினான் அந்தப் பெருமை சிறுமையையும்
நாளைச் சமரிடத்தில் நண்ணிநீர் கண்டிடுங்கோள்
பீளித் துணைவர்வலி மிக்கேன் வலியாலும்
சொல்லிலேன் உங்களுட தோழமையின் வாள்வலியால்
வெல்லுவேன் நூற்றுவரை வெவ்வேறு செங்களத்தில்
கொல்லுவேன் ஒன்னார்கள் கூட்டம் கருவறுத்து
அல்லல் தவிர அணிவேன்மேல் வாகையென்றான்
வாய்மை யுடையான் வழுத்துமொழி தான்கேட்டுத்

மன்னர்கள் கூற்று

தீய்மை யுடையோர் செருமுகம் படையறுப்போம்
எங்கள் உடலுயிரும் எம்படையும் உந்தனுக்கே
துங்கமுடன் அளிப்போம் சொன்னபடி தொண்டுசெய்வோம்
என்றரசர் எல்லாம் இசைந்தொருமை கூறினரே
அன்று பகைதீர்த்தான் போலண்ணல் மகிழ்ந்திருந்தான்
சிலைக்கு வலிய சிவேதன் எனுங் கோவைப்
பலித்துள சேனைப் பதிப்பட்டந் தானீந்தான்
ஆர பாரித்து அமர் மாசம் தான்முழங்கி
வீர சாரத்துடனே வேந்தர் இருந்தனரே

துரியோதனன் நட்பு மன்னவர்க்கு மடல் அனுப்புதல்

மாயவன் முன்மீண்ட அளவில் அரவுயர்த்தோன்
நேயமன் னர்க்கெல்லாம் நிருபம் அனுப்பினனே
வீரத்தின் ஐவருடன் வெஞ்சமர் மூண்டமையால்
போருக்கு வந்தவர்க்கே பூதலமும் நாடுமென்ற
வாசகங்கள் கண்டவுடன் மன்னர்பெரும் படைகள்

தேசமதி லுள்ளவர்கள் சேரத்திரண்டு மொய்த்தார்
வல்லிய மொத்த மகபதி சதேவன்
சல்லியன் சூது சகுனி கிருதர்ப்பன்
விந்தரன் விந்தன் விரற்பூரி சோமதத்தன்
கந்தக் கவுசிகனும் கம்பிலீகன் கவுண்டன்
வன்பகை தத்தன் வயத்திரிகத் தன்பூமன்
நன்கறியோன் என்ற பதினாயிரங் குமரர்
மன்னவர்கள் நூற்றுவர்கள் மக்கள் பெரும்படையும்
கன்னன் கிருபன் கனதுரோணன் சேயன்
வீடுமனும் சர்ப்ப விருதுக் கொடியோனும்
பீடுடைய எண்ணேழு பேறான தேசர்களில்
பஞ்சவரைத் தானடைந்த பண்பாளர் அல்லாத
மிஞ்சுபல வேந்தரெலாம் மேவிமொய்த் தாரம்மானை
நாலங்க மான நாலைப்[1] பெரும்படைகள்
கோலங்க ளாகக் குழுமியெங்கும் மொய்த்தனவே
நதிபல பொங்கி நாலைமீ துற்றாற்போல்
எதிரற வெல்லும் இராசபெரு மண்டலங்கள்
பதினோரக் குரோணிபடை மன்னர்தாம் திரண்டு
சதமகன்[2] ஒத்த தரணிபனைச் சூழ்ந்துமொய்த்தார்
வீரர்களில் மிக்கான் வீடுமன் சேனாபதியாய்

துரியோதனன் களபலிக்கு ஆள் தேடுதல்

பாரரசன் வைத்துப் பலிக்கக் களப்பலிதான்
ஆரைக் கொடுப்போம் அடவாக நல்முகூர்த்தம்
தீரத் துடனறிந்து செப்பென்றான் அம்மானை.
உம்படைகள் எல்லாம் ஒருநாளை யில்தொலைக்க
அம்புதனைத் தீட்டுகின்ற ஆண்மை இராவானை
தான்கொ டுக்கில்நன்று சகாதேவன் தன்னிடத்தில்
ஊன்கெடுக்கும் வேலோய் உகந்துகேள் என்றுரைத்தான்
அந்தப் படியே அவன்சகா தேவனிடம்
வந்துதான் சாதேவன் மன்னனடி வணங்க
மன்னர்க்கோ மானேநீ வந்தவகை சொல்லுகெனத்
தன்னொப் பிலாதவனே தான்மானான் வெல்லுதற்த

1 கடல்
2 இந்திரன்

ஏற்ற பலியும் இகல்முகூர்த்தம் கூறுகென,
மாத்தரிய வில்விசயன் மக்களில்ஓர் அரவானை
இந்துங் கதிரும் இசைந்த தொத்த நாளையிலே
உந்திப் பலிகொடுத்தால் உன்னையெவர் வெல்லவல்லார்
மூவுலகி லுள்ளோரும் மும்மூர்த்தி யுங்கூடிப்
பூவுலகில் உன்மேல் பெரும்போர் புரிந்தாலும்
நின்னைச் செயிக்கறியார் நீயே விறல்பெறுவாய்
மன்னர்க்கு மன்னா வரைந்தெழுதித் தாரனென்றான்

வஞ்சனை யற்ற மனத்தான் எடுத்துரைக்கச்
சஞ்சல மற்றுமிகு சந்தோஷ மேலோடி
நாககன்னி சேயிடத்தில் நாகக் கொடியோனும்
ஏகி முனமே எதிர்வந்து தாள்தொழுது
புல்ல னிடத்திலுயர் பூபாலன் வந்துஎன்ன
சொல்லுகெனக் கேட்கவுமோர் சொல்தந்தால் செல்வனென

அரவான் களப்பலி ஆக ஒப்புதல்

கேட்ட தருள்வேன் கிளர்த்துகென உன்னுயிரை
நாட்ட முடன்பலிக்கு நல்கென்றான் நல்லதென்றான்
விதுவும்[1] கதிருமொன்றாய் மேவுமந்த நாளையிலே
மதியுடன் வந்தழைப்பேன் வாவென்று போயினனே,

பையமுடி யோன்சீவன் பலிக்குதவப் பஞ்சவர்க்கு
மைமுகி லோன்உற்ற வரலாறெல் லாமுரைத்து
அங்கவர்க்கு முன்னே அரும்பலிநீர் ஊட்டினல்லால்
உங்களுக்கு வெற்றி உருதுகாண் பஞ்சவரே
இங்கெவர்க்கு முன்னே எனைப்பலிநீர் ஊட்டுமென்று

பாண்டவர் கலக்கம்

செங்கண்மால் சொல்லச் செவிபொத்திப் பஞ்சவர்கள்
இடியுண்ட சர்ப்பம் எனவே அகங்கலங்கிக்
கடி[2]கொண்ட பைந்துளபக் கண்ணன் சரண்தொழுது
செல்வமும் வேண்டோம் செகமாட்சி தான்வேண்டோம்
வல்விற் போர்செய்யோம் மறுத்தும் வனம்புகுவோம்
நீசாக வேண்டாம் நின்னைப் பலியிடுஞ்சொல்

---

1 சந்திரன்

2 மணம்.

பேசாதே யும்மெனவே பெம்மா னடிதொழுதார்
என்னைப் பலியிடுவ தில்லையெனில் அரவான்
தன்னைப் பலியிடுங்கோள் சம்மதித்தால் ரன்றுரைத்தான்
மாய னுரைக்க மயங்கியே பஞ்சவர்கள்
சேயன் தனைப்பலியோ செய்வதென மங்கினரே.
உற்றோர்க் கொருசேய் உதவாது மெய்மயங்கி
பற்றார்க் குதவுதற்கோ பஞ்சவரே சம்மதித்தீர்
முன்னமே நீங்கள் முதற்பலிசெய் வீராகில்
அன்னவனும் ஏற்றபடி அன்பாய்ப் பலியிடுவான்
பிரமன் துணிந்தாலும் பின்யான் பொருதாலும்
மேலாடி நூற்றுவர்கள் வெல்வர்கள் தப்பாது
ஏலாதென் ருலும்இறப்பீர்கள் ஐவர்களும்
சொன்னபடி கேளீரேல் சொல்லுங்கோள் இப்போதே
என்னகரிற் போய்ச்சேர்ந் திருக்கவென உரைத்தான்
மாலுரைக்கச் சிந்தை மறுகிப் பதைபதைத்து
மேலுரைத்த பஞ்சவர்கள் வெம்பிநின்று வாடுவதை

அரவான் வருதல்

சிலைவல் லராவான் சினத்திலே[1] அங்குவந்து
கலைவல்ல மாயன் கழற்கால் தனைப்பணிந்து
நீயிருக்கப் பஞ்சவர்கள் நெஞ்சிரங்கக் காரியமேன்
வேயி[2]ருக்கும் வாயானே விள்ளென் றவன்கேட்க
உன்னாலே வந்த உலைசலன்றி வேறுமுண்டோ
ஒன்னார்க் களிக்குமுனம் உன்னுயிரைத் தாதையர்க்கு
ஈந்தா லலதிவர்கள் எல்லாம் மடிந்திடுவர்
காந்தாரி மக்களிந்தக் காசினியெல்லா மாள்வர்
தந்தைய ரிட்ட சபதமுந்தன் தாய்சபதம்
அந்தரம் போகும் அபகீர்த்தி மேலாகும்
பெற்றார்க் குதவாமல் பேணார்க் குயிருதவிச்
சற்றாகிலும் இரக்கம் தாதையர்பால் ஏற்றாயே,
துன்னாரை வென்று தொலைப்பேன் பகலிலென்றான்
உன்னால் உலகாள உற்றிருந்தார் பஞ்சவர்கள்
சீவன் கொடாமல் சிலைப்போர் தொடங்கிநில்லு

---

1 கணப்பொழுது நேரம்
2 மூங்கில்

சீவன் கொடுப்பதெனில் சேர்ந்தவர்க்கே ஈந்திடென்றான்
என்வாக்குப் பொய்யாமே என்செய்வேன் என்றிடைந்தான்.

கண்ணன் செயல்

உன்வாக்குப் பொய்யாது ஒருநாள தற்குமுன்னே
காளி யிடத்தில் கருதுபலி யூட்டி
மறுநா ளுயிரிருக்க நான்வைப்பேன் உன்னையவன்,
வந்துகேட் பானாகில் மற்றவனுக் கீந்துவிடு
வந்துகேளா னாகில் மைந்தா இருந்துவிடு
என்றிவன் சொல்ல இசைந்து மனப்பொருந்தி
நன்றிவர்க்கு என்சீவன் நல்கினேன் நாரணனே
இவ்வுயித்தம் பார்க்க இசைந்துமா லாயிருந்தேன்
செவ்வியனே என்னுயிரு சிற்சிலநாள் தானிருந்து
நானும் படைபொருதி நற்சமரி லேமடிய
மானம் திகழ்மாலே வன்பலி யூட்டுகென்றான்.

அரவான் களப்பலியாதல்

அந்தப் படியே அவனுக்கு வாக்களித்தான்
தந்தையர்கள் தாள்தொழுது சந்ததியும் தேற்றிவைத்தான்
தாதையரும் சந்ததியும் சம்மதித்த அப்போது,
ஆதவனோடு இந்துவையும் ஆனசதுர்த் தசியில்
ஒன்றாகச் சேர உரைத்தேபஞ் சாங்கமுரை
அன்றே மயக்கிவைத்து அண்ணல் அரவானை
இசைந் தமாவாசி இரவில் குமரி[1]முனம்
வசந்த உறுப்பனைத்தும் வன்மையுடன் கொய்தீந்து
மொய்த்த தீபம்போல் மொய்ம்பன் உயிரோடிருப்ப
மெய்த்திருமால் ஈந்துவரம் வேண்டியே மீண்டனரே
பாண்டவரும் மாயவனும் பாடிவந்து சேர்ந்ததற்பின்
பூண்ட பரித்தேர்மேல் பொழுதுதயம் ஆனதுவே
அந்நாள் தனிலே அவைகூ டியமுகத்தில்

கண்ணன் சிவேதனனை அணிவகுக்கச் செய்தல்

மன்னாஞ் சிவேதனையே மால்நோக்கி ஏதுசொல்வான்
நாலுவகைத் தேரினிரை நாகமொரு மூவினிரை
பாவை நிகர்த்த பதாதி[2] கணங்களையும்

---

1 கொற்றவை
2 காலாட்படை

குருமன் நிலத்துக் குறித்தணிசெய் ஏகுகென்றான்
தானும் அபிமனையும் தார்விசையன் வீமனையும்
மான அதிரதராய்[1] வைத்தான் காண்அம்மானை.
சிகண்டிதரு மன்திட்டத் துய்மனொடு சாத்தகியும்
மகிழ்ந்து தகப்பனையும் வைத்தான் மகாரதராய்[2]
துருபதன் உத்தரனைச் சோழனொடு சேரனையும்
தருஉத் தமபானு தன்னைச் சமரதராய்[3]
நகுலன் சகாதேவன் நல்வீமன் சேய்செழியன்
அகிலகுந்தி போசனையும் அத்தரத ராகவைத்தான்

மற்றமன்னர் கால்தளமும் மற்றகச வாம்பரியும்
சுற்றி யெங்குமொய்க்கத் தொடுகடலே நிரைத்தான்
தேவர்பெருஞ் சேனைகளைச் செவ்வேள் திறுத்தியபோல
யாவர்களும் மெச்ச அணிசெய்தா ரம்மானை.
நெருங்கு படையுடனே நேர்ந்தை வரும்மாலும்
ஒருங்குற்ற வெஞ்சமரில் ஒத்தஒரு மிப்பரிந்து

பலராமன், விதுரன் தீர்த்த யாத்திரை செல்லல்

மருங்குற்ற ராமனுடன் மனவிதுரனுங் கூடி
பொருந்துசமர் முற்றுமட்டும் போனார் புனல்படிய
மாலங்கு நின்றமையால் வன்பூசல் செய்யலென
மேலெங்கும் வெங்கோபம் விம்மி விதுரனுடன்

போனான் பலராமன் பூசலுறில் மோசமென்று
கானாறும் பன்னதியும் கண்டாட வேதுணிந்தார்
வெடித்த இடிக்குலங்கள் மேகபட லத்திரள்போல்
திடத்த பெருங்கிரிகள் சேகரமாங் கூட்டமென
மகரக்[4] குலம்உலவும் மைக்கடல்கள் ஒப்பாக
விகடத் திறிகரட வெங்கயங்க[5] ளின்கூட்டம்
சிகரக் கிரிக்குலத்தைத் திண்மருப்பி னாற்கிளப்பத்
தகர உற்பதத்தால் தாக்கிமதத் தாற்கரைத்து
மைத்தா ரைப்போலே மதத்தாரை ஆறோட

1 தேர்ப்படை செலுத்துவதில மிக்க வல்லவர்
2 11,000 தேர்க்குத் தலைவராம் தகுதியுடையவர்
3 ஒத்ததேர் வலிமை உடையவர்
4 மகரம் என்னும் கடல்வாழ் இனம்
5 யானைப் படைக் கூட்டம்

மெய்த்தார் பாரமுடன் மெய்ச்சாய்கை[1] யைப்பகைத்து
கைக்கதைக் கொண்டு கடுகி முடுகியடர்
மைத்தகிரி யொத்த மதப்பகடு[2] பலகோடி
இந்திர விமானம் இரவிதேரைப் பழித்து
கந்தரங் காத்தைக் கடுப்பால் அடக்கிவென்று
உருள்மா மணித்திகிரி ஓடும்விசைப் பாரமதாய்ப்
பெருமா மலைக்குலங் கள்பீடழுந்திக் கீழழுந்து
உகரப் புவியினுட உட்புதைய மட்பொடிகள்
பரியின் குரங்கள் படத்தூள் பெரும்படலம்
அந்தரமும் அந்தரமும் அண்டபகி ரண்டமெல்லாம்
கந்தரங்கள் போலக் கலந்தே பரவிநிற்கக்
நாகமுறு தூசியெல்லாம் நற்கொடிகள் தான்துடைக்க
மேகங்கள் ஒத்தே விரவுதேர் பலகோடி
திக்குத் திகாந்தமொடு சேணுலகும்[3] பூவுலகும்
தொக்குத் துளாவித் துடர்இமைக்கு முனம்மீளும்
தீனபதி[4]யின் வாம்பரியைத் தீர்க்கமுடன் நகைக்கும்
மனக்கதியை ஒத்துலவு வாம்பரிகள் பலகோடி
சீயக் குருளைத் திரள்ஆர்ப் பரித்துலவும்
பாய வெற்றியான பதாதிவகை பலகோடி
ஆறுகொண்ட பலகோடி யானைமதத் தாரையினால்
சேறுகொண்ட பலகோடி தேருருளை யின்திரளால்
கூறுகொண்ட பலகோடி கொக்கின் குரங்களினால்
நீறுகொண்டு தூள்பரந்த நின்றபெரும் படையால்
வேல்களொடு வேல்நெருங்க மெய்களொடு மெய்நெருங்கக்
கால்களொடு கால்நெருங்க கைகளொடு கைநெருங்கத்
துவச முடனே துவசத்திரள் நெருங்கக்
கவிகை யுடனே கவிகைத்திரள் நெருங்க
இரதத் துடனே இரதத்திரள் நெருங்கத்
துரகத் துடனே துரகத்திரள் நெருங்கக்
கரடக் கரியுடனே கடரக்கரி நெருங்கப்
பரிசைத் திரளுடனே பரிசைத்திரள் நெருங்க
ஆயுதமும் ஆயுதமும் அவ்விதமே தான்நெருங்கத்

---

1 நிழல்
2 யானை
3 வானுலகு
4 சூரியன்

தேயு[1]வென ஆயுதங்கள் சேர்ந்துதளம் பாக்கக்
கஞ்சக் கருவி[2] கதித்தபல தோற்கருவி
மிஞ்சுந் துளைக்கருவி மிக்கநரம் புக்கருவி
மஞ்சுயரும் வாக்கியமாம் வன்பஞ்ச வாக்கியமாம்
கரிகள் பலவாறபழங் காக்கியனு மனிப்பும்
கிரிக ளனைய கிளர்தேர் உருள்ஒலியும்
அனிகத் திரள்வீரர் ஆர்ப்பரித்த பேரொலியும்,
தொனிகள் மிகுந்த துடர்பே ரிடியொலிபோல்
சிரசா யிரமுடைய சேடன்[3]முடி தாழத்

திரைசாக ரஞ்சுவறத் திக்கயங்கள்[4] மண்டியிடத்
திக்கு மலையும் திசைபா லகர்நடுங்க
மிக்க புவிநடுங்க விண்ணுலகுந் தானடுங்க
மந்தரமும் தானலைய வானவரும் தானடுங்க
கந்தரங்கள் யாவும் கலங்கிமலை புக்கொளிக்க
சூரியனு மேமயங்கித் தூசிகளிலே ஒளிக்க
வேரிமன்ன ராயுதத்தின் வெய்யஒளி பிறங்கப்
படிகள் அதிரப் படைநின்ற தம்மானை.
மாயன் உயிர்தருமன் மார்புசிவே தன்முகம்
மெய்சிரம்பி மனம்வீமன் விசையன் புயங்கை
அகடு கடோற்கயன் சாத்தகியே இடையாக
இகலு மருத்துவர்கள் ஈந்தமக்கள் தாளாக
மற்று மரசரெல்லாம் மற்றஅவய வங்களுமாய்ச்
சுற்றும் பதாதி சுடர்ப்பணியும் ஆயுதமாய்
உயிரு முடலுமென ஒத்தே பெரும்படைகள்
இயலுற் றுயர்தருமன் ஏத்தஅணி நின்றதுவே.
கிளரு மணிமுரச கேதனனிச் சிறப்பில்

துரியோதனன் செயல்

வலிமை பகர்ந்தரவ வன்கொடியோன் செய்கை சொல்வாம்
திதியை மயக்கிமுதற் செய்தார் பலியிகலோர்
எதிரி நமக்குமுண்டோ வெம்படை யெலாமணிசெய்

---

1 அக்கினி
2 உலோக இசைக்கருவி
3 ஆதிசேடன்
4 திசை யானைகள்

மந்தா கினியாள் மகனே எனப்பகர்ந்தான்
சிந்தான சேனையுள்ள சீர்மன்ன வர்கோமான்
தனத்திற் குபேரன் சமர்க்குத் தருகாதோன்
மனத்தசை வில்லாத மன்னன் உரைத்திடவே
வில்லா சரிதனையும் வீரசுபத் தாமனையும்
சல்லாபன் பூரியுடன் தானும் அதிரதராய்
பகைதத்தன் சோமதத்தன் பகர்துன்ம ருடணனுடன்
வகையுற்ற வன்தலையாய் வைத்தான் மகாரதராய்
கிருதன் கிருதபன்மன் கிளர்சல் லி பன்சகுனி
நிருபன் சயத்திரதன் நீடும் சமரதராய்
கன்னன் விடசேனன் காந்தாரி மக்கள்பலர்
தன்னையும் அர்த்தரதர் தானாய் நிறுத்தினனே.

வீடுமன் கன்னன் மாறுபாடு

கங்கை மகனுடனே கர்ணன்சினந்து சொல்வான்
அல்லியனைச் சேனைமுதல்வன் ஆக்கினான் மன்னவர்கோன்
வில்லியரில் வல்லஎனை வீறுகெட நாலாந்
தேராளி யொக்கநிற்கச் செய்தா னிவனுடலை
பாரோர் நகைத்திடவே பங்கப்பட நறுக்கி
கொல்லுவேன் என்னக் கொதித்தாக் கரித்துத்துறுக்கி
வல்லியம்[1]போல் பாய்ந்துகதிர் வாளுறைவிட் டேயடர்ந்தான்
கன்னன் கொதித்துவரக் கங்கைமகன் கண்சிவந்து
வன்னி[2]ப் பொறிபறக்க வாளுறைவிட் டேயடர்ந்து
சூதன் வளர்த்ததொரு தொண்டனுக்கு இந்தமட்டும்
வாது பகருதற்கு வைத்ததிந்த மன்னனென்று
சீறிக் குமுறிச் சினந்தார்ப் பாரமுடன்
கூறிப் பதறிக் குலஊனா உன்தனக்கு
வாயென்ன கோபமென்ன வன்மையென்ன வின்மையென்ன
நீயென்ன ஆண்மையென்ன நின்கைக் கருவியென்ன
எந்தப்படை செயித்து எவ்விருது பெற்றுவந்தான்
உந்தைபேர் தாய்பேர் உரைமன்னர் தானறிய,
போருக்குப் போரு புறங்கொண் டலக்கழித்த
வீரத்தை மன்னவருக்கும் வீரியர்க்கும் யாதுரைத்தான்
இந்தப் படைக்கு இரக்கமுறப் பலியாய்

---

1 புலி
2 நெருப்பு

சிந்தைநொந்து மங்கியுந்தன் சீவன்விடப் போறாய்
என்றுவிரற் சிங்கம் எனப்பாய்ந் ததெதிர்த்திடவே,
நன்றுநன்று நீங்கள்இகல் நாடியதென்று ஓடிவந்து
இருவர் தனையும் இதமாகத் தான்விலக்கி
வருணன் மகன்சமரில் மாய்ந்தால் அலதிகலில்
செல்வேன் எனக்கனன்று சென்றான் பருதிசுதன்
பல்லார் புகழப் படைவீடு புக்கியபின்
திக்கும் நடுங்கச் செகம்நடுங்க வான்நடுங்கத்
தக்க சதுரங்கத் தளங்கள் புடைபரவ
பற்பல முரசம் பலதிசையும் தான்குமுற
வெற்பு மிகநடுங்க விடுமனும் தானடைந்தான்
முரசத் துவசர்க்கு முகுந்தன்துணை செயலால்
கருடத் துவசம் கதித்துவரும் என்றேபோர்
வெருவிப் பயந்து விதமாய் நடுநடுங்க
அரவப் பெருந்துவசம் அன்றுபுற மிட்டதுவே
தருவின்இலைத் தொகையின தந்திப்[1] பெருங்குழுவும்
உரம துடனுடு[2]வை ஒத்ததொகைத் தேர்க்கூட்டம்
வீசும் மழைத்துளியின் மிக்கபரிக் கூட்டம்
பாசப் பதாதி பரவைமணற் கூட்டம்
சதுரங்க மான சலதிப் படைசூழ

துரியோதனன் கூற்று

முதிருஞ் சினத்துடனே மூண்டே அரவுயர்த்தோன்
எண்ணாறு யோசனைமட்டு ஏகும் பெரும்படைகள்
விண்ணோர் மதிக்க விரிவாக நிற்பதனை
மன்னவர் மன்னன் வயமாசுணக்[3] கொடியோன்
நன்னதியான் தன்மகனை நாடியே பார்த்துரைப்பான்
நிக்கும் படைகளெல்லாம் நேசமுட னேயறுக்கத்
தக்கவனை எத்தனைநாள் தன்னில் தொலையுமென்றான்.
மூசிப் பகலில் முறுக்குவேன் முப்பகலில்
ஆசிரியன் கொல்வன்உயர் ஐந்துநா ளிற்பருதி
மைந்தன் அறுப்பன்முனி மைந்தன்ஒரு நாழிகையில்

---

1 யானை
2 விண்மீன்
4 பாம்பு

சிந்த அறுப்பனிரு சேனையையும் பூவிலுள்ள
பல்லுயிரும் நாகப் பதி[1]யிலுள்ள சேனையையும்
மல்ல லசுரரையும் வானோர் குலங்களையும்
சமர்க்கு வலியன் தனுமா தவவிசையன்
இமைக்கு முனம்அறுப்பான் என்றுரைத்தா னம்மானை.
வீடுமன் சொல்லால் மிகவே மனமழுன்று
பீடினுடன் யாதொருசொல் பேசாது தானிருந்தான்
கணிப்பில்இபந் தேர்மாக் காலாட் பெருங்கடலை
அணிப்பண்பு செய்தான் அதற்பின் தீக்குமரன்
சேனா பதியாம் திரிபதகை புத்திரனும்
மானா பரன்குருவும் மைந்தன் கதிர்மகனும்
சீர்பெருகு மன்னன் திரியோதன னுடனே
சார்துணைவ ரீரைம் பதின்மர்களும் தற்சூழப்
பகைதத்தன் சிந்துபதி சல்லியன் சகுனி
திகையுற்ற எண்ணேழு தேசத் தரசர்களும்
மிக்கபட்ட வர்த்தனரும் மேன்மகுட வர்த்தனரும்

துரியோதனன் படையிலுள்ளாரைக் கண்டு அருச்சுனன் மயங்கல்

திக்கடங்க வேபரந்த சேனைகளை யும்பார்த்து
ஒன்னார்கள் நிற்கும் ஒருமிப்பும் தான்பார்த்து
மன்னாந் தருமன் மகியாண் டிடும்பொருட்டால்
விந்து வழியான மிக்கான பேர்களையும்
பந்து சனங்களையும் பாராமல் தீச்சினத்தால்
வில்லின் வலியாலும் மெய்த்திண் புயத்தாலும்
கொல்லுதல் ஈனம் கொடும்பாவம் பாவமிது
செய்யேனிப் பாவம் சுமக்கேன் சுமக்கேன்நான்
செய்யாள்[2] கணவனுடன் தீர்க்கமுள்ள வில்விசையன்
கூறியது கேட்டுக் கோபாலன் பாங்கன் மனம்
தேறும் படிக்கறிவு செப்பலுற்றான் அம்மானை.

தருமராசாக்கள் வீரையன் துணை

---

1 நாகலோகம்
2 இலட்சுமி

மகாபாரதம்

முதல் நாள் போர்ச் சருக்கம்

(கண்ணன் தத்துவம் உணர்த்த அருச்சுனன் மயக்கத்தை மாற்றித் தெளிவுபடுத்திய பின்னர் அவன் போர்புரிய முற்படுகிருன். கண்ணன் பாண்டவரோடு வீடுமரிடம் சென்று, நீர் போர்செய்தால் பாண்டவர் எப்படிப் பிழைப்பர் எனக்கூறி அவர் இறக்கும் உபாயம் அறிந்து திரும்பினர். அவ்வாறே துரோணரிடம் சென்று, 'அருளவேண்டும்' என்று வேண்டி, நிற்க, அவர் தான்இறக்கும் வகைகூறினார். பாண்டவர் யூகம் அமைக்கின்றனர். கண்ணன் கூறியவுடன் போர் தொடங்குகிறது. படைகள் நெருங்கி மோதுகின்றன. போர்க்களத்தில் வீரர்கள் தம் வீரம் காட்டுகின்றனர். பலநாட்டு மன்னர்களும் போர் புரிகின்றனர், அருச்சுனன் வீடுமனை எதிர்த்துப் போர்புரிகிறான். வீடுமரும் துணைவர்களும் சலிக்குமாறு, வீமனும் அருச்சுனனும் அவர்களை எதிர்த்துப் போரிடுகின்றனர். சல்லியன் வேலால் உத்தரன் இறக்கிறான். அதுகண்டு, வெகுண்டு வந்த வீமன், துரியோதனனுடன் பொருது வில்லையும் தேரையும் அழிக்கிறான். பல மன்னர் துரியோதனனுக்கு உதவுகின்றனர். வீடுமனும் சுவேதனும் பொருகின்றனர். சிவேதன் சல்லியனோடு போர் புரிகின்றான். துரியோதனன் சல்லியனுக்கு உதவியாகத் தம்பியர் அறுவரை அனுப்புகிறான். வீடுமர் சிவேதனை எதிர்க்கிறார். துரோணர் தளர, துரியோதனன் பலமன்னர்களைத் துணையாக அனுப்புகிறான். அவர்கள் சிவேதனுக்கு ஆற்றாமல் ஓடுகின்றனர். வீடுமர் மீண்டும் எதிர்த்து வில் இழக்கின்றார். வீடுமனும் சிவேதனும் வாள் கொண்டு போர் செய்கின்றனர். வீடுமர் தன் வில்லால் சிவேதனை இறக்கச் செய்கிறார். அசுரர்கள் மகிழ்கின்றனர் போர்க்களக்காட்சிகள் எடுத்துக் கூறப்படுகின்றன. கதிரவன் மறைய, அனைவரும் பாசறை புகுகின்றனர். புதல்வரை இழந்த விராடனுக்குக் கண்ணனும் தருமனும் ஆறுதல் கூறுகின்றனர். விராடன் தன் உயிரையும் பாண்டவருக்குத் தருவதாகக் கூறுகின்றான். காலை மலர்கின்றது.)

மேவரும் ஞானானந்த வெள்ளமாய் விதித்தோனாகி
மூவரு மாகிமூல முதலிய பயன்களாகி
யாவரும் யாவுமாகி இறைஞ்சுவார் இறைஞ்சப் பற்பல்
தேவருமாகி நின்ற செங்கண்மா லெங்கண்மாலே.

சிவமயம் - வீரையன் துணை

அருச்சுனன் கலங்கமுற்றுக் கூறுதல்

ஏழு கடல்போல் எழிற்பஞ்ச வர்படையும்
சூழும் பவக்கடல்போல் துன்னார் பெரும்படையும்
இரண்டு படையும் இகல்முள்வ தன்முனமே
திரண்ட படையைத் திறல்விசையன் தான்பார்த்து
நதிமைந்தனைக் குருவை நன்குருவின் புத்திரனைச்
சதிசெய் பெரிய தகப்பன்கு மரர்களைக்
கொன்றுலகம் ஆள்வதிலும் குன்றாமலே கானில்
சென்று சருகுபல தின்றுகா லம்போக்கி
மேவுமது நன்றெனவே மெய்ப்பூசல் செய்யாமல்
ஓவில் வலியான் இடைந்திடைந்து நிற்பளவில்

கண்ணன் வினவுதல்

தனுவீ ரனை[1]நோக்கித் தாமன் எடுத்துரைப்பான்
குனிசாப வெங்கணையால் கொல்லுபகை வெல்லுகெனச்
சித்திரம் போலத் திகைத்தொன்றும் பேசாமல்
அத்திர வீரன் அறிவு தடுமாறிப்
பெருமூச்சு விட்டுமனம் பேதலித்து நொந்திருந்தான்.
போர்அறியான் போலப் பொரும்போர் தொடங்காமல்
நேரறிவு மங்கிநொந்து நிற்பதேன் கூறுகென்றான்

அருச்சுனன் கூற்று

கைதாங்கா தெந்தன் கணையை எவர்மீறில்
மைதாங்கு மெய்யோனே வன்பாய்ச் செலுத்தவல்லேன்
மெய்த்தொளிர் தந்த விறற்குருவை வீடுமனை
மைத்துனனை நிந்தனுட மக்கள்மரு மக்கள்தன்னை
மெய்த்துணையை அங்கவர்கள் மிக்கதவப் புத்திரரைக்
கைத்தனுவால் கொல்லுவனோ காடுறைவேன் என்றுரைத்தான்

---

1 வில்வீரன் - விசயன்

கண்ணன் கூற்று

காடுறை வேனென்று கலங்குகின்ற காதலனை
ஆடவரப் பாயலினான் அன்பாகத் தான்தழுவி
ஞானம் பலபகர்ந்து ஞானவிழி தான்தெரியத்

தான அருட்கிருபை தான்சொரிந்து தத்தளித்தேன்
தன்னைத் தெரியத் தலைவனையும் தான்தெரியப்
பின்னைக் குரியான் பெருஞானக் கண்ணளித்து
மாய்கை அளித்த மனுச்சக்ர வர்த்தியினால்
தாய் பிதா சுற்றம் சகோதர மென்றே உருத்தாய்
சொல்லி மயக்கிச் சுழல்வதன்றி வேறுமுண்டோ
இல்லுசுதன்[1] என்பதெல்லாம் என்மயக்குக் கண்டாயே
என்னுளு முன்னைவிட்டு யான்பிறிவ தில்லையில்லை
முன்னோர் பிறப்பில் முதிர்நானும் நாரணனும்
மன்னா நீ நானு மகிழ்ந்து பிறந்தனமே

பின்னல் இராமன் பிரியாத துணையுமென
அந்நாள் பிறந்து அரக்கரையும் வென்றோமே
இந்நாள் இருவோரும் இவ்வடிவாய்த் தான்பிறந்து
மாபார தமுடிக்க மன்னவரைத் தான்மயக்கப்
பூபாரந் தீர்க்கப் பொருந்தியே வந்துதித்தோம்

அருச்சுனன் தெளிவு

என்றுமால் சொல்ல இதயமிகத் தெளிந்து
நன்றி பிறவி நயந்தறியச் செய்தனையே
புந்தி தெளியவைத்தாய் புல்லறிவை மாற்றிவைத்தாய்
எந்தனையும் உட்பொருளை இப்போது தோற்றவைத்தாய்
முந்தவந்த பேரையெல்லால் மூண்டறுப்பேன் என்றுரைத்துச்

சுந்தரப்போர்ச் சிங்கமெனத் தோன்றிநின்றுன் அம்மானை
பொறைக்கட லன்னுன் புகழ்கொண்ட புண்ணியவான்
அறைக்கட வுட்கண் அனைய மகவானேன்
அர்ச்சுனன் தேறியமர்க் கொருமிப் பாளிதற்பின்

தருமன் கலக்கமுறல்

பொற்சிகர மன்னுன் புயவான் தருமபிரான்

---

1 வீடு; புதல்வன்

தீராவி சாரமுடன் சிந்தைமிகக் கலங்கிச்
சார்வான கங்கை தனையன் முதலாகும்
உற்ருரை யெல்லாம் உறவென்றும் உன்னாமல்
பற்றாரைப் போலப் பரிவற்று உறவறுத்து
நாடாள் வதிலும் நற்பாலர் ஏசுகினும்
காடாள் வதுவே கதிக்கான பாதையென்று
தருமன் அருச்சுனன்போல் தான்மனது பேதலித்தான்

கண்ணன் தேற்றல்

திருமன்னு மார்பகனும் சென்றவனைத் தான்தேற்றித்
தெக்கு வடக்காகச் செங்கதிர் திரிந்தாலும்
தொக்க உரைப்பழுது சொல்லாத வாயுடையாய்
சூதாடிச் செல்வமெலாம் தோற்றுவனம் சேர்ந்தஅன்று
வாதாடி நூற்றுவரை மாய்ப்போ மெனவெகுண்டு
மன்ன னொருமித்தளவில் மற்றோர் அசலம்[1]தீர
முன்ன முரைத்த மொழியும் மறந்தாயோ
நகுலன் தனக்குவரம் நல்கியது மாறுவதோ
அகிலம் தனில்வாழ் அரசர்க்குத் தூதோலை
விட்டழைத்துச் சொன்னதெல்லாம் வீணோபொய் வாசகமோ
ஒட்டலர்க்கு அஞ்சல் உரவர்க் கழகோதான்
என்தூதிற் பின்பு இகல்வேன் எனஎவர்க்கும்
அன்பாகச் சொல்லி அமர்மூண்ட வேளையிலே
பேதலித்து நிற்றல் பெருமையோ வீரியமோ
காதலிக்கு[3]த் துன்பம் கழலுமோ என்றுரைத்தான்
மாயனே ஆசரிக்கு மந்தாகினிச் சுதற்கும்
போயொருசொல் கேட்டதற்பின் போர்பொருவேன் என்றுரைத்தான்

கண்ணன் தருமனை வீடுமனிடம் அழைத்துச் செல்லல்

நன்றென்று மாயவனும் நால்வருடன் தருமனையும்
அன்றழைத்து வீடுமன்முன் அன்பாகக் கொண்டுசென்று
துளசி மணியார்[2]முன் தூதில் நடந்ததெல்லாம்
தளரும் தருமனுக்குத் தானோது எனவுரைத்தான்,
மாய னுரைத்த வகைபோல் சீருரையாய்

1 அப்பு
2 மனத் திண்மை யுடையோர்.
3 பாஞ்சாலி

ஞாயமில்லா மன்னன் நவின்றமொழி கூறியபின்
மூதாதை பாதம் முறையாகத் தான்வணங்கி
தாதா வெனவுலகம் தாங்கும் தருமபிரான்
அளி[1]மொழியும் கண்கள் அழல்பொழியத் தானோக்கி
தெளியும் குருகுலத்தின் தீபமே தாபரமே
சீர்பெருக லோகமெலாம் செங்கோல் நெறிநடத்தி
பேர்பெருக வாழும் பெரும்பதவி தானிருக்கத்
தந்தை விரதம் தவிரவே தம்பியர்க்காய்
இந்த உலகளிக்கும் எம்பெருமா னேதுணிந்து
நிந்தனுட எதிர்க்கல் நீதியோ எங்களுக்கு
எந்தவிதம் செய்வோம் இயம்பெனவே அங்கவனும்

விடுமன் கூற்று

சொல்லுவான் மன்னாநான் சோற்றுக் கடன்கழிக்க
மல்லலாய்ப் போர்முகத்தில் வந்தேன் எனைப்போலப்
பல்லனந்தம் பேர்கள் பகைத்தே பொருதுகினும்
வெல்லும் தருமம்ஒன்று மேதினியா ளுமென்றுரைத்தான்
விருத்தன் இவையுரைக்க விண்டும்எதிர் சொல்லலுற்றான்
வருத்தமுற் றுன்னைவெல்ல வல்லரே பஞ்சவர்கள்
என்றுமால் சொல்ல எனக்குப் பகைசிகண்டி
அன்றமரில் பத்தா நாள் அங்கவன்என் முன்னமுறில்
ஆயுதம் போட்டு அமர்செய்யேன் நின்றிடுவேன்
தேயுவென வில்விசயன் செங்கணையால் சோர்ந்திடுவேன்
அல்லா திருந்தாலும் அதுநீ அங்கிருக்க
வில்லால் வலிய விசையனுமே அங்கிருக்க
தருமன் பொறையறமும் தானிறைந்தே அங்கிருக்க
விரக மதியுடைய வேந்தனே வெல்லவல்லான்
வெற்றியெல்லாம் உங்களுக்காய் மேதினியும் உங்களுக்காய்
பெற்றிடுவீர் என்னப் பிதாமகனு[2]ம் வாழ்திவிட்டான்

கண்ணன் தருமனைத் துரோணரிடம் அழைத்துச்செல்லல்

அங்கவன்பொற் பாதமதை ஐவர்களு மேபணிந்து
துங்கமுள்ள வெற்றித் துரோணனடி தொழுதார்
ஆசானு முன்னாள் அரசுரைத்த தீமொழியைக்

---

1 கருணை
2 வீடுமர்

கூசாது சாக்கி குறித்துரைத்தான் அங்கதற்பின்
வேதியனே விற்குருநீ மீண்டுன்னோ டேபொருதல்
நீதியோ புத்திநிகழ்த் தெனக்கென் றோதினனே

துரோணன் கூற்று

என்போலும் சேய்போலும் எண்ணிறந்தோர் கூடுகினும்
உன்போரை வெல்வதெவர் உன்னறமே வென்றிடுங்காண்
சோற்றுக் கடன்கழிக்கத் தோன்றினோம் போர்க்களத்தில்
காற்றுக் கொழுமுனையே கவலறம் என்றதற்பின்
இம்மொழி கேட்டே இயல்மா தவனுரைப்பான்
உம்முடனே பஞ்சவரோ உற்றமரில் நிற்கவல்லார்
நின்னை யவர்வெல்ல நிகழ்த்துமொழி கூறுகென
என்னெதிரே தர்மன் இசைந்தசுபத் தாமாவை
மூவைந் தாநாளில் முடிந்தான் என உரைத்தால்
மேவேந்தன் ஆயுதத்தை விட்டுவெறுங் கையோடே
நிற்பேன் வதைப்பன் நெடியதிட்டத் தூய்மனென்றான்
இப்பாருலகை இசைந் தாள்வான் தர்மனென்றான்
விரவு தருமனறம் மெய்பொறைபு மங்கிருக்க
நரநா ரணனுமங்கே நாடியே தானிருக்க
பொய்சூ துடையவனோ பூவுலகை ஆளவல்லோன்
மெய்ச்சூத வாயானே மேதினியை ஆள்வனென்றான்
விற்குருவின் பொற்பாதம் மெய்ப்பஞ் சவர்வணங்கி

கண்ணன் தருமன், தம் படை அடைதல்

பொற்புடைய மாலுடனே போனார்கள் தன்படையில்
கொற்றவரை ஏழ்அக் குரோணிப் படையோடும்
பற்றடைய தாய்நாதப் பான்மைவியூ கம்வகுத்து
வெற்றிதரு கென்றேத்தி விந்தன் தனைவணங்கி

இருபடையும் எதிர்த்தல்

சொற்றவிந்த தூசியொடு தூசி[1]வந்து மொய்த்ததுவே
இருவர் படைஆரிப்பு ஏத்தான் வீரர்
முரச முழங்க முகிற்சங் கினம்குமுற
விருதுக் கருவியினம் மேன்மேலுந் தான்முழங்க
கருதும் இருபடையும் கைகலந்த தம்மானை.

---

[1] தூசிப்படை, முற்படை

தாவும் ரதத்துடனே தாவிரதம் போர்மூண்ட
மாவலவர் மாவலவர் வன்மமுடன் போர்கண்ட
கந்தரமும் கந்தரமும் கைகலந்த வாறேபோல்
சிந்துரமும் சிந்துரமும் சேர்ந்தெதிர்ந்து போர்மூண்ட
கூர்வாளும் கூர்வாளும் கொற்றமுடன் அடர்ந்த
நேர்வேலும் நேர்வேலும் நீங்கா தடல்புரிந்த
வில்லாளும் வில்லாளும் வெஞ்சரங்கள் பெய்துநின்றார்
மல்லாளும் மல்லாளும் வன்போர் தொடங்கிநின்றார்
தண்டாளும் தண்டாளும் தாவியே போர்மூண்டார்
மாண்டான வச்சிரமும் வச்சிரமும் போர்மூண்ட
சூலமுடன் சூலம் தொடர்ந்தே அடல்மூண்ட
கோலுடன் கோலும் குறித்தே அடல்மூண்ட
பரசும் பரசும் பதறியே போர்மூண்ட
தரமுடன் சக்கரமும் சக்கரமும் போர்மூண்ட
தோமரமும் தோமரமும் சோராது போர்மூண்ட
காமரமும் காமரமும் கமலக்கண் அழல்சிந்த
சுரிகை[1]யொடு சுரிகை சோராது போர்மூண்ட
சரமும்[2] சரமுனையும் தான்கருவிப் போர்மூண்ட
பிண்டிபா ல[3]த்தினொடு பிண்டிபா லமெதிர்ந்த
கொண்ட கரகுந்தமுடன் குந்தது[4]மே போர்மூண்ட
கவண்கலுடன் கவண்கல் காரிடிபோல் போர்மூண்ட
கவல்கின்ற கப்பணமும் கப்பணமும் போர்மூண்ட
சத்திரமும் சத்திரமும் தாவியே போர்மூண்ட
அத்திரமும் அத்திரமும் ஆக்கரித்துப் போர்மூண்ட
எஃகினமும் எஃகினமும் இவ்விதமே போர்மூண்ட
வெஃகிவெஃகி வீரரெலாம் மேன்மேலும் போர்மூண்ட
மன்னுபட்ட வர்த்தனரும் மற்றவரும் போர்மூண்ட,
பன்னுமுடி வர்த்தனரும் பண்பவரும் போர்மூண்ட
மந்திரியும் மந்திரியும் வண்மையுடன் போர்மூண்டார்
தந்திரியும் தந்திரியும் தானெதிர்ந்து போர்மூண்டார்
முடியற்ற வர்களுடன் முந்தியார் கோத்துநின்றார்
அடியற்ற வர்கள் அருணன்போ லொத்துநின்றார்

---

1 உடைவாள்

2 அம்பு

3 படைக்கருவி வகை

4 குந்தப்படை

சாபக் கணை[1]யால் சரீரமெங்கும் தான்துளைந்து
நீப வனமலர்ந்த நீள்கிஞ் சுகம்போலும்
தீபம் அனந்தம் சிறப்பாய் நிரைத்ததுபோல்
பூபரபுரம் படைத்துப் போரமரா தூடிநிற்பார்
தோளிரண்டும் வாளால் துணியுண்ட மன்னர்சிலர்

தாளி ரண்டினாலே சமர்செய் தடர்ந்துநிற்பார்
தாளிரண்டும் அற்றபின்பு சத்துவஞ்சேர் வீரர்சிலர்
தோளிரண்டு கொண்டுண்டு சோராது அடல்புரிவார்
சரிந்த குடற்கயிறு தான்போல் இழுத்தடர்ந்து
விரிந்த கொடும்போர் விரவியே போர்மூண்டார்,
கையி லிருந்த கணையெல்லாம் எய்துவிட்டு
மெய்யிற் பதிந்துபல வெங்கணைகள் எய்துநிற்பார்
வலக்கை இழந்துதனு[2] வவ்வுமிடக் கரத்தால்
இலக்குற்ற வெங்கணைகள் எல்லாத்தையும் விலக்கி
பாகு[3]தேர் மாவும் பதாதிகளும் வில்லலே

மோக முடனே முறுக்கி முனைந்துநிற்பர்
இடக்கையை வில்லோடு இழந்தோர்அவ் வில்லெடுத்துத்
தடப்பெருந் தாளில் தனுவை வரைந்துகட்டி
வலக்கைச் சரமாரி மாறாது தான்வீசி
இலக்குற்ற சேனைகளெல் லாந்துளைக்க வேபொருதார்
கையி லிருந்த கருவிகள்எல் லாமிழந்து
கொய்யுனையின் கூரலெடுத்துக் கொண்டுசமர் ஆடிநிற்பார்
இருகையில் ஒன்றிழந்தோர் இற்றே விழுங்கரத்தை
ஒருகையி னாலெடுத்தே ஓடிஅமர் ஆடிநிற்பார்
கையிரண்டு மற்றுமொரு காலிழந்து வீரியர்கள்

சைகையொரு காலுடனே தத்திக்கூ ளங்கையினால்
முற்றுமிபங் கொம்பால் முரனாய்ப் பொருதியபோல்
குற்றுலக்கை போலாகக் கூசாமல் மொத்திநிற்பார்
கூர்வேலால் மார்பின்மிசை குத்தியதைப் பற்றியிவன்
ஏர்வாகி னோடே இருவருமே தான்இகலில்
பேர்பாதி யாகப் பிரிந்ததற்பின் குத்துகின்றோர்

---

[1] வில்லம்பு
[2] வில்
[3] தேர்ப்பாகன்

மார்பா னதுஉருவ மற்றுமெதிர் குந்திநிற்பார்
அங்கைப் படைகள் அனைத்தையுமே தானிழந்தோர்
வெங்கயத்தின் கோடு[1]கொண்டு வீறாகச் சாடிநிற்பார்
ஓடியே முட்டுதலால் உற்றுடைந்த தேரினங்கள்
நாடியே முட்டுதலால் நாகங்கள்[2] தான்வீய்ந்த
கூடியே முட்டுதலால் கொய்யுளை[3]கள் தான்வீய்ந்த
பாடியே முட்டுதலால் பதாகை பலசாய்ந்த
முட்டி ஒருவன் முடியைக் கரவாளால்
வெட்டினான்அங் கமிழந்தோன் வீசினான் அங்கவனை
இருதிறத் தோர்களினும் எண்ணேழு தேசமன்னர்
ஒருவர்க் கொருவரென உற்றெதிர்ந்தா ரம்மானை.
கால்தறியக் கைதறியக் கண்கள் தெறித்துவிழ
மேல்பிளக்க வென்பிளக்க மெய்க்கவச மேயொடிய
மத்தகங்கள் தான்தெறிக்க மண்டை யுடைந்துவிழக்
குத்தரங்க ளொத்த கொடும்புயம் களத்துவிழச்
சிரங்கள் அறுந்துவிழ தேகம் சரிந்துவிழ
உரங்கள்[4] அறுந்துவிழ உந்தி சரிந்துவிழ
கரங்கள் அறுந்துவிழ கைப்படை களற்றுவிழச்
சரங்கள் தனுப்படைகள் தான்பிடித்தே கைகள்விழ
இடைகள் ஒடிந்துவிட என்பு தடிந்துவிழ
துடைகள் முறிந்துவிழத் துண்டமிரண் டாகிவிழ
வாய்கள் அறுந்துவிழ வன்குடல்கள் சிந்திவிழச்
சேய்முகங்கள் எங்கும் செங்குருதி பொங்கிவிழ
நாக்குந் தெறித்துவிழ நல்லீரல் சிந்திவிழ
மூக்குந் தெறித்துவிழ மூரல் தகர்ந்துவிழ
வின்னாண்[5] அறுந்துவிழ மெய்க்கவசம் தான்பொடிய
பன்னா சுகம்[6]பிடித்த பங்கயப்பூஞ் செங்கைவிழ
வேலொடிந்து தானுதிர வெவ்வாள் பொடிந்துவிழச்
சூலம் பரசு துகளாய்ப் பொடிந்துவிழச்

---

1 கொம்பு
2 யானை
3 குதிரை
4 மார்பு
5 விற்கயிறு
6 அம்பு

சக்கரங்கள் தான்பொடியத் தண்டா யுதம்பொடிய
மிக்கபிண்டி பாலமொடு வெந்தேர் அமர்ந்தரிய
கப்பணங்கள் மற்றும் கனபடைகள் அற்றுவிழத்
துப்புடைய மன்னவர்கள் துண்டதுண்ட மாகிவிழக்
காலுமொரு நாலறுந்து கற்சி[1]யினம் சாய்ந்துவிழ
வாலுந் தலையறுந்து வாம்பரிகள் அற்றுவிழ
மேலு முதுகறுந்து வெம்பரிகள் அற்றுவிழச்
சால முகம்பிளந்து தான்பரிகள் அற்றுவிழக்
கோடுமணி வாய்பிளந்து குஞ்சரங்கள் அற்றுவிழ
மத்தகங்கள் தான்சரிய மண்டை தெறித்துவிழ
நெய்த்த இருட்படலம் நேருடலம் அற்றுவிழ
மஞ்சறுந்து நெஞ்சறுந்து வாரணங்கள் அற்றுவிழப்
பஞ்சு பஞ்சதாகப் பகட்டினங்கள் அற்றுவிழ
கறைபோல் மலையிடறு கால்நாலும் அற்றுவிழத்
திறமான தேரினங்கள் சேரத்தகர்ந்து விழச்
சாரதியும் மாவும் தடங்கொடியும் அற்றுவிழத்
தேருருளைத் தான்தகரத் தேருடு அற்றுவிழக்
கொற்றக் குடையினங்கள் கோலமுடன் அற்றுவிழ
மற்றக் கொடியினங்கள் மாறா தறுந்துவிழத்
திக்கெங்கும் பறந்து செந்நீர்கள் ஆறோட
பக்கங்கள் எங்கும் பதலைப் பிணங்குவிய
இந்த விதமாய் இருபடையி லுள்ளோரும்
சந்ததமும் வெம்படையால் தானறுத்தார் அம்மானை.

வீடுமனும் அருச்சுனனும் போர்செய்தல்

விடுமனும் வல்ல விசையனுமே போர்மூண்டு
கோடுஞ்சிலைவளைத்துக் கோல்தொடுத்தார் அம்மானை
வளைந்த சிரம்நிமிரா வண்ணஞ் சரமாரி
விளைந்த கணைசெலுத்தி விண்திசையும் தான்மறைந்தார்
அண்டமுடன் எண்டிசையும் ஆழிபா தாளமெல்லாம்
மண்டுசினம் மிஞ்சுபல வாளியமர் மூண்டதுவே.
தேவர்மனு[2] நாகர்[3]இவர் சேர நடுங்கினரே

---

1 குதிரை
2 மக்கள்
3 நாகலோகத்தோர்

மாவலிய அஷ்டகஜம்[1] மற்றுள்ளதும் அஞ்சியதே
மாமனொடு சல்லியனை மற்றுமுள்ள தம்பியரை
ஏமமுள்ள வீடுமனுக் கேதுணையாய் மன்னன்விட
வீமன் அபிமனுடன் விந்தரனைச் செங்குவளைத்
தாமன் விசையனுக்குத் தான்துணையாய் விட்டனனே.

விருத்த னுடனே விசையனுமே போர்மூண்டு
தரித்தபனங் கொடியும் தண்சிலையும் நாணுமற
பன்னிரண்டு வாளிவிட்டு பாத்தன் அறுத்துவிட்டுப்
பின்னிரண்டு நால்கணையால் வெங்கவசந் தானறுத்தான்
மாஃனாலும் சாரதியும் மற்புருளும் அற்றுவிழத்
தானா லிரண்டுசரத் தாலறுத்தான் வாள்பிமன்
சல்லியனை மன்இளைய தம்பியரை மாமனையும்
வில்லும் கொடிதேரும் வெம்பரியும் சாரதியும்
சின்னம் படஅறுத்தான் சிங்கக் கொடிதரித்தான்

சல்லியனும் உத்தரனும் போரூதல்

தீப்போல் சினந்து மணித்தேர்ஏறிச் சல்லியனும்
வாயுவருளு மகன்மேல் சினந்து வந்தான்
வந்தோனைச் சற்றும் மதீயாமல் உத்தரனும்
தந்தேர் செலுத்திச் சரமாரி வீசிநின்றான்,
வீசும் சரமனைத்தும் மிக்கான சல்லியனும்
பூசற் கணையால் பொடிப்பொடியாய்த் தறித்துவிட்டான்
பத்துக் கணைதெரிந்து பாகுதேர் விற்பொடிய
உத்தரன் ஏவி உருக்கினன்காண் அம்மானை,
ஏறுதேர் வில்நாண் இவுளிகொடி அற்றமையால்
வேறுதே ரேறியைந்து வெங்கணைகள் தான்தொடுத்தான்
ஐந்து கணைதனையும் ஐந்துகணையால் அறுத்து
மைந்துவிலுக் கோர்கணையும் மாப்பாகர்க் கீர்கணையும்
பொற்றேர் உருள்கொடிக்குப் புங்கமோர்[2] மூன்றுவிட்டு
நிர்த்தூளி யாக நிமிடம் அறுத்தெறிந்து
அகலம்புயம் அறுகைக்கு ஆறுகணை செலுத்தி

---

[1] எட்டுத் திசையானைகள்
[2] அம்பு

பகைவ னுடலம் பதைக்க உருக்கினனே
நெஞ்சங் கலங்கி நெடுந்துயரம் மேலானே
நஞ்சஞ் கொள்வேலை நடுங்கி எறிந்துநின்றான்
பாரக் கதிர்வேலும் பாகவன்போல் சீறிவந்து
வீரச் சிரசறுத்து மேதினியில் வீழ்த்தியதே
மத்திரத்தான் கைவேலால் மட்சத்தான் பெற்றெடுத்த
உத்திரனும் உம்பர்உல கடைந்தா னம்மானை.
தானைத் தலைவனுட தம்பிமடிந் தானெனவே
சேனைக் கடல்கள் தெறிகெட்ட தம்மானை.

வீமன் போரிடல்

தன்சேனை வெந்நிட[1]வே சண்டவாயுப் புதல்வன்
முன்சீறி மண்டி முடுகிவந்த சேனையெல்லாம்
தண்டுக் கிறையிவர்கள் தானென்று சீறியெதிர்
கொண்டு வயிரக் கொடுங்கணையால் மொத்தினனே.
ஏறு பரிதேர் இவுளிகரி காலாளும்
நீறுபட நீறுபட நின்றடர்த்தான் அம்மானை
மதகுஞ்சரம் போல வன்கதையால் சாடுதலும்
சதுரங்க சேனை[2] தவிடுபொடி யானதுவே
தேரிழந்து மாவிழந்து செங்கைப் படையிழந்து
போரிழந்து மன்னர் புறங்கொண்டார் அம்மானை.
சிங்கத்தைக் கண்டுடைந்த சிந்துரங்[3]கள் போலாக
சங்கப் படைகள் தளம்புவதால் கண்சிவந்து
நஞ்சரவ கேது நரபதிமாத் தேர்நடத்தி
வெஞ்சினமாய் வில்வளைத்து வீமன்மேல் சென்றெதிர்த்தான்
வலியச் சருவி மதகரிவெம் போர்க்குவந்தால்
மெலிவுத் தரிமயங்கி வெங்கொடுத்துப் போவதுண்டோ
தேரணியும் மாவணியும் சிந்துரத்தின் காரணியும்
பேரணியும் நூறாய் பெருங்கதையாய் மொத்தினனே,
முடிகள் பொடியாக மூசுமணித் தேருடைய
படிகள் அதிரப் பகடு பொடிபடவே
கடிய பரிகாலான் காசினியில் சேறாக

---

1 புறங்காட்டல்
2 நால்வகைப் படை
3 யானை

இடிகள் எனக்கதையா லேயடித்துத் தான்தகர்த்து
சேரப் புடைத்துடைத்துச் சிங்கம்போல் ஆர்ப்பரித்து
வீரப் பெரும்படைகள் வெங்கொடுக்கச் சாடியபின்
சிங்கப் பெருந்துவசத் தேரேறி வில்வளைத்து
அங்குற்ற மன்னவன்மேல் ஐந்தம்பு தானேவி
அரவத் துவசம் அறுத்துவரி வில்வறுத்து

எரியொத்த கோபமுடன் எட்டம்பு தான்தொடுத்துப்
போர்க்கடங்காக் கோமான் புயங்கக் கொடிவீரன்
தேர்ப்பரியும் பாகனையும் சின்னம்பட அறுத்தான்.
தன்பரியும் பாகுமந்த ரித்துவிழத் தண்டெடுத்து
வன்புடைய தேருடைய மாறாமலே யடித்தான்
மன்னன் கிரண மகுட முடியுடைய
சின்னம் படவே சினந்தோ ரடியடித்தான்
தேருடைய, வேறுமொரு தேரேறி வில்வளைத்து
மாருதிமேல் ஐந்துகணை மாறாமல் ஏவினனே
பாசமோ ரைந்தும் படியிற் பொடியாக்கி

ஆசுகம் நாலேவி அகலப்புய நுதலும்
புண்பாய எய்தான் புயங்கக் கொடியோன்நீர்
கண்பாய மேன்மேல் கடும்போர் புரிந்துநின்றான்
மீண்டுமறு தேரேறி வில்வளைத்து நாணேற்றி
கூண் டேரிகளகக் கொடுங்கணைபத் தெய்துநின்றான்
ஈரைந்து ஐங்கணையும் இற்றுவிழ மாற்றியபின்
ஓரைந்து வாளி உரமீ துறவிடுத்தான்
நெஞ்சிலைந்து வாளி நிருபன் விடுத்திடவே
மிஞ்சப் பதினைந்து கணைவீமன் முனைந்துவிட
ஆர[1]ழிந்து காலழிந்து அச்சழிந்து வச்சிரப்போர்

தேரழிந்து நீள்கொடிஞ்சில் சின்னமுற்று மன்னவனும்
போரழிந்து விற்போய்ப் புறங்கொண்டான் மன்னவன்தன்
கூரழிந்த தென்றுபல கொற்றவர்கள் கூறினரே

வீமன் மீண்டும் போருதல்

வாளபிமன் சீறி வளைவில் நிமிராமல்

---

1 வண்டிச்சக்கரத்தின் ஆரக்கால்

கோளரி[1]போல் ஆற்றுமழைக் கொண்டல்[2]போல்
வெங்கணைகள்
சிந்தியே நாலுவகைச் சேனைகளும் நீறுபட
வந்தவந்த சேனை மடியப் பொருதுநின்றான்.
நூறுநூ றம்புவிட்டு நோக்கிவந்த சேனையெல்லாம்
கூறுகூ றாக்கிக் கொழுப்புதிர மூளைகக்கச்
சேறுசே றாக்கிவரு தேர்கள்பல கோடிகளை
நீறுநீ றாக்கி நெருப்பா யெரித்துநின்றான்
புரதகனன் போலப் போர்தொடங்கி நிள்றமையால்
விரதங் குலைந்துபடை வெள்ளம் முறிந்திடவே

சகுனியும் சல்லியனும் மற்றவரும் தோற்றோடல்

சகுனியும் சல்லியனும் தன்தேரும் வில்லிழந்து
இகல்கெட் டலக்கழிந்து யேற்றேங்கி ஓடினரே
ஆசரியும் தேரிழந்து அங்கைவரி வில்லிழந்து
கூச முனையழிந்து கூசாம லோடினனே

துரோணர் மகனும் அருச்சுனன் மகனும் எதிர்த்தல்

பார்ப்பான் மகன்எதிர்க்கப் பார்த்தன் திருமகனும்
கோப்பாய்க் கடும்போர் குறித்துநின்றார் அம்மானை.
விட்டபல வாளியெல்லாம் வெம்போர் புரிந்ததல்லால்
பட்டதில்லை இங்கிவர்மேல் பாணங்கள் ஒன்றெனினும்
வில்லா சரியுடனே மென்துருப தேயனுமாய்
பல்லா சுகங்கள் பனித்தல்போல் வீசிநின்றார்
காரிரண்டு மூண்டதுபோல் கைத்தனுவின் வல்லமையால்
போரிரண்டும் ஒத்துமிரு போர்புரிந்தார் அம்மானை.
சிலவெங் கணைகள் சிறகரிந்து நின்றதுவே
சிலவெங் கணையைச் சிலது பிளந்ததுவே
முனையை முனைகடித்து மூசியட லூடாடி
புனையெண் திசைமுகமும் போராடி நின்றதுவே.
பரியும் பரியும்விசை பாய்ந்துஇகல் மூண்டதுவே
கொடியும் கொடியும் குறித்தாடல் மூண்டதுவே
இடியும் இடியுமென இங்கிவர்போர் மூண்டதுவே
ஒத்திரு வோரும் உரத்துப் பொரும்போரில்

---

1 கொள்ளும் சிங்கம்
2 மேகம்

வெத்தி முனிவனுக்கு வெங்கோப மேலாடி
பரித்தலை தத்திவிழப் பாகன்முடி அற்றுருள
விரித்த கொடிதுணிய வில்துணியத் தேருடைய
மூவைந்து வாளி முறையாக விட்டறுத்தான்
மேவும் சிகண்டியையும் வில்லறுத்து நாணறுத்தான்
தந்தை தமையனையும் தான்வென்ற வாறுகண்டு

திட்டத்துய்மன் போருதல்

சிந்தை கனன்று துஷ்டத்தீய்மன் செருமூண்டு
ஒப்பிலாப் பார்ப்பான்மேல் உக்கிரமாய்த் தானெதிர்ந்து,
தப்பிலா வெங்கணைகள் தான்சொரிந்து மாவறுந்துச்
சாரதியைத் தேர்க்காலைந் தாவுமறைக் கொடியை
ஆருடனே தேரறுந்து அங்கைவரி வில்லிறுத்தான்
தேருடையக் கண்டு சினமூண்டு தேசிகனும்
வாருங்கணை தெரிந்து மற்றுமொரு தேரேறி
நீண்டகொடி தேர்ப்பாகும் நேர்ந்தவரி வில்லறுத்துப்
பூண்ட பரியறுத்தான் போர்வலிய பூசுரனும்
வில்லிழந்து தேரிழந்து மெய்நடுங்கி கைநடுங்கி
வல்லதுஷ்டத் துய்மன் மறுகிப் புறங்கொடுத்தான்

மற்ற மன்னர் போர்புரிதல்

சக்கரதே வன்கலிங்கத் தானுடனே சோழனுமாய்
உக்கிர மாக உறும்போர் புரிந்துநின்றார்
சரத்திற் சரம்பாயச் சாமர்த் தியத்துடனே
கரத்தின் வலியால் கனபோர் தொடங்கிநின்றார்
தாக்காய்க் கலிங்கன் சரமிரண்டு தான்தெரிந்து
வாக்கா லுயர்சோழன் வன்புயத்தில் வீசினனே
தாதகி மார்பன் தடங்கண் மிகச்சிவந்து
நாதவரி வில்வளைத்து நாலாறு வாளிவிட்டு
முன்னான்கு ஏ[1]வால் முடியும் புயந்துளைத்து
சின்னாபின் னம்படவே தேரும் சிலையறுத்தான்
சென்னி[2]சென்னி என்று தெறித்தோடி னான்கலிங்கன்
பின்னுஞ் சிலரைப் புறங்கண்டான் மாசோழன்

---

1 அம்பு
2 சோழன்; தலை

காசிபதி சேரனும்போர் கைகலந்தார் அம்மானை
ஆசுகமும் அம்பும் அடல்மூண்ட தம்மானை
திக்குலகந் தானடுங்கச் சேடன்உடல் நெளிய
மிக்க பலவிதமாய் வெம்போர் தொடங்கிநின்றார்
சிந்துபதி தன்னுடனே தென்னவனும் போர்மூண்டு
அந்தி படுமட்டும் அரும்போர் புரிந்துநின்றார்.
வீமன் மகனுடனே வீறுபக தத்தனுமாய்
ஏம முடனே இகற்போர் தொடங்கிநின்றார்

சகுனி யுடனே தடந்தேர் தனைச்செலுத்தி
நகுலனும் வெம்போர் நடத்திநின்றான் அம்மானை.
பாதாதி கேசம்[1] பகழி[2]துளைத் துருவச்
சாதேவன் சோமதத்தன் தான்போர் தொடங்கிநின்றார்
தீதாய்த் துகிலுரிந்த தீயனுடன்[3] சூரனுமாய்
வாதாகி மேன்மேலும் வர்மித்தே போர்மூண்டார்
பூரிச் சிறாவும் புயவலியும் சாத்தகியும்
நேரதாய் மூண்டு நெடும்போர் தொடங்கிநின்றார்.
பன்னு திசையெங்கும் பகழியாய்த் தானிரைத்து
மன்னுதிரி கர்த்தனொடு மச்சத்தான் போர்மூண்டான்

வரத்தில் சிவனளித்த வண்ணவரி வில்லேந்தி
உருத்திரன் போல உருத்தே சிவேதன்மிக
தம்பியாம் உத்தரனைச் சல்லியனார் கொன்றவிதம்
வெம்பியே கேட்டு விழிகள் நெருப்பொழுக
சேனைச் சலதி செறிந்தே புடைசூழ
மானத் தலைமைசெறி மன்னவர்கள் தற்சூழச்
சீறும் புலித்திரளிற் சிங்கம்நடு வுற்றாற்போல்
ஏறுநிகர் மத்திரத்தான் எங்கெங்கு எங்கெனவே
ஊசி நுழையாது உறமாய் நிறுத்திவைத்த
தூசி கலகலக்கச் சோனைச் சரமாரி

மாறாமல் விட்டு வயப்படையை மன்னவரை
நீறா யிகலடர்ந்து நிர்த்தூளி செய்துருக்கி
சல்லியன் முன்னின்ற தனுவீரர் மன்னவரை

1 பாதம் முதல் முடி வரை
2 அம்பு
3 துச்சாதனன்

வில்லுமுதல் தேரறுத்து வென்றுபுறங் கண்டுசென்று

மந்திரனை எதிர்த்தல்

வல்லியம்ஒத் தஞ்சாத மத்திரன்மேல் உற்றெதிர்க்க
வெல்லுவேன் உன்றனையும் என்றவனும் வில்வளைத்தான்
பழுதற்ற சாபம் படைத்தோன் தனைநோக்கி
எழுவெற்றி வாளி இடிபோல் எதிர்த்துவிட்டான்
விட்டக ணைஏழும் இமைப்பில் பொடியாகக்
கட்டழகன் ஏழு கணையால் அறுத்துவிட்டான்

பத்துக் கணையைப் பதறி அவன்ஏவ
பத்துக் கணையால் படியில் அறுத்துவிட்டான்
நூறு கணையை நொடிக்குள் அவன்ஏவ
நீறு படவே நிமிஷம் அறுத்துவிட்டான்
கொண்டலென நின்றுபல கோடிகணை தான்சொரியச்
சண்ட அனிலன்நிகர் தன்கணையி னால்மாற்றி
போரிலுயர் வில்நாணும் புங்கப் பெருங்கொடியும்
தேருருளும் அச்சினொடு சேரப் பொடித்தெறிந்தான்
தேருடைய மற்றுமொரு தேரேறி மத்திரனும்
வாரமுடன் முன்வருமுன் வன்தேரும் சாரதியும்

கொடியும் கொடிமரமும் கோதிற்கவச மெல்லாம்
பொடிப்பொடி யாகப் பொருவாளி யாலறுத்து
ஆனனமும் அம்புயமும் அங்கைஅக லங்களிலும்
தானுருவு மாறு சரம்விடுத்தான் அம்மானை.
திகைத்து மறுத்துமொரு தேரேறி வில்வளைத்து
பகைத்து வருவோன் பரித்தேர்விற் பாகனையும்
சின்னம்பட அறுத்துத் தேகமயிர்க் கால்தோறும்
மின்னும் பலபகழி வீசிநின்றான் அம்மானை.
மத்திரன் ஏஅத்த வகைகண் டரவுயர்த்தோன்
அத்தவலுப் பின்னோர் அறுவர் தனைவிடுத்தான்

மூவிரு வோரும் முரண்சேனை தற்சூழ
ஏவில் வலியான் எதிர்உற் றிடுமுனமே
கைபிடித்த வில்லும் கடுந்தேரும் பாகுருளும்[1]
நொய்ப்பொடி யதாக நொறுக்கிஅவர் அங்கமெல்லாம்

---

1 சாரதியும், தேர்ச்சக்கரமும்

புண்ணாகி வந்த புணரிப் படைகளெல்லாம்
மண்ணாக்கிச் சேறாக்கிச் வாளிமழை சிந்திநின்றான்
இங்கிவன் அம்புக்கு இரையான பேர்களவ்லார்
அங்கவர்கள் பஞ்சுபஞ்சாய்ப் பறந்தார் அம்மானை.
பஞ்சுபோற் சேனை பறக்கஇரா[1] சன்பார்த்து
வஞ்சமிலாக் கங்கை மகனறியத் தானுரைத்து
இப்போ தவன்முகத்தில் ஏகா திருந்தாயேல்
தப்பாதென் சேனையெல்லாம் தானறுப்பான் என்றுரைத்தான்.
என்றமொழி கேட்டு இகற்சண்ட மாருதம்போல்
அன்று விசையாய் அணித்தேர் தனைநடத்தி
ஓரெட்டு வாளி உரத்துவிட்டான் அம்மானை.
ஈரெட்டு வாளிவிட்டு ஏவறுத்து வில்லறுத்துச்
சாரதியை மாவைத் தடந்தேர்ப் பனைக்கொடியை
ஊருருளை தானுடைத்து ஓரிரண்டு மெய்யில் விட்டான்
சித்திரம் போலத் திகைத்திடைந்து மூச்செறிந்து
சத்திரியர் சிங்கம் தவிர்த்துமறு தேர்ஏறி

சிவேதனனைத் தாக்கல்

மன்னு சிவேதன் மணிமுடியைத் தானறுக்க
வின்ன மிலாத விரற்கணைஒன் றேவினனே
ஏவுங் கணையை இமைப்பில் பொடியாக்கித்
தாவும் பரித்தேர்க்கால் சாரதியும் புற்கொடியும்
வில்லு வடந்[2]துணிய மெய்துளையக் கைதுளைய
பல்லம்பு தான்விடுத்தே பார்த்து நகைத்துநின்றான்
சிந்தை கலங்கி திகைத்துமறு தேரேறி
மைந்துவரி வில்வளைத்து வாளிமுப்ப தேவினனே
ஆறைந்து வெங்கணையும் அற்பம் எனப்பொடித்து
வேறைந்து நான்குசரம் விட்டுவிரற் கொடியும்
தேரும் தனுவும் திகிரி பரிபாகும்
நேரில் நிமிஷமதில் நிர்த்தூளி செய்துநின்றான்
என்ன மவர்செய்வது இனிமேல் எனவெருண்டு

உரகசேனன் துணையாதல்

மன்னன் அயர்ந்தளவில் வாளுரக கேதனத்தான்
என்சேனை நாதன் இளைத்தான் சுவேதனுக்கு
மன்சேனை வீரர் மகிழ்ந்துதவும் என்றுவிட்டான்.

---

1 துரியோதனன்

2 கயறு

தன்னை யொழியவிறல் தம்பியரை மன்னவரை
பின்னும் துணையாய்ப் பிதாமகன்மேல் விட்டனனே.
ஆர்கலியை ஒத்த அனீகமு[1]டன் மன்னவர்கள்
தேர்பலவுங் கொண்டு செருமினர்காண் அம்மானை.

வந்தவந்த மன்னர் மணித்தேரும் வில்லுடைய
சிந்தை கலங்கச் சிலீமுகங்கள்[2] தான்ஏவி
அங்கமிகு பங்கமுற ஆவி பதைபதைக்க
சிங்கமென ஆர்த்துச் செருச்செய்து அறுத்தனனே

துரியோதனன் நம்பியர் துன்புறல்

நாகக் கொடிவேந்தன் நம்பியர்கள் எல்லோரும்
வேகக் கொடித்தேரும் வெஞ்சிலையும் தானிழந்து
சாபஞ் சரமாகத் தங்களுடல் புண்ணாகிப்
பொரஅஞ்சி எஞ்சிப் புறமிட்டா ரம்மானை.
கிருபன் கிருதனுமாய்க் கிட்டி யமர்புரிந்து
வரிவிற் கொடிதேர் வலவன் பரியிழந்து

மெய்க்காயங் கொண்டுதிரு மெய்போர்த்துச் சோரியினால்
மைக்கார் முகன்கணையால் மாறிவெருண்டு ஓடினரே.

துரோணர் முதலியோர் பின்னிடல்

விற்குருவும் தேரிழந்து வில்லிழந்து சொல்லிழந்து
நற்கொடியும் தானிழந்து நைந்துபுறம் இட்டனரே
கங்கைமகன் மற்றுமொரு கார்முகமும் தான்வளைத்து
சிங்கமென மற்றுமொரு தேர்ஏறி யேஉறுக்கிச்
கங்க[3]மொரு பத்துக் கடுத்துவிட்டா னங்கதையும்
பங்கப் படநறுக்கிப் பாசம்ஒரு நாலேவி
நீண்ட பனைங்கொடியும் நீள்தேரும் வில்லறுத்து
பூண்ட பரியும் பொடித்தே உறுக்கினனே

மேலாடும் வீரியனை விண்ணோரும் மண்ணோரும்
கோலா கலனிவனே கொற்றமுள்ளான் என்றுரைத்தார்.
வானோர் இவையுரைக்க மந்தா கினிகுமரன்

---

1 சேனை
2 கூரிய அம்புகள்
3 தீவாய் அம்பு

தானே திகைத்துத் தயங்கியே மூச்செறிந்து
நின்றோன் இனிப்போர் நிலைப்பேது எனக்கலங்கி
இன்றே இவனை எவர்செயிக்க வல்லாரெனத்
தருமன் தனைச்சூது தான்முன்சந் தித்ததுபோல்
திருமன் சிவேதன் சிலைதானஞ் சந்தித்ததென
சூதிலே ஐவர் துயருற் றதுபோல
மோதமரில் நூற்றுவர்கள் மோசப் படுவதுமெய்

என்றெண்ணி எண்ணி இனியேது செய்வதென்று
நின்றுன்னு வோன்முன் நிருபர்கோன் பின்னோர்கள்
சங்கரன் ஈந்த தனுவால் சுவேதன்வென்றான்
அங்கது மாறு அதுக்கோர் உபாயமதாய்ச்
சொல்லினால் வென்று துரோணன் தனையொழிந்து
வெல்லுநீ என்றுரைத்தால் வேறாயுத மெடுப்பான்
அந்தச் சமயம் அறம்நீதி பார்க்காமல்
சிந்தப் போர்செய்தால் சிவேதன் உயிரிழப்பான்
வஞ்சனை யன்றி மகவான் பொருதாலும்
துஞ்சிலான் வஞ்சனையில் சோர்ந்திடுவான் என்றலுமே

சிவேதன் போர்

அவ்வாறு மெய்யென்று அணித்தேரின் மீதேறி
ஒவ்வாத வீரா உனக்குவரி வில்லொழிய
மற்றப் படைவிசயம்[1] வாராதோ வெய்யோனே
உற்ற படைவேல் உயித்தமுண்டால் செய்திடென்றான்
விருத்தன் உரைத்த விகடம்[2] தெரியாமல்
திருத்தமுடன் கரத்தில் செவ்வாள் தனைஏந்தி
குன்றனைய தேரைவிட்டுக் கோளரியைப் போல்பாய்ந்து
சென்றவனை வஞ்சனையாய் தீயகொடு மதியாய்
பாதக மாகப் பகர்சிலையை நாணேற்றி
தோதக மாகச் சுடர்வாளி ஒன்றேவி

நாட்டமும் கையும் நறுக்கியே வீழ்த்திவிட்டான்.
மீட்டும் இடக்கரத்தில் வெவ்வாள் தனையெடுத்து
சீயமெனப் பாயுமுன்னே தீயமதி வீடுமனும்
காயுங் கடுங்கணையைக் கந்தரத்தில் விட்டறுத்தான்

---

1 வெற்றி
2 பரியாச உரை

பூட்டும் பணிதிகழப் பொன்மேனி புழுதியுறத்
தீட்டுபுக ழானுடலம் செங்களத்தி லேகிடப்பச்
சந்தமுறும் புஷ்பமழை தான்வான வர்சொரிந்து
அந்தர துந்துபியும் அன்பாய் முழங்கியதே

ஆழி பரந்துலகம் யாவும் பரந்ததுபோல்
வாழி பெருஞ்சேனை மண்டியே ஆர்ப்பரித்தார்

பஞ்சவன் சேனைப் பரவை[1] நடுநடுங்கச்
சஞ்சல முற்றே தயங்கியே சொல்லலுற்றான்
வஞ்சனை யான மகாபாவி யைச்சேர்ந்து
நஞ்சனைய துர்க்குணங்கள் நாடினான் கங்கைசுதன்
செத்தவனைப் போலாகத் தெய்வவிர தன்பதைக்க
நத்தனுவைத் தேர்க்கொடியை நாலுதரம் ஆறுதரம்
சின்னம் படஅறுத்தான் சேனாபதிக் குமரன்
பின்னுங் களுக்குமொரு பீடேன்[2] பிரபலமேன்
வாயேன் தயிரியமேன் வன்மைகளேன் வின்மைகளேன்
சேயன் பொரும்போர்க்குச் சிந்தைநொந்தீர் கெட்டுடைந்தீர்

வஞ்சனை செய்தீர் மாபாதகஞ் செய்தீர்
துஞ்சுவர்கள் மேற்சிலையைச் சோராது போட்டதொத்தீர்
மெய்யிருக்கக் கையிருக்க மிக்க உயிரிருக்க
வையமதில் கங்கைமகன் மாண்டான்உ காந்தமட்டும்
கொற்றந் தவறாத கோமான் சிவேதனுமே
செற்றும்சா காதபெரும் சீர்த்திபெற்றான் எந்நாளும்
சிறைத்துப் பிழைப்போர்கள் சென்னியறுப் பதுபோல்
நரைச்சுப்பி லச்சை கெட்டான் ஞாயமில்லான் கொன்றுவிட்டான்
ஓயா விரகும் ஒழியாத வஞ்சனையும்
தீயோரே நீங்கள் செயுங்கொடுமை எங்குமுண்டோ

வானவர்க்கும் ஏற்றிடுமோ மானிடர்க்கும் ஏற்றிடுமோ
ஈனருக்கு மேறா திதுவோ சவுரியங்கள்
இந்தச் சவுரியத்தை என்னென் றெடுத்துரைப்போம்
அந்தத்தில் உங்களுட ஆண்மை தெரியுமென்றார்.
வீரத்தில் மிக்கோர்கள் வெய்யோன் படுமளவும்
பாரித்து வர்மமுடன் பல்லுயித்தம் செய்தார்கள்

1 கடல்
2 பெருமை

வில்லா யிரங்கரத்தின் வெய்யோன் படுகளத்தின்
உல்லாசச் செந்நீர்[1] உததியிலே[2] மூழ்கியபோல்
அத்த கிரியில் அடைந்தான் அருக்கனுமே
கொற்ற முடைய குருச்சேத் திர நிலங்கள்

போர்க்களக் காட்சிகள்

எங்கும் பெருகி இரத்தங்கள் ஆறோட
பொங்கி விசையாய்ப் பொருந்தீச் சுழலாட
தேருங் கரியும் திரள்பரியும் காலாளும்
நேரும் பெருஞ்சுழலில் நின்றெழும்பி உள்ளமுங்கி
தருக்கள் பலபேர்ந்து தான்சுழலின் ஒத்தோட
பெருக்கு மலைபோலப் பிணங்கள் கரையாக
மூளைப் படலம் முழுதும் நுரையாக
நீள வுயிர்பிணங்கள் நேர்மீனைப் போலாக
கொடைகள் மிதக்கக் கொடிகே டயம்மிதக்க
துடிகள் முரசினங்கள் சோராம லேமிதக்க

இந்தப் படியாய் இசைந்து களஞ்சிறந்தால்
எந்தப் படிஎன்று இறந்தோர் துகையுரைப்பாம்

இருபக்கமும் இறந்தோர் பலர்

அந்தப் படவே அடர்ந்த இருபடையும்
தந்தம் படைவீடு தான்சேர்த் தார்பஞ்சவர்கள்
சேனா பதிமடிந்த சேதத்தாற் பஞ்சவர்கள்
தானா சமுத்திரமும் தார்வேந்தர் வீரர்களும்
பாடி யுறைந்ததற்பின் பஞ்சவரும் மாயவரும்
ஓடி விராடன் உறைவிடத்தில் சென்றுபுக்கு
மைந்தர் இருவரையும் மண்டமரில் இன்றிறந்தாய்
சிந்தைக் கலக்கமெல்லாம் தீர்த்தருள்நீ என்றுரைத்துக்

கங்கைமகன் விற்குருவை காவலர்கள் பற்பலரை
வெங்கைவரி வில்லாலே வெங்கண்டான் நுங்குமரன்
வில்லொழிய வாளெடுக்க வெவ்விரகாய்ச் சொற்றமையால்
செல்வ னுயிரிழந்தான் தீரர்சி ரோன்மணியாய்
என்னமால் சொல்ல எழிலியன்னான் ஏதுசொல்வான்

---

1 இரத்தம்
2 கடல்

மன்னர் வெருக்கொளவே வன்போர் மிகத்தொடங்கி
என்னுயி ரன்ன இருசேயரும் இறந்தார்
என்னுயிர் தாமவனுக் கீயாது யார்க்களிப்பேன்
உன்னுயிர் போல உலகும் உலகிலுள்ள
மன்னுயிரெல் லாங்காக்கும் மன்னர்மன்னா என்றுரைத்தான்.

விருத்தம்

பேய்செய் யரங்காம் பெருங்கான் திரிந்தோர்க்கு
தாய்செய் யுதவி தனிலுமிகச் செய்தாயுன்
சேய்செய் யுதவியின்னம் தேவர் துதிக்கில்
நீசெய் யுதவிக்கு நிகர்செய்தார் யாவரென்று

நடை

அறங்கொண்ட சிந்தை அரசன் எறிகோலான்
திறங்கொண்ட சொல்லோதிச் சென்றே துயிலுணர்ந்தான்
எப்போ விடியும் எனப்பஞ் சவர்உறங்க
வாய்ப்பான போர்பார்க்க வெய்யோன் குணக்கெழுந்தான்
போராம் முதல்நாளின் போர்ச் சருக்கம்முற்றியபின்
ஈராம்நாள் போரை எடுத்துரைப்போம் அம்மானை.

சிவசிதம்பரம் முன்னிற்க. வீரய்யன் தருமராசாக்கள் முன்னிற்க வேண்டியது.

(இரண்டாம் நாட் போர்ச்சருக்கம்)

கண்ணன் திட்டத்துய்மனைச் சேனாதிபதியாக்குகிறார். இருபடைகளும் களத்தில் கைகலக்கின்றன. தருமன், தம்பியரோடும் திட்டத்துய்மனோடும் களத்தில் அணிவகுத்து நிற்கிறான், வீடுமர் அணிவகுத்து துரியோதனனோடு நிற்கின்றார் திட்டத்துய்மன் துரோணரோடு போர் செய்து பின்னிடுகின்றான். அதுகண்டு வீமன் துணைக்கு வருகிறான். அவனைச் சக்கரத்தேவன் எதிர்க்கிறான். யானைப் படை வீமனால் அழிக்கப்படுகிறது. வில்லேந்தி வந்த சக்கரத்தேவனும், அவன் மைந்தர்களும் போரில் மாள்கின்றனர். அதுகண்டு வீடுமர் வீமனோடு போர் செய்கின்றார். இருவரும் ஒத்துநிற்கும் நிலையில், அபிமன் துணைக்கு வருகின்றான். இருவரும் வீடுமனை வளைத்துப் போர்புரியும் போது, துரியோதனன் பல மன்னர்களைத் துணைக்கு அனுப்புகிறான். அதனால், அருச்சுனன், வீமன், அபிமன் ஆகியோர்களுக்குத் துணையாக வருகிறான். வீடுமன் படை பின்னடைந்து பாசறை செல்கிறது. மாலை தோன்றியவுடன் இருபடைகளும் பாடிவீடு சேர்கின்றன. பின்னிட்டு வந்த அரசர்களைத் துரியோதனன் அச்சுறுத்துகிறான்.

எந்தஎந்த யோனி தோறும் எங்குமெங்கு முள்ளவன்
அந்தஅந்த யோனி தோறும் ஆவி யான வண்மையை
சிந்தை யின்கண் ஓர்கணத்தில் நிகழுமாறு தேவர்கோன்
மைந்த னுந்திடப் புகன்ற வள்ளல் தாள்வ ழுத்துவாம்.

தருமராசாக்கள் வீரய்யன் துணை
சிவமயம்

சேரார்கள் சிங்கம் சிவேதன் முதல்நாளில்
போரால் மடிந்ததற்பின் பின்பிரண்டாம் நாளையிலே

திட்டத்துய்மன் படைத் தலைவனாதல்

சோனைபோல் வாளிசொரி துஷ்டத் தூய்மனையே
சேனைநா தத்தலைமை செய்தான் திருநெடுமால்.
ஐவர்தனை சேனை அடல்கொண்டே இங்கெழுந்த
தேவவர தன்[1]சேனை திடங்கொண்டே அங்கெழுந்த

இருபடையும் கைகலத்தல்

பவ்வ[2] மிரண்டு படர்ந்தெதிர்ந்து மூண்டதெனக்
கவ்வை யுடன்போரில் கைகலந்த தம்மானை.
எண்ணிலாத் தேரோடும் இடத்திற் சகாதேவன்
வண்ணமா மாரனுடன் மற்றோருப் உற்றுவர

வலத்தின் நகுலன் வளவன் மலைக்கோமான்
மலச்சது ரங்கப் பெருஞ்சேனை தற்சூழ
நடுவில் அறஞ்சேரும் நாயனும் தான்வரவே
கடக வியூகம்[3] கருதியே தான்வகுத்து
ஐவர்கள் சேனைக்கு அதிபன் அதிரதமேல்
பைவிரவு சர்ப்பப் பகைக்கருடன் ஒத்துநின்றான்.
முற்படவே கங்கைதரு மொய்ம்பன் புகழ்பரவும்
விற்குருவைச் சேயை விரற்பூரி யைநிறுத்தி
பின்னும் இடம்வலமும் பேரான மன்னவரை
துன்னுங் கடற்படையைச் சோராமலே நிறுத்திக்

வீடுமன் விசயன் போர்

கொண்ட [4]லுடன்கோடை[5]யெனக் கோவீடு மன்விசையன்

---

1 துரியோதனன்
2 கடல்
3 கீழ் காற்று
4 மேல்காற்று
5 சமநிலையில்

மண்டலமாய் வில்வளைத்து வாளிமழை வீசினரே
அந்தரமும் எண்டிசையும் அம்புமய மாய்நிறைத்து
கந்தரமு மிரண்டுநிகர் கைமாறா தேசொரிந்தார்
ஆசாரி தன்னுடனே ஐவர்சே னைத்தலைவன்
கூசாது மேன்மேல் கொடுங்கணைகள் வீசினரே
சரமுஞ் சரமும் சமர்மூண்ட தல்லாமல்
ஒருவர் உடல்தனிலும் ஓர்சரமும் தைத்ததில்லை
ஒற்றுப் போர்செய்ய உரத்து முனிவெகுண்டு
கொற்றக் கணையால் கொடியறுத்தான் அம்மானை.
வீரன் கொடியறுத்த வெற்றிமுனித் தேர்க்கொடியைத்
தீரத் துடனறுத்துச் செய்யபரி பாகறுத்தான்
உற்ற கொடித்தேர் உடையமுனி சினந்து
மற்றுமோர் தேர்ஏறி மணித்தேர்ப் பரிபாகும்
நீறு படுத்தி நெருப்பாய் அடர்ந்திடவே
மாறுபட்டு நெஞ்சழிந்து மன்னன்முது கிட்டனனே.

இருசாராரும் பொருதல்

மைந்தன் புறங்கொடுக்க வல்ல துருபதனும்
அந்தணன் மீதில் அமர்மூண்டார் அம்மானை.
பூரிச் சீறாவும் புயவலிய சாத்தகியும்
ஆர பாரித்து அமர்மூண்டார் அம்மானை.
அச்சுவத் தாமா அபிமனுமே போர்மூண்டு
உச்சிதமாக உறுபோர் தொடங்கி நின்றார்
சகுனி சகாதேவன் தான்போர் தொடங்கிநின்று
இகலொத்து அமராடி எண்ணிரண்டு வெங்கணையால்
தேரும் பரியுமந் திறற்பாகும் அச்சுருளும்
வீரத் தனுவும் விற்கொடியும் தானறுத்து
அகலம் புயமுருவ அம்புசில தான்விடுத்துச்
சகுனி வெருண்டோடத் தாக்கினன்காண் அம்மானை.
சூதாற் பெரியோனும் தோற்றார்ப்பின் சல்லியனும்
சாதேவ னும்போரில் தான்மூண்டார் அம்மானை.
வீரப் பரிநகுலன் மிக்க கிருபனுமாய்
கோரத் துடனே கொடும்போர் புரிந்தனரே.
நீதிசெறி சோழனுட னேயதிரி கர்த்தனுமாய்ச்
சோதிவிழி தீயுகவே சோராது போர்மூண்டார்
வில்லவனும் காசிபதி வேந்தனுமே போர்மூண்டார்.

வல்ல செழியனுடன் மாகதனும் போர்மூண்டார்
சிகண்டி விகர்ணனுடன் சீறி அடல்பொருதார்.
மீகுந்த பலதேச வேந்தர்களும் வேந்தர்களும்
புகைந்து புகைந்து கடும்பூசல் தொடங்கிநின்றார்
மகுட பதி[1]யுடனே மகுட பதிகளுமாய்
விகடமுடன் கொடும்போர் வீசிநின்றார் அம்மானை
பட்டம் பொறுத்தோரும் பட்டம் பொறுத்தோரும்
கட்டு மட்டாகக் கடும்போர் புரிந்துநின்றார்.
சத்துவ மிக்கபகை தத்தனுடன் வீமனுமாய்
சுத்தமுடன் வெம்போர் தொடங்கிநின்றார் அம்மானை

பகதத்தன் வீமன் கொடிஅறுத்தல்

ஒற்றுப் பொருதி உரத்தபகை தத்தனுமே
கொற்ற வயவீமன் கொடிதேர்ப் பரியறுத்தான்
தேருடைக் கண்சிவந்து சிங்கம்போல் ஆர்ப்பரித்து

வீமன் செயல்

மேரனைய தண்டெடுத்து வீசினன்காண் அம்மானை.
இடியொத்த தண்டின்அடி ஏற்றமணித் தேர்ப்பாகும்
பொடிபட் டிடத்திகைத்தான் விழுந்தான் பெருந்தளத்தில்
தேர்கள் பலபொடியச் சிந்துரங்கள் மெய்நசுங்க
தேரும் பலபரியும் நிர்த்தூளிச் சேறாகப்
பரவைப் பதாதிப் படுகளத்திற் பங்கமுற
உரமுற்ற தண்டுகொண்டு ஊடாடிச் சாடிநின்றான்
படைகொண் டிவன்சாடப் பட்டவர்கள் அல்லாதோர்
உடைகின்ற வெள்ளநிகர் ஓடலுற்றார் அம்மானை.
தடையின்றி ஓரிடத்தும் தங்காதே ஓடுவதை

கலிங்க மன்னர் வீமனை எதிர்த்தல்

வடகலிங்கப் பெருமான் வாரணத்தின் கூட்டமுடன்
ஓர்கிரியைக் கார்வரைகள் ஒப்பரவாய்ச் சூழ்ந்ததுபோல்
கார்கரிகள் வீமனையே கம்மி வளைத்தனவே
மதித்து வளைத்ததிறல் வாரணத்தி னுட்புகுந்து
துதிக்கையைப் பற்றிச் சுழற்றி எதிர்ந்தனனே.

1 முடியுடை மன்னர்

கரிக்குலங்கள் எல்லாம் கடுத்துக் கடுத்தெறியப்
பொரிக்குலம்போல் புட்கரம் எங்குமே பரந்த
பன்னாள் அனுமன் பறித்தெறிந்த நாகமென
இன்னாளில் வீமன் இபம்எறிந்தான் அம்மானை.
மேலே எழும்புவதும் மீயில்நின்று வீழுவதும்
காலேறு மண்டலத்தில் காணச் சுழல்வதுமாய்ப்
பருப்பதம் முன்னாள் பறந்தே திரிந்ததுபோல்
கரிக்குலம் மேன்மேல் கதித்தே பரந்ததுவே
சிந்துவில் ஓடித் திரிவங்க வர்க்கமென
அந்தரம்[1] எங்கும் அடர்ந்திபங்கள் ஓடியதே
பூவில் மருப்புப் புதைய விழுங்கரிகள்
தாவுகடல் வண்டல்கொண்ட தந்தியினம் ஒத்ததுவே
மேக படலம் விரவிக் களக்கடலில்
மோகமுடன் கவிந்த மொய்ம்புபோல் ஒத்ததுவே
விகடன் வடகலிங்க வேந்தனுடன் சேர்ந்தவரும்
இகலுற்ற வீமன் இடிக்கதைக்குத் தானிரையாய்
மன்னர சரோடு மகனும் பெருந்தளமும்

சக்கர தேவனும் மகனும் மடிதல்

தன்னிகரில் லாதசக்கிர தேவனுமே தான்மடிந்தார்
சக்கிர தேவன் சமரில் மடிந்ததற்பின்
உக்கிர மாக உயர்வீம சேனனுந்தான்
சாடினான் தேர்கள் தவிடு பொடியாக
நீடுங் கரிபரியும் நீறுபட்டுச் சேறாக
காலாளு மேலாள கதையடியில் மையாக
கோலா கலவீமன் கொற்றமுடன் மொத்தினனே
மண்கலத்தின் குப்பலிலே வாரணங்கள் பூந்தாப்போல்
கண்கலக்கப் பட்டுடையக் கால்குமரன்[2] வீசுதலும்
தரிப்பத்து வெள்ளச் சலதிப் பெரும்படைகள்
நெருக்குற் றணிமுறிந்து நேருடைந்த தம்மானை.
அணிகெட்டுச் சேனை அலைந்தே குலைந்தோட

வீடுமன் வீமனை எதிர்த்தல்

தனிவற்ற வீடுமனும் தன்னிருகண் ணேசிவந்து

1 ஆகாயம்
2 வீமன்

தாமனூரு மந்தேர்த் தனஞ்செயனை விட்டகன்று
வீமன்மேல் தேரை விரைந்துவிட்டான் அம்மானை.
வருணன் மகன்வரவே வாயுதே வன்குமரன்
உரமுற்று ஒருதேரில் உக்கிரமாய்த் தானேறி
மூதாதைக்கு இன்றே முடிவென்று ஒருவேனல
வேதா கமத்தோடும் வீசினான் வெவ்விடம்போல்
மருமத்துக் கொப்பவரும் வேலைப் பொடியாக
பொருவுற்ற தேர்மரத்தால் புற்கொடியொன் றால்மாற்றிப்
பரித்தலை நாலுருளப் பாகன்முடி யற்றுருள
அரித்து சமத்துவிழ ஆவொடிய மச்சொடிய
உருள்கள் பலபொடிய ஒண்களைகள் எய்தறுத்தான்
வின்னம் படுந்தேரை விட்டுக் கதையெடுத்து
சின்னம் படத்தேரில் சென்றடித்தான் அம்மானை.
பற்ப மெனத்தேர் பல்பொடியாய்ச் சிந்துமுன்னே
வெற்பனைய வீடுமனும் வேறுதேர் மீதேறி
வாயு குமாரன் மயிர்க்கால் தொறும்வியர்ப்பாய்
தேயு வனையான சிலைவாளி யால்நிறைத்தான்
முன்னேறிச் செல்ல முயற்சியில்லாது உளம்நடுங்கிப்
பின்ஏக நாணிப் பிரசண்ட மாருதமாய்
நின்றவிடத் தைவிட்டு நீங்கி வலம்பாய்ந்து
வென்றி யுள்ளசேனை வெருக்கொள்ளத் தான்பொருதான்

துரோணர் மகனும் அபிமன்னனும் பொருதல்

ஆசாரி மைந்தனுடன் ஆணழகன் வாளபிமன்
கூசாது வெம்போர் கொடிதாகத் தான்மூண்டு
ஒற்றாடல் செய்து உயரபிமன் தன்கணையால்
நிர்த்தூளி யாய்த்தேர் நிலைகெட் டிடவுடைத்துப்
பாகன் பரியறுத்துப் பாரச் சிலையறுத்தான்
வேகமுடன் அங்கவனும் வேறொருதேர் மீதேறி
கொல்வேன் எனவே கொடுங்கார் முகம்வளைத்து

அருச்சுனன் எதிர்த்தல்

செல்வோன் எதிரே சிலைவிசையன் தானெதிர்த்தான்

---

1 வில்

பார்த்தன் முனையப் பரித்தாமனும்[1] முனைந்து
கோத்த கணைமழையால் கோவுலகெல் லாம்புதைந்து
வீரத்தின் மிக்கோர்கள் வெல்லாமல் தாளாமல்

அபிமன்னன் செயல்

பாரித் தமர்பொரவே பார்த்தன் திருக்குமரன்
அம்முனை விட்டு அடரும் வடவை[2]யைப் போல்
வெம்முனை வாளி விடுத்தே சரமழைபோல்
நெஞ்சுருவ வாயுருவ நேத்திரங்கள் தட்டுருவ
மிஞ்சு நுதலுருவ மிக்கசிரம் நகைத்துருவ
மிக்க அவயவங்கள் மீதெங்கும் தட்டுருவத்
தக்க சரம்விடுத்துத் தானைக் கடலுடைய
உகசண்ட மாறாத மோடுஒத்த வடவையெனத்
தொகைகள் அடங்காத துரைமன்னரைத் துணித்து
வடங்கள்[3] பலதுணித்து வாரம் பலதுணித்து
சடங்கள் பலதுணித்துத் தாவும் ரதாந்துணித்துத்
தேரைக் கொடியறுத்துச் சிந்துரங் களைத்துணித்து
பேருற் றடலில் பிணங்கள் பலகுவித்துச்
செந்நீர்ப் பிரளயங்கள் திக்கெங்கும் ஆறோட
அந்நீரின் மேற்பிணங்கள் ஆனைதேர் தான்மிதக்க
மற்றுள்ள சேனைகளும் மன்னவரும் வெங்கொடுக்க
கற்றுள்ள பேர்கள் கலங்கியே மெய்மறந்தார்
துடந்துதுடர்ந்து துடந்தார்ப் பரித்து வாரதுவும்
உடைந்து பெருஞ்சேனை ஓரட்டாய் ஓடுவதும்

வீடுமன் கண்டு வியத்தல்

பார்த்துத் திகைத்துப் பகிரதியாள்[4] புத்திரனும்
சீற்ற மடக்கிச் செயவிசையன் புத்திரன்தன்
கையின் விசையும் கணைவிசையும் வில்விசையும்
எய்யுங்கணை எண்டிசை வெளியும் தூர்த்ததுவும்
கண்காட்சி யாசக் களிகூர்ந்து தான்பார்த்து
மண்காத்த சந்தனுவின் மைந்தன் அதிசயித்து

1 அசுவத்தாமனை
2 வடவாமுகாக்கினி
3 வில்நாண்
4 கங்கை

வீடுமன் மீண்டு வெகுண்டு அபிமனையே
நாடி வரவே நரவீரி யன்குமரன்
என்னாண்மை தன்னைமனத்து எண்ணாமல் நீவிருத்தன்
முன்னாண்மை கொண்டுவந்து மோசப் படலாமோ,
பேசாமல் ஓடிப் பிழைத்திடாய் ஆமாகில்
கூசாமல் உன்சிரசு கொய்வேன் எனஉரைத்தான்
மதிப்பற்ற வில்விசையன் மைந்தன் மொழிகேட்டு

வீடுமன் கூற்று

நதிபுத் திரனும்[1] நகைத்துநகைத் தேதுசொல்வான்
வழுக்கைப்[2] பயல்நீ மதியாது என்னுடனே
இழுக்குற்று இவைபகர்ந்தாய் இப்போ கிழவனுட
வல்லாண்மை தன்னை மதிப்பாகப் பார்த்திடென்று
வில்லாண்மை வல்லான் விரைந்தே இரண்டுகணை
மார்பு பதியவிட வண்கணையும் தைத்திடவ
தார்பரவும் வாளபிமன் தான்பார்த்து எதிர்நகைத்து
கெடுத்தாய் கெடுத்தாய்நின் கேண்மையெல்லாங் கீழாக
முடித்தாய் முடித்தாய் முரணற்றாய் மூதாதாய்
விருத்தர் பலயீனம்[3] மெய்யாக்கி விட்டாயே
உரத்தில் பதிந்ததல்லால் ஊடுருவ விட்டிலையே
பத்திரமாய் நில்லு பதனம்[4] எனக்கொடிய
அத்திரம் நாலு அவன்மேல் இழுத்துவிட்டான்
நாலு கணையும் நடுமார்பு தட்டுருவே
கோலுஞ் சிலைபோட்டுக் கும்பிட்டே வாளபிமன்
என்னை வழுக்கை எனப்பகர்ந்தாய் மெய்யாச்சு
உன்னை விருத்தனென ஓதினனே புத்தியிலேன்
என்றிவன் சொல்ல எழில்வீ டுமன்பார்த்து
வென்றிநீ ய்தகணை வெந்உருகி யேயோட
சாடை பகருவதேன் தன்னைப்போல் என்னையும்நீ
பீடுடையோன் பெற்றெடுத்த பேராளா என்றுரைத்தான்
ஒப்பிலா னெய்த உபயகணை மார்பிலுற

1 வீடுமர்
2 இளஞ்சிறுவன்
3 வலிவற்றதன்மை
4 பத்திரம்

அப்பவே மேனி அயர்ந்தேன் நா னெய்தகணை
கால சூலத்தைக் கடுக்கும்அம் குன்கரத்தில்
வேலை நிகர்க்கின்ற வெய்யகனை நின்மார்பு
தட்டுருகிப் போயும் தரிப்பற் றுயிர்ஓட
கிட்டி நின்றாய் உன்மெய் கிளரும்வயிரமதால்
பஞ்சை வழுக்கைப் பயலென்றாய் தப்பிலேன்.
இஞ்சொல்லைக் கேட்டு இவன்வீரன் வீரனென்று

சீயத்தின் குட்டிவிறல் சீயமல்லால் வேறுமுண்டோ
காயுத்தில் இந்தக் கரவிசைகள் பெற்றிருந்தும்
தாதைக்கு மூதாதை தானாம் முறைமையினால்
வாதுற்ற போரில் வழிபா டிவன்உரைத்தான்.
என்றெண்ணிச் சிந்தை இரங்கியே அன்புருகி
அன்றெண்ணிச் சொன்னேன் அறிந்திலான் மாபாவி
இந்திரன் பெற்ற இளவலொடு பஞ்சவரும்
அந்திறம் பெற்ற அரவக் கொடியோனும்
ஒன்றா யிருக்கில் ஒருசேதம் வேறுமுண்டோ
தன்தா ரரசரிவர் தங்களுக்கு ஒப்புமுண்டோ

பதத்தால் உயர்ந்தபல பாக்கியங்கள் செல்வமெல்லாம்
மதத்தால் அழியவரும் விதியார் வெல்வரென்று
எண்ணிய வண்ணம் இளவற் குரையாமல்
திண்ணிய நின்வீரம் செப்பிஎன்னைச் சாடைசொன்னாய்
திக்கு விசயம் செலுத்தினோன் மைந்தனென்றால்
தக்க சமர்முகத்தில் தாழ்ச்சிசெய்யக் காரியமேன்
பிளந்தெறிவ தல்லால் பெரும்பாரம் தாங்கியகல்
தளர்ந்து வளைவதுண்டோ தான்சொல் எனக்கேட்க

வீடுமன் அபிமன் போர்

வில்லு வளைந்தவிதம் நீயறி யாயோ
கொல்லுவே உன்னைஎன்று கோபித்தான் வாளபிமன்

வெற்றிமன்னன் சேய்வெகுள வீடுமனும் வெய்யகணை
உற்று நாலம்பு ஊரத்துவிட்டான் அம்மானை.
நாலுகணை எட்டாக நாலுகணையால் தறித்தான்
கோலியே எட்டுக் கொடுங்கணையை மீண்டேவ
எட்டுக் கணையாலீ ரெட்டாக வேபிளந்தான்
தட்டுடையான் பத்துக் கணைதொடுத்தான் அம்மானை.

பத்துக் கணைதனையும் பற்பமுறப் பொடித்து
சத்திப் பனைங்கொடியைத் தானறுத்தான் நால்கணையால்
கோழைப் பயலோ கொடியறுப்பான் என்றுருத்து
ஏலெட்டு வாளி எரிபோல் அவன்விடுத்தான்.

மூவைந்து அம்பினையும் மூவைந்தே வால்துணித்து
ஓவைந்தீ ரெட்டியினால் ஈரிரண்டு மாந்தலையும்
வலவன் தலையறுத்து மற்றுருள்நா லும்உடைத்து
சிலையும் பெருந்தேரும் சேரத் தகர்த்துடைத்தான்
தேருடைய வில்லுடையச் சிந்தைகளும் கெட்டுடைந்து
மேரனைய வேறொருதேர் மேற்கொண்டு விற்பிடித்து
கார்பொழியும் வாறாய்க் கணையபிமன் மேற்சொரிய
நேர்பொருஞ் சூரை நிகராய்க் கணைநிரைத்தான்
காற்றும் புயலுமெனக் கைகலந்த வெங்கணையால்
தோற்றுந் திசையனைத்தும் தூர்ந்ததுவே யம்மானை.

காலாக் கினியாய்க் கணைபின் ஏவுதலும்
மூலாக் கினிசரமாய் மூதாதை செய்வதுவும்

அங்கு வீமன் வருதல்

கண்டுக் கதைவீமன் கண்சிவந்து ஓடிவந்து
தண்டு கொண்டு வீடுமற்குத் தானுபரிகிட்டாமல்
வீசினான் நாலுவகை வேந்தரையும் வீரரையும்
கூசி அரவுயர்த்தோன் கொற்றமுடி மன்னவரைச்
சேனைச் சலதியையும் சீக்கிரத்திலே விடுத்தான்
தானைச் சதுர்வகையும் தான்வளைந்து மொய்த்ததுவே.
தேருங் கரியும் திரள்பரியும் காலாளும்
காரும் கடலும் கடுத்தெங்கும் பொங்கியபோல்

திக்குத் திசைகளெங்கும் சேனைகளாய்ப் பொங்கியபோல்
மிக்குற் றிருவரையும் மேவி வளைந்ததுவே
விருத்த னுடன்பொருதில் வேட்டைதப்பிப் போகுமென்று
மருத்துப் பெருஞ்சுழல்போல் வாளிமழையால் சொரிந்து
பாகும் பரியும் பனைங்கொடியும் வில்தேரும்
நேகப்[1] பொடிப் படுத்திநிர்த்தூளி யாக்கிவைத்து
மின்னல்வெட்டி மாறியபோல் வெந்தேரைத் தானடத்திக்

---

1 நுண்ணிய

கன்னல்தனில் பலகோடிக் காய்கணைகள் தான்விடுத்தான்
சேனைப் பெரும்புலத்தைச் சேர்த்துழவுச் செய்வதெனத்
தானைக் கடல்சுவறத் தான்போர் புரிந்துநின்றான்.

சிரங்கள் பலமலையாய்த் தேகம் பலமலையாய்
கரங்கள் பலமலையாய்க் கால்கள் பலமலையாய்
அன்றபிமன் கைக்கணையால் ஆவியற்று மாய்ந்தோரைக்
கன்றலறக் கணக்கில் கட்டுரைக்க வல்லரெவர்
செந்நீர்ப் பெருக்கோர் திரைக்கடலை ஒத்ததுவே
அந்நேரி லேஒருபத்து ஆயிரம் பேர்கள்
ஆழியான் மக்களுடன் அண்ணன் திருத்தம்பியரும்
பாழியாய் வந்து பரவி வளைந்தனரே
மைத்துனரே உங்கள் வலியறிவோம் இத்தைஎன்று
மெய்த்தனுவைத் தான்வளைத்து வெவ்வாளி தான்சொரிந்து

உரங்கள் கரம்சிரங்கள் உற்றஅவ யவம்சிதற
சரங்கள் தொறும்குருதி தான்கொழுப்புச் சிந்திவிழ
சல்லடைக் கண்போலச் சரங்கள் துளைபரவ
வில்லடைப் பட்டு விழுந்தோர்கள் அல்லாதோர்
தேரிழந்து பாகிழந்து செங்கைவரி வில்லிழந்து
காரிசைந்த வேழக் கணமிழந்து கைமறந்து
மாவிழந்து வேலிழந்து வாளிழந்து தோளிழந்து
கோவிழந்து கைத்தலங்கள் கொண்டகொண்ட வேலிழந்து
பஞ்சுபோ லஞ்சிப் பறந்தார்பின் நூற்றுவரும்

துரியோதனன் பக்கத்தவர் அயர்தல்

நெஞ்சயர்ந்து தேரிழந்து நீண்டவரி வில்லிழந்து
நாண மறவே நடுநடுங்கிக் கெட்டோடத்

விடுமர் திகைத்து நிற்றல்

தாணுவெனும் கங்கை தனையன் மகன்திகைத்து
கண்டுங் காணான்போல் கைமறந்து மெய்மறந்து
மண்டு வரிவில் வளைக்காது ஒடுங்கிநின்றான்
அருக்கனைக் கண்டடைந்த அந்தகா ரம்[1]போல்
வெருக்கொண்டே மன்னரெலாம் வெந்நிட்டு ஓடலுற்றார்

---

1 இருட்டு

துரியோதனன் படை பின்னிடல்

அந்தரத்தில் நின்றால் அபிமன் மேலாடி
வந்திடுவான் என்று மனம்பயந்தார் போலாக
அத்த கிரியில் அலரி அடைந்தளவில்
எய்த்த உடலுயிரும் இன்று பிழைத்தமென

அரவத் துவசன் அணிசேனை வாங்கியபின்
முரசத் துவசன் முரண்சேனை வாங்கியபின்
ஆதவனார் புக்கொளித்த அத்திசைபோல் எத்திசையும்
போதமுறச் செந்நீர் பிறங்குகளம் நீங்கியபின்
பாலன் அபிமனுக்கும் பார்த்தனுக்கும் வீமனுக்கும்
சாலப் பெரும்படைகள் தான்உடைந்த தென்எனவே

துரியோதனன் கூற்று

மூதாதை தன்முன் முரணாய் அரவுயர்த்தோன்
தீதான சிந்தையுடன் செப்பியவன் என்சொலுவான்
நாளை முதுகிட்டோர் நல்லுயிரைக் கொல்வனென்று
மீள மதித்திருந்தான் வெய்யஇருட் போதகன்று

காளை அபிமனுட கைவிசையம் தான்பார்க்க
மீளத் தினகரனும் மிக்காய்க் குணக்கெழுந்தான்
கான்தோய் இருநாட் கள்சருக்கம் முற்றியபின்
மூன்றா நாள் போர்ச்சருக்கம் மூண்டுரைப்போம்
அம்மானை.

மூன்றாம் நாட் போர்ச் சருக்கம்

வீடுமர் கருட வியூகமும், கண்ணன் அர்த்த வியூகமும் அமைத்துப் போருக்கு முற்பட, அருச்சுனன் அபிமன் ஆகியோரை வீடுமர் வளைக்கிறார். துரியோதனன் முதலியோர் வீமனை வளைக்கின்றனர். கடோற்கசன் அம்பால் துரியோதனன் மயங்கிவிழ, அபிமன் வேல் எறிந்து அவன் தேர்ச் சாரதியை மாய்க்கிறான். அதனை அறிந்த வீடுமர். துரியோதனன் பால் வந்து, அவனைத் தேர் மீதேற்றி மூர்ச்சைத் தெளிவிக்கிறார் துரியோதனனைப் பின்னிருத்தி, வீடுமர், கடோற்கசன், அபிமன் முதலியோர் ஓடுமாறு போர்புரிகிறார். வீடுமரைக் கண்ட அருச்சுனன், வாளா இருக்க, கண்ணன் ஆழியுடன் தேரிலிருந்து இறங்க, அருச்சுனன் ஓடிக் கண்ணன் அடியை வணங்குகிறான். அதுகண்டு வீடுமரும் தேரை விட்டிறங்கிக் கண்ணனைத் துதிக்கின்றார். அதனால் சினம் மாறிய கண்ணனிடம் அருச்சுனன் தான் போர் புரிவதாகக் கூறிப் போர்புரிகிறான். அருச்சுனன் அம்பால் பலர் இறக்கக் கண்டு கண்ணன் மகிழ்கிறான். வீடுமன் முதலியோர் மன்னனைக் காத்து. பாசறை அடைகின்றனர். கதிரவன் மறைந்தபின், பாசறையில் வீடுமர் பேசுகின்றார், தருமன் படை மகிழ்ந்தும், துரியோதனன் படை வருந்தியும், இரவினைக் கண்ணுறக்கமின்றிக் கழிக்கின்றனர். பொழுது விடிகின்றது.

நான்காம் நாட் போர்ச் சருக்கம்

இருவர் படையும் எதிர்க்கின்றன. யானைப் படைகளை வீமன் அழிக்கின்றான். கண்ட துரியோதனன் தம்பியர் படையொடு எதிர்க்கின்றனன். வீமன் வெகுண்டு வர, அண்ணனுக்குத் துணையாக துரியோதனன் தம்பியர் வருகின்றனர். வீமனால் துரியோதனன் தளர்வடைய, சகுனி சல்லியன் வந்து அவனை எடுத்து அணைக்கின்றனர். தம்பியர் முனைந்து போர் புரிகின்றனர். துரியோதனன் தம்பியர் ஐவர் வீமனால் இறக்கின்றனர். துரியோதனன் படை சிதற, பகதத்தன் உதவியாக வந்து போர் புரிகின்றான். அதனால் தன் சேனை தளரக் கண்ட கடோற்கசன் பல மாய வடிவங் கொண்டு போர் செய்கிறான், கடோற்கசன் வெற்றி பெறப் பகதத்தன் ஓடுகிறான். சூரியன் மறைய இருபடையினரும் பாசறை எய்துகின்றனர். புதல்வர்கள் ஐவர் இறந்தமை அறிந்து காந்தாரி அழுகிறாள். பொழுது புலர்கின்றது.

மூன்றாம் நாள் போர்ச் சருக்கம்

தந்தம் உறியில் அவர்வைத்த தயிர்பால் வெண்ணெய்எட்டாமல்
குந்தி உடலின்மீசை ஏறி இளங்கோ வியர்முன் கூத்தாடி
நந்தன் மனையில் அசோதை இரு நயனம் களிக்கவிளையாடும்
மைந்தன் இருதாள் ஒருநாளும் மறவா தவரே பிறவாதார்.

தருமராசாக்கள் வீரய்யன் துணையாக வேண்டியது

இருவர் படையும் யூகம் அமைத்து எதிர்தல்

தேன்தார் தருமன் திரியோதனன் படையும்
மூன்றாந் தினப்போரும் மூண்டதுகான் அம்மானை.
இடங்காத் தெழுகடலும் ஏகமாய்ப் பொங்கியபோல்
படங்காத்த சர்ப்பப் பதாகையான் சேனைகளை
கொடுங்கார் முகவீரன் கொற்றக் குருகுலத்தோன்
கடுங்கா ருடயூகம்[1] கங்கை மகன்வகுத்தான்.

வீரமுரசுயர்த் தோன் வெள்ளப் பெரும்படையை
காரனைய வெம்சக் கரயூபமாய்[2] வகுத்தான்
திரண்ட சதுர்வகையாம் தேர்கரிமாக் காலாளும்
இரண்டு படையும் இகல்மூண்டார் அம்மானை.
பூவுலகில் இப்போர் பொருதுமர ணமுழக்கால்
மூவுலகு மஞ்சி முறையிட்ட தம்மானை.
உகமாறு காலத்தீ[3] எங்கும் பொங்கியபோல்
திசைகா சினிகளெங்கும் சேனையாய் நின்றதுவே,
வீடுமனும் விற்குருவும் வில்லாசரி மகனும்
ஈடுபகை தத்தன் இயலான மன்னர்களும்

மேலான பஞ்சவர்கள் வெஞ்சேனை யுள்ளடங்க
நாலா திசையும் நடுங்க வளைந்தனரே

துரியோதனன் தம்பியரோடு சேர்ந்து பொருதல்

சர்ப்பத் துவசன்முதல் தம்பியரும் மன்னவரும்
வெற்பொத்த வீமனுட மெய்நடுங்க மொய்த்தனரே.
பஞ்சவர்கள் சேனையெல்லாம் பஞ்சுபஞ்சு போற்பறக்க
வெஞ்ச மரமாக வினைப்போர் தொடங்கினரே

---

[1] கருட வியூகம்
[2] சக்கர வியூகம்
[3] கோபம்

விசயனும் வீடுமனும் போர்புரிதல்

வில்லுக்கு வல்ல விசையனுடன் வீடுமனும்
சொல்லொத்து இரண்டு சிலையாற் கணைசொரிந்தான்
ஆகாசமும் திசையும் அம்புமயமாய் நிறைத்து
வேகாள மாக வினைப்போர்த் தொடங்கிநின்றார்
இருவர்தனில் ஒருவர்க்கு இன்றிறுதி என்றமார்
கருதும் படியே கனபோர் தொடங்கிநிற்க.
நன்சீர்த் துருபதற்கோன் நந்தனுடன் விற்குருவும்
உன்சீவன் என்சீவன் என்றுரத்தே ஊடாடி
வடவைப் பெருங்கனலும் வன்னிக் கரசனும்போல்
கடினப் பெரும்பூசல் கைகலந்தார் அம்மானை.

அபிமன்னன் சேர்தல்

மதிப்பற்ற வில்விசையன் மைந்தன் முனிமைந்தனுமாய்க்
கொதிப்புற்று வன்கொடும்போர் கொண்டடர்ந்தார் அம்மானை.
என்னோ டிவனோடு எதிர்ப்பனென ஈரிரண்டு
மின்னான வெங்கணையை வின்முனிசேய் விட்டடர்ந்தான்
நாலுகணை எட்டாக நாலுகணை யாலறுத்தான்.

அசுவத்தாமன் அபிமனும் போர் புரிதல்

ஆலமென அஞ்சுகணை அசுபத்தாமன் விட்டான்
ஐந்து கணையினையும் ஐயிரண்ட தாய்ப்பிளந்தான்
மைந்துடனே ஆறுகணை மாமுனிவன் சேய்ஏவ
ஆறுகணை நீறுபட ஆறுகணை யால்அறுத்தான்
வீறினோ டெண்கணையை விட்டான் முனிகுமரன்
எண்கணையும் வாளபிமன் எண்கணையி னாலறுத்தான்
திண்கணை பத்துச் செலுத்தினான் சேபனையான்
பத்துக் கணைதனையும் பத்துக் கணையாலே
சக்தி யுடனறுத்தான் தாமன்மூ வைந்துகணை
வேகமுடன் விட்டான் விசையன் தருகுமரன்
ஆக முனிந்தறுத்தான் ஐமூன்று வெங்கணையும்
பூசுரன்[1] மைந்தன்[2] புகைந்து நாலைந்துகணை
ஆசுகள் மைந்தன் அனுசன்சேய் மீதுவிட்டான்
நாலைந்து வெங்கணையும் நற்றாள் படத்துணித்து

---

1 அசுவத்தாமன்
2 தம்பி

மேலைந்து வாளிவிட்டான் வில்விசையன் பெற்றமகன்
அடர்ந்து விடுத்தசரம் ஐந்தும் அறுத்தெறிந்து
படர்ந்த புகழ்விசையன் பாலன்மேல் அம்பதுகோல்
கால சூலம்போல் கடுத்துமுனி மைந்தன்விட
ஆலகா லம்போல அம்பதையும் நீறாக்கி

நூறுகோல் தான்சினந்து நூலோன்மேல் விட்டனனே
நீறுபட நூறு நெடுங்கணையும் தானறுத்து,
மீறியிரு நூறுகணை விட்டான் முனிகுமரன்
தூறியிரு நூறும்துண் டித்தைஞ் ஞூறுகணை
மாத்தாமன் மீது மகவான்மகன் மகனும்
கோத்தான் அஞ்நூறு கொடுங்கணையும் நீறாக்கி
ஐயிரண்டு நூறுகணை அபிமன் மேலேவ
கையிரண் டினால்கோல் கதழ்வாக விட்டறுத்து
நூறுநூ றம்பு நொடிக்குள் இவனேவ
நீறுநீ றாக நிமிஷம் அவனறுத்துக்

கோலொரு லெக்கம் கொதித்துவிட்டான் அக்கணையை
மாலின் மருகன் மறுத்தறுத்துப் பத்துலெக்கம்[1]
ஆசுகம் விட்டான் அவையறுத்துக் கோடிகணை
பூசுரன் மைந்தன் புழுங்கியே விட்டனனே
விட்ட கணையறுத்து மேவியோர் சங்கமெனத்
தொட்டானவ் வம்பையெல்லாம் தூளாக்கிப் பூசுரனும்
விந்ததி தொகைச்சரங்கள் விட்டானவ் விந்தமெல்லாம்
சிந்த அபிமன் சிதைத்தே ஒருபதுமம்
ஏவினான் பதுமம் எல்லாம் அறுத்தெறிந்து
மேவிச் சமுத்திரமாய் விட்டான்வில் லாசரிசேய்

மாறாச் சமுத்திரமும் மாற்றியோர் தாமரைதான்
வீறாய் அபிமன் விடுத்தான்காண் அம்மானை
தாமரையும் மாற்றிபரித் தாமனோர் வெள்ளமம்பு

---

1 இருவர் போரிடும்போது ஒருமுறை ஒருவர் வெல்லும் கருத்தில், ஆற்றலும் எண்ணிக்கையும் மிக்க அம்புகளைச் சொரிந்து போரிடுவது மரபு. அவ்வாறு இவர்கள் போரிட்ட போது ,2, 4, 5, 10, 50, 100, 1000, 10000 என்று ஒன்றின் ஒன்றுமேற் பட்ட தொகையுள்ள அம்புகளால் ஒருவரை ஒருவர் தாக்கினர், அவற்றினும் மேற்பட்ட எண்களாக இந்தநூலாசிரியர் பலபெயர்களைக் குறிப்பிட்டுள்ளனர். அவை ஒன்றின் ஒன்று பேரெண்ணிக்கை யுடையனவாகும். அப்பெயர்கள் வருமாறு: சங்கம், பதுமம் தாமரை, வெள்ளம், பிரளயம், கோரை, உரோசனை, கற்பம், மகா கற்பம், தண்பனை, உற்மலம், அனந்தம், மகா அனந்தம், கணங்கன், என்பனவாகும்.

மாமறு களமீது மதித்துவிட்டான் அம்மானை
வெள்ளந் தனையழித்து மீண்டோர் பிரளயந்தான்
தெள்ளும் புகழ்அபிமன் சிந்தினன்காண் அம்மானை
பிரளைய மாற்றிப் பெயர்ந்தே சரங்கோரை
வரதன் அனையதிறல் மாத்தாமன் வீசினனே
கோரையும் மாற்றிக் கொடுங்கோல் உரோசனைதான்
தாரைமே கம்போலத் தானபிமன் வீசினனே.
கற்பம் அழித்துக் கடிந்தேநி கர்ப்பம்என
அற்புத வீர னபிமன் கணைசொரிந்தான்
மற்றவி கற்பமெல்லாம் மாற்றாமல் தானழித்து
உற்றோன் கடிமகரம் உற்பனமாய் வீசினனே.
வீசுங் கடிமகரம் வீரபிமன் தானழித்து
ஆசுகமோர் தண்பனைதாம் அந்தணன்மேல் வீசினனே
பற்பமுறத் தண்பனையும் பார்ப்பானார் தான்மாற்றி
உற்பல வெங்கோல் உரத்தபிமன் மீதுவிட்டான்
உற்பலம் யாவும் ஒழியத் துகள்படுத்தி
அற்புத வெங்கோல் அடர்ந்தபிமன் ஏவினனே
அற்புதம் யாவும் அளித்தே கணையனந்தம்
விற்பனப் பார்ப்பான் விடுத்தான்காண் அம்மானை.
அனந்தம் அளித்துமகா அனந்தம் தானாகக்
கணங்கள் எனவே கணைமாரி பெய்தனனே
இந்த விதமாய் இருவோரும் செய்தசமர்
அந்தரரும் அஞ்சி அதிசயித்தார் அம்மானை
காடு மலையும் கடலும் திசாமுகமும்
நாடும் புவியும் நாடரிய அந்தரமும்
எங்குஞ் சரமாய் இங்கிருவோர் விட்டகணை
அங்கங் கிடங்கள் அறப்பரந்தது அம்மானை.
கைமாறா திங்கிவர்கள் கற்பம்[1]இகல் செய்தாலும்
தொய்வுறா திங்கிவர்கள் தோலார் எனத்தேவர்
ஈதே உயித்தம் இவர்களே வில்வீரர்
மாதேவர்க் கேபிரிதி வல்லுயித்தம் என்றுரைத்தார்
தேவர் மதிக்கச் செகமூன்றுந் தான்மதிக்க
மூவர் மதிக்க முரணுயித்தம் மாறாமல்
கதிரோன் குடபால் கடலில் விழுமளவும்
முதிர்போர் முனையில் முனைந்துநின்றார் அம்மானை.

1 பல்லூழிக்காலம்

சகுனியும் சகாதேவனும் எதிர்த்தல்

சகுனி யுடனே சகாதேவன் தேர்நடத்தி
மிகையுற்று வில்வளைத்து வெங்கோலைந் தேவினனே
ஐந்து கணையும் அறுத்தைந்து இரண்டுகணை
மைந்தின் சகுனி மதித்துவிட்டான் அம்மானை.
ஈரைந்து கோலும் இமைப்பில் பொடிபடுத்தித்
தீரன் இருபதுகோல் தீப்பறக்க வீசினனே.
சாதேவன் விட்ட சரம்ஓ ரிருபதையும்
சூதால் வலியோன் துதித்தே இருகணையால்
வெற்றித் துசம்அறுத்து வில்நாணும் தானறுத்தான்.
மற்று மொருவில் வளைத்தா ரிரண்டுகணை
விட்டுத் துசம்அறுத்து வில்லறுத்து நாணறுத்து
கட்டும் பரியார்தேர்க் கால்சா ரதியறுத்து,
நெஞ்சுருகி வெற்பரிய நீடுகொடுங் கோல்நாலு
சஞ்சல மில்லாச் சகாதேவன் எய்தனனே.
தேருங் கொடியும் சிதைந்து சிலையிழந்து
போரு மிழந்து புறங்கொண்டு நெஞ்சிழந்து
மீண்டும் மறுதேரின் மேற்கொண்டு விற்பிடித்துக்
கூண்டம் பதுகோல் கொதித்துவிட்டான் அம்மானை.
கோலைம் பதுவும் குறித்தறுத்துக் கொக்கரித்து
நாலைந்து வாளி நகைத்துவிட்டான் அம்மானை.
வாளிநா லைந்தினையும் மாற்றியே நூறுகணை
கூளி யனையான் கொதித்துவிட்டான் அம்மானை.
பத்திரு நூறும் படியிற் பொடிப்படுத்த
அத்திரம் மேன்மேல் அனேகம் தொடுத்துவிட்டான்
கோல்முனையைக் கோல்பிளக்கக் கோலச் சிறகரிய
கோல்முனையைக் கோல்ததுவக் கோலைச் சரமறுக்க
மந்திர வலியும் மனவலியும் கைவிசையும்
தந்திர முங்கொண்டு சரமாரி எய்துநின்றார்.
உபய சரமேகம் ஊடாடும் போர்போல
அபய மபயமென அஷ்ட கெசம்அலற
தாங்காத கோபச் சரப்போர் முனைந்ததனால்
ஆங்கார மேற்கொண்டு அடல்மூண்டார் அம்மானை.
ஒத்தபோர் தன்னில் உறுசூதினால் சதியன்[1]

---

1 சதிசெய்தவன்.

வெத்திவேல் ஒன்றெடுத்து வீசினான் அம்மானை.

சகாதேவன் தளர்தல்

வரைதட் டுருவுநெடு வில்வேற் சகாதேவன்
இரதமும் பாகும் இமைப்பில் பொடித்ததுவே
சாரதியும் தேரும் தவிடாய்ப் பொடிந்ததனால்
பாரதிர வேநிலத்தில் பாய்ந்தே பலபகழி
வீசி யவனுடைய மெய்முழுதும் தான்பொத்திப்
பூசல்மத கேசரிபோல் போர்முனைந்தான் அம்மானை.
காலாளாய் நின்று கடுத்துயித்தம் செய்தோன்மேல்
மேலாளாய் நின்ற வினைச்சகுனி கோபமுற்றுக்
கூரிய வெய்ய கொடுங்கணைகள் தான்தெரிந்து
மாரி நிகர்ப்பதென வர்மித்தே வீசினனே.
வீசுங் கணைவிலக்க மேன்மேலு மேசொரிந்து
பூசல் முகத்தில் பொருவரிய வில்லளித்து
வாகனமு மில்லாமல் மண்ணின்மேல் நின்றவன்மேல்,
ஆகம்[1]எங்கும் ஏபரவ ஆசுகங்கள் வீசினனே
அயர்ந்து மெலிந்து உயிர்த்தாலும் வெந்போகான்
வியங்கொள் ஒருகதையை வீசினன்காண் அம்மானை.
அக்கதையைப் பலபகழி யாலறுத்து நீறாக்கித்
தக்கணை நாலகலம் தைத்துருவ ஏவினனே
செய்முயற்சி யற்றே திகைத்துநிற்கும் அவ்வேளை

நகுலன் துணைக்கு வருதல்

மெய்முயசி வல்ல விசையன் தனக்கிளையோன்[2]
பாரதிரத் தேர்நடத்திப் பாணமழை[3] மாரியென
காரதிரக் கார்முகத்தால் கைமாறா தேசொரிந்தான்
நகுலன் சொரிந்த நகுவிற் பகழியெல்லாம்
மிகையுற்ற தன்கரத்தின் விற்பகழியால் அமர்த்தி
பின்னோனும் பட்ட பெருந்துயர்க்கு மேலாக
முன்னோனும் பட்டதென்று மூவுலகுந் தானியம்ப
அல்லற் படுத்துவனென்று ஆர்ப்பரித்துக் கொக்கரித்து
மல்லற் புயத்தான் வடிக்கணைகள் தான்சொரிந்தான்
மாநகுலன் அந்த வடிக்கணைக்குப் பன்மடங்காய்த்

1 உடல்
2 நகுலன்
3 அம்புமழை

தானவர்க ளேமதிக்கச் சாயாமல் கோல்சொரிந்தான்
சேலுங் கயலு[1]மெனத் தேரிரண்டும் கோலிவர
மாலும் பெரும்புயல்போல் வன்கோல் மழைசொரிய
சகுனி இவனெவுந் தானார் மதித்தபரி
நகுலன் இவனெவும் நானிலத்தோர் கண்டறியார்
ஒன்று பத்தாக உறழ்ந்த பெருந்தொகையாய்
அன்றிரு வோரும் அடர்ந்தா சுகம்சொரிந்தார்.
ஒரொரு வீரர் ஒருகோடி அம்புமழை
மாரி நிகராய் வருஷித்தா ரம்மானை.

வில்விசையன் தம்பி வெகுண்டிகற்கை மேலாடி
ஒல்லை[2] தனிலே உகசண்ட மாருதம்போல்
பாண வருசம் பரப்பிப் பகைவோன்கை
நாணு சிலைகொடிதேர் நாசமுறத் தூளாக்கிச்
சரபஞ் சரமாய்[3]ச் சகுனியுடல் மறைய

சகுனி தளர்தல்

விரவு சரப்போர்வை மெய்மறையப் போத்தினனே.
வில்வலி யற்று விசையற்று மெய்களற்று
சொல்வலி யற்றயர்ந்து சோபித்தே கீழ்வீழ்ந்தான்
வல்ல சகுனி மயங்கியே வீழ்ந்தளவில்

சல்லியன் வந்து பொருதல்

சல்லியன் வெங்கோபம் தான்மூண்டு தேர்நடத்தி

இந்திர தனுப்போல் இடக்கையில் விற்பிடித்து
அந்தரங்கள் தான்புதைய அம்புமய மாய்நிறைந்து
சூறைப் பெருங்காற்றாய்த் தோன்றினோன் முன்பாக
ஏறொத்து இளையாது இகற்சண்ட மாருதமாய்
தேரை நடத்திச் சிலைவளைத்துப் பலகோடி
கூரிய வாளிமழை கொண்டல்போ லேநிறைத்துத்
தரியலன் விட்ட சரமெல்லாந் தானறுத்து
விரியும் பெருந்தேரும் வில்லும் எரிபரப்பி
மத்திரன் மேனி மயிர்க்கால் தொறும்சரமாய்
அத்திர வீரன் அனுசன் சொரிந்தனனே

1 சேல் கயல் என்பன மீன் வகைகள்
2 விரைவு
3 அம்புக கூடு

தேரழிந்து வில்லழிந்து தேகம் உருக்குலைந்து
மேரிழந்த சீயமென வெங்கதையைக் கையேற்றுப்
பங்கப் பெருஞ்சூறை பாயவே தான்சுழற்றி
துங்கநகு லன்தேர் துகள்பட்டிடப் புடைத்தான்
பற்ப மெனத்தேரும் பாகும் பொடிந்தவில்
வெற்பின் புயநகுலன் வெந்நிட்டான் அம்மானை
பூரி யுடனே புயல்வண்ணன் பின்னோனும்
மாரி நிகராக வாளி சொரிந்தனரே
ஒன்று முதலாக ஓர்கோடி ஒவ்வொருத்தர்
மன்ற லணிமார்பர் வாளிமழை வீசினரே

அம்புடன் அம்பாய் அடல்மூண்டு எண்டிசையும்
உம்ப ருலகும் உரகப் புவிகடலும்
எங்கெங்கு பார்த்தாலும் இங்கிருவர் விட்டபல
புங்கங்க ளாகப் பொரும்போர் புரிந்ததுவே
ஒன்றின்முனை ஒன்றறுத்து ஒன்றுசிற கொன்றறுத்து
ஒன்றையொன்று தான்பிளந்து ஒன்றையொன்று துண்டுசெய்தும்
ஒன்றின்முனை ஒன்றுகவ்வி ஊடாடி நின்றதுவும்
ஒன்றையொன்று தான்விழுங்கி ஒன்றையொன்று தானெரிந்தும்
ஒற்ற போர்தனிலே உலகளந்தான் பின்னோனும்
கொற்றவேல் ஒன்றெடுத்துக் கூசாது வீசினனே

கோடியிடி ஒன்றாய்க் குமுறி எதிர்ந்ததுபோல்
வேடை யுடனுலகம் எங்கும் நடுநடுங்கி
ஊழிப் பெருங்கனல்போல் உற்றே மிகச்சொரிந்து
பாழிப் புயபூரி பாகுபரி தேர்களெல்லாம்
நீறாய் எரித்தளவில் நெஞ்சயர்ந்து பஞ்சைகள்போல்
மாறாத வில்வீரன் மாறிமுது கிட்டனனே.

பகதத்தனும் கடோற்கசனும்

கதித்த பகைதத்தன் கடோற்கயனும் போர்மூண்டு
மதித்த இராவணனும் மாலுமெனப் பொருதார்

கிருபனும் சோழனும் போரிடல்

பொன்னி நதியானும் போர்மதியா வில்வீரம்
மன்னு கிருபனுமே வாளிமழை சொரிந்தார்

திக்கு நடுங்கச் செகநடுங்கச் சேணடுங்க

மிக்கமக மேர்[1]நடுங்க வெற்புகளும் பற்பமுற
அஷ்ட கெசங்கள் அலறி அபயமிட
இஷ்ட முளசலதி ஏழுங்[2] கொழிஎழும்ப
எங்கும் இருவர்களும் எய்த சரமயமாய்ப்
பொங்கிய பூசல் புரிந்தடர்ந்த தம்மானை.
சென்னியுடன் கிருபன் சேர்ந்தே சிலையெடுத்தல்
என்ன அமரென்ன இமையோர் அதிசயித்தார்.
விற்பன[3] மிக்கான் வியன்கலைக்கும் வல்லாளன்
அற்புத முள்ளோன் அரியரிஷி கோத்திரத்தோன்
ஆகையால் இந்த அரியசமர் செய்தாலும்
வாகையாய் மன்னர்பிரான் மற்றவனோடு ஒத்துநிற்க
வல்லவனோ என்றுசில வானோர்கள் தானுரைக்கப்
புல்லனே அல்லன்என்று புட்கரத்தோ[4] ரிற்சிலபேர்
செப்புவர் முன்நாள்நம் சேனுலகி லேயசுரர்
குப்பலாய்[5] வந்துமிகு கொட்டங்க[6] ளிட்டவந்நாள்
கோனிலமை மிக்கமுசு குந்தனென ஓர்சோழன்
மானமுடன் வந்தசுரர் வங்கிஷத்தை வேரறுத்துப்
பொன்னுலகிற் கொண்ட பொருட்சிறையும் தான்மீட்டு
மன்னி லமைப்பட்ட மகவானுக் கன்றளித்து
வச்சிரக் கையான் வணங்கும் தியாகரையும்[7]
உச்சித[8] மாகப் பெற்றுலகி லேவந்தான்
இன்னம் முசுகுந்தன் எனக்கேட்டால் வாளசுரர்
பன்னியர்[9]கள் தாலி பதறிநிலத் தில்வீழும்
கெற்பம்[10] நிலத்தில்விழும் கேடில் இளஞ்சூல்கள்
பற்பமாய்த் தீய்ந்துவிடும் பாலன் முலைமறுக்கும்
சீர்த்தியால் செங்கோலால் திண்டிறலால் நீதியினால்
வார்த்தையால் ஈகைமனக் கருணையால் பொறையால்
ஒப்புண்டோ சோழனுக்கு உற்றபுவி மன்னவரில்
துப்புண்டோ தர்மமொன்றும் சோராமல் வென்றிடுமே
என்றிமை யோர்கள் இயம்ப இருவோரும்.

---

1 மேருமலை
2 ஏழுகடல்
3 கல்வித்திறன்
4 அம்புடையோர்
5 திரளாக
6 சேட்டை
7 தியாகராசப்பெருமாள்
8 உயர்ச்சி
9 மனைவியர்
10 கரு

கன்றியே மேன்மேலும் கைவிசையாற் கோல்சொரிந்தார்
ஓயாச் சரமழையே ஒத்தமறை யோன்சொரிகோல்
சாயாப் பெருங்காற்ற தாயரசன் கோல்சொரிந்து
பாகுபரி உருள்தேர் பற்பமுற விற்பொடித்து
வாகுவலி நேரியனும் வாளிபல சொரிந்து
சஞ்சல முற்றே தயங்கினான் பாப்பானும்
பாப்பான் இருந்தளவில் பாரநின்ற வன்கிருதன்
கோப்பாய்ப் பலபகழி கோத்தான்காண் அம்மானை.
தாதகி[1] மார்பன் தனைமதியா தேகிருதன்
தோதக மாகச் சுடுசரங்கள் தான்செலுத்திக்
கண்கள் தழல்காட்டக் காவிரி நன்னாடன்
தின்கைச் சிலையார் சிலீமுகங்கள் தாமெடுத்து
பற்ப முறவிட்ட பகழியெல்லாம் தான்மாற்றி
விற்பொடிய ஓர்பகழி விட்டே புலிக்கொடியோன்
பாப்பானும் புன்கிழங்கு பட்சிக்கும்... ... ...
கோப்பாக மன்னருடன் கோள்செலுத்த வல்லாரோ
என்றார்ப் பரித்துறுக்கி யேதேர் தனைமுடுக்கிக்
குன்றாத சீர்த்தியுள்ள கோமான் அடர்ந்தளவில்
வீர சாரத்தில் விசயனுக்கு ஒப்பான

வீரக் கிருதன் வருதல்

வாரவீ ரக்கிருதன் வன்கோபம் பொங்கிமிகு
கோதண்ட மொன்று குனித்தே கொடுங்கணைகள்
வேதண்ட முங்கலங்க வீசியே காவிரியாள்
ஏவும் பகழிமழை எல்லாம் பொடிப்படுத்தித்
தூவும் சிலைநாணும் துண்டித் தறுத்தெறிந்து
மெய்யில் தசைகளெல்லாம் வெவ்வே றற்று
கையிற் சிலைகண யார்க் கண்டித்தருதா ... ...
முன்னாளில் வேடன் முதிரும் பிறவினுக்கா... ... ...
என்னை மகத்தா லிசைத்த படியா ... ...
உன்னைச் சதையறிந்தேன் வொப்பிலா வில்வேடர்
தங்கள் தொழிலிதெனச் சாற்றவே தாதகியான்
அங்கப் பெரும்பொறிகள் கணங்கள் தான்காட்ட
வேறுமொரு நெடிய வில்வளைத்துப் பல்பகழி
... ...
... ...
... ...

3 ஆத்தி

[இப்பகுதி நான்காம்நாட் போர்ச்சருக்கமாக இருக்கலாம்]

வீமன் போர் செய்தல்

சேறாய் நிலங்கள்மிசைச் சேர்ந்தபல குஞ்சரங்கள்
கையாற் பிசைந்துஇரு காலாற் துவைத்தெறிந்த
மையால் கரிக்குலங்கள் மையான தம்மானை.
பற்பல் லிபக்கலத்தைப் பற்றி எடுத்தெறிய
வெற்பதென ஆகாச மீதே சுழன்றதுவே.
பன்னாள் மலைகள் பறந்த விதம்போல
அந்நாள் இபக்குலங்கள் அந்தரமெல் லாம்பரந்த
இவ்வா றிபக்குலங்கள் எத்திசையு மேபறக்க
கைவ்வா ரணக்[1]கடலைக் காணுவிதம் பார்த்து
தெவ்வா கியவரசர்[2] தேர்களொடும் தோல்க[3]ளொடும்
வெவ்வாசி[4] யோடும் வெருக்கொண்டே ஓடினரே
எங்கும் பரந்த இபக்குலங்கள் தட்டழிய
பங்கபபட வீமன் பங்கமெங்கும் ஆக்கியதால்
வீரர்கள் எல்லாம் வெருக்கொண்டே சாய்ந்தமையால்

கண்டு துரியோதனன் போர் புரிதல்

தீரர்களில் தீரன் மதசிங்கம் அரவுயர்த்தோன்
பார்த்தான் திகைத்தான் பதைத்தான் இதழ்கரித்தான்
கூற்றே திகைக்கக் கொடுங்கோபம் கொண்டுறுக்கி
உடையும் படைகொண்டு உரகக்கொடி வேந்தன்
குடையும் கொடியும் குளிர்மா மணிமுரசும்
படையும் பலதம் பியரும் பலவேந்தும்
புடைகொண்டு சூடிவரப் போனானவன் களமேல்
பாவி வரவும் பவனப் பதிகுமரன்
தாவி ஒருதேரில் தானேறி யேஎதிர்த்தான்.

வீமன் எதிர்த்தல்

தேரேறி வீமன் திறமாய் எதிர்வரவே
போரேற்றின் அனைய பூபாலகன் சினந்து,
சிங்கக் கொடியறுத்துத் தேரறுத்துப் பாகறுத்து

---

1 யானை
2 பகையரசர்
3 கிடுகுப்படை (கேடயம்)
4 குதிரை

அங்கத்தில் மார்பழுந்த ஐந்தம்பு தான்விடுத்தான்.
மாய்றான் விடுத்தகணை மார்புறவே வெகுண்டு
காற்றான் குமரன் கடுத்தே விழிசிவந்து
ஆறம்பி னாலே அரவத்து வசமறுத்து
நூறம்பு மார்பு நுழையவே வீசினனே.
மாரிலே நூறுகணை மாருதியும் விட்டளவில்
சீருலா மன்னர் சினங்கொண்டீ ராறுகணை
நெஞ்சுருவ விட்டு நெருக்கஇவன் கைமறந்து
சஞ்சலித்து நெஞ்சந் தடுமாறும் வேளையிலே,

வீமன் தம்பியர் துணையாதல்

தாவி நகுலன் சகாதேவன் பாஞ்சாலன்
மாவலிய சாத்தகியும் மைத்துனன்சே னைப்பதியும்
சலதிப் பெரும்படையும தாரரசர் புத்திரரும்
உலவைப் பதிசேய்க்கு உதவியாய் வந்தனனே.

இருபடையும் எதிர்த்தல்

மாமன் சகுனியுடன் மத்திரனும் புத்திரனும்
கோமன்னர் பற்பலரும் கொற்றவன்தன் பக்கமுற்றார்.
சகுனி யுடன்நகுலன் தாங்காது போர்மூண்டான்
புகழுற்ற சாத்தகியும் பூரியுமே போர்மூண்டார்
சல்லியனும் வன்னிதரும் சாரரசும் போர்மூண்டார்
வல்ல பாஞ்சாலனுடன் வன்கிருபன் போர்மூண்டான்
சாதேவன் துச்சா தனனுடனே போர்மூண்டான்
வாதாக மாருதியும் மன்னவனும் போர்மூண்டான்.
பரித்தலை நாலறுத்துப் பாகன் முடியறுத்து
விரித்த கொடியறுத்து வேந்தன்வரி வில்லறுத்து
அச்சுருளல் தேர்கள் அடங்கப் பொடிபடுத்தி
நச்சரவ கேதனத்தான் நன்மார்பு தட்டுருவ
விட்டான் கணையை மிகநகைத்தான் மால்வீரன்
பட்டானை போலப் படிவேந்தன் கீழ்வீழ்ந்தான்
வச்சிரா யுதம்போல மாவீரன் விட்டகணை

துரியோதனன் தளர்ந்து விழல்

நச்சரவக் கொடியோன் நன்மார் புறப்பிளக்கச்
சோர்ந்து விழுந்துரி யோதனன் தனையே
சார்ந்து சகுனிபோல் தம்பியரும் தான்தாங்கி

முன்னாள் கடோற்கயனும் மூழ்குவித்தான் வெங்கணையால்.
பின்னாள் கணையால் பிளந்தான் அவன்தகப்பன்
என்னா நடுங்கி இரங்கியே சல்லியனும்
மன்னாகந் தேரும் வகைகொண்டு ஏகினரே

துரியோதனனின் தம்பியர் போரிடல்

தன்முன்[1] தளர்ந்தநிலை தான்கண்டு தம்பியர்கள்
விம்மு சினத்துடனே மீறியே போர்மூண்டார்
ஆரபா ரத்துடனே ஐவரடு போர்க்களத்தில்
வீரசா ரங்கூறி வெங்கனல் போலேசிறந்து
கார்மாரி போலக் கணைமாரி தான்சொரிந்து

தருமன் சேனை பின்னிட வீமன் வந்து எதிர்த்தல்

சீர்மா தவத்தருமன் சேனைவெருக் கொண்டோடத்
தாக்கினார் நின்ற தளத்தைசரக் கூடாக
ஆக்கினார் சீறி அணிசாயச் சாடினரே.
மேலாடி வந்த விறல்வேந்தன் தம்பியரைக்
கோலாலே வெல்லக் கொதித்தே வயவீமன்
ஐந்துபேர் தேர்வில் அழியத் துகள்படுத்தி
ஐந்துபே ருஞ்சாக ஐந்து கணைதொடுத்தான்.

துரியோதனன் தம்பி ஐவர் இறத்தல்

மார்பகத்திற் பட்டு மலைசரிந்து வீழ்ந்தாற்போல
பார்பகைத்த ஐவர்களும் பாரிடத்தி லேவீழ்ந்தார்
துரோகசே னாவிந்து சுதன்கண்ணன் பிங்கலசன்
சராசந்தன் தன்னுடனே தார்வீம வாகுவென்போன்
கானாள ஐவரையும் கட்டுரைத்த காவலன்போல்
வானாள ஐவரையும் மால்வீமன் கொன்றுவிட்டான்.

வீடுமன் அருச்சுனன் போர்

கங்கை மகனுடனே காண்டீப மன்னவனும்
தங்களிலே வெய்ய சரப்போர் புரிந்தனரே.
ஒருவர்க் கொருவர் உயராமல் தாழாமல்
இருவர் மதியமெனும் எல்லை[2]யள வும்பொருதார்

---

1 அண்ணன்
2 கால எல்லை

காற்றாய்க் கனவாய்க் கதித்தால காலமதாய்
கூற்றாய்க் கடும்போர் கொடுமையாய்ச் செய்துநின்றார்.
நாகப் புவியோர் நடுங்க நரர்நடுங்க
மாகத மா[1]ரஞ்சி வாய்வெருவி யேயஞ்சி
காரும் நடுங்கக் கதிரெண் கயம்நடுங்க
மேரும் நடுநடுங்க வெற்புகளும் தூளாக
திக்குத் திக்காந்தம் திரைபா தலம்சேணும்
தக்க சரமயமாய்த் தான்பரந்த தம்மானை.
கார்க்கரசன் சேயும் ககனகப் பதிசேயும்
போர்க்கரச ரல்லதிணைப் போர்க்குரிய ரில்லையென
மாலுஞ் சிவனயனும் மற்றோரு மேமதிக்க
மேலுஞ் சரப்போர் வினைவிளைத்தா ரம்மானை.
ஒற்றுச் சமராடு உற்ற முகந்தனிலே
வெற்றி விசையன் மிதித்தேறிக் கைவிரசாய்
தேரும் கொடியும் திறற்பரியும் பாகனையும்
ஓருருவு தோற்றாமல் ஓர்நிமிஷத் தேபொடித்துப்
பன்னாள் அரசர் பலரைநீ வென்றதுமெய்,
ஒன்னா ரிருபத் தொருகால் வழிசெய்த
விற்றொழில் தந்த விரற்பரசு ராமனையும்
கொற்ற முடனே குறித்துநீ வென்றதுமெய்,
நின்னோ டெதிர்க்க நிகர்வேறில் என்றாலும்
என்னோ டெதிர்கரிது ஏகென்று பாட்டனையும்
செருவில் தனைப்பிளந்து தேகமெல்லாம் புண்ணாக்கி
வரிவிற் கரசன் மகவான் தருகுமரன்
கரியைத் துரத்துகின்ற கண்டீ ரவ[2]மானான்
குருவின் தனுவறுத்துக் கொற்றமணித் தேருடைத்துச்
சேனை யடங்கச் சிதறப் பொருதழித்துச்
சோனையென வெங்கோல் சொரிந்துநின்றார் அம்மானை.
மாத்தாமன் போர்க்கு மயங்கி மனங்கலங்கி
ஆற்றாமல் தேர்வில் அழிந்து புறங்கொடுத்தான்.
வீமன் ஒருபால் விசையனுமே தானொருபால்
தார்நகுலன் ஓர்பால் சகாதேவன் ஒருபால்
கூர்வேல் கடோற்கயனும் கோடையிடி போலொருபால்
பல்திசையு மேநடுங்கப் பாகவன்போர் தாக்குதலும்

---

1 மகத நாட்டவர்
2 சிங்கம்

மல்திகழும் மன்னர்படை வாங்கி வெருண்டோடியதே.
தரிப்பற்று ஒன்னார்கள் தடையற்ற வெள்ளமென
வெருக்கொண்டு எத்திசையும் வேந்தன் படைமுறிய
ஏலாமல் வேந்தன் இருபடைகள் ஓடுவதும்
மேலாடிப் பஞ்சவர்கள் மேன்மேலுந் தாக்குதலும்

பகதத்தன் போரிடல்

கண்டு பகைதத்தன் களித்துப்பத் தாயிரமும்
கொண்டு அணி நிறுத்திக் கூசாமல் அஞ்சலென்று
தெரித்த படையின் திகரடியைத் தான்தீர்த்துக்
கறுத்தவர் சேனை கலங்கவினை விளைத்தான்,
பார்த்திபன் சேனைபட்ட பாடுகளில் எண்மடங்காய்ச்
சீர்த்தியுள்ள பஞ்சவர்கள் சேனைதெறி கெட்டதுவே.
கருங்கடல் எங்கும் கவிந்தே வளைந்ததுபோல்
பெருங்கரி வர்க்கம் பெருங்கிரிகள் போற்சூழ்ந்து
இன்றையினில் பஞ்சவர்கள் எச்சேனை யுள்ளதுவும்
பொன்றிவிடும் என்றமரர் போதகப்[1]போர் பார்த்துநிற்க
திக்கயத்தில் ஒன்றனைய திண்மருப்பு நாலுடைய
தக்கஇப மீது பகைதத்தன் சமர்முனைந்து
அம்பு மழையால் அகலமீ வெளிமறைத்து
தும்பிமதத் தாரையினால் சொற்பலபா லாறாக்கி
வன்பாக வார வலுவும் புயவலியும்
வென்போற்தன் சேனை மிக்க பெருந்தளர்வும்

கடோற்கசன் போரிடல்

பார்த்தே விழிசிவந்து பற்கடித்து வீமன்மகன்
மாத்தார் நடுங்கமிகு மாய்கை பலவெடுத்து
அவ்வளவு யானைகட்கு அவ்வளவு யானையுமாய்
தெவ்வர் அவரவர்க்குச் சேர்ந்தே அவரவராய்
மன்னவர்க்கு மன்னவராய் வாம்பரிக்கு வாம்பரியாய்த்
தென்னுலவு தேரினர்க்குத் தேரினராய்ப் போர்மூண்டான்.
சங்கங்கள் சல்லியங்கள்[2] தார்முரசம் தான்முழங்க
எங்கெங்கும் வன்பாய் இபஉயித்தம் மூண்டதுவே

1 யானை
2 அம்பு

சங்கிலியைச் சுற்றிமிகத் தாங்கா தடித்தசில
வெங்கதையைத் தான்சுழற்றி விம்மி யடித்தசில
மத்தகமும் மத்தகமும் வன்பின்முட் டிநின்றசில
அத்தமுடன் அத்தம் அடல்மூண்டு நின்றசில
ஓரிபத்தின் மாமருப்பை ஓரிபங்கள் தான்பிடுங்கிப்
பாரமுற்ற யானைகளைப் பாய்ந்தடித்து நின்றசில
பாகர்த் தலைபிடுங்கிப் பந்தாடி நின்றசில
வேகமுடன் போர்புரிந்தே வீறிட்டே நின்றசில
வன்பாகர் பாகருடன் வன்போர் புரிந்தசில
தன்பே ரிபம்நிகர் தன்பகடும் தோற்றாமல்
வன்போர் புரிந்து மடிந்தழிந்து உகைந்தசில
என்போ டிறைச்சிகளும் ஏபுரிந்து மாய்ந்தசில
தாதைக் கரிப்போர்க்குத் தனையன் சதமடங்காய்
மோதி அங்கங்காய் முறுக்கி மிகநொறுக்கி
வீறுபகை தத்தனுக்கு மிக்கபகை தத்தனுமாய்
சீறித் தராதரமாய்ச் செய்தடர்ந்தான் வல்லரக்கன்
சாய்கை தனைப்பகைக்கும் தந்திக்[1] குலங்களெல்லாம்
மாய்கையாய் வந்தவய வாரணத்தால் மாய்ந்ததுவே
மற்ற சுய[2]மெல்லாம் மடிநாள்இன் றோவெனவே
மெய்த்தனர்களும் பாரெல்லா மிக்க கடோற்கயனை
வெங்கயத்தின் மீதுலவும் வேந்தர்களும் பாகருமாய்ப்
புங்கமுடன் ஓடிப் பிழைக்கும் பொருட்டாக
வன்போரைப் பார்த்து மலைந்துபுற மிட்டனரே.
அன்பாய்க் கதிரோனும் அஷ்ட கிரியடைந்தான்

மாலையில் இருசாராரும் பாசறை புகுதல்

வீடுமனும் பாந்தள் விலோதன[3]னும் வேந்தர்களும்
சேடின சதுவகையாம் சேனைகளும் பாடிபுக்கார்
மாலும் தரும மகிபன் பெரும்படையும்
சாலு மெனமீண்டு தன்பா சறைபுகுந்தான்

காந்தாரியின் துன்பம்

தூற்றிலே ஐவர் நொறுங்கினார் மக்களென்று
சாற்றினார் காந்தாரி தான்கேட்டுக் கண்கலங்கி

1, 2 யானை
3 கோடி

மாலை சரிய மலர்க்கூந்தல் தான்சோர
சேலை நெகிழச் செகத்திலே வீழ்ந்தழுதாள்
மருங்கு தனைப்பிடித்து மாமியென்று கெஞ்சுதலும்
இரங்குதல் இல்லாது இரும்பான நெஞ்சுடனே
கையைப் பறித்துவிட்ட காந்தாரி நெட்டூர
ஐயப் பரப்புக்கு அடியிட்டாள் அம்மானை
பூந்தார் அளகம்[1] புழுதிபடப் பார்த்திருந்த
காந்தாரி மக்கள்படக் சுண்டளகம் புழுதியுற்ற
பன்னாளிற் கூந்தற் பதங்குலையப் பார்த்திருந்தாள்
குந்திபெறு மக்களிலோர் கொற்றவரு மாயாமல்
எந்தனுட மக்களைவர் ஏனிறந்த தென்றழுவாள்
பொறுத்த தருமன் பொறையாம் பெருநெருப்பால்
கறுத்தைவர் இன்று களத்தவிந்தார் என்றழுதாள்.
கோபத்தாற் செய்த கொடுமையாற் கோதையிட்ட
சாடத்தா லோஎன் தனையர்இறந்த தென்றாள்.
பத்தினியாள் சிந்தையன்று பற்றி எரிந்ததுபோல்
பெற்ற வயிறின்றே பெருக எரியுதென்றாள்.
அடைந்தாரைக் காராத மானபங்கம் செய்தவினை
தொடர்ந்தே விளைந்த தொலையாத் துயரமென்பாள்.
மன்னீதம் கெட்டவர்கள் வங்கிஷங்கள் இவ்வாறோ
தன்னீர்மை குன்றுவது தானோ எனஅழுதாள்,
என்போல் அவளைஅன்று எண்ணாப் பெருங்கொடுமைத்
துன்போ விடாமல் தொடர்ந்தெனக்கு மூண்டதென்றாள்.
ஆண்டுபதி மூன்றுபன்மூன் றானியம்[2]போ
லேதொலைத்துப்
பாண்டுமைந் தர்செய்யும் வினைபாரப் புதுமைஎன்பாள்.
வீறான கற்புடைய மெல்லிகுழற் கைப்பிடித்து
ஏறாப் பெருஞ்சபையில் ஏற்றி அலக்கழித்த
தோச மித்தோடே தொலையாதோ என்றுரைப்பாள்.
தேசுடைய ஐவர்வர்மம் தீர்ந்திலையே இன்னமென்பாள்
தூண்போலக் கண்ணீர் சொரிந்தா றெனஓட
ஆண்பாலர் ஐவருக்கும் அன்றழுது நின்றனளே.
அந்தகனும் தான்புலம்ப அன்னசுற்றம் தான்புலம்ப

---

1 கூந்தல்
2 ஒருநாள்

மைந்தர்களும் தான்புலம்ப மாளாந்தார்[1] அம்மானை.,
பாராளு மங்கை பூபான்ல தனைப்பகைத்த
சேராரைப் போலத் திகைத்தழுதாள் காந்தாரி.

வாகை புனைந்த வயத்தருமன் சேனையுள்ளோர்
ஓகை[2] களிப்பாய் உகந்திருந்தார் அம்மானை
பஞ்சாயுதன்[3] அருள்சேர் பஞ்சவர்க்கும் நூற்றுவர்க்கும்
அஞ்சாநாள் போர்மூள ஆதித்தன் தானெழுந்தான்

நாலானாள் போர் முற்றும்

---

1 மனம் வருந்தினர்

2 மகிழ்ச்சி

3 திருமால் (சங்கு, சக்கரம், வில், வாள், கதை உடையவர்)

ஐந்தாம் நாட் போர்ச் சருக்கம்

இரண்டு பக்கப் படைகளும் திரண்டு போருக்கு முனைகின்றன. அருச்சுனன், கண்ணனோடு தேரில் செல்கிறான். அருச்சுனன் வீடுமரை எதிர்க்கும் போது, இடையே எதிர்த்த கலிங்கர் புண்ணுற்றனர். அது கண்ட வீடுமர் அம்புவிட, அருச்சுனன் அவர் வில்லினை அறுக்கிறான். வீமனை, துச்சாதனன் முதலியோர், எதிர்த்துத் தோல்வியுற்று ஓடுகின்றனர். அதுகண்ட துரியோதனன் தேரில் வந்து வீமனுடன் போர் புரிகிறான். துரியோதனன் அம்புபட்டு அலமர, பூரிசவா, வீமன் மீது அம்பு எய்கிறான். அதுகண்டு சாத்தகி பூரிசவாவை எதிர்த்துப் போர் புரிகிறான். சூரியன் மறைய அனைவரும் பாசறை அடைகின்றனர்.

கருமா முகிற்கோலம் நெஞ்சத் திருத்தும் கருத்தெய்துமேல்
அருமா தவத்தானும் அவன்முத்தி தருகைக்கும் அவனேகுரு
தருமாலை மண நாறு தாளானை வண்டேறு தன்னந்துழாய்
மருமாலை மவுலி[1]புனை திருமாலை யல்லாது வல்லார்களாம்.
தருமராசாக்கள் வீரய்யன் துணையாக வேண்டியது.

இரூபக்கப் படைகளும் திரண்டு நெருங்கல்

முரசங் கந்தாரை மணிக்கா களம்[2]முழங்க
முரசங் கமும்துந்துபி சின்னமு ழங்கக்
கரைவிரை சிந்துநுரை திரைசிந்து கடல்போல
அரச பெருஞ் சேனைவெள்ளம் அணியா யெழுந்த
வகைக்கா யிரங்கோடி மாமுரசந் தான்முழங்க
தொகைக்கா யிரங்கோடி சொல்விருதுந் தான்துலங்கப்
பொருதானை வெள்ளம் புணரியெனச் சூழ
தருமாதிபன் சேனை தன்னை அணிநிறுத்தக்
குருசேனை யெல்லாம் குருநிலத்தில் சேர்ந்தற்பின்,
இருசேனையும் போரெதிர்ந்து அடர்ந்தா ரம்மானை.

அருச்சுனன் படை கொண்டு செல்லல்

காலால் அரக்கர் கணங்கள் தனைத்தேய்த்து
வாலாவ் அரக்கர்களை வவ்வியே தான்பிணித்து
மையாக மேதினியில் வாரியே தானடித்து
கையாற் கசக்கிவிட்ட கால்குமரன்[1] மாலனுமன்
பொற் றுசத்திநின்று பொலிந்து வந்துகூத்தாட
விற்றிகிரித் தேரதனை மேகநிறத் தான்நடத்த
எண்டிசையும் வென்ற இடக்கைவரி வில்லுடனே
அண்டர் மதிக்க அணித்தேரில் அருச்சுனனும்

அம்பு விடல்

முப்புவனம் அஞ்ச இகல்மூண்டார் அம்மானை.
பார்வரி வில்வளைத்துப் பாணம் பலதெரிந்து

கார்வருஷம் போலாகக் கைவிரசாய்த் தான்விடுத்தான்.
அந்தரமுந் திக்கும் அகல்வெளியும் தோற்றாமல்
கந்தரம்[2] போலக் கணைமாரியாய் நிரைத்துந்

---

1 கிரீடம்
2 ஊது சின்னம்

தேர்கள் பலகோடி சிந்துரங்கள் பல்கோடி
கார்கரிகள் பலகோடி கால்தளங்கள் பலகோடி
சின்ன பின்னமாகச் சிரசு பதமீறாய்
வின்னம் படஅறுத்து வெங்கோல் விடாமழைபோல்
கயப்பாய் பரிக்காலாள் காவலர்கள் பேருடலம்
மயிர்க்கால் தொறும்சரமாய் மாறாமலே சொரிந்து
கணக்கால் அறாத கணச்சேனை யைக்களத்திற்
பிணக்கா டெனக்குவித்தான் பேறாய மாமலைபோல்
வெள்ளம்போல் எத்திசையு மேகுருதி ஆறோட
நள்ளும் பலசூழலில் நாணாம லேசுழலப்
பம்பரம் போலப் படர்சுழியில் பாடலங்கள்[1]
உம்பர் மதிக்க உரமாய்ச் சுழலக்
காலாளும் தேரினமும் கஞ்சுழலி லேசுழல
மேலாடி வில்விசையன் வெம்போர் தொடங்குவதை

வீடுமர் எதிர்த்தல்

சந்தனுவின் மைந்தனிவன் தான்பார்த்து மேநகைத்து
இந்தப்ப கையைமனத்து எண்ணாமல் வில்விதுரன்
சிந்தை முறித்துச் சிலைமுரிவித் தான்பாவி
தந்தை குருவென்சொல் தனைமதிப்ப தேநெகிழ்ந்தான்
அறத்தை நெகிழ்ந்தான் அதர்மத்தைக் கைப்பிடித்தான்.
உறவுற் றவரைவிட்டு ஊராரைக் கைப்பிடித்தான்
நெஞ்சிற் பொறுத்த நிருபன் பொறைநெருப்பு
கொஞ்சத்தில் விட்டிடுமோ கொல்லா தொழிந்திடுமோ
தனக்குப் பெருங்கேடும் தானயலார் சொற்சூடும்
சினத்தினில் தேடிவைத்தான் தீயனென்று நெஞ்சழிந்து
விதியின் படிமுடியும் மிக்கோர்க ளானாலும்
மதியின் திறத்தாலே வாழ்வதினி என்றுனியே
பொற்கிரியைப் போன்ற பொருதேரைத் தானடத்தி
விற்றிறலின் மிக்க விசையன்மேல் போர்மூண்டான்.
ஏகமோர் பத்தா யிரச்சதமோ ராயிரமாய்
வாகது பத்தாயிரமாய் வண்ணலட்சம் கோடியதாய்
சங்கமாய் விந்தம் பதுமம் சமுத்திரமாய்
வெங்கணைகள் தாமரையாய் வெள்ளம் பிரளயமாய்ப்

1 குதிரை

பொற்பிலக்கம் கோரையதாய் போதாஉ ரோசனையாய்
கற்பம் நிகற்பம் கடிமறு தம்பனையாய்
உற்பலமாய் அற்புதமாய் ஓதும் அனந்தமதாய்ப்
பற்பலந் தமதாய் பாணமொருவர்க் கொருவர்
சத்தமே கங்கள் சரமாரி பெய்வதுபோல்,

அத்த விசையாக அர்ச்சுனனும் வீடுமனும்
கனமாரி போலக் கணைமாரி மாறாமல்
வினமாரி தானிருவர் வீசுகின்ற உக்கிரத்தால்[1]
இருவர் படையும் இயங்கி மடிந்ததுவே
ஒருவர்க் கொருவர் உயர்விலார் தாழ்வுமிலார்
மண்ணடுங்க உம்பர்திரு மெய்நடுங்கக் கைநடுங்க
திக்கயங்கள் அஞ்சத் திசைபால கர்நடுங்க
மிக்கெண் கிரி[2]நடுங்க வேசேடன்[3] மெய்நடுங்க
நாகர் நடுங்க நரபால கர்நடுங்க

ஏகமாய் மூவுலகம் எங்கும் நடுநடுங்கச்
சலதி சுவறமிகத் தாரகைகள் தானுதிர
கலகப் பெருப்போராய்க் கைகலந்தார் அம்மானை.
உருத்திருவேர் சர்ம முடன்ற பெரும்போரில்
விருத்தன் கடுங்கணைகள் மேன்மேலும் விட்டமையால்

அருச்சுனன் தளர்ச்சி

விற்கு நிகர்த்த விசையன் திருமேலும்
கற்குவடு தாங்கி கணங்காற்றென் றன்மேலும்
மொய்த்த கணையால் முகில்போன்ற மேனியெல்லாம்
நெய்த்த பவள நிறம்படைத்த தம்மானை.

கண்ணன் கூற்று

மாயன் இவைகண்டு மலர்க்கண்ணால் தீயுகுத்து

நீயென் னுயித்தம் நிகரிலாய் செய்துநின்றாய்
அட்ட திசையும் அடக்கிவென்ற வில்லாண்மை
கெட்ட விருத்தனுடன் கேவலமாய் நிற்பதென்னோ
காண்டீபன் என்றவுடன் காதிலே கைசேர்க்க

---

1 சினமிக்க வேகம்
2 எட்டு மலைகள்
3 ஆதிசேடன்

மூண்டே சரப்போரும் மூட்டென்றான் அம்மானை.
உருத்துள்ள மாயன் உரைத்தமொழி கேட்டு

அருச்சுனன் அம்பு விடல்

விருத்தனுக் கிம்மேன்மை வீரமென் றேவிசையன்
தாலக் கொடிமரமேல் தாவுதேர் அச்சுருள்மேல்
கோலத் தனுமேல் கொடுங்கணைமேன் மேலேவி
அற்பமெனப் பொடித்து அங்கவன்தன் மார்புருவப்

பொற்புடன் நாலு பொருவிலா வாளிதொட்டான்
காற்றினும் ஊழிக் கனலில் அறக்கொடிய
கூற்றினும் வெய்ய குமரன்கை வேலனைய
வாளி ஒருநாலும் மார்புருவி ஓடியதால்

வீடுமர் துயருற அசுவத்தாமன் எதிர்த்தல்

மீளியாம் கங்கைசுதன் மெய்மறந்து கைமறந்து
தெய்வ விரதன் செயலற்று நிற்பளவில்
ஐவர் மதிக்க அசுவத்தாமா எதிர்த்தான்
ஒப்பிலா வீரர் ஒருவர்க் கொருவர்களாய்
துப்பினால் வன்போர் தொடங்கினா ரம்மானை.

சாத்தகி பூரிசுதா முதலியோர் போருதல்

சாத்தகியும் பூரியுமே தாவி அமர்பொருதார்

தோத்தும் துரோணன் துருபதனும் போர்மூண்டார்
சேனா பதியும் சிலைக்கிருப னும்பொருதார்
தானாண்மை வீமனுடன் சல்லியனும் பொருதார்.
வெய்ய சகுனி விறல்நகுல னும்பொருதார்
செய்யகுந்தி போசனுடன் சிந்துபதி போர்பொருதாள்
கிருதபற் பனுடனே கிட்டிவள வன்பொருதான்
வருபகை தத்தனுடன் வாயுசுதன் சேய்பொருதான்
சாதேவன் துச்சா தனனுமே போர்பொருதான்
வாதாக வீடுமனும் வாளபிம னும்பொருதான்
மன்னவரும் மன்னவரும் மாறாது போர்புரிந்தார்
நன்னிலமைத் தேருடன்தேர் நாணாமல் போர்மூண்டார்
தோலாளும் தோலாளும் சோராது போர்மூண்டார்
காலாளுங் காலாளும் கைகலந்து போர்மூண்டார்

கற்கிமன்னர் தங்களுடன் கற்சிமன்னர் போர்மூண்டார்
விற்கதிபர் தங்களுடன் விற்கதிபர் போர்மூண்டார்
எவ்வா யுதத்தோடு எதிர்த்தபல பேர்களுடன்
அவ்வா யுதத்தோ டவர்கவராய்ப் போர்மூண்டார்
திரண்ட படைகளெல்லாம் சேரவே இவ்வாறாய்
இரண்டு படையும் இகல்மூண்டா ரம்மானை.

மத்திரன் போர்

மத்திரனு மஞ்சீறும் வயச்சண்ட மாருதத்தின்
புத்திரனும் வன்போர் புரிந்தவிதங் கூறலுற்றாம்
தன்னைநிகர் இல்லாத சண்டவா யுப்புதல்வன்
வன்னிதனி லுங்கொடிய மத்திரன்மேல் நாலுகணை
விட்டா னதனை விரைந்தறுத்தீ ரைந்துகணை
தொட்டார் அதனைத் துணித்தார் இரண்டுசரம்,
வாயுசுதன் விட்டான்பின் மத்திரர்கோ மான்விலக்கி
தேயுவென எண்ணிரண்டு திண்கூர்ங் கணைவிடுத்தான்
ஈரெட்டுக் கோலும் இமைப்பிலே நீறாக்கி
ஓரெட்டு வாளி உரமீதுற விடுத்தான்
வாளியோர் எட்டுஅகன்ற மார்பில் பதித்திடவும்

சல்லியன் போர்

ஆளிபோல் சல்லியனும் ஐயிரண்டு கோலேவி
சிங்கத் துசமறுத்து திண்சிலையும் தானறுத்தான்.
துங்கத் தனுவளைத்துச் சோராதுஐ யாறுகணை
ஓவிக் கொடிப்பாகு இவுளிதேர் அச்சுருளும்
தாவித் துணைநாணத் தவிடாய்ப் பொடிபடுத்தி
அங்கங்கள் தோறும் அடர்ந்தா சுகம்பரவ
சிங்கக் கொடியான் சினந்துவிட்டான் அம்மானை.
வில்லிழந்து தேரிழந்து மெய்களெல்லாம் புண்ணான
சல்லியன் வெங்கண் தழல்சொரிய மீண்டோர்தேர்
ஏறினான் நீண்ட இடக்கைவரி வில்வளைத்து
நூறினான் வெய்யசரம் சோனையென அம்மானை.

வீமன் போர்

வன்கண்ணன் விட்ட வடிக்கணையெல் லாம்வீமன்
தன்கணைக ளாலே தவிடாய்ப் பொடிபடுத்தி

கைவிரசு மாறார் கனவின்னி மீறாமல்
எய்விரகில் மிக்காய் இருவோர்களும் பொருதார்
வன்போராய்ச் சல்லியனும் மால்வீம னும்பொருதி
மின்போர்ச் சரத்தால் விறற்கொடிவில் நாணறுத்துப்
பாகனைத் தேரைப் பருதியுருள் தேர்மாவை
நேகப் பொடிபடுத்தி நெஞ்சுருவ அஞ்சுகணை
விட்டான் புயவீமன் வெந்நிட்டான் சல்லியனும்.
மட்டார் வலம்புரித்தார் மன்னவனும் தம்பியரும்
பட்டாபி ஷேகப் பரராசர் பற்பலரும்
கட்டார் மகுடமுடிக் காவலர்கள் பற்பலரும்
சலதிப் பெரும்படையத் தானதொரு காலாளும்

பலர் வீமனை வளைத்தலும் அவன் தாக்குதலும்

உலவைத் திருமகனை ஓரட்டாய்த் தான்வளைத்தான்
பிரசண்ட வாயுவெனும் பேறான மால்வீரன்
விறற்கொண்டல் ஒப்பாக வீசினான் வின்மாரி.
சிரங்கள் மகுடமுடன் சேர்ந்தே அறுந்துவிழக்
கரங்கள் படைகளுடன் காசினியில் அற்றுவிழ
உரங்கள் வடங்களுடன் உற்றே யறுந்துவிழப்
பெருங்கன மலைப்புயங்கள் பேதமற அற்றுவிழ
இதலைப் பிளக்க இடைகள் அறுந்துவிழக்
கதழ்வி னுடன்தொடைகள் கால்கள் அறுந்துவிழப்
பரிகள் அறுந்துவிழ பாடலத்தோர் மாய்ந்துவிழக்
கரிகள் துணியக் கரிவீரர் மாய்ந்துவிழ
இரதந் துணிந்துவிழ ஏந்தல்களும் மாய்ந்துவிழ
பொருமந் தரவீமன் போர்க்கணைகள் வீசிநின்றான்.
மேவார் பெருஞ்சேனை வெள்ளக் கடல்சுவறப்
பாவாணர் சாபமுகர் பல்பகழி வீசிநின்றான்.
வீசுங்கணை மழையால் வெம்ப டைஎல்லாமடிந்து
பாசப் பிணமலைகள் பன்மலையாய்க் கூய்ந்ததுவே
நாற்றிசையும் சோரி நதியெழுந்தே தானோட

கண்டு துரியோதனன் போரிடல்

பாந்தட் கொடியோன் பதறியே கோபமுற்று
சீற்றமிகுந்தே சியோதனன் வெம்போர் மூண்டான்

வீமன் எதிர்த்தல்

காந்தியே ஐந்துகணை வீமன்மேல் விடுந்தான்
ஐந்து கணையும் அறுத்துஐ இரண்டுகணை
மைந்தினுடன் வீமன் மன்னவன்மேல் தான்விடுத்தான்
ஈரைந்து கோலும் இமைக்கு முனமறுத்து
ஓரைந்து வாளி உறுக்கி உரவன்விடக்
காலின் புதல்வன் கணைஐந் தையுமறுத்து

நாலைந்து வாளி நமன்போல் சினந்து விட்டான்.
தக்கநா லைந்து சரந்தனையும் நீராக்கி
ஒக்க நாலைந்து உரத்த கணைவிடுத்தான்.
விட்ட கணையனைத்தும் வீமன் அறுத்தெறிந்து,
எட்டுக் கணைதெரிந்து ஏந்தல்மே லேவிடுத்தான்.
கோலெட் டையுமறுத்துக் கோமான்ஓர் ஐங்கணையால்
மேலிட்ட வீமன் விறற்கொடியைத் தானறுத்தான்.
சிங்கக்கொடி. சிதையச் சிந்தையழல் பொங்கியதால்
அங்கைவரி வில்வளைத்து ஐயைந்து வாளிவிட்டுப்
பாகன் முடியறுத்துப் பாடலங்கள் நாலறுந்து

ஆகஉருள் நாலறுத்து அச்சறுத்து வச்சிரப்போர்
தேரறுத்து ஆர்இறுத்து திண்கொடியைத் தானறுத்து
வாரமுடன் நாண்அறுத்து மற்றவனை யும்துளைத்தான்
தேர்வில் லிழந்து திகைந்துநெடு மூச்செறிந்து

துரியோதனன் பக்கல் அழிவு

ஓர்வில்லுக் காற்றாது உரவன் புறங்கொடுத்தான்
தம்பியரும் வில்லிழந்து சாரதியும் தேரிழந்து
வெம்பிப் புறம்போனார் வேந்தர்களும் வென்கொடுத்தார்
பூரியும் சாத்தகியும் புங்கமழை பொழிந்து
தேரிழந்து பாகிழந்து செங்கைவரி வில்லிழந்து
இருவரும் காலாளாய் எதிர்கொண்டு போர்முனைந்து
பருதி புகுமளவும் பண்புயுத்தம் செய்துநின்றார்

நகுலன் சகுனி போர்புரிதல்

நகுலனைத் தேருடைத்து நாணறுத்து வில்லறுந்து
சகுனிமிக வினைப்போர் தான்செய்தான் அம்மானை
பாஞ்சாலன் சேனையொடும் பந்து சனங்களொடும்
தேஞ்சார்ந்த சொன்மறையோன் தேர்நோக்கிப் போர்புரிந்தார்

துருபதன் தன்னுடனே சோறாக வீறாகக்
குருவும் கடுத்துக் கொடும்பூசல் செய்துநின்றார்
ஊழிப் பெருங்காற்றும் உற்றவடவையும் போல்
பாழித் தனுக்குருவும் பாஞ்சாலனும் பருதி
புக்கு மளவும் புவனம்நடுங்க வாய்குருதி
கக்கும் படியாய்க் கணைப்போர் தொடங்கிநின்றார்

அபிமன் போர்

பாத்தன் மகனும் பகீரதியாள் புத்திரனும்
கூத்தன் நடுங்கக் கொடும்போர் புரிந்துநின்றார்
தாதை செயும்போர் தன்னில் சதமடங்காய்
மோதமரில் வாளபிமன் மூண்டகொடும் போர்பார்த்து
விருத்தனும் ஓயாமல் மேன்மேலும் போர்புரிந்து
உரத்த பனைக்கொடியும் உற்றபரி பாகொடுதேர்
வில்லும் இழந்து வெறுங்கையாய் நிற்பளவில்

அபிமன் இகழ்ச்சியுரை

மல்லல் அபிமன்உயிர் மந்தாகினி மகனைப்
பாத்துச் சிலசொல் பழிப்பாய் நகைத்துரைப்பான்
ஏத்த நதியாட் கியல்பான புத்திரனே
எங்கள் குலத்துக்கு இறையென்றும் பாட்டனென்றும்
மங்கும் பெரிய வயதன் விருத்தனென்றும்
ஈங்கி யுனக்குயிர் இன்றீத்தேன் நினைப்போல்
நாங்கு கிழவருடன் நாடிப்போர் செய்யாமல்
வாலிபரைக் கண்டவுடன் வாள்மடக்கி ஓடாமல்
ஏலுவது போலே எதிர்க்காதே என்றுரைத்தான்

வீடுமர் கூற்று

பேரன் மகன்சொன்ன பிரபலத்தைத் தான்கேட்டு
விரர்கள் சிங்கம் விருத்தன் மிகநகைத்து
இழுக்குரை சொற்றாய் எனதுவலி பாராமல்
வழுக்கைப் பயலேயுன் வாய்துளைப்பேன் என்றுருத்து
மீண்டுமறு தேரேறி வில்வளைக்கு முன்னாக
நீண்ட சிலைக்கு நிகரில்லா வாளபிமன்
மாமகுட வர்த்தனனும் மன்னரணி முறிய
காமனுட மைத்துனனும் கார்போல் சரமாரி
சோனைஎனச் சிந்தித் துசம்தேர்ச் சிலையழித்துச்

சேனையடங்கச் சிதறல் பொருதழித்தான்
திக்கெல்லாம் நாலுவகைச் சேனைப் பெரும்பிணமாய்
மிக்கப் பிரளயமாய் வெங்குருதி ஆறோடத்
தாக்கினான் வாளபிமன் தான்பார்த்துக் கங்கைசுதன்
நோக்கிலார் போலாக நுண்ணறிவான் தானிருந்தான்

விசையன் அசுவத்தாமன் போர்

வாகை விசையனுடன் வல்லசுவத் தாமாவும்
நாகர் நடுங்கவிறல் நச்சரங்கள் வீசிநின்றார்
கொண்டலும் காற்றும் குமுறிச் சொரிவதுபோல்
சண்டப் பிரசண்ட சரமாரி பெய்துநின்றார்
மாறாமல் சோனை வருஷிப் பதுபோல
வீறாய் இருவர்களும் வெம்போர் தொடங்கிநின்றார்
ஒத்த திறத்துரத்து ஊடாடும் போர்தனிலே
வெத்தி விசயன்மிக மேலோடிக் கைவிரசாய்
தெரிந்துகொடுங்கணையைச்செல்லொத்துத் தான்சொரிந்து
விரைந்து கொடித்தேரும் வில்லும் பொடிபடுத்தி
ஒன்றின்பின் ஒன்றாக ஓயாமல் மெய்யுருவ
அன்றன்பது அறுப தாசுரங்கள் தான்விடுத்தான்
பொருக்கு மளவும் பொறுத்தான் பொறுக்கரிதாய்க்
கறுத்து நிலைக்கரிதாய் கரகத்தா மன்முறிந்தான்

அசுவத்தாமன் பின்னிட்ட விசயன் மேற்சேறல்

தேசிகன் மைந்தன் தெரிந்தோடிப் போனதற்பின்
வாசவன் மைந்தன்மிக மன்னரணி மேல்நடந்தான்
மன்னர் அபயமிட வாளபிமன் தானொருபால்
முன்னர் நெருக்கி முறுக்கவொரு பால்விசையன்
தாமதி யாமல் சரத்தாற் சிரங்குவிக்க
வீமன் ஒருபால் விறற்போர் தொடங்கிநிற்க
இருபத்தை யாயிரம்பேர் ஏற்றமுடி மன்னவராய்ச்
சுருபத்தைக் காணரிதாய்த் துள்ளுமழலால் மடிந்தார்
முடிமன்னர் இவ்வாறு மொய்த்த களத்திறந்தால்
படிமன்னர் சேனை படிந்திறந்த தெனசொலுவாம்

கதிரவன் மறைதல்

தாவுகின்ற தேரினமும் தந்திஇனத் தொகையும்

மாவும் பதாதிகளும் மாய்வதுகண் டேபதைத்துப்
பார்ப்பதுவு மேகொடிய பாதகம்என் றேநினைத்து
மேற்றிசையி லேபருதி மிக்ககிரி யடைந்தான்
பாந்தள் துசனுடனே பாகீரதி குமரன்

வேந்தருடன் சேனைகளும் வெம்பாசறை யடைந்தார்
வீமன் அபிமன் விசையனுடன் மற்றோரும்
தாம னுடனேகித் தன்பா சறையடைந்தார்
மருவியவர் அப்பொழுது மாறு மளவாக
இருதிறத் தோரும் இயல்பாய்த் துயில்புரிந்தார்
இந்திர திசைவெளிர எல்லோரு மேயெழுந்து
புந்தியுடன் ஆறாநாள் போர்பொருதல் நாடினரே
வீறான அஞ்சாநாள் வெம்போரை எடுத்துரைத்தோம்
ஆறாநாள் வெம்போர் அருள்செய்வோம் அம்மானை.

ஐந்தாநாள் போர்ச்சருக்க முற்றும்

வீரய்யன் துணை

ஆறாம்நாட் போர்ச் சருக்கம்

மறுநாட்காலை, திட்டத்துய்மன் மகரவியூகமும், வீடுமன் கிரவுஞ்ச வியூகமும் அமைத்துப் போரிட முற்படுகின்றனர். இருபடைகளும் சினந்து போர்புரிகின்றன. துரோணன் தேர் ஏறிச் சென்று வீமனோடு சண்டை செய்யத் தன் ஆசிரியரின் குதிரையையும் பாகனையும் அழித்துவிடுகிறான். அப்பொழுது சல்லியன் தேரோடு வீரம் பேசிவர, வீமனால் ஏற்றப்படுகிறான், சல்லியன் தளர்வு கண்டு, துரியோதனன் சகுனி முதலியரோடு வந்து சண்டை செய்கிறான். வீமனால் பலர் இறக்கின்றனர். துரியோதனன் முதலியோர் பின்னிடுகின்றனர். விகன்னன் வந்து அபிமனோடு போர் புரிந்து தேர் இழந்து, சித்திரசேனன் தேரில் ஏறுகிறான். அபிமன் ஏனையோரைத் தாக்கி விகன்னன் உடல் அழியுமாறு அம்பு செலுத்துகிறான். அனைவரும் தத்தம் இடம் செல்கின்றனர். அபிமனைத் தந்தையர் பாராட்டுகின்றனர். கதிரவன் மறைகின்றான்.

ஏழாம் நாட் போர்ச் சருக்கம்

இருதிறத்தவர் படைகளும் போருக்குமுற்பட, கண்ணன் பாம்பு வியூகமும் வீடுமர் சகட வியூகமும் அமைத்துப் போரிட முனைந்தனர். பாண்டியன் துரோணரிடம் தோற்றோடுகிறான். கடோற்கசன் தோன்றுகிறான். கதாயு சாத்தகியிடம் தோற்கிறான். சகுனி சல்லியோன் ஆகியோரை வீமன் வெல்லுகின்றான். அருச்சுனனும் வீடுமரும் போர் புரிகின்றனர். அதில் வீரர் பலர் மாள்கின்றனர். கதிரவன் மறைந்து மறுநாள் உதயமாகிறான்.

எட்டாம் நாட் போர்ச் சருக்கம்

வீடுமர் சூசீ வியூகமும் கண்ணன் சகட வியூகமும் அமைத்துப் போரிட முற்படுகின்றனர். தருமனும் துரியோதனனும் களம் வருகின்றனர். துரியோதனன் தன் துணைவர்களோடு வீமனை வளைக்கின்றான். துரியோதனன் தம்பியருள் எண்மரை வீமன் மாய்க்கின்றான். துரியோதனன் அதனால் மனம் அழிந்து நிற்க, வீடுமர் தேற்றுகிறார். கடோற்கசனும் இராவானும் பல வடிவு கொண்டு போர் புரிகின்றனர். பகன் தம்பி அலம்புசன் வீமனோடு போர் புரிகிறான். அலம்புசன் இராவானுக்குத் தோற்கிறான். அலம்புசன் கருடனாய் வந்து இராவானைக் கொல்கிறான். துரோணரும் அசுவத்தாமனும் பாஞ்சாலரோடு அம்பு விடுகின்றனர். இராவான் இறப்புக் கேட்டு அபிமன்யு முதலியோர் வந்து போர் புரிகின்றனர். துரியோதனன் வந்து வீமனை வளைக்கின்றான். கதிரவன் மறைகிறான். இருதிறத்தாரும் பாடி வீடு அடைகின்றனர். இராவான் இறப்புக்கு வருந்திய ஐவரையும் கண்ணன் தேற்றுகிறான். கதிரவன் உதயமாகிறான்.

ஆறாவது நாள் போர்ச் சருக்கம்

கோயிலா யுடையபைங் கொண்டலார் கண்துயில்
பாயலாய் வாழிநீ பாக்கியம் செய்ததோ
தீயலால் உவமைவே றில்லெனத் தீயநின்
வாயெல்லாம் நஞ்சுவாழ் வாளெயிற் றுரகமே

தரும ராசாக்கன் வீரய்யன் துணையாக வேண்டியது

பாண்டவர் படை மகரவியூகமும் துரியோதன் படை கிரவுஞ்ச வியூகமும் கொளல்

வீறான பஞ்சவர்க்கும் வேந்தான நூற்றுவர்க்கும்
ஆறா நாள் போர்மூள ஆதவனும் தோன்றினனே
அருக்கன் உதித்தற்பின் ஐவர்களும் சேனைகளும்
பெருக்க முடனே பெரும்போர்க் களத்தில்வந்தார்
ஆழினனப் பரந்த ஐவருடன் சேனையெல்லாம்
கேள்வி தனில்வந்தோன் விரகாய் மனந்தெளிந்து
மகரவியூகம் வகுத்தான். பகுத்தறிவால்.
பகரும் அரவுயர்த்தோன் பாரக் கடற்படையை
தரும்செல்வம் இன்பம் தனைநீத்த வீடுமனும்
கருஞ்ச வியூக[1]மெனக் கட்டினன்காண் அம்மானை.
யானை பரிதேர்க்கால் ஆளாக இருதிறத்தும்
சேனைக் கடலிரண்டு சேர்ந்தெதிர்ந்த தம்மானை.

நாற்படைப் போர்

இரதத் துடனே இரதம் எதிர்மலைந்த
கரடக் கரியுங் கரியுமே போர்மூண்ட
துரகத்[2] துடனே துரகமுமே போர்மூண்ட
மருவிப் பதாகினியும்[3] வாகினியும் போர்மூண்ட
தரந்தர மாகச் சதுர்வகையாம் சேனைகளும்
நிரந்தரம் வல்யுத்தம் நீங்காது செய்துநின்றார்

வீடுமனும் திட்டத் துய்மனும்

நதிமைந்தன் ஐவர்தள நாதன் தனைநோக்கிக்
கதிகொண்ட மாத்தேர் கடுகியே தானடத்திப்
பஞ்சவர்கள் சேனா பதிமேல் இரண்டுகணை

---

1 கிரவுஞ்ச வியூகம்
2 குதிரை
3 காலாட்படை

விஞ்சை விருத்தன் வெகுண்டுவிட்டா னம்மானை
விட்ட கணையறுத்து வேள்விமகன் நாலுகணை
தட்டுருவ வேவிடுத்தான் தான்மாற்றிக் கோலாறு
துட்டத் துய்மன்மேல் தொடுத்தான் அறுகணையும்
வெட்டி யறுத்து விறலோன் பதுகணையும்
தங்காது விட்டான் தழல்போல் கொதித்தவனும்
ஆங்கார மாக அறுத்துமழை முகில்போல்
செல்மாரி[1] இரண்டு சிதறாது பெய்வதுபோல்
வில்மாரி யாய்க்கணைகள் வீசினார் அம்மானை.

எட்டுத்திசை வெளியும் ஈரெட்டுக் கோணமெல்லாம்
விட்ட பகழியாய் விம்மி நிறைந்ததுவே
திக்கெல்லாம் அம்பாய்ச் திதறியே நின்றிடவே
மிக்கசே னாபதியும் வீடுமனு மேபொருதார்.
நேரொத்த போரில் நிகரிலா வீடுமனும்
பாரித்த கோபமொடு பஞ்சவர்சே னாபதியைத்
தக்கபரி நாலறுத்துச் சாரதிவில் நாணறுத்து
மிக்கவன்தன் மெய்யுருவ வெங்கணையுந் தான்விடுத்தான்

திட்டத்துய்மன் தளர்தல்

கூற்றனைய வாளி கொடுமையாய்த் தைத்துருவ
மாற்றரிய துன்பமுடன் மன்னன்வெருக் கொண்டானே.

விருத்தன் கொடும்போர்க்கு மெய்யர்ந்து கைசோர்ந்து
தரிப்பற்று நில்லாமல் தான்புறங்கொண் டோடினனே.
ஐவர்சே னாபதியும் அஞ்சிவெருக் கொண்டோட

பாண்டவர் படை பின்னிடுதல்

தொய்விலாக் கங்கை சினந்து மேலாடி
மால்மாரி ஒப்பாய் வருஷித்த வின்முகத்தில்
கோல்மாரி யாகக் கொதித்தே அவன்சொரியத்
தேருங் கரியும் திறன்மாவும் காலாளும்
போரு மழிந்திறந்து பொங்கியசெந் நீராற்றில்
நின்று சுழல நிகர்த்த வன்பூசல்
அன்றுசமர் செய்திடவே ஐவர்பெரும் படைகள்
அணிகெட்டு மேன்மைகெட்டு அன்றுபுறம் இட்டாரே

---

1 மேகம் மழை

துணிவற்று மன்னரெல்லாம் சோர்ந்து தெறிகெட்டனேர
வீமன் பெருந்தேரும் வின்முறிந்து சொன்முறிந்து
தாமதி யாமல் தளர்ந்துபுறம் இட்டனனே.
சாத்தகியும் தேரும் தனுமுரிந்து ஓடினனே
ஏத்த கடோற்கயனும் ஏமுறிந்து ஓடினனே
சூரன் முறிந்தான் துருபதனு மேமுறிந்தான்
ஈரச் சதாகினியும் இலாடனும்வெந் நிட்டனனே
நகுலன் சகாதேவன் நாணிமுது கிட்டனனே
இகற்சிங்கம் போலாக இவ்வாறு வீடுமனும்
கூளந்தனைத் துறந்து கொண்ட பெருநெருப்பால்
... ... ல்த் தேர்களெல்லாம்
... ... த்தி
... ... த்தறித்தான்
... ... கேகயன் குமரன்
... ... வில்லிழந்தான்
... ... தான்மாய்ந்தான்
... ... டர்கோன் சேய் மாய்ந்தான்
... ... ஏன் சேய் மாய்ந்தான்
வங்கருடன் காமபோசன் மக்களுமே தான்மாய்ந்தார்
சிங்களவர் சீனர் திறல்சேனர் தான்மாய்ந்தார்
காசியான் சேயும் கலிங்கர்கோன் சேய்மாய்ந்தான்
காசர்கஞ் சாயந்திரர் கடார கிடாரர்களும்
கொல்லத் தரசன்மகன் கூர்ச்சரத்து வேந்தன்மகன்
பல்லவத்து வேந்தன்மகன் பப்பரர்கோன் தன்குமரன்
மற்றுந்தே சத்திலுள்ளார் மன்னரல்லார் புத்திரர்கள்
கொற்றக் களத்தில் கொலையுண்டா ரம்மானை
... ... கள்
... ... மானை
... ... றினரும்
... ... த்திலே மடிந்தார்
... ... யந்தனரே
... ... தோடலுற்றான்
... ... ர்ந்து ஓடலுற்றான்

துரியோதனனின் படை பின்னிடல்

மக்கள் எழுவரையும் மாயஅன்று தான்கொடுத்து

ஒக்கலுடன் சகுனி ஓடினன்தேர் வில்லிழந்தே
பூரிதேர் வில்லிழந்து புத்திரனைத் தானிழந்து
காரிடியைக் கண்டுநொந்த கட்செவி[1]போல் ஓடலுற்றான்.
சிந்து பதிகிருதன் தேரிழந்து வில்லிழந்து
சிந்தை கலங்கித் தெறிகெட்டே ஓடலுற்றான்

துச்சா தனனும் துணைவரும்தேர் வில்லிழந்து
நச்சாடாவு இடிக்கு நாணுதல்போல் ஓடலுற்றான்.

சகுனி முதலியோரும் விமனும் பொருது பின்வாங்குதல்

துப்பாய் உயுத்தம் தொடுத்த தெடுத்துரைப்பாம்.
சகுனியும் சல்லியனும் சர்ப்பகேதன் துணையும்

---

1 பாம்பு

இகல்கொண்ட வீமன் இடத்தில் கடுங்கொடுபோர்
செய்துவரி வில்லிழந்து திண்டேரும் பாகிழந்து
மெய்தயங்கு அத்தகிரி வெய்யோன் புகுமளவும்
முன்னொருக்கால் இருக்கால் முக்காலுந் தான்தோற்று
நின்ற பணித்துசனும் நேரிளைய தம்பியரும்
சல்லியன் சூது சகுனிமுதல் மன்னவரும்

வில்லிழந்து பாகிழந்து வெம்பரியும் தேரிழந்து
மான மழிந்து மனமும் முனைமழுங்கி
ஈனமுடன் பின்காட்டி ஏகினன்காண் அம்மானை.
மன்னவர்கள் கோமானும் மற்றோரும் ஓடியதால்

வீமன் அறை கூவல்

தன்னை நிகர் இல்லாத தண்டாயுதவீமன்
படியந் தரமும்[1] பகிரண்ட மும்நடுங்க
வெடிகொண்ட வெண்ணகையாய் வீறாக ஆர்ப்பரித்துத்
தாடாண்மை யான சமர்க்குடைந்து ஓடுவதேன்
வாடா அரவுயர்த்த மாபாவி வன்போர்க்கு
அன்னத்தில் நஞ்சிட்டு அயர்ந்தளவில் மெய்பிணித்து

உன்னொத்த பேரோடு உயர்கங்கை யில்வீழ்த்திக்
கள்ளக் கயத்தால் கவடாகச் சூதாடி
எள்ளத் தனையும் இரக்கமறச் சபையில்
தோகை தனைப்பற்றித் துகிலுரியத் தொக்கதுபோல்
ஆகவத்தில் போர்பொருதல் ஆமென்றே ஓடிவந்தாய்
பாவி யுனது படைமன்னர் பார்த்திருக்க
ஏவிருக்க வில்லிருக்க ஏற்றவுயிர் மெய்யிருக்க
ஆற்றாமல் அஞ்சி அலைவாய்த் துரும்பதுபோல்
மாற்றார் நகைக்க மருகுவதுன் வீரியமோ
என்றிடிபோற் சொல்ல எதிர்த்தொன்றும் சொல்லாமல்

வென்றி குறைந்து புறமிட்டான் அரசர்பிரான்.

துரியோதனன் புறங்கொடுக்க வீமன் படையோடு மோதல்

மன்னன் புறங்கொடுக்க மால்வீமன் ஆக்கரித்துச்

1 பூமியும் ஆகாயமும்

சின்னம்பட அணிந்த சேனைகளில் மோதினனே.
தேர்கள் உடைந்துவிழச் சிந்துரங்கள் நைந்துவிழப்
போர்கள் மதியாப் புரவி நசுங்கிவிழ
மேலான மல்வீமன் வெங்கதையால் தாக்கலுற்றான்
மட்பாத் தீரக்கடையில் மண்டுதடி காரனைப்போல்
கொட்பா[1] யுலவுசண்டக் கொண்டல் தருங்குமரன்
தாக்கினான் நாலுவகைத் தானையெல்லாம் தட்டழிய
ஏக்கமாய்ச் செத்திறந்தார் எண்ணிறந்தோர் அம்மானை.

களக்காட்சி

தேர்க்குலங்கள் உள்ளதெல்லாம் செந்தூள் பறந்ததுவே
கார்க்குளங்கள் அள்ளலெனக் கண்டதுகாண் அம்மானை.
பரியும் பதாதிகளும் பங்கக் குழம்பாக்கி
விரியும் திசைகளெல்லாம் வெஞ்சோரி ஆறாக்கி
மன்னர்கரி மாத்தலைகள் மாகமெங்கும் பந்தாக்கித்
துன்னுடல்கள் எண்ணத் தொலையா மலையாக்கி
ஆறாக்கிச் செந்நீரை அங்கிறந்தோர் மூளையெல்லாம்
சேறாக்கிப் போராடிச் செய்துநின்றான் அம்மானை

வீமன் போரைத் தேவர் வியத்தல்

ஈரொன்பது நாட்போர் என்றார் வியாசமுனி
மேருஎங்கும் முன்னாள் விநாயகனார் தீட்டிவைத்தார்
கல்விமுனி சொல்லும் கணபதிமுன் கொட்டியதும்
நல்விபரம் பொய்யோஇந் நாளையிலே உள்ளதெல்லாம்
வாயு தரும்புதல்வன் வைப்பானோ கொன்றிடுவான்.
தேயு வெனவீமன் சினந்து பொருதுவதால்
இற்றைப் போர்தன்னில் இறந்திடும்என்று உம்ப[2]ரெல்லாம்
அற்றைப்போர் பார்த்து அதிசயித்தார் அம்மானை.
உம்பர் திகைக்க உகசண்ட மாருதமாய்
இம்பரம்ப ரம்திசைகள் எங்கும் பெருஞ்சுழலாய்
வச்சிரக் கதாயுதத்தில் வன்மா ருதமெழும்ப
உச்சித மாகஉறும்போர் தொடங்கி நின்றான்

அசுவத்தாமன் வருதல்

வீமன் பொருமுனையில் வில்லாசரி குமரன்

---

1 சுழற்சி
2 தேவர்கள்

ஏமன் நடுங்க இரதம் நடத்திவந்தான்
ஒப்பிலா வீமன் யோசன்தரு மகன்மேல்
தப்பிலா வில்விசையன் சந்ததிபோய்த் தான்மறித்து
எந்தைக்கு மூத்தோன் இகலுக்கு நீநிகரோ
அந்தணரும் போர்முகத்தில் ஆண்மைசெய்ய வல்லாரோ
ஓதிவைப்ப தல்லால் உயுத்தம் மனவலியாய்
சாதிக்க உன்னாலே தள்ளாது துள்ளாதே
எந்தனுடன் சற்றே இகல்பொருது நாணிழந்தால்

... ...

... ...

... ...

அபிமன் அசுவத்தாமன் போர்

பத்துநூ றாயிரங்கூர் பாணந்தனைத் தொடுத்தான்
பத்துநூ றாயிரமும் பற்பமாய்த் தானறுத்தான்
கோடி மகாகோடி கொடுங்கணையும் தான்தொடுத்தான்
கோடிமகா கோடியையும் கொற்றவனும் தானறுத்தான்
வெய்ய கணைச்சங்கம் விடுத்தான் விரகுடையோன்
துய்யசுதன் சங்கம் தொடுத்தறுத்தான் ஓர்நிமிடம்

பூங்கணையோர் அரவிந்தம்மது, பூசுரனும் தான்விடுத்தான்
ஆங்கதனை நீறாய் அறுத்தான் அடலபிமன்
கன்றிப் பதுமம் கணைபூசுரன் தொடுத்தான்
அன்றப் பதுமம் அறுத்தான் அடலபிமன்
தனுவா சரிகுமரன் தான்சமுத்திரம் கோல்சொரிந்தான்
நினைமுனம் சமுத்திரமும் நீறுகண்டான் வாளபிமன்
கோல்தா மரையைக் குறித்தந் தணன்ஏவ
நீறா யறுத்தான் நிமிஷம் கோல்தாமரையும்
வெள்ளம் கணைதெரிந்து வேதியனும் தான்விடுத்தான்
வெள்ளங் கணையால் விரைந்தறுத்தான் வேளபிமன்
ஏ ஓர் பிரளயந்தான் ஏவினான் ஈசனன்[1]னான்
ஏ ஓர் பிரளயம்விட் டீறுகண்டான் மால்மருகன்[2]
வெங்கோல் ஒருகோரை விட்டான்வில் லாசரிசேய்
செங்கோல்அ ரசன்மகன் சேரஅறுத் தெறிந்தான்
வன்கோல்உ ரோசனையை வன்னியான் தானேவ
வன்கோல்உ ரோசனையால் மாற்றினான் வாளபிமன்
கற்பம் பகழி கடுத்தந் தணன்ஏவ
கற்பங் கணையால் கணத்தில் அறுத்தெறிந்தான்
நிகற்பம் பகழி நிரைத்தந் தணன்ஏவ
நிகற்பங் கணையாலே நீறுகண்டான் மாலனையான்
ஏவு கடிமகரம் ஏவினான் பூசுரனும்
ஏவுகடி மகரம் எய்தறுத்தான் சேனையான்
தண்பனை வெங்கோல் தனைப்பூசுரன் ஏவ,
தண்பனை வெங்கோல் தனைவிட்டறுத் தெறிந்தான்.
உற்பலம் பாணம் உரத்தந் தணன்ஏவ
உ 'பலமும் நீறாய் உரத்தறுத்தான் ஓர்நொடியில்
அற்புதம் பாணம் அடர்ந்தந் தணன்ஏவ

... ...

... ...

... ...

---

1 சிவன்

2 அபிமன்

... ...

... ...

... ...

தீதணுகாப் பாஞ்சாலன் சேனைபட மோதினரே,
வில்வேதம் மிக்கான் வேதியன்கை வாளியினால்,
மல்வாகினஞ் சேனைபல மாண்டதுகா ணம்மானை
கைகள் முகங்கள் கண்களுறச் சிரங்கள்
மெய்கள் பலதுணியாய் வீழ்ந்திறந்த தம்மானை

துருபதன் பொருதல்

சேனை மடியச் சினந்து துருபதனும்
மான முடனம்பு மழைபொழிந்து விற்குருவின்
முன்னேதேர் தூண்டி முனைந்தான் குருவெகுண்டு,
உன்னைச் சணத்தில் உயிர்க்கீறு செய்வனென்று
பொங்குசின மூண்டடர்ந்து புங்கமழை பொழிந்தான்.
துங்கக் குருவும் துருபதனும் ஏவுஏவால்
மேவும் திசையும் விசும்புவெளி மூடியதே
தாவும் சரமும் சரமும்போர் மூண்டதுவே
உற்ற சமரில் உயர்குருவின் தேர்க்கொடியை
வெற்றித் துருபதனும் வெங்கணையால் தானறுத்தான்
வாதுற்ற மன்னவன்தேர் மாப்பாக னையறுத்து
கொடித்தேர் உருக்குலையக் கொய்துவில்லும் நாணறுத்து
முடித்தா ரரசன் முரண்கவசம் தான்பிளந்து
முன்காட்டுஞ் சிந்தை முசிக்கக் கணைசொரிய
பின்காட்டா மன்னன் புறமிட்டான் அம்மானை.

யாகசேனன் பொருதல்

அதன்பின்னும் தேர்ஏறி யாகசேனன் எதிர்த்துக்
கதங்கொண்டு வில்லாற் கணைமாரிதான் சொரிந்தான்.
அங்கவன்கை வாளியெல்லாம் அற்பமென நீறாக்கி
துங்கமணித் தேர்வில் துசம்அறுத்து ஓட்டிவிட்டுச்
சிகண்டியைத் தேருடைத்துச் சேனாபதி தனையும்
அகன்குன்றத் தேர்வில் அறுத்துருத்து ஆக்கரித்து

துரோணரும் அபிமனும்

பீறி யடர்ந்துவரும் வில்முனியை வாளபிமன்
கூறினான் செங்கைத் தொடையினால் அம்மானை.

அபிமனும் வின்முனியும் அம்புடன்அம் பேயிகல
உபயரும் என்னையறி உன்னையறி என்றடர்த்து
வன்பூசல் மாரி மழைக்கால் எனச்சொரிந்து
அன்பா சரிதேர் அணுப்போல் நீறாக்கி
இடக்கை வில்நாணும் எழிற்கவச மும்பிளந்து
அடர்ச்சிலை ஆசான்மெய் அஞ்சக் கணைசொரிந்தான்
வீசுகணை மாரியினால் வேதியன்வெந் நிட்டகல

அசுவத்தாமனும் அபிமனும்

பூசுரன்சேய் கண்டு புகைந்தெதிர்ந்தான் அம்மானை.
பாடல் தாமனுக்கும் பார்த்தன் மகன்தனக்கும்
ஆடற் பெரும்பூசல் அன்றுற்ற தம்மானை.

திக்கு நடுங்கச் செகநடுங்க விண்ணடுங்க
மிக்க கெசம்பாலர்[1] விண்ணோரும் மெய்ந்நடுங்க
ஆறாச்சி னங்கொண்டன்று அக்காலக் கொடுங்கணையால்
மாறாப் பெரும்பூசல் வண்மையுடன் செய்துநின்றான்.
நிகரற்ற விரர் நிலையுற்ற சேவகத்தோர்
பகற்தந் கரிதாகப் பாணஞ் சொரிந்துநின்றார்.
சீரொத்து நின்ற செருமுகத்தில் வாளபிமன்
காரொத்து வீசும் கடுங்கார்க் கொடுங்கணையால்
பற்பமாய் மாவிழந்து பாகிழந்து தேரிழந்து
விற்பொடித்து மெய்க்கவச மேயிளந்து மெய்பிளந்து
வீசுங் கணைமழையின் வெள்ளமதி லேதாழ்ந்து
பூசுரன் மைந்தன் புறமிட்டான் அம்மானை.
தந்தைபோல் சேயும் தடுமாறி ஓடியபின்
மைந்துடைய தன்தமையன் மாய்ந்ததுகேட் டேகொதித்து

துரியோதனன் கூற்றும் செயலும்

சர்ப்பக் கொடியோன் தளமெல்லாம் மித்தை[2]யிலே
பற்ப மெனவே படுத்துவேன் பாரிலென்று

---

1 அட்டதிக்கு யானைகளும் திசைப் பாலகரும்
2 பொய்

கார்வருடம் போலக் கணைமாரி தான்சொரிந்து
தேர்முதல் நாலுவகைச் சேனைகளும் நீறாக்கிப்
பற்பல் லுறுப்பும் பகர்ந்தறிந்து கூறாக்கி
வெற்பு வெற்பதாக வியன்களமெல் லாம்நிறைத்தான்.

சூர சங்காரச் சுடர்வே லவன்போல
ஆரபா ரத்தோடு அடர்ப்போர் இவன்செயவே
தெறிகெட்டு மன்னர் சிதறிவெருக் கொண்டோட
விறலுற் றொருபால்இவ் வேந்தமனர் செய்திடவே
தம்பி மகனான தாமனர வான்மடிய

வீமன் சினமும் செயலும்

வெம்பியே வீமன் வெகுளிப் பெருநெருப்பு
பொங்கிக் கொதித்துப் பொருவிலா வீரியனும்
சிங்கம்போல் தாவிச் செருமூண்டான் அம்மானை.
அரவக் கொடியோன் அனீகப் பெருங்காட்டில்
முரணிற் பெருவடவை[1] வெகுளிப் பெருநெருப்பு
பொங்கிக் கொதித்துப் பொருவிலா வீரியனும்
சிங்கப்போல் தாவிச் செருமூண்டான் அம்மானை.
அரவக் கொடியோன் அனீகப் பெருங்காட்டில்
முரணிற் பெருவடவை[1] மூண்டதுபோல் ஒத்ததுவே

ஆர பாரித்தே அடல்வீமன் போர்மூள
தேரெல்லாம் வெங்கணையால் செந்தூள் பறந்ததுவே
உருத்தோற்றம் காணாமல் உம்பல்[2]பல மாய்ந்ததுவே
பரிக்கால் தளங்களெல்லாம் பஞ்சாய்ப் பறந்ததுவே
போர்க்கஞ்சா வீரர் புறங்கொண்டார் பலகோடி
கார்க்குஞ் சரங்கொள் கணைவீமன் போர்பார்த்துச்

துரியோதனன் முதலியோர் வீமனை வளைத்தல்

சிந்தை தரியாமல் தீயதுரி யோதனனும்
பந்து சனமும் பகர்சகுனி சல்லியனும்
தம்பிமார் மற்றுளரும் தக்கப் பெரும்படையும்
செம்பொன் மகாமேரைத் தேசுசக்ர வாளகிரி

---

1 வடவாமுகாக்கினி

2 யானை

கோலி வளைந்ததுபோல் கொற்றவய வீமனையே
வேலியெனக் கம்மி[1] வினைப்போர் தொடங்கினரே
திக்கெலாம் தேர்க்குலமாய்ச் சிந்துரமாய்ச் சேனைகளாய்ப்
பக்கமா யெங்கும் பரவுகின்ற விற்காடாய்
மேகங்க ளேழும் விடாது சொரிவதுபோல்
மாகம் திசைகள்அம்பு மாரியாய் நின்றதுவே
விற்கனந்தம் வெங்கணையாய் வீரர்களெல் லாம்சொரிந்தார்

வீமன் எதிரிகளை அழித்தல்

மற்கனந்தம் யானை வலிவுள்ள மால்வீமன்
கன்மேற் சொரிந்த கனமழைபோல் தான்உதறி
வின்மேற் பலகோடி வெஞ்சா யகம்[2]சொரிந்து
பல்கோடி தேரினங்கள் பாகுகொடி மாப்பிளந்து
செல்கோடி என்னவரு சிந்துரமெல் லாம்பிளந்து
அற்புத மாக அடற்பரியெல் லாம்பிளந்து
பற்பல சேனைப் பதாதிகளை நீறாக்கிச்
சல்லியனைத் தேர்மாவும் சாரதிவில் தான்பிளந்து
வெல்லுஞ் சகுனி விறல்தேர்த் துசமறுத்துச்
துச்சா தனனைத் துசம்தேர்வில் தான்பிளந்து
நச்சான வாய்வழியே நல்லிரத்தம் கொட்டுவித்து
பாம்புக் கொடியும் பரித்தேர்வில் தான்பிளந்து
வீம்புற்ற மன்னவன்தன் மெய்களெல்லாம் புண்ணாக்கி

துரியோதன் தம்பியருள் எழுவர் இறத்தல்

கட்செவிக்[1] கேதன் கனுஷ்டர்[2] தனில்எழுவர்
விட்சிறந் தந்த விறற்கணையால் தானறுத்தான்
மேரிடிந்து வீழ்வதுபோல மெய்யை நிலத்திலிட்டு
பாரிடங்க ளெல்லாம் பரவைபோல் சோரிசெய்தான்

துரியோதனன் புறங்கொடுத்தல்

பின்னோர் எழுவர் பெருங்களத்தி லேமடிய
மன்னோர்கள் மன்னவனும் வாய்வெருவிப் பின்கொடுத்தான்.
தானும் பலரும் தரியாது வெந்கொடுக்கப்
பானுவும் மேலைப் பருப்பதத்தில் புக்கனளே

---

1 நெருங்கிச் சூழ்தல்

2 அம்பு

குண்டலன் அஞ்சொற் குண்டலபோ சனாதியக்கன்
குண்டல தாரன் கெருடக் கொடித்தோன்றல்
மிக்கதீப வன்ன விறல்திம்ம வாகுசைத்த
துக்கங் களாலே துரியோத னாதியர்கள்
அல்லல் மிகுந்து அவர்படைகள் வாங்கியதே

அரவான் இறப்பால் ஐவர் வருந்தீச் சேறல்

வல்ல அரவான் மடிந்த பெருஞ்சலிப்பால்
தர்மபுத்தி ராதியர்கள் தன்தளமும் வாங்கியதே
வர்மமுற்ற போர்க்களத்தின் வன்மையைஎன் என்று
சொல்வோம்.

களக்காட்சி

நாலு வகைச்சேனை நதிச்சுழலி லேசுழன்று
மேலெழும்பிக் கீழழுந்தி மீண்டும் தலைகிளம்பி
பம்பரம் போலப் பலதிக்குந் தான்சுழன்று
அம்பர னோக்கும் குருதியாறு பலபகராய்
வாரி புகுந்தவைபூ மாது ஒருகலிங்கம்
நேருசுற்றும் செய்யகறை நீலாடை பூண்டதொத்தாம்
இரண்டு படையும் இயற்பாடி தான்சேர்ந்து
துரந்த நற்பொழுதைத் தொலைக்கத் துயில்புரிந்தார்
எட்டாநாள் இனியாப் போரெடுத் துரைத்தோம்
கட்டாம் நவநாள் களப்போர் எடுத்துரைப்போம்
இரவோர் யுகமாக எப்போ விடியுமென்று
உரவோர்கள் பேராசை உறறிருந்தார் அம்மானை.

எட்டாம்நாள் போர்ச் சருக்கம் முற்றிற்று.

தரும ராசாக்கள் வீரய்யன் துணை.

ஒன்பதாம்நாட் போர்ச் சருக்கம்

முன்னாள் இரவில் துரியோதனன், கன்னனைப் போருக்குச் செல்லுமாறு வேண்ட, அவன் வீடுமர் தோற்றால் போருக்குப் போவதாகக் கூறுகிறான். அச்செய்தியை வீடுமருக்குத் துரியோதனன், துச்சாதனன் மூலம் தெரிவிக்கிறான். அவர் மறுமொழி கூறுகிறார். வீடுமர் தன் படையை சருப்பதோபத்திரவியூகத்தில் அமைக்கிறார். தருமன் பற்ப வியூகம் அமைக்கிறான், வீமன், அலம்புகன் வாட்போரில் அலம்புகன் கை இழக்கிறான். இருவரும் மற்போர் புரிகின்றனர். பின் விற்போர் செய்கின்றனர். அலம்புகன் வானூடு சென்று மலையைப் பெயர்த்து வீசுகிறான். அது தூளாகிறது. வீமன் வாள் வீச்சால் அவன் இறக்கிறான். மன்னர் பலர் வீமன் கதையால் இறக்கின்றனர். காசியர் சேதியர் முதலியோர் அழிகின்றனர். வீமன் விசையன் ஆகியோரால் படை கலங்கக்கண்ட வீடுமர் பாஞ்சாலருடன் வந்து போரிடுகின்றார். சிகண்டியின் கணைக்கு வீடுமர் இலக்காகிறார். துச்சாதனன் சிகண்டியின் தேர் முதலியவற்றை அழிக்கிறான். அருச்சுனன் இடைவந்து, அம்புவிட பகைவர் புறம் எய்துகின்றனர். வீடுமர் செய்த போரில் சதானிகன் இறக்கிறான். கதிரவன் மறைய இருவர் படையும் பாசறை அடைகின்றன.

பத்தாம் நாட் போர்ச் சருக்கம்

முந்திய நாளிற் போலவே தருமனும் துரியோதனனும் வியூகம் அமைத்துப் போரிட முற்பட்டனர். 'வீடுமருக்கு இன்று வானுலகு அருள்க' என்ற கண்ணனிடம் அருச்சுனன் வெல்வேன் என்று கூறுகிறான். வீடுமரால் பகைவர் துன்பம் மிக அடைகின்றனர். வீடுமருக்கு உதவியாக வந்த மன்னர் விடுத்த அம்புகளை அருச்சுனன் தடுக்கிறான். வீமன் போர் செய்கிறான். தன் படை பின்னடைவது கண்ட துரியோதனன், வீரர்களைத் துணையாக அனுப்புகிறான். அருச்சுனன் அவர்கள் உறுப்புக்களைத் துணிக்கிறான். வீடுமர் தம் இறுதியை உணர்ந்து, படை செலுத்தி நிற்கிறார். அர்ச்சுனன் சிகண்டியை முன் வைத்து வீடுமரோடு போர் புரிய வருகிறான். சிகண்டி-யைக் கண்டு வீடுமர் போர் செய்யாதிருக்க, துச்சாதனன் அம்பு செலுத்து-கிறான். சிகண்டி பின்வாங்க, வீடுமர் கண்ணன் மீதும் அம்பு விடுகின்றார். சிகண்டியை மீண்டும் நிறுத்தி, இருவருமாக வீடுமரோடு போர் புரிந்தனர். தன்மீது விழுவது அருச்சுனன் அம்பு என்று அறிந்து வீடுமர் மகிழ்கிறார். அருகிருந்தோரைத் துரியோதனன்பால் அனுப்பி வீடுமர், அம்பாகிய அணையில் சாய்கிறரர். இருபக்கத்தவரும் வீடுமரை அடுத்து நின்று வருந்து-கின்றனர். உயிர் நீங்காது வீடுமர் அம்பணையில் கிடக்க, அனைவரும் அழுது புலம்புகின்றனர். அனைவருக்கும் ஆறுதல் கூறிய வீடுமர், தன் தலையின் தாழ்வு தீர்க்குமாறு அருச்சுனனிடம் வேண்ட அவன் அவ்வாறே செய்கிறான். வீடுமர் துரியோதனன் கன்னனைப் படைத் தலைவனாக்கிப் போர்புரியுமாறு கூறுகிறார். தருமன் ஆக்கிய கோயிலில், தன் உயிர் செல்-லுங்காலம் வரை வீடுமர் அம்புப்படுக்கைமேல் இருக்கின்றார். மாலைநேரம் வருகினறது. இருபடையினரும் பாசறை அடைகின்றனர். துரியோதனன் தன் தந்தைக்கு, வீடுமர் வீழ்ந்த செய்தி கூறச் சஞ்சயனை அனுப்புகிறான். அறிந்த திருதராட்டிரன் வருந்துகிறான். துரியோதனன் மறுநாள் போருக்-குரிய தலைவனை ஆராயும்போது, வீடுமன் கூற்றுப்படி கன்னன் தானே தலைவனாவதாகக் கூறுகிறான். துரியோதனன் துரோணனைத் தலைவ-னாக்குகிறான்.

பதினோராம் நாட் போர்ச் சருக்கம்

காலைப் பொழுதில் இருவர் படையும் களம் அடைகின்றன. துரோணர் சகடவியூகம் வகுக்கிறார். திட்டத்துய்மன் கிரவுஞ்ச வியூகம் அமைக்கிறான். இருபடைத் தலைவரும் அம்பு செலுத்துகின்றனர். சகாதேவன் சகுனியை வெல்கிறான். வீமனோடு பொருது துரியோதனன் பின்னடைகிறான். கன்னனும் விராடனும் போர் செய்கின்றனர். துருபத யாகசேனனும், பகதத்தனும் போர் புரிதல். சிகண்டி சோமதத்தனைப் புறங்காட்டி ஓடச் செய்கிறான். அபிமனும் இலக்கண குமாரனும் போர் செய்கின்றனர். அபிமன் இலக்கண குமரனைப் பற்றிச் செல்கிறான். சயத்திரதன் அபிமனைத் தடுக்கிறான். கன்னன் முதலியோரை அபிமன் புறங்காணுகிறான். சல்லியன் அபிமனைத் தடுக்கிறான். சல்லியன் அபிமன் போர் புரிகின்றனர். வீமன் சல்லியனை வீழ்த்துகிறான். இலக்கணக் குமரன் தப்பிச் செல்கிறான். சல்லியனையும் இலக்கணக் குமரனையும், கிருதவன்மா காப்பாற்றி அழைத்துச் செல்கிறான். துரியோதனனும் பின்னடைகிறான். மாலை நேரமாகிறது. பாசறையில் பாண்டவர் இனிமையாக உறங்கத் துரியோதனாதியர் துயருற்றுக் கிடக்கின்றனர். தருமனை அகப்படுத்தத் துரியோதனன் விரும்புகிறான். அதற்காக வஞ்சினம் கூறுகிறான். அனைவரையும் அனுப்பிவிட்டுத் துரியோதனன் தன் இருப்பிடம் அடைகிறான். மறுநாள் பொழுது புலர்கிறது.

ஒன்பதாம்நாட் போர்ச் சருக்கம்

பேராறு மூழ்கி மறைநூல் பிதற்றி
மிடறும் பிளந்து பிறவித்
தூரா[1]று மாறு நினையாமல் உங்கள்
தொழிலே புரிந்த சுமடீர்
ஓராறு பேத சமயங் களுக்கும்
உருவாகி நின்ற ஒருவன்
ஈராறு நாமம்[2] உரைசெய்து மண்[3]கொடு
இடுவார்கள் காணும் இமையோர்

தருமராசாக்கள் வீரைய்யன் துணையாக வேண்டியது

... ...

... ...

... ...

புவன மடங்கப் புரக்கவகை செய்வனல்லால்
விற்குரிய ஐவருட வெம்போர்க் களம்பயந்தால்
புற்கவ்வி என்னெதிரே போதவரு வானாகில்
கங்குல் புலராமுன் கைசெய்வேன் போர்பொருவேன்
புங்கமுறும் வீடுமன்பால் போய்க்கேளும் என்றுரைத்தான்

வீமனிடம் துச்சாதனன் கேட்டல்

துச்சா தனனும் துரைமன்னன் ஏவலினால்
அச்சாணி அன்ன அதியனாம் வீடுமன்முன்
விற்கன்னன் சொன்ன விபரமெல்லாம் தானுரைத்தான்
பொற்கன்ன பாகம் பொறாதசினம் உள்ளடக்கி

1 பிறவிவேர்
2 திருமாலின் துவாதசத் திருநாமங்கள் — கோவிந்தன் முதலிய பன்னிரு பெயர்கள்
3 மண் நெற்றிக்கிடும் திருமண்

வீடுமன் கூற்று

பேரன் சொற்கேட்டுப் பெருமான் எதிர்நகைத்து
வீரம் புகன்ற விரதம் போகாதபடி
செய்வான்நீர் எண்ணியபோர் சேர நிறை வேற்றிவைப்பான்.
கொய்வான் நின்தன்பகையைக் கொற்ற முனக்களிப்பான்
இன்றும் நாளைக்கும் இதையம் பொறுந்திருங்கோள்
பின்றை அவனுக்கே பெரியதனம் கொடுங்கோள்
என்காலம் போனதன்பின் எல்லோரும் ஒன்றாக
நன்றாக வாழ்ந்திருங்கோள் நட்பாய்ப் பகைசெகுத்தே
குருநாடும் எந்நாடும் கொற்றமுடன் புரந்தே
பெருநாள் இருந்துலகில் பேறாக வாழுமென்று
அங்கவன் தன்னை அனுப்பிப் பனங்கொடியோன்
கங்குற் பொழுதைக் கழித்தே துயில்ஒழிந்து
சோதிப் பிரகாசம் துன்னி ஒளிபிறங்க
ஆதித்தன் கீழ அசலத்[1] தெழுந்ததற்பின்

போர்க்கெழுதல்

காலைக் கடனைக் கழித்தே இருதிறத்து
வேலைக்கு மிக்கான் வெஞ்சேனைப் போர்க்கெழுந்து
தேருருள் ஓசைத் திருநாண் தொனியோசை
வீர மதகயங்கள் வீறிடுமப் பேரோதை
பரிகள் அனுமனிப்பும் பதாதிகளின் ஆர்ப்பரிப்பும்
முரச முதலாய் முழங்குகின்ற பேரொலியும்
செல்லும் திரையும்[2] சேர்ந்து முழங்கியபோல்
பல்லுலகும் திக்கும் பசிரண்டமும் நடுங்க

யூகம் வகுத்தல்

வன்பற் பராக வரையூகம் தான்வகுத்தே
இன்பத் துடனே இருபடையும் போர்முண்ட
சத்த மேகங்கள்[3] தலமேல் உலவுதல்போல்

இருபடையும் பொருதல்

தத்துவயத் தேர்களுடன் தாவித்தேர் போர்முண்ட

---

1 உதயகிரி
2 மேகமும் கடல் அலையும்
3 ஏழு மேகங்கள்

கரிமா வுடனே கரிமாவும் போர்மூண்ட
பரிமா வுடனே பரிமாவும் போர்மூண்ட
பாரப் பதாதி பதாதிகளும் போர்மூண்ட
சீரொத் தவர்க்கவராய்ச் செய்தார்போர் அம்மானை.
மைந்தனைச் செற்ற வலிய அரக்கனையே

வீமன் போர்

நைந்து விழக்கொல்ல நடந்துவய மாருதியும்
சீறிமீ றிக்குமுறும் செல்லைநிகர் ஆர்ப்பரித்து
மாறிலாப்போர் முகத்தில் மல்வீமன் சென்றுபுக்கான்.
வடவைக் கனல்முகந்து விண்மேகம் வீசுதல்போல்
புடவித் திசைகள்அனல் பொங்கும் படியாகக்
கன்மாரி அஞ்சக் கணைக்கடலி லேமுகந்து
விண்மாரி வீசுதல்போல் வீமன்கணை சொரிந்து
தேரினங்கள் பலபிளந்து தேர்க்கொடிவர்க் கம்பிளந்து
ஊரும் கிரண உருட்காலி னம்பிளந்து
தாவி ரதம்பூண்ட தடப்பரிவர்க் கம்பிளந்து
மேவும் வலவர் மிகுதிபே ரைப்பிளந்து
தேர்மன்னர் எல்லாம் தியங்க பொருதழித்துக்
காரன்ன யானைக் கணங்கள் பலபிளந்து
பரிகள் பிளந்து பரிமன்ன ரைப்பிளந்து
விரியும் பதாதி மெலியப் பொருதழித்து
அரக்கர் குலங்களுக்கே அன்றந்த கால[1]மென
சரப்பைம் புயமாரி தான்சொரிந்தா னம்மானை.

அலர்புதன் போருதல்

அலம்புதன் என்னும் அரக்கர்க் கதிபதியும்
கலங்கிச் சினந்தெழுந்து கட்கம் கரத்தெடுத்து
ஆளிபோல் பாய்ந்து அனிலன் தருகுமரன்
மீளிதேர் மேல்பரியை வீழத் துணித்திடவும்,
இப்படிக்கு வாய்க்காது எமக்கோர் பொழுதுமெனக்
கைப்பரிசை வாளுடனே காளையுமே தான்பாய்ந்து
மின்னல் பிரபை விளங்க இருவர்களும்

---

1 இறக்கும் காலம்

தன்னொப் பிலாதோர்கள் தான்வீசி மெய்யுறுமுன்
கட்கத்[1] தினாலும் கட்கத்தா லும்தாங்கி

... ...

... ...

... ...

பதுமம் சமுத்திரம் பகர்தா மரைவெள்ளம்
உதகப் பிரளயமாய்க் கோரை உரோசனையாய்க்
கற்பம் நிகற்பம் கடிமகரம் தண்பணையாய்
உற்பலமோ டற்புதமாய் ஓரனந்தம் பற்பலவாய்

வந்த அரக்கர்களை அழித்தல்

வீசு கணைமழையால் மீறிவந்த ராட்சதர்கள்
பூசல் முகத்தில் பொடிப்பொடியாய மாய்ந்தனரே
முற்பகலில் சேயை முருக்கும் அரக்கனையே
பிற்பகலில் வேளால் பிளந்தான் அவன்குலத்து
அரக்கர் அடங்கவின்றே அற்பமெனப் பொடிந்தான்
கரத்திண் படைவலிக்குக் காசினியில் ஒப்பிலென
தேவர் நரர்நாகர் சேரவே தான்துதித்தார்.
மூவர் முதல்வன் முரணாய் நடத்துகின்ற
தேரில் வருவோன் செயவிசைய கம்பீரன்
வார வரிவில் வளைத்தோன் அனந்தமென
மைப்புயலென்ன வளைத்த தனுப்பொறுத்துக்
கைப் புயலாகக் கணைமாரி தான்சொரிந்து
பல்லனந்தம் பேர்கள் பரிபாகு தானறுத்து
வில்லனந்தம் தானறுத்து வெங்கொடிகள் தாளறுத்து
வச்சிரத் தேர்கள் மணியுருள்கள் தான்பிளந்து

---

1 வாள்

அச்சுப் பிளந்துமத அத்தியினம் பிளந்து
பாடலக் கூட்டம் பதாதி யினம்பிளந்து

அருச்சுனன் போர்

ஆடற் பெரும்பூசற் அருச்சுனன்செய் யாகவத்தில்
செங்குருதி வெள்ளம் திரைபோல் பெருகிநிற்க
எங்கும் பருப்பதம்போ லேபிணங்கள் கூய்ந்துநிற்க

தேசமன்னர் தங்களிலே சிங்கம்போல் ஒத்தவர்கள்
பூசலிடை எழுபதி னாயிரவர் பொன்றினரே
தேசுடைய சேனைகள்தான் செத்ததெவர் சொல்லவல்லார்
பற்குணன் இவ்வாறு படரும் வடவையைப்போல்
விற்கு வலியான் விரைந்தொருபால் போர்புரிய.

வீமன் போர்

பிற்கால மடங்கல் பிரசண்ட மாருதமாய்
மற்கால் தண்டம் மருவும் வயவீமன்
தடையற்ற மத்தகெசம் தாவிக்குசக் கடையில்
உடைப்பட் டிடத்தாக்கல் உற்றொருபால் தான்மோத

சோழனும் துரோணரும்

சோழனும் விற்குருவும் தொல்பருதி புக்களவும்
பாழி[1]யுடன் விற்போர் படர்ந்தொருபால் தான்மோத

அசுவத்தாமர் அபிமன் போர்

அச்சுவத் தாமா அபிமனுடன் போர்மூண்டு
உச்சித மாக ஒருபா லிகல்புரிய
மற்றும் அவர்க்கவராய் மன்னவர்கள் போர்புரிப
வெற்றித் துருபதனும் மிக்கபல மக்களுடன்
மன்னவர்கள் பற்பலரும் வாகினிகள் தன்னுடனே

வீடுமனோடு போர்

தென்ன னுடனே செருமினார் வீடுமனை
திடங்கொண் டவைநோக்கிச் சீறிமீ றிக்குமுறி
மடங்க லெனவே மதியாது தேர்நடத்திக்
காத்தும் பெரும்புயலும் கைகலந்த வாறேபோல்

---

1 வலிமை

ஏத்தும் வரிவில்லால் இமைப்பில் பலகோடி
ஆசுகங்கள் ஏவி அவரவர்கள் ஏவுகின்ற
பாசங்கள் தானிமைம்பில் பற்பமாய் நீறாக்கி
வில்லறுத்து நாணறுத்து மெய்க்கவசம் தானறுத்து
வல்லடரிபாகு மணித்தேர் இனம் பிளந்து
சி:சு முதலாகச் செய்யபதம் ஈறாகச்
சரடஞ் சரமாய்த் தரியார்கள் மெய்நிறைந்து
வாங்காது சோனை[1] வருசிப் பதுபோல
தாங்காது பாணம் சலியாது தான்சொரிந்து
திரைபோற் குருதி செகமெங்கும் தான்பரப்பி
வரைகள் வரைகளென வன்பிணங்கள் எத்திசையும்
அடுக்கல் அடுக்கலென அங்கங்கு தான்கூய்த்து
முடுக்கி ரதத்தை முரணாகத் தானடத்தித்
தென்னன் சிலையழித்துத் தேரழித்துப் பாகறுத்து
வன்னக் கொடியறுத்து மாவறுத்துத் தான்முடுகி
சாத்தகி வில்லைத் தறித்துக் கொடிதறித்து
ஏத்தரதம் பரிபாகு எல்லாம் பொடிபடுத்தித்
துருபதன் தேர்வில் துணித்தே பொடிபடுத்தி
வருதுஷ்டத் தூய்மன் வரிவில்தேர் தான்பிளந்து
மிக்க விராடன் விறல்தேர்விற் பாகனையும்
அன்பது லட்சம் அடல்வீர ரும்படையும்

அருச்சுனனை வளைத்தல்

மன்பற் குணனை[2] வளைந்துகாந் தப்புயல்போல்
வெவ்வடவை ஒத்த விறல்வெங் கணையனந்தம்
செவ்வியன் மேல்வந்து சிதறினர்காண் அம்மானை.

அருச்சுனன் போர்

பண்டு வனமெரித்த பற்குணனும் வில்வளைத்துக்
கொண்டல் சொரிவதெனக் கோல்சொரிந்த கோல்மாற்றி
மாறா வருஷம்[3] வருஷிப்பது போல
நூறா யிரங்கோடி கோல்நொடிக்கு ளேசொரிந்து
தேர்கள் பிளந்து திகிரியினம் பிளந்து
ஆர்கள் பிளந்துமணி வீச்சுக் கொடிபிளந்து

---

1 மழைத் தூறல்

2 அருச்சுனன்

3 மழை

விற்றுணித்து நாணறுத்து மெய்க்கவசம் தான்துணித்து
உற்ற படையோடு உயர்கரங்கள் தானறுத்து
மகுடமுடன் சினமும் வன்கட்க மும்கரமும்
சிகரப் புயம்வடங்கள் சேரும் உரங்களையும்
இடைகள் தொடைகள் இதலைகழ லக்கழலும்
தடைய தறவே தறித்தான் சணப்போதில்

வீமன் பொறல்

தேனும்வய வீமனிடம் சென்றபல மன்னவர்கள்
ஏறுதே ரனைத்தும் இமைக்குள் பொடிப்படுத்தி
நாண்றுத்து வில்லறுத்து நன்மெய் உறப்பிளந்து
மாணுலவு சிந்துபதி மத்திரனைத் தேரழித்து
அரவக் கொடியோன் அனுசரையும் தேரழித்து
விரைவிற் சகுனியையும் வேந்தரையும் தேரழித்து
தரைமெய் யுறத்துளைத்து தானையையும் மாய்த்து
நின்றான்.

இரவியைக் கண்ட இமம்போல் இருவருக்கும்
ஆற்றாமற் கேட்டே அரசன் பெருஞ்சேனை
தோற்றா திசைகளெங்கும் தோய்ந்தோடிப் போனதுவே
வீடுமன் கண்டு வெகுண்டு மறுவலித்து
பீடுற்ற பஞ்சவர்கள் பேறானசேனை யெல்லாம்

பாண்டவர் சேனைப் பின்னிடல்

பெண்ணைக்[1] கொடியான் பிறங்கவிட்ட வாளியினால்
கண்ணுக்குக் காணாமல் கானடைந்த தம்மானை.
துருபதன் தேர்வில் துசமிழந்து மெய்துளைத்து
நிருபருஞ் சேனை நெளிந்தே புறங்கொடுத்தான்.
சேனா பதிதேர் திகிரிக் கொடிச்சிலையும்

... ...
... ...
... ...

1 பனை

துரியோதனன் ஆலோசனை செய்தல்

ஆலப் பணிக்கொடியான் அன்றுமகன் பட்டதொரு
கண்கலங்கக் கேட்டே கலங்கா மனங்கலங்கித்
திண்குலத்தின் மன்னர் சிலைக்குருமற் றுள்ளோரை
அற்பொழுதும்[1] துஞ்சாது அமைச்சர் உயிரனைய
விற்பனரை யெல்லாம் விரைந்தோர் தலத்திருத்தி,
என்னுயி ரன்ன இராசாக்கள் இத்தனைபேர்
துன்னியே சூழ்ந்திருப்பத் துங்கஅபி மன்கையினால்
பரிவான மங்கையரும் பாலன்தனைப் பகைத்து
தரியார்போல் மன்னன் தயங்கிமீண் டேதுரைப்பான்

இலக்க குமாரனுக்கு மாற்றாக தருமனைப் பிடித்து வருமாறு கூறல்

குட்டன்இலக் ககுமரன் எனது மகன்
கட்டுண்டான் என்றுவரை காணமரர் பெற்றேனே
மாறா வசையின் வடுமறையக் கைமாறு
பேறா முதிட்டிரனைப்பேணிப் பிணித்து வந்தால்
என் சினமாறும் இதுசெய்யீ ராமாகில்
வன்சினம் தீரேன் மடிந்தாலும் என்றுரைத்து

துரோணனைக் கேட்டல்

தெய்வ மனைய சிலைக்குருநீ நின்னைநிகர்
வையமதில் ஒப்புமுண்டோ வானவரில் ஒப்புமுண்டோ
என்கருத்துத் தேற எனைக்காத்து மேன்மைசெய்ய
வன்கருத்து நின்னையல்லால் வல்லரெவர் வெல்கவென்றான்.
நின்மனது வைத்து நிருபன் உதிஷ்டிரனைத்
தாமதியா தேபிணித்தால் தான்சீற்றம் ஆறுமென்றான்
உரகக் கொடியோன் உரைக்க முனியுரைப்பான்

துரோணர் கூற்று

வரமுற்ற தாதை வலிக்குச் சதமடங்காய்
வீமன் பின்னிற்க விசையறுமுன் னாகநிற்க
தாமன் உதிஷ்டிரனைத் தான்போர் உதவியொன்றும்

---

[1] இரவுப்பொழுது

அற்றோனைப் போல அகப்படுத்தல் இப்பிறப்பில்
முற்றாது என்னால் முளரியான் மாலினுக்கும்
வெற்றிபெறக் கூடாது வில்விசையன் நிற்குமட்டும்
மற்றும் பிறவியிலே வாகை[1]யுண்டோ தோற்றாது
அறன்மைந்த னோடே அமர்யான் புரிமுகத்தில்
திறன்வில் விசையனிரு திட்டிகா ணாதபடி
வன்போரி னால்தடுக்க வல்லோர்க ளுண்டானால்
அன்பார் தருமனையே யான்கொணர லாகுமென்று
சொல்லியும் மிக்க துரோணன் எடுத்துரைப்பான்
வில்லியரில் தர்மன் மிகவலியன் என்றுரைத்தான்

ஏனையோர் கூற்று

தக்கதிரி கர்த்தனும் சத்தகராம் எல்லோரும்
மிக்கமுனி சொற்றதற்பின் வேந்தனைப்பார்த் தோதலுற்றார்
மாய்கை[2] யுடையதிரு மால்நடத்தும் தேர்விசையன்
சாய்கையெனப் பிரியாது அங்கை[3]நெல்லி அங்கனிபோல்
காற்றாலுமே பிரிப்போம் காண்டீபன்[4] வீமனையும்
தோற்றா வருத்தமெல்லாம் தோற்ற அமர்புரிவோம்

மற்றையோர் வஞ்சினம்

வடவை யெனக்கொதித்து வர்மமுடன் வளைந்து
மிடல்வீமன் பார்த்தனையும் வேறுதிசை நோக்காமல்
தடுத்தே அமர்புரிவோம் தானோர் பகற்பொழுதும்
முடித்தவன் போர்க்கு முதுகிட்டோம் ஆமாகில்
தாரம் அமளித் தலத்தேங்க வேறுபிறர்
தாரமது கற்பழிப்போர் தங்குநர கம்புகுவோம்.
வில்லி[5]போர்க் கஞ்சி வெருண்டோடு வோமாகில்
சொல்லுறுதி மாறியபேர் தோஷம்சுமப்பம் என்றார்.
பற்குணனின் போர்க்குப் பயந்துமுது கிட்டேமேல்
சற்குருவை நிந்தைசெய்வோர் தாழ்நரகில் வீழ்வமென்றார்.
காண்டீபன் போர்க்குக் கலங்கிமுது கிட்டோமேல்
ஆண்டாய் பிதாசொல் அதுகடந்தோர் ஆவமென்றார்.

---

1 வெற்றி
2 மாயம் - சூழ்ச்சி
3 உள்ளங்கை
4, 5 அருச்சுனன்

படியிற் பலபாடு பட்டே பயிரேத்தும்
குடியான பேர்கள் குடர்இதையம் தான்எரிய
மனுநீதி குன்ற வழக்கோரம்[1] ஆயவராம்
அனியாயம் செய்வோர் அடைநரகம் புக்குழல்வோம்

மெய்நின்ற வில்விசையன் வெம்போர்க்கு வெங்கொடுத்தால்
செய்நன்றி குன்றினிவர் சேர்நரகம் யாம்சேர்வோம்
இவ்வா றிசைத்த இராசர் மனமகிழச்
சவ்வா[2] செனப்பல்லுப சாரங்கள் தான்பகர்ந்து
விற்குருவின் பாதம் மிகப்போற்றியே நைந்து

அனைவரையும் அனுப்பித் துரியோதனன் படுக்கைக்குச் செல்லல்

கற்கும் விரகக் கடலனையான் தான்அனுப்பி
தானு மனைபுகுந்து தன்கண் உறங்கினனே.

பொழுது புலர்தல்

பானுவும் தர்மனகப் பட்டிடுவான் போலிரங்கித்
தேனலங்கள் பஞ்சவர்கள் சேனைதனை எழுப்பி
ஈன இருட்படலம் எல்லாத்தை யும்விரட்டிச்

சங்கமுதற் பல்லியங்கள்[3] தான்முழங்கிப் போர்முழ
செங்கதிரும் கீழத் திகிரிதனில் முளைத்தான்
தாரேறும் ஏகா தசப்போர் எடுத்துரைத்து
ஈறாது நாட்போர் எடுத்துரைப்போம் அம்மானை.

வீரய்யன் துணை

---

1 நடுநிலை தவறிய வழக்கு ஆய்தல்
2 சபாசு
3 பல இசைக் கருவிகள்

பன்னிரண்டாம் நாட் போர்ச் சருக்கம்

இரவில் துரியோதனன், துரோணருக்குச் சொல்லிய செய்தியினை ஒற்றரால் அறிந்த தருமன் அதனைக் கண்ணனுக்கும் அருச்சுனனுக்கும் கூறிப் போர்க்கெழுகின்றான். கண்ணன் தருமனை மையத்தில் வைத்து, மண்டல வியூகம் அமைக்கிறான். துரோணர் மகா வியூகம் அமைக்கிறார். திரிகர்த்தராசனும் நாரண கோபாலரும் அருச்சுனனோடு போரிடுகின்றனர். தருமனைக் காக்க மன்னர்களை ஏவித் தான் வாட்போர் புரிகிறான் அருச்சுனன். வீரர் பலரொடு துரோணர் வருகிறார். திட்டத்துய்மன் பாஞ்சாலருடன், துரோணரை எதிர்க்கிறான். வீரர் பலர் அழிய, துரோணர் எதிரி சேனையை அழிக்கிறார். துரோணரும் தருமனும் போர் செய்கின்றனர். உதிட்டிரனும் துரோணரும் போரிடுகின்றனர். துரோணர் தேர் இழந்து தளர்வுறுகிறார். அவர் மீண்டும் போரிட, தருமன் படையினர் வளைத்துப் போர் செய்கின்றனர். இருபடையினரும் போர் செய்ய அங்கு, கடோற்கசனும் அபிமனும் வருகின்றனர். பின்னடைந்த சேனையோடு மீண்டு வந்து போரிட்ட துரோணரை அபிமன் தாக்கிப் பின்னடையச் செய்கிறான் துரோணர் தருமரை எதிர்க்க இயலாது தப்பிச் செல்கிறார். பகதத்தன் தருமன் சேனையை எதிர்க்கிறான். பகதத்தன் பின்னிட, துரியோதனன் வந்து எதிர்க்க, தருமனும் அபிமனும் எதிர் நிற்கின்றனர். வீமனும் பகதத்தனும் போரிடுகின்றனர். பகதத்தனால் தளர்ந்த தருமன் கண்ணனை நினைக்கின்றான். அவ்விடத்திற்குச் செல்லுமாறு கண்ணன் அருச்சுனனிடம் கூறுகிறான். பகதத்தனும் அருச்சுனனும் போர் செய்கின்றனர். பகதத்தன் படை அருச்சுனன் அம்பால் சிதறுகின்றது. பகதத்தன் விடுத்த வேலைக் கண்ணன் தான் ஏற்க அது மாலையாக அமைகிறது. பகதத்தன் இறக்கும் நேரம் என்று கருதி கண்ணன் அம்பு கொடுக்க விசயன் வாங்கி விடுகிறான். அவன் இறக்கின்றான். காந்தாரர் அருச்சுனனைச் சூழ்ந்து சண்டை செய்தபோது, சகுனியின் புதல்வர் இருவர் இறக்கின்றனர். சகுனி தருமனொடு போர் செய்து பின்னிடுகின்றான். துரோணர் துரியோதனனுடன் சென்று வீமனொடு போர் புரிகின்றார். பகைவர் வீமனை எதிர்க்க இயலாது பாசறை புகுகின்றனர். மாலை நேரம் வருகின்றது. பலரும் பாசறை அடைகின்றனர். துரியோதனன் அருகில் பலரும் இருந்தபோது, கன்னன் துரோணரை இகழ்ந்து சிரிக்கின்றான். அவர் சினந்து மொழிகின்றார். ‘ஐவரை ஒப்பவர் வேறிலர்’ என்று கூறிப் பாசறை புகுகின்றார். துரியோதனன் அனைவரையும் அனுப்பிவிட்டு உறங்கச் செல்கிறான். மறுநாட் காலை கதிரவன் உதயம் செய்கிறான்.

பன்னிரண்டாவது நாட் போர்ச் சருக்கம்

பொய்யாத தவமுனிபின் போயருளித் தாடகைதன்
மெய்ஆவம் நிகரென்ன வெஞ்சரத்தால் அழுந்தியபின்
மையாழி முகில்வண்ணன் வாங்கியன, பூங்கமலக்
கையாலும் ஒருசாபம்[1] காலாலும் ஒருசாபம்[2]

துரியோதனன் கூற்றுணர்ந்த தருமன் கண்ணனிடம் கூறல்

அற்றரா மன்னன் அரசனுடன் சொன்னதெல்லாம்
ஒற்றரோ தச்சொல் லுணர்ந்தே முரசுயர்த்தோன்,
மாயன் தனக்கும் மகவான் சுதன்தனக்கும்
நேய தரும நிருபன் எடுத்துரைத்தான்

கண்ணன் அருச்சுனனோடு படை அமைத்தல்

தும்பை[3] யணிந்து துளசியான்[4] பார்த்தனுடன்
வெம்பு மருவார் வெருவிக்கொண் டுடற்கலங்க
அங்கனா லான அனீகப் பெருங்கடலை
எங்கும் பரவி இகலாய்ச் செருமிநிற்கக்
கண்ட மருவார் கலங்கி மிகத்திகைக்க
மண்டல யூகம் வகுத்தான்கண் அம்மானை.

தருமனைச் சூழல் அரண் அமைத்தல்

பின்னிறுத்தி மாருதியைப் பேரணியிற் பல்வகையாம்
மன்னிறுத்தி ஈர்பால் மருத்துவரை நிறுத்தி
மின்னிறுத்தும் வாளி விசையனையும் சேயனையும்
முன்னிறுத்தி நின்றான் முரசக் கொடிவேந்தன்

துரியோதனாதியர் செயல்

விருத்தம்

இப்பால் மருவார் இரவுரைத்த சொற்படியே
தப்பாத திரிகர்த்தத் தலைவனும்சஞ் சத்தகரும்
துப்பாஞ் சிலைக்கைத் துரோணன்முதல் மற்றோரும்
மெய்ப்பாய் மகர வியூகம் அணிந்தாரே.

---

1 அம்பு
2 சபிக்கும் சாபம்
3 போர் புரிவோர் சூடும் பூ
4 திருமால் - கண்ணன்

நடை

காரணிபோல் கமரணிபோல் காற்றணிபோல் தோலணியும்
தேரணியும் மாவணியும் திரிகர்த்த நரபதியும்
நராண கோபாலர் நாாபதிசஞ் சத்தகரும்
காரணமாய் வந்து கடல்பொங்கி மொய்த்ததென

அருச்சுனன் அறைகூவல்

உரசாய் விசயனும் உளமுற்றே அறைகூவி
விரசாய்ப் பலகோடி வில்லா சுகம்பொழிந்தார்
ஆத்துவரு வோர்களைக்கண்டு அண்ணல்தனை ஒல்லைமட்டும்
காத்திடுமே னென்றுநின்ற காவலர்க்குத் தானுரைத்து

... ...

... ...

... ...

உந்துவயத் தேர்களெல்லாம் ஓர்நொடியி லேயறுந்து

பலரைப் பின்னிடச் செய்தல்

மெய்மயங்கப் பல்பகழி வீசி விரைந்தோட்டிக்
கைம்மயங்கச் சல்லியனைக் கார்முகமும் தேரழித்துச்
சகுனிதேர் வில்லைத் தறித்தே முதுகுகண்டு
மகிபரில் எண்ணிறந்த மன்னர் சிரசறுத்துக்
கம்மி வளைந்த கடற்படைஎல் லாஞ்சனத்தில்[1]
விம்மிதமாய்த் தேவர் மிகத்திகைக்க வேயறுத்தான்.

துரோணர் போர்

சூழஎங்கும் நின்ற துரைமன்னர் சேனையையும்
வீழ அறுத்து வெகுண்டுநின்ற மன்னவன்மேல்
கோபமிகுந்து மழை கொண்டல் சொரிவதுபோல்
சாபக் கணைமாரி தான்சொரிந்தான் ஆசரியன்.
பாப்பான் சொரிந்த பகழிமழை அத்தனையும்

1 சனம் — கணப்பொழுது

கோப்பாய்க் கணைசொரிந்து கொற்றவனும் நீராக்கி
வில்லுக் கொருகணையும் வில்நாணுக்கோர் கணையும்
பல்லவம்[1] பத்தால் பரியுருள்தேர் பாகுகொடி
மல்லற்க வசமறுத்து மருமம் பிளந்தான்

துரோணனிடம் கூறல்

வல்ல மறையோன் மனந்திகைத்து நிற்பளவில்
முனிவன் எனவும் முதன்மைக் குருவெனயும்
தனிமையி னாலும் தனுத்தேர் இலாதாலும்
ஆயுதம் இல்லா நி ராயுதனாய் நின்றமையால்
மாயுமுயிர் இன்றுனக்கே மன்னித்து விட்டுவிட்டோம்.
இப்போது ஓர்கணையும் ஏவிலேன் அஞ்சாமல்
துப்பாக ஓடாமல் சும்மாபோ என்றுரைத்தான்.
கூட்டமாய் மானின் குலஞ்சிதற ஓர்வேங்கை
தாட்டிகமாய் பாய்ந்தோர் தனிமானை வாயடங்கப்
பற்றி இரங்கிவிட்ட பான்மைபோல் மன்னர்பிரான்

துரோணர் நிலை

வெற்றிமணி சங்கூத வேதியர்கோன் மெய்மறந்து
கொற்றங் குலைந்து குருமேன்மை தானிழந்து
அற்றுஅந்நாள் அறுமுன்னே ஆன நிருதனைப்போல்
தான்பட்ட பாடு தலைமுறைக்குப் போதுமென
மான்பட்ட பாடாய் வயவரிகண் டஞ்சியபோல்
உயிரோடு செற்றான்போல் ஒத்தே உயிர்ப்பெறிந்து
வியனுறு தர்மன்வய வின்மைதனக்கு ஒப்பிலென
எண்ணிஎண்ணி நெஞ்சம் இடைந்திடைந்து புண்ணாகி

வேறு தேரில் துரோணர் போர் புரிதல்

வண்ணவரி வில்வளைத்து மற்றுமொரு தேர்ஏறி
நிகரற்ற சாபம் நிலைபெற்ற மாமுனியும்
வெகுளூற் றடர்ந்துவர மெய்த்தருமன் சேனையுள்ளோர்
அங்கி[2]போற் பொங்கிமுனம் அந்தணனார் வந்ததுவும்
தங்கள்கோ மானடர்ந்து தான்போர் தொடங்கியதும்
சிலையும் பரிபாகும் தேரிழந்து போரிழந்து

---

[1] அம்பு
[2] நெருப்பு

நிலையுங் குலைந்துமுனி நெஞ்சழிந்து ஓடியதும்

பாண்டவர் பக்கல் பலரும் சேர்ந்து எதிர்தல்

விற்பிடித்துத் தேர்ஏறி மீண்டுஇகற்கு வாரதுவும்
பற்பலரும் சேனையுடன் பார்வைகண்டு தான்சினந்து,
மச்சர் கோமானும் வயவீரர் சேனைகளும்
மெச்சு குந்திபோசன் விறல்யாக சேனனுடன்
துட்டத்தூய் மன்சிகண்டி சூழும் பதாதியுடன்
மட்டுற்ற தார்மார்பன் வையை நதிக்கோமான்
தென்னன் வளவன் திறல்நகுலன் சாதேவன்
வில்நிறுவு கேதன் விறற்சாத் தகிமுதலோன்
அந்தணன் மீதே அடர்ந்தார் அரிக்குலம்போல்
சந்த முடைய தருமன் தளத்தோர்கள்

துரியோதனன் பக்கத்தவர் துரோணருக்குதவுதல்

கன்னன் சகுனி கலிங்கன்முதற் சல்லியனும்
மன்னன் துணைவர்களும் வன்கிருபன் விற்கிருதன்
சிந்துபதி மற்றுமுள்ள செம்மலுடன் சேனைகளும்
அத்தணனுக் குற்றபலன் ஆதரவாய் மொய்த்தனரே.
நின்றநின்ற மன்னவர்கள் நேர்ந்தார்கள் நின்றிடத்தில்
சென்றுசென்று மன்னர் செருச்செய்தார் அம்மானை.
அன்றொருத்தர் போருரைக்கில் யாரே விரிக்கவல்லார்?

இருதரத்தாரும் பொருதல்

ஒன்றுபத்து நூறாய் உடைந்ததே ஒருடலம்
வேல்விதத்தும் வாள்விதத்தும் வில்விதத்தும் செல்லனைய
கோல்விதத்தும் மற்றுமுள்ள கொற்றப்படை விதத்தும்
நூல்விதத்தும் செய்யதிரு நோக்கின் திறத்தாலும்
சாலப் பெரும்பூசல் தான்புரிந்தார் அம்மானை.
தேரினங்க ளெல்லாம் திகிரியின் போர்சாய்ந்து
காரினங்கள் போலக் கரியினங்கள் தான்சரிந்த
மன்னர் இனங்கள் மறுகி நிலத்தழிந்த
உங்கள்தளம் செற்றதென உண்மைஅர சன்படையோர்
தங்கு மறையோன் தளத்தோன் தனைஇகழ்வார்
எங்கள்தளம் செற்றதுங்கள் ஏந்தவல்வின் மையாலெனவே
தங்கள்விறற் பார்ப்பான் தளர்ச்கிக் கிரங்கிடுவான்
இந்தவிதம் சொற்றே இருதளமும் போர்புரிய

வீமன் முதலியோர் உதவிக்கு வருதல்

வந்துதவி செய்தான் வல்வீம சேனனென்போன்
அரக்கி சுதனும்[1] அபிமனுமே அங்குவந்து
நெருக்கிக் கொடும்பூசல் நேர்ந்துசெய்தார் அம்மானை.
கரமா யிரச்செங் கதிர்முன பனிப்போல
பரமாம் பலவீரர் பதைபதைத்து வாடினரே.
அரவத் துவசன் அனுசரையும் கன்னனையும்
உரகத் துவசமுதல் உள்ள துசமறுத்துத்
தேரறுத்து மாவறுத்துத் தேர்ச்சா ரதியறுத்து
வீரர் சிலைவிதுரன விற்போல் ஒடித்துவைத்து
வென்னிட்டார் நினறோர்கள் வெங்களத்தி லேமடிந்து
முனனிட்டார் எல்லாம் முறிந்தழிந் ார் அம்மானை.

களக் காட்சி

உம்பல் ப லகோடி உருள்தேர் பலகோடி
வெம்பரிகள் பல்கோடி வெஞ்?சேனை பல்கோடி
கூறாகி வாளபிமன் கொற்றக் கணைமழையால்
சேறாகி நீறாகிச் செங்களத்தி லேயழிந்து

(விருத்தம்)

விட்டவிட்ட நாலுவகை வெள்ளப் பெரும்படைகள்
தொட்ட சிலையூர்தி துணிந்தே களத்தினிடை
பட்டபட்ட மன்னவர்கள் பாடுதனைக் கண்டறிய
முட்டமுட்ட மேன்மேல் முனைந்துமன்னர் மொய்த்தனரே
முந்தவந்த மன்னவரும் மூசிவந்த வீரியரும்
வந்தவந்த சேனை வகுத்தணிந்து தான்முனைய
நொந்துநொந்து சிந்திவிழ நோக்கி இமைப்பளவில்

அபிமன் பகைவரை அழித்தல்

அந்தமுனை தோறும் அறுத்தெறிந்தான் வாளபிமன்

(நடை)

இருகணை யாலே இரதம் சிலையிழந்து
வெருவிச் சகுனிபுரம் இட்டான்காண் அம்மானை.
சல்லியன் நாலு சரத்தால் வில்தேரிழந்து

---

1 கடோற்கசன்

வில்லிசேய்ச் கஞ்சி வெருக்கொண்டான் அம்மானை.
கிருபன் பலசுணையால் கெட்டுமுது கிட்டனனே
விரவிக் கிருதனுமே விற்றேர் இழந்துசென்றான்
முனியும் அபிமன் முனிவெங் கணைமழையால்
தனுவும் கொடிதேர் மாச்சாரதி[1]யும் தானிழந்து
வென்னிட்டான் சூழ்ந்த விருதரசர் சேனையுடன்
பினனிட் டாசர் பெருஞ்சேனை தட்டழிய

பகதத்தன் போருதல்

பார்த்து நகைத்துப் பகைதத்தன் அப்போது
ஏற்றிந்த வேளை இகலிற் பகைசெயித்துப்
பன்னாள் அசுரர் பகைதொலைத்த வீறதுபோல்
இன்னாள் நம்பேர்விளங்க இப்போர் முடிப்பனென்று
வெள்ளானை மீது விபுதர்கோன்[2] உற்றதுபோல்
தெள்ளாண்மை யுள்ளான்வெண் சிந்துரத்தின் மீதேறி
மேகப் படலம் மிகக்கவிந்த வாறேபோல்
வேகமத குஞ்சரங்கள்[3] வெஞ்சினங்கொண் டஞ்சாமல்
பாகர்க் கடங்காநால் பத்தாயிரங் கரிகள்
வானகக் கதைக்கரத்தில் வவ்வியே சூழ்ந்துவர
விகட கரடகட வெங்கயத்தின் மிக்கபலன்
பகருமுபய பதினா யிரப் பலவான்
கயிலை நிகர்த்த களிற்றின்மேல் சேரலினால்
வயமுற் றிபக்குலங்கள் வன்மையுடன் செல்கலினால்
போருக் குடைந்தே புறங்கொண்டெச் சேனைகளும்
வீரர்க்கு மிக்கோரும் வேந்தர்களும் சேர்ந்தோரும்

துரியோதனன் படைகள் அணி திரளுதல்

நாகக் கொடியோனும் நம்பியர்கள் எல்லோரும்
தாகத் துடன்திருகித் தான்பே ரணியானார்
தெறிகெட்ட சேனை திருகி வருவதையும்
அறன்மைந்த னுடைந்து அபிமனும்மற் றுள்ளோரும்
கைம்மலர் கொட்டக் கடுத்தமரி லேமூள
வெம்மை யுடன்போரில் விரைந்தார் இருபடையும்

---

1 தேர்ப்பாகன்
2 இந்திரன்
3 யானைகள்

பகதத்தன் கூற்று

வெண்கயிலை ஒத்த விகடக் கரியோனும்
திண்கதைகொள் வீமனெங்கே தீரமுறும் வீமனெங்கே
என்னப் பகர்ந்தே இடிபோல ஆக்கரித்து
வின்னமற வீமனெங்கே வெட்டிமுறி கொள்வனென்று
கோடி சபதம் குறித்துவரும் வீரியனை

வீமன் போர்

நாடியே வீமன் நரசிங்கம் போல்பாய்ந்து
கேசரி மார்க்கம்[1] கெழுமியே தானெழுந்து
வாசரிசொன் னோன்சிகரி வாகுநசுங் கப்புடைத்து

துப்பிற் புடைபத்துக் கனமார் பகம்சூழிய
உதைத்துக் கரடகரி ஓடை[2]யுறும் நெத்தியணி
பதிய உதைத்துப் பவனா பதிகுமரன்
குதிகொண்டு இரதமிசைக் கொண்டுவரி வில்வளைத்து
மருத்துமகன் சினந்து வாளிமழை வீசுமுன்னே
உருத்தந் தரத்தெழுந்து ஓணத்தைக் கொடுங்கையினால்
பாகன் பரியுருளும் பஞ்சானனக் கொடியும்
வேகமுள தேருடனே விற்பொடியத் தானொறுக்கி
வெற்பனைய வீமன் விறற்புயமும் தான்நசுங்கி
உற்பனம[3] தாக உறத்தடித்தான் அம்மானை.

தாக்குள்ள வீமன் தடப்புயத்திலே யடித்த
நோக்குள்ள தண்டை நொடியிற் பறித்தீழ்த்துச்
சக்கரம் போலச் சரவேகமாய்ச் சுழற்றித்
தொக்கினுடன் வீசுமுன்னம் சோராது உயர்த்தெழுந்து
பண்டுபோல் வெள்ளைப் பகட்டின்மே லாயிருந்தான்.
கண்டு வயவீமன் கதைசுழற்றி யேயெறிந்தான்
வெற்புருவ வீமன் விசைத்தெறிந்த வெங்கதையைப்
பற்பமென அங்குசத்தால் பாகன் பொடித்துவிட்டான்.
பாகன் வலிபார்த்துப் பாரரசர் உம்பரெல்லாம்
வாகையுறும் இங்கிவன்போல் வல்லவரார் என்றுரைத்தார்

---

1 ஆகாய மார்க்கம்
2 முகபடாம்
3 உண்மை

வீமன் வேறு தேர் ஏறித் தாக்கல்

வீமன் மிகச்சினந்து வேறுமொரு தேர்ஏறித்
தாமவரி வில்வளைத்துத் தாங்காச் சரந்தொடுத்தான்.
தாகமுடன் மீண்டுபகை தத்தன்வரி வில்வளைத்து
வேகமுடன் பலகோடி வெஞ்சரங்கள் தான்விடுத்தான்.
கோபம் மிகுந்து குறித்தே இருவர்களும்
சாபக் கணையனந்தம் தான்சொரிந்தார் அம்மானை.
பகழி முனையைப் பகழி முனைகடித்தும்
திகழும் அகல்விசும்பும் திக்கெங்கும் தான்செருமி
அண்டம் பிளக்க அகிலம் நிலைகலங்க
சண்டன்முதல் எண்பாலர் தானடுங்கித் தத்தளிக்கத்
திரைகள் ஆறாகச் சேடன்புவி[1] நடுங்க
வரைகள் சிதற மகமேருவுஞ் சுழல
பத்திரமும் பத்திரமும் பத்தியமர் மூண்டதனால்
வித்தைமற்று ஒன்றையொன்று வெல்லரிதென் றும்பர்சொலத்
திக்கயம் எட்டின் திறமிதற்கொவ் வாதெனவே
மிக்கசுப்ர தீபமதில்[2] மேன்மைவலி யுள்ளதென
தானவரும் வானவரும் தாரணியுள் ளோர்களெல்லாம்
மானமத குஞ்சரத்தின் வன்பலத்தைத் தான்துதித்தார்
தும்பி யினத்தைத் துதிக்கையால் தான்வாரி
அம்பரம் முட்ட அடர்த்தே விசைத்தெறிந்தும்
தேரினத்தைக் காலால் சிதையவே தானொறுக்கி
ஆருமதத் தாரையால் ஆரக் கரைத்தடர்ந்து
வாலாற் பரியினங்கள் மாளவே தான்புடைத்துக்
காலால் தளங்களெல்லாம் காசினியில் சேறாக்கிப்
பூமி நெளியப் புயங்கன் உடல்நெளிய
நேமி குமுழியென நீண்டவரை நீறாகத்
தாள்போல் துவைத்துச் சராசரங்கள்[3] தான்நடுங்க
தூள்பெற்ற அண்டம் தொகுத்தபுவி நடுங்கச்
சேனைக ளெல்லாம் தெறிகெட்டிடத் துவைத்துத்
தானமுடன் சென்றமதத் தந்திதனை யேமுடுக்கி

---

1 ஆதிசேடன் தாங்கும் உலகம்

2 திக்கசங்களில் வடகீழ்த்திசைக் கண்ணுள்ள யானை

3 உலகிலுள்ள அசையும் பொருளும், அசையாப் பொருளும்

அங்குசபா சத்தால்தேர் அரணமும்[2] தான்காய்ந்து
செங்கைக் கதையெறிய சீறியேசெய் கைசெய்தான்.
ஆகாச வீதி அடர்ந்துபெரும் சூறைகொள்ள
வேகாளமாய்க் கரட வெங்கரியும் வீசியதே
கொடுமை நடலை[3]இடி கோடிஒன்றாய்த் தான்கூடிக்
கடின முடனிறைந்து கடுகி முடுகியபோல்
சூறையுடன் வடவை தோன்றி யடர்ந்ததுபோல்
மீறிய கைக்கதைதான் வீமன்மார்பே கவர
அக்கதையை மாற்ற அரிதாய் இடத்தொதுங்கித்
தக்க கதையைத் தடக்கையால் தான்பிடித்து
மானமுள்ள பாகனுட மார்பிலக்க தாயெறிந்தான்
மீறியே பாகன் விற்கதையை அங்குசத்தால்
நீறெழத் தட்டி நெருக்கினன்காண் அம்மானை.
இடிக்குலம் அஞ்ச இகலோன் பெருங்கதையைத்
தடிக்கர வீமன் தனைப்பார்த்து உரத்தெறிந்தான்.
பீடாய்[3] விசும்பு பெருஞ்சுழல்கொண் டேயிறைந்து
ஈடாய் வருங்கதைமேல் ஏஆயிரம் தெரிந்து
விட்டான்அவ் வாளியெல்லாம் வெங்கனல்போல் தானெரித்து
மட்டாரும் வீமன் மருமமதைக் கிட்டியதே.
பேரிடி யென்னப் பிரசண்ட வாயுவென்னப்
பாரக்கதை நடுங்கப் பால்[4]விலகி ஓர்காத்தால்
பற்றி யமன்கைப் படைபோல் மிக்களத்து
ஏற்றினான் பாகன் இலக்காக அம்மானை.
அண்டம் விசும்பும் சுழற்பொறிக ளேபரவ
தண்டம்இரைந் தேகத் தானிமையோர் வெய்துயிர்த்து
சதாகதி[5] மைந்தன் தடக்கைப் பலகதையால்
அதோரணன் ஆவி அழிந்தான் எனஅயிர்ப்பச்
சீறி மிகக்முறிச் சென்ற கதாயுதத்தை
தேறியே அங்குசத்தால் திக்காது தட்டிவிட்டான்.
பேதமறத் தட்டிவிட்ட பேரோதை உம்பர்களின்

1 பாதுகாப்புக் கோட்டை
2 துன்பம்
3 பெருமை
4 ஒருபக்கம்
5 காற்று

காது செவிடுற்றுக் கைமறந்தார் அம்மானை.
பவனன் மகன்எறிந்த பாரப் பெருங்கதைதான்
சிவன்முப் புரமெரித்த செய்கையொத்த தம்மானை.
பாகன் தனக்கீடு பத்தாது வீமனென
நரக ரதிசயிக்க நாணியே மால்வீமன்
சீற்ற மிகுந்து செயிர்த்தோர் கொடுங்கதையைக்
கூற்றம் எனவே கொதித்தெறிந்தான் அம்மானை.
பிரசண்ட வாயுப் பெருஞ்சுழல்கள் மேலாட
விரலண்ட கோள்களும் மேகங் களும்கலங்கத்
திக்கயம் நாகம் திசைபாலர் கரிநடுங்க
முக்கிய மாக முழங்கியே சென்றதுவே

பகதத்தன் யானையிடம் கதை கொடுத்து ஏவல்

அண்டம் நடுங்க அகிலங்களும் கலங்கத்
தண்டம் இரைந்துவரத் தந்தி[1]கையில் ஓர்கதையை
பாகன் கொடுத்துப் பயிற்சியால் செய்கைசெய்ய
வேகமுடன் கைக்கதையால் வெம்பகடு தட்டியதே
தட்டு மளவில் தகடாய்ப் பொடிந்ததற்பின்
திட்டென் றுடன்கதையைத் தீரமுடன் வீசியதே.
வீசும்பெருங் கதைதான் மேகங்க ளைக்கலக்கி
ஆசுடன் வீமன் அகலத்தைக் கிட்டியதே.
கிட்டு முனமே கிளர்ந்து வலத்தொதுங்கிப்
பட்டி எறிவிசையில் பத்தாயிர மடங்காய்
நேரிட்டுறவீசி நின்றான் பொன் மேரனையான்
பாரக்கதை நெருங்கப் பாகன் துரோட்டி[2]யினால்
மாற்றினான் அக்கதையும் மாப்போல் உதிர்ந்ததுவே.
தோற்றினான் ஆர்ப்பரித்துத் தும்பி[3]தனை நெருக்கி
வெங்கைச் சிலையறுத்து வெற்றிக் கொடியறுத்துப்
பங்கப் படக்கவசம் பற்பமாய் நீறாக்கி
மென்மேலும் வீசும் விறற்செஞ் சரப்புயல்போல்
வன்மே லவன்மெய் மறையவே தான்துளைத்தான்.
பஞ்சா யுதன்மார்பு பட்டுருவும் வாறாக
அஞ்சாத நெஞ்சன் அசுரகுலம் நீறுபடக்

1 2, 3 யானை

கந்தன் கரத்தின் கதிர்வேலை ஒப்பான
குந்தமொன் றேந்திக் குறித்தே விசைத்தெறிந்தான்
சீறிடிபோல் ஒத்துவரு செவ்வேல் ஒருநூறு
கூறுபடத் தறித்தான் கொற்றப் பலகணையால்
மூரிவே லைத்துணித்து முப்புரத்தை நீறுசெய்த
நாரிபா கன்[1]போல நகைத்திமைக்கு முன்னாகப்
பல்லனந் தம்வாளி பனிக்குமுகிற் போல்சொரிந்து
செல்லனந்தம் ஒத்துநின்ற சிந்துரங்கள் மீதுவிட்டான்.
காலுகள் நாலுங் கரைபோல் நிலத்துருள
வாலுகளும் பாளையென மாநிலத்தி லேசிதறச்
சக்கரங்கள் போலமற்று தந்திகரங் கள்வீழ
மிக்ககிக ரம்எனவே மத்தகங் கள்வீழ
மருப்பு[2]கள் வேரோடு மாநிலத்தி லேசரிய
பொருப்[3]புருண் டென்னப் புகர்முகங்கள் மெய்சரிய
இபநாற் பதினா யிரமொன்று போலாக
அபமாய் அவயவங்கள் அற்றிறந்த தம்மானை.
படல முகில்போல் படர்ந்த கடகரி[4]யும்
நடவும் வலவர்களும் நல்லிமைப்பில் மாய்ந்தளவில்

வேலினை விசையன் மேல் விடுதல்

அடங்காச் சினங்கொண்டு அமரர்க் கிறைகொடுத்த
விடங்கால்கொ டியவடி வேல்விசையன் மேலெறிந்தான்

கண்ணன் அதனை மார்பில் அணியாய் ஏற்றல்

அவ்வேலைப் பாகன் அறித்திதைய மேலேற்கச்
செவ்வேல் ஒருபணிபோல் சேர்ந்துறைந்த தம்மானை·
அன்றாதி மூலமென அறைந்தயா னைமுன்னம்
பொன்றாது காத்த பொழுது துதித்தலிலும்
அனந்தம் விரகாய் அமரர் மிகத்துதித்து
அனந்தம் விகற்பமலர் அன்றுசொரிந் தார்த்தனரே
உலக முழுதும் ஊதாங்குடி யமைத்தோன்

---

1 சிவபெருமான்
2 தந்தம்
3 மலை
4 மதயானை

... ...

... ...

... ...

கன்னன் துரோணனைக் குறைத்துக் கூறல்

மெய்தவஞ்சேர் அந்தணர்க்கு மேதினியில் உண்டோதான்
வின்மையென்ன வாண்மையென்ன மேன்மையென்ன வெற்றியென்ன
வின்மைதனி நூலோர்க் கிகலென்ன வேற்பதுவே
உற்றதொழில் அல்லாது உயுத்தம் செயவருமோ
பற்றலரை வெல்லுவதும் பார்ப்பாரோ என்றுநக்கான்

துரோணர் கூற்று

அங்கர்கோன் நக்கு அறைந்தமொழி யால்மறையோன்
செங்கண் சிவப்பேறிச் சிந்தையழல் பொங்கிடவே,
உருமுந்[1] திகைக்க உறவோர் மனந்திகைக்க
தருமன்ற னக்கெதிர்நீ தானெதிரோ நானெதிரோ
இங்குள்ள வீரர் எவன்அவன்முன் நிற்கவல்லார்
புங்க முகத்தில்நின்று போர்பொறாத வல்லரெவர்
வீமன் விசையனையும் வெல்லலா மானாலும்
கோமன் தருமனையார் கூசாது வெல்லவல்லார்
இன்றல்ல நாளைக் கெனிலும் தருமனையே
வென்றிடு வோர்க்கே விடைநல்கும் அல்லவென்றால்
நீயா கிலும்மன் நிருபன்தனைப் பிணித்தால்
சேயே யனையாய்நின் சேவகத்துக் கொப்புமுண்டோ
உன்னைஇம் மன்னோடு உலகெல்லாம் மெச்சாரோ
பின்னுல கெங்குமுன் பெருங்கீர்த்தி நில்லாதோ
வீரத்தில் ஓரம் விளம்புவது சேவுகமோ
வாரத்தில் அங்கவர்க்கு மாநிலந்தி லொப்புமுண்டோ

---

1 இடி

என்போல் விரதம் இயம்பாது வில்வலியோர்
வன்போர் உதிட்டிரனை வவ்விக் கொணர்ந்திடுங்கோள்
கொற்றமுடன் பிணித்துக் கொண்டுவர வல்லோர்கள்
வெற்றியுள்ள முப்புவிக்கும் வீரரவன் அல்லதுண்டோ
எப்போல் வில்வல்லர் இலையென்ற வீரரெல்லாம்
வெப்போரிற் கெட்டிடுவார் வெந்நிடுவார் ஓரிமைப்பில்
நம்போல்வர் ஒப்போ நானுமவனுக் கிணையோ
அம்பாலி ராமனடல் அம்புவமிக் கிற்பாவமே
குனித்தசிலை நிமிராகக் கோலமுடன் பலகோடி
முனைக்கொள் பகழி முகில்போல் மிகச்சொரிந்து

என்பகழி யோடும் இகலி முனைகறுவி.

... ...

... ...

... ...

பன்னிரண்டாம் நாட் போர்ச் சருக்கம் முற்றிற்று.

தரும ராசாக்கள் வீரையன் துணை.

பதின்மூன்றாம் நாட் போர்ச் சருக்கம்

துரோணர் சக்கர வியூகமும், திட்டத்துய்மன் மகரவியூகமும் அமைக்கின்றனர். விசயன் சஞ்சத்தகரை ஓடச் செய்கிறான். துரோணருடன் போர்செய்து திட்டத்துய்மன் பின்னடைகிறான். அவனுக்குத் தருமன் ஆறுதல் கூறுகிறான். அபிமனைத் தருமன் போர்க்கு அனுப்புகிறான். சக்கர வியூகம் சிதைய, அபிமன் அம்புவிட, துரோணர் புறமுதுகிடுகின்றார். அசுவத்தாமன் கன்னன் ஆகியோர் அபிமனிடம் தோற்கின்றனர். கிருபனும் கிருதவன்மனும் தோற்கின்றனர். அபிமன் கணையால் சகுனியின் மகன் இறக்கிறான். விகன்னன் முதலியோர் தோற்றோடுகின்றனர். தருமனிடம் விடைபெற்று வீமன் அபிமனுக்குத் துணையாக வருகின்றான். அபிமனை அணுகா வண்ணம் வீமனைத்தடுக்கத் துரியோதனன் கூறுகிறான். எதிர்ப்பட்டவர் தோற்றோட, துரியோதனன் சினந்து, பின் சயத்திரதனோடு இன்மொழி கூறுகிறான், வீமனுக்கும் அபிமனுக்கும் இடையே கொன்றை மாலையிட்டுப்பிரித்து அபிமனை வெல்லத் துரியோதனன் உபாயம் கூறுகிறான். அவ்வாறே சயத்திரதன் செய்ய, வென்ற அபிமன் அம்மாலையைத் தாண்டாமல் திரும்பவும் போர் செய்கிறான். துரியோதனன் சேனை ஓட, வீமன் அபிமனுடன் வரும்போது, கொன்றை மாலைகண்டு பின் தங்கி நிற்கிறான். மாலையால் பிரித்த அபிமனை வெல்ல இயலாது என்று கூறி வீமன் திரும்புகிறான். அபிமனோடு போர் புரிகின்றனர் கன்னன் படை வீரர்களை அனுப்புகிறான். அது போரிட்டுப் பின்வாங்குகிறது. துரோணர் அசுவத்தாமன் எதிர்த்துவர, அபிமன் இருவரையும் வெல்கிறான். துன்முகன் தோற்கிறான். சல்லியனும் மகன் உருமித்திரன் வர, உருமித்திரன் இறக்கச் சல்லியன் திரும்புகிறான். பிளவுபட்ட சக்கர வியூகத்தில் அபிமன் புகுகிறான். துரியோதனன் மகன் அபிமனை எதிர்த்துப் பின்வாங்குகிறான். அபிமன் இலக்கண குமரனைக் கொல்கிறான். அதுகேட்டுக் கண்ணீர் வடித்தத் துரியோதனன் அபிமனைக் கொல்லக் கட்டளை இடுகிறான். பலரும் ஒன்று கூடி அபிமனை வளைக்கின்றனர். பகைவர் பலர் சிதைவுப்பட்டனர். அது கண்டு துரியோதனன் கன்னனை அனுப்புகிறான். முதலில் தோல்வியுற்ற கன்னன் அபிமனோடு போர்செய்து சேனையை அழிக்கிறான் தேரிழந்த அபிமன் வாளேந்தித் தரையில் நின்று போர் செய்கிறான். துச்சாதனன் மகன் துச்சனியைக் கொல்கிறான். அதுகண்ட துரோணர் அம்பு தொடுக்க அவற்றை அழித்துவிடுகிறான். துரோணர் மும்முறைத் தோற்றுப் பின் அபிமனின் கையைத் துணிக்கிறார். ஒற்றைக் கொடு, தேர்ச் சக்கரம் ஏந்தி அபிமன் போர் செய்கிறான். அதுகண்ட துரியோதனன் சயத்திரதனை ஏவி, அவனைக் கொல்லுமாறு கூறல். சயத்திரதனும் அபிமனும் போர் புரிகின்றனர். அபிமன் தளர்ந்த போது சயத்திரதன் அவனைக் கதையினால் தாக்கிக் கொல்கிறான். அதுகேட்ட தருமன் புலம்புகின்றான்.

ஏனையோரும் வருந்த மாலை நேரம் ஆகிறது. விசயன் தெற்கே வெற்றி பெற்று வர, கண்ணன் இந்திரனை நினைத்து, அவன் புதல்வனைக் காக்குமாறு கூறுகிறான். வழியில் இந்திரன் முனி வடிவில் வந்து, இறந்த புதல்வனுடன் தீப்பாய இருப்பது கண்டு, கண்ணன் அந்தணனை விலக்குமாறு கூறுதல், விசயன் தடுக்க, அந்தணன், 'நின்மகன் இறந்தாலும் என் சொல்லை மருது ஒழி' என்று கூறுகிறான். அதனை ஏற்று அருச்சுனன் செல்லும்போது பேரொலி கேட்கிறது.

அதுபற்றிக் கண்ணனிடம் கேட்க, ஒன்றும் கூறாது அவன் அழுகின்றான். உண்மை உணர்ந்த அருச்சுனன் புத்திர சோகத்தால் சோர்ந்து தேரினின்றும் விழுந்து புலம்ப, கண்ணன் எடுத்துத் தேற்றுகின்-றான், ஐவரும் புலம்பும்போது வியாசமுனி தோன்றி தேற்றுகின்றார், அருச்சுனன் தெளிவுற்று மற்றவரையும் தடுக்கிறான். நாளை மாலைக்குள் சயத்திரதன் தலையை அறுப்பதாக அருச்சுனன் சூளுரைக்கிறான். தருமனை கண்ணன் தேற்றி, அருச்சுனனோடு இரவுக்குள் கயிலை சென்று மீள முற்படுகின்றனர். பசியால் மயங்கிய அருச்சுனனை கனி புசிக்கச் செய்கி-றான் கண்ணன். சிவபூசை செய்யாமை நினைத்து வருந்திய அருச்சுனனிடம் கண்ணன் தன்னையே பூசிக்குமாறு கூறுகிறான். அருச்சுனன் கண்ணனைப் பூசித்துக் கனியுண்டு களைப்பு நீங்கப் பெறுகிறான். கண்ணனால் கருடன் வந்து இருவரையும் கயிலைச் சேர்க்கின்றது. சிவன் கண்ணனிடம் வந்த காரணம் கேட்டறிகின்றார். செய்தியறிந்து விசயனைச் சிவபெருமான் அருகு அழைக்கின்றார். சிவபெருமான் விசயனுக்கு வேண்டுவது யாது என வினவுகின்றார். முனிவரால் அம்பு முதலியன கொடுக்கச் செய்கிறார். மேலும் பல வரங்களையும் கொடுத்தனுப்புகிறார். விடியலில் இருவரும் பாசறையினை அடைகின்றனர். தருமன், கடோற்கசனைத் தூதாக அனுப்பி அருச்சுனன் செய்த சூளுரையினை உரைத்து வருமாறு ஏவ, அவனும் சென்று கூறித் திருப்புகிறான். மறுநாள் போரில், சயத்திரதனை மாலை வரை இறவாது காக்கத் துரியோதனன், துரோணர் முதலியோர் பால் வழி கேட்கின்றான். துரோணர் இயன்ற மட்டும் காக்க உறுதி அளிக்கின்றார். கன்னன் முதலியோரும் அவ்வாறே கூறுகின்றனர். அனைவரும் சயத்தி-ரதனைக் காக்க முடிவு செய்து, விடைபெற்றுத் தம்மிடம் அடைகின்றனர். தருமனைக் கண்ணன் முதலியோர் துயில் எழுப்புகின்றனர். கண்ணனும் கடோற்கசனும் தாம் தாம் சென்று வந்த இடத்தே நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தருமனுக்குக் கூறினர்.

சங்கை[1]இலாவகை யமபடரால் உயிர்தளர் பொழுதத் தருகே
மங்கை சூழ இருந்தழுது உள்ளம் மயக்கினும் யான் மறவேன்
கங்கையும் நான் மறையும் துளவும் கமழ்கழல் இணையும் திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கமும் நேமியும் அஞ்சன மேனியுமே.

... ...

... ... —

... ...

துட்டத்துய்மன் மகர வியூகம் அமைத்தல்

ஒருபகல் யூகமுமே இப்பகலுக் கொப்பிலென
விரகுமுனி யணிந்த மெய்யூகம் தான்பார்த்துப்
பகர்தற் கரிய பதாதிப் பெருங்கடலை
மகர வியூகம் வகுத்தான் செகத்தோரும்
மாலும் குருபதியும் வானோர்களும் மதிக்கச்
சீலமுடைய துஷ்டத் தூயனணி வகுத்தான்
அந்தணன் வைத்த அணியும் அவன்விரகும்
செந்தழல் போலச் செருமுகத்தில் நிற்பதுவும்
பாத்தான் மைந்தன் பதிமால் முகநோக்கி
நேத்தெந்தன் போர்க்கு நிலைகெட்ட அந்தணனும்

வடவைத் தழல்போலே வந்துநிற்கும் வாறாலே
மிடலுற் றெனைப்பிணிப்பான் வெல்வதரி திங்கிவனை
நென்னல்[2]போல் என்னைவிட்டு நீயகலப் போகாதே
என்னமா லுக்குமியல் விசையர்க்கு முரைத்தான்
இவ்வா ரரன்சேய் இயம்ப இருபடையும்
ஒவ்வாப் பெரும்பூசல் உற்றெதிர்ந்த தம்மானை,
அந்தரத் துந்துபிகள் ஆர்க்கத் துருபதன்சேய்
சுந்தரச் சிங்கமெனத் தோன்றினன்காண் அம்மானை.
இரண்டு படையும் இகல்முனையும் வேளையிலே

1 ஐயம்
2 நேற்று

சஞ்சத்தகர் விசையனோடு போருதல்

திரண்டுசஞ் சத்தகரும் தீரன்விசை யன்முன்னே
வந்தறை கூவ மனம்வெகுண்டு அர்ச்சுனனும்
கந்தநில மிக்கான் கருதார்க் கிடியேறு
மால்நடத்தும் தேரான் வரிவில் லுறவளைத்துக்
கரல்நொடிக்குள் பலகோடி கங்கபத்தி ரம்சொரிந்தான்
மேகங்கள் ஏழும் விரைந்தேழ் கடற்படிந்து,
சாயாமற் சற்றும் தயங்கா திளையாமல்
ஓயாமல் பெய்யுமழை ஒத்தே கணைசொரிந்து,
தேரினமும் தோலினமும் தேரும் பரியினமும்
வீரப் பதாதி விகற்பங் களும்உருவி
உகசண்ட மாருதத்தில் உக்கும் சருகினம்போல்
இகல்கொண்ட சேனை இவன்ஏவில் கெட்டுடைந்தே
பட்டோர் அனந்தம் படாமல் உயிர்ப்புடன்வெந்
இட்டோர் அனந்தம், குலமேன்மை வெந்திறலும்
கெட்டோர் அனந்தம், கிரீடி கொடுங்கணையால்
ஓருடலில் பத்துலக்கம் உற்பலமாம் வாளிபட
தாரை முகிலொத்த சரமாரி தைத்திகலோர்
பாரொரு பாதி பரமனைப்போல் மெய்சிவந்து
கவந்த மனந்தமிடக் கங்கமிக வனந்தம்
உவந்தெங்கும் நின்றுலவ ஓர்பாலிவன் கொடும்போர்
செய்ய துருபதன்தன் சேயும் சிலைமுழியும்
வெய்ய கொடும்போர் மிகவிளைந்த தம்மானை.

இருபுறப் படையும் போருதல்

தானா சமுத்திரங்கள்[1] தானிரண்டும் போர்புரியச்
சேனா பதியிருவர் தேரிரண்டு மேநெருக்கி
ஈரிரண்டு நேமிகளும் ஈர்சுடர்போல் வில்வீரர்
தேரிரண்டு முட்டவிட்டுத் திண்சிலைத் தான்வளைத்தார்
சேலினங்கள் பாய்வதெனச் சேர்ந்தெதிர்ந்த திண்தேரின்
காலினமும் காலினமும் கண்டித்தே ஒத்துநிற்க

திட்டத்துய்மனும் துரோணரும் போருதல்

ஐவர் படைத்தலைவன் அந்தணனை ஆர்ப்பரித்துத்

---

1 சேனைக் கடல்கள்

தெய்வ முனைப்பகழி செல்லொத்து வீசிநின்றான்
பாப்பான் வெகுண்டு பகழித் தெதிர்பகழி

கோப்பாக விட்டுடனே கோலுடனே கோலிகலே
ஒன்றையொன்று தான்பிளந்து ஒன்றிரண்டாய்த் தான் தறித்துச்
சென்று சிறகரிந்து திக்கதிரப் போர்புரிந்தும்
ஒத்த சரப்போரில் உரத்தந்தணன் வெகுண்டு
வெத்தி யுள்ளஐவர் விறற்சேனை நாதனுட
வில்நாண் தனைத்துணித்து மெய்க்கவசம் தான்பிளந்து
மன்னோன் கொடியறுத்து மற்றுமவன் மெய்மறைய
விட்ட கணைமழையால் வெய்துயிர்த்துக் கைமறந்து
நட்ட மிதென்று நடுநடுங்கி நைந்தயர்ந்தான்.
ஆதி விருமகுலம் ஆம்வசிட்டர் ஓரிரண்டாம்

சாதியனும் அந்தணனும் தார்வேந்து முன்போரு
செய்த சவுரியமும் தீர்மானம் போலொருவர்
வெய்து முடிப்பதுண்டோ வேந்துசயம் பெற்றதுண்டோ
ஒர்முனிவன் கையால் ஒடுக்கினான் ஏழ்கடலும்
போர்முவன் செய்தாற் பொறுப்பரோ பூபாலர்
ஆதலாலந் தணன்வென்றான் அரசன் தான்தோற்றான்
வேத முனியைஎவர் வெல்லவல்லார் மேதினியில்
மான முனைத்திறலும் மங்கி மனங்கலங்கி

... ...

... ...

... ...

தருமன் அபிமனுடன் கூறல்

சேனையும் யாமும் செகத்தில் உயிர்பெறலாம்
தானையுடன் செல்லாது தங்கினால் ஓரிமைப்பில்

பூசுரன் நீறாய்ப் பொருதளிப்பன் தப்பாது
பாசமுடன்நென் னல்என்கைப் பாணத்தால் வெங்கொடுத்தான்

இன்றைக்குன் மாமன் இளைக்கச் சரந்தொடுத்துக்
கன்றிக் கொதித்துவரும் கார்முகத்தின் பார்ப்பானை
நின்னை அளித்தோனும் நீயுமே யல்லாது
பின்னை இவனைப் பிளக்கவல்லர் உண்டோதான்

அபிமனைப் போருக்கனுப்பல்

என்றுதன் மார்போடு இசைத்தணைத்து அன்புருகி
அன்றிருகண் நீர்கள் ஆறாம் எனச்சொரிந்து
செல்லு, இமைப்பொழுதில் சென்று சமர்[1]பகையை
கொல்லுன் புயத்தில் குடியாக வாழ்ந்திருக்கும்
வீரி விசையை[2] மிகுந்த கடாட்சமதால்
போரிலே வாகை புனையென்றான் பூபதியும்

அபிமன் செல்லல்

மூத்த தகப்பன் மொழியும் முனம்கமலம்
பூத்த பதந்தனிலே பூபாலகன் பணிந்து
சீற்றமுற வில்லும் தெரிந்தெடுத்து வெந்நிடத்தில்
கோற்றவில் தூணியுடன் கொற்றமுறும் பல்படையும்
ஏத்த பதினெட்டும் எடுத்து விடைவாங்கிப்
பாத்தன்மகன் தேரில் பருதி[3]போல் தோன்றினனே
உதய கிரியில் உதித்தே சிவந்தெழுந்து
அதியசெழுவா லரவிப் பிரகாசத் துடனே
வயவீர கண்டா மணிப்பதத்தி லேயிலங்க
வெயிலும் நிலவெறிப்ப மென்மணிகள் மார்பிலங்க
வாகு வலையம்[4] மணிமாசுண வலையம்
நாக மணிப்பதக்கம் நற்பூடணம்[5] இலங்க
கைக்கடய மிக்க கவசம் வெயிலெறிப்ப
மெய்க்கணிந்த பூண்துயிலும் வெம்மை வெயிலெறிப்பச்
சோதி முழுமதியாய்த் தோன்றுமுகத் திருபால்
காதி லிருசுடர்போல் காந்துமணிக் குண்டலமும்
அருணப் பிரபை அனந்தம் ஒளிபிறங்கக்
கிரணத்[6] தருண[7] கிரீடஞ் சிரசிலங்க

---

1 போர்
2 கொற்றவை
3 சூரியன்
4 தோள் அணி
5 ஆபரணம்
6 கதிர்
7 இளைய

ஆயிரங் கோடி அருக்கன் மதிப்பிரபை
பாயுந் திருமேனிப் பாத்தன் திருக்குமரன்
காமனிலும் பேரழகாய்க் கந்தனிலும் வீரியனாய்
மாமனிலும் மிக்கபொறி வைகுதிரு மேனியனாய்

துருபதன் முதலியரொடு பொருதல்

இனஞ்செய் துருபதரும் எண்ணிலா மன்னர்களும்
கனஞ்செய் இடிபோற் கடல்தூ ரியங்கறங்க
மனஞ்செய் தணியன்யாய் வாரிபோற் சூழ்ந்துவரத்
தனஞ்செயன் பெற்ற தவக்குமரன் வாளபிமன்
தினஞ்செய் அருணன்நிகர் தேர்போல்தன் தேர்வலவன்
முனைந்து செலுத்த முரண்கொண்டு தானடந்து

எதிரியின் சக்கர வியூகத்தைத் தாக்கல்

சக்கர யூகம் தனில்நின்றோர் வாய்சோரி
கக்கும் படிரோமக் கால்[1]தோறும் கோல்துளைப்பச்
சீராமர் போரும் செயவிசயன் தன்போரும்
நேரா மெனவே நிலமூவு லகுமெச்ச
அச்சுதன் முன்னாற் அறிவித்த மந்திரத்தை
உச்சரித்துப் பலகோடி ஒண்கணைகள் தான்சொரிந்தான்.
உகமீ றுறுங்காற்றும் ஊழிப் பெரும்புயலும்
நிகராச் சரமாரி நீங்காது வீசியதால்
பரியும் கரியும் பதாதிதேர் பலவிதமாய்
நெரிந்து சரிந்தழிந்து நிர்த்தூளி யானதுவே.
சிரசு முதலாகச் செய்யபதம் ஈறாக
விரசி னுடனறுத்து மேதினியில் வீழ்த்தியதால்
உருத்திர சங்கார ஊழிக்கா லத்தழிவாய்
வருத்தமாய்ப் பலகோடி மன்னர் களும்மாய்ந்தார்
எத்திசையும் சோரிகளாய் எத்திசையுமே பிணமாய்
எத்திசையும் மூளைகளாய் எத்திசையுமே சிரசாய்
எத்திசையும் ஆறுகளாய் எத்திசையுஞ் சேறுகளாய்
அத்திசைக ளெங்கும் அருவிகளும் வெற்புமொற்றாம்
பஞ்சு மலையில் படர்நெருப்பு பற்றியபோல்
துஞ்சிவிழத்[2] துஞ்சிவிழச் சேனைபோல் கோல்சொரிந்தான்

---

1 மயிர்க்கால்

2 இறந்து விழ

தேவர் திகைக்கத் திரிபுவனமும் திகைக்க
மூவரும் மெய்க்க முராரி[1]மரு கன்பொருதான்
வன்போர் அபிமனுட வாளியா லித்தரையில்
என்பாக ஒன்னார்கள் எல்லாம் இறந்தழிவார்
பாரதப்போ ரின்னோடு பற்றறுமென் றும்பர்சொல்லி
மத்தகச்சேய் தம்பிமகன் வீரியம் துதித்தார்
சரிந்து சரிந்து சலதிப் பெரும்படைகள்

... ...

... ...

... ...

காலாட் பரிகரிதேர் காவலரு மேவலரைக்
கோலா லறுத்தறுத்துக் கூய்த்தான் மலைமலைபோல்
பார்க்கும் திசைகளெல்லாம் பற்பமலைப் பிணமாய்
நோக்குந் திசைகள் நுவலருஞ் செந்நீராறாய்
சேணெலாம் பலகவந்தம் திக்கெலாம் சென்னிமலை
தோணலால் வானோர் துதித்தார் திகைத்தார்

துச்சாதனன் முதலியோர் தோற்றல்

துச்சா தனன்தோற்றுத் துசமறுந்து வில்லறுந்து
அச்சா றழிந்து அரணங்களும் அழிந்து
மெய்ச்சார் படங்க விறற்கணையா லேதுளைத்துப்
பொய்ச்சீவ னோடே புறங்கொண்டா னம்மானை,
துன்முகன் தேர்வில் துசம்விற் களும்பிளத்து
வின்மகற் கஞ்சி வெருக்கொண்டா னம்மானை.
விகரணன் முதலாக மிக்குள்ள தம்பியரைத்
தகனன் எனஅபிமன் தாரைக்கணை மழையால்
துவசம் சிலைத்தேர் துரகங்[2]களும் பிளத்து
கவசம் பிளந்துபல கண்படவே மெய்பிளந்து
தகமைப் பெரிய தகப்பன் கதைக்கிரையாய்
இகலிற் பிழைத்தோம்என் றின்றோடும் என்றுரைத்து

1 திருமால் - கண்ணன்
2 குதிரை

மற்றுமற்றும் வந்தபல மன்னர்களும் வீரர்கள்மெய்
செற்றவர்கள் அல்லார்புன் சவனைக்கொண் டோடலுற்றார்
பற்றும் வடவையெனப் பாத்தன்மகன் போர்புரிய
நீராறு போல நிறைபெருக்காய்ச் செந்நீர்கள்
பேராறு பாயப் பிணங்கள் சுழியிற்சுழல

போர்க் களத்தை ஏர்க் களமாக்கல்

முற்றுமுற்று மேசொரிந்த மெய்த்தகணை தைத்துகுவ
ஏற்ற குருநிலம் எல்லாம்செந் நீர்பாய்ச்சிக்
கூற்றனெனுங் கூட்டாளி கொற்றவயல் திருத்திப்
பாத்தன் மகன்வில் பகழிமழை பொழியக்
கோத்த படைவாள் கொளுவாள் நிலங்களெல்லாம்
சேற்றுழவு செய்துமன்னர்ச் செய்யமுடி குலைத்து
நாற்று நடவி நரிநாய் குரவையிட
மீதிசைஎங் கும்அபிமன் வீரப் பயிரோங்க
காதுசமர் வெற்றிக் கதிர்விளைந்து தான்சாடப்
போத மிகுத்தவெற்றிப் போர்க்களஞ்செய் தேபுகழாம்
சோதியாம் வெள்ளைச் சுடர்மணிபோல் மூவுலகும்
திக்குக ளெங்கும் செருமவே தானிறைத்துத்
தக்க புகழோங்கத் தானபிமன் நின்றளவில்

பகைச்சேனை மிகுதலும் வீமன் வரவும்

மேன்மேலும் மாறாமல் வெஞ்சேனை வந்துமொய்க்கப்
பொன்மே ரனைய புயஅபிமன் போர்பொருதல்
கண்டு பதறிக் கதாபாணி[1] முன்னவனைத்
தெண்ட னிட்டு வாய்புதைத்துச் செப்பலுற்றான் அம்மானை.
இரதம் அனந்தம் இபமனந்தம் மாவனந்தம்
பரவும் பதாதிப் படைகள் மிகவனந்தம்
வேலை நிகரான வெள்ளப் பெரும்படையில்

பாலகன் இன்று படைபொருத அஞ்சாமல்
உத்தரஞ் செய்தாய் உரவோய்யீ தென்னபவம்
வித்தார மாக விடையெனக்கு நல்குகென்று
இமைக்கு முனம் விடைபெற் றெண்ணில்
... ... — மன்னர் தற்சூழச்

1 வீமன்

சமர்க்கு வயத்தேரைத் தானடத்த வாயுவெனச்
சென்றான் அரவுயர்த்தோன் சேனைப் பெருங்கடலில்,
அன்றே முனைந்தாசு கன்மைந்த னுஞ்சினந்து
சாயை போலொத்த தளத்துடனே பூந்தூளி
வாயுவட வைத்தேயு வாம்எனவே மண்டியதால்,

வீமன் தாக்குதல்

மாயையுற்று வேறுணர் வற்றுச் சக்ரயூபம்
ஈயை ஒத்த இகற்சக்ர யூபம்
நோக்குந் திசைகளெல்லாம் நொய்தாய் நீறாகத்
தாக்கினான் எங்கும் சரத்தால் வயவீமன்
கலிங்கர் குலிங்கர் கவுசலர் கானாடார்
தெலுங்கர் துளுவர் செயகொங் கணர்சீலர்
சிங்களவர் கங்கர் சீனர் சோனகர்
தெங்கண மராடர் திராவிடரும் சாவகரும்
வங்கர் திரிகர்த்தர் மகதத்தர் காந்தாரர்
கஞ்சர் கிராடர் காமபோசர் காசியர்கள்
விஞ்சகர வன்னர் விதற்பர் விறற்கரசர்

மற்றமற்ற தேச வயவீரரும் படையும்
சுற்றியே வாயு சுதனைத் தழல்வலைபோல்
கம்மினார் அங்கவர்மேல் காலகும ரன்தளத்தோர்
விம்மிப் பலபாஷை வேந்தரும்போர் செய்தனரே.

இருபடையும் போகுதல்

சலதி இரண்டுமிகத் தான்போர் எதிர்ந்ததுபோல்
இலகு மிருபடையு மேகலந்து போர்பொருதார்
வரைகள் பிடித்தெறிந்து வானரம்போர் செய்தவந்நாள்
நிருதர் நிகர்மடிந்தார் நேமிவியூ கத்திலுள்ளோர்
மண்டுபிர சண்டகொண்டல் மாருதம்போல் மல்வீமன்
தண்டுகொண்டு யூபமென்னும் சக்கரத்தை தாக்குதலும்

துண்டுதுண்டு கண்டமுறத் துண்டித்தறுத் தெறிந்து
மிண்டியண்டி வந்தடர்ந்த வெம்பூசல போல்வீமன்
தளம்நால் வகைக்கடலும் தண்டாயுதத் தாலே
களமீது அறைத்துக் கரைத்தான்செந் நீராற்றில்

படை பின்வாங்குதலைக் கண்ட துரியோதனன் நிலை

பார்த்து விழித்தீப் பறக்கப் பணிக்கொடியோன்
சீற்ற மிகுந்தான்தன் சேனா சமுத்திரங்கள்
ஊழித்தீ யொத்த உயர்அபிமன் தன்னாலும்
ஊழிக்காற் றொத்த உயர்வீமன் தன்னாலும்
இடிகண்ட சர்ப்பம் எனவே நடுநடுங்க
அடர்சிங்கம் ரெண்டினைக்கண் டத்தியினம் கெட்டுடைந்த

வாறுபோற் சேனையுடன் மன்னர்தெறி கெட்டோட

துரியோதனன் யோசனை

சீறும் அரவுயர்த்தோன் திட்டியாற் கண்டழன்று
ஒருவன் வடவையென உற்றெரித்தான் சேனையெல்லாம்
இருவரும் ஒத்தால் எரியும் பெருங்காற்றாய்
இற்றைப் பகலிலே என்சேனை யுள்ளதெல்லாம்
முற்று மறுத்தெறிவார் மோசமில்லை என்றுரைத்து
வெவ்வே றிருவரையும் மிக்காகவே பிரித்து
ஒவ்வாப் பெரும்பூசல் ஊடாடியே பொருந்து
இருவர் தனையும் எளிதாக வென்றிடலாம்
விரைவின் இதுசெய்வேன் வேந்தரையும் வீரரையும்

சாகர மன்னர் தளத்தைஇரண்டாய்ப் பிரித்து
ஏகவிடை கொடுத்தான் ஏந்தல் அரவுயர்த்தோன்

பூரி சகுனி ஓர்புறம் போருக்கு முனைதல்

பூரி சகுனி பொருவிலாச் சல்லியனும்
பாரரசர் பற்பலரும் பஞ்சானனக் கொடியோன்

துரோணர் முதலியோர் அபிமனை வளைத்தல்

தன்னை வளைந்தான்தன் தம்பியரும் மன்னவரும்
மன்னும் துரோணன் மகன்கிருபன் மால்கிருதன்
சிந்துபதி மற்றும் திறலரசர் பற்பலரும்
வந்தபிமன் தன்னை வளைத்தார் பெருங்கடல்போல்,
வேலையொலி போல விம்மும் இடிக்குலம்போல்
காலமுகில் போல் கறங்கமுறச் சினங்கள்

கனல தெனவே கடல்நால் வகைப்படையும்
அனிலன் சுதனை அபிமனையும் மொய்த்தனரே.

போர் நிகழ்ச்சி

சிரமும் மணிமுடியும் சேர்ந்தே அறுந்துவிழ
உரமும் பலபூணோ டுற்றே அறுந்துவிழ
கிரியை நிகர்த்துக் கிளர்ப்புயங்கள் அற்றுவிழக்
கரமும் பலபடையும் காசினியில் அற்றுவிழ
இடைகள் அறுந்துவிழ வேகுடல்கள் சிந்திவிழ
தொடைகள் முறிந்துவிழத் துண்டித் துடல்சிதறத்
துண்டம் பலவாய்த் துணிந்த வயங்களெல்லாம்
கண்டகண்ட மாகக் களமெங்கு மேசிதற

வீமன் போர்

வல்வீமன் வில்லை வளைத்துச் சரஞ்சொரிந்து
பல்வீ ரரையும் படுகளத்தி லேகிடத்தி
பூரிச் சகுனி பொருவரிய சல்லியன்தன்
தேர்வில் லறுத்தவர்கள் தேகமெல்லாம் புண்ணாக்கி
ஓட்டினான் மற்றோரை யூபப் படுகளத்தில்
வாட்டினான் வெங்கூர் வடிக்கணையால் அம்மானை.

அபிமன் போர்

வீரர் மதிக்கும் விசையன் தருகுமரன்
பார வரிவிற் பகழிமறை சொரிந்து
சாகர மன்னர் தளத்திரளை ஓரிமைப்பில்
வேகமுடன் துண்டுதுண்டாய் மெய்யைப் பொடிபடித்திப்
பிணமேற் பிணமாய்ப் பிறங்கல் நிகர்பிறங்கிக்
கணமேற் கணமாய்க் களத்திலே தான்கிடத்திப்
பன்னாள் துகிலுரிந்த பாதகன்தேர் வில்லறுத்து
மின்னேரும் அம்பதனால் மெய்முழுக வேசொரிந்து
ஓட்டினான் தம்பியராய் உள்ளோர் அடங்கலையும்

... ...
... ...
... ...

சர்ப்பக் கொடியோன் தனதுகை வந்தவித்தை
அவன்சென்மந் தோன்றி அழியும்நா ளுள்ளளவும்

பவஞ்செய்ய அஞ்சாத பாவிவிர கேவிளைத்தான்
என்கண் உயிரனைய இன்பமுறு புத்திரனை
வன்கண்ணன் வஞ்ச மல்யுத்தம் செய்வானேல்
கோடி அரவுயர்த்தோன் கோலியிகள் செய்தாலும்
ஈடபிமன் அவன்முன் எவர்நின் றுயிர்பெறுவார்
வேலைக்கு அப்புறத்தில் மீறும் வடவையைப்போல்
மாலைக்குப் பாலிருந்து மல்வீமன் மெய்கொடுத்தான்

வீமன் போர்

யாளி யெனநின்ற அனிலன் சுதனுடனே
வாளி மழைபொழிந்தார் மன்னவர்கள் பற்பலபேர்,
அங்கவர்கள் விட்டபல ஆசுகத்தை ஆசுகத்தால்
பங்கப் படநறுக்கிப் பாதாதி கேசமுதல்
சின்னம் படநறுக்கித் தேரறுத்து வில்லறுத்து
மன்னர் அனந்தம் மயங்கப் பொருதுநின்றான்

சகுனி முதலியோர் அபிமனைச் சூழல்

காந்தார தேசக் கடற்சேனை வன்சகுனி
வேந்தான சல்லியனும் மிக்கபல மன்னவரும்
கன்னன் கிருபன் கலிங்கன் கிருதவற்மா
பூரி சதாயு புகழா சரிகுமரன்
தாரரசன் தம்பியரும் சாகரமாம் சேனைகளும்
மெய்த்தபட்ட வர்த்தனரும் மென்மகுட வர்த்தனரும்
மொய்த்தபிமன் தன்னை முரட்போர் தொடங்கினரே.

அபிமன் போர்

போர்மதியாப் பார்த்தன் புதல்வன் மிகச்சினந்து
கார்மதியா தேகிக் கடல்நீர் அறப்பருகி
வர்மித்து மேன்மேல் வருஷிப்பது போலத்
தர்மர்க்கி ளவல்திருத் தம்பிமகன் அம்புமழை
சொரிந்து சொரிந்து தொடர்நூல் வகைத்தளமும்
அரிந்து மலைமலைபோல் அங்கங்கு தான்கூய்த்துச்
செந்நீர்ப் பிரளயங்கள் திக்கெங்கும் ஆறோட
புன்னீர்ச் சுழிக்குண்ட பொருநால் வகைத்தளமும்
தாழ்ந்தெழுந்து மீண்டமுங்கிச் சாகரத்திலே ... ...

ஆழ்ந்த பெருவாய் அலகை கலகமி... ... ...
மீவெளிகள் எங்கும் மிகுகவந்தந் தானாடக்
கோவெளிகள் எங்கும் குறையாப் பிணமலையாய்க்
களமெங்குந் தான்பரப்பிக் காந்தார மன்னவன்தன்
தளமும் கணத்தில் தரித்தே சகுனிவரத்
தவறும் கொடிபாகு சாரதியும் நீறாக்கி
அவனம் புயம்மார்பு அறவே கணைசொரிந்து
நஞ்சுண்ட சேலாய் நடுநடுங்கி மெய்தளர்ந்து
அஞ்சியே வெந்நிட் டகலவே தான்விரட்டி
அரவக் கொடியோன் அனுசர் அடங்கலையும்
இரதத் துடன்தேர்வில் எல்லாம் பொடிப்படுத்தி
உக்கி நடுங்க உடல்துளைத்து வாயிரத்தம்
கக்கும் படியாய்க் கணையால் கடிந்தோட்டி
மற்றிரண்டேரும்[1] வரிவில்லும் தானழித்துச்
சித்திரம் போலத் திகைத்தயர வொன்னார்கள்
மெய்யுருவ வீசி வெருக்கொளவே[2] தான்விரட்டி,
கையுரத்து நிற்கின்ற கன்னன்தேர் வில்லழித்துக்
கதிர்கால் எனச்சோரி காயமெங்குந் தானோட
மதிக்கா தவன்தன் மயிர்க்கால் தொறும்கணைகள்
ஏவி விரட்டி எழிற்பட்ட வர்த்தனரை
ஆவிமா யப்பலரை ஆகவத்தி லேயேறுத்துத்
துரகங் கொடிபாகு துரோணன் பலபிளந்து
இரதங் கவசம் யாவுமே நீறாக்கி
அங்கங்கள் பங்கமுற அம்புக் கூடாய்நிறைத்து
பங்கப் படவே படுகளத்தி லேமாய்த்து
மிஞ்சு மரசரெல்லாம் வெந்கொடுக்கத் தான்விரட்டி
விஞ்சை மகுடமுடி வேந்தர் அடங்கலையும்
அஞ்சுவே தேர்வில் அழித்தறுத்து ஆற்றாமல்

கிருபன் முதலியோர் கெட்டோடல்

கெஞ்ச விரட்டிக் கிருபன் கிருதனையும்
தேர்வில் லழித்துச் தெறிகெடவே தான்விரட்டிப்
பூரிதேர் வில்லும் பொடித்தே துரத்திவிட்டு
வீறு சதாயு விறற்றேரை வில்லழித்து

---

1 வலிய திரண்டதேர்
2 அஞ்சுமாறு

மாறி முதுகிடவே வன்கணைகள் தான்சொரிந்தான்
தன்சேனை மன்னர் தரிப்பற்று வெந்நிடவே

துரோணர் சினந்து பொரல்

முன்சேனை நாத முனிவெகுண்டு கண்சிவந்து
எம்மாத் திரமென்று எவர்க்குந் தொகையடங்க
மும்மூர்த் தி[1]களும் முனிவோர் களும்திகைக்க
அம்பு வெளியால் அகல்வெளியெல் லாம்மறைக்க
உம்பர் திகைக்க உயர்கணைகள் தான்சொரிந்து
சோனையெனப் பார்ப்பான் சொரிந்தகணை மாரியெல்லாம்
ஈனமுற இன்னவிட மென்றுங் காணாமல்
மாய்சையு காந்தசண்ட மாருதப் புயல்போலச்
சாய்கை யறவே சணத்திலே நீறாக்கி
ஏறிய தேரும் இடக்கைவரி வில்லினையும்
நீறு படக்கண் இமைப்பில் முதுகுகண்டான்.

அசுவத்தாமன் போர்

தாதை முதுகிடமாத் தாமன் சரமனந்தம்
ஊதைப்[2]புயல் பொழிவது ஒத்தே சொரிந்தடர்ந்தான்
வீறசுபத் தாமன் மிகச்சொரிந்தான் அம்மானை.
நீறு படுத்தி நெடுந்தேரை வில்லழித்துக்
காற்றேறு பட்டுடைந்த காலபாசம்[3] போற்பாக்க
கோத்தேறவும் அம்பால் குருமைந்தனும் பறந்தான்
சர்ப்பக் கொடியோன் தளத்தரசர் வீரரிலே
விற்பகழிக் காற்றாமல் வெந்நிடாப் பேர்களில்லை

அபிமனுடன் மத்திரர் சேய்இருவர் பொரல்

தட்டுக் கெட்டாகம் தடுமாறி மன்னர்புறம்
இட்டுக் கெட்டோட இவன்போர் புரிமுகத்தில்
வெற்றி யபிமனுட வின்மைதனை எண்ணாமல்
மற்றுநிக ரில்லாத மத்திரர்கோன் சேய்இருவர்
உன்மிகனும் வன்மிகனும் ஊழிக்காற் றுத்தீப்போல்
வன்மமுடன் சேனையுடன் வந்துபோர் தான்மூண்டான்

---

1 சிவன் திருமால் நான்முகன்
2 ஊதைக் காற்று
3 இயமன், உயிர் கவரும் கயிறு.

இகலுற்று வந்தபடை எல்லாம் இமைப்பளவில்
பகழிக் கிரையாய்ப் படுத்தினான் ஆசுவத்தில்
என்படை தன்னை இவனோ அழிப்பதென்று
முன்பிரு வோரும் முகில்போல் கணைசொரிந்தார்
மத்திரனில் நூறு மடங்கிவர்என் றும்பர்சொல

அத்திரவி லாண்மையினால் ஆமென்று தான்துதித்தார்
ஆசினியும் திக்கடங்க அம்பாய் நிறைத்தமையால்
ஊசி நுழைய ஒருபுறமு மில்லாமல்
வீசுஞ் சரமடங்க மின்னல்வெட்டி மாறுமுன்னே
ஆசுகத் தாலே அபிமனன்று நீறுகண்டு
விற்றேர் அழித்துஇரு வேந்தர் முடிகளையும்
அற்றே நிலத்துருள அன்றறுத்தான் அம்மானை.

மத்திரன் எதிர்ந்தல்

மைந்தர் இருவர் மடிந்ததனால் மத்திரனும்
முந்தி யுதித்தஉரு மித்திரனாம் புத்திரனும்
சிந்தை முனிந்துவிழி தீச்சொரியப் பார்த்தனுட

மைந்தன் மேலம்பு மழைசொரிந்தா ரம்மானை.
ஏவுங் கணைமாரி எல்லாம் இமைப்பளவில்
தாவி யபிமன் தகனித்தே[1] தன்சரத்தால்
மத்திரன் மூத்த மகன்தேரை வில்லழித்து
தத்திய தாள்சங்கஞ் சரணும் துடியிடையும்
உதர[2] முகங்கரந்தோள் ஒண்களமும் தானறவே
பதற அறுத்தான் பலபாணம் தானேவி.
தந்தை யுடல்பதறச் சந்ததியைத் துண்டுதுண்டாய்ச்
சிந்த அறுத்தமையால் செங்கண் மிகச்சிவந்து

சல்லியன் போர்

சல்லியனும் வில்வளைத்துச் சரகோபச் சாய்கையதாய்

வில்லபிமன் மீதுகணை மேகமெனச் சொரிந்தான்
மலைதட் டுருகவிடும் வன்சரங்கள் உள்ளதெல்லாம்
நிலைகெட் டறப்பொடிய நீள்சரங்க ளால்அறுத்து

---

1 எரித்தழித்து
2 வயிறு

மாவலிய ருத்திரன்என் மைத்துனனைக் கொன்றதற்கு
மூவரும் தன்மக்கள் முடியறுத்தே நுன்முடியும்
பாரில் விழஅறுப்பேன் பாரென்று பலபகழி
காரதெனச் சொரிந்து கைவில்லைத் தேரழித்து
மருமம் புதைய வடிக்கணைகள் தான்சொரிந்தான்.
உருமுந் திகைக்க ஒருவேல் எடுத்தெறிந்தான்
மத்திரன் விட்ட வடிவேலை வாளபிமன்
அத்திரம் விட்டே அறுத்தெறிந்தான் அம்மானை.
வேல்பொடியச் சிந்தை வெருவி வெருண்டோடிக்
கால்பதறிக் கைபதறிக் கன்றிமறு தேரேறி
மற்றுமொரு வில்லு வளைத்தின் றபிமனுயிர்
செற்றிடுவன் அல்லதுயான் செத்திடுவேன் என்றுருத்து,

... ...
... ...
... ...

அணுப்பட ஓரிமைப்பில் ஆசுகத்தால் நீறாக்கி
இரதம் பலகோடி இபங்கள் பலகோடி
துரகங்கள் பலகோடி சொல்பதாதி கூட்டம்
எண்ணிறந்த கோடி இமைப்பில் அறுத்தெறிந்து
அண்ணலென வந்த அரசரையும் சேயரையும்
தேர்வில் லறுத்துச் சிரசறுத்துக் கீழ்வீழ்த்தி
வார்வில் கணைகுடைய வல்லதுரோ ணன்முதல்
பேர்சொல்லப் பட்ட பிரபலர்கள் எல்லோரும்
தேர்வில் இழந்துடலம் சேரவே புண்ணாகிக்
கான்முதுகிற் சாட[1] களத்தில் தரிப்பறவே
மேன்மை கெட்டுக் கன்னன்முதல் வேந்தர்புற மிட்டனரே!
எல்லோரும் பின்கொடுக்க ஏந்தல்செய லெக்கணன்தான்
உல்லாச மாகஒரு தேரதனை நடத்தி
இலக்குமன் ஒத்த இகலபிமன் தன்மேலே
இலக்கண னிந்திர சயித்தொத்து இகல்முனைந்தான்

---

1 கால் முதுகில் படுமாறு

நகைத்து வர்மித்து நரன்மைந்தன் தன்மேலே
பகைத்து வரஇவனும் பறக்கடித்து வைப்புறுத்தித்
தோட்டுணையாய் வந்த துரைவீரர் சேனைகளும்
வாட்டனுக் கேட்டு மடிந்துமுது கிட்டபின்பு
வந்தாய்நீ பாத்தன் மகனைச் செயித்திடவோ
நிந்தாய் தகப்பனின்று நீதியுடன் பெற்றான்போல்
உன்னுயிரைக் கொண்டுதப்பி ஓடிப் பிழைத்திடுஅலால்
பின்னுயிர் செற்றார் பிழைப்பதுண்டோ ஏகுகென்றான்.
என்னை ஏகென்றாய் எனதுவடிக் கணையால்
உன்னை இமைப்பில் உயிரழிப்பேன் என்றுருத்து

உருளோ டுருள்கண் உதைப்பாய்த் தேர்நடத்தி
வெருவா வயவீரர் வில்வளைத்தார் அம்மானை.
நிருதன் மகனும் நிகரில் இலக்குவனும்
பொருத செருப்போலும் போர்ச்சூரன் வேல்போலும்
அரக்கர்க் கிறையுடனே அச்சுதன்போர் மூண்டதுபோல்
உரத்து இலக்கணனோ டொத்தபிமன் தான்பொருதான்
சிரசில் பாணநதிகள் துசத்தில் மொய்த்திடவும்

... ...

... ...

... ...

மயங்கிய அருச்சுனனைக் கண்ணன் தேற்றுதல்

அயர்ந்து விழுந்தோனை அச்சுதன்அன் பாயணைத்து
உயர்ந்த நறை[1]நீரால் உடல்சோகம்[2] தான்மாற்ற
பயந்தனி இழந்து பதைபதைத்து மெய்கலங்கிக்

அருச்சுனன் புலம்பல்

கயந்தெளி வுற்றதெனக் கன்றி யரற்றலுற்றான்.
துணைவர் படையும் துவசப் புயங்கணையும்
கணமதில் வென்றழிப்பாய் காசினியில் என்றுவந்தேன்

---

1 வாசனை நீர்
2 தளர்ச்சி

ஒப்பிலா மைந்தா உனக்குவமை யாவருளர்
அப்பனே நீயிறந்தால் ஆர்செயிக்க வல்லாரே
ஐவர்க் குரிய அரசே அரசே யெனத்....
தெய்வத்தில் மிக்கான் சேயனைய[1] சேவகனே[2]
அணியைப் பிளந்ததுவும் அண்டர்உடைந் தோடியதும்
கணிதத்தின் விற்குருவைக் காதலனைக் கன்னன்முதல்
மன்னர்களை வீரியரை வன்தேரை வில்லழித்து

சின்னப் படுத்தித் தெறிந்துமுது கிட்டுடையப்
பற்பலகால் மானபங்கம் பண்ணுகின்ற சேவகத்தை
அற்புதமாய் என்முன் அடைந்தே உரைக்காயோ.
துரியோ தனன்சேய் துணைவர்கள்தன் சேயரையும்
முரியார் கழலரசர் மைந்தர் அடங்கலையும்
கொன்றதுவும் சேனை யெல்லாம் கொன்றதுவும்
வென்றதுவும் என்முன் விரித்துரைக்க வாராயோ!
ஆதிநாள் தன்னிலரவக்கன்னி சேய்தனையும்
நீதியிலேன் அன்றிழந்தேன் நின்னையுமே இன்றிழந்தேன்
நின்போல வீரியர்கள் நீணிலத்தில் வேறுமுண்டோ

என்போல் அதிட்டமில்லோர் இப்புவியில் வேறுமுண்டோ
தேடக் கிடையாத சேயனே நின்னோடே
கூடவரா தின்னமுயிர் கொண்டிருந்தேன் வன்கொடியேன்
கதிருதிக்கு முன்னெழுந்தென் கால்வணங்கிப் போற்றிசெய்து
எதிர்படையை வெல்ல விடைவாங்கும் வீரியனே!
எந்தனை நாளைக்கு எவர்வணங்கு வாருனைப்போல்
மைந்தனையும் தோற்றுலகில் வாழ்வேனோ வன்கொடியேன்
ஈராறு நாளும் இகல்பொருதி மீள்கையிலே
போரேறே என்னைஎதிர் போந்துபணி யும்புதல்வர்
இன்றுமறந் தெங்கொளித்தாய் என்மகனே முன்வாராய்!

கன்றுமென துள்நடுங்கக் கண்டிலையோ என்மகனே
என்னுயிரும் என்வலியும் என்விறலும் என்மனமும்

... ...

... ...

1 முருகன்
2 வீரன்

... ...

... ...

இந்த விதமாய் இளகி வருமளவில்

பாண்டவர் பாசறையில் வருந்தி உறைதல்

சந்தமுள பாசறையில் தானடைந்த சேதிசொல்வோம்
அறங்கொண்ட சிந்தை அரசனபி மற்கிரங்கித்

தருமன் வருந்துதல்

திறங்குன்றி மேலும் தேக மிகப்பதறி
இதயமும் கண்ணும் இமைப்பளவும் நீங்காத
உதயச் செழுங்கதிராம் உத்தமனை என்னுயிரை
தேடக் கிடையாத தெள்ளமுதில் தெள்ளமுதைப்
பீடுற்ற என்மகனைப் பிள்ளைப் பெருமானை

ஐவருயிர் ஒன்றாய் அமைந்திருந்த பொக்கிஷத்தைத்
தெய்வமே யானிழந்து சீவனையும் வைத்திருந்து
பாராளு வேனோயான் பாவியென் நெஞ்சுருகித்
தீராப் பெருங்கவலைச் செந்தீயில் வேகாமல்
தனஞ்செயன் சொன்ன சபத முறைவழியே
மனஞ்செய்து ஐவர்களும் மாய்தலே உத்தமமாய்
நூற்றுவர்க்கும் ஐவருக்கும் நுண்ணிடையாள் ஓர்பிறவி
வேற்றுருவாய்க் குன்றி வெறுங்கழுத்தாய் மங்குவதேன்
நாளைமட்டும் சிந்துபதி நந்தாமல் காத்திடென்று
ஆளைவிட்டுச் சொன்னோமேல் அந்தப்படி காப்பார்

தீயிலே ஐவர்களும் சேருமுறை பாதையிதாம்
ஆயுமுறை ஈதென்று அறன்குமரன் தானுணர்ந்து

அருச்சுனன் சபதத்தைத் துரியோதனனுக்குக் கூறக் கடோற்கசனைத் தூதனுப்பல்

மாருதி ஈன்ற வலிய கடோற்கயனை
தாரு வனைய தருமன் அருகழைத்து
வஞ்சினம் பாத்தன் வழுத்தியதும் மாலுடனே

தஞ்சமெனக் கயிலை தானடைந்த வாறினையும்

கடோற்கசன் கூற்று

செப்பரிகற் கென்ன சிரித்திறைஞ்சித் தாள்தொழுது
ஒப்பரவிற் செற்றவர்க்கும் உற்றமொழி ஓதுவது
புத்திக் கதிப்போ புகழ்கொலோ சேவகமோ
சித்தி யறிவின் தெளிவோ தெளிவிரகோ

கொற்றமுர சாண்மைதிறல் கூர்வீர முந்திறலும்
அற்றவர்போல் சொற்றதென்என் றாய்ந்தழன்று
கூறினனே.

தருமன் கூற்று

மடையன் அளித்த மகன்நீ அதனாலே
தடையின்றி என்னுடனே தட்டிஎதிர் கூறுகின்றாய்
பொய் வஞ்சனையால் பொருதலற மோபுகழோ
மெய்வெல்வ தல்லாது வெற்றியுண்டோ வஞ்சகத்தால்

கடோற்கசன் தூது செல்லல்

செல்லென்று சொல்லச் சிரித்தே அடிவணங்கி
கல்லொன்று தோளான் கணப்பொழுதுக் குள்ளாகி

... ...

... ...

... ...

துரியோதனன் தன்னவர்பால் கூறல்

இருக்கின்ற மன்னர் இயல்வேதி யரையெல்லாம்
சூழவளைத் திருத்தித் துரோணன் முகம்பார்த்து

ஆழிப்படையால் அரணுகத் தானிறுத்திச்
கன்னலோர் முப்பதுவும் காத்தால் நமக்குவெற்றி
வன்னிமிசை வீழ்வார்கள் வன்மையுறு பஞ்சவர்கள்
போர்நமக்கு நாளையொரு போதுமே ஆதலினால்

பார்நலங்கொள் மன்னவரே பண்பாகக் காத்தருள்வீர்
என்றரசன் தாழ்ச்சியுடன் எல்லோரை யும்வேண்டி
நன்றியுள்ள சொல்லால் நயந்தே உபசரித்துச்

துரோணன் கூற்று

சொன்னபடி சிற்றரசைச் சோராமல் யான்காப்பேன்
முன்னெழுதி வைத்தமுறை விதிகள் எப்படியோ
சிந்து பதியைச் சிலைவிசையன் ஓர்பகலில்.

முந்து சரமால் முடியறுக்க முற்றாதே
மாலும் டகர்பொழுதில் வன்போர் புரிந்திடினும்
சாலவுமே சிந்துபதி தன்முடியைக் கொள்ளரிது
பகலைப் பொழுதுதனில் பார்த்தனுந்தன் மைத்துனனை
இகலிற் சிரமறுத்த லேயவனுக் கொப்புமுண்டோ
சொன்ன சபதமொழி சோராமல் செய்வதற்கு
அன்னக் கொடியோன் அவனாலும் முற்றாதே
வேதமொழி பொய்த்தாலும் வில்விசையன் சொல்சபதம்
சாதகமாய்த் தப்பாமல் தான்முடிக்க வல்லனென்றான்.
என்று மறையோன் இயம்பவே பானுசுதன்

பானுசுதன் மற்றுமுள்ளோர் கூற்று

மன்றல் வலம்புரித்தோள் மன்னன் முகம்நோக்கி
வாக்கொன்றாய் எண்ணி மனதொன்றாய் மன்னரெல்லாம்
காக்கும் போர்தன்னில் சமர்விலகிப் போனாலும்
சேய்ப்புலி அன்ன செயத்திரதன் தன்னுயிரை
தாய்ப்புலிபோல் காப்பன் தனியோர் பகலுமென்றான்
அரவக் கொடியோன் அனுசரிலே துன்மருடன்
உரசுத்துச் சிந்தாசை ஓர்பகல்யான் காப்பனென்றான்

அசுவத்தாமன் கூற்று

பகர்ந்தோர் மொழியைப் பரித்தாமன் தான்கேட்டுப்
புகைந்து சினமடக்கிப் பூபன்[1]முகம் பார்த்துரைப்பான்
வில்வீரர் வீரம் விளம்பார்தன் சேவகமும்

சொல்வாரோ வில்விசையன் சொன்னதுவீண் போமோதான்

---

1 மன்னன்

பாலன் அமர்க்குப் பறந்துடைந்த மன்னவரோ
சாலவிறல் வில்விசையன் தன்னோ டிகல்புரிவார்
அக்கினியைப் போல அவன்கொடுத்த தேர்விலொடு
உக்கிரமாய் வெம்போர் உடற்றும் சமர்முகத்தில்
வாயுரைத்த பேர்கள் சண்டவாயுப் பெருஞ்சுழலில்
சாயலறக் கெட்டே சருகுபோல் ஓடுவதைக்
கண்ணாலே நாளைநன்றாய்க் கண்டறிநீ என்றுரைத்து
விண்ணோர் மதிக்கின்ற வீடுமனை மெய்யழித்த
வில்விசையன் திக்கு விசையம்செய் வில்முன்னம்

சொல்விசையம் செய்தெதிர்த்துத் தோன்றிநிற்க வல்லரெவர்
கூர்ப்பான வில்வேதக் கொற்றவர்கள் எல்லோரும்
ஆர்ப்பாய்ப் பறப்பார் சாட்சி தப்பாது
என்றசுபத் தாமன் இயம்பியே இல்லடைந்தான்.
அன்றரசர் எல்லாம் அருள்விடையால் இற்சேர்ந்தார்

கண்ணன் விசையன் கயிலை சென்று வந்தமை கூற கடோற்கசன் தூது சென்றமை கூறினான்

கண்ணன் விசையன் கடோற்கயனும் மெய்மையுறும்
அண்ணல் துயிலுணர்த்தி அன்புடனே சேதிசொன்னார்
வங்கமலை புக்கு மகேசுவரனைக் கண்டதுவும்
புங்கஞ்சிலை தூணிபொய் கையொன்று பெற்றதுவும்
மாயன் உரைத்தான் வலிய கடோற்கயனும்

நேயமுடன் தூது நிகழ்த்தியதும் அங்குளவர்
துர்ப்புத்தி யாகவெகு தூஷணங்கள்[1] சொன்னதுவும்
அற்புதமாய்த் தானங் கறைந்ததுவும் தானுரைத்தான்
பதின்மூன்றாம் நாளிற் படைப்போர் தனையுரைத்தோம்
பதினாலாம் நாளின் படைப்போர் எடுத்துரைப்போம்.

பதின்மூன்றாம் நாட் போர் முற்றிற்று.

ஸ்ரீராமசெயம்

தரும ராசாக்கள் வீரய்யன் துணை.

---

1 இகழ்ச்சியுரை

பதினான்காம் நாட் போர்ச் சருக்கம்

தருமன் முதலியோர் களம் புக, திட்டத்துய்மன் அணிவகுத்து நிறுத்துகிறான். சயத்திரதனை இடையே வைத்துத் துரோணர் தம் படையை ஐவகை வியூகமாக்கினார். விசயன் தன் படையோடு துரியோதனன் படைமீது செல்கின்றான். துச்சாதனன் முதலியோர் ஆற்றாது துரோணரிடம் சேர்கின்றனர். துரோணரும் விசயனும் ஒத்துப் போர் செய்கின்றனர். சயத்திரதனை நெருங்கும்பொருட்டுக் கண்ணன் தேரினை வியூகத்துள் செலுத்துகிறான். காம்போசனை வென்று சூசி வியூகமடைகிறான். கன்னனை வென்று செல்ல வேண்டும் என்று விசயன் கூறக் கண்ணன் அங்கு தேரைச் செலுத்துகிறான். கன்னனும் விசயனும் போர் புரிகின்றனர். கன்னன் மயங்க, அங்குச் சுதாயு உதவுகிறான். சுதாயு தண்டினால் விசயனை எறிய, அதனைக் கண்ணன் ஏற்க, சுதாயு இறக்கின்றான். இறந்த காரணத்தைக் கண்ணன் விளக்குகிறான். ஆயிரவாகு அருச்சுனனால் இறக்கிறான். மன்னர் பலர் பொருது அழிகின்றனர் உச்சிப்பொழுதாகிறது. குதிரைகள் நீர்அருந்தக் கண்ணன் ஒரு தடாகம் உண்டாக்குகின்றான். விசயனுடன் போர்செய்தவர் தப்பார் என்று கூறக்கேட்டதுரியோதனன், துரோணரிடம் குறையிரக்கின்றார். துரோணர் அரியகவசத்தைத் துரியோதனனுக்குக் கொடுக்க அதுகொண்டு போர்செய்ய முற்பட்டான். துரியோதனன் சேனையும் அத்தடாகத்தில் நீர்அருந்தி, விசயன் படையை வளைத்து, துரியோதனன் போரிடவந்தபோது, துரியோதனன் குதிரையைப்பூட்டி, தரையில் நின்றே போர்செய்கிறான். வந்தசேனைதோற்றபின் கண்ணனும் விசயனும் மகிழ்ந்து தேரில்ஏறினர். துரியோதனன் சகுனியோடு வந்து வளைக்கிறான். அதன் காரணம்கேட்க, கண்ணன் துரியோதனன் அணிந்த கவசமகிமைகூறி அதனை அழிக்கத்தூண்டுகிறான். விசயன் அம்பின்முன் பலரும் பின்னடைகின்றனர். கவசத்தோடு துரியோதனன் போர் செய்கின்றான். அம்புகள் பயனில்லாது போகவே, வேல்கொண்டு எறிய, அசுவத்தாமன் அதனைத்தன் அம்பால் துணிக்கின்றான். அர்ச்சுனன் தளர்நிலை கண்டு கண்ணன் வலம்புரி முழங்க, மண்டலிகர் மயக்கமுற்றனர். கண்ணன் அளித்தவேலால் விசயன், துரியோதனன் கவசத்தை அழிக்கின்றான். கண்ணன் சங்கநாதம் கேட்டு, தருமன் சாத்தகியை அழைத்து விசயன் நிலை அறிந்துவர அனுப்புகிறான். சாத்தகி கிருதவர்மனை வெல்கிறான். மேலும் சலசந்தன், துரியோதனன் தம்பியர்நால்வர் ஆகியோரையும் வெல்கிறான். சாத்தகி துரோணர் போர் நடைபெறுகிறது. பின்துரியோதனன் பின்னிடுகிறான். சாத்தகி விசயனிடம் சேர்கிறான். சாத்தகி வாராமையால், தருமன் வீமனை விசயன் இருக்குமிடம் அனுப்புகின்றான். வீமன் வெல்கின்றான். எதிரிசேனைசிதைகிறது. துரோணர் விசயனை வீமனொடு சேரா வண்ணம் தடுத்து நிறுத்துகிறார், வீமன் போர்செய்து சேனைகளை அழிக்கிறான். கன்னனையும் வீமன் பின்தளரச் செய்கிறான். கன்னன் மீண்டும்

வந்து போர் செய்கிறான். துரியோதனன் தம்பியர் இருவர் இறக்கின்றனர். கன்னன் விமனொடு போர் செய்து தேர் இழக்கிறான். துரியோதனன் தம்பியர் எழுவர் இறக்கின்றனர். விகருணனிடம், வீமன் போர் செய்தல் முறையில்லை என்று மறுத்துக் கூறுகிறான். ஆனால் அவன் போர் செய்ய, இறுதியில் இறக்கிறான். வீமன் சாத்தகியோடு விசயனைச் சேர்-கிறான். சாத்தகி பூரிசவாவால், இளைக்க பின் சாத்தகியால் இறக்கிறான். தன் வஞ்சினம் முடிக்க விசயன் பகைவர் படையைச் சார, அவர்கள் அவனை நிலவறையில் வைத்துக் காக்கலாயினர். சயத்திரதனைக் காணாமல் கண்ணன் தன் ஆழியால் கதிரவனை மறைக்கின்றான். அது கண்டு மறைந்தான் எனக் கொண்டு சயத்திரதனை வெளியே கொணர்ந்தனர்.

துரியோதனன் படைஞர் ஆரவாரம் செய்கின்றனர். "சயத்திரதன் தலையைக் கொய்து, சமந்தபஞ்சக மடுவில்தருப்பிக்கும் அவன்தந்தைகையில் விழுமாறு செய்" என்று கண்ணன் கூறுகிறான், அவ்வாறே விசயன் கணை-தொடுத்துத் தலையை அறுத்து வீழ்த்தினான். விசையன் சபதம் பிழைத்தான் என்று துரியோதனாதியர் ஆரவாரிக்கும்போது கண்ணன் ஆழியை அகற்ற சூரியன் பனை அளவு உயரந்தில் ஒளிர்கின்றான் துரியோதனன் கண்ணனை பழித்துப்போர் செய்கிறான். வீமன் துரியோதனன் தம்பியர் இருவரை அழித்தான் கடோற்கசன் மகன் அஞ்சனபன்மன் அசுவத்தாமனால் இறக்கிறான். அசுவத்தாமனைக் கடோற்கசன் தண்டால் தாக்க, மோகித்த அரக்கனைக் கொல்லுமாறு கன்னனைத் துரியோதனன் தூண்டுகிறான். கன்னன் விசயனிடம் பன்முறைத் தோற்கின்றான். அசுவத்தாமன் குந்தி போசன் மக்கள் இருவரை மாய்க்கிறான். மாலை நேரம் வருகிறது. துரியோதனன் இரவிலும் போர் செய்ய விளக்கு எடுக்கச் செய்தான். கன்னன் தளர்ந்த போது, அலாயுதன் வீமனுடன் போரிட வருதல். வீமனை விலக்கிக் கடோற்கசன் அலாயுதனோடு போர் செய்கிறான். அலாயுதன் வீழ்கின்றான், கடோற்கசன் தன் மாயையால் துரியோதனன் படையை மயக்குகிறான். துரியோதனன் வற்புறுத்தலால் கன்னன், இந்திரன் கொடுத்த வேலால் கடோற்கசனைக் கொல்கிறான். கண்ணன் ஐவரையும் தேற்றுகிறான். துரியோதனன் ஏவலால் துரோணர், விராட-னையும் துருபதனையும் மாய்க்கின்றார். தந்தை மடியக் கண்ட திட்டத் துய்மன் நாளை துரோணரைக் கொல்வதாகச் சூளுரைக்கிறான். விசயன் சினந்து, துரோணரை முதுகு காட்டச் செய்கின்றான். துரியோதனன் சாத்தகி முன் தளர்வெய்துகிறான். துரியோதனன் முதலியோர் தளர்ந்து பாசறை அடைகின்றனர். மறுநாள் சூரியன் உதிக்கிறான்.

அரியதண் கலைவாள் மதியமும் கொதிகொள்
ஆலமும் தனதிடத் தடக்கி
உரியஒண் கங்கா நதிக்கொரு பதியாய்
உரைபெறும் உயர்மகோ நதியின்
பரியதிண் சிலையொடு அம்பெலாம் முகந்து
பல்குணப் பொருப்பிடைப் பொழியும்
கரியபைம் புயலைக் கைதொழு மவரே
கருவினில் திருவுடை யவரே!

தரும ராசாக்கள் துணை

தருமன் போருக்குப் புறப்படல்

சீல முடைய திரு ... ... ருமன்
காலைக் கடன்கழித்துக் கார்போல் கொடையுதவி
ஓரேழு வாரி[1]நிகர் ஒத்தபெருஞ் சேனையுடன்
ஈரேழு நாட்போர்க்கு இசைந்தெழுந்தா ரம்மானை.
வன்சேனை தன்னை வளரரச மண்டலமாய்
முன்சேனை நாதன் முரணாய் அணிவகுத்தான்

அருச்சுனன் போருக்கு ஆயத்தமாதல்

தேவரதி சயிப்பச் சேரார் மனந்திகைப்ப
மூவரு மெச்ச முகிலூர்தி தன்குமரன்
மாயா வினோதன் வளர்காயாம் பூநிறத்தான்
சாயாப் பெருந்தேர்மாச் சாரத்தியம் புரியா
வீம னிளையோரும் மிக்கபல மன்னவரும்
ஏமமுடன சூழ்ந்துநிற்ப ஏற்ற அதிரதமேல்
கரமா யிரச்செங் கதிரா தவன்போல
உரமாகப் பார்த்தன்நடு உற்றுநின்றா னம்மானை.

துரியோதனன் படையின் தீரண்டு வியூகம் அமைத்தல்

பத்திரண்டு யோசனையாய்ப் பாம்புயர்த்தோன்
ஏவலினால்
மொய்த்தபல சேனைகளை மொய்ம்பாகத் தானிறுத்திச்
சிந்துபதி நள்[2]ளிருப்பச் சேனையெல்லாம் மொய்த்திருப்ப
மைந்துடைய மன்னர் வடவைபோல் சூழ்ந்திருப்ப

---

1 கடல்
2 நடுவினில்

நூல் முறையாக நுவல்நால் வகைத்தளமும்
வேல்முதற்பல் லாயுதக்கை வீரர்களைத் தானிறுத்திக்
கோப்பான வீரரெல்லாம் கோலிளங்கும் தானெருங்கிக்
காப்பாக எண்டிசையும் காவலரைத் தானிறுத்திப்
பாசை சபதம் பகர்துன் மருடனையே
தூசிதனில் முன்னணியில் துப்பாகத் தானிறுத்தி
ஊசி நுழையா உரமாய் நிரைநிறுத்திப்
பேசுகன்னன் சல்லியனைப் பேரணிய தாய்நிறுத்தி
ஐயைந் தணியாக அஷ்டதிக்கும் தானிறுத்தி
வையும் தனிச்சிரசில் மன்னர்மன்னைத் தானிறுத்தி
கற்றகவி யோன்படையைக் கைவகுப்ப தாய்வகுத்துச்
சொற்றுரோ ணன்சகட துண்டத்தில் நின்றனனே.

மந்தணம்[1] முனம்சொன்ன வகைவிரகு தப்பாமல்
அந்தணன் கைசெய்த அணிநிலைபார்த் தும்பரெல்லாம்
அற்புத மாக அதிசயித்துச் சிந்தரசை
விற்பனுவல் வல்ல ... ... லார்பகலில்
வெல்லரி தென்றும்பர் வியப்பவிறற் சிந்தரசை
வல்லவய வீரர்கரம் வைத்தடக்கும் உட்பொருள்போல்

அருச்சுனன் போர் புரிதல்

காற்றுநின்ற வாறுகண்டு காண்டீபன் கண்சிவந்து
மாற்றலர்கள் அஞ்ச மணித்தேர் தனைநடத்திச்
செரு[2]வுக் கடங்காத திறற்சிங்க மேயனையான்
வரிவிற் கணைமாரி மாறாமலே சொரிந்தான்.

அக்கினி மாரி அதிர்ந்து சொரிந்ததுபோல்
திக்குக ளெங்கும் சிதறுங் கணைமழையால்,
பரியும் கரியும் பதாதி இனத்திரளும்
கருகிக் கருகிக் களமெங்கும் மாய்ந்ததுவே
சபத முரைத்தமன்னன் தம்பியெனும் துன்மருடன்
உபய தளங்கெட்டு உயர்தேரும் வில்லிழந்து
மெய்யழிந்து கையழிந்து வெஞ்சோரி[3] வாய்சொரிய

---

1 இரகசியம்
2 போர்
3 இரத்தம்

பையழிந்த நாகமெனப் பாரில் துடிதுடித்துத்
தன்தளமும் தானும் தரிப்பற்று வெள்ளமென
முன்தெறித்துப் பின்கொடுத்து மூரிமுனி பேரணியில்
வல்லணையில் தங்கும் வனம்போலப் புகுந்திருந்தான.
செல்லதென மேன்மேல் சீலிமுகங்கள் தான்வீசி
மாறில்விசை யான்சண்ட மாருதமொத் தேவிசையன்
ஏறிடி போலொத்த இகல்வாரி மாரியினால்

அருச்சுனனால் கிருதன கிருதபன்மன் பின்னிடல்

கிருதன் கிருதபன்மன் கேடிலாச் சேனைகளும்,
சுருபம் குலைந்தலைந்து தோன்றிரதம் வில்லிழந்து
வெருவித் துணுக்கெறிந்து வெய்துயிர்த்து மெய்தளர்ந்து
மாய்ந்தழிந்த சேனையல்லால் மற்றுமுள்ள சேனையுடன்
தேய்ந்தபிறை போற்கருகிச் சென்றடைந்தா னம்மானை.

துச்சாதனன் பின்வாங்கல்

மோதுலெக்கம் தேர்களொடு மொய்த்தபல சேனையுடன்
காதுஃதுச் சாதனனும் காண்டீபன் கைக்கணையால்
தேர்வில் இழந்துபல சேனைகளும் தானிழந்து
போர்வல் லமையும் புயவலியும் தானிழந்து
அங்கம் அழிந்து அருணன் நிறம்படைத்துப்
பங்கப் படாததெல்லாம பட்டழிந்து கெட்டுடைந்து
வெய்யோனைக் கண்டுடைந்த மின்மினிகள் ஒப்பாக
ஐயோல மிட்டே அந்தணன்பின் சென்றடைந்தார்.
மூவணியி லுள்ள முரண்வீர ரும்படையும்
சேவகவில் வாள்விசையன் திண்கணையால் தட்டழிய
ஆசரி நிற்கும் அணிதனையும் எண்ணாமல்
கேசரியைப் போற்கிருடி கிட்டிக் கணைசொரிய

துரோணன் போர்புரிதல்

பூசல் மதியாப் புரோகிதனும் வில்வளைத்து
வாசவன் சேயஞ்ச வடிக்கணைகள் தான்சொரிந்தான்
கிரியும் கிரியுமெதிர் கிட்டியபோல் தேர்நெருங்கப்

---

1 பாம்பின் படம்

2 கொல்லும்

பரியும் பரியும் பரவிடிபோல் ஆர்ப்பரிக்கக்
கொடியும் கொடியுமெதிர் கோத்தெரிர்த்துப் போர்புரியத்
தடையின்றிச் சாரதியும் சாரதியும் போர்புரிய
வில்லுடன் வில்லும் விசைநிமிர வுமாறாமல்
செல்லுடன் செல்லும் செருமியபோல் கோல்சொரிய
அந்தரமும் திக்கும் அகல்வெளியெல் லாம்நெருங்கக்
கந்தர மாரிக் கடுப்பக் கணைபிறங்கத்
தாவனந்தங் கோடி சரமிருவருஞ் சொரிந்த
ஏவினத்தில் ஒன்றும் இருவர்மேல் பட்டதில்லை.
ஒத்திருந்த தல்லால் உயர்ந்திலார் தாழ்ந்துமிலார்
சுத்தமுடன் ஊழி தொடர்ந்துபோர் செய்தாலும்
விரவியே ஒன்றையொன்று மேலாடி வெல்லரிதாய்

கண்ணன் அருச்சுனனிடம் துரோணரைத் தவிர்த்துப் போர் செய்யச் சொல்லல்

பொருதும் இயல்பையுயர் பூவண்ணன் தான்பார்த்து
நண்பனை நோக்கி நராந்தகனே நின்பகைவன்
பண்புடனே நிற்றல் பயித்திரண்டு யோசனைதான
பாராட்டுச் சண்டை பாப்பானுடன் பொருதில்
கூராடச் சிவன்கணையால் கொல்வதைப்போ நின்பகையை
சாரத்திய சூட்சம்[1] தன்னால் இமைப்பளவில்
சீரொத் தணியுள் செலுத்துவிப்பேன் ஒத்திரண்டு
கண்வைத்த தூரம் கணப்பொழுதிற் குள்ளாக
பண்வைத்த தேரைப் பதறியே கொண்டுசென்றான்
கண்ணிமைக்கு முன்னம் கடிகைவழி மாயமென்ன
பண்ணமைந்த பொற்றேர் பறந்திடவே பாப்பானும்
சிந்தை மிகக்கொதித்துத் தேரைவிரை யச்செலுத்தி

மேலும் அடர்த்து வந்த துரோணனிடம் விசயன் வேண்டுதல்

அந்தண னும்மீண்டு அடர்ந்துவர அர்ச்சுனனும்
ஐயனே நின்னமருக்கு அஞ்சாரோ தேவர்களும்
செய்யவுன் பாதம் சுமந்த சிறுவன்யான்
ஐயவென் சொல்வழுவல் ஆகாதுன் தாள்துணையால்

---

1 நுட்பம்

துய்யனே என்னத் துதிக்க, முறுவலித்து
ஏகென்று கண்ணால் இசைந்தே வரங்கொடுப்ப

அருச்சுனன் போர்

ஏகம் அனந்தம் எனவாளி தான்சொரிந்து
அணிகள் நிலைகுலைய அங்கங்கே தானறுத்துப்
பணிபொற் றுவசன் பதாதிகளை நீறாக்கிப்
பற்பல் லணிகளெல்லாம் பஞ்சுபோல் பறக்க
விற்பனுவல் மன்னர்களும் வீரர்களும் பங்கமுற
பிரசண்ட வாயு பெருஞ்சுழல்போல் தேர்செலுத்தி
விறல்கொண்ட பற்குணனும் வெய்யவட வாமுகம்போல்
காலாக் கினி[1]யாய்க் கணைமாரி தான்சொரிந்து
மூலாக் கினியாய் முனைந்துசெல்லு மவ்வளவில்
மன்னர்களும் வீரர்களும் மன்னினையோர் மத்திரனும்

விசயன் கன்னன் முதலியோரைக் கடந்து செல்லல்

கன்னனும் நிற்கும் கருத்துறுதியும் பார்த்து
இவனைக் கலங்க இகல்செய்து அடர்ந்தேறிச்
பவனைச் சுழல்போல் அப்பால்ஏக வேணுமென
மிக்க விசையன் விளம்பவே மாயோனும்
ஒக்கு மெனத்தேரை உறுவிசையாய்த் தானூர்ந்தான்
திக்கதிர வெற்பனையச் சேடன் முடிதாழ

கன்னன் வழி மறித்தல்

உக்கிரமாய்ப் பொற்றோர் உரத்தே வரும்வழியில்
சாயாத கையான் தருப்[2]போல் உதவுகரன்
தீயாகத் தன்தேர் செலுத்தி வழிமறித்து

இருவரும் போர்செய்தல்

கன்னன் கடுங்கணைகள் கார்மாரி ஒப்பாக
மின்னல் குழுநிகர்ப்ப வீசினான் அம்மானை.
பாத்தன் கணையும் பருதிசுதன் கணையும்
தூத்தகல் விசும்பும் சூழும் திசைவெளியும்
சேணோர் நடுங்கத் திரிபுவன முங்கலங்க

---

1 ஊழித்தீ
2 கற்பகதரு

பூணா ரழலும் புகையும் மிகப்படர
பாலர் நடுங்கப் பகடெட்டு மேயலறக்
காலன் நடுங்கக் கதித்த மலைநடுங்கக்
குனித்த சிலைநிமிராக் கோலஞ்சரமாரி
பனித்த சமயுத்தம் பானுசுதன் பற்குணனும்.
கடிகை[1] இரண்டாய்க் கடும்போர் புரிமுகத்தில்
முடிகி விசையன் முரண்கணைகள் தான்தெரிந்து
பற்பமுறத் தேர்வில் பரிகொடியும் சாரதியும்
அற்பமுற நீறாக்கி அங்கமசை வற்றயர

மத்திரன் சகுனி முதலியோரைத் தாக்கல்

மெய்மறைய வெய்யகணை வீசியே மத்திரனைக்
கைமயங்கத் தேர்வில் கவசம் பிளந்தெறிந்து
மயிர்க்கால் தொறும்சோரி மாறாமலே சொரிய
வியர்ப்பாய்க் கணைசொரிந்து மிக்க சகுனியையும்
தேரழித்து வில்லழித்துத் தேகமெல்லாம் புண்ணாக்கி
சாரமுற்ற மன்னினைய தம்பியர்கள் நொந்துவிழ

போர் நிகழ்ச்சி

வில்லறுத்து நாணறுத்து மெய்மயங்க வேகிடத்திப்
பல்லவங்கள் மன்னர் பதைபதைக்கக் கத்தனுட
சரமும் சரமும் தறிய அறுத்தெறிந்து
சிரமும் முடியும் தெரிக்க அறுத்தெறிந்து
வில்லுங் கரமும் விறற்படையும் வன்கரமும்
வல்லபய ஆயுதமும் வன்கரமும் சிந்திவிழ
மூளை சிதற முடிசிதற மெய்சிதறத்
தூணியெனத் தேர்வில் துசங்கள் பொடியாக
கரிகள் பலதுணியாய்க் காசினியில் சிந்திவிழப்
பரிகள் பலதுணியாய்ப் பாரெங்கும் அற்றுவிழ
நிர்த்தூளி யாக நிகரில் பதாதிவர்க்கம்
அற்றே நிலத்து ஆசுகத்தால் அழிந்துவிழக்
கூளத்தில் மூண்ட கொடிய பெருநெருப்பாய்
வாளுற்ற வில்விசையன் வாளியால் நாலுவகை
சேனைப் பிரளயங்கள் செங்களத்தில் மாய்ந்ததுவே.

---

1 நாழிகை

தானைப் பலஅணிகள் தான்கெட் டுடைந்ததுவே
பற்பலணி கெட்டுடையப் பாய்நடன வாயுவென

அற்புதத் தேர்பூமி அதிர நடந்தனவே
நெற்றி துளைய நெறிதுளைய வாய்துளைய
உற்ற கண்மூக்கு உயர்குழையும் தைத்துருவக்
கோலக் களந்[1]தோள் கொடுமுடியும் தைத்துருவ
உரமுங் காமும் உதரங்கள் தைத்துருவத்
தெரியுமிடை தொடையும் சேரவே தைத்துருவ
பாதாதி கேச பரியந்தம் நாலுவகை
கோதாரிச் சேனைக் குலைந்துருகி மாய்ந்ததுவே
ஒன்றாய்ப் பலவாய் உயர்கோடி சங்கமதாய்
அன்றாசுகம் அனந்தமாய்ச் சொரிந்துவிண் முகிலாய்

அணிகள் நிலையழித்து ஆபா ரத்துடனே.

துரியோதனன் பக்கத்தவர் குலைதல்

மணிவண்ணன் தேர்நடத்த வில்விசையன் செல்கையிலே
துன்மருடன் விற்கிருதன் துச்சா தனன்கிருபன்
வின்முனிவன் மற்றமுள்ள வேந்தரணி குலைந்து,
கன்னன் அயர்ந்துவிழக் காவலன்தன் தம்பியர்கள்
வின்னமுடன் நொந்துவிழ, விற்சகுனி நொந்துவிழ,
சல்லியனும் மற்ற தலைவர்களும் நொந்துவிழ
வல்லியம்[2]போல் நின்றபல மன்னர்களும் தட்டழிய
உகசண்ட மாருதத்தி யாத்தணிகள் பிச்சொரிந்து
இகல்சண்ட வீரன் இமசிங்கம் போல்வரவே

வருணன் மகன் எதிர்தல்

வார்வருண ராசன் மகன் சினந்து கோபமுற்று
கார்வருடம் போலக் கணைமாரி தான்சொரிந்து
மூண்டான சமரில் முதுகிடா வில்வீரன்

அருச்சுனன் தாக்குதல்

காண்டா வனம்எரித்தோன் கண்சிவந்து ஆக்கரித்துக்
கூர்பெற்ற வீரக் கொடுங்கணைகள் தான்தெரிந்து
பேர்பெற்ற மேகமெனப் பிறங்க வீசினனே.

---

1 கழுத்து
2 புலி

வில்விசயன் எய்த விறற்கணைகள் உள்ளதெல்லாம்
வில்விசைய[1] அம்பால் மறுக அறுத்தெறிந்தான்
துண்டுதுண்ட தாயறுத்தும் சோராமலே பிளந்தும்
கண்டகண்ட மாகக் கணைப்பழுது செய்தமையால்,

விம்மு சினமாக வேறொருவில் தான்குனித்துத்
தொம்மெனக் கோலச் சுடர்வாளி தான்சொரிந்து
தேர்கொடி பாகும் திறற்பரியும் தானழித்து
வார்கை வரிவில்லும் மனமும் நிலையழித்தான்.
தேரிழந்து காலாளாய்ச் செங்கைதனிற் பற்றிநின்ற

விசையன் மீது கதையை வீசுதல்

பாரவரி விற்கழுந்தால் பாய்ந்தெழும்பி ஓடிவந்து
பேரிடிபோல் பார்த்தன் பெருஞ்சிலையின் நாணழிய
ஓடிவந் துற்றடித்தான் உக்கிமனம் மக்கிநின்ற
பார்த்த னுயிரைப் பலிகொளென ஓர்கதையைச்
சீற்றமுடன் மீண்டு சினந்தெறிந்தான் அம்மானை.

முகங்கள் கலங்க முடிகலங்க மெய்கலங்க
அகங்கள் கலங்க அருச்சுனன்மேல் தண்டு[2]வர
நகங்கள் கலங்கிடிபோல் நாடிவரும் ஆயுதத்தைச்

சுதாயுவின் தண்டினைக் கண்ணன் மார்பில் ஏற்றல்

சகங்கலங்க நின்றேற்றான் தாமன்[3] தடமார்பில்
மன்மார்பில் பட்டு மறுகாமலே மீண்டு
மென்மாய மாக விறற்கதையும் விட்டோனைக்
கறுத்துச் சிரத்தைக் கறுக்கென்று தானறுத்து
வெறுத்தவாய் மண்பரவ மேதினியில் வீழ்த்தியதே.
சினத்தோன்தன் சென்னி செகத்திற் கதைவீழ்த்த
கனத்த மார்போ . . . . மழைக் கண்ணன் மேல்தான்
சேர்த்தோர்

தேவர்கள் துதித்தல்

வாழி விசையன் வலனேவா ழியென்றும்,

---

1 வெற்றி
2 கதை
3 கண்ணன்

வாழி அவனியுய்ய வந்தோனே வாழியென்றும்
வாழியே காயாம்பூ வண்ணனே வாழியென்றும்,
வாழி வசுதேவன் வாழியே வாழியென்றும்,

கதை எறிந்தவனைக் கதை கொன்றதேன் என்று அருச்சுனன் கண்ணனை வினவல

உம்பர் துதிக்க உயர்விசையன் மெய்திகைத்து
செம்பதுமப் பாதம் சிரசேற்றிப் போற்றிசெய்து
எறிந்தகதை மீண்டு எறிந்தோன் உயிர்பறித்தல்
அறிந்திலேன் ஐயம் அகற்றாய் எனப்பணிந்தான்.

கண்ணன் கூறியது

தாய்பன்ன வாதை தகப்பன் சலவருணன்
சேய்பலவான் பல்படைக்கும் தீர்க்கமுள்ளோன் மூர்க்க முள்ளோன்
பல்வரமும் பெற்றான், பகைவர் கையில்ஆயுதத்தால்
வில்வரமும் சாகாத வெற்றியுமே பெற்றான்காண்
வெய்ய சுதாயுவுக்கு மீண்டும்அரன் ஓர்வரந்தான்
ஐயமற ஓர்கதையும் அந்தந் தனில்ஈந்தான்.
இந்தக் கதையதனை எப்பகைமேல் போட்டாலும்
கந்தச் சிரசைக் கறுவும் நிராயுதர்[1]மேல்
ஏவினால் இக்கதையால் ஈறாய்ச் சிரந்துணிந்து
சாவ தெனவே சபித்தோர் வரங்கொடுத்தான்.
அறிந்தக் கதையேற்று அவனுயிர்க்கு ஈறுசெய்தேன்.
மறங்கொள் படைக்கையர்தமை மாயாது போகாது
என்று மால்[2]சொல்ல, இறந்தோன் தனக்கிளையோன்

சதாயு போரிடல்

வென்றிச் சதாயுவென்போன் வெம்புயம்ஈ ராயிரத்தோன்
உரமா யிரத்தோன் உதையும் குனிவரிவில்
கரமா யிரத்தோன் கணைக்கையோ ராயிரத்தோன்
முடியா யிரத்தோன் முகமாயிர முடையோன்

---

1 ஆயுதமற்றவர்
2 கண்ணன்

219 TO 222 PAGES MISSING IN BOOK

அருச்சுனன் வாவி அமைத்தல்

குன்றா வருணன் கொழுங்கூர்க் கணையெடுத்து
வில்லில்வைத் துப்பூவில் விடுமுன் சரவாயில்
மல்லலுறுஞ் செந்தா மரைப்பொய்கை ஆனதுவே
ஆழம் புணரிக்கு அதிகம் அதிலகலம்
சூழெங்கும் கஞ்சம்[1] துறையெங் கணும்நீலம்
கீழெங்கும் வாளைகயல் கெண்டைவரால் பன்மீன்கள்
வீழுங்கரை கின்னர மிதுனம் எங்கணுமே.
நாரை ஒருபால் நரையான் இனமொருபால்
சீருடைய நாராசம்[2] சிகரிபோதா[3] ஒருபால்
நேமிக்குலமும் நிரை அன்றி லுமோர்பால்
வாமக் குரண்ட மடையான் இனமொருபால்
தாரா இனங்கள் சலக்காகம் மணவாரி
பேராம்பல் பக்கிப்[4] பெருக்கங்கள் தானொருபால்
அன்னங்க ளோர்பால் அரமங்கையர் ஒருபால்
வன்னப் புளின[5] மணற்குண்டம்[6] பற்பலபால்
பூவெல்லாம் அன்னம் புனலெல்லாம் மீனினங்கள்
காவெல்லாம் மஞ்ஞை[7] களிவண்டு கவின்குயில்கள்
கரையெங்கும் சோலைமலர் காவெங்கும் தேன்கனிகள்
திரையெங்கும் தான்கொழிக்கும் தேசான முத்தினங்கள்
தலமகள் உந்தித் தடமாம் தடம்பார்த்து

குதிரைகளை நீர் உண்பித்தல்

வலவன்தேர் விட்டிழந்து வல்விசையன் சொற்படியே
பூட்டிய வெள்ளைப் புரவி விசிநெகிழ்த்து
காட்டியந்த நீரில் கடைவாய் நுரைபறித்துச்
செம்பவள வாயும் திருமுகமும் தான்விளக்கி
அம்பதுமக் கையாலே அங்கமெங்கும் தான்விளங்க
தூசியும் வேர்வும் துடைத்தே குளிப்பாட்டி

---

1 தாமரை
2 இருப்புக் கம்பி
3 கருநாரை
4 பட்சி
5 மணல்மேடு
6 குழி
7 ல்யிம

வாசிநால் வெள்ளி மலையி னொளிபிறங்க
வச்சிரம் ஒத்த வலியும் மனவேகம்
அச்சுவந் தன்னை அலங்காரஞ் செய்ததற்பின்

கண்ணனும் விசயனும் களைப்பாறுதல்

மாவும் இளைப்பாறி மாலும் இளைப்பாறக்
காவில் விசையனுமே காதுகளை[1] தீர்ந்தான்

தோற்றோர் திரும்பிச் சென்று துரியோதனனிடம் கூறல்

இப்பால் இவன்இருப்ப இங்கிவன்தன் போர்க்குடைந்தோர்
அப்பால் பறந்தே அனிலத் தெதிர்சருகை
ஒப்பாக ஓடி உறவோன் பதறிமிஞ்சி
துப்பாய விசையன் சுடர்க்கணையால் போனார்கள்
ஒன்றன்றி மாய்ந்தார்கள் உள்ளதெல்லாம் இன்றையிலே
பொன்றிவிடும் என்றுரைப்பப் பொங்கியழல் நெஞ்செரியக்
காது சுடவோடிக் கருதி முனிவனிடம்
சேதி சிறுமையுடன் செப்பலுற்றான் அம்மானை.

துரியோதனன் கூற்று

அம்போ டம்பிட்டு அர்ச்சுனன்முன் நின்றோர்கள்
எம்பாடி யின்வீரர் எல்லோரும் இன்றிறந்தார்
பரிதிபடு முனமே பட்டிடுவன் சிந்துபதி
விருதி னுடன்விலக்க வேறுதுணை யான்காணேன்
கானா திடத்திலுரம் கட்டுரைப்பார் முட்டமரில்
நாணாது வெந்கொடுப்பர் நம்சேனை வீரரெல்லாம்
ஏணா டமரில் இமைப்போ தவன்கணையால்,
சேணாடு கொள்ளும் செயல்வேறே தய்யாவே,
விற்படையி னோடு விசையற் கெதிர்குறுகி
நற்பகலில் சிந்தரசை நான்காப்பே னல்லாது
வேறு விரகில்லை விறல்முனியே நீபார்க்கத்
தேறிஅமர் செய்வேன்நின் சிந்தை குளிரவென்றான்
காணுதிநீ யென்றரசர் காவலனும் தானுரைக்க

1 கொல்வது போலும் களைப்பு

துரோணன் அறிவுரை

வேணு முனிவன் விறல்வேந்த னைநோக்கி
எண்ணித் துணிதல் கருமம் துணிந்ததற்பின்
எண்ணுவ தெல்லாம் இழுக்காம் இளைக்காமல்
துணிந்த படியே துணிவாய் ஒருமனமாய்
அணிந்த தோடமர் பொருத வேவேணும்
சேனை யழிந்தால்நின் தீரம் அழிவதுண்டோ
மானவிறல்சேர் வணங்கா முடிவேந்தே
நராந் தகரான நர நார ணரிருவர்

வரந்தங்கு தேரில் வருவோர் எனஉணர்ந்தோர்
சொல்வா ரரனி[1]டத்தில் சோராது பல்வரமும்
வெல்வாகை பெற்று விசையனெனும் பேர்பெற்றான்
வில்லோ டவன்எதிர்த்தால் வேதா[2]வும் நிற்கரிது
கல்லோடு தோள்வலிமை காட்டியார் வீறுபெற்றார்
தேரூர்வதற்கே திருமால் துணிந்து நின்றான்
பேரூழிக் காற்றும் பிறங்கும் வடவையைப்போல்
சார்ந் திருவோரும் சமர்தொடங்கு வாரானால்
மாந்தரில் யாவர் மரியாதுயிர் பெறுவார்
வன்பகைக்கு மாறேந்தில் வாள்விளக்கு மென்றோர்கள்

அன்பு மனமொடிய ஆகா வசையுரைத்தான்
துர்க்குணமே செய்தாய் துகிலுரிந்தாய் கற்பணங்கை
விற்குரிய வல்விதுரன் வில்லொடியப் பண்ணிவைத்தாய்
விதியின் வலியலது மிக்கோர்கள் செப்புகின்ற
மதியின் வலியை மதிக்காது தீமைசெய்தாய்
விசையனா ளோர்பகலில் வெல்வானோ சிந்தாசை
அசைவின்றிச் சொற்றான் அதுவும் விதிவழியே

துரோணர் ஓர் கவசமளித்துரைத்தல்

என்றோர் கவசம் இறைமெய் யுறப்புனைந்து
அன்றே அதன்வலிமை அண்ணல் தனக்குரைப்பான்.
சங்கரன் நந்தி தனக்கீந்தான் நான்முகற்கு

1 சிவன்
2 நான்முகன்

அங்கவன் ஈந்தான் அயன்வாச வர்க்கீந்தான்
சேடர்க் கவனீந்தான சேடனெக் கீந்தான்
ஆடற்போர்வீ ரர்தங்க ளாயுதத்தால் மங்காது

கவசமணிந்து துரியோதனன் போரிடல்

என்று முனியுரைத்து இட்டகவ சத்துடனே
அன்றுபோர்க் குன்னி அரவத்துசன் எழுந்தான்.
தென்பட்ட வர்த்தனரும் சீர்மகுட வர்த்தனரும்
வென்பட்டி டாதவிறல் வீராதி வீரியரும்
நரலை அனையதிறல் நாலுவகைச் சேனையுடன்
முரசுமுதற் பல்லியங்கள் மூரியிடிபோல் முழங்க
ஏழு கடல்குமுமி ஏகமாய் மூடியபோல்
பாழிப் பெருஞ்சேனை பார்த்தன்மேல் சென்றதுவே

துரியோதனன் படைகள் பொய்கையில் நீருணல்

சென்ற சென்ற சேனை திகரிளைப்புத் தான்மாற
மன்றலம்பைம் பொய்கையில்நீர் வாயாரத் தான்பருகித்
தென்றல்தவ ழுங்கரையின் தென்சோலை புக்கிருந்து
மாற்றிவிடாய் தீர்ந்துகஞ்ச வாவிவளம் நோக்கிப்

சேனையோர் செயல்

பார்த்து மகிழ்ந்திருப்பார் பங்கயப்பூக் கொய்திடுவார்
தேனீ வரிவிரட்டிச் செங்கழுநீர்ப் பூப்பறிப்பார்
தானீர் விளையாடிச் சோலைதொறும் புக்கிருப்பார்
பூவுலகிற் கண்டறியோம் பூவாசம் இங்கிதென்பார்
மாவுலவு கஞ்சமலர் வாவியிதே தென்றுரைப்பார்

இன்ன விதமாய் இகலொழிந்து யாவர்களும்
அன்னநவப்[1] பொய்கைதனை ஆழிவரை போல்சூழ்ந்தார்
துன்னி யரிகள் தொடர்ந்தெங்கும் சூழ்ந்திடவே
கன்னற் சுவையின் கமலமலர்ப் பொய்கைதனை
நுன்னறிய[2] மந்திரத்தால் நோக்குமனம் மாற்றிவிட்டான்

விசயன் தரை நின்று போரிடல்

காண்டீபன் மாயன் கமலமுகம் நோக்கிக்

---

1 புதிய
2 நுட்பமாய் உணரும்

கூண்டே வருமிக் கொடியோன்தன் சேனையெல்லாம்
மண்ணில் உடல்கள் மறுகித் துடித்தழிய
விண்ணி லுயிர்சேர்த்து விட்டதற்பின் தேர்மீதில்
ஏறுவே னென்று இகல்சிலையைத் தான்வளைத்துச்

சீறியே சோனையெனச் சிந்தினான் புங்கமழை
தேர்முகத்தும் மாமுகத்தும் சிந்துரங்கா லாள்முகத்தும்
போர்முகத்து மேன்மேல் பொருதும் கணைமழையாய்
தேரினங்கள் தூள்பறந்த சிந்துரங்கள் கும்பியொற்ற
பாரப் பரியும் பதாதிகளும் கெட்டழிந்த
தலைகள் மலைமலைபோல் தானெங்குமே கூய்ந்த
வலிய உடல்கள் வரைவரைகள் தான்கூய்ந்த
திக்குத் திசைகள்எங்கும் செந்நீரா றோடியதே
மிக்குற்று விற்போர் விசையன் மேலோடியதே
நீலகிரி யொத்துநடு ,நின்றநிகர் சேனையெல்லாம்
கோலமலை சூழக் குவித்துக்கு வித்துநின்றான்

துரோணர் முதலியோர் விசயனை எதிர்த்தல்

தலைமை முனிவன் கிருபன் தவக்கிருதன்
வலிய பரித்தாமன் மத்திரன்கர் ணன்சகுனி
வீரர் பலரும் விசையன்மேல் வில்வளைத்துப்
பாரக் கணைகள் பரப்பினார் பன்முகில்போல்
விட்ட பலகணையும் வெய்தின்வி சையன்கணையால்
தட்ட முறவே நறுக்கியே தூள்படுத்தி

எதிரிகள் வில் அழிவு படல்

ஆசிரியன் தேர்வில் அழித்தான் இருசரத்தால்
வீசு மிருகணையால் மெய்யன்தேர் வில்லழித்தான்
கிருபன் இருகணையால் கேடில்தேர் வில்லழிந்தான்

கிருதன் இருகணையால் கெட்டுமுது கிட்டுடைந்தான்
கன்னன் இருகணையால் கார்முகமும் தேரிழந்தான்
மன்னு மிருகணையால் மத்திரன்தேர் வில்லிழந்தான்
சகுனி யிருகணையால் தன்தேரும் வில்விழந்தான்
மிகையின் இருகணையால் வெந்நிட்டான் வன்பூரி
எண்ணிரண்டு வெங்கணையால் எய்த அமர்கொடிதே

கண்ணுதலை ஒத்துநின்றான் காமனைப்போல் மக்கி[1] நின்றான்
மற்றுமுள்ள வீரரெல்லாம் மாவிழந்து தேரிழந்து
சுற்றுந் தளமிழந்து தோற்றுடைந்து வெந்கொடுத்தார்
அங்கம் நாலான அனீக மவனிபரும்
பங்கபங்க மாகிப் பதறிவெருண் டோடியதால்

விசயம் சங்கம் ஒலிக்க, கண்ணன் தேரினைச் செலுத்தல்

வீரசிங்க நாதம் விசையன் முழக்கியபின்
தீரசங்க பாணி[2] விறல்தேரில் பரிபூட்டிப்
பார்நடுங்கத் தேர்நடத்திப் பார்த்தனுக்குத் தானாதல்
காரடர்ந்த மெய்யான் கன்றுதேர் ஏறினனே
தேரில் இவனேறிச் செருக்களத்தில் நேர்ந்தமையால்.

துரோணன் மகன் கிருபன் முதலியோர் எதிர்த்தல்

ஆரபா ரத்தோடே அரவக் கொடியோனும்
வீரத் துரோணன் மகன்கிருபன் வன்கிருதன்
பூரிசகுனி கர்ணன் போர்சல்லி யன்பலரும்
சேரத் திரண்டு செகமெண் திசைநடுங்கக்
கோரப் பரித்தேர்க் குரிசில் விரைந்துவரக்
கண்டு தனஞ்சயனும் கண்ணன் தனைநோக்கி
விண்டுவே[3] என்தேர் விறற்கொடியைக் கண்டானேல்
யோசனைக் கப்பால் அதுஉள்ளே நெருங்கரியான்
பூசலுக்கு வந்தான் புதுமையே தென்றறியேன்
பெற்றவரம் வில்லோ பெருங்கணையோ வெல்வாரோ
வெற்றியுறு தேரோ விறற்கவச மோயாது
வீறாப் பெற்றவரம் என்னென் றவன்கேட்க
மாறாக் கவசமென்று மாயோன் விரித்துரைப்பான்

துரியோதனன் கவசம் பெற்றமையை மாயோன் கூறல்

புரத்தை எரிக்கப் புராரி[4] ஒருகவசம்
தரிக்கச் சமைத்துநந்தி தன்வசத்தி லாயதுவே

---

1 மடிந்து
2 கன்னன்
3 கண்ணன்
4 சிவபெருமான்

நந்தி அயன்கரத்தில் நல்கஅவன் இந்திரர்க்கு
சிந்தை யுடனளித்தான் சேடர்க்கவ னளித்தான்
வின்முனிவன் பெற்றதனை வேந்தர்கோ னுக்களித்தான்
பன்முனையின் வாளி படையொன்றால் மங்காது
அங்கதற்கு ஏற்றமுனை ஆயுதத்தால் நீறாக்கிச்

போர் செய்தல்

சிங்கமென வன்போர் செய்யென்று தேர்விடுத்தான்
உக்கிர மாகஉலகளந்தோன் தேர்நடத்த
அக்கினி வேந்தன் அளித்தகணை வில்வலியால்
வாதுற்று வந்தோர் மகுடமுடி சிதற
ஓதுதலை நெற்றி உருவ முகமுருவ
நேத்திரங்கள்[1] பட்டுருவ நேரியவாய் தைத்துருவ
சாத்தியனா மூக்குருவத் தந்தம்[2] இதழ்உருவ
கண்டம் புயங்கள் கனமார் பகமுருவத்
துண்டதுண்ட மாகத் துணிந்து கரங்கள்விழத்
தேரோடிய வில்லொடியத் தேர்பரிகள் அற்றுவிழச்
சாரதியும் அச்சுருளும் தார்கொடியும் அற்றுவிழ
வாரணங்கள் பாகர் மடியப் பரிமடியப்
பாரப் பதாதி படியில் மடிந்துருளச்
சேனுந் திசைவெளியும் செம்மிமிக நெருங்கப்
பாண மழையால் பரவியே பந்தரிட்டு
முன்னுடைந்த வெண்மா முரண்தேரும் வில்லிழந்து

கன்னன் கலக்கம்

கன்னன் முதலாய்க் கலங்க நிலையழித்தான்.
கலக்க முடனிரவி காதலன்நொந் தாகுலமாய்[3]
அலக்கண்[4] உடன்நின்று அயர்ந்து பெருமூச்செறிந்து
வில்லிழந்து தேரிழந்து மெய்யழிந்து கையழிந்து
சல்லிய னும்சூது சகுனியுங்கெட் டோடினரே
கிருதனு மும்மணியும் கேவலமுற் றோடினரே
வெருவி வெருவிமிக வெய்துயிர்த்து நின்றனரே.
பூரி நடுங்கிப் புறங்கொண்டான் மற்றுமுள்ளோர்

1 கண்
2 பல்
3 மணக்கவலை
4 துன்பம்

சேர நடுங்கித் தெறிகெட்டார் அம்மானை.

துரியோதனன் அருச்சுனனைத் தாக்கல்

கவசப் பலத்தாலே காவலர்கோ மானுரகத்[1]
துவசத் துடனேமுன் தோன்றி ரதம்நெருக்கி
விற்குரிய பாணமிக மேன்மேலு மேசொரிந்து
பற்குணன்கை வாளியெல்லாம் பற்பமுறத் தூளாக்கி
வெங்கருடா நீசுகமோ என்றரவம் கேட்டதுபோல்
துங்கமன்னன், பார்த்தா சுகமோஇன் றுன்தாதை
பக்கலிலே செந்தீயில் பாய்ந்துயிர்கொண் டேகுமுன்னே
இக்கணமே உன்னாவி என்கணையால் ஈறுசெய்வேன்
என்றரவ கேதனன்[2] இயம்ப எதிர்நகைத்து

அருச்சுனன் கூற்று

நன்றுனது வீரம் நரியரியைத் தான்மிரட்டல்
ஒற்றாய் விற்பற்றும் உசிதமே நீயறியாய்
பிற்றாய கவசப் பலன்கொண்டோ பேசுகின்றாய்
பெற்ற கவசமும்நின் பீடும் பெருந்தேரும்
பற்றி எரியப் படுநீறு செய்வனென்றான்.

இருவரும் பொரல்

வில்விசையன் சொற்றளவில் வேந்தர்வேந் தன்சினந்து
செல்வலிய வில்வளைத்துத் தீராப் பெருஞ்சினமாய்
மோகரித்துப் பாச முகில்போல் சொரிந்துநின்றான்.
வேகமுற்று வில்விசையன் வின்மாரி தான்பொழிந்தான்
வன்னிக் கொடுங்கணையால் மனங்கணைஎல்
லாமெறிந்து
துன்னிக் கணையின் தொடர்பாக . . . . . சரும்
அனந்தஞ் சரஞ்சொரிந்தான் அக்கவசத் தாலேகூர்
சினந்த முனைமழுங்கித் தேசழிந்து மங்கியதே
விட்டகணை யெல்லாம் விறற்கவசத்தா லேகூர்
கெட்டழிந்த தல்லால் கிளர்ந்தோர் கணையெனிலும்
ஆகத்திற் பட்டதில்லை அச்சமவ னுக்குமில்லை
வேகித்து[3] மேல்மேல் வினைப்போர் தொடங்கிநின்றான்
நிற்பனோ வின்முகத்தின் நேரமென்று ஆக்கரித்து

---

1 பாம்பு

2 துரியோதனன்

3 வேகங்கொண்டு

அருச்சுனன் ஓர் வேலை விடுதல்

அற்புத வேளங்கை அயிலா[1]னைய ஓர்வேலை
சீறி விசையன் சினந்தெறிந்தான் சேணிடிபோல்
மீறிக் குமுறிமகி விண்முகடு மேவெடிக்க
அக்கினி கக்கி யகல்வெளியெல் லாம்பரப்பி
உக்கிர மாய்க்கைவேல் உரவோனை நோக்கியதே
அண்டங் கலங்க அகிலந் திசைகலங்க
எண்டிசைப் பாலர் இமையோர் நடுநடுங்கக்
கதறி வரும்கடிய கைவேல் கவசமதை
சிதறப் பிளந்துவிடும் செம்மலையும் கொன்றுவிடும்

அசுவத்தாமன் அதனை அழித்தல்

என்றசு பத்தாமன் எழில்தவத்தால் பெற்றகணை
ஒன்றுதொடுத் தவ்வேல் உறப்பொடித்து வீழ்த்தினனே
வேல்பொடிந்து வீழ வெருக்கொண் டுடைந்தோர்கள்
கால்பரவு வெள்ளக் கடல்போல் மிகமுழங்கி
முனைகொண்டு மோகரித்து மொய்த்தரசோ டுற்றமையால்

அருச்சுனன் தளர கண்ணன் சங்கு முழக்கல்

வினைக்குன் றனையவரி வில்விசையன் கைதளர்ந்தான்.
காதலுறு மைத்துனன்மெய் கைதளர்ந்த வாறுகண்டு
சீதரனும் சங்கமதைச் செம்பவள வாயில்வைத்து
அண்டம் வெடிக்க அகிலம் நிலைகுலையச்
சண்டன் நடுங்கமணிச் சங்கம் முழக்கினனே
இடிகண்ட சர்ப்ப மெனவரசன் சேனையெல்லாம்
படிஎங்கும் ஒன்றிப் பயந்தயர்ந்து பம்மியதே
நள்ளார் அயர்ந்தவிதம் நண்பனுக்குத் தானுரைத்து
உள்ளா யுதமொன்று உதயனுயிர் பறித்த
புங்கவேல் ஈந்து புரவலனைக் கொன்றுவிட்டால்
பங்கமுறும் வீமன் பகர்ந்த மெ . . . , தலினால்
கவசமுன் வில்லும் கடுந்தேர்ப் பரிபாகும்
துவசமும் நீறாக்கித் தோன்றலுடன் ஊறுசெய்து
வெருக்கொண் டயர்ந்தோட விட்டாற் பெருங்கீர்த்தி
பொருக்கென்று வீசெனவே பூமார் பகன்பகர்ந்தான்

---

1 வேல்

அருச்சுனன் துரியோதனனின் கவசத்தை அழித்தல்

வலஞ்சுற்றி வேல்கரத்தில் வாங்கிமால் சொற்படியே
பெலங்கொண்டு வில்விசையன் பேராளன் வீசினனே
வீறுபெற்று வந்ததொரு மெய்க்கவசம் பற்பமென
நீறுபட்டுத் தங்க நெருப்பெனவே தான்பிளந்தான்.
மாறியவ னோடுமுனம் வன்கோபம் வெங்கணைகள்
நூறுவிடுத் தேதேர் நீறுபடவே தட்டு
ஆறும் பொடிய அறுத்தெறிந்து விண்ணாணும்
அங்கங்கள் எங்கும் அவயவமெல் லாம்பரவப்
புங்கஞ் சொரிந்தளவில் புண்ணாகி நொந்தயர்ந்து
ஆற்றாமல் மேல்மூச்சு அடிக்கவே காலாளாய்
சாற்றூலம் கண்ட தகர்ஒத்தே ஓடலுற்றான்

துரியோதனன் பக்கத்தார் புறமுதுகிடல்

முனியு மகனும் முனிக்கிருபன் விற்கிருதன்
தனுவிறல் கர்ணன் சகுனிசல் லியன்பூரி
மன்பட்ட வர்த்தனரும் மாமகுட வர்த்தனரும்
வென்பட்டி டாத விறல்வீரர் வீரியரும்
இரதம் பரிபாகும் ஏற்றவரி வில்லிழந்து
சிரசுமுதற் பாதம் திண்கணையால் புண்ணாக்கி
நல்லாவி மயமாய் நலங்கெட் டுரங்கள்கெட்டுப்
புல்லாவி கொண்டு புறமிட்டா ரம்மானை.
துச்சா தனனும் துணைவரும்புற் சீவனுடன்
அச்சாணி தேர்வில் அழிந்துபுற மிட்டாரே.
எண்ணேழு தேசத்து இராசர்களும் சேனைகளும்
மண்ணோடு மண்ணாய் மடிந்திறந் தார்அம்மானை
பார்த்த னெதிர்ப்பட்டுப் பகைத்திறந்துச் சேனையெல்லாம்
ஆர்த்திறந் தல்லாது ஆர்பிழைத் தார்அம்மானை.
எண்டிசையும் வென்ற எதிரில்லா வில்வீரன்
மண்டிவந்த சேனையெல்லாம் மாளப் பொருதழித்தான்
குறிக்கின்ற வீரர் குலைகுலைந்து மேன்மேலும்
விறல்கொண்டு வந்துவந்து வெந்நிட்டா ரம்மானை.

துரியோதனன் படை பட்ட பாடு

சதுவகை[1]யாம் தேரினரும் தந்தி[2]வகை மூவினரும்

---

1 நால்வகைப் படை

2 யானை

விதமோடு எண்ணாறு வகைவெம்பரி வீரியரும்
மள்ளர் பெருந்தொகையும் வில்விசையன் வில்வலியால்
அள்ளலாய் மாய்ந்தோரை ஆர்கணக்கிட் டோதவல்லார்

புரதகனன் ஒப்பாய்ப் பொருவிலா வில்வீரன்
நரர்தஙனம் செய்தநரன் வின்மை சொல்லெளிதோ
ஆதித்தன் முன்பனிபோல அண்டர் நடுநடுங்க
வாதுற்ற பற்குணனும் வன்சமரில் வாதுசெய்யத்
தாமோதரன் பஞ்ச சன்னியத்தின்[1] போர்வலியை

கண்ணன் சங்கொலி கேட்டு தருமன் சாத்தகியை வினவல்

கோமான் . . . , கொற்றவன்கேட் டுளநடுங்கிச்
சஞ்சல முற்றுத் தயங்கியே சாத்தகியை
அஞ்சி யழைத்து அறன்மைந்தன் ஏதுசொல்வான்,
இகலில் விசையன் இளைத்தா லொழிந்தலது
மிகவும் குறிக்கறியான் வீறான சங்கமதைச்
சென்றறிந்து வாவெனவே செப்புமுனம் தாள்தொழுது

சாத்தகி கூற்று

நன்று நன்றென்று நகைத்தேது சொல்லலுற்றான்
கண்ணுத[2] லன்றிக் கடவுளர்கள் யாரெனிலும்
விண்ணவரும் நிற்கறியார் வில்விசையன் போர்முனைந்தால்
மண்ணில் எதிர்க்கவல்ல மன்னவரு முண்டோதான்
தண்ணளிச் சிந்தை தருமர் பொறைக்கடலே
என்முன்னின் னேவலிய லூழியம் புரிந்தால்
உன்மொழியை யான்மறுக்க ஒண்ணாதென் றுரைத்தார்.
பெற்று நெடியோன்போல் பீடுடையான் சேனையொடு
வெற்றி அதிரதத்தின் மீதேறிச் சீயமெனத்

தெவ்வர் அணிமுறியத் தேவகிசேய்[3] தான்பிளந்து
பவ்வமற முகந்து பன்மாரி வீசுதல்போல்
சேனை மடியத் திறல்வீரர் தான்மடியச்
சோனைக் கணைமாரி சோராமலே சொரிந்து
கிருதனை வில்லழித்துக் கேடில்லாத் தேரழித்து

---

1 திருமால் ஏந்தும் சங்கம்
2 சிவன்
3 கண்ணன்
4 கடல்

விருது பகர்ந்தெதிர்த்த வீராதி வீரியரில்
நூறாயிரந் தேரும் நோக்கமுள்ள மன்னரிரு
நூறாயிரங் கரியெண் ணூறாயிரம் பரியும்
கோடி பதாதி குலைய நிலையழித்து,
ஈடதாய் வந்தஇகற் சலசந் தன்தனையும்

விகட மதசயில ....
மகுடம் சிதறிவிழ மண்ணில் அறுத்தெறிந்து
தடையற்ற மத்தகசம் தானடந்த வாறேபோல்

துரோணர் தடுத்தலும், அருச்சுனன் போரும்

மிடலுற் றிவன்செலவே வில்முனிவன் தான்தடுத்துத்
செல்வ தென்னோடு செருச்செய் தகல்தியென்று
சொல்வது கண்டு துரோணன் தனைநோக்கிப்
படித்துக் கொடுக்கும் படிப்பன்றிப் பார்ப்பார்போல்
முடித்துக் கொடுக்கும் உரனுண்டோ கூறுகென்று,
சொல்லிவரி வில்வளைத்துச் சோராதி ருவோரும்
செல்லதெனப் பாணம் சிதறினா ரம்மானை.

போர்ச் செயல்

தேர்க ளிரண்டுமணிச் சேல்போல் உலாவிவர
தூர்கள் இரண்டுநிகர் கார்முகங்கள் தான்சொரியச்
சரமும் சரமும் தறுகா தமர்புரிய
கரமும் கரமுமிகக் கைவிரசாய்க் கோல்விடுப்ப
இருவர் கொடியறுந்த இருவர் உருள்தகர்ந்த
இருவர் பரிதுணிந்த இருசாரதி துணிந்த
இருவர்கள் விற்றேர் இயல்பெல்லாம் தானழிந்த
இருவர் களுமே இளைத்துநின்றா ரம்மானை.

துரோணர் செல்லல்

மறையோன் இளைப்பாற மன்னன் இளைப்பாறி
விறலாய் மறுதேரின் மேற்கொண்டு தானடந்தான்

மன்னர்அணி கலக்கி வாகினிகள் தட்டழித்து
மின்னிடிபோல் பல்பகழி வீசியே செல்வோனைத்

துச்சாதனன் எதிர்த்தல்

தானைக் கடலோடு துச்சாதனன் வளைப்பச்

சோனைபோல் வீசும் தொடையால் முனையழிந்து
பூனைபோல் கால்சிவப்பப் போனான் துணைவனுடன்
இடையில் வளைந்தோர் யாவரையும் நீறாக்கிப்
புடைகொண்ட சாய்கைநிழல் போலொத்த வீரருடன்
திடமுற்ற பார்த்தனையே தேடியவன் நிற்குமிடம்
தடையற்ற மாருதம்போல் தானடந்தான் அம்மானை.

தருமன் வீமனிடம் கூறல்

பின்னு முரசப் பெருங்கொடியோன் மெய்வருந்தி
முன்னின்ற வாயு முளையை[1] முகம்நோக்கி
மள்ளர் திரண்ட வரூதினியின் மத்திமத்தின்
என்னப் படும்பாடோ எம்பெருமான் நும்பியுமே
தகமைத் திறமுடைய சாத்தகியும் முன்விடுத்தேன்
பகருங் குடதிசையில் பட்டதே சங்கஒலி
அத்திசை நோக்கி அர்ச்சுனர்க்குத் தோட்டுணையால்
உத்தமனும் செல்லெனவே உத்தாரம் தான்கொடுத்தான்.

வீமன் உடன் பட்டுச் செல்லல்

சொன்னமொழி பிற்படவும் முற்படவே தாள்தொழுது
தன்னோடொத் தவீரர் தரணிபர்கள் தற்சூழ
மன்னும் சதுவிதமாம் வாகினியும் ஆழியென
பின்னுமுன்னு மொய்த்துவரப் பீடுடையான் தானடந்தான்
கலிங்கர் மகதர் கவுசலர்கள் காம்போசர்
தெலுங்கர் கன்னடர் திறலவணர் சேனர்கொங்கர்
குலிங்கர் குருதர்மிகு கொற்றமுள்ள தேசமன்னர்
விலங்கி னவர்களுயிர் விண்ணேறத் தானடந்தான்

துரியோன் பக்கத்தவர் எதிர்த்தலும் இறத்தலும்

மன்னவர் மன்னன் வலிய துணைவர்களும்
துன்னுசலதி தொடர்பான சேனைகளும்
தரங்கச் சலதிநிகர் தான்வளைந்து மொய்த்தடர்ந்து
வரங்கொள் பலபடையும் மாறாமலே சொரிந்தார்
இமைப்பில் வளைந்தோரி யாவரையும் நீறாகச்

---

1 வீமன்

சமர்க்குள் பலகணைகள் தான்விட்டறுத் தெறிந்தான்·
விந்தரன் விந்தனென வேந்தன் துணையிருவர்
நந்தற் றுகளாய் நறுக்கி அறுத்தெறிந்தான்.
கண்டு சித்ரசேனன் கனதீர்க்க லோசனனும்
குண்டலபோ சியென்னும் கோமான் துணைமூவர்
நீலகிரி போல நெருக்கி அமர்மூண்டு
காலனுக்குந் தோறார் களத்தில் உயிரிறந்தார்
முப்பதுபேர் பின்னும் முரண்டுகொண்டு போர்மூண்டு
துப்புடையான் கையால் துணிந்தாவி தான்மாய்ந்தார்.
பின்னுமோ ரைவர் பிலத்துயுத்தம் தான்மூண்டு
மன்னுவீமன் கணையால் மாய்ந்தழிந்தா ரம்மானை.

துரியோதனன் தம்பியர் நாற்பதுபேர் இறந்தனர்

தீப்பரவு சர்ப்பத் திறற்கொடியோன் தம்பியரில்
நாப்பதுபேர் செற்றமையால் நள்ளார் நடுநடுங்கி
அணிகள் முறிந்து அகன்றுவெளி யாயதுவே
பணிகள் பிறங்கப் பவனாபதி குமரன்
ஊழிப்பெருஞ் சுழற்காற் றொத்தடர்ந்து மேலாடி
ஆழிப் புவிகள் அதிரவே தானடைந்தான்
தேயு வெனச்செல்லத் திமிரப் படலமெனச்
சாய லணிகுலைத்துத் தான்தரிப்பற் றேமுரிய
ஏழுகடல் நீர்மொண்டு எழுந்ததிர்ந்து ஓயாமல்
ஊழிப் புயல்சொரிவ தொப்பாய்க் கணைமாரி
வீசியே செல்லும் விறல்வீம சேனனைத்தான்

துரோணன் எதிர்த்தல்

தேசிகன்கண்டு சினந்தனி யெல்லாம் பிளந்து
காண்டீப னோடு கதாயுதனுமே[1] கூடில்
மாண்டே யடங்க மடிந்திடும்நம் சேனையென்று
மோகரித்து ஆசாரி முன்தடுத்து மைமுகில்போல்
வேகமுறப் பல்பகழி வீசிநின்றா னம்மானை.

துரோணரொடு அருச்சுனன் நன்மொழி கூறல்

தேசிகன் போர்மூளச் சினமின்றி நன்மொழியாய்
ஆசுகன் மைந்தன் அடிதொழுது போற்றிசெய்ய

---

1 வீமன்

நீதியோ நாயடியேன் நின்னொடுபோர் செய்வது நின்
பாதமே என்சிரசு பங்கயபூச் செங்கணினும்
சுமந்து வினையறுக்கத் தோன்றினனே ஐயாவே
சமைந்த பெருங்குருநீ தந்தையினும் மிக்கோன்நீ
இகல்வன்மை வின்மையுநீ ஈந்ததன்றி வேறுமுண்டோ
உகமை[1]யிலா நின்போர்முன் உம்பர்எதிர் நிற்பாரோ
என்று பலகால் இவன்நயந்து தானுரைக்கக்

முனிவன் அம்பு விடுதல்

கன்றியே மேன்மேல் கணை சொரிந்தான் வில்முனிவன்
மிகுந்து புகுந்தமரில் வேதியன்மே லாடியதால்
புகழ்ந்து மறுகாலும் போற்றாமல் பேசாமல்

விசயன் தடுத்து வீடுமர்மேல் அம்பு விடுதல்

விட்ட கணைகளெல்லாம் மேன்மேல் விலக்கிநின்றான்
தொட்டு முனிமேன்மேல் சொரிந்தான் சரமாரி
வாளி மழைமாரி மாறாமலே சொரிய
மீளி விலக்கரிதாய் வில்லதனைத் தேரில்வைத்துச்
சிகரக் கிரியினின்று சீயம் குதித்தாற்போல்
பகரும்இர தம்விட்டுப் பாய்ந்தோடி வின்முனிவன்
வீசு கணையனைத்தும் மேகமழை போலுதறிப்
பூசலிடும் பூசுரன்தன் பொற்றேரைத் தான்வாரி
மேகபந்தி தான்கலங்க விண்ணோர் பயந்தொதுங்க
மாகமட்டும் தானுயர மால ... — ...
பன்னாவில் தாதை பறித்த கொடுமுடிபோல்
துன்னாக மூட்டும்சுமா விசை யாயெழுந்து
அண்ட கடாகம் அகடுடையும் என்றுவெருக்
கொண்டே அமரர் குலைந்தே நடுநடுங்க
மேக படலம் வெருவிக் கலைந்தலறத்
தாகமுடன் மீண்டு தாரணியிலே வீழ்ந்த
பாகன் பரிதேரும் பற்பமெனப் பறந்த
சோகமுடன் முனியும் சோர்ந்தார்வெந் என்பொடிந்தே
பாப்பரன் விழுமுன் பதறியே தன்தேரில்
கோப்பாக ஏறிவிறல் கோளார் அணிகுழப்பி

1 உவமை

திரும்பித் திரும்பியிரு திட்டியால் தானோக்கி
விரும்பிப் பெருந்தேர் விசையாகத் தானடத்தி
அஞ்சிவீ மன்செலவே ஆசரிசோ பந்தீர்ந்து
துஞ்சுதல்போல் மேன்மேல் துணுக்கித் துணுக்கெறிந்து
பயந்து பயந்துதிசை பார்த்துப் பரதவித்து
நயந்தசொற் கேளாமல் நாமவதிப் பட்டமென்று

துரோணர் மயங்கல்

உரத்தவன் தன்னுடனே ஊடாடி மேன்மைகுன்றி
வரத் துரோணன்மெய் மயங்கினார் அம்மானை.
திரைமுன் கலக்கும் சிகரப்பெருங் கிரிபோல்

வீமன் போர்

விரவுந் தளக்கடலை வீமன்மிகக் கலக்கிக்
கொக்கரித்து மீறிக் குமுறிவிசை கொண்டுசெல்லத்
தொக்குடைய தோர்கால தூதரினும் பொல்லாதோர்
ஏழுலகம் தானடுங்க ஏழுகட லும்பெருகிப்
பாழியுறும் சூறைப் பவனனுமே ஒத்ததெனக்
கடலும் புயலிடியும் காற்றும் முழங்கியபோல்
அடல்பல் லியவிகற்ப ஆரபாரம் குமுறக்
காலின் மகனும் கலங்கக் கடற்சேனை
கோலி வளைந்து குறுகியதே அம்மானை.
சேடன் நடுநடுங்கத் திக்கயங்கள் தானடுங்க
மூடினா ரஷ்டகிரி முப்புவனம் உள்நடுங்க
மக மேரனைய மகாாலையங் கொதிக்க

துரோணர் அம்பு விடல்

முகில்மாரி ஒத்தே முனியாசுகம் சொரிந்தான்
சூரர் பலரும் சொரிந்தகணை மாரியெல்லாம்
வீரன் அறுத்தெறிந்து மிக்கதேர் வில்லறுத்து
நாலுவகைச் சேனையையும் நாழிகையில் கொன்றுழக்கி
காலுமுதற் சென்னிக் கடையாய் அறுத்தெறிந்து

கன்னன் போர்

கண்டித் தடர்ந்துவரக் கர்ணன் சினந்தடர்ந்து
தண்டிச் சரந்தொடுக்கத் தானும் சரந்தொடுத்தான்

கூர்கொண்ட பல்பகழி கூசாமலே சொரிந்து
பேர்கொண்ட வீரர் பெரும்பூசல் மூண்டமையால்
தேகங்கள் எங்குமிகச் செங்குருதிப் போர்வையினால்
ஆகஞ் சிவந்தே அருணநிறம் படைத்தார்.
ஒற்ற போராக உரவோர் இருவருமே
கொற்றமாய் வெம்போர் கொதித்தொத்தே செய்துநின்றார்
மாருதன் மைந்தன்[1] வலுக்கொண்ட கூர்கணையால்
பாரப் பரிநான்கும் பாகனையும் தானறுத்துச்
சேமத் துசமறுத்து தேரறுத்து வில்லறுத்து
வாமக் குடையறுத்து மார்பினையும் தான்துளைத்தான்

கர்ணன் புறமுதுகிடலும், பினனர் வேறு தேர் ஏறி வருதலும்

வீமனுக்குக் கர்ணன் விரைந்துமுது கிட்டளவில்,
தாமவிட சேனன் தாதைக்குத் தன்தேரை
ஈந்தானத் தேர்மீது இரவிசுதன் ஏறிப்
போந்தே அனிலன் புதல்வனொடு கணையால்
தேர்வில் லிழந்து திருமுது கிட்டளவில்,

துரியோதனன் இரு இளையர்களைத் துணைக்கு உனுப்பல்

சீர்விரவு மன்னன் திரியோதனன் பார்த்து
உதயன் சுதனுக்கு உதவி செயுமெனவே
இதமுற் றிளையோர் இருவர் தனைவிடுத்தான்.
மதுவும் கயிடவனும் ஆமெனவும் வல்லாளர்
கதழ்வின்[2] நெடுநேரம் கான்மகனோடேபொருதி
ஆசுகன்சேய் ஆயுதத்தால் அங்கம் அழிந்திறந்து
வாசவன்தன் ஊர்புகுந்தார் மண்ணுலகம் தானிழந்தே.
தன்கண் முனமரசன் தம்பிமார் செற்றமையால்

கன்னன் கூற்று

முன்கர்ணன் மன்னன் முகநோக்கி ஏதுசொல்வான்,
தான் நொடிக்குள்வீமன் தரங்[3]கொய்வேன் கொய்யேனேல்
நான்இமைப்பில் என்னுயிரை நல்குவேன் என்றுரைத்து
விரைந்து ஒருதேரின் மேற்கொண்டு மாவிசையாய்த்

---

1 வீமன்

2 விரைவாக

3 தலை

தூரந்து நடந்து துரோணன் நிமிர்வுறவே

கன்னன் போர் செய்தல்

கரங்கொள் விசையாய்க் கணைமாரி தான்சொரிந்து
முரிந்த புருவ மெரிந்த விழிதோன்றச்
சினந்து துணிந்தமனத் தீர்க்கமுடன் மூர்க்கமுடன்
முனைந்து முனைந்து முடுகிச் சரந்தொடுத்தான்.
இனிப்பூ வுலகம் இயல்நண்பர்க் கென்றிளவல்
தனைத்தான் அறுப்பனெனத் தாளாதிகல் புரிந்தான்

கன்னனும் வீமனும்

கூற்றை ஒத்தான் கன்னன்குமுறு யுகாந்தத்திலுறும்
காற்றை ஒத்தாமன் வீமன்கருதுபிறப் பின்துவக்கால்
மேன்மே லுரசாகி விட்டுவாங் காதபடி
தன்னா லிகல்வில் சமந்தெல்லாங் காட்டினரே.

வர்மித்துக் கர்ணன்மிக வன்போர் தொடங்கியதால்
தர்மர்க் கிளையோன் தரணிசுதனைப் பார்த்து
எம்பியுனைக் கொல்வன்என ஏவல்லோர் களுமதிக்கத்
தம்பமுடன் பேரவையில் சாற்றியதால் சீற்றமற்றேன்
என்றிரு வோரும் இகலொத்த போர்முகத்தில்,
கன்றியே கர்ணன்விடும் கைக்கணையால் சாரதிமா
சீயக் கொடிமுதலாய்த் தேர்வில்லுந் தானிழந்து
வீயொத்து மண்மேல் விரைவாகப் பாயுமுனம்
சூரன்கு மான சுடர்கதிர்வேல் ஒன்றெறிந்தான்
வீரமுடன் வீமன் விரைந்தொருவில் தான்வளைத்துத்
தூளாக வேலைத் துணித்தெறிந்து நானாங்கு[1]
நீளா முழக்கதையை நேர்ந்தெறிந்து தானகைத்தான்
கோடை யிடிபோல் குமுறிடவே தானிறைந்து
சாடை யறப்பானு தனையன் பரிதேர்மா
நீறு படுத்தியதால் நெஞ்சயர்ந்து தானோடி

வேறு தேரில் ஏறிக் கர்ணன் போரிடல்

வேறுமொரு தேரேறி மீண்டுகர்ணன் போர்முடுக

---

1 பதினாறு

கண்டரசர் கோமான் கனுஷ்டரிலே[1] துன்முகனை
சண்டன் மகன்தனக்கே தானுதவி யாகுகென்றான்
அந்தச்சணம் வந்து அடர்ந்துகொடும் போர்புரிந்து
மைந்துற்ற வீமன் வடிக்கணையால் தான்மாய்ந்தார்
தோமரம் ஒன்று சுழற்றியே பானுசுதன்
வீமன் தடந்தோளில் விட்டெந்தான் அம்மானை.
எறிந்த விறற்கோலை யேவ ....
முறிந்து விழவே முகில்போல் கணைசொரிந்தான்

துரியோதனன் சகோதரர் ஐவர் இறத்தல்

அரவக் கொடியரசன் ஐவர் சகோதரரை
விரையக் கதாயுதன்மேல் விட்டான்காண் 'அம்மானை.
ஐவரும் வந்து அனிலன்மகன் கதையால்
தொய்வுடன் மண்ணில் சுழன்றிறந்தா ரம்மானை.
மீண்டுமோ ரைவர்களை வீமன்மேல் தானேவ
மாண்டனர்கள் வீமன் வடிக்கணையா லேநால்வர்
தன்னுடன் வந்த சதுர்துணைவர் தானிறந்தும்

விகர்ணன் முந்துதல்

மன்ன விகர்ணன் மதியாமல் போர்மூண்டு
தாவி ரதம்நடத்தித் தக்கவரி விற்பிடித்து
ஏவு தொடுவானை எருள்வீமன் தானோக்கிப்

வீமன் அறிவுரை

புகல்கின்ற வஞ்சினந்தான் பொய்த்தாலும் நின்னுடனே
இகல்செய்வேன் தம்பிவிரைந்து ஏகாய்உனது முன்னோன்
சொல்லா வசையுரைத்துத் தோகையைநிந் தாஸ்துதி[2]யாய்
எல்லார் செவியும் எரிபரவ நீதிகெடச்
செப்புமொழி கேட்டுநடுச் செப்புகின்ற நாவுடையாய்
இப்பொழுதுன் மேற்கணைநான் ஏவுகினும் கொன்றிடுமோ
பாதகங்க ளாகப் பழிக்குட் படாமனந்தோய்
நீதியுள்ளாய் நின்னுடனே நெஞ்சியையு மோபொருத
போரறிந்து நீபொருது போவென் றுபசாரம்

---

1 இளைய புதல்வர்
2 புகழ்வது போலப் பழித்தல்

சீரறிந்து தானுரைத்தான் செய்நன்றி குன்றாதான்.

கேளாமல் விகர்ணன் பொருதல்

வீமன் நயந்துரைக்க வெங்கோப மாய்விகர்ணன்
தீமுகக்கோல் மேன்மேல் சினந்தெய்தான் அம்மானை.
எம்முன்னோர் யாவரும்நின் ஏவால் மடிந்திடவும்
அம்முயிர்வைத் தேயுலகில் யானிருப்ப துண்டோதான்
உம்முன்னோன்[1] பின்னோர் உனக்கிரங்க யானறுப்பேன்
வம்மின் சிலைவாங்கி வன்போர்க் கெனவுரைத்தான்.

இருவருக்கும் போர்

மிகவும் நகைத்து வெறுத்தே திரிபுரத்தைத்
தகனிட்ட வன்போல் தாவிச் சமீரணன்சேய்
முகனுறச் சென்று முரண்வில் கரத்தேந்தி
இகலிற் பலகோல் எதிர்த்துவிட்டான் அம்மானை
மேன்மேலு மேயிருவர் வின்மாரி தான்சொரிந்து
தன்மே லுருமுன் சரஞ்சரத்தி னால்விலக்கி
வில்விசையார் கைவிரசால் வெங்கணையால் மெய்வலியால்
சொல்விசை யால்தங்களிலே சோராதமர் புரிந்தார்
நிகரற்ற வீரர் நிகரொத்தே தங்களிலே
இகலொத்து நின்றளவி லேவிகர்ணன் கோபமுற்று
விட்டகொடுங் கணையால் மிக்கவரிக் கேதனமும்
தொட்டசிலைக் கவசம் துங்கமணித் தேருருளும்
சாரதியு மற்றும் தகனித்த நீறாகிப்

வீமன் சினந்து விகர்ணன் தலை அறுத்தல்

பாரதிர வீமன் பலகாயத் தோடிழிந்து
மற்றோர் தனுவளைத்து வாகைப்பிறைக் கணையால்
அற்றே உருள அறுத்தான் மகுடமுடி
கோவிகர்ணன் மாண்டதற்பின் கொற்றமுடன் பலர்கள்
ஆவிக் கனமடைய அறுத்தாக் கரித்து

கர்ணன் அடர்தல்

பாவிகர்ணன் சிந்தைபதைக்க மிதித்தடர்ந்தான்

---

[1] தருமன்

மேவுகன்னகம் போல வில்வலிய மல்வீமன்

வீமன் சாத்தகியுடன் செல்லல்

அன்றடர்ந் தேறி அடலாண் அரிபோலச்
சென்றடைந் தான்வீரத் திறல்சாத் தகியுடனே
அங்கி யுடனே அனிலமுமே சேர்ந்ததெனச்
சங்க மருவுகரன் தம்பியுடன் வீமனுமாய்ச்
சோர்ந்தடர்ந்து கோலிச் செருமுகின்ற சேனையெல்லாம்
வேந்த ரிருவர்களும் வெங்கணையால் தானறுத்து
வில்விசையன் பாணமதால் வெங்களத்தில் மாய்ந்தோர்கள்
பல்வினைஞர் சோரிப் பரவை[1]யினும் மூழ்கி
அள்ளலா மூளை நிணம் ஆனதிலுமே யேகி
விள்ளோணாவீரர் வீரர் விசையனிடஞ் சேர்ந்தார்.
மூவர்களும் ஒன்றாக முச்சுடர்போல் சேர்ந்தமையால்,
மேவிவெருக் கொண்டபல வேந்தரெல்லாம் ஒன்றாக
சலதியென மூவர் தங்களையும் மொய்த்தனரே
உலகம் நடுங்க உயித்தம் செயுமுகத்தில்

சாத்தகியும் பூரிச்சீறாவும்

சாத்தகியும் பூரிச் சீறாவும் சிலைவாங்கி
கோத்தார் பகழி குறுகினார் தேருடன்தேர்
சேத்து மலைந்த சிலைதேர் இருவர்களும்
தோத்து மலைரெண்டாய் தொடங்கினார் மல்யுத்தம்
அண்டம் நடுங்க அகிலம் நடுநடுங்க
விண்டு வரை நடுங்க மேரும் நடுநடுங்க
வாலியுடன் சுக்ரீவன் வன்போர் புரிகுதல்போல்
கோலியே மல்லுயித்தம் கொற்றமுடன் பொருதி
மாலும் பிரமனுமுன் வன்போர் புரிந்ததென்னச்
சாலவே மல்லுயித்தம் தானேமிகத் தொடங்கி

பூரி சாத்தகியைத் தாக்கல்

பூரி,விறல் சாத்தகியைப் பூமியிலே தான்வீழ்த்தி
தாரிலகு மார்பகத்தில் தானேறியே யிருந்து

---

1 இரத்தக் கடல்

கைக்கருவி கொண்டு கழுத்தறுக்க வங்கதன்முன்
வைக்கணையின் பார்த்தனையே மாயன் முகம்நோக்கி

கண்ணன் அருச்சுனனிடம் பூரி சிரம் அறுக்கச் செப்பல்

என்னிளவல் மாயா திகல்பூரி தன்சிரத்தை
மின்னொண் படையால் விரைந்தறுத்து வீழ்த்து
கென்றான்.
இருவர்சமரில் இனைத்தோர்க் குதவியிகல்
பொருதல் அறமலெனப் போற்றி யுரைத்தோனை,
வெருவ நினைந்து மிகக்சீற வில்விசையன்
கருவியும் கையும் கணையொன்றால் தான்வீழ்த்தான்
கியமற்று மேலிருந்த பூரிதனைக் கீழ்வீழ்த்தி

சாத்தகி பூரி சிரம் அறுத்தல்

வயமுற்ற சாத்தகியும் மற்றவன்தன் சென்னிதனைத்
துன்னுக திர்வரனால் துணித்துச் சினம்தீர்த்து
மின்னுகரப் பொன்னின் மகமேரை ஒப்பாக
வாகை புனைந்துவிறல் வல்லாளன் நிற்பளவில்.

கண்ணன், அருச்சுனன் ஆகியோரை துரியோதனன் நெருங்குதல்

ஓசையுடன் பார்த்தனையும் ஓதநிறத் தான்தனையும்
மன்னவர் மன்னன் வணங்கா முடிவேந்தன்
கன்னனுடன் மற்றுமுள்ள காவலரும் தானெருங்கி

கண்ணனை இழிந்துரைத்தல்

வஞ்சனையாய் வன்போர் மனுநீதி குன்றிடவே
எஞ்சிய போர்செய்தல் இடையன் கெடுமதியோ
பெண்மை யுருவெடுத்த பேடிப்பயல் மதியோ
தன்மையிதென் னென்றுகொடிச் சர்ப்பத்தான் தான்கேட்க

கண்ணன் சினவுரை

மாயன் கடுங்கோப மாகியே மன்னவரில்,
தீயனெனப் பேரெடுத்த தீயோனே நின்னளவில்
சத்திரியர் தர்மம் தயவியல்பு யோக்கியங்கள்
உத்தமமெய் நற்குணங்கள் உள்ளதெல்லாம் மங்கியதே,
பேசிய சொல்மாறிப் பிரட்டே நிதம்தொடங்கி

நீசரிலும் கெட்டோய் நிலையழிந்த நெஞ்சுடையோய்
அறங்கொண்ட நெஞ்சுடைய ஐவரையு மேபகைத்து
மறங்கொண் டனத்தில் வலியவிடங் கலந்தும்
கங்கைதனில் கட்டிவிட்டும் காயெரியை வீட்டிலிட்டும்
மங்கை வதுவைதனில் வல்வழக்கே பகர்ந்தும்
வாழப் பொருந்தாமல் மற்றவர்மேற் போர்புரிந்தும்
ஆழிப்புவி யோரம் ஆகவே தான்பிரிந்தும்
பாழ்மயா னப்புவியைப் பங்காளிக்குக் கொடுத்தும்
தாழ்விலதும் பொய்ச்சூது தானாடியே பறித்தும்
மின்னைத் துகிலுரிந்தும் மிக்கோர் மொழிமறுத்தும்
பின்னசுரன் பூதம் பெருமுனியை ஏவியதும்
சித்தசன்முன் சுட்டுதுயர் நீர்த்தே உனைவிழுங்கும்
அத்திக் குருகை யறுத்துமிது போலனந்தம்
செய்நன்றி யுமறந்து தீயோனே சொல்லுறுதி
மெய்நின்ற தர்மனுக்கு மேதினியும் ஈயாமல்
தூதன் தனைவதைக்கச் சூட்சக்குழி[1] வகுத்தும்
போத முடையோரைப் போத வசையுரைத்தும்
முன்னாள் சிவேதன் முடியறுத்த வஞ்சனையும்
நென்னல்[2] அபிமனையே நேர்மலைந்த வஞ்சனையும்
பன்னாளும் நீவிளைந்த பாதகங்கள் எண்ணாமல்
இந்நாளில் நீதிஇயம்புவதேன் லெட்சை[3] கெட்டோய்
என்றுமால் நக்கான் எழில்விசையன் கண்சிவந்து,

அருச்சுனன் அம்பு விடுதல்

கன்றிக் கணைமாரி கால்வருஷம் போற்சொரிந்து
முன்னின்றோர் கெட்டு முதுகிடத்தேர் வில்லழித்துக்
கன்னன் முதல்யாரும் கலங்கக் சமர்புரிந்தான்.
வெள்ளம்போல் மன்னர் வெருக்கொண் டணிகுலையத்
தெள்ளும் விசையனுடன் சேர்ந்தவரும் போர்மூண்டார்
இன்னங் கணத்தில் இரவிபடும் அவ்வளவில்

துரியோதனன் கூற்று

துன்னியே மன்னரெல்லாம் சோராது ரத்துநின்று

1 வஞ்சனையாகச் செய்த குழி
2 நேற்று
3 வெட்கம்

அபயமுடனே அனுகுல மாய்க்கா மினென்று
விபர உபசாரம் வேந்தருக்கெல் லாமுரைத்துப்
பருதி படுமளவும் பண்பாகக் காத்தீரேல்
எரியில் விசையன் இறப்பான் துணைவருடன்
அவ்வளவும் சிந்தை அதிக தயிரியமாய்த்
தெவ்வர் நடுங்கச் சினந்துபோர் செய்யுமென்று
நச்சணையும் சிந்தை நராதிபதி உள்நடுங்கி

சயத்தரதனை மறைத்து வைத்துப் போர்செய்தல்

துச்சனையாள் கேள்வனையே தோன்றா நிலவரையில்
வைத்துப் பலகையிட்டு மண்ணிட்டுத் தான்மூடி
மொய்த்த பலசேனை முரணாக மேல்நிறுத்தி
முரண்கொண்டு வெஞ்சமர் மூண்டனரே யெத்திசையும்

கண்ணன் ஆழியால் கதிரவனை மறைத்தல்

அரண்கொண்ட சேனையெங்கும் அச்சுதனும் தானோக்கிச்
சிந்துபதி தோற்றம் தெரியா விதத்தாலே
சந்ததமும் சேர்ந்தோர் தனைக்காக்கும் சிந்தையினான்
மங்கைய பூபன் மதிசேர் கிருபைஒத்து
சங்கமுறு கையான் தனஞ்செயனைத் தானோக்கி
ஓராழித் தேரான்[1] உருத்தோற்றம் தான்மறையக்
கூராழி[2] யாற்பற் குணனறியத் தான்மறைத்தான்
அத்தை உயுத்த அமர்பூமி யைப்போல

மாலை வந்தது என்று துரியோதனாதியர் மகிழ்ச்சி

ஒத்தசெக் கர்வானம் உயர்குடபால் எங்கனுமே
கதிர்புக்க தென்று கதித்தரசர் கோன்சேனை
அதிரும் இடியொலிபோல் ஆர்த்தார பாரமுடன்
கொக்கரித்தார் மேன்மேல் குதித்தார் குணாலமிட்டார்
தக்க விசையாநீ தழற்புகுதாய் என்றுசொல்லி

சயத்தரதனை வெளியே கொணர்தல்

சிந்து பதியைச் சிறக்க அலங்கரித்து

---

1 சூரியன்
2 கூரிய சக்கரம்
3 மகிழ்ச்சி ஆரவாரம்

உந்தி ரதத்தேற்றி உரகக் கொடியோனும்
கன்னன் சவுபாலன் காவலன்துச் சாதனனும்
மன்னர் பலர்சூழ வந்தே அருச்சுனன்முன்
நின்றொரு மித்தரற்றி நிந்தாஸ் துதியாக
அன்றொரு கோடி அதிர்ந்தறைய அச்சுதன்தான்

கண்ணன், அருச்சுனனிடம் சயத்திரதன் தலையை அறுக்கக் கூறல்

நண்பனை நோக்கி நயந்தேது செப்பலுற்றான்
பண்பனே சிந்துபதி தலையைக்கீழ் வீழ்த்தோன்
சென்னி துகளாய்த் தெறிக்கக் கடவதென்று
உன்னித் தவசில் ஒருமித்த சிந்தையுடன்
ஒண்சமந்த பஞ்சகமென் றோர்மடுவில் தன்தாதை
விண்சலசக் கண்ணை மிகப்பரத்திக் கையேந்தி
மன்னினான் சேய்தலையை மற்றவன்தன் கையில்விழ
தன்னிகரி லதாயாய் சரமே வெனப்புகன்றான்.

அருச்சுனன் சயத்திரதன் தலை அறுத்தல்

காசை[1] நிறத்தான் கவலுமுன மேபார்த்தன்
ஈசன் அளித்தசிலை ஏந்தியவன் ஈந்தகணை
தன்னைப் பகைவன் தரங்கொய்யத் தானேவிப்
பின்னும் பலபாணம் பேறாளன் தான்செலுத்தி
சிந்துபதி சென்னி செகத்தில் விழாதபடி
தந்தை கரத்தில்விழத் தான்விட்டான் அம்மானை.
கைத்தாங்கா வாறாய்க் கரத்தில் சிரமலைதான்
வெய்தாய் விழவும் விழித்துமகன் சென்னிதனைப்
பாத்தான் திகைத்தான் பதைத்தான் நிலத்திலிட்டான்.
மாற்றானும் சென்னிசின்ன மாகப் பொடிந்தழிந்தான்
சர்ப்பக் கொடியோன்தன் தங்கைதுணை வன்தாதை
பற்பரிஷிக் கொப்பாய் படியில் மடிந்திறந்தான்

விருத்தம்

முன்பட்டான் பானுவென மூண்டமரில் சிந்துபதி
மன்பட்டான் மாமாயன் மாய்கைதனை ஓராமல்

---

1 காயாம்பூ

பின்பட்டான் சிந்தரசைப் பெற்றபிதா வானோன்
என்பட்டான் பாம்புயர்த்தோன் எரிபட்டிரு மெழுகாய்

நடை

துரியோதனன் முதலியோர் அருச்சுனனிடம் கூறல்

தம்பிமார் மாமனொடும் தனசிலதன் கன்னனொடும்
வெம்பி எதிர்சென்று விசையன் தனைநோக்கி
மெய்த்தவனைப் போல மிகச்சபதம் தான்கூறி.
பொய்த்தனையே வெய்யோன் பொருப்படைந்த பின்பொருதிக்
கொல்வதேன் வாய்மதமாய்க் கொற்றவர்கள் முன்சபதம்
சொல்வதேன் நீயுமொரு சுத்தவீ ரன்போல,
இன்னம் உயிர்கொண்டு இருந்தாயோ நீபாவி
வன்னிமிசை போய்வீழ் மதிகேடா என்றுருத்தார்.

கண்ணன் ஆழியை நீக்க கதிரவன் ஒளிர்தல்

அன்னபொழு தாதிவிறல் ஆழிதனை நீக்கியபின்
இன்னம் பனைப்பொழுதுண்டு என்ன நின்றான் ஆதவனே
வெய்யோன் படுமுன் விரைந்துரகன் உண்டானோ
மையார் முகிலால் மறைத்தானோ இந்திரன்தான்
கனத்தங்கு மெய்யான்தன் கைத்திகிரியால் மறைத்தால்
அனந்தங் கதிர்காந்தி அங்கதற் குண்டிருண்ட

துரியோதனனுக்குத் துரோணர் விளக்கல்

வாறே தெனமயங்கும் மன்னனுக்கு வின்முனிவன்
வீறாகத் தேற விரித்துரைத்தான் அம்மானை.
பெரியோர் திருவுளந்தான் பேதித்தால் எப்பொருளும்
பிரசமலர் மார்பர் பேதிப்பதே அரிதோ
என்று முனிசொல்ல இராசன் மனம்அழன்று
அன்றிரு கண்ணும் அழற்பொறிகள் தான்தூவ
வருணன் மகனுயிரை மாய்த்தான் உபாயமதால்
சிரமா யிரம்தறியத் திண்புயமீ ராயிரமும்
மந்திரம்ஒன் றோதுவித்து மாய்த்தான் சதாயுவையும்
தந்திரமுமே மயங்கத் தான்சங்க மும்குறித்தான்
இந்திர சாலங்கள் இவன்செய்ய வேதுணிந்தால்
இந்திரன்சேய் வெல்லாது எவர்வெல்ல வல்லாரோ

கண்ணனை இகழ்தல்

கள்வனிவன் வெண்ணெயுண்டு கட்டுண் டடியுமுண்டு
கொள்வசையி னோடனந்தம் கோபியரைக் கோப்பழித்து
குன்றக் குடையெடுத்துக் கொண்டல் தனைத்தடுத்து
சென்றுற்ற மாமனையும் சேர்ந்தோரை யும்அறுத்து
வஞ்சனைக்குக் கொள்கலமா மாபாவி என்பேரில்
எஞ்சப் படையெடுக்கேன் என்றமொழி தான்தவறி
சங்கமெடுத் தான்கதிரைச் சக்கரத்தி னால்மறைத்தான்
இங்கிவன் தான்மேலும் இனியென்ன செய்யானோ

துரியோதனன் சூளுரை

ஒற்றை யுருள்தேரோன் ஒழிவதன்முன் னைவரையும்
செற்றிடுதல் யான்படுதல் திண்ணமெனச் சேனையொடும்
சாகரம் ஒத்துத் தனஞ்செயன்மேல் செல்லுமென
மோகரித்துப் பற்பலபேர் மொய்த்தமுடி மன்னவர்கள்
வன்சபதங் கூறிமன்னர் மன்னவன்தன் ஏவலினால்
துன்சமரில் வந்து தொடுத்தார் பெரும்பூசல்

துரியோதனன் பக்கத்தவர் போரில் முனைதல்

துருபதன் சாத்தகியும் துரோபதியாள் புத்திரனும்
குருவுடன் வெம்போர் குதித்தெதிர்ந்தா ரம்மானை.
அரவக் கொடியோன் அனுசர் பதினாயிரம்பேர்
இரதத் திறலரசர் எண்ணொணாச் சேனையுடன்
வீமனைச் சூழ்ந்து விரைந்தே அமருடற்றி
நாமப் பெருந்தேர்மா நற்சாரதி உருளும்
சிங்கத் துசமும் சிலையும் சிலைநாணும்

வீமன் எதிர்த்துத் தாக்குதல்

பங்கப் படுத்தப் பவனாபதி குமரன்
தத்தி எதிர்பாயும் சமர்ச்சிங்கம் போலடர்ந்து
பத்திப் பரியைப் பரியில் எடுத்தடித்தும்
தேரெடுத்துத் தேரில் தெறிக்கத் தகர்த்திடித்தும்
வாரணத்தை வாரணத்தில் வன்மையாய்த் தானடித்தும்
காலாளைக் காலால் கலங்கவே தான்துகைத்தும்
வேலான தெல்லாம் விறகாய் முறித்தெறிந்தும்
ஆழி கலக்கும் அரியமக மேருவைப்போல்

சூழும் படைநொடியில் தூளாய்ப் பொருதழித்தான்
மாய்ந்தோ ரொழிய மடியாத வீரரெல்லாம்
சாய்ந்தே புறங்கொடுத்தார் சர்ப்பத்தான் தம்பியரில்
விரதனும் சூசிகனும் வெங்கொடா தேபொருது
இருவரும் வீமன் இகற்கரத்தால் மாய்ந்தனரே
பேரிபம்[1] ரெண்டைப் பிளந்தடர்ந்த சிங்கமெனச்
சீரியதோர் மகல்வீமன் செய்தேன் அரிநாதம்

கடோற்கசனும் அசுவத்தாமாவும் பொருதல்

வலிய இடும்பன் மருகன் திருமகனும்
சிலையில் வலிய திறலசுபத் தாமாவும்
அரக்கனும் ராகவனும் ஆமாறு போர்மூண்டு
சரப்பைப் புயல்மாரி தான்சொரிந்தா ரம்மானை.
அந்தணன் நம்மோடு அரக்கனோ போர்பொருவான்
இந்தவிதங் கண்டால் வெரும் நகைப்பரென்று
ஆங்கார மாக அடலாசுகம் சொரிந்து
பாங்கான தேரும் பரிபாகும் வில்லறுத்தான்
தேருடைய வீமன் சிறுவன் சுதன்பாய்ந்து
மேரனைய தண்டமதால் வீசினான் அங்கவன்தேர்
பற்பமெனவே பறந்த மறுத் தோரடிதான்
வெற்பனைய தோள்நசுங்க வீசினான் அம்மானை.
தண்டு கரமும் தறியஒரு கொடுங்கோல்
மண்டு சினமாக மால்தாமன் தான்விடுத்தான்
விட்ட சரத்தை விலக்கிக் கதையுடனே
கிட்டு முனமே கிரணக் கொடுங்கணையால்
கதையிரு துண்டாகக் கறக்கித்தா மாதறித்தான்
அதிலொரு பாதிகொண்டு ஆரபாரத் துடனே
பாப்பான் மகன்மேல் பதியவே தானெறிந்தான்.
தீப்பரவல் போல்சோரி தேகமெங்கும் மூடியதே
சோரியைப் போற்றத் துரோணா சரிகுமரன்
தீரமுள்ள ஓர்கணையைச் சென்னிஇலக் காய்விடுத்தான்
வர்மித்து விட்ட மறைவாளி ஏறிடிபோல்

கடோற்கசன் அடிபடல்

தர்மர்க் கிளையோன் தனையன் சுதன்சிரசை

---

1 பெரிய யானை

கருக்கென் றறுத்துலகில் காசினிமார் மெய்நடுங்க
வெருக்கொண் டிடைச்சிகர வெற்பதென வீழ்த்தியதே
மகன்சட் டிடவீமன் மைந்தன் மனங்கொதித்து

விமன் சினந்து தாக்கல்

நகம்[1]பற் பலவெடுத்து நற்கரங்களால் வீசிச்
செகம்பற் பலநடுங்கச் சீறியடர்ந் தாக்கரித்துப்

பகன்பட்ட பாடு படமெய் யறப்பிளந்து
மெய்பிளந்து வீழ்த்தெழுந்து மீளிஅசுபத் தாமன்
கைப்பலங் கொண்டங்கோர் கதைஎறிந்தான் அம்மானை.
சாரங்க[1] ராமன் சரத்தால் இராவணன்தன்
பேரங்கம் பட்ட பெரும்பாடெல் லாம்படவே
இடும்பன் மருகன் இகல்மெய் யினைநொறுங்கக்
கடுங்கதை மோதக் கடோற்கயன்பார் மேல்விழுந்தான்
மோகித்து வீழ்ந்தாக்கன் மீண்டெழுந்து மோகரிக்க

துரியோதனன் கூற்று

வேகித்துக் கர்ணனுடன் வேந்தர்கோன் என்சொலுவான்
மருத்துத் தருஞ்சுதன்சேய் மாளும் படியாக

உருத்துந் தொகைவேலுடற் றென்றான் அம்மானை.
முப்புவன மெச்சும் முகில்வா கனன்சுதன்
இப்பொழுதே கொன்றுலகம் எல்லாம் உனக்களிப்பேன்

விழுந்தவன்மேல் சத்தி ஆயுதம் விடக் கன்னன் மறுத்தல்

தண்டாயு தத்தால் தயங்கி விழுந்தோன்மேல்
தண்டார் மணிமார்பர் சத்திவிடேன் என்றுரைத்தான்
கன்னன் இவையுரைக்கக் கண்டருகில் நின்றவிறல்
வின்மைக் கிருபன் மிகநகைத்து ஏதுசொல்வான்

கிருபன் மொழி

ஓர்கணையால் கொல்வேளன்று ஓதல்உனக் கேசகசம்
போர்கண்ட போதே புறம்போவதே சகசம்
மெய்யென்று மன்னர்மன்னன் வீற்றிருப்பதே சகசம்

பொய்யென்று உன்மேலே புகைவதெங்கட் கேசகசம்

---

1 வில்

அரவக் கணையால் அருச்சுனனைக் கொல்வனென்று
விரதம் பகர்ந்தனையே வீறுபெறநீ வேண்டில்
இந்நாளிச் சமயமல்லால் இன்னொருநாள் வேறுமுண்டோ
மன்னா இப்போது வசமிலையோ அப்பாப்பு
நீயரவு தானெடுக்க நேர்ந்திலையோ நல்முகூர்த்தம்
காயுரகம் அண்டமடை காத்தே இருப்பதுண்டோ
யானல்ல வில்லா சரியசுபத் தாமனல்ல
வானெல்லை யாளும் மகவான்எண் பாலரல்ல
எங்கள் குலத்துக் கிறையாம் பிரமன்குலம்

மங்குல் நிறம்படைத்த மாமாயன் நேர்ந்தாலும்
விசையன் கொடுங்கணைக்கு வென்கொடுப்ப தல்லாமல்
விசையன் ஒருபோரில் வென்கொடுத்த துண்டோதான்
அஞ்சாமல் நின்று அரனோடமர் புரிந்த
மஞ்சாரு மெய்யானை மாய்க்கவல்லன் நீதானோ
வெல்லவல்லார் தன்னாண்மை மேதினியில் சொல்வ
தில்லை
சொல்லவல்லார் தன்பகையைச் சோராது வெல்வதில்லை
பேய்போலத் தன்னைப் பெருமை நிதம்பகர்ந்து
நாய்போல் குரைத்ததனால் நல்லவீர முண்டாமோ
தேங்காயும் கல்லுமெனச் சேர்ந்த செருக்களத்தில்

பாங்காகச் சென்றுயுத்தம் பண்ணிவிறல் செய்யாமல்
எப்போதும் வாய்வீண் இயம்பியதில் காரியமென்
இப்போது காண்போம் இருவர் விறலுமென்றான்.

வின்முனி உரைகேட்டு கன்னன் விரைதல்

வின்முனிவன் சொல்ல வெஞ்சமுடன் தேர்நடத்திக்
கன்னன் சினந்தடர்ந்து காண்டீப னோடதிர்ந்து
வில்லிழந்து தேரிழந்து மீண்டுமீண் டிவ்வாறாய்
அல்லலுடன் நாலுதரம் ஆறுதரம் வெந்கொடுத்தான்
வென்கொடுத்து வெந்கொடுத்து மீண்டுடையும்
நேரமெல்லாம்
மன்கணக்கி லாதவர்கள் மடிந்திறந்தார் அம்மானை
பாத்தன் கொடுங்கணையால் பலகோடி மன்னவர்கள்

கூத்தன்[1] கரத்தில் குடிபுக்கா ரம்மானை.

1 கூற்றன் - யமன்

ஆயிரம் நாவு அமைந்தாலும் அர்ச்சுனன்போர்ப்
பாயிரம் தன்னைப் பகர்ந்து முடிவதுண்டோ

அசுவத்தாமன் போர்

அந்த முனைதனிலே அந்தணன்சேய் வில்வளைத்து
குந்தி போசன்தன் குமரர் இருவர்களை
பாசத்தால் மாய்த்துப் படியிற் கிடத்திவிட்டான்
வேசத்தே ஆதவனும் மேலைக்கடற் புகுந்தான்.
மேகுந் திசைபுவிகள் விண்ணேழ் நடுங்குகினும்

இரவு வரவும் போர் செய்யத் துரியோதனன் முற்படல்

போரஞ் சிலாத புயங்கக் கொடிவேந்தன்
கரவொத்த வஞ்சனைபோர்க் காணுமிருள் பொங்குகின்ற
இரவும் பொருவோம் எனப்போர் முகத்தடர்ந்தார்
பகலிர வழைத்தான் பாகனெனு மாமாயன்
அகலிரவை யான்பகல தாக்குவேன் என்றுரைத்தான்
அவனிதிசை கடலும் ஆகாசக் கூடமுறப்
புவனெங்க ளெங்கும் பொருந்தி ஒளிபிறங்க
அற்புதப் பந்தம் அனந்தம்தீ வெட்டிகளும்
"... ... ..."
எங்கெங்கும் பொங்கமுடன் ஏந்தி எடுத்திடவே
அங்கங்கு உதிட்டிரனும் அவ்வாறு தீபமிட்டான்

விசையன் கன்னன் போல, மற்றவர்களும் போரிடல்

கருதி விசையனுடன் கன்னன்செரு மூண்டான்
கிருதன் உயர்முரச கேதனன்மேல் போர்மூண்டா
சுருதிமுனி திட்டத் தூய்மனுமே போர்மூண்டார்
அரித்துசன் மீதே அரவத்துசன் போர்மூண்டான்
சல்லியனும் வல்ல சதானிகனும் போர்மூண்டார்.
வல்ல கடோற்கயன்மேல் மாத்தாமன் போர்மூண்டான்
பல்லியங்கள் தான்முழங்கப் பார்த்திபரும் பார்த்திபரும்
வல்லியங்கள் போலமிக வன்போர் புரிந்துநின்றார்
நின்றந்தை[1] மாய்ந்தான் இஙளிகொடி தேர்வில்
என்றந்தை பின்னோன் எனக்களித்த தென்றிலங்க
விற்சரங்கள் மேன்மேல் விடுத்திரவி சேயோனும்
பொற்சிகரத் தேர்பாகும் பூரிவில்லும் தானறுந்தான்.

---

1 சூரியன்

மேனி யடங்க விரிந்தொழுகச் செந்நீர்கள்
மான விசையன் வடிக்கணையினால் பிளந்தான்.
மற்றுமற்றுங் கர்ணன் வரவரவே தன்கணையால்
முற்றுமுற்றும் தேர்வில் முறித்தே துரத்திவிட்டான்.
வில்விசையன் ஒத்த விறற்கிருத பன்மனையே
செல்[1]விரவு கையான் திறல்தருமன் வில்வளைத்துப்
பாகுபரி தேர்கொடிவில் பற்பமென நீறாக்கி
வாகுமுகம் வாய்மார் பகம்சோரி கள்வடிய
நிருதன் தனையே நெடியோன் பிளந்ததுபோல்
தருமன், கிருதன் தனையே மிகப்பிளந்து
போர்முகத்தில் நாடாமல் போகத் துரத்திவிட்டான்.
கார்முகத்தில் வல்லதொரு கன்னனும் போர்மூண்டு
பார்த்தன் கணையால் பரிதேர் விற்பாகனையும்
தோத்தழிந்து தோத்தழிந்து தொய்வாகி னுயோங்கும்
ஓர்வேல் சுழற்றி உருத்தெறிந்தான் அவ்வேலை
கூர்வாளி யாலே குறைத்துவிட்டான் தூளாக

கன்னன் புறங்கொடுத்தமை

தட்டுக்கெட்டாகம் தடுமாறிக் கர்ணன் வெம்போர்
விட்டுப் புறங்கொடுத்தான் வில்விசையர்க் கார்நிகரே
சல்லியன் தேர்வில் தகர்த்துக் கொடியறுத்து
ஒல்லைப்[2] பொழுதில் உடலெல்லாம் புண்ணாக்கி
சீறிச் சனாதிகன்தான் செய்தபோர் காற்றாமல்
மாறிப் புறங்கொடுத்தான் வல்லியமாம் சல்லியனும்

அசுவத்தாமனும் கடோற்கசனும்

பரித்தா மனும்திண் பவனன் மகன்மகனும்
சரத்தாலற் றிசைக்கடல்வான் தானெங்கு மேமறைந்தார்
இந்திர செயித்தும் இலக்குமனும் போலாகப்
பந்த முடனே பகழிமழை வீசிநின்றார்
நிருதன் கணையை நிமிசத்தில் தூளாக்கி
விருதின் கொடிபரிதேர் விற்கணையும் நீறுசெய்தான்.
தேர்வில் பொடியத் திகைத்தே கடோற்கயனும்
கூர்வச்சிர வேலைக் கொக்கரித்தே தானெறிந்தான்.

---

1 மேகம்

1 விரைவாக

அசுவத்தாமன் வீழ்ச்சி

மீறிஎறிந்த கதிர்வேல் அசுபத் தாமனையே
கூறுபட மார்பம் குறித்தும் அளந்ததுவே
அயில்மார் பறப்பிளக்க அச்சுபத்தா மன்தேரில்
செயலற்று வீழ்ந்தான்போர்ச் செவ்வே ளனையானே
சேனா பதியாம் சிலைமுனியைத் தீப்பிறந்தோன்
மானோடப் பின்தொடர்ந்த வல்லியம்[1]போல் தானஞ்சி
மாறாம லோடஇவன் வன்மை வரக்கணையால்
வீறாய்த் துரத்த விரட்டலுற்றா னம்மானை.
மற்று மறன்புதல்வன் வன்போருக் காற்றாமல்
முற்றுமன்னன் சேனை முறிந்துமுது கிட்டதுபோல்

ஆற்றாமல் வெந்கொண் டகன்றோ ரடங்கலுமே
காற்றேறு பட்டசரு காகவே மன்னனிடம்
சேர்ந்தரசைச் சூழ்ந்தார் திகைத்தரசர் நிற்பளவில்,
பாய்ந்தனந்தம் நூறு பதினாயிர அரக்கர்
ஆழிபோற் சூழ வல்லாயுத அரக்கன்
தோழன்சவு பாலர்க்கும் துப்பான கர்ண னுக்கும்
வந்தரசர் கோமான் மலர்த்தாள் தனைவணங்கி
இந்தச்சணம் பஞ்சவர் உயிரையீறு செய்வேன்
உன்கவிகைக் கீழே உலகெல்லாம் வைப்பனென்று
வன்சபதம் ஓர்கோடி வாயார வேபிதற்றிப்

பூமி நடுங்கப் பொருவில்லாத் தேர்நடத்தி
வீமன்வயத் தேரின்எதிர் விட்டான்காண் அம்மானை.
புயமுற்று மேன்மேல் புளகித்திட அரிகள்[2]
பயமுற் றிடநூற் றுவர்கள் பயந்தீர
நெஞ்சழல் மூள நெருக்கிநாக் குச்சுழலக்
கிஞ்சுகம் போன்ற கிளர்கண் நெருப்பொழுக.
இரண்டு புறமும் எயிற்றுப் பிறைதிகழ
முரண்சிகர மாகாசம் முட்டவரும் ராட்சதனைக்
கார்க்கடல் போன்ற கணமாம் நிசாசரர்கள்[3]
பார்க்கண் அடங்கப் பரந்தெழுந்த தம்மானை.

---

1 புலி
2 சிங்கங்கள்
3 இராட்சதர்கள்

மேகப் பெரும்படலம் மின்னியிடித் தார்ப்பதுபோல்
ஏகப் பிரளயமாம் ராட்சதர்கள் ஆக்கரிக்க
அண்டங்கள் முட்ட அடர்ந்த கருங்கிரிகள்
கொண்டெங்கும் பூமி குறித்தே நிறைப்பஉயிர்
பெற்ற மறமூண்டு பிறங்குதல்போல் வில்வளைத்துச்
சற்றுந் தருகார் சரமாரி வீசினரே
வேங்கை இனத்தொடர வென்கொன்ற மானினம்போல்
நாங்கு திசையும் நரலைப் படைமுறிந்தார்.
தன்சேனை யாவும் தரியாமல் வெந்கொடுக்க

தன்சேனை தளர்வு கண்டு வீமன் அம்புவிடல்

முன்சீறி வீமன் முகில்போல் கணைசொரிந்து
அங்கவர்கள் பங்கமுற ஆவி பதைபதைக்கச்
சிங்கங்கள் போல்முடுகிச் சீறிச் செருப்புரிய
அரக்கர்க் கிறைவன் அதிர்ந்தடர்ந்து கொக்கரித்து
சரக்கொண்டல் போற்சொரிந்து தக்கதேர் சாரதிமா
சிங்கக் கொடிமுதலாய்ச் செந்தூள் படத்துணித்தான்.
புங்கக் கதையுடனே பூமியின்மேல் தான்பாய்ந்து
ஆகாசக் கூடம் அதிர்ந்துபெருஞ் சூறைகொள்ள
வேகாள மாய்ச்சுழற்றி வீசினான் தேர்மீதில்
இடியொத் தடித்திடத்தே ரெல்லாம் விபூதிநிகர்
பொடிபட் டிடத்திகைத்தே பூமியிலே தான்பாய்ந்து
கன்மாரி ஒப்பாய்க் கருமலையை மேன்மேலும்
முன்மா ருதிமேல் முனியாம லேசொரிந்தான்

பகைவர் படையை வீமன் தடுத்து நிற்றல்

வீசுங் கிரியடங்க வீமசேனன் கதையால்
தேச மதிக்கத் திறத்தே தடுத்துநின்றான்.
மாறாது அரக்கன் மலைசொரிவ தேவேலை
நீறாக வீமன் இசைந்தடிப்ப தேவேலை
ஒருழி இவ்வாறு உடன்றாலும் ஒன்றையொன்று
சீராடிப் போரில் செயிக்கரிதென் றும்பர்சொல
வின்முனிவன் சேய்மாள்க வில்லாலே தான்பிளந்த

கடோற்கசன் எதிர்த்தல்

கன்மருவு மொய்ம்பான் கடோர்க்கயன் வந்தெதிர்த்தான்

வீமன்மேல் தான்பொருதல் விட்டுக் கடோற்கயன்மேல்
பூமதிக்க வெம்போர் புரியலுற்றான் அம்மானை.
வரைகள் எறிந்தும்விறல் வாளெறிந்தும் வேலெறிந்தும்
பரியக் கதைமுதலாய்ப் பலபடைகள் தானெறிந்தும்
இடியொத் ததிர்ந்தே எதிர்த்தும் எதிர்நகைத்தும்
முடுகிக் கடுகிமிக முட்டுயுத்தம் செய்துநின்றும்
ஈரே ழுலகுகிரி எண்பால கர்நடுங்க
பாரோழ் சுமக்கும்விடப் பாந்தட் படம்[1]நடுங்க
மீமுகடு தண்டம் மிகவே உயர்ந்தெழும்ப
பூமி நெளிக்கப் பொருப்[2]பொற் றுறக்குதிக்கக்

கையாரப் புடைத்துமிரு காலாலெழுந் துதைத்தும்
மெய்யா லடர்த்துமிகு வெம்புயத்தா லேயடர்த்தும்
மார்பி லுதைத்துமிகு மல்லாடித் தான்சேர்ந்தும்
பார்பதிய வீழ்ந்தும் படிமேற் கிடந்துருண்டும்
மீண்டும் எழுந்துகரு வெற்பிரண்டாய்ப் போர்புரிந்தும்
தாண்டியே மேன்மேல் சருவியே போர்புரிந்தும்
சிறுத்தும் பெருத்தும்மல் சேர்ந்துபுவி மேல்விழுந்து
கறுத்து இருவருமாய்க் கக்கிநுரை உக்கிரமாய்
வேர்வை ஒழுக விழிகள் நெருப்பொழுகக்
கூர்வை வேல்வீமன் குமரன் சமர்மீறித்

தத்தியே பாய்ந்து தடமார்பி னிலுதைத்து
மொத்திப் புயமும் முறிய விலாவொடித்துத்
தந்தம் உதிரத் தடவாய் தனில்புடைத்து
உந்திக் கபோலம்[3] உதடறவே தான்புடைத்துச்
சென்னியும் மூளை சிதறவே தான்புடைத்துப்
பின்னமுறச் சிங்கப் பிறைக்கோ டறப்பிடுங்கிக்
காதைப் பிடுங்கிக் கழுத்தைஉறத் திருகி
மோது தடக்கரத்தை மோதியே பிச்செறிந்து
இடையை முறித்து இதலை[4] தனைப்பிளந்து
குடலைப் பிடுங்கிக் கொழுப்பீரலைப் பிடுங்கித்

தொடையை முறித்துத் தொடர்க்கால் அறநொறுக்கி

---

1 பாம்பின் படம்
2 மலை
3 தலை
4 உந்தி

உடலில் அவயவங்கள் உள்ளதையெல் லாம்நொறுக்கிக்
கூறாக்கிக் கையால் கொதிப்பேறத் தான்பிசைந்து
சேறாக்கி சேற்றுழவு செய்தான்காண் அம்மானை.
கூழாக்கி வல்லரக்கன் கோலமுற்ற மேனியெல்லாம்
பாழாக்கிக் கொக்கரித்தான் பன்னா ளுலகறிய

அலவாயுதன் அழிந்தான்

அலவா யுதனாம் அரக்கனையும் சேனையையும்
சிலவாய் நிமிஷமதில் சேறுசெய்தான் அம்மானை.
எண்ணி லரக்கர்க்கு இறையோடு ராக்கதரை
மண்ணிலே சேறாக்கி வாய்விட்டான் வானிடிபோல்

கடோற்கசனைத் தேவர் பாராட்டல்

கொக்கரித்த வீமன் குமரன்மேல் விண்ணோர்கள்
தக்க மலர்மாரி தான்சொரிந்தார் அம்மானை.
அரக்கர்கள் பட்ட அவதிதனைக் கண்டாசர்
செருக்கள மெங்கும் திகைத்தே தெரிந்தனரே
மன்னர்மன்னன் சேனையெல்லாம் வன்குரங்கின் கைமாலை
தன்னை நிகராகத் தாவிக் கசக்கலுற்றான்.
சபதம் பகர்ந்து தரியார் பெருஞ்சேனை
உபய சமுத்திரம்போல் ஒத்திவனை மூடினரே
வன்போர் புரிந்து மடங்காத வீரியனை
முன்பாய்நெருக்கி முனைந்தமன்னர் மெய்கலங்க

ஊழிப் பெருங்காற்றாய் ஓர்பால் உருத்தடித்தான்
ஆழிப் பெருக்காய் அடர்ந்தழித்தான் ஆங்கொருபால்
மின்னல் குமுறிடியாய் மேகபடத் திரளாய்
பன்னெத் திசையும் பரவிப் பொருதழித்தான்
பருப்பதக்[1] கூட்டம் பரவியபோல் எத்திசையும்
நெருக்கி நெருக்கி நெருக்கி அறைக்கலுற்றான்
வடவைப் பெருந்தழலாய் மாறாம லெத்திசையும்,
அடலைப்[2] படவே அடர்ந்தே எரிக்கலுற்றான்

---

1 மலை
2 போர்க்களம்

மாய்கைக் கடலாக மன்னுகடோற் கசனும்
சாய்கையற மாற்றார் தளமழியத் தாக்குதலால்

குழையாம் இருதலைத்தீக் கொள்ளியிடை எறும்பாய்ப்
பிழையாகச் சேனை பெருக மடிந்தமையால்
மாய்ந்தோர் கள்சோரியினால் வையகமும் வாரிகளும்
தோய்ந்தே பெருகிச் சுரர்வாரி யுங்கலக்கும்
ஆனா லுவமை அளவாரறிந் துரைப்பார்
சேனா சமுத்திரங்கள் சேரநிலை கெட்டமையால்
செங்கண் சிவந்து சிகிக்கொடியோன் கன்னனுடன்

கன்னன் கூற்று

மங்குல் வாகன்கொடுத்த வல்வேலா லிங்கிவனைக்
கொல்லு நம்சேனை குறையும் பிழைக்கவென்றால்
அல்லரக்கன் தன்னையொரு அம்பினால் கொன்றிடலாம்

நாகக் கணைக்கும் நரன்பிழைத்தா னாமாகில்
வாகுற்ற வேலால் மகவான்சுதனை வென்று
வையகமெ லாமுன் மணிக்குடையின் நீழலிலே
ஐய மிலாமல் அமர்த்துவேன் இங்கிவன்மேல்
பழுதுற்ற வேலைப்பதறி விட்டாற் போய்விடுமே
முழுவெற்றி வேலிழந்தால் மோசங்காண் என்றுரைத்தான்
கன்னன் இவைசொல்லக் கனன்றிருகண் தீச்சொரிய

துரியோதனன் சினந்து கூறுதல்

மன்னர்மன்னன் கோபமுடன் வள்ளலைப்பார்த் தேது
சொல்வான்

எம்படையும் நீனாலும் இன்றம ரிலேபிழைக்க
வம்பரக்கன் தன்னையின்று வல்வேலால் கொல்வாயேல்

பார்த்தனையும் கொல்லுவது பாரமல்ல தீரமுடன்
கூற்றனையாய் வீமன் குமரனையே கொல்லுகென்றான்
முட்டாக மன்னன் முடிவாகச் சொன்னமையால்

கடோற்கசன் இறப்பு

தட்டாமற் சூரன் தனையன் சினமாகக்
காலசூ லம்போற் கதிர்வேல் விசைத்தெறிந்தான்
ஆலகா லம்போல் அரக்கன்மணி மார்புருவி
இந்திரன் பாலெய்த எறும்சேர் கடோற்கயனும்

கந்தரம்போல் வீழ்ந்து களத்திறந்தான் அம்மானை.

ஐவர் சோகம்

அரக்கன் மடிந்தளவில் ஐவர்சுழல் அரக்காய்
இரக்க மிகுந்தயர்ந்து ஏமாந்து சோபமுற்றார்

தவப்பேறாய்ப் பெற்றிகல்சேர் சந்ததிகள் தானிழந்து
அவப்பேறாய்ப் பூமி அரசாள்வ தென்னெனவே
புத்திர சோபம் பொறுக்கரிதாய்ப் பொங்கியழல்
பத்தியிதை யத்தெரிப்பப் பாரிலே வீழ்ந்தழுதார்
தேறாமல் ஐவர் செகந்தில் அயர்ந்தளவில்

கண்ணன் தெளிவுரை

மாறாத் துயர்மாற மாதவனும் ஏதுரைப்பான்
இந்தவேல் சக்கிரி யிரவிதரும் சேய்க்கு
தந்தவேல் யாரிடத்தும் தானெறிந்தாற் கொன்றுவிடும்
நாகக் கணைக்கு நரனுய்ந்தால் மீண்டெறிய
வாகுற் றரிச்சுனனை மாய்ப்பதற்காய் வைத்திருத்தான்

இன்றிவன் செய்த இகலினால் மனமொழியால்
கன்றியே தானெறிந்து காளைதனைக் கொன்றுவிட்டான்
கன்னனும் மன்னவனும் காசினியெல் லாமுமக்கே
தன்மையாய் இன்றையிலே தந்துவிட்டான் என்றுரைத்தான்

ஐவர் தெளிவு பெறல்

தாமன் உரைகேட்டுத் தங்கள் துயர்தீர்ந்து
வீமன் தருமன் விறல்நகுலன் சகாதேவன்
தனஞ்செயன் தன்னைத் தழுவியே தானழுது
மனஞ் சலிப்பெல்லாம் அகற்றி மகிழ்புரிந்தார்
பண்டிரா வண்ணன் படுகளம்போ லாவகத்தில்
மண்டலா தீபன் வசனத்தா லாசாரி

துங்க விராடன் துருபதன்மேல் போர்மூண்டு
அங்கவர்கள் விட்டமுனை அம்புமழை மாரியினால்
வில்லிழந்து தேரிழந்து மெய்யசந்து கையசந்து
மீண்டு மலைத்தேறி வெம்போர் தொடங்குமுன்னே
நீண்ட வரிவில்லும் நிலையழிந்து பாப்பானும்
சினந்து இருவரையும் செங்கதிரோன் தோற்றுமுனம்

புனைந்த முடிசிரமும் பூமிதனில் வீழ்த்துவிப்பேன்
என்று சபதம் இயம்பி விடிவளவும்
கன்றியே விற்போர் கனமாகச் செய்தலுத்துத்
தாங்காச் சினமாய்த் தடங்கண் மிகச்சிவந்து
பாங்காய் வரத்தில்வந்த பாண மிரண்டாலே

துருபதனும் விராடனும் அழிதல்

வேந்தன் துருபதனை வெய்ய விராடனையும்
போந்த சிரசறுத்துப் பூமியிலே போட்டுவிட்டான்.
மன்னன் துருபதனை வள்ளல் விராடனையும்
சென்னி தெறித்துருளச் செங்களத்தில் போட்டமையால்
வன்னிக் குலத்தின் மறையோன் தனைநெருங்கி
வன்னி தனிற்பிறந்தோன் வண்டுறுக்கிக் கண்சிவந்து
தந்தையை என்முன் தறித்தா யுனைநாளை
மைந்தன் முன்கொல்வேன் எனவஞ்சினம் பகர்ந்தான்
தன்மாதுலனைத்[1] தாங்கொன்ற மாமுனிமேல்

விசையன் போரிடல்

வின்மால் விசையன் வெகுண்டுவரி வில்வளைத்துப்
பகழி வருடம் பரப்பிப் பரித்தலையும்
திகிரிஒரு நான்கும் தேர்ச்சாரதி தலையும்
வேதக் கொடியும் வரிவில்தேர் அச்சுருளும்
போதத் துகள்படுத்திப் பூசுரன்தன் அங்கமெல்லாம்
சரபஞ் சரமாகச் சல்லடைக்கண் போற்றுளைத்தான்
பொரவஞ்சி ஆசான் புறங்கொண்டான் அம்மானை.
அமரர் அடங்க அசுரர்குல மடங்கச்
சமர்கொண்ட வில்லோடு தானெதிர்க்க வல்லருண்டோ
பரியும் கரிதேர் பதாதிப் பரவையுடன்

உரக துவசன் உலகளந்தான் தம்பியுடன்
வன்போர் புரிந்தவன்தன் வாளிப் பெருமழையால்
தன்பேரும் தேரும் தனுமுதல்யா வுமிழந்து
கூடும் படையிழந்து கொற்றங்களும் இழந்து
வாடி அரிக்குடைந்த வாரணம்போல் ஓடலுற்றான்.
சாற்றகிபோ ருக்குடைந்த சர்ப்பக் கொடியோன்போல்

---

1 தாய்மாமன்

துரியோதனன் படை பின்வாங்கல்

தோற்றும் வன்சேனையெல்லாம் துய்யதரு மன்படைக்கு
அங்கங்கு நின்ற அரசருக்கு மாற்றாமல்
பங்கங்கள் பட்டுடைந்து பாசறைபுக் கேயடைந்தார்
முன்னாளின் மாயன் முரணாழி யுள்ளடக்கித் 1440

தன்னாக மெங்கும் தளர்வெல்லாம் தான்தீர
ஒற்றையுருள் பொற்றேரான் ஓரேழ் பசும்பரியான்
கற்றைக் சிரணக் கதிராயிரம் பரப்பி

காலை மலர்தல்

எங்குங் கவிஞர் இருட்கலிகள் தான்மாற
மங்கைய பூபன் வழங்குஞ் செழுங்கொடையால்
பாவலர்கள் வாழ்வுபெறப் பண்பாய் விடிவதுபோல்
பூவுலகம் தான்விடியப் பொற்பருதி தோற்றியதே
பாவைந்து வாய்கமழும் பஞ்சவர்க்கும் நூற்றுவர்க்கும்
மூவைந்தும் நாட்போர் மொழிகுவோம் அம்மானை
தேன்கமழும் ராசாக்கள் சேவடியைப் போற்றிசெய்து 1450

நான்மூன்றுடன் மூன்றாம் நாட்போர் எழுதுவனே

வீரையன் துணை ஸ்ரீராமஜெயம்

பதினைந்தாம் நாட் போர்ச் சருக்கம்

இருபடைகளும் சினந்து போர்க்களம் அடைகின்றன. விசயனால் வாலவீமன் சோமதத்தன் ஆகியோர் இறந்தனர். சிலர் இருவர் இருவராய்ப் போர் செய்கின்றனர், தருமன் துரோணருக்குத் தோற்கின்றான். மரீசி முதலிய முனிவர்கள் போந்து துரோணருக்கு உபதேசம் செய்து மீள்கின்-றனர். அதனால் துரோணர் சாந்தநிலை எய்துகின்றார். கண்ணன், துரோணர் இறப்பதற்கான உபாயம் கூறினான். பொய் கூறத் தருமன் மறுக்கிறான். எதுக் காட்டிக் கண்ணன் வற்புறுத்துகிறான். தருமன், துரோணரிடம் 'அசுவத்தாமா என்னும் யானைக்கு, வீமன் சிங்கமானான்' என்று கூற, துரோணர் படைக்கலம் விடுத்து நிற்கின்றார். திட்டத் துய்மன் அம்பால் துரோணர் இறக்கின்றார். அசுவத்தாமன் அதனை அறிந்து வருகின்றான். துரியோதனன் தேற்ற அசுவத்தாமன் தேறி, 'நாளை யாரையும் வெல்வேன்' என்று சூளுரைக்கின்றான். கண்ணன், படைக்கலம் இன்று இருக்குமாறு பணிக்க, வீமனை ஒழிந்தோர் அவ்வாறே இருக்கின்றனர். அசுவத்தாமாவின் அம்பு வீமனிடம் செல்கிறது. அவற்றை வெவ்வேறு அம்புகளால் வீமன் மாற்றுகிறான். கண்ணன் வீமனின் வில்லையும் அம்பையும் மாற்ற நாராயணவாளி நாணமுற்றது. அசுவத்தாமன் பாசுபதம் விட நினைக்க வியாசமுனி அங்கு வருகிறார்; அறிவுரை பகர்கிறார். சூரியன் மறைகிறான். தருமன், துரியோதனன் ஆகியோர் தத்தம் பாசறை எய்துகின்றனர். துரியோதனன் சஞ்சயனை அழைத்துத் துரோணர் இறப்பையும், கன்னன் சேனாபதி ஆதலையும் தந்தைக்கு உரைத்து வர ஏவுகிறான். அவன் கூறி மீண்ட அளவில் கதிரவன் உதயமானான்.

நன்றாக குரு வாழ்க

சித்த சித்தோ டீசனென்று செப்புகின்ற மூவகைத்
தத்து வத்தின் முடிவுகண்ட சதுர் மறைப் புரோகிதன்
கொத்த விழ்ந்த செயலை மன்னு கூர்நாட னெஞ்சிலே
வைத்த முத்தி நாதனன்றி வானநாடன் முதல்வனார்.

ஸ்ரீராமஜெயம் வீரய்யன் தருமராசாக்கள் துணை

பாண்டவர் அணி வகுத்தல்

கோவிந்தன் பஞ்சவரும் கொற்றமுள்ள சேனைகளும்
மூவைந்து நாட்போர்க்கு முந்நீரின் சேனையுடன்
ஆதவனைத் தான்தொழுது ஆகவந்திலே[1] யடைந்து
மாதவனும் நாலணியாய் வைத்தனர்காண் அம்மானை.
வீமன் ஒருபாலும் வில்விசையன் ஓர்பாலும்
சோமதத்தன் ஓர்பால் துரைநகுலன் ஓர்பாலும்
நாலு கடல்போல் நாலணியும் மன்னவரும்
கோலிப் பரந்துநிற்பக் கொற்றவன்தன் சேனையுடன்

துரியோதனன் பக்கத்தார் அணிவகுப்பு

தேசிகன்சேய் கன்னன் திறல்சல் லியன்சகுனி
பூசாக் கிருபன்முதல் பூபாலர் பற்பலரும்
பாசை[2] பலபகர்ந்து பஞ்சவர்கள் தன்படைமேல்
பூசல் முனைந்து பொருதலுற்றார் அம்மானை.

படைகள் மோதல்

கொய்யுளையும்[3] கொய்யுளையும் குஞ்சரமும் குஞ்சரமும்
செய்யவயத் தேர்களுடன் தேர்எதிர்ந்த தம்மானை.
சக்கரமும் சக்கரமும் தானே எதிர்ந்ததுபோல்
வாகினியும் வாகினியும் வன்போர் புரிந்தனரே
வேலெறிந்தும் வாளெறிந்தும் வெய்ய குணி[4]லெறிந்தும்
கோலெறிந்தும் தண்டெறிந்தும் கூர்தேர் மரமெறிந்தும்
நேமி[5] பரசு[6] நெடுஞ்சூலம் தானெறிந்தும்

---

1 — போர்
2 + வீர மொழிகள்
3 X குதிரை
4 வீசும் தடி
5 சக்கரம்
6 கோடரி

ஏமமுள்ள பல்லா யுதங்கள் எடுத்தெறிந்தும்
அம்பு மயமாக ஆகாசந் தான்மறைத்து
இம்பர் நடுங்க இருதளமும் போர்மூண்டார்.

விசையன் போரிடல்

பூண்டபரி தேர்கரிமாப் பொங்குநதிச் சேனையெல்லாம்
கண்ட கண்டமாகக் களத்தில் தறிந்துவிழ
கொண்டலென வாளி கொதித்தே சொரிந்துநின்றான்
மாலூர்ந்த தேர்மேல் வயவிசையன் வில்வளைத்துக்
காலூன்றி வீசுமழைக் காலாய்க் கணைசொரிந்து
மகுட மொடுஞ்சிரமும் வன்படையோ டுங்கரமும்
நகுவிற் பணிவுடனே நன்மார்பும் திண்புயமும்
தறியத் தறியத் தறித்தே அவயமும்
முறிய முறிய முறித்தே மிகமுறுக்கி
சேறாக்கி மூளைகளால் செய்பிணத்தால் வெற்பாக்கி
ஆறாக்கிச் செந்நீரால் ஆவியம னுக்களித்தான்.
பாற்றன் கணையால் பலகோடி பேறரிந்து
கூற்றன் பதியில் குடிபுக்கா ரம்மானை.
பொருவில் லுயர்முப் புரதகனன் போலாகப்
பருவிற் கணையால் பரவிஎதிர்த்து நின்றான்.
சிங்கக் கொடியானும் செவ்வேளைப் போலாக
அங்கைப் படையால் அழித்துநின்றான் சேனைகளை
நாகக் கொடியான் நரலைப் பெரும்படைகள்
சோகித் திடமால் துணைவன் படைபொருதான்

மற்றையோர் போர் செய்தல்

நகுலனும் நள்ளார் நடுங்கவே போர்மூண்டான்
இகலில் இளையோனும் ஏமனைப்போல் போர்மூண்டான்
சேனா பதியாம் திறல்துருப தன்குமரன்
நானாலு திக்கும் நடுங்கப் பொருதழித்தான்
சென்னியும் மன்னர் திகைக்கவே போர்மூண்டான்
வன்னி எனச்செழியன் மற்றொருபால் போர்மூண்டான்
முரசத் துவசன் முதிர்சேனை மன்னரெல்லாம்
அரவத்து வசன்படையை அஞ்சப் பொருதழித்தான்.
பஞ்சவர்கள் சேனை படர்ந்துமே லாடிவர

துரோணர் போகுதல்

அஞ்சலஞ்ச லென்றுசிலை ஆசாரி தான்சினந்து
தேர்முடுக்கி வில்வளைத்துச் சொல்லொத்தே பல்கணைகள்
கார்வருஷம் போற்சொரிந்து காகதித் தேர்காலாட்கள்

பாதாதி கேசம் பலதுண் டிடத்துணித்துக்
கோதாரிச் சேனை குலைகுலையத் தானழித்தான்
அப்பூமி பிறவும் அருண நிறமாக்கித்

நகுல சகாதேவன் பின்னிடல்

துப்பாய நகுலன் துசமறுத்து வில்லறுத்து
சாய விரட்டிச் சகாதேவனைத் துரத்தி
மாயன் தனக்கிளைய வல்லாளன் வில்லழித்துச்
சிகண்டி சிலதேர் சேனாபதிதேர் வில்லழித்து
அகங்களைப் புண்ணாக்கி அஞ்சவே தான்துரத்தி
வீமன் துசம்தேரும் வில்லழித்துத் தான்விரட்டி
ஏமமுள்ள மன்னர் எவர்களையும் தான்துரத்தி

ஆலகா லம்போல அடர்ந்தவட வையைப்போல்
கால காலன்போல் கடுங்கணைகள் கோபமுடன்
கோதண்ட ராச குருவிட்டே போர்தொடங்கி
வேதண்டத் தேரில்வரும் வில்விசையன் மெய்திகைத்துக்
காணா தவன்போலக் கார்முகத்தின் தேசிகன்மேல்
நாணாது செல்ல நடுங்கிநரன் நின்றளவில்

துரோணர் போர்

வேதியனோ மன்னவர்கள் வெந்நிட் டிடப்பொருவான்
ஆதி வருணன்மகன் அஞ்சப் பொருவனென்ன
குந்திபோ சன்சினந்து கோடிமன்னர் தற்சூழ
அந்தணனும் அஞ்ச அடர்ந்துவரி வில்வளைத்தான்

அக்கினி வேந்தும் அடரும் வடவையைப்போல்
முக்கிய மாக முகில்போற் கணைசொரிந்து
ஏறாது தாழாது இருவோரும் ஒத்தசமர்
வீறாக விண்ணோரும் மெய்திகைத்தார் அம்மானை.

நகுலன் சல்லியன் போர்

மாநகுலன் தன்னுரிய மாமனெனும் சல்லியன்மேல்
பூநடுங்கத் தேர்நடத்திப் பொங்கழல்போர் போர்புரிந்தான்

அசுவத்தாமன் அருச்சுனன் என்றிவ்வாறு பலரும் போரிடல்

அச்சுவத் தாமன்மேல் அருச்சுனனும் வில்வளைத்து
உச்சிதமாய் வெம்போர் உடற்றிநின்றான் அம்மானை.
தென்னன் சகுனியுடன் சென்றுவரி வில்வளைத்தான்
கன்னன்மேல் வல்ல கதாயுதனும் போர்மூண்டான்

மாயன் இளவலுடன் மாளுவரும் போர்மூண்டான்
தீயிற் பிறந்தான் சிலைக்கிருப னுப்பொருதான்
கிருதனுடன் வளவன் கிட்டியே போர்மூண்டான்
சருவில்துச் சாதனனும் தான்சிகண்டி யும்பொருதார்
உரமுற்ற மன்னர் ஒருவர்க் கொருவர்களாய்த்
தரமுற்று விற்போர்கள் தான்புரிந்தா ரம்மானை.
ஒரொருத்தர் செய்த உயுத்தம் விரித்துரைக்கில்
பாரமுடன் ஆயிரநாள் பற்றாதே அம்மானை.
சரமும் சரமும் சமர்மூண் டழல்சொரியக்
கரமும் கரமும் கடுங்கோல் மழைசொரிய

ஒப்பிலா வீரர் ஒருவர்க் கொருவர்களாய்
மெப்பதாய் வன்போர் மிகப்பொருதார் அம்மானை.
அளவற்ற மொய்ம்பாளர் ஆண்மைப்போர் செய்தமையால்
தளர்வுற் றருகா தரிப்பற் றணிநெகிழ்ந்தார்
வந்த வழிமடங்கி வாகினிவெந் கொண்டமையால்

தன்படை பின்வாங்க துரோணர் கொதித்தெழல்

அந்தணனும் செந்தழல்போல் ஆலகா லம்போலத்
தேயுப் பெருங்கணையும் தென்திசையோன் தன்கணையும்
வாயுக் கணையும் வருணன் கொடுங்கணையும்
மதியின் கணையும் மகவான் கணைமுதலாய்க்
கதிரின் கணையும் கடுகடுத்தே விட்டமையால்

தருமன் படை பின்னடைதல்

தருமன் பரவைத் தளமெல்லாம் தட்டழிந்து
வெருவுண்டு மற்றோரும் வெந்நிட்டா ரம்மானை.
குருவும் குருகுலத்துக் கொற்றவனும் சேனைகளும்
மருவுஞ் சமரில்வய வாகையுற்று நின்றளவில்

அகத்தியர் மரீசி முதலியோர் துரோணருக்கு அறிவுரை

மகத்திய னோடு மரீசி முதலாக

அகத்தியனும் மற்றவரும் வருவத னைக்கண்டு
செகத்தினில் கேள்விச் சிலைமுனியும் சென்றேத்தி
முகத்தில் வணங்க மொழிந்தார் முனிவரர்கள்
மறைகெழு நூல்தேசு[1] மாசில் தவஞான
முறையும் உணர்வலது முனிவர்க் குறுதியுண்டோ

பல்கலை வல்லாய் பகைத்துப் போரூடாடல்
வல்வில் லரசர் மரபியற்கை அன்றேதான்
தொடுகணை வில்வாள் துரகம் கரிதேரும்
விடுக சினம்வேண்டாம் விண்போதவே வேண்டும்
கடுக இதயம் கலங்கா துணர்வினொன்று
படும்என்று உரித்தாய்ப் பகர்ந்தார்கள் பாவமில்லார்

துரோணர் ஞானம்உணர்ந்து அமைதிஅடைதல்

ஆனபோ தஞ்சி அருமறையந் தத்திலுள்ள
ஞானம் பிறந்தமரில் ஆசைநடத்த லன்றித்
தூநலம்கொண் டேசோதி சோமியமே முற்றிநின்றான்
வானவி மானமல்லால் விரதம்விறாப் பில்லாதான்

ஆசாரி நிற்கும் அகத்துணர்வைத் தானறிந்து

தருமனுக்குக் கண்ணன் கூறித்துரோணரைத் தாக்கச்செய்தல்

காசா மலர்மேனிக் கண்ணன் கனற்பிறந்து
காளைக்கு உறுதி கருதியே தானுரைத்து
மீளச் சிலைமுனிமேல் விற்போர்க்குத் தானேவி
ஆதிநாள் வின்முனிவன் அன்பாகச் சொன்னபடி
எதென்று மாயன் உதிட்டிரனைப் பார்த்துரைக்க
பொய்மறந்து சொல்லாப் புகழரசன் தான்கேட்டு
மெய்மறந்து சிந்தை மிகநடுங்கி நின்றனனே.
தன்னை மறந்துணர்வு தானழிந்து வெம்பிநின்றான்.
மன்னர்மன்னைக் காயாம்பூ வண்ணன் முகம்நோக்கி

மந்தரமாம் பொற்றோளான் மாளுவர்கோ மான்மீதில்
இந்திர வன்மா எரிகோல் சொரிபோரில்,
அந்தரம் புக்க அசுவத்தா மாவெனும்ஓர்

1 வேதாந்தம்

சிந்துரம்[1]ஒன் றின்றிறந்தது திக்கயப்போல் ஒத்ததுவே.
சேய்பேரு கேட்டிறந்த சிந்துரத்தின் பாடதனை
நீயலோ உரைத்தளவில் நின்றிடுவான் விற்போட்டு
போட்டசிலை மீட்டுமந்த பூசுரனும் கையேற்கான்
தோட்டு மலர்மார்பன் திட்டத்துய்மனுமே கொன்றிடுவான்
தட்டாமல் இவ்வாறு தான்விரைந்து கூறுகென

தருமன் பொய்கூற மறுத்தல்

கட்டாண்மை மன்னர்பிரான் கண்ணன் தனைநோக்கி
மெய்மையால் மும்மையினும் மிக்கவாழ் வெய்தலன்றிப்
பொய்மையால் உண்டோ புவிவாழ்வு எனநகைத்து
அன்புங் கிளையில் அரியபொருள் மகவும்
இன்பவலி சீர்பெரிதே சொற்றிரமும் மெய்ப்பொருளும்
மெய்த்தவமும் புண்ணியமும் வீறுபல மாய்ந்துவிடும்
பொய்க்குறுதி யுண்டோ பொருந்துமோ நாவினில்பொய்
பொய்யொன் றுரைக்காமல் பூபன்அரிச் சந்திரன்முன்
மெய்கொண்ட செல்வம் விளைவாம் அரசிழந்து
தார மிழந்து தனையன் தனைத்தோற்று
வீரங் குறைந்தும் இசைந்தீமம் தான்காத்தும்
தேவிதனை வாளால் செருக்கவே தான்துணிந்தும்
மேவியோரு பொய்யும் விளம்பாமல் வீறுபெற்றான்.
எந்தனுக்கு அவ்வாறு எதுதுன்பம் வந்ததின்று
சிந்தை துணிந்தொருபொய் செப்புவதேன் தப்பிதென்றான்.

தருமன் மேலும் கூறுதல்

மாயன் உரையை மறுத்தரசன் சொன்னளவில்
ஆயனும் மீண்டு ஆன்மகனோ டேதுரைப்பான்
ஐமை யொருவர்க் கிசைத்தவா .. ... த்தர வுரைக்கும்
பொய்மெய்மை போலான புண்ணியமாம் புண்ணியனே
பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின் அன்றோ மன்னவனே

---

1 யானை

இரவோரை ஒத்துன் னிடத்தோர் மொழியிரந்தோன்
குரவோர்கள் சொற்காக்கக் கூறினும்பொய் மெய்யாகும்
வல்ல அனந்தம் மறைப்பொருளாம் புண்ணியமும்
சொல்லியது நின்னிடத்தில் தோற்றும் பொருட்டதனால்
புல்லியப்பொய் ஒன்றில்என்னாம் பொங்கு பெருந்தீங்கு
இல்லையொன்றும் எண்ணாது இயம்பாய் இதனைஎன்றான்.

தருமன் இயைந்த அளவில் பொய் கூறல்

மேன்மேலும் ஓர்பொய் விளம்பென்று மாலுரைப்பத்
தன்மாதிபன் சுதனும் தட்டரிய தாய்ப்பொருந்தி
என்செய்வான் தன்தேரில் ஏறியே தானடத்திப்
புன்சொலாம் பொய்யுரைக்கப் பூசுரனைத் தானெருங்கி

அச்சுவத்தா மாவெனுமோர் அத்திதனக் கேஅரிதாய்
வச்சிரம்போற் கைப்படையான் மாளுவனும் தானறுத்தான்
அங்கவன் செய்த அமரும் அமர்க்களத்தில்
வெங்கயமாய் மாய்ந்த விரகுமென் சொல்வனென்றான்.
இவ்வளவு தன்மன் இசைந்ததுவே போருமென்று

கேட்ட துரோணர் சிலை போட்டு நிற்றல்

செவ்வியன் வில்லாசான் சிலைபோட்டு நின்றனனே
வள்ளிய பூங்கோயில் மறையோன் நடுத்தலையைக்
கிள்ளிய வெள்ளிக் சிரீச நிகர்வீரன்
துள்ளி விழவிட்ட தூய்மன் கொடுங்கணைபோல்,
தள்ளிவிட்ட ததத்தனு வாசான தன்தலையை

பார்பாலன் சேனா பதியான பாப்பானும்
கூர்ப்பாசத் தாலே கொடுங்களத்தில் மாய்ந்தளவில்,
பார விருட்சம்விழப் பற்றியுற்ற பட்சியினம்
சேரவிரைந் தோடலெனச் சேனைதெறி கெட்டதுவே

அசுவத்தாமன் வந்து கண்டு புலம்பி மொழிதல்

சேனைகள் யாவும் தெறிகெட்ட செங்களத்தில்
ஆனமுனியை அசுபத்தாமன் வந்து கண்டான்
கண்டான் விழுந்தான் கலங்கினான் தாள்சிரசில்
கொண்டான் கண்ணீரால் குளிப்பாட்டி னான்உடலைப்
பிரிந்த சிரம்பார்த்தான் பின்னமுற்ற மெய்பார்த்தான்
தரித்த களம்பார்ந்தான் தன்னுணர்வு தானீத்தான்

மெய்சோர்ந்தான் கைசோர்ந்தான் வெய்துயிர்த்து மேன்மேலும்
பைசோர்ந்த நாகமெனப் பாரிலே தான்புரண்டான்
நஞ்சுண்ட சேலாய் நடுங்கினான் மீண்டெழுந்தான்
நெஞ்செங்கும் பற்றி நெருப்பெரியத் தான்சுழன்றான்
முன்பின்னும் நின்போர் முறைவிற்கு வமையில்லாய்
உன்பின்னும் யான்வருவேன் உன்னைஒழிந் துய்வேனோ
வில்லுக்கும் வல்லவில் லன்தொழிற்கும் மிக்கமறைச்
சொல்லுக்கும் வல்லாய் துறக்கம் புகுந்தாயோ
எக்கலையும் நின்னோடு இறந்ததோ வென்தாயோ
தக்க சிலைக்குருநீ தான்பூ விழந்தாயோ

கன்மழை காத்த கயவன்மொழி தட்டாமல்
சொன்மதிக்கத் தர்மன் துணிந்தேயோர் பொய்யுரைத்தான்
பொய்சொல்லான் வாய்தனிலே பொய்வந்த தற்காக
கைவில் லொழிந்தனையே, கற்றகுருத் துரோகி
சரத்தால் சிரசு தறித்தான்நீர் விற்பிடித்தால்
வரத்தால் இவனாலும் வானோர்கள் தன்னாலும்
எந்தைதனை வெல்லவல்லார் இவ்வுலகில் உண்டோதான்
தந்தை அடிமாட்டில் தான்புலம்பு வோனருகே

துரியோதனன் ஆறுதல் கூறுதல்

நாகக் கொடிபடைத்த ராசாதி ராசன்வந்து
வேகத் துயர்மாற்றி மிக்கவிழி நீர்மாற்றித்

தாங்கி எடுத்துச் சரீரம் துகள்மாற்றி
ஏங்கல் தவிர்த்தன்பாய் இனியமொழி சொல்பளவில்

பாண்டவரை அழிக்க முற்பட்ட கண்ணனால் வீமனை ஒழிந்த அனைவரும் ஆயுதமின்றி இருத்தல்

பஞ்சவர்கள் யாவரைடம் பாவிதுட்டத் தூய்மனையும்
துஞ்சி விழச்சென்னி துணிப்பதென்றே வில்வளைத்தான்
மாயன் தனதுரையால் மன்னரையும் சேனையையும்
ஆயபல வாகனமும் ஆயுதமும் மாற்றினரே.
வீமன் தனையொழிந்த வேந்தரெல்லாம் வேற்றாளாய்
தாமன் மொழிக்கிணங்கித் தானெருங்கி நின்றனரே
மாற்றரி சொன்மாயன் வாளிதொடுத் தான்ஊழி

காற்றெரியோ டுற்றதெனக் கார்ஏழ் எதிர்ந்ததென

ஏற்றகிலம் ஆகாசம் எங்குமே கோல்மயமாய்
நூற்றரிபோல் பொங்கிவரத் தோத்தரித்தார் எல்லோரும்
கையிரண்டுங் கூப்பிக் கரியோன்[1] பெயர்பகர்ந்து
துய்மறை யாலே துதித்துத் துதித்துநின்றார்

அசுவத்தாமன் அம்பின் செயல்

பாருருவித் திக்குருவிப் பாதாளஞ் சேணுருவி
ஓரொருவர் மெய்தோறும் ஓராயிரம் சரமாய்
சீறிப் பரவிச் செருமியே வந்திடலும்
நீறுபடா தியாரும் நிராயுதராய் நின்றமையால்
காருரு மோடுற்றதெனக் கர்க்கித் தமர்விடுத்த
போருவக் கார்வருடம் போலாம் கணைகளெல்லாம்

அம்பு வீமனை நோக்கி வரல்

தேர்நடத்தும் வாயுச் சிறுவனையே தானோக்கி
மாருதியைக் கோலி வளைந்ததுவே அம்மானை.
காண்டா வனத்தைக் கருதிஎரி மூடியபோல்
கூண்டே மல்வாயு குமரனையே கம்மியதே

வீமனும் அம்பு செலுத்தல்

மாயன் கணையை மதியாமல் வில்வீமன்
சேய விழிசிவந்து தேர்நடத்தி வில்வளைத்துக்
கனலி முதலாய்க் கடுங்கணைகள் தான்சொரிந்து
அனிலன் முகஞ்சிவந்து அம்புகளால் அம்புமழை
சீற்றமுற்று மேன்மேலும் செல்லொத்துத் தான்வீசிக்
கூற்றமென மாற்றிநின்றான் கோலுக்குக் கோல்செலுத்தி

மூச்சி லழிந்து முதிர்சினத்தீ யால்வாளி
ஓச்சினால் வீரக்கால் உதையினால் நாண்ஓதை
வீச்சினால் மல்வாகு வெற்பினா லேவெகுளும்
பேச்சினா லுங்கணைகள் பின்னமுற்று மாய்ந்தனவே.
தாள்வலியால் மேன்மேல் தடுக்கந் தடையறவே
தோள்வலியான் மார்பற் றொடை யிற்றொடைநெருங்க
முனனாட் சமரில் முரண்படை எல்லாமறுத்து

---

1 திருமால்

விசயன் வீமனை நிராயுதனாய் நிற்கச் செய்தல்

மன்னான வாள்விஜயன் வாகனம்வில் பாற்றிநின்றான்
நிலத்தின் நிராயுதனாய் நேர்வீமன் நின் றிடவும்
சரத்தை யொழிந்து சரம்நாணி மீண்டதுவே
விட்டகணை மீண்டுவர வேதியன்சேய் கோபமுற்று
வட்ட மணிச்சிலையில் வாளிவைத்தான் பாசுபதம்
பாசுபதம் வைக்குமுனம் பாதுகையின் பாதமொடும்

பாசுபதம் ஏவ முற்பட வியாதன் அறிவுறுத்தல்

ஈசன் வியாதன் எனுமுனிவன் அங்குவந்தான்
வந்த முனியைமுனி மைந்தனுமே கைதொழுது
உந்தி யிருந்தவிடத்து உற்றமுனி ஏதுசொல்வான்
வஞ்சினம் சொன்னமகன் யாகசே னன்மகன்
வெஞ்சினமாய்த் தீயின் விரைந்துரைத்த வாறாலும்
பாற்றனுக்கு மாயவனே பாகனாம் வாறாலும்
கூற்றனுந்தன் தந்தையுயிர் கொன்றதன்றி வேறொருந்தர்
சரத்தால் இறந்ததெனத் தான்நீ நினைக்கரிது
வரத்தால் உயர்ந்தோய் மனந்தே றெனஉரைத்து
உரத்தில் சிகியூர்தி ஒத்தேஉட் சிந்தையினால்,
சிரத்தி லரன்பாதம் சேர்சேர்த்துஇடர் தீர்த்தருள்வாய்
பிறவித் துயரகலப் பேறாம் பெருந்தவத்தின்
துறவுற் றிருந்து துயர்நீங்கென் றேகினனே.
தான்முன் இறந்தோர்கள் தன்னிற் சதமடங்காய்
தானின் றிறந்ததெனத் தான்பயந்து செங்கதிரோன்

கதிரவன் மறைதல்

தரிப்பற் றெழுந்தோ டித்தான்நீல வேலைபுக்கான்
பொருப்புற்ற திண்புயத்தால் பூபர்களும் பஞ்சவரும்
சலதிப் படையுடனே தான்பா சறைபுகுந்தான்,
கலகப் பிரியனெனும் காந்தாரி சேயர்களும்
பரவைத் தளத்துடனே பாசறையிற் புக்கடைந்து
இரவி வருமுன் இசைந்துவா வென்றேதான்

துரியோதனன் சஞ்சயன் மூலம் தந்தைக்குச் செய்தி அனுப்பல்

சஞ்சயனைப் பார்த்துநெடும் சர்ப்பக் கொடியோனும்
விஞ்சை முனிமைந்த விதமந்தைக் கோதுமென்றான்
அந்தமுனி சென்றந்த கனிடத்தில் தான்சேர்த்து
சந்ததிமுன் சொன்னபடி சாற்றலுற்றான் அம்மானை.

முரசக் கொடியோன் முதிர்ந்தொருபொய் கூறியதும்
வரிவிற் குருவும் மடிந்த வரலாறும்

சீறி விசயன் சிரந்துணிப்பேன் என்றுரைத்த
வீறு சேனாபதியாய் மேற்கன்ன னாவதுவும்
சொன்னவை கேட்டுத் துணுக்கியே மெய்மறந்து
தன்னை மறந்து தரையில் விழுந்தழுது
வல்வினை முன்செய்து மறுத்திரங்கல் தீதெனவே,
அல்லடைந்த கண்ணானும் அந்தணனை மீளவிட்டான்.
அந்தமுனி மீண்டும் அரவுயர்த்தோன் சார்படைந்து
தந்தை மொழியாவும் தனயன் தனக்குரைத்தான்.
செல்லனைய கைத்தனையன் சேனாபதி யெனவே.
எல்லிரவி தான்குணக்கி[1] லேயெழுந்தான் அம்மானை.

பாநான்கில்[2] ஒன்றில் பதினைந்தாம் போருரைத்து
நானான்கு நாட்போர் நடத்துவோம் அம்மானை.

சிவமயம் தருமராசாக்கள் வீரய்யன்

துணைசெய்ய வேண்டியது.

---

1 கிழக்கு

2 வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்கள்

பதினாறாம் நாட் போர்ச் சருக்கம்

துரியோதனன் கன்னனைச் சேனாபதியாக்கிக் களம்புக, ஐவரும் எதிரேற்கின்றனர். கன்னன் மகர வியூகமும், திட்டத்துய்மன் சக்கர வியூகமும் அமைக்கின்றனர். காசி அரசன் யானையை வீமன் வீழ்த்துகிறான். அவன் வீமன் யானையைக் கொல்கிறான். இருவரும் போர் புரிகின்றனர். கேமன் இறக்கின்றான். சிதறிய சேனையைக் கன்னன் திரட்ட, பாண்டவர் தம்படையை அணி வகுத்தனர். கன்னனும் நகுலனும் குதிரைப்போர் புரிகின்றனர். கன்னன் குதிரை இறக்கின்றது. இருவரும் தேர்ப் போர் புரிகின்றனர். நகுலனை ஓடச் செய்த கன்னன் விசயன் இருக்குமிடம் வருகின்றான். கன்னன் விசயனால் வலியழிந்து மீள்கிறான். சாத்தகி, சல்லியன் முதலானோர் இருவர் இருவராய்ப் போர் செய்கின்றனர். அசுவத்தாமனும் வீமனும், கைகயனும், சுருதி, கீர்த்தி முதலியோரும் இருவர் இருவராய்ப் போர் செய்கின்றனர். விசயன் எதிர்ந்து வர, சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் எதிர்க்கின்றனர். அவர் இருவரும் இறக்கப் பகைவர் பின்னிடுகின்றனர். துரியோதனன் படையுடன் வர தருமன் அவனை எதிர்க்கிறான். துரியோதனன் தளர்வுற, தருமன் இன்று போய் நாளை வா என்று கூறி அனுப்புகிறான். துரியோதனன் கதை கொண்டு வீச, தருமன் வேலால் தடுத்து விடுகிறான். துரியோதனன் நிலத்தே வீழ்கிறான். அசுவத்தாமா, கன்னன் முதலியோர் அங்கு வருகின்றனர். தருமனைப் பலரும் வளைக்க, விசயன் முதலியோர் உதவுகின்றனர். துரியோதனாதியர் பின்னிட்டுப் பாசறை அடைகின்றனர். தருமன் முதலியோர் மகிழ்வொடு திரும்பினர். சூரியன் மறைந்து மறுநாள் தோன்றினான்.

ஹரி ஓம் நன்றாக

மாதுலன் ஆகியும் ஏதிலன் ஆகிய வஞ்சனைக் கஞ்சன்
வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழி பாலொடு போதகுமுண்ட
புயல் வண்ணா
மாதவ யாதவ வாசவ கேசவ மாயா ஆயா மதுசூதா
ஆதியும் அந்தமு மாகிய நின்பொருள் அல்லாதுரையேன்
அடியேனே.

ஸ்ரீராமஜெயம் வீரய்யன் துணை

துரியோதனன் கன்னனைப் படைத்தலைமை ஆக்கல்

கங்கைமகன் விற்குருவும் மங்காது களத்தவிந்தார்
இங்கென் னுயிர் நண்பனல்லா தியார்சேனை நாதனென்று
அங்கர்பதி சேனைக் கதிபதியா கப்பொருந்தி,
வெங்களத்தின் மன்னர்மன்னன் வீரர்களும் தற்சூழ
வாசாம கோசரம்[1]சேர் மன்னவராம் பஞ்சவரும்

பாண்டவர் சேனை வருதல்

ஆசாரி சென்னி அறுத்ததுட்டத் தூய்மனுடன்
சர்ப்பவயி ரிக்[2]கொடியோன் சாத்தகியும் பார்த்திபரும்
அற்புதமாம் சேனைகளும் அன்றாக வத்திலுற்றார்.
பகர்கின்ற நாலுவகைப் பண்பான சேனைகளை

இருபடையும் வியூகம் அமைத்தல்

மகர வியூகம் வகுத்தான் அருக்கன்மகன்
பூமியெங்கும் கோலிப் புணரி வளைந்ததென
நேமி வியூகம் வகுத்தான் நெருப்புதித்தோன்[3]
இரண்டு படையும் இரண்டு கடல்போல
திரண்டு அவர்க்கவராய்ச் செய்தார் கடுத்துயுத்தம்

வீமன் செயல்

தேர்விட்டு மீமன் தெரிந்தோர் மதகரிமேல்

---

1 வாக்கினுக்கெட்டாமை
2 கருடன்
3 திட்டத்துய்ம்மன்

போர்விட்டு வாங்கான் பொருப்போர் தொடங்கி
நின்றான்.
அட்டகெசத்தி லொன்றென்று ஆரும் அதிசயிப்ப
நெட்டைப் யிறையனைய நேர்ந்தமணிக் கொம்பதனால்
பற்பல மலைவேர் பறியவே தான்கிளப்பிப்
பற்பமுறக் காலால் பாவிஇடித் துடைத்து

மதத்தாற் கரைத்து வயத்[1]தான் நிழற்பகைத்து
கொதித்தே மிகத் துரத்திக் கொண்டடரும் குஞ்சரமேல்

காசிநகர விசயகேமன் வீமனை எதிர்த்தல்

வீமன்வரக் காசிநகர் வேந்தன் மகன்விசைய
கேமனெனும் பேரான் கெழுமு சினத்துடனே
தானும் வயவீமன் தன்கரிக்கு மேலான
மானக் கரியேறி வாசவன்போல் வந்தெதிர்த்தான்

யானைப் போர்

உம்ப லுறுப்பொன்பது உயுத்தம் செயும்வீரர்
தும்பியுடன்[2] தும்பியுமே சோராதிகல் மூண்ட
பாகருடன் பாகர் பயில்சா ரிகைபயிற்றி
வேகித்த வர்க்கவராய் வெம்போர் தொடங்கிநிற்ப

அங்குச வித்தை அடவினால் சாரிகையின்
வெங்கரியும் ஊடாடா மேலாள் இருவர்களும்
கையிற் சிலைவளைத்துக் கார்வருடம் போலாக
வெய்ய கணைமாரி வீசிநின்றாரம் மானை.
சேடன் நடுங்கத் திரிபுவனம் தானடுங்க
நீடுந் திசைபாலர் நின்று மனமறுக
உக்கிர மாக உரவோர் இருவர்களும்
சக்கரமாய் வில்வளைவு தானிமிரா தேசொரிந்தார்
ஆசுகன் மைந்தன்அடல் ஆசுகத்துக் காற்றாமல்
காசிப் பதிகுமரன் கைவேல் தனைச்சுழற்றி

வாயு வளித்தமகன் மார்புகிழி யும்படியே
தேயு வெனச்சினந்து சீறுமிடி போல்விடுத்தான்
வல்லிடி போல்வந்த வடிவேல் பொடியாக

---

1 வெற்றி
2 யானை

வீமன் மேல் வந்த அம்பினை அருச்சுனன் அறுத்தல்

ஒல்லைதனில் பார்த்தன் ஒருகணையால் தான்அறுத்து,
மீண்டு மொருகணையால் வெற்பனைய குஞ்சரமும்
மாண்டுவிழ வில்வளைத்தான் வாள்விசையன் அம்மானை.
வீமன் தனக்கு விசையன் உதவிசெய்யக்
கேமன் புவிமீதில் கேசரிபோல் தான்பாய்ந்து
தக்க கதையொன்றைத் தடக்கரத்தால் தான்சுழற்றிப்
புக்கிடிபோல் தானடித்துப் போதகத்தை வீழ்ந்தினரே.

மல்வீமன் ஒர்கதையை வவ்வியே தான்பாய்ந்து

வீமன் கேமன் போர்

தொல்கேம னோடே தொடங்கினான் தண்டுயுத்தம்
பரிய கதைப்போரில் பார்த்திபர்கள் தான்திகைக்கக்
கிரியும் கிரியுமமர் கிட்டியபோர் தான்பொருதார்
பொருவில் பலகால் பொருதும் பெருந்திறத்தால்
இருவரும் போல்மற்றி யார்பொருத வல்லாரே
கண்டோர் திகைக்கக் கருதினோர் நெஞ்சுருக
அண்டர் மதிக்கவிறல் அட்டகெசம் நடுங்க
கதையும் கதையும் கறங்குபோல் தான்சுழன்று
உதைபட் டுதைபட்டு உதிர்க்க வனத்திரளாய்

கைசிவந்து மெய்சிவந்து கண்கள்அனல் சொரிந்து
வைசிவந்த வேலான் வயிரக் கதைசுழற்றி
உகசண்ட மாருத உத்தண்ட வயவீமன்
சிகர மகுடம் சிதறவே தானடித்தான்.
மலைகள் நிலைசிதற வல்லிடிகள் வீழ்ந்தாற்போல்
தலைகள் பொடிப்பொடியாய்த் தானுடைந்து மாய்ந்தனனே.

கேமன் மயங்க வீமன் தாக்கல்

கேமனெனும் மத்தகெசம் கலங்கவே பிளந்து
வீமனெனும் கேசரியும் விறிடிபோல் ஆர்ப்பரித்தான்
காசிமன்னன் கேமன் களத்தில் இறந்தளவில்
பூசல் முனைகெட்டுப் புறங்கொண்ட சேனையெல்லாம்,
மன்னர் மன்னர்சேனை மறுகிப் புறங்கொடுக்கக்

---

1 காற்றாடி

கன்னன் படையோடு எதிர்த்தல்

கன்னன் எதிர்ஏறிக் கலங்கிவந்த சேனைகளைப்
போரணியில் வைத்துப் பிரதாப வல்வீரன்
போரணியின் முன்னே பொருவிலான் நின்றனனே.
நாகக் கொடியோன் நரலைப்படை பொலிவாய்

இருவர் படையும் இகலுதல்

வேகித்து வார விசையறிந்து பஞ்சவர்கள்
சேனா சமுத்திரங்கள் சேரவே தான்முனைந்து
தானாகப் பொங்கிஇகல் தானேர்ந்தது அம்மானை.
கடலும் கடலுமெதிர் கைகலந்த வாறேபோல்
அடல்கொண்ட வர்க்கவராய் ஆர்ப்பரித்தார் அம்மானை.

மும்மதம் எந்நாளும் ஒழியாது தான்சொரியும்
வெம்மைமலைத் தோலுடன்தோல் மிக்கபோர் மூண்டதுவே
பறக்கும் கிரியனைய பற்பலவாம் தேருடன்தேர்
விறற்பல் லுயித்த வினைமூண்டார் அம்மானை.
காத்தனைய புள்ளைக் கடுக்கும் பரியினங்கள்
மாத்தனைய வெம்போர் வர்மித்து மூண்டதுவே.
சேடன் தனைநிகர்த்த திண்மையுறுங் கால்தளங்கள்
கோடையிடி போலதிர்ந்து கோதாரிப் போர்மூண்டார்.
முரசு முதலாய் முழங்கும் பறையினங்கள்
விரவு கடைநாள்[1] வெடிகால புயலாழி

எல்லா ஒலியும் இசைந்தெழுந்த வாறேபோல்
பல்லா ரியமும் படிமேல் முழங்கியதே,
மின்னற் பிரபை[2]யென வெய்யபடைக் கலங்கள்
பன்னெற் றிசையும் பரவ இகல்பொருதார்.

கன்னனும் நகுலனும் போர் புரிதல்

பானு சுதனும் பரிநகுல னுப்சபதம்
தானும் பகர்ந்து சமரப் பரியேறிச்
சேடன் நடுங்கச் சணத்தில் திசைகோலி
ஆடற் பரியை அடர்ந்தடர்ந்து தான்திருப்பிச்

---

1 யுக முடிவு நாள்
2 ஒளி வட்டம்

சக்கரம்போல் விற்கறங்கு தான்போல் பரிதிருப்பி
மிக்க சிலைப்போர் வெகுண்டே புரிந்துநின்றார்

பன்னிருவர் வில்லும் வளைவு நிமிராமல்
மின்னல் சொரிபுயல்போல் வெங்கணைகள் தான்சொரிந்தார்

அந்தரமும் திக்கும் அகிலபுவ னங்களெல்லாம்
சுந்தர வில்வீரர் சொரிகணையால் தூர்ந்ததுவே.
ஒத்தநலம் ஒத்ததிறல் ஒத்தகுலம் உற்றவர்கள்
ஒத்தபரி ஒத்தசூழி ஒத்தநிறம் ஒத்தநடை
ஒத்தகுணம் ஒத்தமனம் ஒத்தகதி ஒத்தபலன்
தரமொற் நிவ்வாறாய்ச் சமானித்த போர்முகத்தில்
உரமுற்று எழில்நகுலன் உற்றநரக் கணையால்
கன்னன் பரிக்குலமும் கால்நாலும் மெய்ச்சோடும்

சின்னப் படுத்திச் சிலையழித்து நாணழித்துப்
புயத்தும் சிரத்தும் புதைய றுதலுருவ
வயத்துங்க மாநகுலன் வாளியோ ரைந்துவிட்டான்
கோபச் சிரிப்பாய்க் குவலயத்திலே பாய்ந்து
சாபத்தில் மிக்க தனுப்படையும் தானெடுத்துத்
தாதை தேர்போன்ற தடந்தேரின் மீதெறி
மோது சினமாய் முனைந்தெதிர்ந்தான் அம்மானை.
பாதுகை செய்பாகன் பயலான தன்மையினால்
மோது சமர்தோறும் முதுகு கொடுக்கலுற்றான்.
மீண்டு வெகுண்டுவந்து வெவ்வினைப்போர் செய்வதென்நீ

தாண்டி முன்செய்த சமர்போலாம் பின்னுமென்றான்.
நகுலன் கொடுஞ்சொலழல் நாராசம் போலாக
மகிபன் செவிபுகுத வாய்திறந்தங் கேதுசொல்வான்
மன்னு குருகுலத்து மன்னவன்தன் புத்திரன்நீ
வென்னிட்டால் ஈனம்என்போல் மிக்கலார் வென்னிடலாம்
தச்சனுக்கு வெந்கொடுத்தான் சத்திரியன் என்றுலகோர்
சிச்சியென நின்னைவசை செப்பாது நில்லுகென்றான்.
தாங்காது கோபம் தடம்புரண்டு கன்னனிவை
ஆங்கார மாக அறைந்தளவிலே நகுலன்,

நகுலன் தேர்ப்போர் புரிதல்

பரிவிட் டிழிந்துஓர் பருத்தேரின் மீதேறி

எரியுற்ற கோபமுட னேயெதிர்த்தான் அம்மானை.
மாறாச் சினமூண்டு வல்லோர் இருவர்களும்
வீறாய்ப் புயல்நிகர்ப்ப வின்மாரி தான்சொரிந்தார்
விற்கணையும் விற்கணையும் மிண்டியொன்றை ஒன்றுகவ்வி
நிற்கப் பிளக்க நெடுஞ்சிறகு தானரிய
ஒன்றையொன்று மேலாடி ஊடாடிப் போராடக்
கன்றி யிருவர்களும் கார்முகத்தின் போர்முனைந்தார்
தருவும் புயலும் தடுமாற வீசுகைக்குப்
பரிவலவ னோவில் பாணம் தொடுப்பதென்று
விழித்து இமைக்குமுனம் வில்வலியான் அங்கர்பிரான்

அழற்செம் புயற்போல அந்திரங்கள் தான்சொரிந்து
தேரும் சிலைபாகும் சேரவே தூளாக்கி
நேரிலே காலாளாய் நின்றவன்மேல் வீசினனே
முன்சொன்ன தற்காய் முகமாற மெய்நாணி
மின்பிறங்கும் ஓர்சுடர்வேல் விட்டெறிந்தான் அம்மானை.
இடியொத் தெரிகொப்ப ளித்தெதிர்ந்த வேலதனை
பொடிபட் டழிந்திடவே புங்கம்பல சொரிந்தான்
வைவேல் பொடிய மறுத்துமொரு தண்டெடுத்துக்
கையாற் சுழற்றிக் கடுத்தெறிந்தா னம்மானை.
கன்னன் உயிர்பறிக்கக் காலன்போல் வந்தகதை

தன்னைப் பலகணையால் தான்நீறு கண்டனனே
மற்றுமற்றும் பலபடைகள் மாநகுலன் வீசுதலும்
முற்றுமுற்றும் நீறாய் முரண்பகழி யாலெரித்தான்.
வரை தட்டுருவும் வடிக்கணையை மேன்மேலும்
தரமொத்த வில்விசையன் தம்பிமேல் தான்விடுத்தான்.
வன்கோபம் கொண்டிருகை வள்ளல்விடும் வாளியினால்
என்போடு உடர்களெல்லாம் ஏகமாய்த் தான்துளைந்து

நகுலன் பின்னிடுதல்

ஆற்றாமல் பின்மீண்டு அயர்ந்திளைத்தே ஓடினனே
தோற்றோடு வோனைத் துரத்தி ரதம்நடத்தி
வில்லாற் கழுத்தில் மிகமாட்டி யேயிழுத்து

கன்னன் இகழ்ச்சியுரை

சொல்லாத சொற்களெல்லாம் சொன்னமதம் எங்கேயென்று

வாய்சொன்னாப் போலேவில் வல்லாண்மை செய்யாமல்
பேய்சொன்னாப் போலே பிதற்றியேன் வெந்கொடுத்தாய்
சத்திரியன் பெற்றமகன் தானோடுதல் முறையோ
மெய்த்தபதி கைத்தனுவில் மெய்க்களம்சிக் கல்முறையோ
என்றுகதிர் வாள்உறை விட்டேகாய் உரைப்படியே

நநலனைக் கொல்லாது விடல்

அன்றுகடுத் தோங்கிவெட்டா தங்கவனை விட்டுவிட்டுக்
கழுத்திறுகப் போட்டிழுத்த கார்முகமும் தான்வாங்கி
இளைத்தமுது கிட்டோனை யேவதைத்தல் பாவமென்று
உன்னுயிரை மீண்டின்று உதவினேன் போய்ப்பிழையாய்

கன்னனென்ற பேர்கேட்டால் காதவழிக் கெட்டுநில்லாய்
நான்வில் லெடுத்தால் நரனன்றி நுங்களிலே
தான்விற் கணைசெலுத்தத் தக்கவரு முண்டோதான்
உரத்தவனைக் கண்டவுடன் ஊடாடா தேயொடுங்கி
தரத்தவ னோடொத்துச் சமர்செய் துயிர்பேணு
என்று பகர்ந்து இரதந்தனை நடத்தி

தருமர் சேனைக் குலையக் கன்னன் அம்பு விடுதல்

அன்று தருமன் அனிகம் நிலைகுலைய
வெய்ய கொடுங்கோல் மிகவீசிக் கொக்கரித்தான்
கொய்யுளை வேந்தன் குலைகுலைந்து கல்லானான்
தம்பிதனைக் கன்னன் தயங்க நிலையழித்த

வீமன் கோதித்து வருதல்

அம்பல்[1] மொழிகேட்டு அதிகோப மாய்வீமன்
தேர்நடத்திப் பாணமழை சொல்லொத்து எதிர்சொரிந்து
போர்நெருக்கி வந்தான் பொருவிலா வாயுசுதன்
கன்னனும் கண்டு கடுகியே தேர்முடுகி
வன்ன வரிவில் வளைத்துக் கணைசொரிந்தான்
இருவர் சொரிந்தபல்வேல் எண்டிசை வெளியும்
பரவி நிறைந்ததுவே பானு மறைந்ததுவே.
ஒற்ற சமரில் உரத்தே வயவீமன்
கொற்ற வரிவில் கொடியறுத்தா னம்மானை.
வில்லுங் கொடியறுக்க வேறொருவில் தான்வளைத்துச்

---

1 பலரும் கூறும் சொல்

செல்லுங் கலங்கச் சினந்தே கணைசொரிந்தான்.
துங்கமுடன் கன்னன் சொரிந்த கணைமழையால்
தங்குமணித் தேர்கொடிமா தக்கபரி சாரதியும்
நீறு நீறாக நெடியவரி விற்பொடிந்து
சூறியே யெங்கும் துளையுற்ற தம்மானை.

வீமன் தண்டு கொண்டு தாக்கல்

வன்கோபம் கொண்டுசண்ட மாருதகு மாரனுமே
முன்பாகத் தண்டுகொண்டு மூசிஎழுந் தடர்ந்தான்
வீமன் கதாயுதத்தை வீறாகப் பற்றியதும்
சேமத் துசத்தான்மேல் சீறியெதிர் செல்வதையும்
கண்டமரர் நெஞ்சம் கலங்கி நடுநடுங்கித்

தண்டிதால் தேரும் தபனன் திருமகனும்
நீறுநீ றாவான் இமைப்பளவில் இன்றுகன்னன்
சேறுசே றாய்மெய் சிதைந்தழிவன் என்றுருக
ஆர பாரத்தோடு அடர்ந்துகாந் தத்திலுறு
சார வீரப்பிரபல சண்ட வாயுக்குநிகர்
பாய்ந்தடர்ந்து வார பவனன் குமரனையே
காய்ந்து பலபாணம் கன்னனுமே தான்சொரிந்து
மெய்சோர்ந்த வாயான்தன் மெய்த்துணைமெய் கை
துளைத்தான்

வீமன் விழுதலும், விசையன் வந்து உதவலும்

கைசோர்ந்து மெய்சோர்ந்து காசினியி லேவீழ்ந்தான்
வீமன் விழுந்தளவில் விசையன் கோபமுற்று

காமன் தனைச்சினந்த கண்ணுதல்[1]போல் தேர்நடத்திக்
கும்ப மதகரட குஞ்சரத்தின் மேல்நோக்கும்
உம்ப லரண்சிங்கமென உற்றடர்ந்தா னம்மானை.

விசையன் போர்

சாயாத வீரன் தனுவளைத்து நாணேற்றி
ஓயாக் கணைமாரி ஒத்தே சொரிந்தனனே.
துன்னி விசையன் சொரிந்தகணை மழைநேர்

1 சிவபெருமான்

கன்னனும் பாணம் கனமாய்ச் சொரிந்துநின்றான்
திரையும் திசையும் செகம்விண்ணும் பாதலமும்
சரமும் சரமும் சமர்செய் சரமயமாய்
நேச முடன்ஊசி நிறுத்தஇடம் கிட்டாமல்
பாச மயமாய்ப் பரவியதே அம்மானை.
திக்கு மலைநடுங்கச் சேணடுங்கப் பூநடுங்க
மிக்கசெசம் நடுங்க வெண்பாலகர் மயங்க
வாரி சுவற மலைகள் புகைஎழும்ப
வீரர்பொரும் போரை விண்ணோர்கண் டுள்நடுங்க
வடவைத் தழல்ஊழி மாருதமும் ஒத்தாற்போல்
கடையுற்று யுகமாறும் காலமெனக் கண்கலங்க
நாகருலகோர் நரர்வா னவர்நடுங்க
மோகரித்து வன்போர் முடுகிநின்றார் அம்மானை.
கண்ணன் கடுங்கணையால் கன்னன் கனல்போற்ற
வன்னமாய் மேனி வடிவுற்றான் அம்மானை.
காரொத்த மேனிக் கலைஒத்திடக் கனன்று

கண்ணன் கூற்றும் அருச்சுனன் அம்புவிடுதலும்

வீரர்க்கு வீர விசையனைமால் தான்நோக்கி
என்யுத்தம் செய்தாய் இவனைநீ பாராட்டிப்
பின்னிட்டு ஓடப் பிளந்தே எறிந்திடென்றான்
பாகன் விரைந்து பகர்ந்துவாய் மூடுமுனம்
வேகமுடன் வில்விசையன் வெஞ்சாய கம்[1]சொரிந்து
மாவொரு நான்கும் வலவனையும் தான்பிளந்து
தரஉருள் தேர்அச்சு தனுநாண் கொடிபலவும்
பற்பமெனப் பொடித்துப் பானுசுதன் மேனியெல்லாம்
அற்புத மாக அடங்கவே தான்துளைத்தான்
தத்து பரியிழந்து சாரதியும் தானிழந்து
முத்துக் குடைகொடியும் மூட்டுதேர் அச்சுருளும்
வில்லும் இழந்து விறலிழந்து மேலான
சொல்லு மிழந்து சுனையழிந்து நெஞ்சழிந்து
நெட்டுயிர்ப் பிட்டே நினையாதெல் லாம்நினைந்து
மட்டுடல மெய்சோரி மயமாக நின்றனேவி

---

1 அம்பு

சோரி மயமாகத் தூக்கித்து நின்றவனை

விசயன் கூற்று

வீரர் சிரோமணியாம் வில்விசயன் பார்த்துரைப்பான்
பரிந்தின்று சேனா பதிப்பட்டம் பெற்றவுன்னை
அரிந்தின்று உயிர்துலைப்ப தல்லேனி ரங்கிவிட்டேன்
நன்றுநீ பட்ட நடுக்கங் களைத்திர
இன்றுபோய் நாளை இகற்குவா என்றுரைத்தான்
பன்னா ளரக்கனுடன் பாம்பணையான் சொற்றதுபோல்
இந்நாள் அவனிவனே என்னவிசை யன்பகர்ந்தான்
சொற்கேட்டு நெஞ்சம் துணுக்கியே ஊர்தியின்றி
விற்கோலப் படையிழந்து வெய்துயிர்த்து ஏகினனே.

சல்லியனும் சாத்தகியும் அவ்வாறே பிறரும் பொருதல்

சல்லியனும் சாத்தகியும் தான்சினந்து போர்முனைந்து
அல்லிரவு மட்டும் அடர்ந்துபோ ராடினரே
கிருதனுடன் சிகண்டி கிட்டியே போர்முண்டான்
கிருபன் கனற்பிறந்த கேசரியும் போர்முண்டான்
தென்மது ரைப் பாண்டியனும் தீயசகுனியுமாய்
வன்மமுடன் விற்போர் மலைந்துநின்றார் அம்மானை.
அரவக் கொடியோன் அனுசரும்சா தேவருமாய்
விரகுற்று விற்போர் மிகமுண்டார் அம்மானை.
அனிலன் குமரனுடன் ஆசாரி தன்குமரன்
முனிவுற்றுத் தேர்நடத்தி மூண்டார்கள் பேர்யுத்தம்

போர் செய்த வகை

இடந்தில் ரதம்புரிந்தால் எய்திவலம் புரிந்தும்
திடத்தில் வலம்புரிந்தால் சேர்ந்தே இடம்புரிந்தும்
சேலும் கயலும் தெளிந்துகலத் தூடாடி
கோவி யுலாவும் குணம்போல்ரதம் திருப்பி
சோடொத்து இருமேகம் சோனை சொரிவதுபோல்
பீடுற்ற விற்போர் பெருகவே வீசிநின்றார்
பாடலத் தாமன் பவனாபதி மகன்மேல்
ஈடுற்ற நாலிரண்டு ஏற்ற பகழிவிட்டு
பாகு கொடித்தேர் பரியும் பொடித்துவிட்டான்.
வேகமுடன் வீமன் மீண்டுமறு தேரேறிக்

கன்னிகர்த்த வில்வளைத்துக் காயும் கடுங்கணைகள்
மின்னிமிர்த்து வீசலென வீசிக்கொடித் தேர்வில்
தூளாக்கிச் சிந்தை துணுக்கியே பின்போர்க்கும்

மீளா விதமாய் விரட்டலுற்றான் அம்மானை.
கிருதன் பொரும்போர்க்குக் கெட்டே சிகண்டியென்போன்
இரதம் சிலைபாகு எலாமிழந்து ஓடினனே.
பஞ்சவர்கள் சேனா பதிகிருபன் போர்க்குடைந்து
அஞ்சலித்துத் தேர்வில் தகர்ந்தவனும் ஓடினனே.
இந்த விதமாய் இகலரசர் எம்முனையும்
சந்ததமும் துன்னிச் சமர்மூண்டார் அம்மானை.
பரியும் பரியும் பதாதி பதாதிகளும்
கரியும் கரியுமுருள் கால்தேரும் கால்தேரும்
தானவரும் வானவரும் தானே பொருவதொத்த

களக்காட்சி

மானமன்னர் போர்க்களத்தின் வண்மையென்னென்
றேயுரைப்போம்.
கரங்கால்கள் கூய்களத்தில் கழுகிட்ட காவணமே[1]
தரங்கள் பிரிந்தவகை தான்பகரும் காவணமே[2]
புயல்வாய் விரிந்தமின்னல் போலுநுதல் ஓடைகளே[3]
வயவா ரணம்மும் மதத்தாரை ஓடைகளே[4]
காருடல மொத்த கயத்தின்முழு குஞ்சரமே[5]
வேருடனே சாய்வரைநேர் வீழ்ந்தபல குஞ்சரமே[6]
அரவக் கொடியோன் அனீகங்க ளிற்றதுவே[7]
முரசக் கொடியோன் முரட்படைக ளிற்றதுவே[8]
தழற்கண் அரசர்முடி தாக்குவன சக்கரமே[9]

---

1 களிற்றது = யானைகளையுடையது
2 தாக்குவன + சக்கரம் (படை)
3 வசை + கரம் = தாமரை போலும் கை
4 எண்ணில = அளப்பிலாதன
5 வெண்ணிலவு = வெள்ளிய நிலா
6 வெவ் + வெயில் = வெவ்விய வெயில்
7 வெவ் + எயில் = வெவ்விய மதில்
8 காவணம் - பந்தல்
9 கா + வணம் - சோலை

அழற்பருதி மீண்டுசுற்றும் அண்ணலவன சக்கரமே[1]
முழுகு களத்தரசர் முருக்குண்ட வெண்ணிலவே[2]
தழல்கள்விழி பொங்கநகை தன்னிலுற்ற வெண்ண
கையே[3]
இடையிலிடை வீழ்படைக ளேயுமிழிந்த வெவ்வெயிலே[4]
தடையற் றிறந்தோர் சடங்களால் வெவ்வெயிலே[5]
செயிர்மன் னவர்சோரி யால்சிவந்த பாரிடமே[6]
வயிறுகுரு திச்சுனையாய் வளர்ந்தபல பாரிடமே[7]
பற்பல்ல டுக்காய்ப் பறவையிட்ட கந்தரமே[8]
அற்புதமாய்ப் பறக்கடித்தே அற்றிறந்த கந்தரமே[9]
எழ்வான் இருள எழுந்த விருந்துகளே[10]

வீழ்நாய் நரிபேய்க்கு மிக்க விருந்துகளே[11]
ஐவகை யான கதியழிந்த வாசிகளே[12]
மெய்வலிய கூர்ங்கணைகள் வீசியகை வாசிகளே[13]
பேரான சேனா பதிமுன்னம் பின்னிடவே
தேராண்மை வில்லாண்மை சேர்ந்த தனஞ்செயன்மேல்,

சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் விசையன் மீது செல்லுதல்

தாராரும் மார்பினர்கள் சஞ்சத் தகருடனே
நாராயணன் பாலர் நரன்மேல் நடந்தனரே

---

1 ஓடை - சிற்றாறு
2 ஓடை - முகபடாம்
3 முழுகும் சரம் - முழுகும் அம்பு
4 குஞ்சரம் - யானை
5 அனீகங்கள் இற்றது - சேனைகள் அழிந்தன
6 பாரிடம் - பாராகிய பூமி
7 பாரிடம் - பூதகணம்
8 கந்தரம் - மேகம்
9 கந்தரம் - கழுத்து
10 இரும்துகள் - கரிய பெரிய தூசி
11 விருந்தினர்கள்
12 வாசி - குதிரை
13 கைவாசிகள் - கரங்கள்

விருத்தம்

சட்கோணத்[1] தேர்மேல் வருசத்திய சேனன்
புட்கோ[2] வெழுதியசீர் பொன்னங் கொடிவலவன்
நுட்கோடு உளம்மறுக தோமரம்ஒன் றேவிடுத்து
முட்கோல வடஞ்சிதைய மோதினானே முரணாய்

கண்ணன் துரியோதனனிடம் கூறல்

நடை

புடையுண் டுளமுருகிப் புயல்போன்ற வண்ணமுளான்
தொடை[3]யொன் றுதவிச் சுவேதமாத்[4] தேர்நடத்தி
மைத்துனனை நோக்கி மனம்சற் றிளையாமல்
எய்த்துவிழப் பல்பகழி யேவென்றான் அம்மானை.
மாயன் உரைப்பதன்முன் வன்பகழி மாரியதாய்
ஓய லறவிடுத்து ஓர்நிமிடப் போதை[5]யிலே
சூழ்படைகள் எல்லாம் துணித்துத் துகளாக்கி
வீழ்குருதி மேற்பிணங்கள் மேன்மேலு மேமிதக்க

சத்தியசேனன் அழிவு

சத்திய சேனன் தனைமால் தருங்கணையால்
அத்திர வீரன் அறுத்தெறிந்தான் அம்மானை.

வேறு சிலர் அழிவு

ஏகநாளே முதலாய் ஈரெட்டு நாள்வரைக்கும்
சாகல்ஒழிந் தடர்ந்த சஞ்சத்தகர் தாமும்
நாரண கோபாலர்களும் நரகங் குடியேற
வீரர்களில் மிக்கானோன் வென்றுசெயங் கொண்டனனே.
மாலுயி ரன்னான் வளைத்த சிலைக்கணையால்
சாலவுயிர் வெவ்வேறாய்த் தானமடிந்தா ரம்மானை.
கோபாலர் சஞ்சத் தகரும் கொலைக்களத்தில்
பூபாலனே பொறப்பப் பொடிந்தாரென் றேகளிப்பாய்

---

1 ஆறுகோணம்
2 பறவை அரசு - கருடன்
3 அட்பு
4 வெண்குதிரை
5 பொழுது

பேய்கள் முதலியன மகிழ்ச்சி

கூளிகள் பேய்கள் குதித்தாடிக் கூத்தாட
ஞாளி[1] கழுகு நரிகொடிகள் பூசலிடக்
குறையுடல்கள் கூத்தாடக் கொற்றவன்தன் சேனை யெல்லாம்
முறையிட் டணிபோய் முதுகிட்ட தம்மானை.

துரியோதனன் போர்

தன்சேனை யாவும் தரிப்பற்று வெந்நிடவே
மன்சீர் அரவுயர்த்த மன்னவன் அதிவளர்?
ஐயா யிரங்கரியும் ஐயாயிரம் பரியும்
மெய்யா யிரந்தேரும் மிக்க பதாதிகளும்
சூழ அரவத் துவசன் வடவையைப்போல்
பாழி விறற் பஞ்சவர்மேல் பாய்ந்தேநடந்தடர்ந்தான்.
திறங்கொண்ட சிந்தைத் திரியோதனன் வருதல்

தருமன் செயல்

அறங்கொண்ட சிந்தை அறன்குமரன் தான்பார்த்து
மலையும் நிலைகுலைய வாரவொரு மிப்பறிந்து
நிலமை தவறான் நிதனத் துடன்நடந்தான்

விருத்தம்

துணைவெங் கபோல விகட கடகரி
துரகம் பதாதி இரதம் அளவில
என நின்ற சேனை முடுகி அயில்சிலை
எறிதுங்க வாளோடு இகலி எழஎதிர்
குனிசங்கு தாரை நவுரி[1] முதலிய
குணில்கொண்டு காடு பறைகள் முதலிய
தனிதம்கொள் மேகம் எனவும் அமர்பொரு
தமரம்கொள் வேலை எனவும் அதிரவே

கதிகொண்ட சேனை நடவ எழுதுகள்
கனகஞ் சுலாவி அனில கதி[2]யுற
முதிர்சண்ட சூர கிரணம் இருள்எழ
முதுபஞ்ச பூத வடிவு பெறவிலன்

---

1 பறைவகை
2 வாயுவேகம்

நதிவண்ட லாக அமரர் உறைதரும்
நகரம்பொன் வீதி புழுதி எழமுழு
மதியங்க மாசு கழிய நிரைநிரை
வளரண்ட கூட முகடும் அதிரவே

குதிகொண்ட வாசி வயவர் பலரொடு
குதிகொண்ட வாசி வயவர் குறுகினர்
துதிவெங்கை வேழ மறவர் பலரொடு
துதிவெங்கை வேழ மறவர் துதையினர்
அதிர்சண்ட வேக இரதர் பலருடன்
அதிர்சண்ட வேக இரதர் அணுகினர்
பொதிவெம் பதாதி விருதர் பலரொடு
பொதிவெம் பதாதி விருதர் பொதுளவே

பரிசெம்பொன் நேமி விசையொடு இருகிரி
பொருவன்பு போல மணியின் ஒளிதிகழ்
விரிதந்த சோதி படலம் மிகுவன
மிசைகொண்ட தேர்கள் கடவும் வலவர்கள்
எரிசெங்கண் நாக அரசும் முரசமும்
எழுதும் பதாகை நிருபர் இருவரும்
முரிதந்த சாப முடுகு பகழிகள்
முகில்தங்கு வானம் முழுதும் மறையவே.

அறன்மைந்தன் வாளி அடைய நயனமில்
லவன்மைந்தன் வாளி விலக மிடலுடை
விறன்மைந்தன் வாளி அடைய விரகினில்
விகுபுங்க வாளி விலக முறைமுறை
மறமும் பொருத சினமும் இருபுய
வலியுந் தவாமல் அரிது பொருதுபின்
நிறமின் கள்ஏழு பகழி முழுகின
நிருபன்தன் மார்பு குருதி பொழியவே

விரிகின்ற நீல கிரியில் இளவெயில்
விழுகின்ற தாரை அனைய அழகொடு
சொரிகின்ற சோரி யுடைய மகபதி
சுளிவின்றி மீள ஒருகை நொடியினில்
முரிகின்ற நீடு புருவம் நிகரென
முனைகின்ற சாபம் முரிய விரைவொடு

தெரிகின்ற தேர்கள் முழுகி அறனருள்
திருமைந்தன் மார்பு குருதி பொழியவே

மருமங்கள்[1] சோரி வடிய இருவரும்
மலைகின்ற போரின் மதுகை நிலையொரு
தருமன்கு மாரன் வலிய அவனிபர்
தலைவன் குமாரன் உரக துவசமும்[2]
அருமந்த தேரும் விசைய வலவனும்
அடல்கொண்டு பாயும் புரவி அழிவுற
உரும்அஞ்ச நாணி எறிய ஒலிஎழ
ஒளிவிஞ்சு நாலு பகழி உதையவே

இழிதந்து மீள இமயம் அனையதோர்
இரதம் கடாவி எதிரி உரனிடை
அழிதந்து மீள அயில்கொள் முனையதோர்
அயில்கொண்டு வீசி எறியும் அளவினில்
மொழிதந்த வேலின் முனையும் ஒடிவுற
முறிவுண்டு கீறி வழியில் விழஎதிர்
பொழிதந்த தாலோர் பகழி அறனருள்
புதல்வன்கை வாகை புனையும் வரிவிலே

பிளவுண்டு வேல் விழுதலின் மகபதி
பிழைகொண்ட வேழம் அனைய மெலிவினன்
உளம்நொந்து நாண உருளும் இரதமும்
உடைதந்து போரும் ஒழியும் வகைசில
கிளரம்பு வீசி ஒருபவ ளமுது
கிரிநின்ற தாகும் எனமுன் நிலைபெறு
வளமைந்தன் வாய்மை உரைசெய் தனன்மிசை
வரும்உம்பர் யாரும் இதயம் மகிழவே

அளி[3] தங்கு மாலை அரசர் அவையில்உன்
அதிவஞ்ச மாமன் அவனி கவர்வுற
எவிவந்த சூது பொருத விரகிது
எளிதின்று பூசல் எனமுன் விரவினை
ஒளி விஞ்சு தேரும் உடைய படைகளும்
உடையுண்டு நீயும் உறுதி தவறினை

---

1 மார்பு
2 பாம்புக் கொடி
3 வண்டு

தெளிவென்பது ஆகம் இலதுன் மனம்உறு
செருவென்ற வீரம் அமையும் அமையுமே

அனிலன் குமாரன் அரசர் அசனி என்
அனுசன் சொல் வாய்மை பழுதுபடுமென
உனையின்று கோறல் ஒழிவது அலதுநின்
உரமென்கொல் ஆகும் எனது கணையெதிர்
புனைதும்பை மாலை சருகு படஎழு
பொடி மண்ட ஓடி மறைக விரைவுடன்
இனி எங்கள் ஆண்மை உரைசெய்து எதுபயன்
எதிர்வந்து நாளை அணிக இகலியே

முதிர்குந்தி போசன் மகள்தன் மகனிவை
மொழிதந்த போழ்து பெருக முறுவல்செய்து
அதிரும்சு யோதன னும்ஓர் உயர்கதை
அவன்மன்றல் மார்பின் உரனொடு எறிதர
எதிர் சென்று நீதி புனையவும் நிருபனும்
எறிதண்டு கூறு படவும் எறிபவன்
விதிருண்டு பாரில் விழவும் ஒருதனி
விறல்உந்து வேல்கொடு உருவ எறியவே

நடை

தேரும் பரிபாகும் தேர்க்காலும் திண்கொடியும்
வீரன் தடமார்பும் வேல்பிளந்து வீழ்த்தியதே.
வேந்தர்வேந் தன்களத்தில் வீழ்ந்தான் வேல்பட்டெனவே
சேர்ந்த பெரும்படைகள் சேரமுது கிட்டதுவே
தாழ்ந்ததுநம் கொற்றமன்று தானோடி அங்கர்பதி

கன்னன் பின்னிடலும் துரியோதனன் பக்கலார் செயலும்

ஆழ்ந்ததிரை ஒத்தான் அடுத்தெடுத்தான் அம்மானை.
தாதைமடி துன்பம் தனிலாயிர மடங்காய்
வேதியன் மைந்தன் விரைந்தெடுத்தான் அம்மானை.
கிருபன் கிருதன் கிளர்சல்லி யன்சகுனி
நிருபன் துணைவர்களும் நின்றமன்னர் சேனைகளும்
ஆர்கலிபோல் சூழ்ந்து அறன்மைந்தனை வளைத்தார்.

---

1 இடி
2 கடல்

வீமன் முதலியோர் தருமனுக்காக எதிரிகளை வளைத்தல்

வீரவிசை யன்வய வீமசே னன்முதலாய்
தருமன் தனைவளைந்தோர் தன்னை வளைந்தனரே
செருமுகடற் சேனையுடன் சேனையும்போர் மூண்டதுவே
கூடி வளைந்தபல கொற்றவன் சேனைகள்மேல்
மூடிய செங்கண் விழிக்குமுனம் வில்வளைத்துச்

தருமன் போர்

சோனைபோல் தர்மன் சொரிந்த கணைமழையால்
சேனையற மடிந்து செங்குருதி பொங்கியதே.
வந்தவந்த மன்னரெல்லாம் மாவிழந்து தேரிழந்து 420
சந்தமுள நாணும் தனுவயிற்பல் பேரிழந்து
ஓடினார் கன்னன் ஒருவனுமே மன்னவனை
பீடினுடன் தேர்ஏற்றிப் பின்னிட்டே ஓடினனே.
மெய்ப்புடன் வந்த விருதரசர் ஊர்திகளும்
கைப்படையும் தானிழந்து காலாளாய் ஓடினரே
பகைத்தவர் நெஞ்சம் பதைக்கவுதைக் கும்பாதன்
வகைக்கொண்ட லான்சேய் மங்கைபூ பாலகன்மேல்
செங்கைப் பரிசுபெற்ற சீரான பேர்களைப்போல்

தருமன் வெற்றி

சங்கைத் தருமன் தளத்தோரும் வாகையுடன்
வாகை யணிந்து மகிழ்ச்சிச் செருக்குடனே 430

இரவு தோன்றி பின் விடிதல்

ஓகைக் கடல்குளித்து உத்தண்ட மாகநின்றார்.
அருக்கன், தருமன்மகன் ஆண்மைநிலை பார்த்து
வெருக்கொளும் மன்னனென்று மேலைக்கடல் மூழ்கிச்
சுருக்கஅறப் போது தொலைத்தன்பு தன்சுதன்மேல்
பெருக்க உண்டாக்கிப் பிறந்தான் குணதிசையில்,
ஈரெட்டு நாட்போர் இசைத்தேம்பன் னேழாநாள்
நேரிட்ட வெம்போர் நிகழ்த்துவோம் அம்மானை.
உலகோரு டனும்பரும் புகழும் உத்தமராம்
நலமேவும் ராசாக்கள் நல்லவீ ரய்யனுட
பாத மறவான் பதினேழாம் நாட்போரை
ஓதப் படிக்கமுத்தி உறவே எழுதுவனே

பதினாறாவது நாட் போர்ச் சருக்கம் முற்றும்.

பதினேழாம் நாட் போர்ச் சருக்கம்

தோற்ற மன்னர்களும், சேனைகளும் உடன்வர, கன்னன் துரியோதனனோடு களம் புகுகின்றான். 'இன்று கன்னன் இறப்பானோ' எனத் தருமன் கண்ணனிடம் கேட்கின்றான். 'இன்று கன்னன், நாளை துரியோதனன் இறப்பர்' எனக் கூறுகிறான். தருமன் கண்ணனைப் பணிகின்றான். திட்டத்துய்மன் படையை அணி வகுக்கிறான். கன்னன், 'துரியோதனன், சாரதியானால் இன்று வெல்வேன்' என்று கூறுகிறான். துரியோதனன், சல்லியனிடம் சாரதியாகுமாறு வரம் வேண்டுகிறான். சல்லியன் மறுக்க, மீண்டும் வேண்ட இசைகிறான். சல்லியன் பாகனாகக் கன்னன் அணி வகுக்கிறான். கன்னன் சல்லியனிடம் பேசுகிறான். சல்லியன், கன்னனின் செருக்கு அடங்கப் பேசுகிறான். இருவரும் கீழே இறங்கி, வாளேந்தி அறை கூவுகின்றனர். துரியோதனன் அமைதிப்படுத்திப் போர் செய்ய வேண்டுகிறான் திட்டத்துய்மன் கன்னனை நெருங்கத் தோற்றுப் பின்னடைகின்றான். வீமன் கன்னனோடு போர் செய்கிறான். கன்னன் வீமனை கொல்லாது செல்கிறான். சாத்தகியோடு வீரசேனன் போரிடுகிறான். சோழன் மாகதனைக் கொல்கிறான். அசுவத்தாமன் வர, விசயன் அவனை வென்று மீளுகிறான். நகுலனுக்கு அஞ்சிச் சுதக் கண்ணன் ஓடுகிறான். கன்னனும் தருமனும் போரிடுகின்றனர். கன்னனால் திட்டத்துய்மன் தளரத் தருமன் போரிடுகின்றான். பலர் இறக்கின்றனர். தருமன், கன்னன் இருவரும் சங்கம் முழங்குகின்றனர். கன்னன் அம்பால் தருமன் சோர்வு அடைகின்றான். தருமன் கன்னனை எதிர்த்து நின்ற அளவில், வீமன் அங்கு வருகிறான். கன்னன் வீரம் பேசுகிறான். வீமன் அம்பால் கன்னன் அயர்கிறான். சிங்கசேனன் முதலிய எழுவர் மாய்கின்றனர். வீமன் சேனையொடு புறமுதுகிடுகிறான். அருச்சுனன் வந்து போர் செய்கிறான். அசுவத்தாமன் கன்னனுக்கு உதவுகிறான். அர்ச்சுனன் அம்பால் அசுவத்தாமன் மயங்கி விழ, துச்சாதனன் எடுத்துச் செல்கிறான். கன்னனுடன் செய்த போரில் சித்தவாகன பாண்டியன் இறக்கிறான். தருமன் சேனை பின்னிடுகிறது. சோழனுக்கும் அசுவத்தாமனுக்குமிடையே நடந்த போரில், அசுவத்தாமன் பின்னிடுகின்றான். தம்பியர் ஒன்பதின்மரோடும் துச்சாதனன் வீமனோடு போர் புரிகிறான். ஒன்பது தம்பியருடன் மாள்கிறான். துச்சாதனன் வீமன் இருவரும் போர் புரிகின்றனர். துச்சாதனன் இறக்கிறான். வீமன் துச்சாதனன் விரல்களை நறுக்கி, குருதி குடிக்க முற்படக் கண்ணன் தடுத்து விடுகிறான். வீமன், குருதி கொப்பளித்து அகங்கரிக்கிறான். கன்னன் ஓய்ந்திருக்கச் சல்லியன் இடித்துரைக்கிறான். கன்னன் மீண்டும் எதிர்க்கிறான். விடசேனன் நகுலனுடன் போர் செய்து அவனை மயங்கி விழச் செய்கிறான். நகுலனை வீமன் எடுத்தேகுகின்றான். அருச்சுனனால் விடசேனன் மாய்கிறான்.

கன்னன் மயங்க, சல்லியன் தேற்றுகிறான். அசுவத்தாமன் துரியோதனனுக்கு அறிவுரை கூறுகிறான். அவன் மறுத்துரைக்கிறான். அசுவத்தாமனோடு துரியோதனன் வந்து கன்னன் சோக மாற்றிப் போரிடத் தூண்டுகின்றான். கன்னனும் விசயனும் போர் புரிகின்றனர். போரில் விசயன் செயலற்று நிற்கக் கண்ணன் காரணம் கேட்கிறான். கன்னன் தருமன் போலத் தெரிகிறான் என்று கூறிப் போரிடத் தயங்குகிறான். விசயன் தருமனொடு மாறு கூறத் தருமன் துறவு கொள்வேன் எனக் கூறுகிறான். கன்னனை எதிர்த்து விசயன் போரிடுகின்றான். கன்னன் நாகாத்திரத்தை ஏவ, கண்ணன் தேரை அழுத்த, அது விசயன் கிரீடத்தைத் தகர்த்து ஓடியது. மீண்டும் ஏவுமாறு வேண்டக் கன்னன் மறுத்து விடுகின்றான். விசயன் தப்பியதற்கு இருதிறத்தாரும் மகிழ்ந்தனர். சல்லியன் வருந்தி, தேரினின்றும் இறங்கித் தன் தேருக்குச் செல்கின்றான். கன்னன் வேறு தேர் எறி விசயனுடன் போரிடுகின்றான். கன்னன் தளர்ந்த நிலையில், கண்ணன் அறிவுரையால் விசையன், கன்னன் உயிர்க் காற்று நீங்கச் செய்கிறான்.

போரை நிறுத்தச் செய்து, கண்ணன் அந்தணர் வடிவில் ஆண்டுப் போந்து கன்னனிடம். அவனது புண்ணியத்தை இரந்து பெறுகிறான். கண்ணன் கன்னனுக்கு வரம் நல்குகின்றான். கண்ணன் தன் உருவினைக் காட்டி கன்னனுக்கு அருள்புரிகின்றான். பின்னர் விசையனுக்குச் சாரதி ஆகின்றான். கண்ணன் மொழிப்படி விசயன் அம்பு ஏவ கன்னன் இறக்கின்றான். அசரீரியால் செய்தி உணர்ந்த குந்திதேவி அங்கு வந்து அழுது அரற்றிக் கன்னனைத் தன் மடியில் வைத்து அமுதூட்டக் கன்னன் ஆவி பிரிகிறது. துரியோதனன் படை, வீமனாலும் விசயனாலும் குறைகின்றது. துரியோதனன் புலம்புகின்றான். கதிரவன் மறைகின்றான். தாயின் அழுகை கேட்டு, ஐவரும் கண்ணனை வினவிச் செய்தி அறிந்து கன்னனை அணுகுகின்றனர். ஐவரும் புலம்புகின்றனர். துரியோதனன், சகுனியொடு தன் இருப்பிடம் செல்கின்றான்.

ஈரொரு பிறப்பின் ஒருசிறு குரளாய்
யாவரும் தேவரும் வியப்பக்
காரொரு வடிவு கொண்டெனச் சென்று
காவல்கூர் மாவலி அளித்த
நீரொரு கரத்தில் விழுமுன் தரங்க
நில்நிற மகரநீர் உடுத்த
பாரொரு கணத்தில் அளவிடும் கமல
பாதனார் நாதனார் நமக்கே.

ஸ்ரீராமஜெயம்

இருவர் படையும் புறப்படல்

நானான்கு நாளாய் நயந்திறந்தோர் அல்லாதோர்
தானே இருதிறத்துத் தானை அடங்கலுமே
இன்றே மடியும் எனவா னவர்மயங்க
அன்றாழி ஓதையினும் ஆயிரமாய்ப் பல்லியங்கள்
மென்மேல் முழங்களழில் வெஞ்சா மரையிரட்டப்
பொன்மே உயர்ந்த பொருவில் கவரியிட
போத நிலவு பொழியும் செழுங்குடைக்கீழ்
நாதன் சமர்க்களத்தில் நண்ணினன்காண் அம்மானை.
ஈரெட்டு நாளாய் இறந்தோர் அடங்கலுமே
ஓரெட்டா யின்றே உயிர்பெற் றெழுந்தாப்போல்
தேரும் கரிபரியும் சேர்ந்த பதாதிகளும்,
காரும் கடலும் கலந்தொன்றாய்ப் பொங்கியபோல்,
விண்மண் திசைதோற்றா வெள்ளப் பெரும்படைகள்
மண்மகள் அஞ்ச வயங்கொண்டு தற்சூழ

துரியோதனனும் கன்னனும் வருதல்

அரவக் கொடியோன் அருகுவர அருக்கன்
வரிசைக் குமரன் மலைக்கக் களத்தில்வந்தான்
சென்னி மகுடம் திரண்ட வெயிலெறிப்ப
மன்னு குழைப்பணியும் மார்பணியும் சோதிசெய்யக்
கையி லணிகால் கழலும் வெயிலெறிப்ப
மெய்யிற் பலபூண் வெயிலெறிப்ப மெய்வடிவம்
தன்னைப் பயந்தோன் தனிலும் கதிரெறிப்பக்
கன்னனைக் கண்டோர் களிப்புறாது ஆரொழிந்தார்.

வள்ளலும் மன்னனுமிவ் வாறாகச் சேனையுடன்
வெள்ளம் பரந்ததுபோல் வெங்களத்தில் வந்திடவே.

பாண்டவர் படை

பஞ்சவரும் சேனைப் பரவைகளும் மன்னவரும்
அஞ்சன மெய்யானும் அமர்க்களத்தில் வந்தனரே
காசினித்[1] தேர்மேல் கறைக்கண்டன்[2] நின்றதுபோல்
நேசமுடன் அங்கர்பதி நிற்குநிலை தான்பார்த்து
அருளும் பொறையறம்எல் லாமோர் ருருவெடுத்த

தருமன் கண்ணன் அடி வீழ்ந்து கேட்டல்

தருமன் அடைந்தோர் சகாயனெனும் மாலடியில்
வீழ்ந்தான் பதம்இரண்டும் மிக்கவிழியிற் பொதிந்தான்
தாழ்ந்தே சிலசொல் தருமன் நயந்துரைப்பான்
இன்றமரில் சீவன் இறப்பனோ பானுசுதன்
மன்றமரில் இன்றுகன்னன் மாயா திருந்துவிட்டால்
வண்மையுடன் என்துணைவர் வாகை புனைவாரோ
திண்மை நெடுமுகிலே செப்புகெனக் கேட்டான்

கண்ணன் கூற்று

இன்று விசையன் எழிற்கணையால் பானுசுதன்
பொன்றி விழுவன் புயங்கக் கொடியோனும்
மாருதி கையால் மடிந்திடுவன் நாளையென்று.
பாருல கெல்லாம்உன் பைங்குடைக்குள் ளாகுமென்று
சொல்லமிர்தம் சென்று செவியில் நுழைந்திடவே
பல்லுலகு பெற்றானபோல் பாம்பணையான்[3] தாள்
தொழுது

தருமன் புகழ்ச்சி

தாயாதி செய்வஞ் சனைக்கடலில் தாளாமல்
நீயாதி எங்களையே நித்தமுமே தான்காத்து
வன்பகைக்கு மாறேந்தி மாற்றாரைச் சங்கரித்து
என்பகையும் தீத்து எனக்கரசும் ஈந்தனையே.

---

1 உலகம்
2 சிவபெருமான்
3 கண்ணன்

வல்லாண் யுள்ள நெடுமாலே அடியேங்கள்
தொல்லாண்மை யும்புகழும் தோற்றவே வாகையுற
நின்னை யலது நிலைநிறுத்த வல்லருண்டோ.

தருமனுக்குக் கண்ணன் செய்த உதவிகள்

என்னையே தந்தை இழந்த சிறுவயதில்
சிந்தை கலங்காமல் தேற்றி மதியுரைத்தாய்
தந்தைதுணை மூதாதை தங்களிடம் ஒப்புவித்தாய்
அரவக் கொடியோன் அளித்தவந்த நஞ்சனத்தில்[1]
மரணத்தைச் சாராமல் வனமயிராய்த் தோற்றுவித்தாய்
கயத்தில் நிரைத்த கழுமுனையில் ஓர்அளி[2]யாய்
வயத்தின் செயவீமன் மாளாமல் அன்றளித்தாய்
திக்கு விசயம் செலுத்தவே காண்டவனம்
அக்கினி வேந்துக்கு அருந்திஅழி யாத்தேர்வில்
அட்சயத் தூணி[3] அனர்தம் பலபடையும்
வச்சிரன் மைந்தன் பகனுக்குகந் தளித்தாய்.
இந்திரன் முதலா இமையோர் பெரும்பகையும்
அந்தரம் போக அருள்வாகை யும்அளித்தாய்
ராச சுயாகம் நடத்தும் பொருட்டாக
ராசசரா சந்தனையே நந்துவிக்கப்[4] புந்திசொன்னாய்
வேள்வி முடித்தாய் விசயனுக்கு நண்பானாய்
தாழ்வில் உனைநினைந்த தையல்[5] துகில்வளர்த்தாய்
பகைவன் பணியால் பசியால் வருமுனிவன்
தகையும் பசியகற்றிச் சாபம்வா ராதளித்தாய்
அற்ற கனிபொருத்தி அன்றுதுயர் நீக்கிவைத்தாய்
உற்று நினைந்த வுடன்வந்து காக்கலுற்றாய்
அற்பன் எனைப்பொருட்டாய் அன்றுநீ தூதுசென்று
சர்ப்பக் கொடியோன் தனக்குப் பலனான
கவசமும் குண்டலமும் கன்னனுக்கு மாற்றுவித்தாய்
சவி[6]யுள்ள வில்விதுரன் தன்சிலையுமே முறித்தாய்

---

[1] விட உணவு
[2] வண்டு
[3] குறையாத அம்புப்புட்டில்
[4] அழியச் செய்ய
[5] பாஞ்சாலி
[6] ஒளி

நலிவு பலதீர்த்து நாககன்னி தன்சுதனைப்
பெலியைத் திதிமயக்கிப் பேணார்க்கு முன்னளித்தாய்
மானம் பெறுவிசயன் வன்போர் மறந்துநிற்க
ஞானம் சொரிந்தெதிர்ந்த நள்ளாரைச் சங்கரித்தாய்
சபதம் மறந்துறுக்கிச் சக்கரமும் தானெடுத்தாய்
சுபசங்கம் வாயால் தொனித்தாயந் திசுதனைச்

சிகண்டியையு முன்னிறுத்திச் சீவனுக்கு ஈறுகண்டாய்
இகல்பகை தத்தன் எறிந்தவேல் மார்பகத்தில்
ஏற்றாய் இரவில் இனியகயி லைசென்று
கூற்றனுக்குக்[1] கூத்தனிடம்[2] கூரம்பு வாங்கிவந்தாய்
வருணன் மகன்எறிந்த வன்கதையில் மாளாமல்
கருணையாய் அர்ச்சுனனைக் காக்கநீ மார்பேந்தி
அங்கவனைக் கொன்று அரசர் மயக்கமுற
சங்கம் முழக்கியெழில் சக்கரத்தி னால்கதிரை
மறைத்து அபிமனுக்கு வன்பழியும் கொண்டனையே
விறற்பண் டிதன்குமரன் விட்டகணை எங்களையே

கொல்லா விதம்படையும் கோதண்ட மாற்றுவித்து
சொல்லா நீசெய்தநன்றி சொல்லி முடிவதுண்டோ
மூவரும் ஒன்றான மூர்த்தியே முப்புவியோர்
தேவ ருணராச் செயலெம்மால் செப்புதுமோ
என்று நயந்தின்சொல் இயம்பி யடிபணிந்தான்

கண்ணன் கூற்று

அன்று நெடியோன் அறன்மகனைத் தானிறைஞ்சி
கைகளால் தான்தழுவிக் கடல்கருணை நீர்தெளித்து
மெய்கருதும் ஐவரையும் வீயாது காப்பனென்று
அஞ்சலஞ்ச லென்று அருளுபசா ரம்பகர்ந்து

திட்டத்துய்மன் அணி வகுத்தல்

கஞ்ச மலர்க்கண்ணான் கனலிற் பிறந்தானை

நோக்கி அணிநீ நொடிக்குள் வகுத்திடென்றான்.
தீர்க்கமுடன் தீப்பிறந்தோன் தெவ்வரஞ்ச வேவகுத்தான்
ஐவர்கள் சேனை அணிந்த நிலைபார்த்துத்

---

1 அர்ச்சுனன்
2 சிவபெருமான்

கன்னன் கூற்று

தெய்வசே னாபதிநேர் தீரன் பருதிசுதன்
மாசுணக் கேது வதனந்தனை நோக்கித்
தேசரசர் வீரர் செவிகேட்க வேதுசொல்வான்
மன்னவர் மன்னா மகிபர் சிரோமணியே
மின்னென் கணைக்கெதிரோ வில்விசையன் மற்றோரும்
கால சூலத்தைக் கறுக்குமெந்தன் கைக்கணையால்
ஆலகா லம்போல் அமரர் சிரமறுத்து
இப்பா ருலகமெல்லாம் எள்ளலற நின்குடைக்கீழ்
வைப்பேன் நீசற்றும் மனம்இளைக்க வேவேண்டாம்
ஆனா லொருசொல் அரசேநீ தான்கேளாய்
மானா பரணான வல்விசைய னுக்குரமாய்
தேரு முடையாது திண்கொடியும் மங்காது
நாரின் தனுமுறியா நால்பரியும் சாகாமல்
வல்லாளன் மாயன் வலவனுமாய்ப் பெற்றிருந்தால்
வெல்லானோ தன்பேர் விசயனென்றுஞ் சொல்லானோ

துரியோதனன் கூற்று

என்றுரைத்தான் நண்பர்க்கு இராசராசன் பகர்வான்
தேர்ஒன்றுக் கோர்கோடி தேர்பின் நிறுத்திவைப்பேன்
தேர்வொன்றிற் கோடிசிலை தூணியும் தருவேன்
சொன்ன சபதமொழி சோராது பார்த்தனைநீ
சென்னி யறுத்துச் செகமெந் தனுக்கருள்வாய்

கன்னன் வேண்டுகோள்

என்னத்தேர் வில்இத் தனையெனக்குத் தான்வேண்டாம்
துன்னித்த மால்போல்தேர் தூண்டவல்ல சல்லியனை
என்தேர்க்குப் பாகன் எனஇணக்கித் தந்தாயேல்
பொன்தேர் அருணனையே பொற்றேர் அதிவிரகாய்க்
கடவிச் சமர்விரகும் காட்டிக் கொடுக்கவல்லான்
அடவினாலத் தேர்நடத்தி ஐவரையும் மித்தையிலே
கொய்வேன் சிரத்தைக் குறையுடலம் தான்துடிக்கச்
செய்வேன் உனதுபகை சேரவே தானறுப்பேன்
பாற்றனுக்குச் சாரதியாய்ப் பாரளந்தான் அன்றியிலே
ஏற்று வாகன்தேர் இசைந்தே கடவுகினும்
ஒப்பாக அத்தேர் உறைந்தோர் இருவரையும்

தப்பாமல் கொல்வேன் சதாகதிசேய் மற்றுமுள்ளோர்
நிற்பாரோ என்முன் நிமிடப் பொழுதெனிலும்
பற்ப மெனநின் பகையெல்லாம் நீறாக்கி
உன்குடை நீழல் உலகங் குடியிருக்க
புன்கநல் வாகை புனைவிப்பேன் நிந்தனுக்கே
நஞ்சுண் டிருண்டகள நற்றொண்டர் மெய்வடிவாய்

மஞ்சுலவு கைகதை வளநாட் டரசேறே
நின்னிடத்தில் எந்நாளும் நின்னிலுஞ்சீர் உண்டாக
இன்னமுத மன்னமும்பர்க் கெட்டாத பாக்கியமாய்
ஆட்சியுடன் உண்டேன்தன் தோழன்போல் வாழ்ந்தேன்
காட்சியுடன் சோற்றுக் கடனின்றே தீத்திலனேல்
என்றோள் வளர்ந்ததனால் என்னபலன் மன்னவனே
நன்றாய்நீ செய்தநன்றி நான்மறவேன் என்றுரைப்பான்.
ஒருரும் ஓர்குலமும் ஓர்பேரும் ஓதரிதாய்
தேரூரு வார்மனையில் சேர்ந்தளனைச் சீர்பெறவே
உங்கள் குலத்துக் குயர்ந்தகுல மாக்குவித்துத்

துங்க மணிமகுடம் சூட்டிஅங்கர் கோனாக்கி
நின்னை ஒழிந்தல்லா நிருபருக்கு மேலாக்கிக்
கன்னன்எனும் பேர்விளக்கும் காதலனே கோமானே
என்னுயிரை நிந்தனுக்கே ஈயாது யார்க்களிப்பேன்
மன்னர்மன் னாவென்ன மகிழ்ந்தவனும் தான்கேட்டு

துரியோதனன் சல்லியனை வேண்டல்

பழுதற்பம்[1] இல்லாத பார்த்திபனும் சல்லியன்முன்
செழுமைப் புகழ்வேந்தன் சென்றிருகை யால்இறைஞ்சி
என்னாணை தட்டாது எனக்கோர் வரமளிப்பாய்
மன்னாவெனப் பிதற்ற மத்திரத்தான் எதுசொல்வான்
சேந்தோரைக் காத்துச் செறுத்தோரைச் சங்கரிக்கும்

வேந்தே ஒருவரம்நீ வேண்டில் மறுக்கேனெனப்
பஞ்சவரை மாயன் பரிவாகக் காப்பதுபோல்
எஞ்சல்நீ காப்பாய் எங்கள்தனை என்றுரைத்தான்.
பூமி யடங்கப் புரவலர்கள் தானடங்க
ஏமமுடன் காற்று இரட்சிக்கும் மன்னவனை

1 சிறியகுறையும்

நின்னேவற் குள்ளாக நிற்கின்ற என்போல்வார்
மன்னா நினைப்பு ரக்குமோ வாய்ப்பான
தேவுமாய் மானிடமாய்ச் செப்புஞ் சராசரமாய்
யாவுமாய் நின்றோனை யானோ நிகர்த்திடுவேன்
நிகரத்த மன்னவனே நின் நினைவுஏது ஓதுகெனப்

கன்னனுக்குச் சாரதியாக வேண்டல்

பகர நெடியோன்தேர் பார்த்தனுக்கே ஊர்வதெனப்
பாங்கனுக்குந் தேரூர்ந்தால் பஞ்சவரை இன்றையிலே
பூங்கணையால் கொன்றுவெற்றி பூணலாம் என்றுரைத்
தான்

சல்லியன் சினவுரை

என்முகம் நோக்கி இயல்பிலாப் புன்மொழியைப்
புன்மதியர் போலப் புகன்றாய் புலியுழை[1]க்கு
ஏவல் செயுமேல் யானவன்தன் தேர்ஊர்வேன்
நாவென் படும்சொல் நவின்றது நீ அல்லவெனில்
என்றான் கொதித்தான் இருகண் தழல்சொரிந்தான்
நின்றே புருவம் நெரிய நெடிதுயிர்த்தான்
மீசை துடிதுடிக்க மெய்களெங்கு மேதுடிக்கப்

பூசை[2]க்குச் சிங்கம் புரிதொழிலோ செய்வதென்றான்
பாரரசர் என்னைப் பழித்தே நகைக்காரோ
தாரரசர் போற்றுகின்ற சர்ப்பக் கொடிவேந்தே
இந்த இழிவு எனக்கோ உனக்கலவோ
நிந்தனுக்குக் கன்னன் நிகரற்ற வீரனன்றோ
இருக்கும் படையை இரண்டாகவே பிரித்து
அருக்கன் மகன்போருக் ஆற்றாதென் சேனையுடன்
தோற்றேன் எனில்தேர் தொடர்ந்தூர்வன் என்று
சொல்ல

துரியோதனன் வேண்டல்

பார்த்தே திகைத்தரசன் பண்பாக மீண்டுரைப்பான்
வேதப் பரிப்படித்தேர் வேதனே சாரதியாய்

1 மான்
2 பூனை

ஆதிநாள் ஊர்ந்தான் அன்றானை இடர்தீர்த்தோன்
பாத்தனுக்குத் தேரூர்ந்தான் பாத்தன்மேருத் திரன்தேர்
சீற்றமற ஊர்ந்திலனோ சீர்வேந்தே நின்போல
வீறால் வலியால் வியப்பாற் பெரும்புகழின்
பேறால் செயவிசயம் பெற்றோர்கட் கல்லாது
மற்றும் பெயர்க்கு வருமோ ரதம்நடத்த
உற்றன்பாய் நீதேரின்று ஊர்என்று உபசரித்துக்
கையால் இறைஞ்சுதலும் காவலன்சொல் தட்டாமல்

சல்லியன் இயைதல்

எய்யாது சம்மதித்தான் என்னசெய்வான் அம்மானை.
மாயன் மகவான்மகன் அம்பாகன் ஆனதுபோல்
பாகிரவி சேயனுக்குப் பாகானான் சல்லியனும்
வெற்றியெல்லாம் பாம்புயர்த்த வேந்தனுக் கென்றே சேனை
முற்றுஞ் சலதி முழக்காக வாற்றதுவே
கொடுத்த கவசமுடன் குண்டலமும் பெற்றான்போல்
மிடல்கொண்ட மந்திரனை வெய்யோன் மகன்தழுவி

கன்னன் போருக்கு ஆயத்தமாதல்

பொற்றேரில் ஏற்றியபின் போர்க்கமைந்த மாப்பூட்டி
அற்றேரை ஊர்ந்தான் அருணனிலும் மிக்காகப்
பூபாலர் வேந்தனுடன் பொன்றொழிந்த தம்பிகளை
மாபாதகச் சகுனி மற்றுமுள்ள மன்னரையும்
கிள்ளைத் தாமா[1]வும் கிருதன் கிருதபற்பன்
உள்ளபதாதி யெல்லாம் உற்றே அணிநிறுத்தி

கன்னன் கொடை வழங்கல்

வள்ளலெனுங் கன்னன் வழங்கினான் பொற்றருப்போல்
மாற்றாரு மித்திரரும்[2] மற்றுங் குலத்தோரும்
ஏற்றோர்க ளெல்லாம் இராசபதம் பெற்றோர்கள்
கந்த னொருமுகமாய்க் கன்னனாய் வந்ததுபோல்

---

1 அசுவத்தாமன்
2 நண்பர்கள்

கன்னன் சல்லியனிடம் கூறியது

சந்தமுடன் தேரிருந்து சல்லியனோ டேதுரைப்பான்
பரிசுரிஷி யளித்த பார்வில்லு முன்புபெற்றேன்
அரவப் பகழிபெற்றேன் அற்புதமாம் வித்தைபெற்றேன்
மாயனென உன்னை வலவனெனப் பெற்றமையால்
மீயுலகில் பூவுலகில் வெல்லுதற்கு வல்லருண்டோ

எனக்கு விசையனலது இல்லைஎதிர் அவ்விசையன்
தனக்கு மெனையலது தானமூ வுலகிலில்லை
சிந்தைக் கிசைந்த சிலதனே என்வலியை
இந்தத் தினத்தில் இசைந்தறிநீ என்றுரைத்தான்

சல்லியன் இகழ்ச்சி

சல்லியன் கேட்டுத் தனிப்புன் முறுவல்செய்து,
வல்லியம் போல்கற்ற வலிவும் புயவலியும்
உற்ற சவுரியமும் ஊக்க மனவலியும்
வெற்றிகளும் என்னிடத்தில் விள்ளாதே துள்ளாதே
ஆதரவாய் நின்னை அறியாத பேர்களுக்குப்
போதரவாய் நீயுரைத்தால் புத்தியிலார் ஒத்திருப்பார்

உன்போரும் திண்மையினால் ஒப்பிலா வில்விசையன்
வன்போரு செய்யிடத்து மாறாது பார்த்துநின்றோம்
பங்கமாய் நின்னைப் பலபாடு தான்படுத்தி
அங்கவன் வாகை அணிந்ததல்லால் ஓர்காலும்
நீயவனை வென்ற நிலவரங்கள் கண்டதில்லை.
ஆயும் போர்தோறும் அவன்தன் கடுங்கணையால்
தேரிழந்து வில்லிழந்து செய்யமுடி யிழந்து
பேரிழந்து நாளும் புறங்கொள்வ துன்சகசம்.
இரதம் பரிபாகு இயற்கொடிவில் நாணிவையில்
துரிதமுடன் ஒன்றைத் துணித்தால் நீஇந்தவிறல்

சொல்லலாம் வீணாகச் சொன்னமையால் என்னபயன்
வெல்லலா மோநின் விறுமாவால் அர்ச்சுனனை
திறல்விருது மானம் சிறிதேனும் இல்லாதோய்
கறுவுசம ரித்தையிலே காண்பேன்நின் ஆண்மையென்றான்.
கார்க்கு நேராகக் கனகஞ் சொரிவதன்றிப்
போர்க்கவன் போல்வாளி பொழியஉனக்கே வருமோ.
பண்டிரு வோரும் பகர்வஞ் சினமுடிவு

கண்டிடுவன் இப்போரில் கண்ணாலே என்றுரைத்தான்.

கன்னன் சினம்

பாகன் உரைத்த பழிச்சொல் செவிதுளைக்க
வேகித்துக் கன்னன் விழியால் தழல்சொரிந்து

நெஞ்சங் கனன்று நெடுமூச்சுத் தானெறிந்து
மிஞ்சுங் கொடையான் வெடிக்குரலாய் ஏதுரைப்பான்
இந்திரன்சேய்க் கென்னை எதிரில்லை என்றிகழ்ந்து
சந்தமு நிந்தன் சதைமுரண்டாய்ப் பேசுவதேன்
வாசித் தேரூர வருமாகில் ஊர்வதன்றிப்
பூசல் வலுமை புகலநீயார் கொல்லென்றான்
வள்ளல் கடுஞ்சொல் வழுத்த வலவன்கேட்டுத்

சல்லியன் நீங்குதல்

துள்ளித் தேர்விட்டுத் தொடர்ந்தரி போலக்குதித்து
மன்னன் மொழிக்காக வந்துதேர் ஊர்ந்தமையால்
சின்ன மொழிசொல்லச் செவிதாழ்ந் திருப்பேனோ

வலியச் சருவி மதத்தே வெரு[1]கிடத்தில்
எலிஎதிர்ப் பட்டாற்பின் என்படா தென்றுருத்து
வாள்பரிசை ஏந்திமிகு மன்மண் டலம்பயிற்று
தாள்வலியன் வானிடிபோல் தானார்ப் பரித்துவர

இருவரும் போரிடல்

பானு சுதனும் பரிசையுடன் வாளேந்தித்
தானு மவனும் சமர்பொருதார் அம்மானை.
இருவர் இருகாயம் இகல்முன் னரவுயர்த்தோன்

துரியோதனன் விலக்கிக் கூறுதல்

வெருவுற்ற சிந்தையுடன் வெய்திற் சமர்விலக்கி
மூண்ட சினம்தீர்த்து முரண்தீர்த்து அவர்கள்தம்மை
மீண்டு தேரேற்றி விரைந்துபோர் செய்யுமென்றான்,

பஞ்சவர்கள் தான்மாயப் பாரெல்லாம் தானாள
நெஞ்சில் நினைந்துள்ள நிலமெல்லாம் தானிழப்போன்.
ஆசான் கிருபன் அசுபத்தா மன்கிருதன்
தேசாதி பர்கள் திரிகர்த்தனுடன் சாளுவனும்

---

1 காட்டுப் பூனை

சகுனி முதலாய்ச் சலதிப் பதாதிகளும்
மகிழ் கன்னனைப் பரவிவாகாகச் சூழ்ந்துநின்றார்

சல்லியனை வேண்டல்

சல்லியனை மன்னர்பிரான் தானுகந்து கண்ணோக்கி
வல்விசையன் தாதையிடம் மாறாதின் றேகிடுவான்
போர் வெற்றிவாகை புனையலாம் மித்தையென்று
சீர்பெற்ற மன்னன் திரியோதனன் சொலியே

நின்பொருட்டால் வெற்றி நிலைக்கு மென்றுசல்லியனை
மன்பொருட்டாய்ச் சொல்லி மனமகிழ்ச்சி செய்ததற்பின்
சீயமெனும் பானுசிறுவன் முகம் நோக்கி
மாயன் விரகதனால் வல்விதுரன் வில்லொடித்தான்
பரித்தாமன் சிந்தைதனைப் பாதகமாய்ப் பேதலித்தான்
உரித்தாங் கவசமுமுன் குண்டலமும் மாற்றுவித்தான்
என்பங்கில் வந்த இராமன்[1] விதுரனுமாய்
அன்பின்பல் தீர்த்தம் ஆடநயந்து சென்றான்
கங்கை புதல்வன்தாதை காதல்தீர்க்குங் குமரன்
எங்களுக் கிவ்வாழ்வு புவியெல்லாம் உகந்தளித்தான்

செங்களத்தில் மாற்றார் திகைக்கப் பொருதளித்தான்
துங்கமன்னன் ஆசுகத்தில் சோர்ந்தான் உயிரிழந்தான்
விற்காளை ஒப்பான வில்லாசிரி போரில்
தற்கருதார் சேனை தகனித்துயி ரிழந்தான்
தேவர்க் கியல்வாழ்வு செவ்வேளை யல்லாமல்
ஆவத் தணுகாமல் அன்றழித்தார் வேறுமுண்டோ
என்னைப் பகைத்தோர் இகலறுத்திவ் வாழ்வுதர
நின்னைப்போ லுற்றதுணை நீணிலத்தில் வேறுமுண்டோ
என்னுயிரும் என்னுளமும் என்மனமும் என்வலியும்
என்விழியும் என்நலமும் எல்லாம்நீ யென்துணையே

பஞ்சவர்க்கு மெய்யுருத்தாம் பண்பான மித்திரர்கோன்
தஞ்சமவர்க் காகாமல் தான்விளைந்த நண்பதனால்
எனக்குப் படைத்துணையாய் இங்குகந்து தான்சேர்ந்தான்
கனக்கும் சமரிலிவன் கைப்படைக்கும் ஒப்புமுண்டோ
என்சொல் மாறாதுஉன் னிரதத்தில் பாகானான்
நன்சொலால் நண்பாய் நயந்தொழுகி நித்தல்புகல்

---

1 பலராமன்

வன்சொல்எவை சொற்றாலும் மற்றிசைதல் மெத்தநன்று
புன்சொல் விளைத்தூடல் புதுமைஎன உரைத்து
பற்பல வயணம்[1] பகர்ந்தே இருவரையும்
பொற்பருதி யோடருணன் போலே பொருந்தவைத்தான்,

மன்னர்கோன் சொல்ல மனமொத்து நிற்பளவில்

கன்னன் திட்டத்துய்ம்மன் எதிர்த்தல்

கன்னன்மேல் தேரைக் கடுக்கி முடுக்கிவிட்டு
வரிவில் வளைத்து மழைமாரி ஒப்பாகச்
சொரியும் கணைமாரி சோராமலே வீசி
மன்னர்கோன் சேனை மடியப் பொடிபடுத்தி
வன்னிதனில் பிறந்தோன் வந்தடரக் கண்டுகன்னன்
காலாந்தகன்[2] போல் கடுங்கார் முகம்வளைத்து
வேலாந்த கைத்தலத்தான் விற்கோன் மழைசொரிந்து
அரன்மகன் சேனை அழிய நிலையழிச்து
விறன்மிஞ்சு கன்னனுமே வெவ்வினைப்போர் செய்துறுக்கி

ஐவர் சேனாபதிமுன் ஆர்க்கரித்து வந்திடவே
தொய்விலா தங்கவனும் சூரன்மகன் மேலே
வெற்றிவரி வில்வளைத்து மிக்காஞ் சரமாரி
கொற்ற முகில்பனித்த கோலமாய் வீசினனே
இருவினைச் சேனைக் கிருவர் அடர்ந்தடர்ந்து
பெருவினை யாகப் பிறங்கச் சொரிகணையால்
பகழி யுடனே பகழியுமே வெவ்வினையாய்
உகளத் திசைவெளியும் வெங்கதிரும் தோற்றாமல்
துசம்பெற்ற வீரர் தொடுத்த சரமயமாய்
பேராய வெளிகள் பிறங்கவே தானிறைந்து

சோராது மேன்மேல் சொரிந்து நின்றாரம்மானை.
ஒற்ற சமரில் உதையன் திருக்குமரன்
கொற்ற முறச்சிந்தை கொதித்துக் கொடுங்கணைகள்
சரம்பற் பலவிடுத்துத் தக்கசிலை நாணழித்து
உரம்பட் டுருவ உயர்கவசந் தான்பிளந்தான்.
சிலைநாண் கவசம் சிதையத் திடுக்கமுற்று
நிலைநாணித் தேருடனே நீங்கினன்காண் அம்மானை.

1 நயவுரை
2 சிவபெருமான்

பஞ்சவர் சேனா பதியோடப் பானுசுதன்

கன்னன் துரத்திச் சேறல்

குஞ்சரத்தை யேதுரத்திக் கொண்டமத கேசரிபோல்
தேரை நடத்தித் திறல்சண்ட வாயுவென

வீரை முகிலூழி வெங்கனலும் ஒத்தாற்போல்
கடிய சுடுசரங்கள் கன்னன் மிகவிடுத்துப்
படிகள் நடுநடுங்கப் பஞ்சவர்மேல் சென்றனனே
தன்சேனை யாவும் தனுவிழந்து நாணிழந்து
பொன்தேரும் பாகும் புரவிக் கொடியிழந்து
காற்றேறு பட்டுக் கலங்கும் சருகினம்போல்
வீற்றாய்க் கரையிழந்த வெள்ளம்போல் மீண்டுவரும்
பரவைத் தளம்பாடு பட்டுவரல் பார்த்து

வீமன் வால்

கரையற்ற கோபமொடு கண்சிவந்து மல்வீமன்
தன்னொத்த வீரர் சலதிஎனச் சூழ்ந்துவர

மின்னொத்த பல்பகழி வீசிஎதிர் நேர்ந்தாரைச்
சிரங்கள் பலவறுத்துச் சென்னிமலை கூய்த்துக்
கரங்கள் பலவறுத்துக் கைம்மலைகளாய்க் கூய்த்து
உரங்கள் அறுத்து உயர்மலைகளாய்க் கூய்த்துப்
புரங்கள் அறுத்துப் பொருவில்மலை கூய்த்து
தேரினங் களெல்லாம் சிதையவே நீறாக்கி
வாரணங்கள் எல்லாம் மடியப் பொருதழித்து
பரிவர்க்கம் பஞ்சாய்ப் பறக்கப் பொருதழித்துத்
தெரிவுற்ற சேனையெல்லாம் சின்னம்பட நொறுக்கி

அசுவத்தாமனோடு போர்

வல்லாளன் என்னஎதிர் வந்தபரித் தாமனையே

வில்லோடு தேர்கொடியும் வெஞ்சரத்தின் நீறாக்கிப்
போரழிந்து பூசுரன்தன் புத்திரன்வென் னிட்டதன்பின்

கன்னன் மீது செல்லல்

தேர்விரைந்து தானடத்திச் சென்றருக்கன் சேய்மீதில்
முன்னோன் உரைத்த மொழிப்படியே வில்வளைத்து

மின்னாரும் வேலாலும் வெய்யசூ லத்தாலும்
வச்சிரத்தால் சக்கரத்தால் வாளால் கதாயுதத்தால்
உச்சிதத்தால் வன்போர் பற்றிஒரு வர்க்கொருவர்
சீரொத்துச் செய்த செருவிற் சினமூண்டு
வீரர்க்கு மிக்கோர் வெகுண்டு சிலைவளைத்துத்
தெளிந்த கமலமதில் சேலிரண்டு டாடலென்ன

விளங்க வலமிடமு மீறித்தேர் கோலிவரச்
சேடன் நடுங்கச் செகநடுங்கச் சேணடுங்க
நீடுங் கிரிதிசையும் நின்றே நடுநடுங்க
நாணோதை ஏற நடுவெளியெல் லாமறையச்
சேணாடர் அஞ்சிந் திகைக்க மனந்துணுக்க
அம்பு மயமாக அந்தரங்கள் தான்தூர
இம்பருறு மன்னவர்கள் எல்லாம் அதிசயிக்க
இருவர் சிலையிரண்டும் இந்திரதனு விரண்டாய்
சொரியும் கணைமாரி சோனைப்பெரு மழையாய்
சாமும் சரமும் சமர்மூண் டிகலிடவே

விரவுஞ் சமர்முகத்தின் மேலாடி வெங்கணையால்
முப்புரம்நீ றாக்கியமுக் கண்ணன்வலக் கண்ணளித்தோன்
துப்புளான் அமரர்தோள் துறக்கவே தான்துளைத்தான்

வீமன் தளர்தல்

தோளகல மார்பும் துறக்கத் துளைத்ததற்பின்
ஆழியெனும் வீமன் அயர்ந்தே நிலையழிந்தான்
கலக்கமுடன் கலங்கிக் காசினியிலே வீழ
வலக்கண்ண னஞ்சேய் இடக்கண்வா குந்துடித்திடவே
கலக்கண் புனல்சேரக் கன்னனுளத் தெண்ணலுற்றான்
காயம் அவகுணங்கள் காட்டும் முறைமையினால்
ஆயுந் துணையான ஐவரையும் இன்றிழக்கும்

காலமி தென்னக் கலங்குந் தருணமிதில்
சாலப் பெருங்காயந் தன்னில்வேல் உற்றதென
ஈரிரண்டு நாலிரண்டு எண்ணிரண்டு பன்னிரண்டு
கூரடர்ந்த வாளியினால் கொற்றம் புயமார்பு

வீமன் கனனனிடம் கூறி அகலுதல்

எங்கும் பரவி யிகல்மா ருதியேவி

அங்கர்பதி பாகனைப்பார்த்து ஆர்ப்பரித்து ஏதுசொல்வான்
எம்பி சபதமதுக்கு ஈன முறாதபடி
உம்பல் அனையாய் உயிரீந்தேன் அல்லாமல்
நீதேர் நடத்தும் நிகரில்வலி யில்லாமல்
கோதானவன் தனக்கோர் கொற்றம் புயவலியேன்

என்று பகர்ந்து எதிரிலா மாருதியும்
அன்று புறங்கொண்டு அகன்றான்காண் அம்மானை.
கன்னன் சிலைவலியால் கால்குமரன் மற்றுமுள்ள
மன்னவரும் அஞ்சிமும் மாறிவெருண் டோடியபின்

விடசேனன் போர்

கதிரீன்றவன் ஈன்ற காளை விடசேனன்
சதிராஞ் சிலைத்தொழிலின் தக்கோர் திடுக்கிடவே
பனிக்கும் பெருமுகில்போல் பாச மழைசொரிந்து
முனிக்கு முனியாய் முழங்கி வருவோன்முன்

கருடத்துசமுடையான் முதலியோர் போரிடல்

கருடத் துசமுடையான் கன்னன்தனக் கிளையான்
உரகத் துசன்சிலதன் உற்றசுதன் மேல்நடந்தான்

திண்சிலையின் நாணோதை[1] சேணோர் செவிதுளைக்க
விண்செகமும் திக்கும் விரவிக் கணைமறைக்க
விரைவு தவறாமல் வில்வளைவு மாறாமல்
கருது சரமாரி கைவிசையாய் வீசினரே
அன்றவர்கள் செய்த அடற்சேவகன் திறம்போல்
மன்றலணி வீரியரில் மற்றெவர்கள் செய்யவல்லார்
ஒத்தவிரைவு ஒத்தபரி ஒத்தரதம் ஒத்தசிலை
ஒத்தவிசை ஒத்தகணை ஒத்தசமர் முகத்தில்
மாலிளையோன் கன்னன் மகன்மார்பும் தோள்மீதும்
சாலப் பலகணையால் தான்துளைத்தான் அம்மானை.
திண்புயமும் மார்பகமும் செந்நீர் சொரிந்திடவே
கண்பொற் பொறிபறக்கக் காய்ஒன் பதுகணையை
வல்விசையாய் விட்டுவய மாப்பாகும் தேர்கொடியும்
வில்விரவு நாணும் மிகப்பொடித்தான் அம்மானை.
தேர்வில் பரிபாகும் சேரவே தானிழந்து

---

1 நாணின் ஒலி

தார்வெற்றி மார்பும் சரம்பாய வென்கொடுத்தான்.
மாயன் இளவல் மறுகிப்புறங் கொடுக்கச்
சீயம் விடசேனன் சென்று சிலைவளைந்தான்
கார் வருடமாகக் கணைமாரி தான்சொரியப்
போர் விரவிலாமல் புறங்கொண்ட சேனையெலாம்

பாண்டவர் சேனைப் பின்னிடல்

பஞ்சவர்கள் சேனைப் பரவைக் கரையழிந்து
மிஞ்சித் திரண்டுவரும் வெள்ளம்போல் மீண்டதுவே
சிகண்டி சிலையிழந்து தேரிழந்து ஓடினனே.
மிகுந்த பலவரசர் வென்கொடுத்தா ரம்மானை.
மாநகுலன் வில்லிழந்தான் மற்றிளையோன் தேரிழந்தான்
மீனவனும் தேர்ப்பாகும் மீனக்கொடி இழந்தான்
கன்னனுக்குப் பன்மடங்கு காணுமிவன் வீரமென்று
மன்னவர்கள் எல்லாம் மனமறுக்கங் கொண்டனரே.
சோமதந்தன் தேர்வில் துசமிழந்தான் மிக்கான
வீமன் முதலானோர் மிகத்திகைத்தார் அம்மானை.

கொடுங்கார் முகத்தோடும் கொற்றவிட சேனன்
அடங்கா மடங்கலென ஆர்ப்பரித்து வந்தமையால்,
செங்கோல் நெறியால் செகமெல்லாம் தன்னுயிர்போல்

சோழன் விடசேனன்போர்

மங்காமல் காக்கும் வளவன்மத வாரணமேல்
ஏறி விடசேனன் எங்கெங் கெனச்சபதம்
கூறிவர வேறுமொரு குஞ்சரத்தில் மாகதனும்
மிக்காக ஏறி மிகச்சபதந் தான்கூறித்
திக்கா தடர்ந்து செருமினன்காண் அம்மானை.
என்னோடு சற்று இகல்பொருதி ஏகுகென்று
மன்னான மாகதனும் வந்துவரி வில்வளைத்தான்

வீறு பகர்ந்தோரை வென்றலது மீளாத
தேறும்விறல் சோழனுமே சென்றுவரி வில்வளைத்தான்
மும்மதத் தாரை முழுப்பெருக்காய் ஆறோட
மைம்முகிலை ஒத்தஇரு மத்த கயமலையே
மாறாது சோனை வருஷிப் பதுபோல
வீறா யிருவர்களும் வெங்கணைகள் வீசினரே

வாதுற்று வீசுகின்ற மாகதன்தன் கைக்கணையால்
நீதத்தில் மிக்க நிருபன் இரவிகுலன்
சிகரப் புயத்தினிலே செந்நீர் விரிந்தொழுக
மகரத்தத் தாதுதிகழ் வாகுமணி மார்பும்

வண்டு துளைத்துகுத்த வன்கறையால் மாலையில்வாழ்
வண்டுகளும் வேற்றுருவ மாசிப் பறந்தனவே.
மாகதன் வீசும் வடிக்கணையால் மன்னர்சிங்கம்
ஆகந் திகைத்து அதிகோபம் தானாகிச்
சவங்கிப் பலதேசத் தார்வணங்கு மாமுடியான்
சிவந்து செழுங்கமலச் செங்கழுநீர்ப் பூப்பதத்தான்
வானோருக்காக மயில்வா கன்னபோலத்
தானோர்கள் வேர்களைந்து சங்கரித்த அந்நாளில்
மஞ்சுவாகன் கொடுத்த வன்கோல்தனை விசையாய்
நஞ்சுதீய் கால நமன்சூலம் போல்விடுத்த

யானைத் தலை மாவுத்தன்[1]தலை மன்னன்தலையும்
வானத் தளவு மலர்ப்பந்து போலெழும்பக்
காலெட்டும் ஐந்து கரமும் ஒருவாலும்
சாலவுடல் மூன்றும் தானே தறிந்தெறிந்தான்
ஈசன் முடியில் இருக்கும் மலர்த்தாரை
வாசம் பரவ மலர்ப்புயத்திலே தரித்தோன்
மானில மெங்கும் மனுநீதி செய்கோலான்
தானுலக மெங்கும் தனிக்கவிகை யால்ஆள்வோன்
இரவி குலத்தோன் இரவிமணி முடியோன்
பொருவிற் புலிக்கொடியோன் பொங்கு புகழுடையோன்

சீரியன் நேரிச் சிலம்பன் சிலைத்தொழிற்கு
வீரியரில் ஆர்நிகரே மேலோரில் யார்நிகரே

சோழன் போர்

பொன்னி நதியான் பொழித்தகணை மாரியினால்
அந்நிலங்கள் செந்நிலங்கள் ஆயதுவே அம்மானை
சென்னி விடுத்த சிலைகணையால் மன்னவர்கள்
சென்னி மலைமலையாய்த் திக்கெங்கும் கூய்ந்ததுவே

---

1 யானைப்பாகன்

மாகதர்கோன் சாதேவன் மாயத்தான் ரணகளத்தில்
ஆக மிறந்தோர்கள் அல்லா தொழிந்தோர்கள்
பாரந் தகர்த்துப் பரந்தோடும் வெள்ளமென
வீரந் தவிர்ந்து வெருக்கொண்டே வென்கொடுத்தார்.

அசுபத்தாமன் போர்

நிலைகெட்ட நிலைகுலைந்து நின்றநின்ற பான்முறிந்து
வலைபட்ட பக்கிகளைக் போல வருந்தளத்தைக்
கண்டசுபத் தாமன் கனலாகக் கண்சிவந்து
மண்டமரில் விற்கோல மழைசொரிந்தா னம்மானை.
ஏக கடிகையிலே எல்லாம் எரிப்பனென்று
வாகமரர் சிந்தை மயங்கு மந்தவேளையிலே

அருச்சுனன் அசுவத்தாமன் போர்

சீதரன் பொற்றேர் செலுத்தவருந் தோராளன்
மோதமரில் சிந்து முனிமகன்தன் அம்பையெலாம்
சின்னம் படவே சினத்திலே தூளாக்கி
வின்னம் படத்தேர்மா விற்கொடியும் தானறுத்து

மெய்யுந் துளைத்து விரட்டினான் ஓர்இமைப்பில்.
கையம்புக் காரெதிரே காண்டீபன் முன்போரில்

சுதக்கண்ணன் போர்

கொக்குத்தாமா முறியக் கொற்றவன் தன்தம்பியரில்
மிக்க சுதக்கணன்தான் வெள்ளப்படை சூழ
அடந்தான் வடவையைப்போல் ஆலகா லம்போல்

நகுலன் போர்

நடந்தான் அவன்மேல் நகுலன் சிலைவளைத்துத்
தேரழித்து வில்லழித்துச் சீற்றமுனை யழித்து
போரழித்துச் சேனையுடன் போகவிட்டான் அம்மானை
நகுலன் கொடுங்கணையால் நாலுவகைச் சேனைகளும்
மகிபன் தனக்கிளைய மன்னனும் வென்னிட்டனரே.

மட்டுப் படாத மருவார் முன்னஞ்சேனை
கட்டுப் படாதெனவே கன்னன் கடுஞ்சினமாய்த்
தாதை ரதம்போல் தடந்தேர் தனைநடத்தி
மேதினியின் மன்னர்களும் வெஞ்சேனைச் சாகரமும்
ஊழிப் பெருங்காந்து ஊதிப் பெருகியபோல்

கன்னன் வரல்

சூழக் கதிரளித்த தோன்றல் வருங்கருத்தைக்
கண்டான் நகைத்தான் கனகவரைத் தேர்மேல்
கொண்டான் வளைத்தான் கொடுங்கார் முகக்கணைகள்
வீசினான் திக்கு விசையனுக்கு மூத்தோனும்
பேசினான் தர்மப் பெருமான் சரமாரி

இருவர் சேனையும் அழிவுபடல்

சோனைஎனச் சொரிந்து சூழநின்ற மன்னரையும்
சேனைக் கடலும் சணத்தில் பொருதழித்தான்
தன்சேனை பின்னோன் சரத்தால் மடிந்திடவும்
மன்சேனை வேந்து தருமன்சேனை உள்ளதெல்லாம்
கணத்தில் சரத்தால் களத்தில் அறுத்தெறிந்தான்.
குணத்தில் சிலைவலியில் கொற்றமதில் ஒப்புடையோர்
சூழ்ந்த இருவர் துவசப் படையனைத்தும்
வீழ்ந்து மடிந்ததற்பின் வீராதி வீரியரும்
எரினிய பொன்வெற்பு இரண்டங்கு உற்றதெனத்
தேரிரண்டில் மேலான செம்மல் இருவர்களும்

இந்திர தனு[1]ப்போல் இகல்பெரிய வில்லெடுத்துக்
கந்தரம்போல் மேன்மேல் கணைசொரிந்தார் அம்மானை.
கொலையம்பு நாண்காது கொண்டகரங் கோனிமிரா
சிலையுங் கரமும் திரண்ட கிரித்தோளும்
நிலையும் குறிப்பும் நெடுநாண் எழும்ஒலியும்
மலையும் பெருந்திறலும் வானோரும் மெச்சினரே
குணமென்னுங் குன்றேறி நின்றதொரு கொற்றவன்தன்
அணி முடிதிகழும் மேல்மூஜவந்து கணைஎவி,
மார்பில் எழுகணையும் வண்புயத்தில் எண்கணையும்
சீர்பரவும் வள்ளற் செயிர்த்தேய்ந் துறுக்கினனே

தன்தோளும் மார்பும் சரமூழ்கச் சோரிசிந்த
நின்றே சினந்து நெடியவரி வில்வளைத்துப்
பொய்யிலா னைந்து பொருவிற்கணை சொரிந்து
தொய்விலான் நெற்றியையும் தோள்மார்பையும் துளைத்து
நாணும் சிலையும் நடுவறுத்து வீழ்த்தினனே

---

1 இந்திரவில் வானவில்

கோனுஞ் சிலைவேறு கொண்டு சரமாரி
பெருமாரி மாறாது பெய்யும்படி போலச்
சரமாரி பெய்துவிறல் தானகுலன் சாதேவன்,
சித்திரத் தேவன் திறல்சாத்தகி சிகண்டி
மற்றுளோர் தேருடன்பல் வாகனமுந் தானழித்து

உற்றசிலைப் படைகள் உள்ளதெல்லாம் தானழித்து
வீறான சேனை மிகப்பிளந்து செந்நீர்கள்
ஆறோடச் செய்தான் அதுகண் டறன்குமரன்
கிருபன் கிருதபன்மன் கேவலமில் காந்தாரன்
நிருபன் தனக்கிளையோர் நின்றபல மன்னவர்கள்
முன்புறும் வீரர் முரண்தேர்வில் தான்பிளந்து
அன்ப தறுபதுகோல் அங்கமொன்றில் தைத்துருவ
சேனைகள் யாவும் சிதைந்து சிதைந்தழியச்
சோனைபோல் அம்பு சொரிந்திழிந்த செந்நீரால்
நாற்றிசையும் சோரி நதிகள் பரந்தோடக்

தருமன் போர்

கூற்றும் நடுநடுங்கக் கோல்தருமன் போர்முனைந்தான்.
கோதண்ட வீரக் குருகுலத்தோர் கோமான்பின்
வேதண்ட மொத்தபுய வில்வலிய கன்னனையே
கொற்றக் கணையிரண்டால் கோலவரி வில்துணித்தான்
மற்றுமிரு கணையால் வன்கொடிகள் அற்றுவிழ
மாவின் தலைநாலும் வன்சரத்தால் அற்றுவிழ
ஏவிரண்டி னாலே எதிரில்வல வனஞ்சாய்
தேருருளு மற்றுஞ் சிலகணையால் தூளாக
கூர்கணையால் மார்பு குருதி பரந்தொழுகப்
புயவெற் புருவப் பொழிந்தான் சிலகணைகள்.

வயமுற்ற கன்னன் மயங்கித் தெளிந்திடுமுன்
தருமன் சரமாரி சாயாமலே சொரிந்து
திருமன்னும் எண்ணேழு தேசத் தரசர்களில்
பன்பட்ட வர்த்தனரில் பன்மகுட வர்த்தனரில்
முன்பட்ட சேனைகளில் முன்னின்றோர் யாவரையும்
இடிகண்ட சர்ப்பம் எனவே நடுநடுங்க
வடிவெண் சுடர்க்கணையால் மாய்த்தான்காண்
அம்மானை.

சங்கநாதஞ் செய்தல்

வென்னிட்டோர் தான்பிழைக்க விட்டுவிட்டுக் கட்டு
மட்டாய்
முன்னிட்டோர் வீர முனையடங்க வேமுருக்கி
வேதண்டமுங் கயமும் எண்டிசைஎல் லாம்நடுங்க
மூதண்ட லோக முழுதுமே தானடுங்கச்
சலதி சுவறச் சராசரங்கள் தான்நடுங்கக்
கலதிப் பெருக்கால[1]மி தென்றே நடுங்க
வீரசிங்க நாதம் எழும்பி இதழில்வைத்தே
சூரசிங்க நாதன் தொனித்தான்காண் அம்மானை.
கொற்றக் கவச மணிக்குண்டலமும் கோபதிக்குப்

கன்னன் தருமனுடன்

பற்றி யுடனழித்த பானுதரு சுதனும்
மற்றுமொரு தேரில் மத்திரசா ரத்தியமுடன்
வெற்றி மன்னன் சங்கொலியை மேலாடத்தான்வீர
சங்கந் தொனித்துத் தருமன்மக னைக்குறுகிச்
சிங்க மெனவே சினந்து சிலைவளைத்துச்
சொரிந்த கணையால் துசமும் சிலைநாணும்
திருந்து முரண்மாவும் தேரச்சுந் தூளாக்கிச்
சாரதி மார்பில் சரமுதுகு தைத்தோட
சீர்தருமன் மார்புபுயம் சிரசில்கணை தானெழுத

தருமன் வேறு தேரில் ஏறிப் பொரல்

மீண்டறன் மைந்தன் வெகுண்டு மறுதேரேறி
நீண்டவரித் தேர்மாவும் நீறாக்கி நெஞ்சுபுயம்
சோரி வடியத் துளைத்தேஅக் கன்னனையும்
பாரில் அயரப் பல்வாசுகம் பரப்பி
வல்ல திருமால்போல் வலியசா ரத்தியஞ்செய்
சல்லியன் மெய்யும் தயங்கநிலை யழித்தான்

கன்னன் வேறு தேர் ஏறிப் பொரல்

கன்னனும் நெஞ்சங் கலங்கிமறு தேர்ஏறி

---

1 பேரழிவுறும் ஊழிக்காலம்

மன்னன்கோ மான்தேர்வில் மாற்றினான் அம்மானை
பொறைக் கடலன்னான்ஓர் பொற்றேரின் மீதேறி
மறைக் கடற்சிந்தையினான் வண்ணவரி வில்லேந்தி
முனைந்து வரவே முளரிநாதன் குமரன்
கனிந்து தருமனெதிர் கட்டுரைப்பான் முன்பரவி

தருமனிடம் கூறல்

வில்வேதத் தின்தொழிற்கும் மிக்கபல எத்தொழிற்கும்
சொல்வேதமொத்த நிலை தோற்றுகின்ற வாய்மையுளாய்
கற்ற கலையால் கதிப்பான[1] புத்தியினால்
உற்ற புகழ்ப்பொறையால் உண்மையால் திண்மையினால்
கொற்ற மதனால் குலத்தால் பெருங்கிளையால்
பற்ற மிளையோர் பரவும் வழிபாட்டால்
மிக்கோனே ஓர்குடையில் மேதினிஎல் லாம்புரக்கும்
தக்கோனே வண்மை தருமதிபர் வேந்தே
என்னரசுக் கென்போல்வார் எண்ணிலார் மாய்ந்தாலும்
மன்னரசுக் கீனம் வருமோ திருமார்பர்
பூமி தனிலும் பொறைக்கிசைந்த புண்ணியனே
நேமிசெறி மன்னரிலும் நீள்விசைய முள்ளோனே.
தரும வடிவே தயவேறு சற்குணனே
நிருபர் சிரோமணியே நின்கைப் படைதனக்கே
வானோர் எதிரோ மறுநரகர் தானெதிரோ
யானோ ரெதிரோ நின்னம்பால் தம்பியர்கள்
பாழிப் படைவலிகள் பற்றாதோ பாரரசே
வாளிப் புயலனையாய் மன்னவர்கள் கோமானே
திரையனைய சேனைகளும் சேகரமா மன்னர்களும்
கரையழிய வுற்றார்க் கடன்நீ சிலையெடுக்கக்
கோணாத செங்கோல் குருசிலே பேரணியில்
சேணாடர் மெச்சநின்று சேனைமெலி வாமளவில்
அப்போ தெதிர்ந்து அடர்ந்தேறல் மிக்கபுகழ்
இப்போது பேரணியி லேநில்லென ஓதினனே
நில்லென்ற சொல்லும் நெறிநீதியான் திறமும்

---

1 எழுச்சிமிகு

தருமன் கூற்று

மல்லொன்று திண்புயத்தான் வாய்மையான் தான்கேட்டு
இங்கிவனைப்போரில் எவரோ செயிக்க வல்லார்
புங்க மிவன்போர்க்குப் பொருட்டோ நம்தம்பியர்கள்
மாயனர் னல்லாது மற்றெதிர்க்க வல்லருண்டோ
ஆயன்மால் கொன்றுதந்தால் அன்றிச் செயிக்கரிதே
என்று அரசர்க்கு இடியே றனையானும்
நின்ற விடத்து நெடுமூச் செறிந்துநின்றான்.
முன்னிட்வு மன்றி முனைந்து பொருதலன்ன
வென்னிடவும் அன்றிவய வேந்தனெதிர் நிற்பளவில்

வீமன் முனைதல்

வீரர்தலை அற்றுருள வேந்தர்தலை அற்றுருள
தேரினங்கள் பட்டுடையச் சேனைதெறி கெட்டுடைய
மாத்தலைகள் வெற்றிமத மாத்தலைகள் அற்றுருள்
வெற்றிமத மத்தகயம் வெங்கலப்பாண் டக்கடையில்
காற்றமுடன் கைக்கதையால் கொண்டடிக்கும் வாறதென
ஊழிமுக் கனலோடு உற்றசண்ட மாறாதமாய்
பாழிக்க தாயுதத்தால் பற்பம் படவடித்து
வீறுற்ற மன்னர்படை வெள்ளஞ் சுவறிடவே
நீறு படுத்தி நிகரிலா மாருதியும்
மன்னவர் வானோர் மதிக்கும் சவுரியவான்
முன்னவன் தன்முன்னாய் முனைந்துநின்றான் அம்மானை

தருமன் நீங்கல்

இளவல் இமைப்பில்முனை எய்தி அடுத்தமையால்
வளமை பிறங்கு தருமனகன்றான் அம்மானை.
வந்தநிலையும் வயமா ருதிதன் போர்க்குறியும்

சல்லியன் கன்னனிடம் கூறியது

கந்தமலர் மத்திரத்தான் கண்டுகன்ன னோடுரைப்பான்
மாருதியை இப்போது வள்ளலே வெல்லரிது
தாருலவு மார்பாநீ சாகிறுதி[1]யாயி ரென்றான்
காமன்அனைய கன்னன் கையிற் சிலையேந்தி

---

1 ஜாக்கிரதை

கன்னன் முனைதல்

வீம னெனினும் விசையனே தானெனினும்
தூமம்[1] நிகரெனச் சுடர்க்கணைக்குத் தானாற்றார்
இற்றைப் போர்தனில் எனதுவிறல் காண்டியென்று
துற்றியமாய் நீதேரைத் தூண்டுகெனப் புகன்றான்
கன்னன் உரைவில் கணத்தில் சிதைந்துவிழ,
வன்னி சகாயன் மகனோர் கணைதொடுத்தான்
மற்றுமொரு வில்வளைத்து ஆறிரண்டு கணை
பத்தியமாய் மார்பு பதியவே தான்தொடுத்தான்
கன்னன் தொடுத்த கணைஆறி ரண்டினையும்
பன்னிய மார்பு பதியக்கை யாலறைந்து

அத்தி மருப்பை[2] அகத்திலே பதித்து
சத்தி யரக்கண்[3] தனையே நிகர்த்து, நின்று
காலசூ லம்போல் கடுங்கணைய தொன்றிழந்து
வாலகோலக் கதிர்சேய் மார்புதடா ரித்தேக
விட்டான் விசையாய் விழுந்தான் தனைமறந்து
பட்டா னெனவே படைதெறிகெட் டோடியதே
சேனைதெறி கெட்டோடச் சேனாபதி அயர

மத்தீரன் கன்னனைத் தெளிவித்தல்

ஈனமி தன்றே எடுத்தாத்தி மத்திரனும்
சோபந் துயரம் துடைத்தளவில் கர்ணனென்போன்
சாபங் கரத்தெடுத்துத் தாரைமே கஞ்சொரிதல்

ஒற்றே சொரிந்து வுலவைச்சே யைச்சூழ்ந்த
விற்றாங்கு தேர்முதலாம் வேலைப்படை கனையே
காய்சருக தாக்கிக் கனற்காலும் தன்கணையால்
நேய இமைப்பளவில் நீறாய் நிலத்தழிந்து
கைத்திறலின் வன்மையுள்ள கன்னன், கடுங்கணையால்
எத்தனைமன் மாய்ந்தார்கள் எண்ணுதற்கு யார்வல்லரே.
பத்துச் சதுரங்கப் படைஞர்பாஞ் சாலரிலே
தெத் தெழுவர் சிங்கசேனனை உள்ளிட்டாரே
மாய்ந்தோர்கள் அல்லார் வரிப்புலிகண் மான்போலச்

---

1 புகை
2 யானைக்கொம்பு
3 இராவணன்

சாய்ந்தார் புறங்கொடுத்தார் தாழ்நடையாய் அம்மானை.

பாண்டவர் பின்னிடல்

வீமன் குணமிழந்து வில்லிழந்து ஒடினனே.
நேமிப் பரிதேர் நெடுங்கொடியும் அச்சிழந்து
சூழ்ந்த படையிழ்ந்து சொல்லிழ்ந்து வில்லிழந்து
வீழ்ந்து தெளிந்தெழுந்து வென்கொடுத்தா னம்மானை.

வீமன் பின்னிடல்

மெய்போர்த்த சோரியொடும் வீமசேனன் தெறித்தே
நெய்போர்த்த வேலான் நெடுமூச்சிட் டோடினனே
சேனையுடன் வீமசேனன் வென்னிட்டு ஒடுவதைக்

கன்னன் தேரோடு வருதல்

கானத் துளசியனும் கண்டுதடம் தேர்தூண்டி
யானையின்மேல் சிங்கம் அடர்வதென அடர்ந்தான்
வானவர்கோன் மைந்தன்முழு மைந்துவரி வில்லானே
இருவர் பதாதி இருகடல்போல் போர்மூண்டார்
இருவர் பரித்திரளோர் ஏகமாய் போர்மூண்டார்
சிந்துரமும் சிந்துரமும் தேரினமும் தேரினமும்
தந்திரமோ டொத்துச் சமர்புரிந்தா ரம்மானை
தெவ்வ ரடங்கவிறல் தேவர் திடுக்கமுறக்

அருச்சுனன் போர்

கௌவு கணைசொரியச் காண்டீபன் தான்சொரித்த
பாணம் விசும்பும் பலதிசையும் தான்தூர்த்த
நாணின் தொனியால் நடுநடுங்கி மூவுலகும்
தேரோதை வானோர் செவியும் செவிடாக்கக்
காரே றிடிபோலக் கறக்கி அனுமனிக்கப்
பரவை ஒலிபோலப் பல்லியங்கள் தான்முழங்கத்
தெரிவில் விசையன் சினமூண் டெதிர்நடுங்க
மற்றிரனும் மற்றுமுள்ள மன்னவரும் கன்னனிப்போ
செற்றிடுவன் என்றே திடுக்கிட்டார் உம்பர்களும்.
இப்போ விசையனுக்கு ஈடல்ல கர்ணனென்று

அசுவத்தாமன் வருதல்

துப்பாய் எதிர்த்தான் துரோணன் தருகுமரன்

கன்ன னுக்காகக் கடுகிரதம் நடத்தி
மின்னலெனப் பல்பகழி வெம்புயல்போ லச்சொரிந்து
பார்த்தனையும் பாகனையும் பண்புபே தித்திடவே
தோற்றுங் கருமலையைத் துப்புநிறம் செய்தாப்போல்

பச்சமலை ரெண்டைப் பவளமலை ஆக்கிவைத்தான்.
மெச்சிவரி வில்விசையன் வேதியன்தன் மெய்முழுதும்
அம்புக் கூடாக்கி அவன்மாங் கிஷமடங்க,
வெம்ப அறுத்தறுத்து வீழ்த்தி எலும்பாக்கி
வில்லழித்து நாணழித்து வெய்யகொடுந் தேரழித்து
மல்லழித்துப் போர்முகமும் மாற்றினன்கா ணம்மானை
போர்மாறி விற்குருவாம் பூசுரன்சேய் மற்றுமொரு
தேர்மீதில் ஏறித் திறல்வெங் கணைமாறி

அருச்சுனன் அம்புபடல்

வீசினான் வல்ல விசையன் நிலைதளர்ந்து
பூசுரன் அம்பால் பொருவிலான் தானயர்ந்தான்.

கன்னன் கூற்று

நண்பன் அயர்ந்திடவே நாரணனும் தானேந்திப்
பண்புளாய் நின்போலப் பாப்பான் தருமகனும்
வல்லாள னன்றோஅவ் வல்லமையும் நீயறிந்து
எல்லோரையும் போல எண்ணியமர் செய்குவதேன்
இளந்தலை என்றே இவனை நகைத்திடவே
பிளந்தெறி என்றான் பேச்சு முடிவதன்முன்

அருச்சுனன் பிறைக் கணை ஏவல்

ஒப்பில் பிறைக்கணையது ஒன்றிதையம் தைத்துருவத்
துப்பு மிகுந்தோன் தொடுத்தான் தொடுத்தகணை
நிகரற்ற வீரனுயர் நெஞ்சுருகப் பாய்ந்திடவே
பகர்தற் கருந்துயராய் பாரிற்சுழ லழிபோல்

வீழ்ந்தான் எழில்அரிதாய் விய்ந்தாஎன் றும்பரெண்ணத்
தாழ்ந்திலார் செய்த தவம்வந் துதவுதல்போல்

துச்சாதனன் உதவல்

துச்சா தனன்விரைந்து தோன்றவந்து தேரேற்றி
நச்சாரழல் அனையான் நாடியே கொண்டுசென்றான்
சென்றே மரணத் திகரடிசோ பம்தீர்ந்து

கன்னன் மீண்டும் வரல்

அன்றே பின்மீண்டும் அமர்க்கெழுந்தான் அம்மானை
உயிர்ப்பினைப் பெற்றால் உயித்தம் நடுப்படையில்
வியர்ப்புடன் செய்தல் மிகவரிதோ அம்மானை.
கோதண்ட வீரக் குருமகனை எண்ணாமல்

பாண்டியன் எதிர்த்தல்

மூதண்டம் பார்நடுங்க முன்தேர் தனைநடத்திச்
சதுவகைச் சேனைச் சலதிப் புடைசூழ
மதுவுமிழ் நிம்ப மலர்மாலையான்[1] எதிர்ந்தான்
தென்னன் பொதியன் சிகரியான் தென்மதுரை
மன்னன் செழியன் மதிவங் கிஷன்[2]மாறன்
சங்கம் விளங்குதமிழ் நாடன்நதி வைகையுளான்
துங்க மகாத் துசன்[3]மீ னவன், கைதவன்
அருள்பஞ் சவன்கவுரி யன்பாண்டி யராசன்
புருகூதன் சென்னிசென்னீர் பொங்கவளையா லுடைத்தோன்
தேர்நடத்தி வண்ணச் சிலைவளைத்துக் கோல்தெரித்துப்
போர்நிலைத்த செவ்வேளைப் போன்ற பரித்தாமன்
பொற்றே ரெனும்பொருப்பைப் பொங்கியகா ரமுங்கியபோல்
அற்றேர் உருத்தேற்றம் அற்றொழியக் கோல்சொரிந்தான்
பொழியும் செழுமுகிலைப் போலவே மாறாமல்
செழியன் தொடுகணையால் தேர்ப்பா கிவுளிகொடி
எல்லா மெரிந்து இடக்கைவரி வில்லெறிந்து
பல்லார் நகைக்கப் பயந்தே நிலத்திழிந்து
பொன்மலை யன்ன பொருபரித்தேர் மீதேறி
வின்மலை என்னஒரு வில்லேந்தி வெங்கணைகள்
தாரை மேகம்போல் சொரிந்தான் சரமழையாய்
வீரன் சொரிந்த விறற்கணையைப் பாண்டியனும்
தன்கைக் கணையால் தகனித்தே நீறாக்கி
வன்கைமரு மம்பதிய வாளிமுன் றீழ்த்துவிட்டான்
விட்டகணை நெஞ்சுருவ வேறுமிரு கணையால்

---

1 வேப்பமலர் மாலையுடைய பாண்டியன்

2 சந்திரகுலத்தில் வந்தவன் — பாண்டியன்

3 மீனக்கொடியுடையவன் - பாண்டியன்

வட்டச் சிலைநாணும் வன்கொடியும் தானறுத்தான்
தந்தை தனைமுதுகு தான்கண்டோன் மைந்தனுக்குச்
சிந்தை வெருவுவனோ தேறிச் செருப்புரிந்தான்
மீண்டு மறுவில் வெகுண்டு மிகவளைத்துக்
கூண்ட முகில்தாரை கொண்டதுபோல் கோல்சொரிந்து
பஞ்சவன் தேரும் பரிபாகும் பற்பமுற
அஞ்ச அறுத்ததற்பின் அத்தேரை விட்டழிந்து

ஊற்று மதத்தாரை ஒழியா மதகரிமேல்
சீற்ற முறவேறிச் சிலைகால் பொரவளைத்துப்
பெய்யும் மழையும் பெருங்காற்றும் ஒத்ததென
எய்யுங் கணைமழையால் ஈசன்மக னைச்சூழ்ந்து
பரியும் கரியும் பதாதிகளும் தேர்க்குலமும்
நெரிய நெரிய நிலையழித்தா னம்மானை.
தென்னவன் யானைச் செவியும் புறந்தனிலே
அன்னவன் றோரணக் கொடியுமே மறைந்த
உம்பல் மதங்கள் ஒழுகாததன் அள்ளலியே

அசுவத்தாமன் தேர் செல்லல்

வெம்பரித்தா மன்தேரின் மிக்கதேர்க் கால்புதைந்த

பாயும் பரித்தளத்தைப் பந்தெடுத்து வீசலெனச்
சாய எடுத்தெறிந்து தந்தி[1]யடர்ந் தேறுதலும்

பாண்டியன் அர்பு

வில்வலிய மாறன் வெகுண்டு சரமாரி
மல்வலிய பாப்பான் மகன்மேல் சொரிந்தனனே
வழுதி சொரிந்தகணை மாரியெல்லாம் தான்மாற்றி
வழுவைத் தலைசிதற வாளியொன்று தான்விடுத்தான்
எய்தகணை யோடி ஓர்மலைத் தலையில்
வெய்தின் விழுந்ததென வீழ்ந்தலறி மாய்ந்ததுவே
காலாளாய் மாறன்மழைக் காலாய்ச் சொரிந்தபல
கோலால் மறையோன் குமரனுடற் குருதி

சிந்த அவனும் சினந்தோர் அழற்கணையால்
தந்தையை முன்வென்றோன் தலையறுத்தான்
அம்மானை.

1 யானை

உரத்த பெரும்பகையோடு ஊடாடிற் கேடெனவே
கருத்தில் அறியாமல் கைதவனும் மாய்ந்தபின்பு

பாண்டியன் பட, பஞ்சவர்கள் சேனை பின்னிடல்

பட்டான் செழியன், முனிபாலன் கணையிலென்று
கெட்டோடிற் றைவர்பெருங் கேடிலாச் சேனைவெள்ளம்
பஞ்சவர் சேனை பயங்கொண் டலைந்தோட
வெஞ்சமர் மேன்மேல் மிதித்தடர்ந்தார் ஒன்னார்கள்.

சோழன் படை கோடு வருதல்

அந்தணன் மைந்தன் அழற்கணையா லேசெழியன்
நந்தினன் என்றே நவின்ற மொழிகேட்டுச்

சூர சங்காரச் சுடர்வேல் கடவுளன்னான்
வீர சிங்காரன் விளைகாவிரி நாடன்
தேவ ரிடுக்கண் திடுக்கங் களுந்தீர்த்தோன்
ஆவினிடர் நீங்க அன்றரைத்தோன் தன்மகனை
தன்மாங்கிடம் அரிந்தே தான்புரவுக் கீடீய்ந்தோன்
புன்மான் புவியோர் புனல்பருகப் பூவாண்டோன்
மனுநீதி யால்அரசர் வந்தேவல் செய்துநிற்க
தனியோ ரரசன் தவற நுதல்விழியை
மங்கும் படியாக வன்படத்தில் செங்கோலால்
துங்கமுடன் குத்துகின்ற சோழமகா ரசேந்திரன்

நாற்சேனை சூழ நரசிங்கம் போலாக
கோச்சோழன் பார்ப்பான் குமரன் முகம்நோக்கி

சோழன் கூற்று

மான மிலாதாய் மதியிலாய் வீரமிலாய்
ஈனமுடை யாய்நெஞ்சு ஈரமிலாய் சரரமிலாய்
தேரின்மேல் நின்றுஇபத்தில் சேர்ந்தாற் பொருதுவதோ
பாரின்மேல் நின்றோனைப் பாவிநீ கொல்லுவதோ
ஆர்கொல் இப்பாவம் அகந்தை செயவல்லாரே
நீர்மேல் எழுத்தாம் நிலையிலா ஆண்மையினோய்
வேள்வி திவச விதிமுறைகள் தான்முடித்துத்
தாழ்விலாப் பஞ்சாங்கம் சாற்றும் தொழில்மரபோய்,

நின்குலத்தின் ஆசாரம் நீற்றே நிலம்புரிந்து
என்குலத்தோர் போலநீ எழிலான கூர்ப்படையால்

வன்போர்க் களத்தில் மறத்தோ டிகலுவதோ
என்போல் பூமிக்கு இசைந்து பிறந்தனையோ
பிறந்ததொரு குலமாய்ப் பேர்எடுப்ப தோர்குலமாய்
அறஞ்சற்று மில்லாதோய் அருக்குநீ பிறந்தாய்
முக்காலும் அங்கங்கை முழுகினால் நீர்க்காகம்
கொக்காவ துண்டோபல் கோடிகண மிந்தாமோ
ஆதித்தனுக் கெதிரோ அற்பமாம் மின்மினிக்குள்
சாதிக்கு மன்னர்மனச் சத்தியுண்டோ பூசுரர்க்கு

நுந்தன் வலிமை நிலையழிப்பேன் ஒல்லையென்று
உந்தி விறல்தேர் உதைத்தடர்ந்தான் நேரியனும்

இருவரும் போரிடல்

நேரியனும்[1] ஆரியனும் நேர்ந்தடர்ந்தார் பொற்றடந்தேர்
காரிலிடும் விற்போல் கார்முகங்கள் தான்வளைத்தார்.
அந்தாமுந் திக்கும் அகல்வெளியுந் தோற்றாமல்
கந்தரங்கள் பெய்யும் கணமாய்க் கணை நிறைத்தார்.
இருவர் களுமுன் னிமையோர் வரங்களினால்
முரணுடன் பெற்ற முறையாய்க் கணைசொரிந்தார்.
சீரொற்ற போரில்மன்னர் சென்னி[2]கணை இரண்டு
போருற்ற பார்ப்பான் புதல்வன் புயந்துளைத்த

மற்று மிரண்டுசுடர் வாளிமார் பைத்துளைத்த
உற்றநுதல் தட்டுருவ வேயோர் கணையும்
ஐந்து கணையு மவனுடலந் தட்டுருவ
மைந்துடன் விட்டான் மனுநீதி குன்றாதான்
புங்கமோ ரைந்தும் பொறிபுலன்க ளைக்கலக்கச்
சிங்க மனையான் திகைத்தே திகைதெளிந்து

புறவுக் கரிந்தளித்த போதிருந்த தாயுடலை
அறவைத்து அறக்களித்தான் அத்தி[3]யற மற்றதெல்லாம்.
தரத்தில் வலிய தனுவா ரியன்குமர
தரத்திண் கணையாற் கண்போர் துடங்கிடவே

சூரனைப்பண்டு துணித்ததி தென்று உம்பர்மன்னர்.

---

1 2 சோழன்
3 எலும்பு

வீரர்மதிக்கும் வெற்றிவேல் மாலளித்த தொன்று
கைக்கொண்டு கோபக் கனற்கொண்டு தானெறிந்தான்.
மைக்கொண்டல் ஏறிடிபோல் மாயா தவன்மாய
என்மாய மென்றே யிமையோர்க ளுந்திகைக்க,
வன்மார் பறப்பிளந்து மாய்ந்ததுவே வன்கதிர்வேல்
வீழ்ந்தயர்ந்த பூசுரன்றன் மெய்யன் றனையெடுத்தார்.
தாழ்ந்த சூதுக்குச் சமத்தன் சகுனிமுதல்
மன்னர் பலர்சூழ்ந்து மரணமயக் கந்தீர்த்தால்,

சோழனைச் சூழ்தல்

தென்னனுக்கு மிக்கவிறற் சென்னிதனை மன்னர்பலர்
ஏழ்கடலும் ஏழ்புயமும் ஏமகமாய்ச் சூழ்ந்ததுபோல்
சூழ்படையி னோடுபல சூரர்களு மொய்த்தனரே.
மொய்த்தவர்கள் பேரில் முடுகியே தேர்நடத்திக்
கைத்தனுவாற் கோன்மாரி கான்மாரியாய்ச் சொரிந்தான்
பரிகெட்ட சிற்சிலர்கள் பாகிழந்த சிற்சிலர்கள்
உருளச்சு இரதம் உடைந்தோர்கள் பற்பலர்கள்
வில்லிழந்தோர் பற்பலர்கள் வேலிழந்தோர் பற்பலர்கள்
சொல்லிழந்து வீரத் துசமிழந்தோர் பற்பலர்கள்
கரிகள் அனந்தம்விசைக் காற்றேர் அனந்தம்வயப்
பரிகள் அனந்தம் பதாதி பலவனந்தம்
சரியச் சரியச் சரித்த களம்நிரைத்த
நரலைப் பெருக்காறு நாலுதிக்கு மோட்டிவிற்று
வல்லாளன் சோழ மகராசன் செய்தசமர்
வில்லாளர் கண்டு விறுமித்தார்[1] அம்மானை.
துன்மருடன் நீண்ட சுதன்வாகு துன்முகனும்
வின்மன் சுவாகு வெயில்விபா கன்குமரன்
தந்தருளுஞ் சங்கன் தலத்தரசர் பற்பலரும்
அந்தரத்தி லேதமது ஆவிகுடி சேர்ந்தார்
பண்ணிசை ராகம் பரவும் பலசோலை
கண்ணகலும் காவிரிநன் நாடன் கடுங்கணைகள்
மண்ணடுங்க வெம்போர் மலைத்தோரைச் சங்கரித்து
விண்ணடுங்க வெங்கு மிகப்பரந்த தம்மானை.

---

1 வியப்புற்றூர்

பரித்தாமனுங் கிருத பற்பன் கிருபனுடன்
மரித்தார் சகுனிபல மன்னர்தேர் வில்லிழந்து.
தன்னன மறந்து தலைக்கெட்டு வாய்வறண்டு
சென்னி வயப்போர்க்குச் சென்னியெனப் பிதற்றி
வில்வலிக்கும் வாள்வலிக்கும் வேல்வலிக்குங்
கோல்வலிக்கும்
மல்வலிக்குஞ் சோழ மகிபாலனுக் கிணையார்
என்னப் புகழ்ந்து இவன்கீர்த்தி பாராட்டி
பொன்னியான் போர்க்குப் புலியென்றான் அம்மானை.

வாசம் புகழாக்கி மாலையான் தும்பையுடன்
தேச மதிக்கத் திறல்வாகை யும்புனைந்து
நின்றான் நெறிக்கு நிகரில்லான் மீண்டொருபால்
பொன்றார் புனையம் புயவீமனை னோக்கிச்
சோனைபோல் வெய்ய சுடர்க்கணைகள் தான்சொரிந்து,
தானைச் சலதியூற்றுச் சாதனனுந் தம்பியரும்,
வானாடு நாடி வழிதேடு வார்போலத்
தானாக வுந்து தலைப்பட்டான் அம்மானை.

நகுலன் சகாதேவன் வருதல்

அஞ்சாம் லைவரையும் ஆவி யழிப்பனென்று
மஞ்சான பொற்றேர் மனம்போல் விரைந்துசெல்ல

நகுலன் சகாதேவன் நாரணன்பின் னோனுடனே
மகரச் சலதியெனும் வாகினியுந் தற்சூழச்
சங்கமாஞ் சிங்கச் சலதி நடுராச
சிங்கமென வீம சேனனிலை தான்பார்த்துப்
பாருலகுந் திக்கும் பகிரண்ட மும்நடுங்கப்
பேரிடிபோற் றுட்டன் பெருகவே தானகைத்துத்
தம்பியருந் தாமுஞ் சலதாமே யொப்பாக
அம்புமழை யாற்றிசையும் அந்தரமுந் தான்றூர்த்தார்.
வந்தோனைப் பார்த்து மடங்க லயனையானும்
அந்தோனின் போற்சூரர் ஆருணடிப் பாரிடத்தே

சூரர்களும் வீரர்களுஞ் சூழ்ந்தபல மன்னர்களும்,
சீருடனே பன்னாள்நீ செய்துகொண்ட சேவகத்தை
இன்னமுமே மெச்சுகின்றார் ஏறனையாய் ஏந்திழையார்
தன்னமர்க்கு நின்போர் சமர்த்தரில் லென்றேதான்,
இன்றோ விருந்து எமனுக் களித்திடுநாள்

இன்றோவுன் சோரி யிடையான் குளித்திடுநாள்
இன்றோ அளகம்[1] முடிப்பாள் எரியில்வந்தாள்[2]
இன்றோ தாகந் தீரவேநீர் பருகிடுநாள்
இன்றோ சினந்தீர யீனப் படுத்திடுநாள்
கோளரவ மொத்த கொடியோனின் முன்னோனை

நாளை யுடல்கிழித்து நானே அனுப்பிவிப்பேன்
இன்றுநீ முன்போய் இடம்பிடித்துக் காத்திரென்று,
அன்றுநீ செய்த வகந்தையின்று காண்பனென்று
வீமன் சினத்தோடு விம்மியவை தானுரைக்க
ஊமன் றனைப்போல ஒன்றும்பே சாதிருந்தான்.

துச்சாதனன் முதலியோர் எதிர்த்தல்

துச்சா தனன்றன் துணைவரோடு ஒன்பதின்மர்
உச்சாய மாக வுத்தித் தளத்துடனே
காய்ந்தடர்ந்த வீமன் கனுட்டர் மன்னர்சேனையுடன்
ஊய்ந்திடவே கொல்வமென உத்தண்டமா யெதிர்த்தார்
தப்பாத முப்போர்ச் சமருஞ் சமர்வலியும்

இப்போருக் கொப்பன்று இமையோ ரதிசயிப்ப
மன்னருடன் மன்னவரும் வாகினியும் வாகினியும்
உன்னுயிரு என்னுயிரு என்றொத்தே யமர்புரிந்தார்.
கறுத்தான் வெறுத்தான் கதித்தான் நகைத்தாற்றுப்
பொறுத்தான் தகைத்தான் புதல்வன் தளத்தையெல்லாம்
கொல்லுவே னைவரையுங் கூசாமல் இற்றையிலே
வெல்லுவேன் என்றுமிக வஞ்சினம் பகர்ந்து,

பாண்டவர்தம் படை சிதறல்

நீர்கொண்ட பார நெடுவேலையிற் படிந்து
கார்கொண் டெழுந்தாரைக் காளமே கம்போலப்
பனித்துச் சரமாரி பஞ்சவர்கள் சேனையெல்லாம்
அனித்தம்[3] விளைய அறுத்தறுத்துத் தான்வீழ்த்திச்

சிகண்டி சிலையழித்துத் தேரழித்துப் போரழித்து
அகண்டிற்கலைச் சாதேவனார் தேர்சிலை பிளந்து
நகுலன் பரிபாகும் நாண்சிலையுந் தானழித்து

---

1 கூந்தல்
2 பாஞ்சாலி
3 நிலையாமை

முகில்வண்ணன் நம்பி முரண்தேரும் வில்லழித்து
மற்றுள்ள மன்னர்சிலை வன்றேருந் தானழித்துச்
சுற்றுள்ள சேனை தொலைய நிலையழிந்தான்.
வீரசிங்க நாத மிகவே தனிமுழக்கிச்
சூரர்சிங்கம் நானெனவே தோன்றிநின்றான் அம்மானை.
தம்பியருஞ் சேர்ந்தோர்கள் தாழ்வுந் தளர்ச்சிகளும்
அம்பகத்தாற் கண்டு அக்கினியால் காலமென

வீமன் போர்

வீமன் கொடுங்கோபம் விம்மியெதிர் வில்வளைத்து
மாமந்தர மனையான் மாறாப் பெருமழையாய்ச்
சொரிந்து சொரிந்தமரிற் சூழ்ந்தகடற் சேனையெல்லாம்
அரிந்துஅரிந் திமைப்பில் அக்களந்தோ றுங்கூய்த்துக்
கணையொன் பதினாற் கலையன்று தொட்டுரிந்தோன்,
துணையொன் பதின்மர் சுடிகைச்[2] சிரமறுத்தான்.
உயிர்போன்ற தம்பியர்கள் ஒன்பதுபேர் வெவ்வேறாய்
வயிராக் கியமுடையான் வாளியால் வீழ்ந்தமையால்
உயிர்க்கா ருயிரான வொன்பது பேர்தம்பியர்கள்
செயிர்க்கா . . . . . சிரந்துணிந்து தேரில்விழப்

பயிர்க்கார் மழைபோலப் பாணமழை வீமனுட
மயிர்க்கால் தொறுஞ்சொருக மன்னிளையோன் றான்
எறிந்தான்
வின்மாரிக் கோல்வீமன் மெய்மறையக் கோல்சொரியக்
கன்மென் மழையாய்க் கயம்போலக் கடிந்துதறி
மேரு வனையவரி வில்வளைத்துப் பல்பகழி
சாருங் கணைசொரிதுச் சாதனன்றன் வாளியெல்லாம்
பின்னம் படவே பிளந்து பிளந்தெறிய
மன்னர்க் கிளையோன் மனங்கோபத் தீபெருகி
எழுகணை விட்டிவுளி சூதன் கொடிதேர்
பாழி வரிசிலையும் பற்பப் படுத்திவிட்டான்.

சிங்கக் கொடியிழந்து தேரழித்து பாகழிந்து
புங்கச் சிலையழிந்து போர்வலிய மல்வீமன்
மேற்விட் டுறப்பாயும் வெண்சிங்கம் போற்குதித்து,

---

1 துச்சாதனன்
2 உச்சிக்கொண்டை.

சீர்வித் தகனுமறு தேரேறி வில்வளைத்துக்
கருதிக் கடலைக் கலக்கியதோர் மேரனையான்
பொருதுற்று வன்றேர்விற் பொற்பாகும் வெந்தெரிய
பத்துட னொன்று பகழியால் நீறுசெய்து
பத்துக் கணைமருமம் பாய்ந்துருவ வேல்விடுத்தான்.
மாற்றே எரிந்திடவு மார்பிரத்தஞ் சிந்திடவும்
பாற்றே[1] சினந்து படிமீது உறக்குதித்துக்

தேரின் நீங்கிப் போரிடல்

கோடை யிடிபோலக் கொக்கரித்து உக்கிரமாய்ச்
சாடு கதையைத் தறுகா துறச்சுழற்றி,
வீமன் றடந்தேரில் வீசினான் வீசுமுன்னே
தூமப் பெரும்புகையாய்த் தூளாய்ப் பறந்ததுவே.
தேர்பட்ட பாடால் திகைத்துப் பகைத்தவனும்
நேர்பட்ட தண்டம் நெடிய கரத்தேந்தி
மதுகைப் பெருஞ்சீயம் அன்னான் மன்னன்மேல்
எயதிருற் றடர்ந்தேறி யெய்தின்னகா ணம்மானை.
புயத்திற் கரத்தாற் புடைத்துமேல் மீசைபற்றி
வயத்துப் புடையார மணிக்குறங்கின் மேற்புடைத்து,

தண்டிறுகப் பற்றிச் சருவியழல் கக்கவொற்றி
மண்டிலம தாக வலமிடமுமே பயில
அடிவைத் தருகுற்று அடர்ந்துஅடர்ந் தகன்றோட
இடியொற்ற தட்டி யிமைப்பி லடர்ந்துமுட்ட
விரைந்து சினங்கதுவ மேன்மே லுறப்புடைத்துத்
திருந்தும் விகற்பச் சிரமச் சமர்புரிந்து
கொக்கரித்தார் மேன்மேலுங் கோபாக் கினிமூண்டார்.
தக்கமுடன் மேன்மேலுந் தாவிவிசும் பிற்குதித்தார்
கறங்கொத் திடவிசையாற் கைக்கதையைத் தான்சுழற்றிப்
பிறங்க விசும்பெறிந்து பின்பறந்து பற்றிடுவார்

செருக்கோபங் கொண்டே சிரித்தான் முகமலர்ந்தார்.
மெருக்காக வஞ்சினங்கள் பேதமறக் கட்டுரைத்தார்
கண்டோர் திகைத்தயரக் காவலர்கள் மெய்மயங்க
அண்டாரு, மண்டர்களும் அஞ்சி யுயிர்ப்பெறியப்

---

1 பார்த்து

பகர்தற் கரிய பருப்பதங்கள் தானிரண்டு,
இகலுற்ற தொற்றே யிருவோர்க ளும்பொருதார்.
தண்டமுடன் றண்டமெதிர் தாக்கியபே ரேதையினால்,
மண்டுடினய யொத்திருவர் வாய்விடுமவ் வார்ப்பொலியால்
தாவிப் புவிநடுங்கத் தத்தும்பமத் தொலியால்
கோவச் சிரிப்பொலியாற், கொற்றவர்கள், மூச்சொலியால்

வையம் பிளந்து வயறளைந்து, சர்ப்பவர்க்கம்,
வெய்ய கடுவிடங்கள் மேன்மேலுங் கொப்பளிக்க,
எட்டு மலைநடுங்க எண்கயங்கள் மண்டியிட
கட்டுடைய அண்ட கடாக முகடுவிழ
மேரு நிலைகுலைய வேலை யலைசுவறக்
காரும் நடுநடுங்கிக் கற்குகையிற் புக்கொளிக்க
விழிகள் சிவந்தழல்கள் வீச வியர்வொழுக
மொழிக ளிடியதிர முறியச் சிலைபுருவம்.
பொழிவுற் றடித்தனர்கள் புயமந் தரவிமயம்
அழியு மெனவிதையம் அஞ்சா தடித்துநின்றார்

எதிர்மலைவ திவ்வாறு இளையா திருவோரும்
உதரம் புயமகலம் உற்றசிர மற்றகங்கை
மெய்க்க முறத்தாக்கி விம்முவயி ரத்திறத்தால்
எய்த்திடார் மேன்மே லிடிமே லிடியாக

இருவரும் முட்டிப் போர் புரிதல்

அடித்து அடித்திருவர் அங்கைப் பிடிதவிர,
பொடித்துப் பொடித்து பொடிந்த திருகதையும்,
கைசிவந்து மெய்சிவந்து கால்சிவந்து கண்சிவந்து
வைசிறந்த வேலார் மறம்விட்டு வாங்காமல்,
கட்டு மட்டான கருவியொன்றுந் தீண்டாமல்,
முட்டுயுத்தம்[1] செய்ய முனைந்தார்கா ணம்மானை

செவ்விர லைந்துஞ் செறிவாக வேகுவித்து,
ஒவ்வரிய வள்ளுகிரால் உட்பதிய வேபுதைத்து,
உருமொத்த வெற்றி யுரவ ரிருவர்களும்
இருகைத்தலத் தொடுவான் ஏறிடியான் மிக்காகச்
சிகரப் பொருப்புந் திறன்மத் தகமார்பும்
தகரத் தகரவெதிர் தாக்கினர்கா ணம்மானை.

1 கருவியின்றிக் கைகளாற் செய்யும் போர்

அனிலன் குமரன் அடர்ந்தரிகன் மத்தகத்தில்
கனல்கொழுந்தக் குத்திக் கவுள்நெரிய வுந்தகர்த்துச்
செவியுட் பிளக்கமுனை சிந்தவுரம் பற்றெரிக்க,
தவிசொற் றளர வொளிதத்தவுருள் முத்தொளிக்க,

செய்யவிழி பிதுங்கத் தேகம்நரம் பற்றுவிழ

துர்சாதனன் அழிவு

பெய்யக் குருதியுடல் பேதிக்கவே கலக்கிப்,
பதம்விரல் தொட்டுறுப்புப் பற்பலவு மற்றுவிழச்
சிகரப் புயபொருப்புச் செவ்வியழி யத்தகர்த்து.
முக்கும் புறத்தில் முளைத்தது எனத்திருகி,
வாறாக மெய்த்தோல் வகுந்துகிழிந் துச்சரித்து
நாறாகப் பற்பல நரம்புகளைக் கிழித்து
மயிரைக் கரத்தாலே வவ்விப் பிடித்திழுத்து.
செயிருற் றுறக்கறங்காய்ச் செவ்வி பெறச்சுழற்றி
ஏழ்காலி தூசொலிப்பது என்னநிலத் தடித்துக்

கூழ்போர்க் குழப்பியுப்புக் கோணி[1] யெனத்துவைத்தான்
கம்பங் கதிரதெனக் காலா லுறத்துவைத்துத்
தம்பமுறு மத்தால் தயிர்குழப்பல் போல்குழப்பித்
தூணி லிருந்தெழுந்த துங்கநர சிங்கமெனத்
தோண உயரத் தொங்கவே தான்பிளந்து
உகிரெனுஞ் சோட்டை யுரத்தெங்க ணும்புதைய
வகிருங் குகுலு மணிக்குடலுந் தான்பிளந்து
தீயன் கழுத்துரமுஞ் சேரவே தான்பிளந்து
பாயுங் குருதி படிய வுடல்முழுகித்
தோகைக் குழலுந் துகிலுமுன் றொட்டளைந்து

பாகமுறு கைவிரல்கள் பத்தும்நறுக் கிப்பரப்பித்
தண்ணீர் நிகரெனத்துச் சாதனன்றன் மெய்யில்விழும்

துச்சாதனன் இரத்தம் குடிக்க முற்பட்ட வீமனைக் கண்ணன் தடுத்தல்

புண்ணீர் பருகப் புகுவோனை யாவருக்கும்
கண்ணீர் வரத்தடுத்தான் காணுங்கா லெத்திறத்தும்

1 கோணிச் சாக்கு

வெண்ணீர்மை யில்லாத மேகந் தனைப்போல்வான்,[1]

குருதியைக் கொப்பளித்தல்

குடியாமல் வாய்க்குருதி கோப்பளித்து மால்மொழியால்,
முடியாத வாகை முடித்தே னெனத்தனது.
கொடியார் மடங்கலெனக் கூற்றுடனே நின்றார்த்தான்.
அடையார் பொடிக்குமிடி அன்ன அடல்வீமன்,
பன்னுபுகழ் மங்கைபூ பாலன் றனைப்பகைத்த

துன்னலர்கள் பட்ட துயர்போல்துச் சாதனனும்
அள்ளற் குழம்பாய் அமர்க்களத்தில் மெய்கிடப்பத்
துள்ளிப்பின் அஞ்சீவன் சுரர்லோகஞ் சேர்ந்ததுவே.
பாற்றிபன்[2] பின்னோனைப் படுத்தியவன் பாடுதனை

பகைவர் படை சிதறலும் வீமன் தருமனிடம் கூறி அகங்கரித்தலும்

மாற்றலர்கைக் கொண்டபல மன்னர்களுஞ் சேனைகளும்
திடுக்கிட் டகம்நடுங்கித் தேறாப் பயம்பெருகி
அடுக்கல் அவன்சார்பு அடைந்தார் திசைதிசையே
துன்பமுறுந் துன்னீதித் துச்சாதனன் போர்செய்து
ஒன்பதிமர் தம்பியரொடு உம்பரூர் புக்கரென.
அன்புடைய தன்முன்[3] னடிவீழ்ந் தகங்கரித்தான்,

வன்புடைய தாதையினு மிக்கவலி யோனே.
வீமன் இவையுரைப்ப வேந்தனுட னால்வர்களும்
தாமன் முதலாகத் தாரரசர் பற்பலரும்
சேனா சமுத்திரமுஞ் சோப் பிரியமுற்று
நானால் திசையும் நரசிங்கம் போல்பறந்தார்.

துரியோதனனிடம் செய்தி கூறல்

பாம்புக் கொடியோன் பதமீது தம்பியர்கள்
தேம்பி விழிநீர் சிதறவிழுந் தேதுசொல்வார்
இன்னுயி ரன்ன விளையோர் பதிமரின்று
வன்னி சகாயன்மகன் போரின் மாய்ந்தழிந்தார்
என்ற மொழிகேட்டு இடைந்தயர்ந்து புண்ணாகிக்

1 கண்ணன்
2 துரியோதனன்
3 அண்ணன்

துரியோதனன் புலம்பிச் சூளுரைத்தெழுதல்

கன்றியிடி யேறுபட்ட கட்செவி போலுள்ளழிந்து
என்னுயிரே யெந்தன் இதையப் பெருவலியே
உன்னையிழந் தின்னம் உயிர்பேணி யுய்வேனோ
ஐவரையும் இன்றே யழித்துவிறல் வாகையுடன்
மெய்வலியே யானுமுயிர் வீவேன் எனவெழுந்தான்.
பாண்டவர்கள் சேனை மதிகண்ட பவ்வமென[1]
காண்டவன முண்ட கனிபோல் நனிதருக்கி
மூண்ட நிலைகண்டி முதுகிடுதன் சேனையுடன்

கன்னன் எதிர்த்து வரல்

மீண்டும் எதிரூன்றி வெய்யோன் மகனுனின்றான்
மேல்கொண்டு பாண்டவர்கள் வெஞ்சேனை மேலிடவும்
மால்கொண் டவர்போல மாண்டா யெனக்களறி[2]
கால்கொண்ட திண்டேர் கடவுவிறலான் உளவு
கோல்கொண்டோன் தன்னொடெதிர் கூறுவான், கன்னனுமே,
வேந்தன் அனையபின்னன் வீடன் கரதலத்தால்
மாய்ந்த நிலைகண்டு மனந்தளர்வ தல்லாது,
கூர்ந்ததிறல் மத்திரத்தாற் கோவே வெருவுதுமே,
பாந்தளின்[3] முன்செல்லப் பறவைக் குலத்தரசன்[4]
முன்றில் அமரில் முதுகிட்ட மன்னரையும்
மன்னவர்கள் மன்னனையும் வன்பே ரணியாக்கிப்
பொன்னசலம்[5] போதும் புனைபொற் கொடித்தடந்தேர்
கன்னன்எதிர் உற்றமர்ந்தான் காயுங் கனல்போல்வான்
சேனா பதியான தேர்த்துருப தேயனும்வான்
மீனா மெனப்பரந்த வேந்தருட னேதனக்குத்
தானாண்மைக் கொப்பான் றருமனையுஞ் சேனையையும்
மானாக உட்க வகுத்தாங் கெதிர்நடந்தான்.
பொன்னார் முரசமுதற் போர்வெம் பணையாலும்
வின்னாண் ஒலியாலும் விண்ணோர் செவிடுபட

---

1 சந்திரனைக் கண்ட கடல்
2 போர்க்களம்
3 பாம்பு
4 கருடன்
5 பொன்மலை

பன்னாகம் வேதப் பலபடையா லும்பூண
மின்னாலுங் கணங்கள் வெறியோடி விட்டனவே.
யாமினிய வெவ்வுயிர்க்கு மேற்றதுயின் மற்றுமிவன்

விடசேனன் நகுலனை வெல்லல்

மாமதலை கோமதலை மாண்தேர் விடசேனன்
நாம மணித்தேரின் நகுலன்மேற் சென்றுசில
தாம முனைவாளி தழற்பொறிபோற் சிந்தினனே,
வீறுதரு கன்னனருள் மெய்யன் விடசேனன்
சூறிச் சொரிந்த சுடர்வெங் கணைமழையால்
நகுலன் தனைச்சூழ நரலைப் பெரும்படைகள்
சகலமும் ஓரிமைப்பில் தாரணியில் மாய்ந்ததுவே.
தேர்ஒன் றலதுஅவனைச் சேர்ந்தவர்கள் மாய்ந்துவிழப்
போரின் நகுலன் புகைந்தே துடங்குமுனம்
மின்னற் பெருங்கடலில் விழ்ந்தொருமே கம்பெருகித்

துன்னிப் பிறங்கச் சொரிகின்ற சோனையென
மேன்மேல் அடர்ந்து விடசேனன் வீசுதலும்.
மன்மாண் நகுலன் வருகணையைத் தன்கணையால்
மாற்றி நின்றதல்லாம் மற்றவன்மேல் வேறுகணை
தோற்றிவிட்டு மேலடர்துப் பற்றே நின்றனனே.
நின்ற நிலைகண்டு நிகரிலா வில்வீரர்
வென்றிப் பலகணையால் வில்லழித்துத் தேரழித்தான்
தேர்வில் அழிந்து திகைத்துமறு தேரேறிப்
போர்வில் வளைத்துப் பொருவிலாப் பல்பகழி
வீசினான், மிக்க விசையன் றன்க்கிளையோன்.

பாச மதனால் பருதிமகன் மகன்றன்
தேரும் பரிபாகுந் திண்கொடியுந் தானிழந்து,
வாரவரி வில்லிழந்து மார்புங் குருதிசிந்த,
மீண்டுமறு தேரேறி வெய்யோன் மகன்மகனும்
தூண்டி யடர்ந்து துரோணன் தனைவளைத்து
பல்பகழி மாரி பரப்பிக் கொடிதேரும்
வில்பரியும் பாகும் மிகவே பொடிப்படுத்தி
வாளி இரண்டவன்றன் மார்புருவ வேவிடுத்தான்
மீளி சுழல்வண்டாய் விழுந்தான் நிலத்தயர்ந்தே.

வீமன் நகுலனை எடுத்தேகுதல்

தம்பி அயர்ந்து தரையில் விழுமுனமே

வெம்பிக் கலங்குவய வீமன்எடுத் தோடினனே,
பின்னோன் அயர்ந்து பெருங்களத்தில் வீழ்ந்ததுவும்
முன்னோ னெடுத்தகல மூசியே போனதுவும்
ஆண்டகைத் தேசூர் அசைவிலா வில்வீரன்
காண்ட வனமெரித்தான் கண்டான் கனல்போல்வான்

விடசேனன் அருச்சுனனை எதிர்த்தல்

விருத்தம்

நன்தூண் திகழ்மதியாய் நாகம்ப ருமத்தாய்
அன்றூண் திரைமதியா வண்டர்க் கமுதளித்தோய்
முன்தூண் டியதேரில் செனறான் முனைவாளி
மின்றூண்டில் வீசி விடசேனன் மீண்டுரைப்பான்
தம்பி படுந்துன்பந் தமயனையுங் காண்பனென

வெம்பி யெதிர்சென்று விடசேனன் வில்வாங்கிப்
பம்பி வருதடந்தேர் பார்த்தனையும் பாகனையும்
அம்பின் மறைவித்தான் அடலே றரி[1]யனையான்.

இருவரும் போருதல்

திக்கெல்லாம் வென்ற சிலைவீரன் றன்னுடனே,
தக்கமாய் நின்று சமர்பொருதும் வீரியத்தை
வானோரும் திக்கிலுள்ள மன்னர்களும் வில்வீரர்
ஆனோருஞ் சிந்தை அதிசயித்தா ரம்மானை.
விசையன் கணையும் விடசேனன் தன்கணையும்
திசையந் தாமுந் திசையும் பொருதியதே
ஆகாச மும்புதைய அநதரருங் கண்புதைத்தார்

நாகா திபரும் நடுங்கினர் எண்பாலகரும்
தன்னை நிகரில்லான் றனுவுக்கி ளையாமல்
கன்னன் மகன்பொருது கைத்திறத்தைத் தான்பார்த்து
வள்ளல் அளித்த மகனே இளங்கரும்பே

... ...

... ...

... ...

---

1 கொல்லும் ஆண்சிங்கம் போன்றான்

விடசேனன் இகழ்ச்சியுரை

தரும னுயிர்த்துணைவன் சாற்று மொழிகேட்டுத்
திருமன் விடசேனன் சீற்றமா யேதுசொல்வான்,
முன்னாள் சிவேதன் முடிமுருக்க வஞ்சனையாய்
சொன்னானைப் போலாகச் சொல்வதுந் தன்வீரியமோ,
திக்கு விசையஞ் செலுத்துமுந்தன் வீரியத்தை
இக்கணமே கொட்டுவிப்பேன் என்றுபயந் திவ்வார்த்தை

சொன்னாய்நீ பேடிச் சொரூப மெடுத்தமையால்
என்னாண்மை சற்றுமணத் தெண்ணாதேகு
என்றுரைத்தான்
மாயுங் கிழவீடு மன்குலமாம்புன் குலத்தோன்
நீயும்பே டிப்பயலாம் நின்தனக்கோர் சேயாவேன்
ஒருவன் தனக்கே யுடையராய்த் தான்பிறந்து
ஒருவன் தனைத்தகப்பன் என்றோது முங்களைப்போல்
என்னையும் மவ்வாறியம்பென்ற வாயாலே
செந்நதி கொட்டச் சிரமறுப்பேன் என்றுரைத்து
ஆரபாரித்து ....சுகமாரி தான் சொரிந்து
... ... சாரத்தேரும் வேந்தனையும் விண்டுவையும்

... ... தோற்றமெ ... ...

பலபல காயம் படுத்தினான அம்மானை.

கண்ணன் அருச்சுனனுடன் கூறல்

இன்னபடி பாராட்டி யிங்கிவனோ டேபொருதில்
கன்னனைநீ வெல்வது எக்காலமென வுரைத்து
இந்தச் சணம்நீ யிவன்சிரசைத் தானறுத்துத்
தந்தை திருமுனமே தான்வீழ்த்தி டென்றுரைத்தான்
முன்னுலக முண்ட முளரித் திருநாபன்[1]

அருச்சுனன் கணையால் விடசேனன் மாய்தல்

சொன்னவாய் மூடுமுனந் தொட்டா னொருகணையை
வின்னாணும் விற்பிடித்த வெவ்விரலும் வின்னடுவும்
முன்னான தும்பை முடியோன் முடித்தலையும்

---

1 உலகை உண்ட, தாமரைத் திருவுந்தியான் - கண்ணன்

பின்னாக வாங்கும் பிறையம்பும் பேரமரில்
ஒன்னார் பகைகடிந்தோன் ஒரம்பினால் அறுத்தான்.
அத்த சரம்வீழா ததனைமறு சரத்தால்
கொத்தமுறுங் கன்னன்முன் கொண்டுசிரம் வீழ்த்தினனே.
வீழ்ந்தான் விடசேனன் வேந்தரெல்லாம் வெஞ்சமரில்
தாழ்ந்தார் மறங்கொடுத்தார் தாதைதடந் தேர்க்காலைச்
சூழ்ந்தார் சிலவீரர் தோலாது எததிர்நடந்தே
வாழ்ந்தார் சுரராகி வான்மாதர் மெய்கலந்தே.
தம்பி சரந்தான் தனைய னுயிர்துலைத்து
அம்புசிர சதுகொண்டு ஐயன்முனம் போட்டமையால்

கண்ணடங்கச் செந்தீக் கனல்வதின் பிறகே
துண்ணெனக் காதுசுடச் சொன்னார் சிற்சிலபேர்

மகன் இறக்கக் கன்னன் துயரில் மூழ்குதல்

சாய்த்தான், விசையன் சரத்தால் தனையனென்று
மாய்ந்தானைப் போல மதியழிந்து கீழ்வீழ்ந்தான்.
என்னுயிரே, மைந்தாய், எனக்கிளையோன் வில்விசையன்
தன்னை யறிந்துஞ் சமரெதிர்த்துச் செய்தனையோ
நின்சே யானென்று நிகழ்த்திப் பிழையாமல்
முன்சார்ந்து விற்போர் முனையாகச் செய்தனையோ
இரங்கி உனக்கு இதமாயவன் பகர
முரண்கொண்டு சித்த முறித்தாய் கொடுமொழியால்

ஆவி போனாலும் அடலிற் புறங்கொடுக்காக்
கோவானான் அம்பாற் கொலையுண்டு மாய்ந்தனையோ
என்றிதையத்து உன்னி எயவர்க்கு மியம்பாமல்
அன்றிறந்தான் போல அயர்ந்தான் மணித்தேர்மேல்
ஊர்ந்தான் எடுத்தாற்றி உற்றமொழி யாற்றேற்றச்

அசுவத்தாமன் துரியோதனன்பால் கூறல்

சோர்ந்தான் எழுமுன் துரோணன் மகனோடி
அரவக் கொடியோ னருகிலே சென்றணுகிப்
பரிவுற்ற பலசொல் பகரலுற்றான் அம்மானை.
தப்பரும் போர்செய்தீர் தருமன்மக னும்நீயும்
மெய்ப்பண் புறுகுலத்து வீடுமனே தான்முதலாய்

குரவர்ச் கிளைஞர்பல கோவினங்கள் தம்பியர்கள்
பரவை யனைய படையுமே தானிறந்தார்.

வளையிலா வேட்டல், வரம்பிலாத் தொல்மரவு,
விளைவில்லாச் செய்யும்மறை, வேள்வியிலாப் பூசுரரும்.
துளையிலா முத்துந், துறையில் வளநாடும்,
கிளையில் அரசியற்கைக் கேட்டதுண்டோ நன்றெனவே
செற்றிறந்தோர் அன்றிச் செகத்தில் இருதிறத்தில்
உற்றிருந் தோரைக்கொண் டொழுகியுன ......
தம்பியரும் நீயுமுந்தன் தம்பியரு மொன்றாகப்
பம்பி யுலகம் பரிப்பதே புத்தியென்றான்.

துரியோதனன் மொழி

ஆரியன் சொற்கேட்டு அரசர்கோன் எதுசொல்வான்
காரியம்நீ சொன்னாயிக் காசினிமேல் ஆதரவாய்
ஆட்சியுடன் நாளும் அவர்க்கன்றோ சொன்னதுநீ
காட்சி யுடன்போர்க் களத்தி லுடல்கிடப்பத்
தேவ ருலகமதிற் சீவன் குடியேறப்
பூசுரன் மைந்தன் புகன்ற மொழிமறுத்து
வீசுபோ ருக்காசை மேலிட்ட நெஞ்சாகி
மன்னர்கோ மானோடி வள்ளல்விழி நீர்மாற்றி

கன்னனைத் தேற்றிக் கூறல்

துன்னுமெய்த் தூசி துடைத்துத் துயர்தீர்ப்பத்
தன்னுரிய சோபந் தவிர்ந்தரசைத் தானோக்கிக்

கன்னன் இசைந்தேது கட்டுரைப்பா னம்மானை.

கன்னன் கூற்று

மண்ணேழ் கலங்குகினும் மண்ணுலகோர் அஞ்சுகினும்
விண்ணேழ் கலங்குகினும் விண்ணுலகோ ரஞ்சுகினும்
சேடன டலைகலங்கித் திக்கோர் கலங்குகினும்
மாடை மலைமுதலாய் வாரி கலங்குகினும்
கற்றோரும் கற்ற கலைகள் கலங்குகினும்
சற்றாகிலும் போர்தனிற் கலங்கா தென்மனது

கன்னன் சபதம்

என்மகன் சென்னி யெனது முனம்வீழ
விண்மக னான விசையன் அறுத்தானவனை
நானுஞ் சரத்தால் நறுக்கிப் புருகூதன்

தானு மெனைப்போலத் தகைத்துத் திகைத்திடவே
வாகை புனைவனென மன்னன் மனமகிழ,
ஆகமுடன் பகர்ந்து ஆழியெனச் சினந்து

தேர் ஏறிச் செல்லல்

மத்திரன் தேரூர மருவார் திடுக்கமுற
அத்திர வில்வீரன் அடர்ந்தான்காண் அம்மானை.
பஞ்ச கருவிப் பலதொனியைப் பார்த்தயனும்
அஞ்சினான் அண்டபகி ரண்டம் உடையுமென்றே
படையின் நெருக்காற் பருப்பதங்கள் உள்ளதெல்லாம்
உடையு மெனப்பயந்தான் உற்ற வுமைபாகன்
எழுந்த துகைப்படலம் எல்லாங் கடல்படிந்தால்
அழுந்துகடல் தூர்ந்திடும்என்று அஞ்சினான் பாற்கடலோன்

இருவர் சேனைச் செலவு

பரியும் பரியும் பரந்து நெருங்கியதே
கரியுங் கரியுங் கலந்தே நெருங்கியதே
தேருடன் தேருஞ் சிறந்தே நெருங்கியதே
கூருடன் கூருங் குறித்தே நெருங்கியதே
கொடையுங் கொடையுங் கொடியும் நெருங்கியதே
படையும் படையும் பரந்தே நெருங்கியதே
அரவக் கொடியோன் அனீகப் பெரும்படையும்
முரசக் கொடியோன் முதிரும் பெரும்படையும்
சாயாமற் கைமெய் சலியாது அடற்பெரும்படையும்
ஓயாமல் மேன்மே லுடற்றிநின்றா ரம்மானை.
தாவுங் கரியாளுந் தாவுங் கரியாளும்
மாவும் பரியாளும் மாவும் பரியாளும்
தேருஞ் சிலையாளுந் தேருஞ் சிலையாளும்
போரின் பதாதிகளும் போரின் பதாதிகளும்
வில்லாளும் வில்லாளும் வேலாளும் வேலாளும்
மல்லாளும் மல்லாளும் வாளாளும் வாளாளும்
எவ்வா யுதமு மிசைந்தே கரத்தெடுத்தோர்
அவ்வா யுதத்தோடு அவர்க்கவராய்ப் போர்பொருதார்
இளைஞர் பெருஞ்சேனையே இருபாலுஞ் சூழக்
கிளைஞர்கள் நேமிக் கிரிபோலுந் தற்சூழ

படையில் வீமன் முதலியோர் செல்லல்

வளையுஞ் சிலைவீமன் மாருதம்போல் முன்னடக்க
அளிமொய்க்கும் தாரான் அறன்குமாரன் பின்னடக்க
மண்டு கொடூர வடவா முகக்கனல்போல்
சண்ட விசையன் அடுத்தாரை மேகம்போல்
வாளி வருடமழை மாரிதான் பரப்பி
மீளி நரசிங்கமென வில்விசையன் தானடந்தான்

துரியோதனாதியர் செலவு

பரித்தாம னுங்கிருத பன்மா வுடன்கிருபன்
பொருப்பாம் புயச்சகுனி பூபாலர் மற்றுமுளோர்
சலதிப் பிரளயமாந் தானைக் கடல்சூழ

அலரிக் கினியசுதன் ஆர்த்தடர்ந்தா ரம்மானை.
மல்வளைத்த திண்டோள் வலியோடு இருவர்களும்
வில்வளைத்து விட்டார் விசையாஞ் சிலீமுகங்கள்
கல்வளைத்த பார்க்கிடும்பொற் காவணம்போற்
கோல்சொரிந்து

சொல்வளைத் திலாவீரர் தும்பைபத் தொடையணிந்தோர்
மருவுஞ் சுருதிநிலை நாலும் வழுவாதோர்
இருவருஞ் சாபம் வளைத்ததுவு மெய்விரகும்
ஒருவருஞ் சற்று முணர்ந்திலர் உகாந்தமென[1]
வெருவருஞ் சிந்தையுடன் அஞ்சினர்விண் ணோர்களும்
சிற்சில பகழிகளைச் சிற்சில சிறகரியச்

சிற்சில பகழிகளைச் சிற்சில பிளந்தோட
சிற்சில பகழியுடன் சிற்சிலர் செருப்புரிய
உற்பனமாய் சிற்சிலகணை ஒன்றையொன்று துண்டு
செய்யப்

பற்பமெனச் சிற்சில பகழி பொருதழிய
பாருருவிப் பற்பல பகழிச் செருப்புரிய
மேருருவிப் பற்பல விசிகஞ் செருப்புரிய
அண்ட கடாகம் அகடுருவப் பல்பகழி
எண்டிசையுஞ் சென்றே யெரிக்கப் பலபகழி
தால மலைகள் தனைதுளைக்கப் பலபகழி

---

1 ஊழிமுடிவு

வேலை யலைசுவற வேகலக்கப் பலபகழி

— … — —

அஷ்டக் கெசங்கள் அபயம் அபயமெனத்
திக்குள பாலர் திடுக்கிட்டு அகங்கலங்கத்
தக்க முடன்போர் சருவப் பலபகழி
சேடன் நடுங்கத் திடுக்கிட் டுயிர்பெறியக்
கோடை யிடிபோற் குறுகப் பலபகழி
குண்டலமும் நேமிக் குவடும் நடுநடுங்க
கதிரும் மதியுங் கணமும்[1] நடுநடுங்க
எதிரு முதிரும் இருசேனையும் பொடிய
ஆகாச வீதி அடங்கவே தான்புதைய
வேகாள மாயிருவர் வீசினார் ஆசுகங்கள்

இதுபடையின் போர்

மால்தேர் வலம்புரிந்தால் மத்திரன் இடம்புரிந்தும்
சால்தேர் இடம்புரிந்தால் தாவி வலம்புரிந்தும்
ஆடுங் கறங்கிரண்டாய் அம்பம் பாமிரண்டாய்ச்
சேடொன்றி யொற்றி நடஞ்செய்தது இருதேரும்
சேலுங் கயலுஞ் சிறந்தெதிர்ந்து பாய்வதென
மாலுந் திறன்மத் திரனுமனித் தேரூர்ந்தான்
ஈசனுடன் காளி யெதிர்த்தே சபதமிட்டுத்
தேசுடனே ஆடியபோல் தேரிரண்டும் ஆடியதே
மாற்றி லுயர்ந்த மகமேரு பாற்கடலிற்
தோற்றமுடன் சுழன்ற தொத்தது இருதேரும்

அனலி யனலோன் அளித்த விருதேரும்
அனிலன் நிகர்சுழல ஆரும் பிரித்தறியார்
தாமனுருச் சல்லியன் உருவுங் கண்டறியார்
காம விசையன்உருக் கன்னன் உருக்கண்டறியார்
இருவர் கிலையு மினதென்று தேவர்களும்
உரவர் முனிவோர் ஒருவோருங் கண்டதில்லை
ஒத்தகதி யொத்தமற மொத்தசுழி யொத்தநிறம்
ஒத்தபுற மொத்ததிற மொத்தவலி யொத்தவிசை
ஒத்தகுண மொத்தநிலை யொத்தவுய ரம்பருமை
ஒத்த வயவீரர் உபையமணிந் தேர்ப்புரவி

---

1 விண்மீன் கூட்டம்

நிலையிரண் டொத்த நிருபர்நிக ரற்றபெரும்
மலையிரண் டொத்து வளைத்தே மலைந்ததென
அலையிரண் டொத்து அதிர்ந்து பொருவோர்கை
சிலையிரண் டொத்து நிமிராது சிந்தியகோல்
மத்திரன் மேனி மயிர்க்கால் தொறுஞ்சரத்தின்
மொய்த்த குதையு முழுகச் சரந்தொடுத்தான்.
காயா மலரிற் களிவண்டு மொய்த்ததென
மாயோன் சுரூப மறையக் கணைதொடுத்தான்
இமைப்பில் அவன்றேர் இடம்வலமும் பேராமல்

சரக்கூடம் அமைத்தல்

அமைத்த சரக்கூடம் அம்பால் நிறைத்துவிட்டு
முன்சிங்க நாத முழக்கினான் மூர்க்கமுள்ள
மன்சிங்க மான வயவிசைய னம்மானை,
கண்ணும் புயமுங் கருதியிடந் துடிக்க

அர்ச்சுனன் அயர்தல்

அண்ணல் விசையன் அயர்ந்தான் அயர்ந்தளவில்
மாயன் விடுதேர் வலிகுலைய மற்றவனும்

கன்னன் சரக்கூடம் அமைத்தல்

காயுஞ் சரக்கூடம் கன்னனுமே தானமைந்தான்
மாண்டி பனைப்போற் கணைக்கூடு அவனமைக்க
மீண்டு நெடியோன் விரகா யவன்மயங்க

அதனைக் கண்ணன் மாயையால் மாற்றல்

மாயாச் சரக்கூட மாயையால் மாலமைக்கச்
சாயா பதிமகன்திண் சாலமதிலுள்ளடங்கிப்
பட்ட மடங்கலெனப் பானுசுதன் மெய்மயங்க
வட்டச் சிலைவிசைய வாகையானுந் தளர்ந்தான்
என்கோல் முனையா தெழுதோ வியமாகி
உன்கைக் கணைசெலுத்தாது உன்னியயர்
கின்றதென்னோ

அர்ச்சுனன் மயக்கமும் கண்ணன் தெளிவித்தலும்

கூறென்று மாயன் கொதித்துரைக்கக் கைகுவித்து
வீறொன்று வில்விசையன் விள்ளலுற்றா னம்மானை.

என்னுயி ரன்னாய் இளையோரில் மூத்தோரில்
வின்னமுட னேயொருவர் வீய்வார்போல் துர்க்குறிகள்
காணு தெதிர்த்தோன் கருணையறன் மகன்போல்.
தோணுதவன் கையாற் தொலைவேன் அலதவன்மேல்

என்கணை யேவ விசையாது இதயமென்ன,
புன்கண் அகலப் பொருவிலா வென்றமையான்
கண்ணிலே யான்விழித்துக் கண்டு களிகூர
அண்ணலே யென்னை யறன்மகன்றன் முன்விடன,
வீமன் றனைப்போர் வின்முகத்தி லேநிறுத்தித்
தாமன் தருமனுழை தன்னிலே தேர்விடுத்தான்
முகில்வண்ண னோடு முகில்வா கனன்சுதனும்
மகிபன் தருமனிடம் வந்துற்றார் ஓர்நொடியில்

தருமன் வினா

கண்டு அறன்புதல்வன் காண்டீபனை நேக்கி,
எண்டிசையுந் திக்கு விசையஞ்செய் இச்சாபம்[1]
என்னசிலை யென்னசமர் இன்னேரம் நீபொருதாய்
கன்னனைநீ யுன்னங் களமறுக்கா திங்குவந்தாய்
போதும்நீ செய்தசமர் போது மெனப்புகல,

அர்ச்சுனன் இகழ்ந்து கூறல்

காதிலே நாராசங் காச்சியே வைத்ததெனப்
புண்மேற் கடுங்காரம் போட்டயிலாற் குத்தியபோல்
மண்மேற் புகழ்விசையன் மானபிரான் கோபமுற்று
கூறாரும் வாகைக் கொடுங்கணைக ளிச்சிலையை
ஆரேனும் புன்மை யறைந்தோரைக் கொல்லுவதே.

தருமனைக் கொல்ல முற்படலும் கண்ணன் விலக்கலும்

என்சபத மென்றே யிணையிலா வில்லின்மிசை,
வன்கணையைத் தான்கோத்து வைத்திழுக்கும் வேளையிலே,

சிரங்கொய்வே னென்று சினத்துச் சிலைமீது
சரங்கொண் டவனைத் தழுவியே நாரணனும்,
குரவோரை நீயெனினுங் கோறல் மகாபாவம்
விரைவாக மும்முறைநீ வெட்டியதுக் கொக்குமெனும்,
புன்மை மொழிநீ புகல்வதுவே யல்லாமல்,

---

1 அம்பு

தன்மமோ தன்மத் தமையன் றனைச்செகுத்தல்
நின்னி லறிஞர் நிலத்திலே வேறுமுண்டோ,
மன்னவா வென்றுதிரு மாலுரைக்க மற்றவனும்

அருச்சுனன் சினம் தணிதல்

வெங்கோபந் தீர்ந்து விரவும் அறிவுவந்து
பங்கேருகத்[1] தாளிற் பார்த்தன் கரம்பரப்பி

எந்தை, விளக்குந் தெளிஞானச் செஞ்சுடரே,
என்னால் முடியா திகல்தவிர்ந்து வந்ததென்று
சொன்னான் விழிநீர் சொரிந்தா னிருபதத்தில்
மறைக்கட லன்னாய் மதிக்காப் பொறைக்கடலே.
பொறுத்தருள் செய்தளிப்பாய் புல்லன்யான் செய்தீமை
என்று பலகால் இவன்நயந்து உபசரிப்ப

தருமன் துறவு கொள்ள நினைத்தல்

ஒன்றும் பகராது வோவியமாய்த் தான்றிகைத்து
வேறொன் றுரையாது விம்மிவிழி நீர்சோர
பாரொன்று வேலான் படர்கானினில் துறவாய்
போவே னெனவே புழுங்கியே யோடலுற்றான்,

கண்ணன் தடுத்தல்

மாவேக மாகமுடி மன்னர்கோ மானோடி
நரநா ரணனும் நடுங்கித் தொடர்ந்தோடி
உரவோன் சரணமதி லுற்றே தொழுதிறைஞ்சிச்
சொல்லாத புன்சொற் சொலிசுடனீ சொற்றமையால்
பொல்லாத கோபமிகப் பொங்கி அறிவழிந்து
வீர மழுங்கான் வெறுத்தான்வில் வீரனன்றோ
தீரன் சிலைதனைநீ செப்புதலுஞ் சின்னமன்றோ
அறியாதான் செய்தல் அறிஞர் பொறுப்பதன்றோ
திறலோய் நீயுத்தாரஞ் செய்தாலிந் தச்சணமே
முப்புரத்தைப் பன்னாள் முதலோ னெரித்ததுபோல்

இப்பொழுதே கன்னன்முதல் எண்ணிறந்த ஒன்னாரைக்
கொல்லுவோம் பல்கவந்தங்[2] கூத்தாட மாற்றாரை
வெல்லுவோ மென்று விடைபெற்ற வர்போல

---

1 தாமரை

2 தலையற்ற உடல் - முண்டம்

தருமன், கண்ணன், அருச்சுனன் மூவரும் போர்க்குத் திரும்புதல்

மன்னர் கோமானை மணித்தேரின் மீதேற்றிப்
பின்னணியில் வைத்துப் பெருமானும் பார்த்தனுமாய்
வணங்கி விடைவாங்கி மன்வீரர் சேனைகளும்,
கணங்கொண்டு ஏழு கடல்போல் வளைந்துவரப்
பிறங்கி நிலவுப் பெருகப் பொழிமதியம்
நிறங்கொள் குடைக்கீழ் நிகரற்ற வீரியனும்
பொற்கவரி வீசப் புடைக ளிருபாலும்

விற்பரவும் வெண்சா மரைவீ றலைவீச
அனந்தங் கதிர்மளிய மானவொளி பிறங்கும்
இனங்கொள் மணிமகுட மேறுசிர சிலங்கக்
கொள்ளைக்கதிர் கொப்பளிக்கு மணிக்குண் டலமும்
வள்ளைக் குழையிலங்க மார்பி லணியிலங்க
பச்சைப் பரித்தேர்ப் பருதிக் கதிர்மழுங்க
வச்சிரக் கவசமக வான்குமரன் மெய்யிலங்கத்
தோற்கருவி யின்பத் துளைக்கருவி வெங்கலத்தின்
நாற்கருவி சங்க நரம்புக் கருவிமுதல்
பற்பல வோதை பகிரண்ட மும்பிளக்க

அற்புதமா பலவிருதி னார்ப்பரித மேலாக
பரிகள் அனுமனிப்பும் பார்த்திபர்கள் ஆர்ப்பரிப்பும்
கரிகள் முழக்கமுந்தேர்க் கால்முழக்கும் வல்வீரர்
சிறுநாண் ஒலியுந் திசைகள் செவிடாக்க
விறல்வீரன் தேரொலியால் விண்ணுமண்ணு மேநடுங்க,
மாயன் தேஜூர வயவீர கேசரியும்
சேய[1] எனவுந் திரிநேத் திர[2]னெவும்
போருக் கடங்காப் பொருவிலா வில்விசையன்
காருக்கு மிக்க கரத்தானைக் கிட்டினனே.

கன்னன் சரக்கூடம் அறுத்து வீமனொடு பொருதல்

தான்முன் வளைத்த சரக்கூட முள்ளதெல்லாம்

பானு சுதனும் பலதூள் படவறுத்து

---

1 முருகன்
2 சிவன்

வீம னுடனே விளையாட்டுப் போர்தொடங்கும்
காம னனையவிறற் கன்னன் தனுப்போரை
கண்களாற் கண்டு களிகூர்ந் துடல்குளிர்ந்து,
மண்கொளாக் கீர்த்தி வயவிசையன் மாருதியை.

வீமனைப் பின்செலவிடுத்து விசயன் பொருதல்

பின்போக விட்டுப் பெருமான் புரந்தகன்போல்
முன்பானான் வீரருக்குள் முன்பான வில்விசையன்
மாமந் தரமாய் வயங்கும் பெருந்தேரை
தாமன் கடாவச் சரராசன் வில்வளைத்துப்
பொங்கும் வடவைப் புணரியிடைப் புகுந்து
மங்கு லெழுந்தடர்ந்து வன்னிமழை பெய்வதென்று
அக்கினி வேந்தன் அடர்ந்தே படர்ந்ததுபோல்,
உக்கிர மான வுதாசன்பா சஞ்சொரிந்தான்.

கன்னன் படை அழிதல்

தீமுகப் பாணந் திசையெங்குஞ் சிந்தியபோல்
ஏமமுறக் கன்னனிடத் துறைந்தசேனை யெல்லாம்
முப்புரத்தில் நீறாக முன்னாள் மடிந்ததுபோல்
செப்பமுற நாலுவகைச் சேனைகளுமே யெரிந்து
தேருங் கொடியுஞ் சிலைபாகு மேயழிந்து
போரு மழிந்தான் பொருவில் அசுபத்தாமன்
கிருபன் கிருதபன்மன் கேடில் தேர்வில்லிழந்து
சுருபம் நிலைகுலைந்து தேற்றமுது கிட்டனரே.
அரவக் கொடியோன் அனுசர் சகுனிமுதல்
விரைவுற்ற தேரழிந்து வில்லழிந்து வோடினரே
காண்டா வனத்திற் கனற்கவிந்த வாறேபோல்
மூண்டே வெஞ்சேனை முனையெங்கு மேகவிந்த
புகையா யெரியாய்ப் பொருவிலா ழித்தீயாய்

கன்னன் செய்த போர்

திகையாவும் பொங்கித் தினகரன்சே யைக்கவிய
அருக்கன் தனிலும் அனற்கொண்ட சிந்தையனாய்த்
தருக்கொண்ட கையான் சலவருணன் அஸ்திரத்தைப்
பரசு முனி[1]யளித்த பாரச் சிலைவளைத்து

[1] பரசுராமன்

அரவப் பகழிக் கதிபன் விரைவாக,
விட்டான் சலதி மிகச்சுவற வேமுகந்து,
கட்டா யெழுந்து சருமேகம் வீசுதல்போல்
சொரிந்த வருணத் தொடையால் அனலாக
எரிந்த பெருநெருப்ப தெல்லாம் மிகஅவித்துத்
தம்பி சரத்தைத் தமையன் சரம்விழுங்க
உம்பர்கோன் கைம்மே லுயர்ந்தகரத் தெய்தியதே
வீரன் மறுகோல் விடுமுன் மிகவெகுண்டு
சூரன் குமரன் தொடுத்த கணைமழையால்

வீமன் முதலியோர் தேர்முதலியன இழந்து நிற்றல்

வீமன் கொடியிழந்து வில்லிழந்து தேரிழந்தான்
தாமன் அனுசன் தனுவிழுந்து தேரிழந்தான்
நகுலனுடன் இளையோன் நற்றேரும் வில்லிழந்தான்
இகலும் பரராச ரெல்லோருந் தேரிழந்தார்
சிகண்டியுடன் சேனாபதி தேரும் வில்லிழந்தார்
மிகுந்த படைகளெல்லாம் தட்டழியத் தான்பார்த்துக்

விசயன் வாயுக்கணை வீசுதல்

கன்னனைக் கொல்வனெனக் காண்டீபன் வில்வளைத்து
வாயுக் கணையை வருமூழிக்கால் நிகர்ப்பச்
சேயிற் றிறத்தோன் சினந்திழுத்து விட்டனனே.
வீரியன் விட்ட விறற்சண்ட வாயுவெனும்
கூரிய வாளி குமுறியதிர்ந் தேமுழங்க
வேரோ டனந்தம் விருக்கங்க[1] ளைப்பிடுங்கிச்
சார்வான திசைவெளிகள் தானெங்கு மேசிதறப்
பம்பரம் போலப் படர்விசையாய்ப் பலவிருக்கம்
அம்பர[2] மெங்கு மசைந்தே சுழன்றாடச்
சீவ னுளதெல்லாந் திடுக்கிட் டபையமிட
பூவலற வெற்புப் பொடிய முகடலைய
விட்ட சரத்தின் விசையால்மண் விண்ணுலகும்
தட்டழியும் நாலுவகைத் தானையும் நீறாகுமென
உம்பர் திகைக்க உகசண்ட மாருதமாய்க்
கும்பலாய்ச் சேனைகளைக் கோலி வளைந்ததுவே

---

1 மரங்கள்

2 ஆகாயம்

கன்னன் சேடன் கணையை ஏவுதல்

தன்சேனை யைப்பார்த்துத் தான்கவிந்த வாயுவின்மேல்
மன்சே வகனான மார்த்தாண்டன் றன்குமரன்
சேடன் கொடுங்கணையைத் தேறித்தொடுத்து விட்டான்.
கோடை யதிரக் குறுசி எதிர்சீறி
அண்ட கடாக மதிரவெதிர் முழங்கும்
கொண்ட லதனைக் குறுகி விழுங்கியதே.
மங்குற் கணையை மகவான் மகனேவ

இருபக்கத்தாரும் கணைகளை விடுதல்

எங்கு மிருண்டு யெழில்மின் னிடிமுழங்கி
ஆரபா ரித்தே யதிர்ந்தே நெருங்குமுனம்
வீரசூ ரன்குமரன் விட்டான் வாயுக்கணையை

வாயுக் கணையோடி மங்குற் பெருங்கணையை
தேய வெருட்டிச் சிதைய அழித்ததுவே.
கங்குற் கணைக்கெதிரிக் காசினியி லில்லையெனத்
துங்க விசையன் தொடுத்தான் திரிபுவனம்[1]
பொங்கு கடலும் பொருப்பும் புகல்திசையும்
எங்கும் பாவி இருளாக மூடியதே
அந்த காரத்தால்[2] அமரர் திடுக்கிடவே
சந்த வாதித்தன் தனையன் நீரெண்கலைசேர்
சீத மதியத் திறற்கணையைத் தான்விடுத்தான்
மோது மிருட்கணையை மூசியே மாய்த்ததுவே.

வருணன் கணையை மகவான் மகன்தொடவே
கருணன் மகவான் கணையால் அறுத்துவிட்டான்.
இத்திர பாசம் எழில்விசையன் தான்விடுத்தான்
சுந்தர வேதன் தொடையா லறுத்துவிட்டான.
வேதன் கணையை விசையன் வெகுண்டுவிட
ஓத நிறத்தான்[3], ஒளிர்கணையாற் றானறுத்தான்.
காசை நிலத்தான் கணையைவீ ரன்றொடுத்தான்
ஈசன் கணையா லிமைப்பி லறுத்தெறிந்தான்.
தொட்ட கணையெல்லாந் தொடர்ந்தே யழிந்தமையால்

---

1 மூவுலகம்
2 இருட்டு
3 கடல் வண்ணன் - கண்ணன்

கட்டழகன் சிந்தை கலங்கினா னம்மானை.

அருச்சுனன் தயங்கி நிற்றல்

என்ன சரப்போ ரினிமேல்யாம் செய்வதெனத்
தன்னை மறந்து தனஞ்சயனும் நிற்பளவில்
ஈது பருவம் இவனுயிரைக் கொள்கவென

கன்னன் நாகபாசம் விடுதல்

வாதுசெய் கன்னன் மனதிலே தானினைந்து
காண்டா வனத்திற் கனல்பரவும் நாளையிலே
மாண்டே யழிந்திறந்த மாதர் பழிவாங்கக்
கூழை வாலோடே கொடையாளன் பாலடைந்த
பாழிசேர் சர்ப்பப் பகழிவிட நினைந்துத்
தூப தீபத்துடனே துய்யநறைப்[1] புகையில்
தாப மூடன்காட்டிச் சாந்த மறைபகர்ந்து

வெற்றி மழுராமன்[2] வில்லின்மிசை வைத்தநிலை

சல்லியன் கூற்றும் கன்னன் செயலும்

பற்றியுள்ள சல்லியனும் பார்த்தேது சொல்லலுற்றான்,
மாயன் விரகன் மிகுவஞ்சனை யனாதலினால்
நீயவன் மார்பு நிலையிலக்காய் வீசுகென்றான்.
அந்த வுறுதி யறியாது அருக்கன்மகன்
சந்தச் சிரசறுப்ப தல்லதுமார் பிற்றொடுக்கேன்
என்று கழுத்து இலக்கா யிழுத்துவிட்டான்.

கண்ணன் சூழ்ச்சியால் காத்தல்

மன்றல் துளசி மணிமார் பகன்பார்த்து
ஈறாறு அங்குலி[3] தேர்இத்தலத்தி லேபுதையச்
சீராரு மாயன் திறமா யழுத்திவிட்டான்.

அவ்வேலை மல்லல் அரவப் பெருவாளி
வெவ்வா னிடிபோல மிகச்சீறி யேகுமுறி
அச்சமில்லா வீரன் அகலங் கழுத்தைவிட்டு,
வச்சிரன் நதிபயந்த மகுட மிடறியதே.

---

1 தூய வாசனை

2 பரசுராமன்

3 அங்குலம்

மகுடந் தனையிடறி வாளிபுறத் தோடிடவே,

அர்ச்சுனன் அக்கணையைச் சிதைத்தல்

நகுலன் றமையன்முகம் நாணாமற் கோணாமல்
வென்புறத்தில் விற்பிடித்து வெல்லும் அயில்முனைகூர்
அம்பிழுத்து விட்டான் அவ்வம்பு விரைந்தோடி
தலையைந்து மோர்துணியாய்ச் சர்ப்பவுடல் ஓர்
மலையென் றுயல்வீழ, வல்லதலை ஐந்துடனே.

என்னை யேவென்ன வெழிலி[1] யனையகொடை

நாகம் வேண்டுகோளும் கன்னன் மறுப்பும்

கன்ன னிடத்தில்வந்து கட்செவியுந் தான்கூற
உடலுந் தலையு முரத்தோடு போய்பிழைத்தாய்
உடலுங் குடலு மிழந்தோனீ பகையறுப்பாய்
ஒருக்கால் விடுத்தேன்நீ யோடி யவத்தமுற்றாய்
இருக்காற் பிழைத்தகணை யேவே னொருபோதும்.
உன்மொழியைக் கேட்டு வுனக்கமிர்தத் தானீய்ந்தேன்
என்மொழியும் பொய்க்க விகல்வலியும் நீயிழந்தாய்
கடன்கார னென்றே கருத்தி லறியாமல்
அடங்கா படைசெயிக்கல் ஆமென் றுனைக்குறித்துப்

பன்னாளிற் பட்ட பழையகட னுள்ளதெல்லாம்
இன்னாள் வரைக்குமுனக் கீய்ந்தேனி னிவளர்க்கேன்.
ஆவுக் கிரையளித்தால் அன்பா யமுதளிக்கும்
மேவு மமுதம் விடப்பாம்பி னுக்களித்தால்
ஈறு விடமளிக்கு மென்றுபெரி யோருரைத்த
வாறு பிழைபோய் மறுத்தே வெனப்புகன்றான்.

பாம்பின் கூற்றும் இறப்பும்

ஆதலால் நீவிட் டகலென் றிவன்வெறுத்த
போதி லரவம் புகைந்துவெறுத் தேதுரைக்கும்
தொடுத்தோன் பிழைபோய்த் தொடுகணையை நோவதுண்டோ
விடுத்த வில்கை விலகிப் பிழைத்தேனோ

என்று பகர்ந்து யெரிபோற் சினமேறி
அன்று தேர்க்காலில் அறைந்து மடிந்ததுவே.

---

1 மேகம்

தம்பியாங் கன்னனிடந் தான்வெறுத் தவன்றமையன்
சம்பு பகைத்தயிமன் தன்பா லுயிர்தரித்த
பிடரியினும் நயஊம் பெற்றோனைப் போலாக,
அடல்வில் விசையன் வெகுண்டடந்த நாள்வாலறுத்த
வீறாம் பிறைக்கணையை விட்டே யறுக்கவிரு
கூறாக வீழக் கொடியதலை ஐந்துடனே
பின்னும் எமனையேவு பிளப்பே னவனையென
கன்னன் மறுத்ததற்பின் கட்செவியு மாய்ந்ததற்பின்

விசையன் பிழைத்தமைக்கு இருபக்கத்தாரும் மகிழ்தல்

விசையன் பிழைத்ததென்று வேந்தர் மகிழ்ச்சிபெற்றார்
இசையு மேகாதசக்தி எக்கோளும் ஒக்குமெனப்
போர்முகத்தில் யாரும் பொருதுந் தொழில்மறந்து
கார்முகத்தைக் கண்டு கதித்த பயிர்போலானார்
பற்குணன் சேனைப் படர்மகிழ்வால் போர்மறந்தார்.
அருக்கன் மகன்சேனை யாகுலத்தால் போர்மறந்தார்

சல்லியன் கூற்று

மார்பிலக்குச் சொல்ல மறுத்துவிட்ட வெஞ்சினமும்
கூர்பணியை மீண்டு குறித்தெய்யா வெஞ்சினமும்
தன்னிலை மையான் தயிரியங்கள் குன்றியதும்
பின்னும் பொருதப் ,பெயர்ந்து கருத்துஅற்றதுவும்

சீர்தூக்கிப் பார்த்துத் தெளிவான மத்திரனும்
கார்தோற்குங் கையாளன் கன்னனைப்பார்த்து ஏது
சொல்வான்
மாலொத்த மீளி மனனொந்து . . . .,
போலொத்து வன்முன் புகலலுற்றா னம்மானை.
என்னாலு முற்றாது இனித்தேர் விசைந்தூர
உன்னாலு முற்றாது வுன்பகையைத் தான்செயிக்க
அரவத் துவசன் அறன்மகனை மேலாடி
விரைவிற் புவிபுரக்க வீரனே முற்றாது

தேரோட்டாது வேறு தேர் ஏறல்

என்றே பொற்றேர் விட்டிழிந்தான் தரைமலரில்
நின்றே பறந்த நிமிறுஒத்து அவனியிலே

குன்றே நிகர்த்துக் குலவியொளி பிறங்கும்
தன்றேரி லேறிந் தரித்தான் றனதுடலை.

கன்னன் வேறு தேர் ஏறிப் போரிடல்

உரமொத்த சர்ப்பம் உயிரொத்த மத்திரனும்
வரமொத்த தேரருக்கல் மைந்தனுமே தானிழந்து
வேறுமொரு தேரின் மேற்கொண்டு விற்பிடித்து,
ஏறிடி யொத்தே யெதிர்த்தான்கா ணம்மானை.
இயற்கைப் பெருவலியோன் நின்றியே யாரிடத்தும்
செயற்கையாற் பெற்றபடை செங்கைக் குதவாதால்,

பலராமன் சாபத்தை நினைத்தல்

இகலின் மழுவாளி[1] யிட்டபெருஞ் சாபமதை
பகலவன் மைந்தன் பதித்தே மனத்தின்மிசை
மூர்க்கமாஞ் சீவன் முழுதுமே போனாலும்
ஊக்கமே கைவிடுவது ஒண்ணா தெனத்தேறிக்
கண்சிவந்து வெய்ய கதிர்போற் கனன்றெழுந்தான்.

கன்னனும் விசையனும் போர்புரிதல்

பண்சிறந்த வீரப் பரசுமுனி வில்லெடுத்து
வாசாம கோசரமாய் வாளிப் பெருமழையால்
பூசா பலவருக்கன் புத்திரன்மேன் மேற்சொரிந்தான்.
விட்ட கணைமழையை வில்விசயன் தானறுத்துக்
கட்டழகன் வாளிக் கணமழைமேன் மேற்சொரிந்தான்.
சொரிந்த கணைமழையைத் துண்டித்துத் தூள்படுத்தி
விரிந்த கணைமாரி வீசினான் கன்னனுமே.
கன்னன் கடுங்கணையாற் கண்ணன்திரு மேனி
பொன்னங் குன்றென்னப் புறம்படைத்தா னம்மானை.
இன்ன மிவனுயிரவைத் தென்னபோர் செய்வதென்
முன்னமா லிச்சொல் மொழிந்து முடிவதன்முன்
ஏக காலத்தில் யெழும்புங் கனமழைபோல்
வாகதாய் வாளி மழைமாரி தான்சொரிந்து
அம்பு மயமாக அங்கம்புக் கூடாகச்
சொம்பு மறம்புறமுந் தோற்றும் படிநிறைத்த
சரத்தின் குதைக்குஞ் சரத்தின் கணம்நிறைத்து
மருத்தும் வடவையைப்போல் வல்விசையன் போர்புரிந்தான்

---

1 பரசுராமன்

ஈகையால் விற்போர் இகலாவி கற்போரின்
வாகையாற் சீரால் வளத்தால் வளர்புகழால்
ஒப்பிலா வீரன் உடல்தோறும் மெய்க்குருதி
குப்பலாய் வெயிலவன் கொழுங்கதிரே போல்விரிய
வச்சிரக் கவச மணிக்குண் டலமகுடம்
உச்சிதப் பூணு முருவு முருக்குலைந்து
கைவிரசு வெய்ய கணைவிரசும் வில்விரசும்
எய்விரசுஞ் சற்று மிளையா திகல்புரிந்தார்.
மேலைக் கிரிபுகுத விறற்கடைரெண்டு டுண்டெடனவே

அந்தியில் கண்ணன் அந்தண வடிவில் சென்று கன்னனிடம் கூறி வேண்டல்

கோலப் பருதிக் குறுகுமந்த நேரமதில்
மூலமாய் மூல முதலா கியமூர்த்தி
ஞால மளந்தோன் நரனைச் செருத்தவிர்த்து,
நில்லென்று தேரில் நிறுத்தித் தவமிசைந்த,
வல்ல படிவ வடிவ முதுமுனிபோல்
ஈந்து சிவந்த யிருகை யுடையானைச்
சாந்தக் குணத்தான் தனைசேர்ந் தெடுத்துரைப்பான்,
தரணி தனிலே தளர்ந்தோ ரடங்கலையும்
கருணையுடன் தாங்குங் கையா னெனக்கேட்டேன்.
இச்சித் துன்பாலி லிரந்தோர்கள் கேட்டதெல்லாம்
நிச்சயம்நீ யீவாயென நிகழ்த்தவே கேட்டு
மேரின்[1] வெகுகால மிக்க தவம்புரிந்தேன்,
பேரின் வறுமைப் பிணியால்மிக வுலர்ந்தேன்,
ஈந்த கொடைகளெல்லாம் இன்றவத்தம் போகாமல்
ஏந்தலே யன்பா யிசைந்தேதும் ஈய்ந்திடென்றான்.

கன்னன் மொழி

முனிவன் மொழியமிர்தம் உட்செவியிற் றான்கேட்டுத்
தனுவில் விசையன் சரந்துளைக்க மெய்யர்ந்தோன்
நன்றென்று உகந்து நகைத்துநான் நல்கும்வகை
இன்றென் னிடத்தி லிசைந்தேதும்நீ கேளுகென்றான்

கன்னன் விருப்பம்

அண்ணலே யுன்னிடத்தில் யாதொன்றும் நான்காணேன்
புண்ணிய மெல்லாம் பொருந்தவெனக் கீய்ந்திடென்றான்

கன்னன் மொழி

ஆவி நிலைகுலைந்தேன் ஆயாசமா யயர்ந்தேன்
சீவன் அகத்தினிலோ சென்றுவெளிப் பட்டதுவோ
பாவி நயந்திருந்தப் பக்குவமாம் நாளையிலே
மேவிநீ வந்ததிலை வேதியனே சாதகமாய்,
பன்னாளுஞ் செய்த பலனெல்லாந் தந்தனெனச்
சொன்னான் பலகால் துதித்தே பினுமுரைப்பான்.
அயனு முனக்குநிக ரல்லவெனிற் புண்ணியந்தான்
வியனோ மிகப்பெரிதோ வேதியனே கைக்கொளுநீ
என்ன மொழிந்து யிருகை குவித்திறைஞ்சும்

கண்ணன் மொழியும், கன்னன்தன் புண்ணியத்தை அளித்தலும்

கன்னன்றனைக் கிருபைக் கண்ணனுங்கண் ணால்னோக்கி
நன்றுநீ கைப்புனலால் நல்கென்று மால்கேட்ப
அன்றிதையத் தம்பின்வழி யாயொழுகுஞ் சோரியினால்
ஈய்ந்தான் கரந்தனிலே ஏற்றான் நெடியோன்பின்
பூந்தாரான் கன்னன் பொருவில் முகம்னோக்கி
மன்னா நீவேண்டும் வரமென் னிடந்தனிலே
இன்னேரங் கேட்டதெல்லாம் ஈவேன்நீ கேளுகென்றான்
அவ்வார்த்தைக் கேட்டு அருக்கன் றிருக்குமான்

கண்ணனிடம் கன்னன் வரம் பெறல்

இவ்வார்த்தை சொன்னமையா லீசனீ யாகுமென்று
இன்னம் பிறவி யெடுத்தா லெழுபிறப்பும்
சொன்னமுதல் வேண்டுவதுந் தோற்றமுடன் கேட்டோர்க்கு
இல்லை யெனப்பகரா தெக்காலு மேயருள
நல்ல இதையம் நனியாகத் தந்திடென்றான்,
மைத்துனன் சொல்லால் மகிழ்ந்தானந் தக்கிருபை
மொய்த்தன வெள்ள முராரிபித யத்தடத்தில்
கைத்தல மென்னுங் கமலச் செழுமலராம்
மெய்த்தல மொன்ற விரவியே தான்றழுவி
மாறாக் கிருபை மழைவருஷங் கண்ணாலே
வீறாய்ச் சொரிந்தவன்றன் மெய்யெல்லா மூடிக்காட்டி
எண்ணிற் பிறவி யெடுத்தாலு மெப்பிறப்பும்
மண்ணிற் பெருவாழ்வு வண்மையுளோய் நீயாக

அந்த முத்திமோட்ச மடையக் கடவதென்று
உந்தி முதற்பூத்து உலகளந்தோன் செப்பினனே

கண்ணன், தன் உண்மைக் காட்சியளித்தல்

போற்றிய கன்னன் புளகித் தகங்குளிரக்
காற்ற[1] கிருபைக் கருமேக வண்ணமுடன்
பஞ்சா யுதங்கள் பரவுங் காதலமாய்
மஞ்சான வாரணமுன் வந்ததிருக் கோலமுடன்
நின்றா னுகந்து நினைந்தோ ரிதையமதில்
குன்றாத சோதிக் கொழுந்தா யமர்ந்திருப்போன்,
அமரர் முனிவோர்கள் அட்ட வசுப்பாலர்

கன்னன் பரவி உரைத்தல்

கமல முனிமுதலோர் கண்டேயடி தொழுதார்.

தெய்வ நதியாடிச் சிறந்தழல்கூர் வேள்விசெய்து
மெய்வருந்திப் பூசை விருப்பியோ கத்திருந்து
காணற் கரிய கடவுளே யுன்காட்சி
தோணச் செப்பாதஞ் சுடர்விழியி னான்பொதியப்
பெற்றே னெங்கெங்கும் பிறங்கியே தானிறைந்து
பொற்றா மரைமார்பர் புண்டரீகக் கண்ணானே
நீலமலை கடல்கார் நெய்த்தகா யாமலரின்
கோலமுடன் வாழாழி கோதண்டஞ் சங்குதடி
ஏந்து கரமு மெழின்மா மணித்துளசி
சாந்து பொதியுந் தயங்கு செழுமார்பும்

குண்டலக் காதுங் குவடொத்த திண்புயமும்
தொண்டர்க்கருள் சுரக்குந் தொண்டைக்[2] கனிவாயும்
அணிப்பூக[3] மொத்த வழகாஞ் செறிகழுத்தும்
மணிச்சீரின் மிக்க வடிவாம் நிரையழகும்
செந்தா மரைமலரிற் செவ்வி முகம்விழியும்
சிந்தூர மோங்குஞ் சிறப்போங் கியநுதலும்
வண்ணஞ் சிறந்த கதிர்மா மணிமுடியும்
கண்ணெங்குங் கொள்ளாத காட்சியின்று பெற்றேனே

---

1 காத்த
2 கொவ்வைக்கனி
3 கமுகு

மெய்மை பொறைத்தருமம் வீரம் விறலறிவு
செய்மை நெறிநீதி சேரவே யோருருவாய்

வந்தத தாமனொடு மற்றுமுள்ள தம்பியொடும்
எந்தன் றுணையென்று இசைந்தறிந்தும் போர்பொருதி
உயிருக் குயிராக வொன்றுமுயிர்த் தோழனுக்காய்,
இயல்புற்ற வென்னுயிரை யீய்ந்தே னெனக்கடனும்.
தீற்றேனென் தம்பி செயவிசையன் கையாலே
கூற்றாந் தமையன் கொளக்கொடுத்தேன் ஆத்துமத்தை,
கோபதிக்கு யென்கவச குண்டலமு மன்றீந்தேன்,
மாபதியே நிந்தன் வசமழிந்தேன் நன்மையெல்லாம்
மருது சகடுந்தத்த மாலே யொருதமியேன்,
வரிசையுடன் யான்பூவில் வாழ்ந்தவாழ் விவ்வாறே.

கங்கை கமழ்தாளுங் கண்டெனதிர் பணிந்தேன்.
மங்கு லெனும்நீ மதிக்கவே வீறுபெற்றேன்
வனமார் பகத்திலெந்தன் மார்பிணங்கப் பெற்றேனே.
எனதுடல் வில்விசையன் ஏவினா லீடழிந்தும்,
உனதுபெய ரென்னாவில் உற்றோதப் பெற்றேனே.
வினவியான் பெற்றதுபோல் மிக்கவர் யார்பெற்றாரே

கன்னன் கூற்று

என்றுரைத்த கன்னன் இனிய முகம்பார்த்து,
அன்று குழைகவசம் ஆளகண் டவனைவிட்டுத்
தான்வாங்கு வித்தேயுன் தாயைவர விட்டோனும்,
ஊன்வாங்கும் வேலாய் உரகமிரு காலேவ

வேண்டா மெனவும்வரம் வேண்டவர விட்டோனும்.
காண்டா வனம்யெரித்தோன் கந்தரத்தில் உன்வாளி
சாராமற் செய்துஅவன் றன்னையே காத்தோனும்,
சீராக யானெனவே செப்பியவன் றன்னைவிட்டு

கண்ணன் மீண்டு அருச்சுனன் தேர் செலுத்தி, அருச்சுனனிடம் கூறல்

பாங்கனுக்குத் தேர்நடத்தும் பாகனாய் முன்னிருந்து
ஈங்கிவனை யோர்கணையால் எல்லோன்[1] புகுமுனமே

1 சூரியன்

கொல்லென்றான் மாயன் குறித்தமொழி தான்கேட்டு
நல்லென்றான் வீரன் நரனென்னும் பேருடையான்

அருச்சுனன் அம்பு செலுத்தல்

சஞ்சரீக மென்னுந் தழங்கியகூ ரம்பதனை
பஞ்சவரில் நடுப்பிறந்தான் பார்த்தன் விசைத்திழுத்து

வள்ள லிதையமற விட்டானவ் வாளி
கள்ளவிழ் தார்ராமன் கணைபோலுங் கற்றோர்கள்
சொற்போலுந் தப்பாமற் சுந்தரன்மார் பைப்பிளந்து

அம்புபட்ட கன்னன் அயர்ந்து விழுதல்

பொற்பான கன்னன் புறமுருகிப் போயதுவே
வைசஞ்ச ரீக மறைவாளி தைத்துருவ
ஐயன் செகத்தில லறியே வீழ்ந்தனனே.
கருடன் றிருத்தோளிற் கண்ட பெருங்காட்சி
இருகண் இதையத் திசைந்திருக்க வெம்பெருமான்
தாமப் பொருள்தானே நாவில் நனிவிளங்க
வீமர்க் கிளையோன்றன் வெய்யகணை யாற்குளித்து

நிருபர் புடைசூழ, நிதனம் புடைசூழ,
குருடன் மகன்சோபங் கூறிய கிருபன்
மூவுலகின் மன்னர் முனிவர்கை மேலான
காவல்கூர் கன்னன் கதிரோ னருள்குமரன்
அடையாரை வென்றதிறல்ஐ வோர்க்கு முன்பிறந்தோன்
கொடையாலு மிக்கோனுங் குற்றுயிரோ டேகிடந்தான்.

அசரீரியால் அதனை அறிந்த குந்தி நிலை

உன்புதல்வர் ஐவருக்கு முற்றே முதற்பிறந்தோன்
வன்புலவு வில்விசையன் வாளியினா லேசோர்ந்தான்
அருக்கன் படுமுன் னவன்சேய் படுமெனவே
துருக்குமணிக் குந்தியர்க்குச் சொன்ன தசரீரி,

அந்தரமாஞ் சொற்கேட்டு அனையான குந்திநல்லாள்

குந்தி உரை

எந்தவமே யென்ன விரைந்தே கரைந்தலறிக்
கோகோ வெனவே கொழுங்கைச் சிரசேற்றி
வாகான கண்ணீர் வரைத்தடமெல் லாம்நனைப்பக்

கூந்தல் நிலத்தூரக் கோதாரிக் கூக்குரலாய்
யேந்திழையு முன்னாளி லீன்றமகன் மேல்வீழ்ந்து
ஆறாத சோபமடைந் திடைந்து கண்ணிலிரு
ஆறோடச் சிந்தை யனல்மெழுகத் தாயுருகித்
தாதையிடத் தில்வந்த தானமுனி மந்திரத்தால்,
பேதை மதியாலே பெற்றேன் கதிர்க்குனைநான்

பல்லார் நகைக்கும் பழிப்புக்குந் தான்பயந்து
பொல்லாதாள் கங்கையிலே போட்டேன்பொற் பெட்டி
வைத்தே
ஓர்குடையி னீழல் உலகெல்லாந் தான்புரக்கும்
சீர்குலவு மெந்தனுட சேயுன் றிறங்கேட்டு
மித்திர னென்றும் விரும்பியுயிர்த் தோழனென்றும்
பத்தியுடன் அங்கர் பதியாய் முடிசூட்டி
ஏற்போருக் கெல்லா மெழிற்றருப்போ லென்னாளும்
காற்போனை யுன்னையிரு கண்ணாக வைத்துகந்தான்
எந்த னிதைய மிருகண்ணு மேகூர்ந்து,
சந்ததியே யன்பாகத் தான்பார்த்து திருந்தேனே.

மன்னுலக மெல்லாம் மகிழ்வாக நீயாண்டு
பொன்னுலகம் நீயாளப் போகமன முற்றாயோ.
ஓரஞ்சு தம்பியர்க ளுற்றதுணை யல்லாது
ஈரஞ்சு பத்திளையோ ரெல்லொருந் தாள்வணங்க
காரஞ்சுங் கைத்தலத்தோய் காசினியெல்லாம் புரக்கப்
பாரஞ் சுமக்கப் பதம்படைத்த பாக்கியன்நீ
தெய்வ விதிமயக்கால் சீரிழந்து மெய்யிழந்து
தெய்வப் பதஞ்சேரச் சீக்கிரமோ வுன்பயணம்
என்றரச ரெல்லோரு மேதென் றதிசயிப்ப
அன்றன்போ டேங்கி யயர்ந்தலறி மூச்செறிந்து

கன்னனை மடிமீதமர்த்திப் பாலூட்டல்

வாரி யணைத்து மடிமீ தினிலேற்றிப்
பார வுபயப் பயோதரக்கண்[1] பாலூட்டிக்
கன்றிழந்த ஆவாய்க் கதறி உடற்பதறிக்
குன்றி மெலிந்தழுதாள் குந்திமா தேவியென்பாள்.

---

1 முலைக்கண்

அனைவரும் வருந்தல்

அந்தோ வென்றெங்கும் அனைமடியுங் கைத்தலத்தும்
சந்தார மார்பனுடல் தங்கவுயிர்த் தாதைதனை
மேவித் தழுவுதற்கு விண்ணேறத் தூணிறைத்துக்
காவிப்பொன் பூசியதாய்க் கதிர்க்கற்றைத் தோற்றியதே
மருத்துதவும் வீமனெனும் வல்லூழிக் காற்றாமல்
அரிச்சுன னென்னு மரிவடவைத் தீயாலும்

தொல்லாழி யேழுஞ் சுவருமந்த காலமெனச்
சல்லாப வேந்தனுட தானைப்பிர ளையந்தான்
வற்றச் சுவற்றிவிட்ட வாகைக் கரப்படையின்
வெற்றிதனை யென்னால் விரித்துரைக்க முற்றாதே.
எந்தன் மனவலியாய் என்றுயிராய் என்விழியாய்.
எந்த னுயிர்நிலையா யென்கண்ணின் உள்மணியாய்
நம்பி யிருக்குமுயிர் நண்பனே என்னைவிட்டு
உம்ப ருலகாள வோடுவதோ வொன்னார்கள்
கைப்படு நீயென்று கழல்வது முன்சேவகமோ
மெய்ப்பொருளே யுன்னையன்றி மேதினியா னாள்வேனோ

உன்னை யிழந்து உரிய துணையிழந்து
பின்னை யெனதுயிரைப் பேணியுல காள்வேனோ
வாழ்வே மனவலியே வந்தேன்வந் தேன்யானும்
தாழ்வேனோ மாற்றார்முன் சாற்று முரசழிந்தே
என்றொரு கோடி யியம்பவர வக்கொடியோன்
மன்ற லரசர் வலியிழந்தோ மென்றுருக
இனக் கொண்ட லின்முழக்கு என்றேவான்முரசொலிப்ப
கனக்க வமரர் கதித்தார்ப் பரித்தார்ப்ப
வண்மைக்கு மிக்க மகன்பா டறிந்துகதிர்
திண்மைக் குடபாலிற் சென்றடைந்தா னம்மானை.

அன்னை யழுதகுரல் ஐவர்களுந் தான்கேட்டு

கண்ணனால் கன்னன் வரலாறறிந்து ஐவர் வருந்தல்

என்ன வகையென் றியில்மாலை தான்கேட்கக்
கன்னன் வரலாறைக் கண்ணன் எடுத்துரைப்பத்
தன்னை மறந்தலறித் தன்முன் னடித்தாளில்
வீழ்ந்தார் அயர்ந்தார் வெதும்பினார் வெய்துயிர்த்தார்
தாழ்ந்தார் விழிநீர்ச் சலமாரி யாய்ச்சொரிந்தார்

வானிடியே றுண்டவர் உளம்போல் மெய்நடுங்க
தேனொழுகுத் தாரார் திருத்தாய் முகம்நோக்கி

ஐவரும் தாயிடம் நோதல்

நெஞ்சி லமைத்தாய் நிலைத்தமொழி கூறாமல்
வஞ்சகம்நீ செய்ததென்கொல் மாதாவாய் நீயிருந்தும்

வல்ல முனிமந் திரமும் வரலாறும்
சொல்ல மறந்தனையோ துன்பம் விளைத்தனையே
பெற்றமா தாவாய்ப் பிராணனாய் நீயிருந்தும்
உற்ற துரையாது ஒளித்ததுவுன் பேரறிவோ
பேயா யிருந்தாலும் பெற்றசேய்க் கீனம்வரத்
தாயாயி ருந்தமையாற் சம்மதியாது உண்மைசொலும்
என்னப் பகர்ந்து இடைந்தலறி வில்விசையன்

விசையன் கூற்று

கன்னன் சரணக் கமலத்திற் வீழ்ந்துசொல்வான்
ஊற்றிருந்த கண்ணாய் உனதுதாய் தானரற்ற
கூற்றிருந்த திக்கைக் குறித்தே நடந்தனையோ

நூற்றுவரு மைவருமாய் நுந்துனடி வணங்க
வீற்றிருந்து ஒர்குடையில் மேதினியை யாளாமல்
உற்று துரையாமல் உன்றமையன் நான்எனவே
சற்று மொழியாமற் றான்படியக் காரியமேன்,
சர்ப்பக் கனைதனக்குந் தப்பினேன் சாகாமல்
மாயன் மொழியால் மறுத்துவிட்ட சஞ்சரீகம்
ஆயுமுன் சீவன் அழிப்பது அறியேனே
என்செய்தேன் உன்னோடு எதிர்த்தேன் இடக்குரைத்தே
முன்செய்த தீவினையோ மூண்டவினை உந்தனுக்கு

யாயுரைத்த தல்லால் அசரீரி யென்றபுத்தேள்[1],
வாயுரைத்தல் கேட்டறியோங் கேட்டோமேல் வாட்டமுண்டோ
பேயுயிர்ப்பும் பாலுமுண்ட பித்தா பிறகுநிசங்,
நீயுரைத்த பின்பறிந்தோம் நெட்டுரஞ் செய்தனையே.
ஆட்கனைச்[2] சேயால், அழித்தாய் இராவணனை
வீடணனை யுள்ளாக்கி வென்ற குலமறுத்தாய்

---

1 கடவுள்
2 இரணியன்

என்னைக் கொன்றென்முன் எழிலாவி தான்மாய்த்தாய்
உன்னைச் சதமாக வுற்றுநம்பி பெற்றதிதே
சகமாள் வதற்காகத் தந்தைநிகர் மூத்தோ
இகமீதிற் கொல்வ திதுவோ பெருங்கீர்த்தி
என்றொரு கோடி இயம்பிநில மீதயர்ந்தான்

மற்றவரும் சேர்ந்தனர்

நின்றோரு கோடி நிகழ்த்தியே மற்றோருரும்
சோர்ந்தார் அவரவரே துன்பக்கடற் பெருக்கில்
சார்ந்தே யழுந்தித் தயங்கியே மெய்மறந்தார்.

கண்ணன் பஞ்சவரைத் தேற்றல்

அல்லல் உழந்து அயர்ந்தோ ரெழுந்தபின்
மல்லற் புயனெடியோன் மைத்துனன்மா ரைத்தேற்றி
குந்தியையுந் தேற்றிக் கொடுசென்று பாசறையிற்
சிந்தைத் துயரோடு சேர்ந்தே யுறைந்திருந்தார்

சகுனி முதலியோர் பாசறை அடைதல்

சகுனி முதலானோர் சர்ப்பக் கொடியோனைப்
பகரும் பெருமதியாற் பாசறையிற் கொண்டுபுக்கார்

நாவாரப் பதினேழா னாட்சருக்கந் தானுரைத்துப்
பாவா லியல்பாய்ப் பதினெட்டாம் போருரைப்போம்

ஸ்ரீராமஜெயம் குருபாதமேகெதி

சிவமயம்

பதினேழானாட் போர்ச்சருக்கம் முற்றிற்று.

தருமராசாக்கள் வீரய்யன்துணை

பதினெட்டாம்நாட் போர்ச்சருக்கம்

[illegible]
[illegible] காலையில் துரியோதனன், சல்லியனைத் தலைவனாக்குகிறான். இருவரும் களம் புகுகின்றனர். சல்லியன் அணிவகுக்கிறான். பாண்டவர் இரவில் கன்னன் பிரிவிற்கு வருந்தினர். பின்னர் போர்க்களம் எய்துகின்றனர். சல்லியன் வியூகத்தால் தருமன் தளரக் கண்ணன் தேற்றுகின்றான். தருமன் சல்லியனும் போர் புரிகின்றனர். தருமன் தளர வீமன் சல்லியனோடு போர் புரிகின்றான். கன்னன் புதல்வர் மூவர் நகுலனால் மடிகின்றனர். நகுலனிடம் சகுனியும், அவன் புதல்வர்களும் தோற்கின்றனர். துரியோதனன் சேகிதானனைக் கொல்கின்றான். மீண்டும் தருமன்; சல்லியன் போர் நடக்கிறது. சுமித்திரன் முதலியோர் இறக்கின்றனர், வீமன் மெய்புதையச் சல்லியன் அம்புவிட, நகுலசகாதேவர், சாத்தகி வந்து சல்லியனோடு போர் செய்கின்றனர். வீமன் சல்லியன் கொடி முதலியவற்றை அறுக்கின்றான், அருச்சுனனும், அசுவத்தாமனும் போரிடுகின்றனர். அசுவத்தாமன் பின்னடைகின்றான். கிருபன் முதலியோரை வென்று விசயன் வீமனை அடைகிறான் சல்லியன் படை இழக்க, துரியோதனன் உதவி செய்கிறான். சல்லியன் சாத்தகி நகுலனை வெல்கின்றான், வீமன் சல்லியன் மகுடத்தை வீழ்த்துகிறான் துரியோதனன் வீமனோடு போரிட்டுத் தோற்கிறான். தருமன், சல்லியனோடு போர்செய்கிறான் தருமன் வேலால் சல்லியன் இறக்க, துரியோதனன் சேனை நிலைகுலைய, எழுநூறு தேர்வீரர் தருமனை எதிர்க்கின்றனர். சகுனி முதலியோரோடு துரியோதனன் எதிர்க்கின்றான். துரியோதனன் தம்பியரை எழுவரை வீமன் கொல்கின்றான். மேலும் ஐந்து தம்பியர் இறக்கின்றனர். துரியோதனனைச் சகாதேவன் வெல்கிறான். சகுனி தோற்க, துரியோதனன் தம்பியர் ஒன்பதின்மர் பொருது மடிகின்றனர். எஞ்சிய துரியோதனன் தம்பியர் அனைவரும் வீமனால் இறக்கின்றனர். வருந்திய துரியோதனனைச் சகுனி தேற்றுகின்றான். சகுனி வீமனுக்கு நிலைகுலைகிறான். துரியோதனன் மேல் வீமன் அம்பு செலுத்துகிறான், அசுவத்தாமன் மேல் சோழன் அம்பு ஏவுகின்றான். சகாதேவன் வேலால் சகுனி இறக்கிறான். அவன் இறந்த அளவில் போர்ஒழிந்து துரியோதனன் வலிமை அற்று நின்றான், இறந்தாரை எழுப்பும் மந்திரத்தால், சேனையை எழச் செய்து போரிட விரும்பிய துரியோதனன், ஒருவருக்கும் கூறாது தனியே செல்கிறான். துரியோதனன் குளத்தில் மூழ்கி மறை ஓதுகிறான். அசுவத்தாமன் துரியோதனனைப் பற்றிச் சஞ்சயனிடம் வினவுகிறான். அசுவத்தாமன் சென்று துரியோதனனை அழைக்கின்றான். அசுவத்தாமன் வறிதே மீள்கின்றான். மிருகமாக்கனால் துரியோதனன் இருப்பிடம் அறிந்த வீமன் மற்றவர்களிடம் கூறுகின்றான். துரியோதனன் செத்தாரை எழுப்பும் மந்திரம் பெற்றதைக் கண்ணன் கூறுகிறான். வீமன் குளக்கரை சென்று, துரி-

யோதனனை இகழ்ந்து போருக்கு அழைக்கின்றான். யாரோடு போர் செய்வது எனக்கேட்க, கண்ணன் வீமனோடு போர்புரிய வேண்டும் என்பதையும் எந்த ஆயுதத்தால், எந்த இடத்தில் போர்புரிய வேண்டும் என்பதையும் கண்ணன் கூறுகின்றான். அப்போது பலராமனும் விதுரனும் வருகின்றனர். தாம்சென்று வந்தவரலாறு கூறுகின்றனர். பாரதப் போர் நிகழ்ச்சியைக் கண்ணன் கூறுகின்றான், துரியோதனன் தன் நிலைக்கு இரங்குகிறான். தருமன் ஆட்சியை ஏற்குமாறு வேண்டத் துரியோதனன் மறுக்கின்றான். யாவரும் சமந்தபஞ்சகம் அடைய துரியோதனனும் வீமனும் போருக்கு ஆயுத்தமாயினர். இருவரும் மற்றவரின் உயிர் நிலையை உசாவி அறிகி-ன்றனர். துரியோதனன் பொய் கூறுகின்றான்.

வீமன் தாழ்வு கண்ட விசயன் கண்ணனிடம், துரியோதனனை வெல்லும் உபாயம் கேட்கின்றான். உபாயத்தை விசயன் வீமனுக்கு குறிப்பால் உணர்ந்த வீமன் துரியோதனனைத் கதையால் தொடையில் தாக்கி வீழ்த்துகிறான், துரியோதனன் கண்ணனை இகழ்கிறான். துரியோ-தனன் எழுந்தபோது வீமன் முடியில் உதைக்க, அதுகண்டு பலராமன் சினந்து வீமனோடு போர் செய்ய முற்படக், கண்ணன் தடுத்துச் சமாதானம் கூறுகின்றான், துரியோதனன் குற்றுயிராய் கிடக்கின்றான். மாலையில் பாண்டவர் பாசறை செல்ல முற்படுகின்றனர். கண்ணன் அவர்களை வேறு-காட்டிற்கு அழைத்துச் செல்கின்றான், அசுவத்தாமன் செய்தி அறிந்து வருந்துகிறான். அவன் வஞ்சினம் மொழிகிறான். அசுவத்தாமன், கிருதன் கிருதவன்மன் மூவரும், பாண்டவர் பாசறை புகுகின்றனர். பூதம் தடுக்க, ஆலமரத்தின் அடிசேர்கின்றனர், சிவனைப் பூசித்து, ஆயுதம் பெற்று, பாசறை உள்ளே சென்று, திட்டத்துய்மன் தலையைத் துணிக்கிறான் அசு-வத்தாமன். உறங்கும் பாண்டவரின் புதல்வர்களைப் பாண்டவர் என்று எண்ணித் தலையை அறுத்து விடுகின்றான். விடியும்முன் பாண்டவர் தலையைத் துரியோதனனுக்கு காட்டத்தான் பாசறைக்கு விரைகின்றான். துரியோதனனிடம் தன்செயல் கூறித் தலைகளைக் காட்டுகின்றான். 'சிறு-வர் முகம்' எனக் கூறித் துரியோதனன் இரங்குகின்றான். தவஞ் செய்ய அசு-வத்தாமனை அனுப்புகிறான். அசுவத்தாமன், கிருதன், கிருதவன்மன் மூவரும் தவம்செய்யப் போகின்றனர். துரியோதனன் தந்தைக்குச் செய்தி சொல்ல சஞ்சயனை அனுப்புகிறான். பின் துரியோதனன் பொன்னுலகம் புகுகின்-றான். அசுவத்தாமன் முதலிய மூவரும் வியாதரை அடைந்து செய்தி கூற அவர் அவர்களைத் தவஞ்செய்ய ஏவுகின்றார், திருதராட்டினனும் காந்தா-ரியும் செய்தி அறித்து சோகம் எய்துகின்றனர், பொழுது புலர்ந்தபின் பாண்டவர் பாசறை புக, அங்கு நிகழ்ந்ததறிந்து புலம்பி அரற்றுகின்றனர்.

சினங்கொண்ட வீமனைக் கண்ணன் தடுக்கின்றான். கண்ணன், திரௌபதியைத் தேற்றுகின்றான். அவன் கூறியபடி அனைவருக்கும் நீத்தார் கடனைத் தருமன் செய்கின்றான். அனைவரும் அத்தினாபுரி அடைந்து திருதராட்டிரனை வணங்குகின்றனர். அத்தினாபுரியில் ஐவரும் நீடுவாழ்க என்று கண்ணன் அவர்களை இருத்தித் துவாரகைக்குச் செல்கின்றான்.

மீனா[1]மை[2] கேழல்[3] நரசிங்கங் களாகி[4]
நிலம்விரகா லளந்த குறளாய் ,
ஆனாது சீறு மழுவோடு[6] வெல்லும்
வில்[7]லுமுனை யலமுத்த[8] செங்கை யவராய்
வானாடர் சென்றுதொழ மண்ணாடர் யாவரையு
மடிவிக்க வந்த வடிவாய்,
நானா விதங்கொள் பரியா ளாகிவந்
தருளும் நாராய ணாய நமவே

ஸ்ரீராமஜெயம் வீரையன்துணை

காலைப் பொழுது புலர்தல்

வின்மைந்து பெற்ற விசையன் கடுங்கணையால்
தன்மைந்தன் மாய்ந்த தளர்வினால் மார்த்தாண்டன்
கற்றைக் கதிரா யிரமுங் கனற்கால்
ஒற்றையுருட் பொற்றேரில் ஓரேழ் பரிபூட்டிப்
பறவைக் கரசனுக்குப் பண்பாய் முதற்பிறந்த
திறலுற் றருணன் செழுந்தேர் உதைத்தூர
அவுணர் குலங்கள் அலையப் பொருதழித்து
நவமுற்று உதையவரை நண்ணினான் வெய்யோனும்
வெய்யோன் கதிர்க்கு வெருண்ட யிருட்படலம்
பையா ரரவப் பதிபுக்க தம்மானை.

துரியோதனன் சிந்தித்தல்

கண்துஞ்ச லின்றியிரு கண்ணிலான் பெற்றசுதன்
சண்டன் மகனிறந்து சண்டன்வசப்[9] பட்டமையால்
அற்பொழு[10] தெல்லாம் மரிக்கண்ணீ ரால்மூழ்கி
எற்பொழுது[11] யாவரைக்கொண் டெம்பகையை வெல்வதெனக்
காலைக் கடன்முகித்துக் காவலர் சிகாமணியும்
சால மனது தனிலே தெளிந்தாய்ந்து,

---

1 மீன் —மச்சாவதாரம்
2 ஆமை — கூர்மாவதார்ரம்
3 பன்றி — வராகவதாம்
4 வாமன அவதாரம்
5 பன்றி — வரா கஅவதாரம்
6 பரசு — பரசுராமாவதாரம்
7 வில் — இராமாவதாரம்
8 கலப்பை — பரசுராமன்
9 இயமன்
10 இரவுக்காலம்
11 பகற்காலம்

வீடும னுக்கும் வில்விசையன் தனக்கும்
கோடிலா வண்மைக் குருசிலாங் கன்னனுக்கும்
மிக்கோன் கதைவாள் வேலாண்மை யாலுமிகு

சல்லியனைப் படைத் தலைவனாக்குதல்

தக்கோ னெனச்சல் லியனை மனநினைந்து

நீயே யெனக்குயிரு நீயே யெனக்குஉளமும்
நீயே துணைப்புயமும் நீயே விழிப்புலனும்
நீயே யனைத்தும்நிலை நீயே யெனக்குறுதி
நீயே முடித்திடுவை நீயே பகைத்தவரை
நீயே முனைச்செருவி னின்றென் துயர்தீர்ப்பாய்
நீயே யுனக்கு நிகரல்லால் வேறுமுண்டோ,
நீயேயென் எண்ணம் நிறைவேற்ற லாகையினால்
நீயே யென்சேனை நிருபன் எனக்குறித்து
மன்பட்ட வர்த்தனரு மாமகுட வர்த்தனரும்
முன்புற்று வத்து முறைமுறையாய்த் தான்வணங்க.

நன்பட்ட முந்தனது கையால் நயந்தணிந்து
தன்பட்ட மாறாத் தானையொரு நாலினுக்குச்
சேனா பதிக்கஞ் சிறப்பு மிகவளித்து
மானா பரனரசு வாரணத்தின் மீதேற்றிச்
சல்லியன் சேனா பதித்தலைவ னாகுமென்று
பல்லியம் விம்மப் பலர்க்கு மறிக்கைசெய்து

போருக்குச் செல்லல்

அரசர் மதிக்க வதிரத்தின் மீதேற்றித்
கிருதன் கிருபன் கிருபன் றிருமகனும்
சகுனி திரிகர்த்தன் விறற்சாலுவன் மற்றுள்ளபெயர்
புகல மரசர்களும் போர்மதியா வீரர்களும்

சேனைப் பிரளையமும் சேரவே தற்சூழ
மானப் பிரதாப மன்னர்மன்னன் பின்வரவே,
மித்திரன் சேய்கன்னன் விசையமுடன் பெற்றெடுத்த
சித்திர சேனன் திறற்சூரிய வானனன்
சித்திர கீர்த்தி யென்னுந் தீரரிவர்
மத்திரனு மோர்பால் மதித்தே யணிநிறுத்திந்
தன்புதல்வ ரோடு சகுனி புதல்வர்பல

மன்புதல்வ ரோடு வளைய வணிநிறுத்தி,
சித்திர வில்வீரன் செயமேவு சேனையெல்லாம்
அத்திர வியூகமென அணிந்தா னம்மானை.

ஒருவர் தனக்குநிக ரொப்பிலா மத்திரனும்
பொருவில் முனைமுகத்திற் புக்க தெடுத்துரைத்தாம்.

பாண்டவர் இரவு வருந்தி இருத்தல்

வஞ்சம் நினையார் வயவாகையே புனைவார்
பஞ்சவர் சேனை படர்ந்தணிந்த வாறுரைப்பாம்
இரவு முழுது மிருகண் அடையாமல்
அருவி யெனவேகண் ஆறுஓட அவர்களும்
பருதி சுதனைப் படிபுரக்கும் நாயகனைத்
தருவை நிகரிரப்போர் தங்கள்கலி தீர்ப்போனை
இன்றிழந்தோம் அந்தோவென் றேங்கி யலமலந்து
அன்றிரங்கி மேன்மே லயர்ந்தார் பரிதவித்தார்

வண்மைக்கு மிக்கான் வள்ளலையே அந்நாளில்
உண்மைக்கு மிக்கா னோடேயாங் களெல்லாம்
ஓர்போது எதனினும் உபய பதம்பணியப்
பார்மீ தரியதவம் பண்ணிப் பிறந்திலமே
விதியே மதியழித்தாய் வெவ்வேறாய் ஏன்பிரித்தாய்,
நதிசேய் முதலாக நாம்செகுக்கவோ விதித்தாய்
பேரிடியோ யொப்பாய்ப் பெருகவாய் விட்டிரைந்து
மாருதி மேன்மேலு மயங்கிநில மேற்புரண்டு,
சாயை வெறுத்தோன் நின்தலைத்தேவி யைவெறுத்தான்
என்செய்வான் மூத்தோனென் றெள்ளளவுந் தானறியன்ா,

மின்செய்வான் கோல்மழையான் மெய்யெலாந் தான்றுளைத்தான்
மாயை மிகவிளைத்த மாயோன் றனைவெறுத்தான்
ஆயை வெறுத்தான் அயர்ந்தான் அனிலன்மகன்
அற்றைநாள் அழலில் அயர்ந்தார் தனித்தனியே
மற்றைநாள் ஐவர்களும் மார்த்தாண்ட னைவணங்கிக்
கொற்றச் சமரிற் குறைவஞ் சினமுடிக்கல்

ஐவரும் போர் முகம் செல்லல்

பிற்றைநாள் மாருதியும் பேரான நால்வருமாய்
முரசு பணைகள் முழங்கத் தளஞ்சூழ,

உரசி னுடனே யுயித்தக் களஞ்சேர்ந்தான்.
பல்லியங்க ளார்ப்பப் பகிரண்ட மும்நடுங்க

வல்லியங்க ளொத்த வயவீரர் தற்சூழ
எத்திசையுந் தானை யெழுவாரிதி நிகர்ப்ப
மொய்த்தடர்ந்து நிற்க முரண்சேர் துருபதன்றன்

திட்டத்துய்மன் அணி வகுத்தல்

சேய்துட்டத் தூய்மன் தொடர்ந்தே யணிவகுக்க
ஆய்வெற்றி விரரெல்லா மச்சமற நிற்பளவில்
பூமன்னர் மன்னன் பொறைக்குன் றனையானை
வீமன் செயவிசையன் வின்னகுலன் சாதேவன்
தாமன் றனக்கிளைய தம்பிநேரிப் பொருப்பான்
நாமச் சிகண்டிபல நற்றேசமும் புரக்கும்
கொற்றவர்கள் மற்றவர்கள் கோலியே சூழ்ந்துநிற்ப,

வெற்றி செறிதரும் வேந்தன்மா லைப்பார்த்து
மத்திர பூபன் வயவானகச் சேனைகளை
அத்திர யூப மவன்வகுத்து நின்றநிலை,

தருமன் திகைப்பும் கண்ணன் தேற்றலும்

கண்டு திகைத்துக் கரியோனே யிற்றையமர்
மண்டுபோர் வெல்லும் வகையுண்டோ கூறுகென்றான்.
மன்னர்கோன் றன்னை நெடுமாலு மெதிர்னோக்கி
என்னநீ சொல்வ திறல்போவுன் பேரறிவோ,
வீடுமனை விற்குருவை வீசிய நின் மூத்தோனை
கோடிய சர்ப்பக் கொடியோன் றுணைவர்களைப்
பகைதத்தனை வருணன் பண்பான புத்திரனை

மிகையுற்ற சிந்தரசை வேந்தர்களை வீரர்களை
வென்ற வயவிசய வீரரெல்லாம் நிற்கலுற்றார்
துன்று மெழுபுணரி சோராமலே நீந்தி
வாய்க்கால் கடக்க மறுகுவார் போலறத்தின்
சேய்க்காதி யேன்நீ திகைப்பதே னென்றுரைந்து
மும்மூர்த் திகளு முரணுன் கரப்படைக்கு
எம்மாத் திரமுன் நிகர்போரில் நிற்பதெவர்,

---

1 ஏழுகடல்

வில்வலியால் வாள்வலியால் வேல்வலியால் கோல்வலியால்
மல்வலியால் தண்டோடு பல்வல்லா யுதவலியால்
சொல்லியவெந் தேர்வலியாற் தும்பிவல மாவலியாற்

சல்லியனுக் கொப்பாய்நின் றம்பியரில் யாருமில்லை
மலையிரண் டொத்தபுய வல்வீரன் மத்திரனும்
நிலைகண்டுன் பேரிலன்றி நேரான்போர் மற்றோர்மேல்
இருவரு மேன்மே லெதிர்ந்து பொருதாலும்
ஒருவ ரொர்ருவர்களை யெர்ண்ணாது வெல்வதற்கு
எந்த விதத்து மிரவி படுவதன்முன்
வந்ததொரு சல்லியனை மாளப் பொருதழிப்பாய்,
வீரர்க்கு மிக்கான் வில்லா சரிகுமரன்
சூரர்க்குஞ் சூரன் சுமுகரண கெம்பீரன்
சாகா வரமுடையான் சாயாத போர்வலியான்

நாகா பரணன் அலதொப்பெதி ரியில்லான்
புரதகனன் போலப் போர்மதியாது இற்றையிலே,
உரமுற் றுரசாய் ஒழியா தமர்புரிவான்
அவன்வின் முகத்தில் அரிச்சுனனே யல்லாதோர்
சிவன்முன் னெதிர்த்தழிந்த சித்தசன் ....
தனுவுக் கரசன் தனஞ்செயன்மா லின்றிகற்போர்
முனிவிற் குமரனுடன் மூண்டே யமர்பொருத
வாகுவய மாருதியு மற்றுமுள்ள வீரியரும்,
சேகரமா யோர்முகமாய் சேர்ந்து வெகுநினைவாய்
வல்ல தருமனையே வண்மையுடன் காத்தருள்வீர்.

சல்லியன் வீரன் றறுகண்ணன் மாவிரகி,
ஆதலால் நீங்கள் அகலாது உறக்காத்துப்
போத விரையப் பொருவீ ரெனவுரைத்தான்.

கேட்ட திட்டத்துய்மன் வியூகம் அமைத்துப் போர் புரிதல்

சொன்ன சொல்யாவுந் துருபதன்சேய் தான்கேட்டுத்
துன்னும் பெரும்படையைத் துன்றியயூ கம்விடுத்தான்.
தத்துபரி தேரினருந் தத்துபரி தேரினரும்
பத்திபத்தி யாகப் பதறியே போர்மூண்டார்
தந்திமலை வீரியருந் தந்திமலை வீரியரும்
வுந்தி அங்கங்கு வுறுபூசல் மூண்டதுவே.
பறவை யனையவிறற் பாய்பரியும் பாய்பரியும்

திறமுற்ற வீரியருஞ் சேர்ந்தே யமர்பொருதார்
கதித்த மலைப்புயத்தின் காலாளுங் காலாளும்
மதித்த பெரும்பூசல் மாறாமலே பொருதார்.
வேடைசே ரொவ்வொருவர் வெம்பூசல் தான்விரிக்கில்
ஏடொரு கோடிக் கெழுதித் தொலையாதே.

சல்லியன் தருமன் போர்

உற்ற போர்க்கஞ்சா உகசண்ட மாருதனேர்
கொற்றவேல் சல்லியனும் கோலமணித் தேர்நடத்தித்
தடைவிட்ட வெற்றி மத்தநதியே யொப்பாக
மிடலுற்ற மால்முன் விளம்புமொழி தப்பாமல்
காவலரை யோர்பொருட்டாய்க் கண்ணாலும் நோக்காமல்

பாவலிய தர்மனையே பார்த்தே கணைசொரிந்து,
வந்தோன் கருத்து மனவிரகுந் தானறிந்து
பிந்தாது தர்மன் பெரியவரைத் தேரேறி
ஆடகனை[1] முன்பிழந்த வாடல்நர சிங்கமெனச்
சேடுடைய வண்ணச் சிலைவளைத்து நாணேற்றி,
மித்திரன் விட்ட வடிக்கணைக ளுள்ளதெல்லாம்
அத்திரத் தாலே யறுத்தறுத்துத் தூளாக்கி,
ஓயா மழைமாரி யொத்தேவைப் புங்கமழை
சாயாமல் மேன்மேற் சொரிந்தான், தனுவீரன்
மத்திரனு மேன்மேல் வருஷித்தான் வாளிமழை.

இத்திர மாக விருவோரும் வீசுகணை
பாருந் திசையும் பகிரண்டத் தப்புறத்தும்
வாரிக ளேழு மகமேரும் அப்புறத்தும்
சாரு முரகத் தலமெங்குந் தட்டுருவ,
இரவி ரதத்துக் கியல்பா யிருதேரும்
விரைவும் விசையு மிகுத்தே யிடம்வலமும்,
கோலிக் கறங்காய்க் குறுகி . . . . .,
காலி லிடிந்தபுவி கற்கியின்கா லாலெழுந்த
தூளி விசும்படங்கத் தூர்ப்பவிர வொத்ததுவே.
மீள விடிந்ததென மிக்கவிறற் றேறநீல

பன்மணியன் காந்தி பகற்காலஞ் செய்ததுவே

---

1 இரணியன்

வன்மணிலத் துளகார மண்டலங்க ளொத்ததுவே.
இருவர் விடுங்கணைகள் எல்லாந் தலையழிந்து,
தெரியப் பிளந்துஞ் சிறகற்றுந் தூளாயும்,
ஒன்றுபல துண்டா யொடிந்து முனையழிந்தும்
அன்று களங்களெங்கும் அம்பாய்க் குவித்ததுவே.

இருவரும் சங்க முழக்கல்

முரசக் கொடியோன் முழக்கினான் வீரசங்கம்
முரண்வெற்றிச் சங்க முழக்கினான் மத்திரனும்
சங்கத் தொனியால் தனுநா ....
அங்கப் பரியினனும் அனுப்பாற் யேருருளின்

ஓதையாற் றிக்கு முலகுபகி ரண்டமெல்லாம்,
போத நடுங்கப் புணரி யலைசுவற
இடிக்குல மெல்லாம்நெஞ் சேங்கித் திடுக்கிடவே.
படித்தலம் நாகப் பதியும் நடுநடுங்கக்
கைசிவந்த மெய்சிவந்த கண்களழல் சொரிந்த.
உன்னையறி யென்னையறி உன்னுயிரு யென்னுயிரு
என்ன வயவிற்போ ரிருவோரு மேமுனைந்தார்.

தருமன் தளர்வு

ஒற்ற சமரி லுதிட்டிரன்றன் நேர்ப்பரியும்
வெற்றி வலவனையும் வில்லுங் கொடியறுத்தான்
முரண்வெண் குடைமகுடம் ஒடித்துக் கீழ்வீழ்த்தான்.

கரவின்மை யாலுயர்ந்தோன் காட்டாண்மைச் சல்லியனை

வீமன் முனைதல்

மாருதி கண்டு வரிக்கண்ணால் தீயுகுத்துச்
சாரதி தேருந் தனுமாக் கொடிகுடையும்
மத்திரன் றேரு மணிமகுட மும்பொடிய
அத்திரம் பத்தால் அறுத்தெறிந்தான் அம்மானை.
சிங்கக் கொடியோன் செயிர்த்தெறிந்த கூர்வாளி
பங்கப் படவே பகைவன் றனைச்செயிக்கத்
தன்கைச் சரத்தினிலும் தம்பிசரம் வல்லதென்று
மன்கொற் றவனு மதித்துநின்றான் அம்மானை.

சல்லியன் மேலும் அடர்தல்

மீண்டு வெகுண்டு வெயிலோன் மகன்வலவன்

தாண்டு பரித்தேரில் தானேறி யேமுனைந்து,
வீம னுயிரை விசும்பேற்று வேனெனவே
தாம னனையான் றனுவாளி தான்சொரிந்தான்.
சொரிந்த கணைபலவுந் துண்டித்துத் தூளாக்கி
விரிந்த மணிக்கழலான் வீமனுமே கோல்சொரிந்தான்
எந்த வெந்தவாளி யெதிர்த்தோன் விடுமளவில்,
அந்தவந்த வாளிக் கரியாங் கணைதெரிந்தார்.
இருவருந் தெய்வத் திடமாய் வரங்களினாற்
பரிவுடன் பெற்ற பகழிபல சொரிந்தார்
முனிவோ ரிமையோர் முதலான வர்களிடம்,
நனிப்புடன் பெற்றசரம் நாணேற்றி வீசுதலால்
பாதாதி கேசமுதற் பற்பல உறுப்பிடத்தும்
மேதா சுகம்பரவ முளையுடன் குருதி,
மேன்மேலுங் கொட்ட வினைப்போர் வலியுடனே.
தன்மா திபனுடைய தம்பியிடன் சல்லியனும்,
மாறா திருவோரும் வன்போர் புரிவளவில்,

சல்லியன் தாக்கல்

வீறான மத்திரர்கோன் வெம்போர் பொறுக்கரிதாய்ச்
சரமுந் தனுவுந் தடந்தேரினிற் போட்டுப்
பரிய கதையுடனே பாய்ந்தான் படிமீதில்,
திகைத்திட் டுறச்சுழற்றித் தேர்மீதி லோரடிதான்
பகைத்திட் டடித்தான் பகைவன் பரிபாகும்,
தேருங் கொடிகுடையுஞ் சேரவே பற்பமுறப்
பாரி லணுவாய்ப் பறந்ததே யம்மானை.
நெற்றி கிழிய நெடியதொரு தேர்மரத்தால்
ஏற்றினான் பொற்றே ரிழந்துநின்ற சல்லியனும்
வன்மையாய்த் தேர்மரத்தால் மத்திரத்த னெய்தியதால்
தன்மன் தனக்கிளையோன் தன்னுதலில் ஊறாக்கி
அருக்கல் தனிவிழியும் ஆறருவி யொத்தேதான்
உடல்கள் மறைத்தது உதிரப் பிரளையமே

சல்லியன் வீமனைத் தாக்குதலும் வீமன் புறமிடுதலும்

செக்கர்வா னொத்துநின்ற சேவகனை மத்திரனும்,
உக்கி மாக வுறுக்கி யடர்ந்திடவே
சல்லிய னோடு சமர்பொருத மாட்டாமல்

புல்லியன் போலும் புறமிட்டா னம்மானை.
வாயு குமாரன் மயங்கிப் புறங்கொடுக்க.
சேயு வனையான் சிரித்தாற்று நின்றனனே
காய்ப்புற்ற மன்னர் கருதுமிரு சேனைகளும்
தீய்பட்ட காடாய்ச் செருமூண்ட தம்மானை.

கன்னனின் புதல்வர் போர்செய்தல்

தேரவன்சொற் கன்னனருள் சேய்தித் திரசேனன்
சூரிய வண்ணனுடன் சொற்சித் திரகீர்த்தி
முச்சுடரை யொப்பார் மூவர்களு மேமுனைந்து,
வச்சிரன்றன் மைந்தன்முதல் மற்றுமுள்ள நால்வரையும்
கொல்லுவோந் தாதைபழி கொள்ளுவோங் கோளாரை
வெல்லுவோம் வாகை விரைந்தணிகு வோமெனவே,
பஞ்சவர்கள் சேனையெல்லாம் பாணமதால் நீறாக்கிச்
சஞ்சல மில்லார் தலைப்பட்டா ரம்மானை.
கண்டபே ரெல்லாங் கலங்கிமுது கிட்டதல்லால்
அண்டிப் பொருதமன மஞ்சினர்கா னம்மானை.
வடவைத் தழல்போல வருசித் திரசேனன்,

சித்திரசேனன் நகுலனை வளைத்தல்

நடனப் பரியான நகுலன்மேல் வந்தனனே
ஆர பாரித்துவரும் அண்ணன் குமாரனையே
வீரசா ரப்பெருமான் வெம்பரிவேந் தன்பகர்வான்,

நகுலன் கூற்று

தேடக் கிடையாத தெள்ளமுதே கண்ணனையால்
பீடுற்ற வள்ளல் கர்ணன் பெற்றதவக்கொழுந்தே
ஐவருக்கு மூத்தோன் அருளாளன் உன்றகப்பன்,
மெய்வெற்றி யுள்ளோனும் வீய்ந்தா னறிவதன்முன்
அறிந்தும் உனைவதைக்க ஐவர்மனம் கூடாதே.
செறிந்த புவிக்கரசு செம்மல்நீ யல்லதுண்டோ
இன்றை யுயித்த மெதிர்க்கா தொருபாலில்
நின்றுயிர் பெற்று நிலைப்பாடல் நீராழி
சூழும் புவியனைத்துந் தோன்றலே நின்குடைக்கீழ்
வாழு மொருதகப்பன் மாய்ந்தாலென் ஐவர்களும்
தந்தை யலவோ, தனையரே நாமாய்ந்தால்,

பிந்த யெவரைப் பிதாவென்றும் பிள்ளையென்றும்
சொல்லுவோம், செத்தார் தொடர்ந்து பிழைப்பதுண்டோ
நில்லும் சமரை நிறுத்துங்கோள் பேரணியில்
போங்கோள் உமதுயிரைப் பூணவே பேணுமென்று
பாங்காய் நகுலன் பகர்ந்தா னொருகோடி.

சித்திர சேனன் மறுப்பு

நன்றுநீ சொற்றது உன்நாய்மதியோ பேய்மதியோ
அன்றுமுத லின்றளவு மாதரித்திக் காத்தோன்பால்,
உண்ட வனத்துக் குறவா யிரண்டுசெய்து
கண்டவனைத் தாதையென்று ....
ஒக்கப் பிறந்தீரேல் வொன்றா யிருக்கீரோ
துக்கப் பகைப்போரிற் சொல்வதேன் ஒப்பாகி
பூவாசை யாறப் போர்பொருதா துயர்பேணிச்
சாவா தொளிப்பதுண்டோ சத்தியர் பெற்றமக்கள்,
தாதை பெரும்பழியுந் தக்கதமை யன்பழியும்
பூதலத்தில் வீணாகப் போமோ விடுவோமோ,
விற்குத் திறமாக வில்விசைய னலலாது,
நிற்கத் திறமாக வில்விசைய னல்லாது
தரும னெனதுசிலை தன்முன்னே நிற்பானோ
விரவுமிந் தடிப்போர்க்கு வீமன்வில்லுக் காவானோ,
உஞ்சே வகம்பரிகொண்டு ஓடலன்றி வேறுமுண்டோ,
பஞ்சாங்கஞ் சொல்லவல்லன் பண்பான நின்னிளையோன்
உங்கள் சமத்துமன வுறக்கமும் யாங்காணோம்
எங்கள்விற் போர்க்கு யெதிர்க்கவல்லன் நீதானோ
தங்கா துன்மேலே தனுப்போர்செய் தாலீனம்
எங்கே விசையனெந்தன் ஏவாலறுக் கவென்றான்

நகுலன் சொல்லும் செயலும்

சர்ப்பக் கொடியோன் றனைச்சேர்ந்த தன்மையினால்
சர்ப்பம் நிகர்த்தீர்கள் தந்தையுடன் பிள்ளைகளும்
மலையொத்த பாப்பான் மடிந்தே யொழிந்தானாம்
தலையிற் குடுமி தனக்கேது மன்னாட்டு
என்றிரதந் தூண்டி யிடக்கைவரி விற்பிடித்தான்
வென்றிரதந் தூண்டி விரைந்தவனும் விற்பிடித்தான்

கறங்கென் றிருதேருங் காத்தாக வேசுழல
மறங்கொண்டு வாளி மழைசொரிந் தாரம்மானை.
அவனி திசையு மகல்வெளியு மம்பாக,
உவமைக் குயிர்படல மொத்த நிரைந்ததுபோல்
அம்புசிற கம்பறிய வம்புமுனை யம்புகவ்வ
அம்புசிர மம்பறிய வம்பையம்பு துண்டுசெய்ய.
அம்பையம்பு தான்பிளக்க வம்பையம்பு துண்டுசெய்ய
அம்புமம்பு மண்டபகி ரண்டமெங்கு மூடாட
தரமொத் திருவோருந் தானே பொருமளவில்
கரமுற்ற வோர்கணையாற் கறக்கித் தலைநாலும்
தானறுத்து வோர்கணையாற் சாரதியைத் தான்பிளந்து
மானமுற்ற வோர்கணையால் வண்ணக் கொடியறுத்து
வில்லுக் கொருகணையும் விட்டறுத்து வெந்தேர்க்கால்
சில்லி யிரதஞ் சிதையப் பலகணையால்
தொடுத்துச் சினத்திரதந் தூண்டியே யாக்கரித்து

நகுலன் அவர்களை அழித்தல்

அடுத்த பொழுதே, அலமலந்து மாநகுலன்
மற்றுமொரு பொற்றேரில் வாகையுடன் தானேறி
கொற்ற வரிவிற் கொடுங்கணைகள் தான்சொரிந்து
சித்திர சேனன் சிரம்புயமுஞ் செந்நீர்கள்
தத்தி விழச்செய்தான் தனையனென்றும் பாராமல்.

கன்னன் மகன் சினந்து பொரல்

கன்னன் மகனுங் கடுங்கோபந் தானாகி,
வன்ன வரிவில் வளைத்தா சுகஞ்சொரிந்து
தத்தும் பரிநாலுஞ் சாரதியுந் தேர்க்காலும்
கைத்தனுவுந் தேருடனே கறங்கிக் கொடியறுத்து
ஆகமு மம்புயமு மம்பால் மிகத்துளைத்துத்
தேகங்க ளெங்குஞ் சிவப்பித்தா னம்மானை.
தேரிழந்து பாகிழந்து செங்கைவரி வில்லிழந்து

சித்திரசேனன் அழிவு

போரிழந்து நெஞ்சம் புழுங்கித் தடுமாறி
நெடுட்டுயிர்ப் பிட்டு நெடிது திகைத்துநொந்து
கட்டுடனே யோர்வேலைக் கைக்கொண்டு தானெறிந்தான்

விசைகொண் டெறிந்தகதிர் வேல்சித் திரசேனன்
நசைகொண்ட மார்பு நடுபிளந்துள் ளோடியதே
மின்னும் பணிகள் வெயிலெறிப்ப வெங்களத்தில்
கன்னன் மகனுடலங் காசினியி லேகிடப்பப்
பொன்னுலக மங்கையர்கள் போகங் களியாடத்
தன்னுயிரு பொன்னுலகஞ் சார்ந்ததுவே அம்மானை
சித்திர சேனன் சிதைய நிலையழித்து

மத்திரை சேயன் மகிழ்ந்துநின்றான் அவ்வளவில்
சீரிய சாத்தகியுஞ் செம்பருதி சேயழித்த
சூரிய வண்ணனுமே சோரா தமர்மூண்டு
உகமையறப் ---- ---- ---

சாத்தகி பொருதல்

தகமை யுடைவிறற் சாற்றகியுந் தான்முனைந்து
கூர்கணை ரெண்டு குறித்தே விசைத்தேவி
நேர்கொடியும் வில்லும் நிலையழித்தா னம்மானை.
அரிய கொடிவில் லறுப்பானோ வென்றழன்று
இரவி மகன்மகனு மேற்றவரி வில்வளைத்துப்
புரவி யொருநாலும் பொற்றே ருருள்பாகும்

வரிவிற் கொடியு மறுத்தே மருமமெல்லாம்
சோரி வடியச் சொரிந்தான் விடாதசர

சாத்தகி புறங் கொடுத்தல்

மாரியாற் சாத்தகியும் வாடிப் புறங்கொடுத்தான்.
தாவும் பரியிழந்து சாரதியுந் தானிழந்து
மேவுங் குருதிநதி மெய்யெல்லாந் தான்போர்த்துப்

நகுலன் வந்துதவல்

போரழிந்த சாற்றகியைப் புங்கப் பரிநகுலன்
நேரிசைந்து கண்டு நெடுங்கோபந் தான்கொண்டு
கடிய கொடியகணை நாலிழுத்து விட்டு
கொடியுந் தனுவுங் குறித்தே யறுத்தெறிந்தான்.
வடவை யெனக்கொதித்து மற்றுமொரு வில்வளைத்து

உடுவை யனைய வொருகோலால் வில்லழித்துப்
பற்பல கணைசொரிந்து பாதாதி கேசமெல்லாம்

பொற்புடலந் தான்றுளைத்துப் போர்த்திவைத்தான் சோரியினால்.

மெய்யெல்லாஞ் சோரி விரியக் கடுஞ்சினமாய்த்
தொய்விலா வீரன் தொடுத்தொன் பதுகணையால்
தாவுதே ரச்சுந் தனுக்கொடியும் நீறாக்கி,
மாவும் வலவனையும் மாளப் பொருதழித்து
நெஞ்சும் புயமும் நிறைத்தா னிருபதுகோல்
அஞ்சிலா வீரன் அவனி தனிலாகி
வேறு தெடியவரி வில்லொன்று தான்வளைத்துச்

சீறு மழல்வெந் திறற்கணைகள் தான்றெரிந்து
விரசு தவறாமல் விண்மாரி யொப்பாக
உரசு தவறா னுடத்தித் தனுத்தேரை
நீறா யெரித்து நிருப னிலைகலங்க
மாறாப் பலபகழி மார்படங்க வேசொரிந்து
நெஞ்சயர்ந்து தன்னினைவு நீங்க நிலத்திலிட்டான்.

நகுலன் வீழ்ச்சி

விஞ்சைப் பரிநகுலன் மெய்யயர்ந்து வீழ்ந்தளவில்
மற்றிநிக ரில்லாத மார்த்தாண்டன் தன்பேரன்
கொற்ற வளைமுழக்கிக் கொக்கரித்து நிற்பளவில்

மாயன் தம்பி பொருதல்

பேரா யிரமுடையான் பின்னோ னொருதேரில்

நேராக ஏறியெதிர் நேர்ந்துவரி வில்வளைத்து
அத்தகா லப்புயற்போ லம்புமழை மாரிபெய்யத்
தொந்தமா யங்கவனுஞ் சோராது வில்வளைத்துப்
பற்ப லனந்தம் பகழிமழை சொரிந்து
அற்புத வில்வல்லன் வன்கணையெல் லாமறுத்து
வெற்றிப் பெருந்தேரும் வெம்பரியும் பாகனையும்
அற்று விழவே யறுத்தான் நிமிடமதில்
தேரிழிந்து நெஞ்சந் திகைத்து வுயிர்ப்பெறிந்து
போரொழிந்தி டாமற் புகைந்தே பலசரங்கள்
வீசியே யங்கவன்றன் மெய்யெல்லாந் தான்றுளைத்தான்
ஆசிலா வீரன் அதுக்கு மிளையாமல்
ஈரிரண்டு மூவிரண்டு எண்ணிரண்டு வாளிவிட்டுத்

தேரிரண்டு தானிழந்தோன் திண்புயமும் நெஞ்சகமும்
தட்டுருக விட்டான் தடமாறித் தக்களித்து
மட்டுலவு மார்பன் மயங்கியே கீழ்வீழ்ந்தான்,
மாயன் இளவல் மயங்கிவிழ மற்றவனும்
வாயதனில் வெற்றி வளை[1]வைத்தே முழக்கினனே,

கேட்ட நகுலன் மீண்டும் கிளர்ந்தெழல்

சங்கங் குறிக்கவுமுன் தானயர்ந்த மாநகுலன்
சிங்க மனையான் தெளிந்தேபின் மீண்டெழுந்து
ஆரபா ரித்தே யடர்ந்துவரி வில்வளைத்துத்
தாரைமே கம்போற் சரமாரிதான் சொரிந்தான்.

விட்ட கணையெல்லாம் வினாடியினில் தூளாக்கி
வட்டவரி வில்லோர் வடிக்கணையாற் றானறுத்துக்
கேசாதி பாதங் கெழுமசரக் கூடாக
வாசாம கோசரமாய் மாறாமலே சொரிந்தான்.
திட்டு முட்டாகித் திகைத்துயிர்ப்பிட் டேநகுலன்
மட்டுப் படாதவனை மாய்க்க மனந்துணிந்து
செய்தவத்தாற் பெற்றதொரு தெய்வ வரக்கணையை
எய்தவத்தம் போகான் இளவல் வயிரமுடன்
மானச் சிலையை வளைத்தந்தக் கூர்ங்கணையை
தானிழுந்து ... ...

விட்ட கடுங்கணைதான் வெய்யோன் மகன்மகன்றன்
வட்ட மணிச்சிகர மாமகுடச் சென்னிதனை
வாயு வடற்ற மலைத்தலையை யொப்பாகப்
போயுற் றறுத்துப் புவிமீ தறைந்ததுவே.
சூரிய வண்ணன் தொலைந்தாவி மாய்ந்தளவில்
வீரிய வண்ணம் விளைக்கும் பரிநகுலன்
வாகை புனைந்து வளைமுழக்கி நிற்பளவில்,

சித்திரகீர்த்தி சகாதேவனுடன் பொரல்

சாகத் துணிந்து சகாதேவன் றன்னுடனே
சித்திர கீர்த்திச் சினந்துவரி வில்வளைத்து
மத்திரை சேய்தன் மணிக்கவசந் தான்பிளந்து

1 சங்கு

வெற்றிக் கொடியறுத்து வில்லறுத்து நாணறுத்துக்
கொற்றக் குடையறுத்துக் கொக்கறுத்துப் பாகறுத்து
ஆரழித்துத் தேரழித்து அச்சழித்து மச்சழித்துப்
போரழித்து வாளி பொழிந்தான் புயல்போலே,
மறுகி வெருண்டு மறுதேரின் மீதேறி
இறுதி யுகமாறல் என்னக் கணைமாரி
வீசினா னங்கதெல்லாம் வெங்கணையால் நீறாக்கி,
ஆசுடன் தேர்வில் அழித்தா னிமைப்போதில்
தேர்வில் லிழந்து திகைத்து மனம்பதைத்துப்
போர்வல்ல வீரன் புகைந்து மறுதேரேறி,

கையிற் சிலைவளைத்துக் காரேழு மோர்முகமாய்,
பெய்யும் படிபோற் பெருகக் கணைசொரிந்து
சித்திர கீர்த்திவிறற் செங்கைச் சிலையழித்து
மெய்த்தலங்கள் சோரி விரியச் சொரிந்தனனே.
என்சிலையுந் தேரு மிவனோ வழிப்பதென
நன்சிகரத் தேர்மேல் நரசிங்கம் போலேறி
இடக்கை வரிவில் எடுத்தே யினியலவத்
தடக்கைச் சாமாரி தான்சொரிந்தா ரம்மானை,
வாதாய்ச் சொரிந்த மழைமாரி வெங்கணையால்

சாதேவன் தேர் அழிதல்

சாதேவன் தேர்விற் தவுடா ய்ப்பொடிந்ததுவே

வில்லிழந்து தேரிழந்து மேதினியி லேகுதித்துச்,
சொல்லிழந்து வேறோர் சுடர்வே லெடுத்தெறிந்தான்
எறிந்த சுடர்வேலை யெண்முறியாய்த் தூள்படுத்தி
மறிந்து புறங்காண வல்லா சுகஞ்சொரிந்தார்.
மெய்சோர்ந்து வீழாமல் மீண்டுமொரு வெங்கதையைக்
கைசேர்ந் துறச்சுழற்றிக் காரிடிபோ லொத்தெறிந்தான்.
எறிந்த கதைதா னிடிபோ லிறைந்துறுமுன்
முறிந்து விழும்படியே மூன்று கணையேவி
புயத்தி லிருகணையும் பொன்மார்பி லோர்கணையும்
செயிர்த்துப் புறத்துருவத் தீரமுடன் விடுத்தான்.

சகாதேவன் வீழுதல்

தைத்த சரமூன்றுந் தடாரித்தே யோடியதால்,
எய்த்தயர்ந்து வீழ்ந்தா னிளையசகாதேவன்

நகுலன் தாக்குதல்

தம்பி விழச்செந் தடங்கண் நெருப்பொழுக
வெம்பித் தடந்தேர் மிகநெருங்கி வில்வளைத்துச்
சொரிந்தான் நகுலன் சுடர்வெங் கணைமாரி
விரைந்தே மிகச்சொரிந்து மேவாதான் நோவச்
சின்னம் படுத்தியவன் தேகமெங்கும் பலகணையால்
வின்னப் படுத்தியபின் வேறுமொரு வில்வளைத்து
நாலு பரியும் நகுலன் பெருந்தேரும்
மேலும் நெடியவரி வில்லும் பிளந்தெறிந்து

காலாளாய் நின்றவன்றன் காயமெல்லாம் புண்ணாக,
மாலாய்க் கணைசொரிந்தான் மாநகுலன் கோபமுற்று
பின்னு மொருவிற் பெயர்ந்தே யுறவளைத்துக்
கன்னன் றிருமகனுங் கறக்கி . . . .
ஏறு சினமா யிருவருமே காலாளாய்
வீறின் கணைமாரி மேன்மேலு மேசொரிந்தார்.
இந்த விதமா யிருவோரு மாறாமல்
தொந்த வுயித்தந் தொடங்கினார் சோராமல்,
பார்க்கரசன் பேரன் பனிந்த கொடுங்கணையால்
தீர்க்கப் பரிநகுலன் றேகமெங்குஞ் செந்நீராய்

ஊற்றுக்கண் மாறா தொழுகவுடல் தசைகள்
கீற்றிக் கறுத்ததுபோற் கிட்டி யறுத்தெறிந்தான்.
அங்கங்க ளெல்லா மபகீர்த்தி செய்தாப்போல்
பங்கப் படுத்தியதால் பாய்பரியான் கோபமுற்றுப்
பழுதற்ற வெய்ய பகழியோ ரைந்தெடுத்து
முழுவெற்றி மார்பு முதுகுருவ வோர்கணையும்,
புயந்தட் டுருவப் பொருவி லிருகணையும்,
வயந்துத் தியவீரன் வாய்கிழிய வோர்கணையும்
நெற்றி கிழிந்துருவ நேரிட்ட வோர்கணையும்
தத்தி விழவோர் சரத்தா லறுத்துதெறிந்து

முத்து மணிச்சங்க முழக்கினா னம்மானை

கன்னன் மக்கள் மூவரும் நகுலனால் இறந்தமையும், சேனையின் நிலையும்

கன்னன் மகன்மூவர் காலனுக்குந் தோறாதோர்

மன்னகுலன் கையால் மடிந்தே இறந்தளவில்
சேரப் பயந்து திரியோதரான் சேனை
போர்கேட்டு வெம்பிப் புறங்கொண்ட தம்மானை.
தந்தைபோம் பாதை தனைத்தொடர்ந்தோர் போலாக
மைந்தரொரு மூவர்களும் வள்ளலிடஞ் சேர்ந்ததற்பின்,
தன்சேனை கெட்டுத் தரிப்பற்று வென்னிடவே,

துரியோதனன் கேதுதரனுடன் பொருதல்

மன்சீரில் மிக்கோன் வளர்மா சுணக்கொடியோன்
சண்ட விகடகட தந்தியினை யொப்பாக,
மண்டு தளஞ்சூழ வந்தாக வம்நெருங்கிக்
கேடில்லா வில்வீரன் கேதுதரன் தன்னுடனே
ஆடலாய் வந்து அமர்பொருதா னம்மானை.
ஊக்க முடனே உரசேறி வந்தவனைத்
தீர்க்கமுடன் கேதுதரன் சென்றெதிர்த்து வில்வளைத்துப்
பத்துக் கணையால் தேர்பாகனையும் பாய்பரியும்,
துத்திப்பைச்[1] சர்ப்பத் துசந்தேரும் வில்லழித்து,
மருமம் புதைய வடிக்கணையோ ரைந்துவிட்டான்.
திருமன்னர் மன்னவன்மெய் செங்குருதி பொங்கியதே
ஏறுதேர் பாகு மிவுளிகொடி வில்லிழந்து
சீறும் புலிபோற் செகத்திலே தான்பாய்ந்து
வெய்ய கொடியகதிர் வேலொன் றெடுத்தெறிந்தான்.

கேதுதரன் அழிவு

ஐயமறக் கேதுதரன் அங்கம் பிளந்துருவிக்
காய்ந்தெறிந்த மன்னர்பிரான் காய்வேலால் ஆவியற்று
மாய்ந்து விழுந்தான் மகிதலத்தி னம்மானை.
இந்தவித மாயிரண்டு திறற் படையும்
சந்ததமும் வெம்பூசல் தான்பொருதா ரம்மானை.

தருமன் மகனும் சல்லியனும் பொருதல்

தருமன் மகன்மீதிற் சல்லியனுந் தான்மீள
உருமென்று தேர்நடத்தி வுற்றவரி வில்வளைத்துச்
சரத்தின் தொடர்பு தவறா தொருமுகமாய்

---

1 புள்ளிகளை உடைய பாம்பின் படம்

வரத்தின் கணைமாரி மாறாம லேசொரிந்து,
முன்னின்ற வீரர் முதலாய மன்னரையும்
மன்னுவரைத் தேர்பிளந்து வன்கைவரி விற்பிளந்து
பாதாதி கேசம் பரவக் கணைசொரிந்து,
கோதாஞ் சிரசறுத்துக் கொன்றே உறக்கூய்த்து
மூரி சுமித்திரன் முதலான மன்னரையும்,
பாரி லறுத்தே படுகளமெல் லாம்பரப்பி,

வீமன் தாக்குண்ணல்

வீம னுடல்தோறும் வெங்கணைகள் தான்சொருக
காமன் றனையெரித்த கண்போல் வான்வில்வளைத்தான்,
மத்திரனும் வீமனுமாய் வாதிட் டுறசேறி

அத்திர மாரி அழல்மாரி யாய்ச்சொரிந்தார்.
முன்னின் றிருவர் முறைமுறைச் செய்போரை
என்னென் றுரைப்பேன் எவர்தா னுரைக்கவல்லார்.

வீமன் தளர, சாத்தகி நகுலன் முதலியோர் வருதல்

அங்கர்கோன் சாரதிபோர்க் காற்றா தனிலன்மகன்
சிங்கக் கொடியான் றிகைத்துயிர்ப்புக் கொள்பளவில்,
வல்லவிறற் சாத்தகியு மாநகுலன் சாதேவன்
சல்லியனைக் கொல்லத் தடந்தே ருறநெருக்கி,
ஓரொருவர் கோடிகணை யுறக்கை யெனச்சொரிந்தார்.
மாரியெனச் சொரிந்த வாளிதனை மந்திரனும்,
தன்கைக் கொடுங்கணையால் தானதெல்லாம் நீறாக்கி,

வன்கை வரிவில் வளைத்தா சுகஞ்சொரிந்து,
மூவர் கொடியு முனியு முனிநானும்,
தாவு பரியுருளுஞ் சாரதியும் பொற்றேரும்
பற்ப மெனவே பறக்கப் பொடிப்படுத்தி
விற்பரவு மோரொருவர் மெய்யுருவ நூறுகணை

அவர்கள் புறங்கொடுத்தலும், வீமன் எதிர்த்தலும்

வீசினான் அங்கவர்கள் வென்கொடுக்க வேநகைத்துப்,
பேசினான் திண்மைப் பிரபலங்க எம்மானை.
தம்பியர் நொந்த தளர்ச்சிகண்டு மால்வீமன்
வெம்பரிப்பொற் றேர்தூண்டி வில்திகிரி போல்வளைத்துப்
பரிதேர்க் கொடிசிலையும் பத்துக் கொடுங்கணையால்

பொரியா யெரியாய்ப் புகையாய்ப் பொடிபடுத்தி
மற்றவன்றன் சேயரெல்லா மாண்டு விழவறுத்து
உற்றுதவி யாய்ச்சூள் உறவோர்கள் யாவரையும்
சிலையும் பரிபாகுந் தேரு மவரவர்கள்,
தலையு முடியுந் தறித்தே நிலத்திலிட்டான்,
துருபதனு முதலாய்ச் சோமகரு மேமுதலாய்
நிருபர் முதலாக நின்றபெருஞ் சேனைமுதல்,
தருமன் மதலையொடுந் தம்பியரொ டுங்கூடி
ஒருமுகமாய்ச் சென்றே யுறுபோர் புரியலுற்றார்.

சல்லியன் தருமன் போர்

சல்லிய னோடு தருமனுமே வில்வளைத்து
வல்லியங்கள் போலிகலி மாறாது நிற்பளவில்
பூசுரன் மைந்தன் பொழுது . . . .
வாசவ குமாரனுடன் வந்தே சமர்மூண்டு
வில்லிழந்து தேரிழந்து வின்முனிவன் மைந்தனெனும்,
சொல்லிழந்த மேனியெங்குஞ் சோரி பரந்தொழுக,
ஓடினான் பத்தொன் பதுதரன்முன் வென்கொடுத்தே,
தேடியே வேறுமொரு தேரேறி வில்வளைத்து

அருச்சுனன் போர்

நிலவரை யொத்த நிகரில்லா பார்த்தனுடன்
கோலஞ் சிவப்பேறக் கோல்சொரிந்தா னம்மானை.
தன்மேனி சோரி சொரியத் தனஞ்செயனும்
வின்மாரி பெய்தவன்றன் வில்லழித்துத் தேரழித்து
வாசி வலவனை[1]யும் மாளப் பொருதழித்து
ஆசு பிளந்தவன்றன் அங்கமதி லெண்கணையும்
தட்டுருக வெய்தான் தனஞ்செயன்கை வாளியினால்
கெட்டலைந்து வோடிக் கிளர்ந்து மறுதேரேறி
தீராப் பெருங்கோபச் செந்நெருப்புக் கண்ணெரியப்
போரால் வலியான் புரதகனன் ஒப்பாக
வல்வில் வளைத்து வடவைக் கணைமழையால்
கல்வில் வளைத்தோன் கடுப்பவே தான்சொரிந்தான்.
திக்கயம் பாலர் திகிரி நடுநடுங்கச்
சக்கர வாளப் பொருப்புந் தடந்தேரும்

---

1 குதிரை செலுத்துவோன்

ஒக்க நடுங்க வுரகரும்பர் மெய்நடுங்கத்
தக்க பகிரண்டஞ் சகலமுமே தானடுங்க

அசுவத்தாமனும் அருச்சுனனும்

விண்முனிவன் மைந்தன் வெகுண்டுவிடும் பாணமெல்லாம்
என்முனிமுன் னீடோ யிவனென்று அரிச்சுனனும்
மாறாத சோனை மழைமாரி யொப்பாக
வீறாய்க் கணைமாரி மேன்மேலு மேசொரிந்து.
அங்கவன்றன் பாணம் அடங்கலையும் நீறாக்கிப்
புங்கம் பலசொரிந்து பொற்றேரும் வில்லழித்தான்.
ஒப்பில்லாக் கட்டாண்மை யுள்ளசிலை வல்லாளன்

துப்பெல்லா மின்றுகுத்தான் தோற்றான் எனவிரைந்தே
ஆற்றார் பெருஞ்சேனை அருச்சுனன்றன் றேர்மலரால்
தூற்றார் இமையோர் சொரிந்தமலர் மழையால்
தேரிழந்து விண்முனிவன் சேய்சீறி யோரயிலை[1]
தாரிசைந்த மார்பன் தனஞ்செயன்மேல் விட்டெறிந்தான்
எறிந்த அயில்வேல் இடையிலே தூளாக
முறிந்து விழக்கோல் முனைந்தே தொடுத்தறுத்தான்.
மீண்டோ ரிருப்புலக்கை வெங்கோப மாய்ச்சுழற்றி
காண்டா வனமெரித்த காளைமேல் தானெறிந்தான்,
இடியொத் திரைந்தார்த் தெதிர்ந்து வருமுலக்கை

பொடிபட்டுத் தூளாகப் போகக்கணை சொரிந்தான்
உலக்கை பொடிந்துவிழ ஓசன் ... ...
வலக்கையி லோர்கதையை வவ்வியே தான்சுழற்றிக்
கோபித் தெறிந்தான் குமுறி வருங்கதையைச்
சாபக் கணையால் தணித்தான் பற்பமுற
மாயா வினோதன் மணித்தேர் நடத்துமட்டும்

அசுவத்தாமன் களம் விடுத்துச் செல்லல்

காயாமலர் மேனிக் கண்ணனையும் பார்த்தனையும்
வெல்வ தரிதெனவே விண்முனிவன் றன்குமரன்
கல்விகரை கண்டவிறற் காண்டீபன் மேற்பொருத
நாடாமல் மெள்ள நழுவினான் நானிலத்தில்

சோடாரு மில்லாத துப்புடைய வல்லாளன்

---

1 வேல்

பொற்பரித் தாமன் புறந்தந்து போனதற்பின்,

விசயன் தாக்குதல்

விற்பன வல்லான் விசையன் சமர்முனைந்து,
கிருபன் சிலையுங் கிருதவன்மன் றன்சிலையும்
இருவர் கொடிதேர் இவுளியறுத் திமைப்பில்
ஒட்டினான் பார்த்து உளங்கலங்கி நொந்துபுறங்
காட்டினார் வில்வலியாற் கட்டாண்மை யுள்ளோர்கள்.
மற்றும் பலவீரர் மன்னர்களுஞ் சேனைகளும்
செற்று விழவே சணத்திலே நீறுகண்டு,
மாய்ந்தோர்கள் அல்லார் மறுகிப் புறங்கொடுத்துச்
சாய்ந்தோரை விட்டுத் தனுவிசைய கெம்பீரன்,
தன்முன் அரிய தருமன்போர் யாதெனவே,
வின்முனி கரில்லா விசையன்வி சாரிக்கவந்தான்,
சல்லிய னோடு சதாகதியின் புத்திரனும்
வல்லிய மொத்து வயப்போர் புரிமுகத்தில்
கன்னன் வலவன் கடுங்கணையால் வில்லிழந்து
பின்னுங் கொடித்தேரும் பீடழிந்து பாகழிந்து
வீமன் கலங்கிநிற்கும் வேளை வலம்புரிப்பூந்
தாமன் மகிழ்நதரத்துச் சல்லியனுக் காதாவாய்க்
கண்ணுக் கிமைபோலக் காக்க மனந்துணிந்து
வண்ணக் கிரண மணிமுடியான் மன்னர்பலர்
சூழ மதமாத்தேர்த் துரகப் பதாதியெனும்
ஆழி புடைசூழ அங்கடுத்தா னம்மானை.

சாத்தகி முதலியோர் தருமனுக்கு துணையாய் சூழல்

சாற்றாகி[1] வீமன் நகுலன் சகாதேவன்
பாற்றன் முதலாய்ப் பாரரசர் சேனைகளும்
பொற்பாந் தருமப் பொருப்பைப் புணரியெனத்
தற்சூழ்ந்து நின்றார் தயிரியப்பொற் சீயமென,
மத்திரன் அப்போ மருவார் நிலையறிந்து
சித்தங் கனன்று சினந்தாற் றுறநகைத்துச்
சரம்பற் பலவிடுத்துச் சாத்தகிதேர் வில்லழித்துச்
சிரங்கள் முதலாகத் தேகமதி ரச்சொரிந்து

1 சாத்தகி

இகல்வலியன் தன்மருகன் என்றுசற்று மெண்ணாமல்

நகுலன் முதலியோர் தாக்குணல்

நகுல னுடல்மீது நாலுகோல் சொரிந்தான்
ஓர்கணையாற் சாதேவ னோடினான் வென்கொடுத்தே
ஈர்கணைக்கு இலக்காய் இசைவானான் மால்வீமன்
சரமூன் றினுக்கே தனஞ்செயனும் இலக்கானான்
ஒருநான்கு கோலுக்கு உதிரட்டனும் இலக்காகி
மார்பு குருதிநதி மல்கவே நிற்பளவில்

வீமன் கண்டு சினந்து பொருதல்

சீர்பவனன் மைநன் திருவிழியாற் கண்டழன்று
பொறுக்கரி தாகப் புழுங்கிமிகக் கொதித்து

மரத்தா லடித்தான் அம்மாற்றான் மணிமகுடப்
புறத்தோடி வீழப் புடைத்தான் அதைப்பார்த்து

வீமனும் அசுவத்தாமனும்

வீமன்மேற் கோப மிகுந்தே . . . .
தாமன் கணைநாலு தான்விட்டா னம்மானை.
விட்டகணை நாலும் வீமனறுத் தெறிந்து,
திட்டமுடன் ரெண்டு கணையாற் சிலைதுணித்தான்.
மீண்டு மிரண்டுகணை வென்னுருள வேவிடுத்தான்.
பூண்டு கணைரெண்டு புயமுருவ வேவிடுத்தான்,
மன்னர்கோன் மீண்டு வலிய சிலைவளைத்து
மின்னனைய நாலுகணை வீமனுடற் புதைய,

விட்டான் முனைந்து வெகுண்டே யிருவர்களும்
தொட்டார் மேன்மேற்கோல் தொடுத்தா ரடுத்தடுத்தே.
கேசாதி பாதங் கெழுமிக் கணைசொரிந்து
தேசாய்க் கணைமாரி செல்லொத்து வீசினரே.
யாளி யிரண்டு அடர்ந்தே பொருவதுபோல்
மீளி யிருவர்களும் வெம்பூசலே புரிந்தார்.
அளவற் றிருவர்களும் ஆசுகங்கள் தான்சொரிந்தே
துளைபட்டு மெய்களெல்லாஞ் சோரி பரந்தொழுகக்
கோப மிகுந்தடர்ந்த கொற்றவர்கள் மேனியெல்லாம்
தீப நிறம்படைத்துச் செக்கர்வான் ஒத்தனரே.

தேரும் பரியும் சிலையுங் கொடிகொடையும்
சாரதியு மேயிழந்து தானொன் பதுதரமாய்
விட்டு வாங்காமல் வினைப்போர் தொடங்கியதால்
சட்டமா யோர்வேல் தனஞ்செயன்முன் னோன்எறிந்தான்
வேலோடிச் சென்றரசர் வேந்தன்மார் பைபிளக்கச்
சேலால முண்டதெனக் கலங்கியே வீழ்நதான்.

வீமன் தளர்ச்சி

வீழ்ந்தோனைத் தம்பியர்கள் வெந்தேரின் மேலேற்றித்
தாழ்ந்தோனைத் தம்பியர்கள் வெநதேரின் மேலேற்றி
விட்டதொரு சல்லியனை வீரமுடி கொள்வதென்னக்

இருவர் பக்க வீரர்களும் போரில் முனைதல்

கட்டழகன் பார்த்தன் கடுந்தாக் கரித்தளவில்

ஆரியன் மைந்த னரிச்சுனன் மேற்றேர்நடத்தி
வீரியனும் வீரியனும் வெம்பூசல் தான்புரிந்தார்,
தேர்வலியுந் தேர்விரைவுந் தேர்ச்சூதன் மாவிசையும்
போர்வலியும் வில்வலியும் புங்கப் பெருவலியும்
ஒற்றே[1] யல்லால் ஒருவர்க் கொருவர்களும்
சற்று முயராமல் தாளாமற் போர்புரிந்தார்.
கிருபனுஞ் சாத்தகியுங் கிட்டியே போர்மூண்டார்.
ஒருவர்க் கொருவர்வெகு உன்னிதமாய்ப் போர்புரிந்தார்
வன்கிருத பன்மாவு மாநகுலனும் முனைந்து
தன்கரத்தின் வில்வலிமை தான்காட்டி நின்றனரே.

சகுனி யுடனே சகாதேவன் தான்முனைந்து
இகலுற்றுத் தங்கள்வலி எல்லாம் பயின்றுநின்றார்
எல்லாறு மிவ்வாறு இயல்பாய்த் தரந்தரமாய்
வல்லாண்மை யாய்ப்போர் வலிந்துநின்றா ரம்மானை.
முன்கோடி கோடி முரசினங்கள் தான்முழங்கப்
பின்கோடி கோடிபல பேதகமாம் வாக்கியங்கள்
இரண்டு புறமு மிடிக்குலங்கள் போலதிரத்
திரண்டு இருபடையுஞ் சீறியமர் பொருதார்
தானவரும் வானவருந் தாக்கியவெம் பூசலென
மானவய வீரமுடன் வர்மித்தே தான்பொருதார்.

---

[1] ஒத்து

அரண மெனுமரசன் அன்றுபுற மிட்டதற்பின்
மரண மெனக்களத்தில் வந்துற்றான் மத்திரர்கோன்
தீயிற் பிறந்தோன் சினந்தவன்மேற் றேர்நடத்த,
நேயத்தில் மிக்க நிருபன் றன்குமரன்,
வேண்டா மெனநிறுத்தி வீமனையுந் தான்விலக்கி

தருமன் போர்

மூண்டான் செருவில் முரசக் கொடியுயர்த்தோன்.
மாமனெனும் மத்திரனை வாவென்று தானழைத்துக்
காம தகனனெனக்[1] கார்முகத்தைத்[2] தான்வளைத்து
துங்கமுட னாறுகணைத் தொட்டேவி மத்திரன்றன்
அங்கமெங்குஞ் செங்குருதி யாறோட வேபிளந்தான்

ஆறு கணையும் அகலம் புயமுருவி
வீறினுடன் இரத்த வெள்ளம் பரவியதால்
வன்கோபங் கொண்டுபல வாளியால் மத்திரனும்
நன்கான தேர்பரிவில் நாண்கொடியுந் தான்பிளந்தான்.
ஏறிய தேரு மிவுளி பரிபாகும்
மீறு சிலைநாணும் வெண்கொடியுந் தானிழந்து
மேதினியி லேகுதித்து வேறுமொரு தேரேறிக்
கோதிலான் வேறுமொரு கோதண்டந் தான்வளைத்து
குணமெனுங் குன்றேறி நின்றான் வெகுளியொரு
கனம தெனினுமதைக் காப்பதரி தாதலினால்

இமைப்பில் வன்றேர் இவுளி பரிபாகும்
குமைத்த பொடியாக்கிக் கொற்றவே லொன்றெறிந்தான்
ஆரபா ரித்து அடர்ந்து விசைத்தெறிந்த
வீரவேல் மத்திரன்றன் வெற்றிமுடி யற்றுருள
எத்தி யிடறி அவனியிலே தான்வீழ்த்திச்
சத்தியு மீண்டு தருமன்வச மானதுவே.

துரியோதனன் படை பின்னிடல்

தன்மு னிகரில்லாத் தனுவிசையன் கைக்கணையால்
வின்முனிசேய் தேரிழந்து வில்லிழந்து வென்கொடுத்தான்
கிருபனுஞ் சாத்தகிக்குக் கேவலமாய் வென்கொத்தான்
விரைவில் நகுலனுக்கு வென்கொடுத்தரன் வில்வேடன்

---

1 சிவன்

2 வில்

சாதேவன் போர்க்குச் சகுனி புறங்கொடுத்தான்
கோதாரி யாகக் குலைகுலைந்தார் மற்றோரும்
மன்னர்க்கு மன்னனெனு மாமங் கைப்பூபன்
தன்னைப் பகைத்தோர் தடுமாறிக்கெட்டது போல்
முரசக் கொடிபடைத்த மூர்த்திதனைப் பகைத்த
அரவத்து வசன்சேனை ஆதலையால் அலைந்த

ஐவர் ஆரவாரம்

பாரவா ரந்தான் பனிமதியைக் கண்டாற்போல்
ஆரபாரித் தார்த்தார் ஐவர்பெருந் தளத்தோர்
பகருஞ் செயராம பாணங் கடல்சுவற
உகழும் பொழுதி லுத்தி படும்பாடாய்

மன்னவர்கள் மன்னன் வணங்கா முடிவேந்தன்
தன்னுடைய சேனை தலைகெட் டலைந்ததுவே.
ஆற்றாது சேனை யலமலந்து நொந்தலையப்
பாற்றார்கள் மத்திரன்றன் பண்பான கணம்போல்வார்
ஒருநூறு தோக்கார வொப்பிலா மன்னவர்கள்
பொருதேர் நடத்திப் பொருவிற் கணைசொரிந்து.

தருமனைத் துரியோதனன் படைஞர் சூழல்

வெற்றி யறன்புதல்வன் மேலேமிகக் கொதித்துச்
சுற்றி வளைந்தார்கள் சூரனுக்கு மிக்கோர்கள்
சர்ப்பக் கொடியோன் றவளக் குடைநிழற்ற
பொற்புக் கவரி புடையிரட்டச் சாமரைகள்,

வேலை யுலைபோலு மேன்மேலு மேவீச
சால வரசர் சலதித் தளஞ்சூழ
தம்பிமார் சேனையொடுந் தாய்மாம னொத்துவரக்
கும்பலா யுள்ள கொடிப்படைகள் தற்சூழக்
கிருபன் கிருதவன்மன் கேண்மையசு வத்தாமன்
தருமன் சுதன்மேல் தறுகாது தானடந்தான்.

பாண்டவர் படை முனைதல்

வீமன் விசையன் விறனகுலன் சாதேவன்
தாம னிளையோன் தழல்மீ தினிற்பிறந்தோன்
சிகண்டி யரசர்புகழ் சென்னி பலமன்னர்களும்
மிகுந்த கடற்சேனை வெள்ளமெல்லா போர்முகமாய்ச்

சிங்கங் கடும்பித் திரள்நாடிச் செல்வதுபோல்
சங்கங் குமுறச் சமர்மூண்டா ரம்மானை.
முரசக் கொடியோன் முதலானோர் தான்சினந்து
பாவிச் சொரிந்த படையாற் பல்லாசுகத்தால்
அரவத் துவசன்முத லானோ ரடங்கலுமே
சரமிட்ட கூடாய்ச் சரமேயுடற் சுமையாய்ச்
சிகரி நிகர்த்தபெருந் தேரிழந்து வில்லிழந்து
பகருந் துசமிழந்து பாகிழந்து வில்லிழந்து
ஏற்கும் படையிழந்து ஏற்கையுள்ள மெய்யிழந்து
மூர்க்க மிழந்து முனையுஞ் சமரிழந்து

மாய்ந்தா ரடங்க மடியாத பேர்கள்சிலர்
சாய்ந்தார் புறங்கொடுத்தே தட்டழிந்து கெட்டலைந்தே
நின்றார் சிலர்களுடல் நிற்பப் பெருஞ்சோரி
குன்றா டிழந்தே குலவும் பெருநதிபோல்
ஓடவே நின்றார் உகாந்தப் பிரளையம்போல்
மேடுகா டெல்லா மிகப்புதைய வேயெழும்பிப்
போர்க்களத்தி லுள்ள பிணமா மலைபுரட்டிக்
கார்க்கடலிற் புக்க கண்கொண்டு சென்றதுவே,
பஞ்சவருஞ் சேந்த பலரும் பொருவீரம்
செஞ்சொற் புலவோராற் செப்பி முடிவதுண்டோ

வீமன் சொரிகணையால் மிக்கவலம் புரிப்பூந்
தாமன் துசந்தேர் தனுப்பாகும் நீறாகி
கைத்தலமும் மார்புங் கதித்த மலைப்புயமும்
மெய்த்தலமெல் லாம்பிளந்து வெஞ்சோரி யாறோட,
மானபங்க மாக மகுடபங்கம் பண்ணிவைத்து

வீமன் கூற்று

ஞானது வீரன் நராதிபனைப் பார்த்துரைப்பான்
குரவர் பெரியோர்கள் கூறுமொழி கேளாமல்
அரிவை தனைச்சபையி லன்று துகிலுரிந்தே
வாய்மிஞ்சிப் பேசுமது மெங்கே யாண்மையெங்கே
நீய்முந்திச் சொன்ன நிலையெங்கே வீரமெங்கே

தாதைத் திருமொழியுந் தட்டும தாந்தமெங்கே
வேதக் குருக்கள்மொழி மீறும தாந்தமெங்கே
ஈயிருக்கும் அவ்விடமும் ஈயேனென வெகுண்டு

வேயிசைக்கும் வாயான்முன் வீம்பாகச் சொன்னதெங்கே
விரகு விரகாக மேன்மேலும் வஞ்சனையே
துரக மிகுந்த துரோகிநீ செய்ததெங்கே
மோகமுடன் போர்க்கு மூண்டே முனையழிந்து,
போகலா மோசீவன் போக்கிவிட்டா லாகாதோ
அற்பப் பயலே அசடாவா டாகசடா
சர்ப்பக் கொடியோய்நீ சாகப் பொருந்திலையோ

என்று சொல்ல இளையோர் பொறுக்கரிதாய்
அன்றுவய மாருதிமே லாற்றடந்தா ரம்மானை.

வீமனைத் தாக்கல்

மாருதி மேனி மயிர்கால் தொறுஞ்சரமாய்ச்
சாரும் படிசொரிந்து தானே செருமினரே
நகைத்துப் புரமெரித்த நக்கன் றனைப்போலப்
பகைத்துப் பொருவோரைப் பார்த்தே யெதிர்நகைத்து
வாளியோ ரேழு வரிவில்லிற் கோத்தீழ்த்து
மீளி விடுத்தான் விடுத்த கணையேழும்
சர்ப்பக் கொடியோன்றன் கிளையோ ரேழ்வர்தலை
வெற்பொத்துப் பூமியிலே வீழ்த்திய தேயம்மானை.

சேய்சக்தி விந்து செயவர்மன் சேய்சேனன்
வயவிக் கிரமன் செயத்திரதன் மாவிரதன்
இவ்வீர ரேழ்வ ரிறந்திடவே வீரசங்கம்
செவ்வாயில் வைத்தே திறலாய் முழக்கினனே.
சங்க முழக்கித் தரணி திசைநடுங்க
சிங்கமெனும் வீம சேனன்மிக வார்ப்பதனால்

துரியோதனன் கலக்கம்

மாள்கி வருந்தி மறுகிமனஞ் சோர்ந்தயர்ந்து
சூழ்விதி யென்றேங்கிச் சுழன்றரசன் சோபமுற்றான்.
அனுஷர்மே லன்பெவர்க்கு மாற்றமுடி யாததினால்
கனலி மெழுகாய்க் கரைந்தான்கா ணம்மானை.

மன்னர்கோன் சோர்ந்த மனக்கவலை தான்பார்த்து
முன்னெழுவர் செற்றோர்க்கு மூத்தோன் கிருதவன்மன்
பின்னுமவன் தம்பியர்கள் பீடான ஐவரொடு
தன்னுரிய சேனைச் சலதித் திரளோடும்

மாருதியைக் கொல்ல மறமுற் றுறக்கொதித்து
பாரதிர வந்து பரவிச் செருப்புரிந்தார்.
கண்ணிமைப்பிற் குள்ளாய்க் கடுத்துவந்த சேனை யெல்லாம்
மண்ணிடத்திற் சேர மடியப் பொருதழித்துச்
சாயாத மன்னவன்றன் தம்பியர்மே லைந்துகணை
தீயாற விட்டுச் சனத்திற் சிரசறுத்தான்

சித்திரவா கும்பிலவ சேனனும் பொற்சூரசித்திரன்
மத்திரத விந்துபன்மன் மனவிந்து கேதுஐவர்
முன்மாய்ந்த யேழ்வர் முறையாந் துணைவருடன்,
பின்மாய்ந்த ஐவர்களும் பேணித்தொடர்ந்து சென்றார்

புதல்வர் பன்னிருவர் இறக்கத் துரியோதனன் துன்புற்றுப் போகுதல்

எழ்வருடன் ஐவர் இறந்தமையால் மன்னர்மன்னன்
தாழ்வுடனே வெம்பிச் சரீரமெல்லாந் தான்துடிக்கப்
பதறி யுதறிப் பதாதிவெள்ளந் தற்சூழ,
மதிகொள் விறற்காந்தார மனச்சகுனி தம்பியரும்,
நாகக் கொடிவேந்தன் நம்பியாமற் றுள்ளோரும்,
வேகத் துடனேபல் வேந்தர்களும் வீரர்களும்

ஒற்றுடந் தேறி யுயர்பஞ்ச வர்மேனி
முற்றுங் கணைசொரிந்து முன்விசையங் காட்டினின்றார்.
தாரில் வலம்புரிப்பூந் தாமன் சகாதேவன்
வாரச் சிலையும் வடமு மறுத்தெறிந்தான்.
வில்லிழந்த சாதேவன் வேறுமொரு வில்வளைத்து,
வல்லமன்னர் மன்னவன்றன் மார்பகமுந் தோள்கரமும்
முகமும் புதைய முரண்கணைகள் தான்சொரிந்து,
மிகவுங் குருதிநதி வெள்ளமெழச் செய்தனனே.
நகுலன் இளவலுமன் நாகக் கொடியோனும்,
இகலுற் றடர்ந்துரசா யிவ்வாறு ......

சாயாது கைமெய் சலியாது கைக்கணைகள்
ஓயா துறச்சொரிந்து ஆடாடிய போரில்
இரண்டு தளமும் இறந்து மலைமலையாய்
திரண்ட பலதிசையுஞ் செந்நீர் கடல்நிகர்க்கச்

சகுனி முதலியோர் வீமனோடு பொருதல்

சகுனியுந் தம்பியருஞ் சர்ப்பக்கே தன்றுணைவர்
பகரும் பலரும் பலகோடி வாரணமும்
அனிலன் மகன்மே லடர்ந்தே யமர்பொருதார்
கனல தெனவீமன் கண்டே உருத்தடர்ந்து,
சீறிப் பலகணையாற் சேனையெல்லாம் நீறாக்கி
வீறினொடு வந்தோர்தேர் வில்லழித்தா னோரிமைப்பின்

சேனைகள் யாவுஞ் சிதறி மடிந்திடவே
மானவேல் வேந்தன் மகிழ்துணைவ ரொன்பதிமர்
சீயங்கள் போலே செருப்புரியும் போர்முகத்தில்,
ஆயுங் கதைவீம னாசுகங்கள் தான்சொரிந்து,
உத்தமன் வீமதத்தன் ஓதுபில பன்மனுடன்
சத்தி விக்கிரமன் பிலப்பிரதா னன்முதலாய்,
ஒன்பது பேர்கள் உயர்சிரங் களற்றுருள
ஒன்பது வாளி யுடற்றி யறுத்தெறிந்தான்.
மல்லல் சிலைவளைத்து வந்தகடற் சேனையெல்லாம்
அல்லற் படவே யறுத்தெறிந்தா னொல்லையிலே

கட்டாண்மை வீமன்விறற் கைப்படைக்கீ டோசேனை
பட்டே குவிந்த பலதிசையும் வெம்பிணங்கள்
கம்பிதமாய் வீமன் கரப்படையில் மாய்ந்தொழிந்த
தம்பியருஞ் சேனையுமாய்த் தானடந்தான், பாம்புயர்த்தோன்
அங்க முரத்தபல யானையெதிர் பட்டவுடன்
சிங்கமெதிர் கண்டாற் சிதையாது விட்டிடுமோ
கூடி வளைந்தபல கொற்றவர்கள் சேனையையும்
ஆடலுறும் வீமனான் ஆசுகத்தா லோரிமைப்பில்
நீறுநீ றாக்கி நிருபன் றனையொழியக்
கூறுகூ றாகக் குவித்தான்கா ணம்மானை.

தம்பியர் தொண்ணூற்றொன்பதின்மர் வீழ்ந்தபின் துரியோதனன் செயல்

உற்றதுணைவர் தொண்ணூற் றொன்பதுபே ருஞ்சரியாய்
வெற்றி வயவீமன் வெங்கணையால் தண்டாலும்
தப்பாது மாய்ந்தளவில் சர்ப்பக் கொடிவேந்தன்
துப்பாண்மை கெட்டுத் துயரக் கடல்மூழ்கிக்
கைசோர மெய்சோக் கண்ணீர்கள் தான்சோர

வைசேரும் வேலான் மயங்கி மதியழிந்து.
ஐயோ பெரியோ ரறிவுரைத்தார் கேளாமல்
செய்யாத தீமைபல செய்தேன் திறலழிந்தேன்
என்செய்தேன் என்வாழ்வும் எப்பொருளு மேயிழந்தேன்
முன்செய்தேன் தீவினைகள் முற்றும்வந்த தெந்தனுக்கே

என்னமெய் சோபித் திருநிலத்தி லேசாய்ந்து,
தன்னை மறந்து தலத்தில்வீழ்ந் தேகிடந்தான்.

சகுனி தேற்றுதல்

வாடி மெலிந்தயர மாமனெடுத் தாற்றியொரு
கோடி மதிமாற்றங் கூறினன்கா ணம்மானை.
அருகு நிழல்போல வான்அம்பான தம்பியர்கள்
குரவர்க் கிளைஞோருங் கொற்றவருஞ் செற்றமையால்
உருகிமாழ் கிச்சோக முற்றால்மீண் டெய்துவரோ
முருகவேள் ஒப்பாய முரண்டாக் கூர்வேலோய்
மருகனே பூபா வணங்கா முடிவேந்தே
கிருபன் அசுபத்தாமன் கேசரியா குங்கிருதன்

அரசர் பெருஞ்சேனை யாவுமுடன் யானிருக்க
வாடுவதேன் ஐவர் மயங்கப் பொருதடர்ந்து
ஓடும் படிவிரட்டி யோட்டுவோங் காட்டிலென்று
காந்தாரி மைந்தன் கலக்கந் தனைத்தீர
வேந்தான மாமன் விளம்ப மனந்தேறி,

தெளிவு பெற்றுத் துரியோதனன் போருதல்

மிஞ்சியே நாலு விதச்சேனை வெள்ளமொடு
பஞ்சவர் மேலே படிவேந்தன் சென்றனனே.
மந்தர மொத்த வயவீமன் தான்சினந்து

வீமன் தாக்குதல்

சிந்துரத்தின் மேனோக்குஞ் சிங்கம்போ லார்ப்பரித்துக்
காலாளாய் வீமன் கதையை மிகச்சுழற்றி

மாலாங் கரிபரிதேர் வாகினிமா ளத்தகர்த்துச்
சகுனி பெருஞ்சேனை தட்டழிந்து பட்டுவிழத்
துகள்பட் டுடைப்புடைத்துச் சூழப் பிணமலைகள்
புரிசையென வுயர்த்திப் பொங்குவெள்ளச் செந்நீரால்

பெரிய வகமாக்கிப் பீடுடையான் ஆர்ப்பரித்தான்

சகுனியும் சாதேவனும்

வாதாடிச் சூதாட வல்லசகுனி தன்மேல்
சாதேவன் றேர்நடத்தித் தான்மார்பி லோர்வாளி
எய்தான் விசையா இதயம் பிளந்துருவ
வெய்தாக மாமனுக்கு வேந்தர்வேந் தோடிவந்து
சாதேவன் மார்புருவத் தானோர் அயில்வேளை,
வேதாக மத்தோடு வீசினான் வேந்தர்பிரான்

துரியோதனன் அம்பால் சகாதேவன் தளர, வீமன் காத்தல்

மன்னர்கோ மானெறிந்த வைவேற் சகாதேவன்,
தன்னகலம் பட்டளவே தானயர்ந்தான் தேர்மீதே.
பின்னோன் அயரப் பிலவீம சேனனெனும்
முன்னோ லவரைநேர் முனியொன்று தான்வளைத்துத்
தன்னை வளைந்த தளமெல்லாம் நீறுகண்டான்.
வன்னியெனக் கண்சிவந்து மத்திரைசேய் வில்வளைத்து

சகுனி சகாதேவன் பொருதல்

மாமன் சகுனியுடன் மன்னன் சகாதேவன்
சோமன்றனை வகிர்ந்த துங்கக்கணை சொரிந்தான்
அக்கணை யெல்லா மறுத்தறுத்துத் தூளாக்கித்
தக்ககணை யொன்றாற் றனுவறுத்தா னம்மானை.
வில்லறுத்த போதே மிகக்கனன்று சாதேவன்
மல்ல லுடன்வேலை மாயன்ச காயமதால்
வீசி யெறிந்தான் விசைகொண் டெறிந்தசெவ்வேல்

சகுனியின் அழிவு

ஆசின் சகுனி யகலம் பிளந்துருவி,
கற்றோர்கள் வன்சொற் கருதார்க் குலமடங்க
செற்றே யொழியச் செகத்திலழிப்பது போல்
ஊனைப் பிளந்து உள்ளுயிரை யறக்கவர்ந்து,
தானத் துடனே சமனிடத்தி லொப்பிவித்து,
மீண்டு திரும்பி விறற்சகா தேவனெனும்
ஆண்டனக் கையி லமர்ந்ததுவே யம்மானை.

துரியோதனன் அவல நிலை

சூதில் வலிய துணைச்சகுனி சாதேவன்
மோதிய வேலால் முடிந்தா னெனக்கேட்டு
ஆவி யிழந்தவுட லாகி யலமர்ந்து
பாவி நிலத்தின்மிசை பட்டோனைப் போல்வீழ்ந்து
தேரிற் கரிபயிற் சேர்ந்த பதாதிகளில்
நேரிட் டொருவர் நிகழ்த்துதற்கு மில்லாமல்
காவியங் கூறுங் கவிஞர் தனைப்பகைத்த
பாவியர் செல்வமெதிர் பார்த்திருக்கத் தேய்வதுபோல்
சீரிழந்து பூவிழந்து சேர்ந்த துணையிழந்து
ஊரிழந்து பந்துசனம் உற்றோர் தனையிழந்து
நண்பான பேரிழந்து நாட்டமொத்த பேரிழந்து
பண்பான வேந்தர் படைவீர ரையிழந்து
கரிகள் பரியிழந்து காலாட்கள் தேரிழந்து
உரிய சுதனிழந்து வுற்றபொரு ளிழந்து
வீர மிழந்து விறலிழந்து வீரனெனும்
சார மிழந்துபய சாமரையுந் தானிழந்து
வெற்றிக் கொடியிழந்து வெண்கொடியுந் தானிழந்து
கொற்றக் கவரிக் குருசில் அடையாளம்
எல்லா மிழந்து யிருகால் சிவப்பேறப்
பொல்லாத வன்றேர் புரவி கரியிழந்து,
கானடை யாகக் களம்விட்டுத் தானகன்று
கோனலங் கெட்டுக் கொடுக்காத பாவியைப்போல்
ஈயோடு நீர்க்கூழ் எடுத்துண் டவன்போலப்
பேயாடு வார்கள் பிதற்று மொழிபோல,
நஞ்சுண்ட சேலாய் ஞமலியே றுண்டதுபோல்
நெஞ்சில் விசாரம் நிரம்பிநெடு மூச்செறிந்து
கலங்கிக் கலங்கிநெடுங் கண்ணீரி லேமூழ்கிப்
புலம்பிப் புலம்பிப் பொறைக்கான வழியோடி
எண்ணாது யெண்ணி யிரங்கிக் கரைந்துருகிப்
புண்ணாகி நெஞ்சம் பொருந்த விசாரமிட்டு,

துரியோதனன் வஞ்சகமான எண்ணம்

பன்னாளிற் கற்ற பழமறை யொன்றுண்டதனால்
இன்னாள் அமரி லிறந்தோ ரடங்கலையும்
மீள வெழுப்பி விரகோ டினம்பொருதத்

யார்க்கும் உரையாமல் துரியோதனன் தவமிருக்கப் பொய்கை செல்லுதல்

தோளில் வலியான் சுகுத்தாகத் தானினைந்து,
எண்ணிய வண்ண மெவர்க்கு முரையாமல்
திண்ணுயர்ந்த தண்டோடு சென்றான்கா ணம்மானை.
கங்கையெனத் தோயநலங் காணுமெனத் தேவர்களும்

நீரில் தவம்புரிதல்

இங்கிதமாய்த் தோயு மேற்றதொரு பொய்கையிலே
ஏறியகால் போல் இறங்கு மடிச்சுவடும்

பாரிய பாதம் பதித்தே நடுப்புனலில்
புக்கா னசலத்தில் புதைந்தா னருமறையால்
தம்பித்தே வாயுதனைச் சிதறா துள்ளடக்கிச்
சோம்புற்று ஞானச் சுடர்க்கொழுந்து தான்செழிக்கப்
பன்னாளும் யோகம் பயில்வோரிற் பன்மடங்காய்த்
தன்னாக முற்று மெலிவிற் றயங்குநெறி
நன்னாக மூல நளினத்தி னால்ஞானம்
உன்னாம லுன்னுமறை ஓதலுற்றா னம்மானை.
சிந்தை யொருப்பட்டுச் சிவத்தி லிறையிருப்பச்

சந்தமிகு சோழன் தனுப்போருக் காற்றாமல்
வேங்கைக்கு உடைந்து வெருக்கொண்ட மான்போல

துரியோதனனைக் காணாது கிருபன் முதலியோர் தேடல்

ஏங்கித் தெறித்தே யிடைந்தே வெருண்டோடி
அரவக் கொடியோனை யக்கமதிற் காணாமல்
கிருபன் கிருதபன்மன் கேடிலசு பத்தாமன்
மூவருந் தேடி முடியரசன் தானொழிய
யாவருஞ் செற்றிறந்த வாகவமெல்லாம் பார்த்துக்
காணாது சிந்தைக் கலங்கி விசாரமுற்றுக்
கோணாது மீண்டு கொலைக்களத்தி லோர்பாலில்,

சஞ்சய முனியால் அறிதல்

சஞ்சயன் என்னுந் தவமுனியைக் கண்டிறைஞ்சி
நெஞ்சிலுயர் நிருப னெங்கே யெனவினவ
மன்னவர் மன்னன் மடிந்திலா னோர்மறையால்
இன்ன மடுவி லிசைந்தே தவம்புரிந்தார்

வேந்த னனைவும் விரகும் பகர்ந்தற்பின்
சார்ந்து ரணகளத்திற் றானவதிப் பட்டதெல்லாம்
மூவ ருடனு மொழியலுற்றான் சஞ்சயனும்.
தாவு பரித்தேர் தருமன்முத லைவர்களும்
கொல்லத் துணிந்தார்கள் கோவிந்தன் றான்விலகி
மெல்லக் கழற்றிவிட்டான் மீண்டுபிழைத் தோடிவந்தேன்.
மன்னவர்கள் மன்னன் சொல்மாதா பிதாவிடத்தில்

கன்ன னுயிர்த்தோழன் கவலென்றான் சொல்வதற்காய்ப்
போறே னியல்பாய்ப் புகன்றதற்பின் தான்மீண்டு
வாரேன் எனவே மறையோ னுரைத்தகன்றான்.

மூவரும் துரியோதனனைத் தேடிக் காணாது மீளல்

சஞ்சயன் சொன்ன தடாகத்தில் மூவர்களும்
விஞ்சை மறைபயிலுந் வேந்தனைப்பார்த் தேகினரே.
புள்ளகலாப் பொய்கையினிற் புள்ளரவந் தான்காணார்
வெள்ளப் பெருந்திரையின் வீறொலியுந் தான்காணார்.
மட்ச விகற்ப வகையரவந் தான்காணார்
பட்ச மலரளிகள் பாடுமொலி காணார்
ஏறுபா தம்போ லிறங்குபா தம்பார்த்து

சாறிய மன்னன் தடமடக்கந் தான்பார்த்து
மாறிலார் தாங்கடங்கள் வான்முகங்கள் தானோக்கி
கூறி யரசனையே கூவியழைக்க லுற்றார்
நின்கிளை சேனை நிருபர் துணைவரெல்லாம்
புண்கணுற் றாவி பொருக்களத்தில் மாண்டவிதம்
மூவுலகி லுள்ளோரும் மோசமற வேயறிந்தார்
ஏவலுடன் மீண்டு யெழுப்பியமர் செய்தாலும்
ஈனமன்றி மானமுண்டோ வென்னநினைந் தென்னசெய்தாய்.
தானமரிற் செற்றவர்பின் தான்சாக மாட்டாரோ
வீரியமே பேசல் விழலெனினுஞ் சொல்லுகிறேன்

போரிற் சிலைநாண் பொருந்த வெடுத்துநின்றான்
நாரின் விசையனொடு நால்வருமுன் னிற்பாரோ
மூரிக் கணைக்கு முதுகிடாப் பேருமுண்டோ
என்கணையால் ஐவர் எழிற்றலையுந் தானறுத்து
உன்கழற்கீழ் வைப்பேன் உதையன் படுமுனமே.
இரவி படுமுன் இகலாரைக் கொன்றிலனேல்

அரிய துரோணன் மகனல்லே னென்றுரைத்து
விற்படையுந் தீண்டேன் விடையன்முதலோ ரீந்த
நற்படையுந் தீண்டேன்மெய் நான்மறையும் பொய்த்தாலும்
என்கரத்திற் கொண்டவெழிற் படைகள் பொய்ப்பதுண்டோ

புன்கருத்து மன்னருக்குப் போதுமோ பூபாலர்
திரண்ட வொன்னாரைத் தெறுதலன்றித் தான்மடிதல்
இரண்டி லொன்றன்றி இராசர்க் குறுதியுண்டோ.
பாண்டவ ரெல்லாம் படியில் மடியவென்று
ஆண்ட புவியுன் அருட்கொடையுள் ளாக்கிவைப்பேன்.
பின்பிறந் தோரைப் பிழைப்பிற் றரசியல்பாய்
முன்பிருந் தாப்போல் முறையாய்ப் புவிபுரப்பாய்
என்னவே யோர்கோடி யின்பமொழி தான்கூற
நீர்க்கோ னுரைப்பதென நெஞ்சிலே தானினைந்து
சீர்காழி மன்னன் செலத்துள் ஒடுங்கிநின்றான்

உந்தாஞ் சொல்லா துரவோ னொடுங்குமரன்
வித்தாரங் கண்டு விரைவாக மூவர்களும்
வேறொன்றும் பேசாமல் மீண்டார்க ளவ்வேலை,

பாண்டவர் துரியோதனனைக் காணாது சிந்தித்தல்

பாரொன்று வேற்காத்துப் பஞ்சவருஞ் சேர்ந்தோரும்
பூபன் அரவுயர்த்தோன் போனவிடங் காணாமல்
கோபத்துடன் பாடிக் கோலிக் களங்கோலி
எங்கெங்கே யெங்கே யிறையென் றவரவரே
அங்கங்கே தேடி யலைந்தனர்கா ணம்மானை.
காணாமற் றேடிக் கலங்குமந்த வேளையிலே,
பூணாக வீமனிடம் புக்கியே கான்வேட்டை

வலைஞரால் இருப்பிடம் அறிதல்

ஆடும் வலைஞர் அறைந்தார்கள் நின்பகைஞன்
நீடுங் கதையோடு நீத்தமதிற் புக்கியதே
கண்டோ மெனவுரைக்கக் கால்குமரன் மாலுடனே
விண்டான் அவைகேட்டு மெய்திகைத்தங் குள்நினைவாய்
பாத்தொரு சொல்லுப் பகரலுற்றான் பன்னாளில்
எத்த பிரம னிடத்தி லசுரர்குரு
பெற்றமறை யொன்றுதவப் பேறால் முனிவர்களுள்
உற்ற வழியா லுரவோன்முன் பெற்றிருந்தான்

அந்தமறை கொண்டறல்புக் கானம் மறைனேர்
விந்தையுடன் ஒவ்வாது வேறுமறை யம்மறையால்

செற்றோரை யெல்லாந் திரும்பவே தானெழுப்பி,
உற்றே பின்முன்போ லுயித்தஞ் செயநினைத்தான்.

கண்ணன் கூறக் கேட்ட வீமன் செயல்

என்றுமால் சொல்ல எருள்வீமன் மற்றுமுள்ளோர்
அன்றரசன் புக்கு மாலதடம்போய்ப் புக்கினரே
ஊதைக் கரசன் உகசண்ட மாருதமாய்
தாதைபோல் வீமன் றடக்கரையின் மீதேகித்
தம்பிமார் முன்னாந் தருமன் தனநாதன்
உம்பன்றனை முற்காத்தோன் உற்றோ ரடங்கலுமே
வாருதியை நீடுசக்கிர வாளகிரி சூழ்ந்ததென

வீமன் பொய்கையைச் சார்தல்

நாரமலர்ப் பொய்கைதனை நண்ணியே சூழ்ந்துநிற்க

வஞ்சனையில் மிக்கான மன்னவனை மால்வீமன்
நெஞ்சு சுடச்சுடவே நின்றுமொழி சொல்லலுற்றான்.

வீமன் கூற்று

கங்கை மகன்முதலாய்க் காந்தாரன் ஈறாக
வெங்களத்தி லேமடிய விற்பனர்கள் தன்னாலும்
சொல்லி முடியாத துரோகம் பலபலவாய்
அல்லலுறச் செய்த வசடர் கொடும்பாவி
துங்கச் சிவிகைத் துரகமணி இரதம்
வெங்கயத்தி லேறாமல் வீழ்கயத்தி லேறுவதோ,
நெஞ்சறிய வன்பழியாய் நீடுகொலை பாதகமாய்
வஞ்சனை செய்து மனுநீதி குன்றியதும்

சேர மறந்தனையோ, செற்றோரைப் போற்புனலில்
வீரங் குறைந்து விழுவதுமுன் சேவகமோ,
ஆற்றாம லேகெட்டு அலைந்தே கடலில்விழல்
வேற்றீர முள்ளதிறல் வேந்தருக்கு லட்சணமோ,
இனம்பாழ் படச்சேர்ந்தோர் எல்லோரை யுங்கெடுத்து
வனம்போய்ப் புகுந்தொளித்தாய் மன்னா வுனக்கழகோ,

ஆலம்[1] போலுன்னை யடைந்தோ ருயிர்தொலைத்து
ஆலம்போய்[2] புக்கொளிப்ப தாண்மையோ சேவகமோ,
அலர்செய்[3] தடுத்தோர் அடங்க வுயிர்தொலைத்து
அலர்புக்[4] குவதுரசு வற்றோ ஆற்றாமதியோ,

காரியமா மிக்கோர் கவலுமொழி கேளாமல்
வாரியடைந்[5] துட்புதைந்தாய்ச் மானமுனை கெட்டனையோ
சிந்துபோ[6] லொத்தபல சேனை துணையிழந்து
சிந்துபோ[7] யுட்புதைந்தாய்ச் சேவகமோ சீர்வேந்தே,
புட்கரத்தி[8] லென்கதையாற் போவதறியா திடைந்து
புட்கரத்திலே[9] கரந்தாய்ப் புத்தியல்லச் செற்றவனே,
பாணி[10]விறல் கெட்டுடைந்து பஞ்சவர்போர்க் காற்றாமல்
பாணி[11]யினுட் பூந்தொளித்தாய்ப் பஞ்சைப்போர் பார்வேந்தே,
காரென்[12]று யென்னுடைய காலடியில் வீழாமல்
காரென்று வோர்வாவிக் காருட்[13] புகுந்தாயோ,

காண்ட[14] மெனயான் களமெங்குந் தான்தேட
காண்ட[15] மதிற்புதைந்தாய்க் காவலர்க்குத் தானடைவோ
புவனம்[16] அடங்கப் புரந்தாய்போர் செய்யாமல்
புவன[17] மடங்கிப் புதைந்ததுவுன் புன்மதியோ
கமல[18] முகமழுங்கிக் கைக்கொள்வோ ரில்லாமல்
கமல[19] மதிற்புகுந்தாய்க் காவலனே வீறுகெட்டாய்
அப்பு[20]வென் றெந்தன் அடித்தாளில் வீழாமல்
அப்பு[21]படப் புதையமதி யார்சொன் னாரோதான்
கம்முந்[22] துயர்க்கடலாங் கண்ணீரின் மூழ்காமல்
அம்முட்[23] புதைந்தாய் அவமானப் புன்மதியோ

குலாலன்[24] அனையாய் கொடியாய வரையோடே
கிலாலமதிற்[25] புதைந்தாய் கேடென்னோ மன்னவனே
மழை[26]போற் கணைப்போரு வாதுற்றுச் செய்யாமல்
மழை[27]யூடு புக்கொளித்த வாறேது வீறுகெட்டோய்
அறல்[28]மைக் கருங்கூந்தல் ஆயிழையார் தானகைக்க

---

1 ஆலமரம் 2 நீர் 3 பழிச்சொல் 4 நீர் 5 நீர் 6 கடல் 7 நீர் 8 அடிக்கும் மேடை 9 நீர் 10 கைத்திறன் 11 நீர் 12 காப்பாற்று என்று 13 நீர் 14 முடிவு 15 நீர் 16 உலகம் 17 நீர் 18 தாமரை 19 நீர் 20 தந்தை 21 நீர் 22 சூழும் 23 நீர் 24 குயவன் 25 அற்ப நீர்நிலை 26 பெய்யும் மழை 27 நீர் 28 கரிய மணல்

அறல்[1]புக் கொளித்த தவகுணமேன் மன்னர்மண்ணோ
நாரஞ்[2] செறிந்தகுரு நாடாள மாட்டாமல்
நாரம்[3] புகுந்ததெந்த ஞாபகமோ நாயனையாய்
தம்பியர்கள் சுற்றந் தலைவர் படைதோற்று
அம்புதமே[4] தஞ்சமென வாசைவைத்த தெந்தமதி

வருணன்[5] மகன்செற்ற வடியிலுயிர் போக்காமல்
வருணம்[6] சதமாக வந்தொளித்த தெந்தமதி
சீவ[7] னுடலோடே செற்றோனைப் போலாக
சீவனமே[8] தஞ்சமெனச் சென்றொளித்த தெந்தமதி
வாரடருங்[9] கோகநக மாமுலையார் தானகைக்க
வார[10]டைந்து புக்கொளிக்க வந்தமதி யெந்தமதி
மதகஞ்[11] செறிமும் மதகுஞ் சரமனையாய்
உதகங்[12] கெதியன் றொளித்திருப்ப தெந்தமதி
தாயந்[13] தனில்முன் அசதித்த குலயீனா
தோயந்[14] தனிலே சுரித்திருப்ப தெந்தமதி

சம்பரனை[15] யொத்த தருமன்றனைப் பகைத்தே
சம்பரமே[16] தஞ்சமெனத் தானொளித்த தெந்தமதி
அய[17]மொத்த நெஞ்சயமொத்து ஆற்றாமற் றோற்றோடி
அய[18]முற் றொளித்திருப்ப தாமோவீ தெந்தமதி
அளக[19] பரித்தேரில் ஆகிப்போர் செய்யாமல்
அளக[20]மதி ரப்புதைய லாமோவி தென்னமதி,
அமுதஞ்[21] சுரருக் களித்தோன் மொழிமாறி
அமுதத்[22] தடம்புகுத லாமோவி தெந்தமதி,
கம்முடலம் வேறாய்க் களத்திற் கிடக்காமல்
கம்முட்[23] புதைந்த கருத்தேது இதெந்தமதி

கனவிரதத்[24] தேறிக் காய்ந்துபோர் செய்யாமல்
கனவி[25] ரதத்திற் கரந்தாய்ஈ தெந்தமொழி
மாரியென[26] வெய்யகணை வாளிப்போர் செய்யாமல்
மாரியிடைப்[27] புகுந்தாய் மன்னர்க் கிதுதகுமோ,

---

1 நீர் 2 அன்பு 3, 4 நீர் 5 வருணபகவான் 6 நீர் 7 உயிர் 8 நீர் 9 கச்சு நெருக்கும் 10 நீர் 11 யானை மத்தகம் 12 நீர் 13 அரிச உரிமை 14 நீர் 15 சம்பான் - தூயமேலோன் 16 நீர் 17 இரும்பு 18 நீர் 19 கத்தரித்த பிடரி மயிர் 20 நீர் 21 தேவாமிர்தம் 22 நீர் 23 தலையும் உடலும் 24 நீருள் 25 பொன்னாலான தேர் 26 நீர் 27 நீர்

பயங்கொண்[1] டிடைந்துளறிப் பரவிநீ போர்தவிர்ந்து
பயங்கொள் களிறாய்ப் பயத்துட்[2] புகுந்தாயே,
கயங்கள்[3] பரித்தேர்கள் காலாட் களுந்தோற்றுக்
கயங்கொள்[4] மடுவிற் கலங்கி விழுந்தாயோ,
சலங்[5]கெட் டுரங்கள்கெட்டுத் தாழ்வாகி வாழ்விழந்து
சலங்கட்[6] டியமடுவிற் தான்நீ விழுந்தாயோ

அடிமாறிப் புறக்கா ணயம்போல் அயம்புகுந்தாய்
முடிமாற வுன்னை முருக்க லொழிந்துவிடேன்
கவந்தங்கள்[7] எத்தனைநீ கண்டாய் களமடங்க
கவந்தங்[8] கெதியாய்க் காந்திருப்ப தெந்தமதி
மோதுற்ற போரில் முருக்கி யுனையழித்துக்
காதத்தில் தேவருனைக் காண வரவிடுவேன்.
அஞ்சுதல் வேண்டாம் அரசரடற் போர்க்குச்
கெஞ்சுதல் உண்டோ கிருபையில்லா மாபாவி
என்கோபம் பொய்கையினி லெய்துமுனம் நீபாவி
முன்காண வந்து முனைசெய்யா யாமாகில்

நரலைதனைக் கணையால் நாரணன்முன் தீய்த்ததுபோல்
திரிபுரந் தன்னைச் சிவனார் எரித்ததுபோல்
இத்தட மெல்லா மெரித்திடுவேன் ஆங்கதன்முன்,
தத்துபரித் தேர்வேந்தே தானமர்க்கு வந்தணுகாய்
பாவகன் போலிந்தப் படியே பழிமொழியாய்க்

அதுகேட்டுத் துரியோதனன் பொய்கை விட்டு வரல்

கோவினிரு கன்னங் கொதிக்கவே சொன்னமையால்
தான்சயித்துப் பின்னுந் தரித்தங் கிருப்பானோ,
ஊன்சதிக்கும் வேலான் உருத்திரனைப் போலாகி
காளநிறங் கொண்டல் கடலுழக்கி வெள்ளமண்ட
கோளமுறச் சென்றதெனக் கொற்றக் கதையுடனே,

சக்கிரவாளப் பொருப்புத் தன்னில்மக ராலையங்கள்
உக்கிரமாய்ப் பொங்கி யுருத்தலைகள் மோதுதல்போல்
சூழ்நின்ற பேர்மேற் சுனைநீ ரலைமோதத்
தாழ்வில் வரையொன்று சலத்தெழுந்த போலெழுந்தான்.
கரைபுரள வெள்ளக் கயத்தூ டிருந்தெழுந்து

1 அச்சம் 3 யானைகள் 5 சினம் 7 தலையற்ற உடல்கள்
2 நீர் 4 நீர் 6 நீர் 8 நீர்

தரைபுரைந்த மன்னன் றலைப்பட்டா னம்மானை.
தோன்றிக் கரையேறிச் சூழ நெருக்கமுறத்
தோன்றிகழ்தார் ஐவருட சேனைநிலை தான்பார்த்து

போருமாறு எவ்விதம் எனக் கேட்டல்

மாத்தேர் முதலாக வாகனங் களோடுநின்றீர்
பூத்தோனே தண்டொழியப் போரா யுதங்களற 1180

நின்றே னொருதமியேன் நிங்களுடன் எப்படிப்போர்,
இன்றேயான் செய்வ தியம்புகெனக் கேட்டான்.
ஐந்துபேர் தன்னி லடியேனுடன் பொருத
மைந்துள்ள வல்ல வயவீரன் ஆரெனவே

வீமனுடன் போருமாறு கண்ணன் கூறல்

வேந்தன் வினவ விறல்மாற னுரைப்பான்
போந்த சபதம் புகல்வீம னையொழிய
மற்றவர்க ளொத்து மலைவரோ வுன்னுடன்போர்
கொற்றவனே யெக்காலுங் சொண்டசின மாறாமல்
இருவர் களுமுன் னிளம்பருவ மேமுதலாய்
பொருதுமின் னாள்வரைக்கும் போத மனத்துயரம் 1190

கொண்டே யிருந்தீர் குளித்திர்கள் வஞ்சினமும்
பண்டே பகர்ந்தீர் பகர்ந்த மொழிப்படியே
இங்கெங்குஞ் சூழ்ந்தே யிருந்தோர்கள் சாட்சியதாய்ச்
சிங்க மெனவே செருச்செய்து நிங்களிலே,
வெற்றி யடைந்தோர்கள் மேதினியை யாளுமென்று
கொற்றத் திருமால் குறித்தனர்கா ணம்மானை.

எவ்வாயுதத்தால் போருவதெனக் கேட்டலும் வீமன் கூற்றும்

மாய னிவையுரைக்க மன்னர்பிரான் மெய்மகிழ்ந்து
தேயு வனையான் செயவீம னைனோக்கி
எவ்வா யுதங்கொண் டிகல்பொருவாய் கூறுகென,
செவ்வாயு வின்புதல்வன் வீமசே னன்பகர்வான், 1200

நின்கரத்திற் றண்டொழிய நீடுபடை வேறிலதால்
என்கரத்திற் றண்டோ டிகலுவே னென்றுரைத்தான்
வீமனும் யானும் வினைப்போர் தொடங்குதற்குத்

போர் செய்யும் இடம் கேட்ட போது, பலராமன் விதுரன் வரல்

தாமனே போர்தலம்நீ சாற்றுகெனக் கேட்டான்
அதற்கு மறுவிசனம்[1] அச்சுதனுஞ் சாற்றுமுனம்
மதித்த விதுரனுடன் வன்கலப்பை யாயுதனும்[2]
நண்புடன் தீர்த்து நதியாடப் போனோர்கள்,
பண்புட னங்குப் பரிவாய்வந் தெய்தினரே.
கண்ணன் முதலாகக் காவலருந் தானெதிர்ந்து
அண்ணன் பதத்தை அரிகேசவன்[3] பணிந்து

மான விதுரனையே மார்போ டுறத்தழுவத்
தானு மவரவர்போய்ச் சந்தித்து பசரித்தான்.
ஆடும் நதிப்பேரும் அத்தலத்தின் அற்புதமும்
நாடியெதிர்க் கண்டோர்க்கு நண்பாய் அவருரைத்தார்
முன்னாள் முதலாக மூவாறு நாட்செய்தி
சொன்னான் முகிலனைய துங்கத் திருமாலும்
ஈறு நடந்த வியல்பெல்லாந் தானுரைத்துக்
கூறு தலம்யான் குறிக்குமுனம் நீங்கள்
வந்தீர்க ளிப்போ மலைப்பதற்கு வோரிடந்தான்
சந்தோஷமாய்ச் சொலெனத் தம்முன் றனைக்கேட்டான்

பலராமனிடம் இடம் கேட்க, அவன் கண்ணனைக் கூறக் கேட்டல்

பின்னோன் முகத்தைப் பலராமன் றான்பார்த்து
நின்னாட்டம் நின்மனது நேர்ந்தபடி சொல்லுகென் றான்
பன்னாட் பகையாற் பரசுரா மன்கரத்தால்
மன்னோர்கள் மூவேழ் தலைமுறையாய் மாண்டவிடம்

போரிடும் இடம் கூறல்

தண்சமஞ்சப் பஞ்சகமாம் தானோர் தடாகமுமாய்ப்
பண்சிறந்த ராகம் பயில்தடா கத்தணித்தாய்
பொன்னிலத்துக் கொப்பாய்ப் பொருவிலா நன்னிலங்காண்
அன்னிலத்தி லேசமர்செய் தால்நலதென் றோதினனே.
அந்தப் படிக்கே யனைவோருஞ் சம்மதித்துச்
சிந்தை புளகமுடன் செல்லலுற்றான் அந்நிலத்தில்

---

1 மறுமொழி 2 பலராமன் 3 கண்ணன்

தேரும் கரியுந் திறற்பரியுங் காலாளும்
சாரும் பலருஞ் சலதியெனத் தற்சூழப்,
பல்லிய வர்க்கம் பரவையொலி போலார்க்க
வல்லியம்போற் பஞ்ரவர்கள் வாகனத்தின் மீதுசெல்லத்
தண்டு கரத்தேந்தித் தாள்நடையாய் மன்னர்பிரான்
ஒண்டியாய் நெஞ்சுள் உருகித் தடுமாறி,
எம்பியருஞ் சேர்ந்த யினமெல்லாந் தானிறந்து
வெம்பியே பின்னிறக்க வேதன்[1] விதித்ததுவோ,
என்று தளர்வுற்று இரங்கியெண்ணி யேயிடைந்து
மன்றல் வலம்புரிப்பூ மார்பன் மயங்கிவர

முடிக ளழுந்தி முளரி யெனச்சிவந்த
அடிகொப் பளமரும்ப வண்ணல் நடப்பதனை

துரியோதனன் நடப்பது பார்த்துத் தருமன் கூறுவது

கண்டுதேர் விட்டுக் ககனிடிபோ லத்தருமன்
வண்டுலவு தார்மார்பன் மன்னனைப்பார்த் தேதுரைப்பான்
எம்பியரும் யானுமுந்தன் ஏவுதொழிற் புரிவோம்
தம்பிநீ யோர்குடையிற் றாரணியெல் லாம்புரக்க
வேணுங்காண் மன்னவர்கள் வேந்தனே யென்மொழியை
ஆணமுடன் கேட்டுவகை யாண்டே யனுபவிப்பாய்
இந்துகதிர்த் தெங்கணும் உதித்து வற்றுகினும்
அந்தரமுந் திக்குலகம் யாவும் பொடிந்தாலும்

சொல்லுறுதி மாறுகிலேன் சொன்னபடியே நடப்பேன்
மல்லலுறு மால்கரியாய் மால்தமய னுங்கரியாய்
தந்தையினு மிக்கசிறு தந்தையுமே தான்கரியாய்
இந்தவித மொப்பி யிசைந்துரைத்தேன் தட்டாமல்,
உன்னிதையஞ் சந்தோஷித் தொப்பி யுலகாண்டு
என்னுடனென் தம்பியுமென் னேவலில்வைத் தாதரிக்க
வல்லாயோ மன்னா வணங்கா முடிவேந்தா
சொல்லாய் எனத்தருமன் சொன்னா னொருகோடி

துரியோதனன் கூற்று

என்பொருட்டா லெம்பியரோ டெல்லோரு மேயிறக்க
உன்பொருட்டில் கீழோ வுலகாண் டுயிர்தரிப்பேன்

1 பிரம்மா

சாகத் துணிந்தோர் தனக்கேன் புவியாசை
வாகைப் புயத்தோய் நீமண்ணாளா தேக்கமுற்று
காடு திரிந்துலைந்து காய்கிழங்கால் நாட்போக்கி
வாடி மெலிந்தவர்க்கே வையகத்தின் மேலாசை
இந்திரனில் மிக்கா யியல்பாக வாழ்ந்திருந்தேன்
சுந்தரமாய் வாழ்ந்தேன் சுகித்தேன் புரந்தான்போல்
ஆண்டேன் புவன மடங்க வொருகுடைக்குள்
பூண்டேன் பலபணியும் பொன்னுலகுக் கேகலுற்றேன்
கற்பூரம் பாக்கிலையுங் கந்தமுறு வஸ்துகளும்
பொற்பாக வாய்நிமிரப் போட்டேன் ரசம்பொசித்தேன்

கக்கினேன் தம்பலம்போற் காசினியை யுன்கரத்தில்
விக்க வாயிட்டு விடாய்நீ தவிர்ந்திடென்று
சொல்லி நகைந்துத் துரிதமுட டைந்தான்.

தருமன் நிலை

செல்லுந் தருமன்முதற் சேரவேத் தான்றிகைத்து
குக்கல்வா[1] லெத்தனையாய்க் கோலில்வைத்துக் கட்டுகினும்
நிக்குமோ தன்முடக்கு நீங்கா தொருக்காலும்
என்று அவரவர்க ளெண்ணந்தனி லுணர்ந்து

களம் அடைதல்

வென்றிமால் தான்குறித்த மிக்கநிலஞ் சேர்ந்தனரே
அந்தநிலஞ் சேர்ந்து அவரவர்கள் சூழ்ந்துநிற்க
விந்தைப் புயத்தினர்கள் வீரரிரு வர்களும்

கவசம் புதைத்துக் கலன்கள் பலதிருத்தித்

துரியோதனன் வீமன் கதைப் போர்

துவசப் புயங்கனுடன் துங்கசிங்க கேதனனும்
ஓங்க லிரண்டு வுயிருறுப்புப் பெற்றாற்போல்
தாங்கிய கையில் தடியோ டுருத்துநின்ற
மந்தர மொத்த வயப்புயங்கள் விம்மிடவே
சுந்தர மாகத் தொனித்தார் அரினாதம்

வீமன் வீரவுரை

குந்திமகன், காந்தாரி கொற்றமுடன் பெற்றவனைச்

---

1 நாய்

சந்தமுக னோக்கிச் சாற்றலுற்றா னம்மானை.
கந்திருவன் றன்னையன்று கட்டியபே ராண்மைகொண்டோ
சிந்துரப் புள்தன்னைச் செயித்தவிறற் சேவகமோ

சித்திரசே னன்றனைமுன் தேர்தனிலே கட்டுகின்ற
கைத்திறமோ யென்மேற் கதைகொண் டடல்துணித்தாய்
இடிப்பதுமின் றென்கதையா லின்னுடல மென்னடியாற்
துடிப்பதுமின் றுன்னுயிரு சோர்வது மின்றோ
முடிப்பதுமின் றோகுழலு முடிப்பதுமின் றோசோரி
குடிப்பதுமின் றோநான்நீர் குடிப்பதுமின் றோவெனவே
வீமன் பலகால மிகவுாசு பாராட்டிப்
பூமன்னன் சிந்தை புழுங்க வுரைபிதற்ற

துரியோதனன் கூற்று

மன்னவன் மன்னன் வயவீம னைனோக்கி
என்னடா வாய்வீண் இயம்புதற்கு வல்லாயோ

மிக்கவாய் வீச்சலது வீரரெல்லாந் தான்மதிக்கத்
தக்கதாய் நீயுயித்தம் தான்செய்ய மாட்டாயோ
மேன்மே லுரைப்பதெல்லாம் விட்டுவிட்டுக் கட்டுமட்டாய்
என்மே லடர்ந்து யிகல்செய் தெனதுயிரைக்
கொன்றா லுனதுபுவி கொற்றவர்கள் மெய்க்கவுனை
வென்றா லெனதுபுவி வேந்தரெல்லாஞ் சான்றாக,
விண்டுதேர் ஊரவரும் வில்விசையன் றன்னுடனே,
மண்டமரில் வீறுதுணை மற்றவருங் கொற்றவரும்,
நின்சமரு மென்சமரு நேத்திரத்தி னாற்காண
வன்சமர்செய் வச்சிராயுதக்கதை கொளவம்மி னென்றான்.

துரியோதனனும் வீமனும்

காலில்லாக் கால்மகனுங்[1] கண்ணில்லான் றன்மகனும்[2]
சாலவிடி தடித்துத் தானிடித்த தாமெனவே
முறைமுறை பேசி முரண்வச் சிரக்கதையை
மறமிகுந் துற்றமதில் வவ்வியே தான்சுழற்றி
வெவ்வா ரணங்களொடு வெவ்வா ரணம்போலாய்

---

1 வீமன்
2 துரியோதனன்

செவ்வா னிடிகளொடு செவ்வா னிடிபோலாய்
வரையும் வரையுமெதிர் வன்போர் புரிவதுபோல்
அரியு மரியு மடற்போர் புரிவதுபோல்
தாக்கினார் தண்டுகொண்டு தட்டியெட்டி முட்டியொட்டி,
நோக்கினார் வீரம் நுவன்றார்கள் நுட்பமதாய்

நீல கிரியும் நெடியமக மேருவும்போல்
சால வினையமுடன் றானே பொருதுவதாய்
ஆகாச முட்ட வடர்ந்தெழும்பி யேசுழத்தி
வேகாள மாக விரைந்தே யிருவர்களும்
அடர்ந்து அடர்ந்து அடிப்பார் தடுத்திடுவார்
துடர்ந்து துடர்ந்து சுழற்றிமீண் டேயடிப்பார்,
நாகர் நடுங்க நரர்நடுங்க நாலிரண்டு
நாக மலைநடுங்க நண்பா லகர்நடுங்கச்
சேட னடுங்கச் செகமேழுந் தானடுங்க
ஆடக வெற்பும் அலைய நிலைகுலைய

அண்ட கடாக மகடு முகடுடைய
கண்ட வமரர் கலங்கி வெருக்கொளவே
தாளொலியுந் தண்டினொடு தண்டொலிக்கும்பேரொலியும்
நீளுங்கதை வீச்சில் நேரிட்ட காற்றொலியும்
மேலாட மேலாடி மீயுலக மட்டெழும்பிக்
கோலாகல வீரர் கொக்கரித்துத் தான்குதிப்பார்
ஆக்கரிப்பார் வாயால் அதட்டுவார் கோபமிஞ்சி
நோக்கிச் சிரிப்பார் நொடிக்குள் ளகன்றுறுவார்
மல்ல லுடனே மடித்திதழ்பல் லாற்கறித்துச்
செல்லதெனப் புகையுந் தீயுமென விளிப்பார்

முன்பின் வலமிடமும் முன்குதிப்பர் பின்குதிப்பர்
வன்பி னடித்தடித்து வாங்கியெதிர் முட்டிநிற்பார்
முகடு அகடுடைய முட்டவே தான்கிளம்பி
விகடத் துடன்புவிமான் மெய்கிழிய வேகுதிப்பர்
கறங்கதெனச் சுழற்றிக் கைக்கதை காய்ந்தெறிந்து
பறந்து துடர்ந்துகையாற் பற்றிடுவார் மொத்திடுவார்
விரைந்துதா ளத்துடன்றாள் மேதினியில் வைத்தோடி
பொருந்த வெதிர்ந்தே புடைப்பார் தடுத்திடுவார்
காலொதுக்கி வைப்பார் கறங்காய்ச் சுழன்று.
மேலொதுக்கிக் கண்விழிப்பார் . . . . .,

மலரடி சங்க முழங்கா லூரிடைவய
பலபூண் அணிமார்பும் பண்பார் புயங்களும்
வாய்கதுப்புப் பூரு கன்னமத்த கமே.....
தீய்கடுக்குஞ் சோரி சிதறவே மூளையு.....
கறுத்து கறுத்தடிப்பார் கண்சிவந்து .....:
வெறுத்துப் புடைக்கு கின்ற வீரரிருவர்களும்
சமகட்சி யாகத் தருகா திருவர்களும்,
அமருற்று வொத்து அடல்விளைத்த வேளையிலே

துரியோதனன் வீமனிடம் உயிர்நிலை கேட்டல்

வீமன் முகம்நோக்கி வேந்துரைப்பா னிப்படியே
நாமிருவோ ருஞ்சமரின் நாள்ஊழி செய்தாலும் 1360

ஒருத்தன் றனையொருத்தன் ஊடாடி வெல்லரிது
பொருத்த முடன் புகலுன் னுயிர்நிலையை
நீசொன்னா லுண்மை நிகழ்த்துவேன் யானுமென்று
வாய்சொல்நீ யென்ன மனவஞ்சன் கேட்டிடவே

வீமன் உயிர் நிலை கூறல்

மெய்ம்மைப் புகழ்தரும வேந்தனுக்கு நேரிளையோன்
பொய்ம்மை தனைநாவாற் புகலுவது தீதெனவே
உற்ற சிரத்தி லுயிர்நிலையென் றேவீமன்
சொற்றவாய் மூடுமுனந் துங்கப் பெருங்கதையால்
மிக்க மலைத்தலையில் விண்ணிலிடி வீழ்ந்தாற்போல்
தக்க முடித்தலையிற் றார்வேந்தன் றாக்கிடவே. 1370

அந்த அடியில் அவன்சிரசு தான்றேறி
சிந்தக் குருநிந்தி சிந்தைமிகக் ....
தரிப்பற் றவனிமிசை தான்சோர்ந்து கீழ்வீழ்ந்து,

வீமன், துரியோதனன் உயிர்நிலைக் கேட்டலும் அவன் பொய் கூறலும்

பொருப்புற்று மீண்டெழுந்து பூபாலா வுந்தனுயிர்
நிற்கும் நிலையெங்கே நிகழ்த்தெனுமுன் வஞ்சனையாய்
துற்குணவான் பொய்யாகச் சொன்னான் நுதலியென
வீமன் சினத்துருத்து வீசினா னெற்றியிலே
பூமன்னன் மத்தகமும் பொற்பழிய வேபுடைந்து

மூளை குருதி முகமெங்குந் தான்சளிந்து
சாளைய மற்றுத் தயிரியமாய் மன்னர்பிரான்

நின்றெழுந்து சிங்கமென நேரெதிர்ந்து தான்வந்து
குன்றனைய வீமனுயிர் குன்றவே மற்றோரிடி
வைத்தான் சிரசதனில் மண்டையற . . . . .
மெய்த்தீர மற்றே விழுந்தான் நிலத்தினிலே
மூளை குருதி முகமெங்குந் தான்சளி
காளை புவியிற் கலங்கிக் கிடந்திட,
வீரர் மதித்திடவே வீமன்றனை னோக்கிச்
சூரன் மகன்றுணைவன் சொல்லலுற்றான் னம்மானை.
ஆறிக் களைதீர்ந்து அதற்பினுடற் றெளிந்து
தேறிக் கதைப்போரு செய்யென் றடியாமல்

நின்று மெய்யெல்லாம் நிறைந்தொழுகு சோரியையும்
துன்றிய மூளை துடைத்தே முகமலர்ந்து
பக்கமுறச் சூழ்ந்த பலவீரரைப் பார்த்து
மிக்க தனதுவலி வீரமெல்லாந் தான்பகர்ந்தான்
மன்னன் றனைமதிப்பாய் வல்வீரஞ் செப்பியது
கன்னந் தனிலழற்கோல் காய்ச்சியே வைத்ததென
கேளா முனமே கிரீடிக்கு மூத்தோனும்
மூளாத கோபமுடன் மூளையுஞ் சென்னீர்துடை
தண்டு கரத்தெடுத்துத் தான்முன் னிவனுயிர -
விண்ட தவத்தமென வீமன் . . . . .

பண்டுபோர் செய்யும் படியாகப் . . . . .
தண்டினால் வீரர் சமர்பொருதா ரம்மானை.
வீமன் கதைப்போர்க்கு வேந்தன் மேலாடி

வீமன் தளர்ச்சி அறிந்து அருச்சுனன் கண்ணனை வினவல்

தாமன் சரணந் தனஞ்செயனுமே பாத்து. . . .
என்னகுணம் வீமன் இறைபோர்க்குக் கைதாழ்ந்தான்
பொன்னிணங்கு மார்பர் புகல்புக லென்றேகேட்க,

கண்ணன் குறிப்பால் அருச்சுனனுத்குத் துரியோதனன் உயிர்நிலை கூறல்

இப்போது யானு மியம்பல்தகாது இறைவன்
தப்பாயு யிர்நிலையைத் தானறைந்தான், மாவிரகி

என்னுயி ரன்னா யிறைவனுக்குத் தான்வீமன்
துன்னு பலமிகுந்த சூரனினித் தோக்கரியான்

அங்கவன் தூரில் அவனுயிர்ப்பு நிற்பததில்
சிங்கக் கொடியோன் றெறிந்தடித்தால் மாபாவி
சாவனென மாயன் சைகைசெய்ய வில்விசையன்

விசயன் வீமனுக்குக் குறிப்பால் உணர்த்தல்

தேவர் பதிகுமரன் திண்வீமன் கண்காண
நின்று குறிப்பு நிலைகாட்டு மவ்வளவில்,
வென்றி விரகுடைய வீமன் அயித்தறிந்து
சீற்ற மிகுந்து திறத்தூரு லெக்குலைத்து,
கூற்றன்னான் மேன்மேற் கொதித்துக் கொதித்தடிக்க
அங்கைக் கதைவலியால் ஐந்தடியை யாறடியை
துங்கமிகு மன்னன் சுரர்மதிக்க வேதடுத்தான்.

மீறிமீ றிச்சினந்து வீமன் அடித்தவடி
ஆறடியை யேழடியை யண்ணல் தடுத்திடவே
தேவர் மலர்மாரி சீர்வேந்தன் மேனியிலே
ஆவலுடன் சொரிந்திட் டார்கள் ளும்பரெல்லாம்
அரியை யுயர்த்தோ னடித்தவடி தட்டியவன்
உரிய புயமார்பு ஊறுபடக் கூறுபட
செந்நீ ரொழுகச் சிகிக்கொடியோன் றானடித்தான்
தண்ணீர்மை குன்றித் தலத்திலே வீழாமல்

வீமன், துரியோதனனின் தொடையில் அடித்தல்

இதைய வலிகொண் டெறுள்[1]வீமன் வெஞ்சினமாய்
கதைகொண் டலன்றுடையிற் காய்ந்தடித்தா னம்மானை.

பேரிடி யொத்துப் பிலவா னடித்திடவே
ஊறொடிந்து தானயர்ந்து வுற்றவனி மேல்வீழ்ந்தான்
மாயு மளவு மனவிரகும் வஞ்சனையும்
தேயுகின்ற சாதனையுஞ் சேரக்குடி தரித்த
பாவி குலயீனப் பாதகா வென்றுருத்து
தாவியே மார்பு தகர மிகத்தாக்கி

1 வலிமை

நெற்றி சிதற நேரியவாய்க் கதுப்பிற்
குற்றினான் வாரணத்தைக் கொல்லுமத கேசரிபோற்
முடியை யிருத்தி முகத்தி லுறத்தாக்கி
அடிவைத் துறத்துவைத்து அங்கிரியி னால்மிதித்துத்

துடையை யடர்ந்தொடித்துத் தோளொடியவே முறுக்கிக்
கொடிய னெனஇடையைக் கொக்கரித்துந் தான்முறித்துப்
புண்ணின்மேற் புண்ணாகப் போதவலக் கழித்து
மண்ணிலயர்ந் தேகிடந்த மன்னன்மிகு கோபமுடன்

விழ்ந்த துரியோதனன் கண்ணனை இகழ்தல்

மாடாடு மேய்க்கு மடையா யிடைமதியால்
யேடா கூடமா யெனக்கே முழுப்பகையாய்
நாடோறும் தீங்கு நடத்தியதும் போதாமல்
கேடாக ஈறுங் கெடுக்கத் துணிந்தனையோ
அற்ப ரெனினு மறிவிப்பரோ வுனைப்போல்
விற்பனன் வீரன் விசையனைக்கொண் டேகுறிப்பு

தோணும்படி விடுத்தாய் சுத்தாங்க மாய்க்கெடுத்தாய்,
மாணெண் சமர்தோறும் வல்வினையே நீமுடித்தாய்,
எக்குலத்துந் தாழ்வாம் இழிகுலத்தோன் ஆதலினால்
மிக்குனீ செய்வினைபோல் வேறொருத்தர் செய்வாரோ,
தலத்தின் குணங்காட்டுந் தண்ணீரும் வித்ததுபோல்
குலத்தின் குணமதெல்லாங் கோக்குலமுன் காட்டினையே.
மன்னர்சுமை நாற்றுமுடி மன்னர்முடிக் கொப்பாமோ
மன்னர் கதித்தாரேல் மன்னவரோ டொப்பாரோ
வாழ்வோரைக் கண்டு மனம்பொருந்தா மாபாவி
தாழ்வாய் நினைத்தபடி தான்நீ முடித்தாயோ

என்று வசைகூறி யிகற்பொருவே னின்னமென்று

எழக்கண்ட துரியோதனனை வீமன் முடியில் உதைத்திடல்

அன்றெழுந்தான் கண்டே யனற்சகா யன்குமரன்
இன்னமுனக் கேன்வா யெனத்தா மரைப்பதத்தால்
வன்ன முடியுடைய வானிடிபோற் றானுதைத்தான்.
திண்ணிய சீர்த்தி சிறந்த செகதலத்தில்
புண்ணிய ராசி புகழ்தம்பை நாடதிபன்
மங்கைய பூபன் மனமுனிந்து மாற்றாரைப்

பங்கயப் பூத்தாளால் பதைக்க வுதைப்பதுபோல்
மன்ன னுடலை மதியாமல் மேன்மேலை
சின்னம் படவுதைத்தான் சிங்கக் கொடிவீமன்

உதைப்பது கண்டு பலராமன் சினத்தல்

கண்டு வெகுண்டு கலப்பைப் பெரும்படையான்
மண்டு சினமாக மாயோனையும் பார்த்துத்
திரைய தெனவிருந்தோர் சேரவே தான்றிகைக்க
உரைகள் மிகப்பொருதி ஓர்தொடராய்ச் சொல்லலுற்றான்.
இருவரு மொத்து யிகற்பொருது மாகவத்தில்
ஒருவ ரதுக்கு உபசாரஞ் செய்வதுண்டோ
வஞ்சகமாய் வஞ்சனையாய் வன்போர் முடிப்பதுண்டோ
நெஞ்சிரங்காத் தீங்காய் நினைத்தல் பழுதலவோ
ஈரமறச் சைகையறிந் தேவீமன் றன்கதையால்
ஊருவினிற் றாக்குமுதல் ஓடியதே யென்னாவி

கைக்கதை வீரர் கடிதடத்து மேலொழிய
மெய்க்க மறக்கீழ் விரவியடிப்ப துண்டோ
முடியாற் சிவந்தகழல் மூர்த்தி மணிமுடியை
அடியாற் றுவைப்பதுவோ ஆமோ வெனக்கொதித்து
உன்னங்க மங்க வுயிரோடப் புடைப்பனென்று
மின்னு முசலகத்தை மேவியெடுத் தோடினனே.

கண்ணன் முன் சென்று தடுத்து விளக்குதல்

மதிய மிரவியுடன் வன்போர்க்கு யேகுதல்போல்
சதியிற் பலராமன் றான்முனிந்து செல்லுகையால்
விதியின் தகப்பன் விசையனுயிர் நண்பானோன்
இதய மலர்தோறு மேயமர்ந்த மாமாயன்

பதும மொழியாலே வன்சீற்ற மாற்றினனே.
அனிலன் மகனு மரவக் கொடியோனும்
முனிவு தவறா முடியாப் பெரும்பகைஞர்
மன்னவையிற் பன்னாளே வஞ்சினமுந் தானுரைத்தான்
சொன்னதுண்டு அப்போ துரோபதையும் வன்சாபம்
வில்லா சரிமுன் விளம்புங் கொடுஞ்சாபம்
பொல்லா தவன்மேற் பொருந்ததுண்டு ஆதலினால்,

தப்பாது வீமன் தடியா லவன்மடிதல்
இப்போது நீங்களிருவர் புனல் படிந்து
மீண்டீர் வயிர வினையாகப் பஞ்சவர்மேல்

பூண்டாற் கொடிதுசும்மா போகாது ஆகாது
தயாதியின் பகையாற் தங்களிலே தாங்களதாய்
மாயாத வீரர் மறங்கொண் டமர்பொருதி
தெய்வநடு வாகையினாற் செய்தவர்கள் செய்தீமை
யெய்தி மடிந்திறந்தார் ஈறாய் முடிந்ததற்பின்
பின்னு முரசாய்ப் பிலன்கொண்டு யாம்பொருதல்
நன்னய மன்று நமக்கேது காரியங்கள்
அன்னவர்க ளோடுபோர் ஆமா றவர்க்குரிய
பொன்னிலத்துக் காசைகொண்டு போராட லாயிருக்கும்
மாறா தவன்பகைக்கு மாறேந்து வதொழிந்து
வீறான சீற்றம் விடும்விலகு மென்றுரைக்க

பலராமன் தெளிந்து நீங்கல்

மாய னுரைக்கு மறுத்தொன்றுஞ் சொல்லாமல்
நேயமுடன் பத்திரனும் நின்றதொரு சாத்தகியைக்
கூட அழைத்துக் கொலைக்களத்தை விட்டகன்று
சேடின் றுவரைநகர் சேர்ந்தனர்கா ணம்மானை.

துரியோதனன் குற்றுயிராய்க் கிடத்தல்

அரலத் துசனுடலில் அற்பவுயிர் நிற்பவுடல்
குருதிப் பெருந்தடத்திற் கோலுங் ககநிழலில்
மாய்ந்த வுடற்போல மயக்கம் பெரிதாகிச்
சாய்ந்து கிடந்தான் றரணியே ழும்புரந்தோன்,
மைந்திற் பெரியசண்ட வாயுகுமா ரன்சமரால்

நைந்துமன்னர் கோமான் நடுங்கி அயர்ந்தளவில்
பூமழை சாலப் பொழிந்தே புலவோர்கள்
வீமனையும் வாழ்த்திமிக மெச்சினர்காண் அம்மானை.

கதிரவன் மறைவு

கரமா யிரச்செங் கதிரோன் குடபாலில்
விரைவாகச் சென்று விழுந்தான்காண் அம்மானை.

அனைவரும் பாசறை அடைதல்

சென்னி முதலாகச் சீவனுட னேயிருந்த
மன்னர்கள் யாரும் மகிழ்பாசறை யடைந்தார்.
ஈறு முடிவு யெவர்க்கு மியம்பாமல்,
வீறசுபத் தாமனுட வெம்பகையைச் சிந்தையுன்னி,

பஞ்சவரை பாசறை புகாது, வேறு சோலைக்குக் கண்ணன் கொண்டு செல்லல்

மானமுற்ற பஞ்சவரை மயோ னுபாயமதாய்க்
கானகத்திற் கொண்டொளித்தான் காயா மலர்நிறத்தான்
வாயு புதல்வன் மறவச் சிரக்கதையால்
தேயு வனையதிரி யோதனன் அவிந்த

செய்தி அறிந்த அசுவத்தாமன் செயல்

சேதியைக் கேட்டுச் சிரசிலே கையேற்றிச்
சோதியருள் பெற்ற துரோணன்மக னோரிமைப்பில்
பேரிரைச்ச லாகப் பெருகவே தானிரைந்து
போரில்மிக்க மன்னவர்கள் பூபதியை வந்துகண்டான்,
உறக்கம் பெரிதாய் உணர்வோ டிருப்பவுயிர்
துறக்கந் தனைநோக்கிச் சோர்ந்து கிடப்போனைப்
பாத்தான் திகைத்தான் பகைத்தான் விழிநீர்கள்
ஊத்தாய்ச் சொரிந்தான் ஒழுகினான் தீமெழுகாய்
தந்தை மரித்தவந்நாள் சஞ்சலியா நெஞ்சுடையான்

அசுவத்தாமன் கூற்று

சிந்தை மிகவுருகித் தேறாத சிந்தையனாய்க்
குரவர்மொழி மறுத்த குற்றத்தார் சொல்லுறுதி
கரவுற்று மாறியதால் காவலனே யிப்பாடு
பட்டா யலதுவுன்னைப் பாருலகில் வெல்வதெவர்
முட்டாளாம் வீமன் முருக்கவுனை வல்லானோ
சீதரன்முன் னேவிரகு செய்ததறி யாதெனையும்
பேதலிக்கச் சிந்தைப் பெருகவே தான்முறித்துப்
பண்டுள்ள சேனா பதிப்பட்டந் தான்மாற்றி
விண்டு விரகால் மிகவென் மனமுறித்தாய்.

போனதை மேன்மேற் புலம்பிப் புரோசனமேன்
தானெனக்கு வுத்தாரந் தந்தால் விடிவதன்முன்
இடியிறுத்த வெற்பா யிகற்பஞ் சவர்கடலைத்
துடிதுடிக்க மெய்யுந் துகள்செய்வேன் சேனையையும்
என்னவே மன்ன னிசைந்து விடைகொடுக்கத்

அசுவத்தாமன் கிருபன் கிருதவன்மன் மூவரும் பாண்டவர் பாசறை செல்லல்

தன்னிகரி லாவசுபத் தாமனவன் மாமனுடன்
வல்ல விறற்கிருத வன்மா வுடன்மூவர்
நல்ல தெனவே நடந்தார் சதிப்போராய்
மிகுந்த மதத்த வெறிவா ரணம்போலப்
பகுத்தறிவ தன்றியொன்றும் பாராது தானடந்தான்

பாடி காவற்பூதம் தடுத்தல்

பாடி தனைக்காக்கும் படியாய்ப் படியளந்தோன்
ஆட லுடன்வாய லமைத்த வொருபூதம்
வினையுற்று மூவர் வெகுண்டுவர வுருத்து
முனையுற் றெதிர்ந்தவர்கள் மூவர்சிலை தோளித்து
இருவர்க்கு முன்னா யெதிர்ந்த பரித்தாமன்
வரிவில் துகள்படுத்தி மாற்றாரை நீறாக்கிச்
சென்னாய் மறியிறஞ்சி சேரக் கடித்ததால்
என்னா வுடற்றசைக ளெல்லாம் நகச்சூலம்
கொண்டுதேங் காய்திருகுங் கோலமெனத் திருகி
விண்டுவிட்ட பூதம் விரட்டியதே வெள்ளெலும்பாய்,
ஆற்றாமற் காற்றோ டலைந்தெழும்பும் பஞ்சாக
மாற்றார்கள் நெஞ்ச மறுக்கமுற்று வோடினரே
ஓடி வடதருவி லூற்றிருந்து மூவர்களும்
வாடி மெலிந்து மயங்கிப் பரதலித்து
எத்தனை கோடி யிதையத்தி லெண்ணிச்
சித்தங் கலங்கித் திகைத்திட்டு உயிர்ப்பெறிந்து
எஞ்சு நிருபனுயிர் நிறுத்தி யிவ்விரலிற்
பஞ்சவரைக் கொல்லும் படிவஞ் சினம்பகர்ந்து
வந்தோ மகமேரு வான்குறள்போ ருக்குடைந்து
நொந்தோ மென்னென்று நுவலுவோ மரசுமுன்போய்
சென்றோரைப் போலாது செப்புவது யித்தையிலே

அசுவத்தாமன் சிவனை நோக்கிச் செபித்துக் கருவி பெறல்

செற்றாலும் நன்றெனவே தேறிப் புனற்படிந்து
அஞ்செழுத்தைச்[1] சிந்தை யழுத்தி யருந்தவசு
பஞ்ச முகத்துப் பரமன்[2] தனைத்துதித்தான்.
ஆதரவு நீயென் றரனடியைத் தான்துதிக்க
மாதயவு கொண்டுகந்து வந்தான் உமைபாகன்[3]
ஏறுடன் வந்த இறைவன் அடிதொழுது
மாறு பகையறுக்க வன்படையொன் றீந்திடென்றான்
சொன்ன வடியிற் சுடர்வாளது ஒன்றீந்து
பின்னு சடையின் பெரியோன் மறைந்தனனே.
ஆதி யளித்த வருணச் சுடர்வடிவ
ஏதியை மற்று மிருவோருங் கண்டுகந்து
மூவர்களும் மொத்து முனைந்தே பொருதினும்நாம்
சென்றார்கள் முச்சுடர்போற் றேலர் நடுநடுங்க

பூதம் அகன்றோடல்

கன்றாமலே பாடு காத்த பெரும்படையும்
பூதமும் வந்தடங்காப் பூதநா தன்கொடுத்த
ஏதி யினாலே யிறந்தோர் களல்லாதோர்
தெறிகெட்டு னாலு திசையும் பறந்தோட
பறிபட்டுப் பூதம் பயந்தே பறந்ததுவே
பாடிகா வற்செய் படையி னுடன்பூதம்

இருவரை வாயிலில் இருத்தி அசுவத்தாமன் உட்சென்று, பாண்டவர் படைத்தலைவனைக் கொன்று இளம் பாண்டவர் தலையைக் கொய்தல்

வாடிப் பறந்ததற்பின் வாய லிரண்டினிலும்
மாமனுடன் கிருத வன்மனையுந் தானிறுத்தித்
தாமனந்தப் பாடியினுள் தான்புகுந்தா னம்மானை.
மூவாறு நாளாய் முனையாய் முதுகுதராக்
கோவான வில்வீரன் கொற்றவன் சேனாதிபதி
தன்னைக் கறுவித் தடங்க ணுறங்குகின்ற

---

1 நமசிவாய என்னும் மந்திரம்
2, 3 சிவன்

மன்னைக் கிரணமணி மகுடப் பொற்சிரசை
வெட்டினான் அப்போ வெருண்டவருஞ் சத்தமதால்

பட்டதா ரென்று பதறிச் சிகண்டிமுதல்,
உத்தமோ சாவு முதாரமன் முதலோர்கள்
சித்தம் வெகுண்டு செருமினார் பஞ்சவர்கள்
வந்தோ ரடங்க மகுடத் தலைதலையாய்
பிந்தாதங் கெங்கும் பெருமலைகளாய்க் கூய்த்தான்.
மற்றும்மற் றும்வந்து மலைந்தோ ரடங்கலையும்
முற்றுமுற்றுஞ் சாக முருக்கினான் ஈரமிலான்
பஞ்சவரைத் தானாடிப் பாடியெங்குந் தான்தேடிச்
சஞ்சவித்து வாற தறுவாயி லைவர்சுதன்
அச்செலாம் பஞ்சவரே யாகத் துயில்புரிந்தார்

பச்சைமா லைவருடள் பாடிவிட்டுப் போனதுவும்
மாமன் றலைதுணித்த வாறும் பரியசுபத்
தாமன் வினையாகத் தான்வந்தது மறியார்,
அக்கினியில் வந்தாள் அருமையுடன் பெற்றெடுத்த
மிக்கசுத னைவோரும் வீறாய்த் துயின்றோரை
கள்ளுண்டான் போலக் கருத்தி லறியாமல்
அள்ளுண்ட வாளா லரிந்தான்கா ணைவரையும்
பாதகருக் கெல்லாம் பதியாய் முதன்மையுள்ளான்.
சாதகமாய் நித்திரைசெய் தாரைத் தலையறுத்தான்
ஐந்து சிரத்தினையும் அந்தந் தனிலெடுத்து

மைந்துடையான் மற்றோரை வாளா வறுத்தாற்று
வஞ்சச் சதிப்போராய் மாத்தாமன் செய்கொலையால்

பாசறையில் பேரோலி எழல்

மிஞ்சவே பாடியெங்கு மேயோதை பொங்கியதால்
முன்னசுவத் தாமன் முதுகிடவே பற்பலகால்
தன்னைவென்ற வில்வீரன் தாக்கிப்பூ மார்பகத்தான்

சோழன் அசுவத்தாமனை எதிர்த்தல்

பொன்னி நதியான் புலிக்கொடியான் நேரிவெற்பன்
சென்னியெனு மன்னர்பிரான் சீறிமீ றிக்குமுறி
என்னடா வுன்வீர மித்தனை நாட் செய்யாத
கள்ளுக் குடித்தான்போற் கைமையாம் பெண்போல

நள்ளிருட் குளன்போல் நடத்துவது நாயனையராய்

உன்னைப்பார் உன்றிறம்பார் உன்வீரி யந்தனைப்பார்
நின்குலத்தின் வன்மை நிலைகெட்டு நீதிகெட்டு
மன்குலத்தோர் பாராட்டும் வன்படைகள் கையேற்றுப்
புன்குலத் தோரும் புலையர்களுஞ் செய்யாத
நன்கிலாப் போராக நள்ளிருளி னித்திரையில்
பேதை முதலான பெண்களெல்லாந் தானகைக்க
போதக் குலைகள் பொறுக்கத் துணிந்தனையே
பற்கெஞ்சிப் பிச்சை பலபேரி டத்தேற்று
நிற்குஞ்சின் னச்சாதி நின்சாதி யாதலினால்,
மன்னரோ டொத்திருந்து மாமகுட முஞ்சூட்டி

மன்னிலமு மாண்டிருக்க வைத்தால்ம தாந்தமிஞ்சி
நீதிநெறி பாராமல் நின்மனதுக் கேற்றபடி
காது கொலைசெய்யக் கருதினா யென்றுருத்துச்
சீரியனுஞ் சேனைகளுஞ் சேனா பதிப்பெயரும்
ஆரியனைக் கோலி யமர்பொருதா ரம்மானை.

அசுவத்தாமன் சோழன் போர்

காவிரியான் விட்ட கடுங்கார் முகக்கணைகள்
மாவின் முகத்தான் மயிர்க்கால் தொறும்பரவி
மெய்மாங் கிஷங்களெல்லாம் வீழ அறுத்தெறிந்து
பொய்மாங் கிஷங்களெல்லாம் போக்கியெலும் பாக்கியதே
தடிக்குப் பெரியமிடாத் தாணுண்டோ சங்கரன்முன்

கொடுக்குஞ் சிவவியத்தைக் கொண்டறுத்தா னம்மானை.
இரவி குலத்தானும் மெண்ணிறந்த சேனைகளும்
புரவிமுகத் தான்[1]படையாற் பொன்றினர்கா ணம்மானை.
ஏழவாறு பூமி முடிமன்னர் சேனைகளும்
கோவாரி யன்குமரன் கொன்றே கொலைபரப்பி
என்றும் பகற்போரில் எண்மடங்க தாய்முருக்கி
வென்றை வர்பாடி வெறும்பாடி தானாக்கி
ஆயு முனிகுமர னாரபா ரத்தோடு
வாயல் தனிலிருந்த வல்லோ ரிருவருடன்

1 அசுவத்தாமன்

மூவரும் துரியோதனனிடம் சென்று இளம் பாண்டவர் தலைகளைக் காட்டல்

மூவரு மொன்றாய் முரண்கொண்டு வெற்றியுடன்

தேவர் திகைக்கச் சிறுவர் சிரந்தூக்கிக்
குருவின் குமரன் குருகுலத்தோன் பாலடைந்து
பஞ்சவரும் பஞ்சவர்கள் பாளையத்தி லுள்ளோரும்
துஞ்ச வறுத்தெறிந்தேன் சூரர்தலை ஐந்திதென
வைத்தான் சிரசதனை மன்னர்பிரான் றான்பார்த்துப்
பொய்த்தான் சிரசிதல்லப் புத்திரர்கள் சென்னியென்று
தாதை சிரம்நிகர்க்குஞ் சந்ததிகள் சென்னியிது

உண்மை கண்டு துரியோதனன் இரங்கல்

ஏதமி தன்றோநீ யென்னநினைந் தென்னசெய்தாய்
பாரத மென்னும் பதினெட்டு னாள்வரைக்கும்
வீரர் தளத்துடனே வெம்பூசல் செய்ததில்லை

எக்குற்றங் கண்டு யிதன்மேல் மனம்வயிரம்
முக்குற்றந் தான்தீர்ந்த மூர்த்திக்கீ தேற்றிடுமோ
கன்னமத மாப்போன்ற கன்னப் பரிசையுள்ள
சின்ன வயதின் சிறுவர் சிரமறுத்தான்
தக்க குருகுலத்திற் தக்குங் குலக்கொழுந்தை
தொக்கெனவே வெட்டிவந்தாய் சூரமோ சேவகமோ
இரண்டு திறத்தினர்க்கு மேற்ற வருமருந்தாய்
பொருந்த விருந்தப் பெரும்பூசா பலப்பொருளை
தேடக் கிடையாத தெகுட்டாத தெள்ளமுதை
ஆடற் குருகுலத்துக்கு ஆதார மாமணியை

வித்தாய்க் குருகுலத்தின் மிஞ்சியே தானிருந்து
எத்தேச காலமுமே யெள்நீ ரிறைக்கவல்ல
சேயின் சிரசறுத்தாய் செய்தபல னிவ்வளவோ
தீயினுந் தீயகொடுந் தீமைநீ செய்ததென்கொல்
அன்னங் கொடுத்த வரச ரகங்குளிர
சொன்னபடி முடிப்பார் சூரனெனப் பேரெடுத்தோர்
நீசெய்த தெந்தன் இதையங்கள் வெந்தெரியத்
தீசெய்த தொத்தாய்நீ தீக்குலந்தோன் ஆகையினால்
கங்கை மகன்முதலாய்க் காவலர் சுற்றத்தோர்கள்
பொங்கு குலத்தின் புதல்வ ரிளைஞோர்கள்

காதலர்க ளங்கவர்கள் காதலர்கள் மிக்கோர்கள்
சேதமுறச் செற்றதிலுஞ் சிந்தைதளர் வுற்றறியேன்
என்சிந்தை புண்ணாக்கி யீர்வாளாற் தாக்கி
வன்பின் எரிமருந்தும் வைத்திட் டழல்வார்த்தாய்
உற்றவன்நீ யென்று வுனைச்சேர்த்தன் னங்கொடுத்துப்
பெற்றபலன் என்போல்யார் பெற்றுள்ளார் பேருலகில்
என்றா னுடலம் எரியின்மெழு காயுருகித்
துன்றா ரழிவிற் துடித்திடுமோராப் போன்றான்
துக்கமெல்லா மொன்றாய்ச் சுரந்தொழுகும் வெள்ளமென
அக்கமெல்லாங் கண்ணீரே யாறாக வோட்டிவிட்டான்

துணுக்கித் துணுக்கிச் செவியிலே கையைவைத்தான்
மணிப்பொற்பு மிக்கான் மைந்தர்தலையைப் பார்ப்பான்
என்குலத்தும் இச்சேய் இருந்துதோ வென்றுரைப்பான்
தேறுவதெவ் வாறெனவே சிந்தையுரு கிச்சோர்வான்
பேறு சுதனில்லார் பெறுவரோ மோட்சமென்பான்
இனிப்போ ரிலைநம் மிருவர்க்கும் பேரெனவே
தனிச்சொல் நடுவுரைக்க நன்றென்று சம்மதித்தேன்
பன்னாளெல் லாங்கொடுமை பண்ணினதும் பத்தாமல்
இன்னாளு முன்மொழியா லேயுறுதி தான்மாறி
தான்பெற்ற பேறென் றலைமுறைக்குத் தான்போதும்

கான்பெற்ற எவன்றீக் கடன்கழிக்குஞ் சேயறுத்தாய்
ஞாயந் தவறி நடுத்தவறி நானலைந்தால்
நீயென்ன செய்வாய் நினைவெறுக்கக் காரியமேன்
ஆற்றிலே கட்டிவிட்ட அந்நாள்இந் நாள்வரைக்கும்
சாற்றொணா வஞ்சனைகள் தான்செய்தே னானதுண்டோ
எனகுற்ற புத்தி யிசைத்தோர்க ளைவெறுத்தேன்
கனக்கக் கெடுப்போர்க் கவலு மொழிகேட்டேன்
கங்கை மகனைக் கனுஷ்டர்களைச் சேயர்களைத்
துங்கச் சிலைமுனியைத் தோலாமு தலாய்த்தோற்றேன்
எல்லா மிழந்ததற்பின் ஈறுசுத ரைவரையும்

பொல்லாத சிந்தையினாற் புத்தியிலாதே தோற்றேன்.
என்றுண்டு இனிமேலாய் எல்லாத்தையு மிழந்தேன்.

அசுவத்தாமன் முதலியோரைத் தவம் புரிய ஏவினான்

மின்னுண்ட செவ்வேலாய் வீரர்சி காமணியே

இன்னாள் வரைநீ யிகத்திலே செய்பவமும்
பொன்னான தெய்வப் புதல்வோர் கொலைப்பவமும்
நீங்கும் படியாக நின்மனதுக் கேற்றபடி
பாங்கினுடன் தவசு பண்ணேகென வுரைத்தான்
மன்ன னிவையுரைக்க மற்றொன்றும் பேசாமல்
தன்னில் விசாரமுற்றுத் தார்வேந்தன் சொற்படியே,
மாமனுடன் கிருத வன்மனுடன் சுவத
தாமனுடன் மூவர்களுந் தானகன்றா ரம்மானை.

செய்தியைப் பெற்றோர்க்குரைக்குமாறு சஞ்சயனை ஏவல்

வெஞ்சமுடன் கண்ணீர் மிகவொழுக வேந்தர்பிரான்,
சஞ்சய மகாமுனிவன் தன்னுடனே சேதிசொல்வான்
ஆயோ டயனும் அயர்ந்துஇரங்கி மாளாமல்
தூயோனே வண்மைச் சுருதிமொழி யாற்றேற்றி
ஆதரவு சொல்லவுனை யல்லாது வல்லரெவர்,
போத மெஞ்ஞானம் புகட்டவல்ல புண்ணியனே
வன்னெஞ்சான் நூற்றுவரு மாண்ட துயர்நீக்கி
தன்னெஞ்சுக் கானதிருத் தம்பிமக்க ளோடொழுகி
எங்களினும் பன்மடங்கா யெண்ணியே பஞ்சவரைத்

தங்களுக் குற்ற தனையராய்த் தான்பொருந்திச்
சூழ்ந்த துயிர்வயிரத் துன்பங் களும்நீங்கி
வாழ்ந்தே இருக்கும் வகையா னுரைத்தனன்பாய்
ஆண்ட பெரியோர் அறிவுசொல்லத் தான்மாறி
வேண்டி வினைசெய்தேன் வெகுசேதம் பண்ணிவைத்தேன்
முளைக னிமைந்தெரிந்து மோசப் படுவதுபோல்
இளைஞர் புதல்வர்க்கினை யெல்லாத் தையுங்
கொடுத்தேன்
என்னாலே வந்த விர்தீனம் ஐவர்களைச்
சொன்னாற் பவமீ சுரனறிய வென்றுரைத்து
ஐவ ரொழிய அரிய விருதிறத்து

மெய்வல்ல வர்களெல்லாம் வீய்ந்தொழிந்து போனமையால்
என்ன வரசாட்சி யினிமேலாய்ச் செய்வதைவர்
மன்னிலமை யெல்லா மடிந்தொழிந்து போனமையால்
பூமி புரக்கப் பொருந்தாமல் ஐவர்களும்
தாமறுத்து விட்டால் தரணி யவதிபுறும்

ஆகையால் பூமி யலையா விதமாக,
வாகைசே ரைவர் மனது தனைத்தேற்றி
வையக மெங்குமதி வெண்குடை நிழற்கீழ்
ஐய மறத்தருமன் ஆள மனமகிழ்ந்து,
கண்காட்சி பொங்கக் களிகூர்ந்தால் கார்பொழிந்து

மண்காட்சி பொங்கும் மகிமாது வாழ்ந்திருப்பள்
ஈதலது தங்கள்நெஞ்சி லீரமொழிந் தேயிடறில்,
பூதலமு மங்கும் புகழ்மாயுந் தாங்களுமே
சந்ததி யின்றித் தடுமாறிக் கெட்டலைவர்
நந்தி யிறந்தோர்க்கும் நற்பதவி கிட்டாது
என்பேரி லன்பு யிருப்பதுவே மெய்யானால்
அன்பாக ஐவரையு மாதரித்து நாற்றுவராய்
எண்ணிப் பொருந்தி யிசைவாக வொத்தொழுகி
மண்ணைப் புரக்கும் வகையான் உரைத்தனென்று
சொல்லென்று தாரிற் றுரியோ தனன்பகர்ந்தான்.

நல்லென்று சஞ்சயனும் நன்னகரி போயடைந்தான்

துரியோதனன் இறந்து பொன்னுலகு புகுதல்

மன்னிலம் விட்டு வணங்கா முடிவேந்தன்
பொன்னுலகு தான்காணப் போகலுற் றானம்மானை.
வரிகள் மொகுமொகென மாறா தொலிபரவு
தெரியும் வலம்பூரிப்பூந் தேன்மா லிகைமார்பன்
உம்பரா மாத ரோர்கோடி பேரெதிராய்ச்
சம்பிரமம[1] தாகவந்து தான்தயவா கக்கூட்டி
இன்னி லத்திலே வுடலமே கிடக்கவீரருரை
பொன்னிலத் திற்சீவன் புகுந்ததே யம்மானை.

அசுவத்தாமன் முதலியோர் தவஞ் செய்யச் சென்று வியாசனைக் காணல்

வின்முனிவன் தன்சேயு மேவு மிருவர்களும்

மன்மொழிந்த வெஞ்சொல் மனது சுடச்சுடப்போய்
வேதனில் மிக்க வியாசன் சரண்தொழுது
சாதமுடன் பஞ்சவர்கள் தன்வலியுந் தன்செயலும்

---

1 உடற்பணிவு

காந்தாரி மைந்தன் கழறியதும் மாண்டதுவும்
சேர்ந்தோர் வியாசருக்குச் செப்பினர்கா ணம்மானை.

செய்தி அறிந்த வியாசன் செயல்

முன்னே யறிந்த முறைஞான வேதமுனி
இன்னோர் வரலாறு இயம்பியதெல் லாங்கேட்டு
மகிழ்ச்சியு மின்றி மனச்சலிப்புத் தானுமின்றி
இகழ்ச்சிப் புகழ்ச்சியிலை யேதுமன்றித் தானுருந்தான்.
சலதி தனக்குத் தளர்த்தி வளர்த்தியுண்டோ

வலதின் பெரியோர்க்கு வாழ்வுதாழ்வு ஏதுமுண்டோ
ஆதலால் தாமனுடன் அம்மானைய்யு மழைத்துத்
தீதறவே யிவ்விடத்திற் செய்யுந் தவமெனவே
உத்தாரஞ் செய்து வுடன்றுணையாய்க் கூடலந்த
வித்தார மான லிறற்கிருத வன்மனையே
எகென்று உத்தாரம் ஈமீய்ந்தவனைத் தானனுப்பித்
தாகமுடன் வேதமுனி தன்சார்பி னில்அணித்தாய்
வைத்தார் கிருபனையும் வல்லசுபத் தாமனையே
உய்ந்தோம் எனவங்கு உறைந்திருந்தா ரம்மானை.
இருவர்க ளுந்தவத்தில் எய்தி யினிதிருப்பக்

திருதராட்டிரனுக்குச் செய்தி கூறலும் அவன் நிலையும்

கருதிய சஞ்சயனுங் கண்ணிலான் காந்தாரி
பக்க லடைந்துமகன் பண்பாயு ரைத்ததெல்லாம்
திக்குத லன்றியுரை செப்பினன்கா ணம்மானை.
நூறுசுதனும் நொறுங்கிய சொற் றான்கேட்டு
வீறு குலைந்து விழுந்தலறி மெய்மறந்து
கண்ணிலான் தன்னுடனே காந்தாரியுங் கலங்கி
மண்ணின்மேல் தான்புரண்டு மங்கி நிறங்குலைந்தான்
முன்சேனா விந்து முடிந்தநாள் ஆதியதாய்த்
தன்சீர் விழிமடைநீர் தானோடல் மாறாதாய்
ஈறிலே மன்னன் இறந்தான்எனும் சொற்கேட்டு

ஏறிடிவீழ் சர்ப்ப மெனவயர்த்தா ளம்மானை.
வாயு வளித்த மகன்திண் கரப்படையால்
தீய புதல்வரெல்லாஞ் செற்றிறந்த சொற்கேட்டு
வருத்து மனவயிர முட்கருத்தி னுட்பொதிந்து
அக்க மிரண்டில்லான் அமுதான் அலமலந்து.

துக்கம் பெரிதாகச் சோபித் தயர்ந்தனனே.

பாண்டவர் நிலை

இப்பா லிவர்கள் இரங்குங்கால் மாமாயன்
துப்பாக னவலர்செயல் தோன்ற லெடுத்துரைப்பாம்
அன்னாள் புலர்ந்து அருக்கன் குணகிரியில்
தன்னா யிரங்கதிருந் தான்பரப்பி யேயுதித்தான் 1830

போந்தபதி னெட்டானாள் போர்ச்சருக்க முற்றியபின்
சாந்த களங்காண் சருக்க மெடுத்துரைப்போம்

பதினெட்டா நாட் போர்ச்சருக்கமுற்றும்

தருமராசாக்கள் வீரய்யன்துணை

ஸ்ரீ ராமஜெயம்

களங்காண்பதின் விபரச் சருக்கம்

காலையில் பாண்டவர் இரவு நிகழ்ச்சியினை அறிதல். அவர்கள் பாசறை காண விரைகின்றனர். பாஞ்சாலி துயர்மிக்கிருத்தல். கண்ணன் தேற்றுகிறான். பாஞ்சாலியால் செய்தி அறிந்து வீமன் சினந்தெழக் கண்ணன் அறிவுரை கூறுகிறான். விசயனும் அசுவத்தாமனும் மாறுபட்டு அம்பு ஏவுகின்றனர். பாடிவீடடைந்த பஞ்சவர் துரௌபதி துயர் துடைக்கின்றனர். பாண்டவர் திருதராட்டினரைக் காண்கின்றனர். திருதராட்டிரனும், காந்தாரியும் தம் துயர் கூறி இரங்கல். அனைவரும் களங் காணச் செல்கின்றனர். திருதராட்டிரன் வீமனை அழைக்கக் கண்ணன் இரும்புப் பதுமையை அனுப்புதல். பதுமை நொறுங்கத் தெளிவுபெற்ற திருதராட்டிரன் வீமனுக்காகத் துயருறல். உண்மை அறிதல். திருதராட்டிரன் மகிழ்தல் காந்தாரி காலில் தருமன் விழ, அவள் துயர் ஆறிக் கூறுதல். ஏனைய பெண்டிரைக் காந்தாரி தேற்றுகிறாள். காந்தாரி தன் கண் கட்டவிழ்த்துக் களங் காணச் செல்லுதல். கண்ணனிடம் அக்காட்சிகளைக் கூறுதல். காந்தாரியைக் கண்ணன் தேற்றுதல். துரியோதனன் உடல் கண்டு வருந்திய காந்தாரி கண்ணனைச் சபித்தல். கண்ணன் திருநாட்டிரனுக்குப் பார்வை அளித்துத் திரும்பவும் குருடாகச் செய்தல். திருதராட்டிரன் விதுரனிடம் ஈமக் கிரியைக்கு ஏற்பாடு செய்யக் கூறுதல். ஈமக்கடன் செய்தல்.

ஹரி ஓம்

மாபாரத முடித்த மன்னவர்கள் சந்திரகுல
தீபாவெனத் தருமன் செங்கோல் செலுத்துதற்குக்
கோபால னென்னக் குவலயத்தில் பேர்படைத்துப்
பூபாரந் தீர்த்த புயல்வண்ணன் தாள்போற்றி
ஸ்ரீராமஜெயம் - வீரய்யன்துணை - சிவசமயம்

காலையில் பாண்டவர் இரவு நிகழ்ந்த செய்தி அறிதல்

காலைக் கடன்கழித்துக் காய்கதிரோ னைப்பணிந்து
சாலப் பெருமகிழ்ச்சி தன்னோ டுயிர்ப்பெறிந்து
வேலைப் புவியில் விறல்கூர் துருபதன்றன்
கோலத் தடந்தேர் வலவன் குறுகினது
ஐவருடன் பைந்துளபத் தாரோன் அடிவீழ்ந்து
நைவருந்துன் பத்துடனே நாக்குளறி ஏதுரைப்பான்
மொய்கமலத் தாரோன் முனிமகனிப் பாசறைபோந்து
இவ்விரலிற் கொன்றான் யாவர் பிழைத்தாரோ
வாச மலர்த்தார் மணிமுடியின் மைந்தர்தமை
ஈச னளித்தசுடர் ஏதியினா லேயறுத்தான்

கூசி யுடலங் குலைந்தமரிற் றப்பினன்யான்
கேசவவென் றாவெனுங் கேட்டா னவையனைத்தும்
சேனா பதிவலவன் செப்பியசொற் கேட்டலுமே

பாண்டவர் பாசறை காண விரைதல்

ஆனாத துன்பத்து அலைகடலில் வீழ்ந்தெழுந்து
கானாரும் பாடிநகர் காணவிரைந் தெய்தினரே
பூணார மார்பரைல ரோடும் புயனிறத்தான்[1]
ஏகித் தமதுபடை எல்லா மிறந்ததுகண்டு
ஆகத் துயிர்போம் சலம்போல வசமுற்றுச்

பாஞ்சாலி துயர்

சோகத் துடனயர்ந்து தோன்றினாள் பாஞ்சாலி.
யாகத் தழலில் அவதரித்த வேந்திழையே,

மின்போ லிடைநுடங்க வேல்விழியி னீர்ததும்பப்
பொன்போலு மேனி புழுதிபடப் புரண்டே

1 கண்ணன்

அன்போ டழுதரத்தி ஐவர்மலர்ப் பதத்தைத்
தன்போ தனையாய்த் தரத்தத் தகைந்தழுதாள்
வீழ்ந்தாள் எழுந்தாள் வெதும்பினுள் வெந்துரசாய்த்
தாழ்ந்தா ளெனது தனையரெங்கே காட்டுமென்ருள்
போந்தா ளுடனும் பொருமினுள் பொங்காரம்[1]
சூழ்ந்தாள் தனைமறந்து சோர்ந்தாள் திரௌபதியே

கண்ணன் தேற்றல்

அண்ண லதுகண்டு அணங்கை யெடுத்தணைத்துக்
கண்ணீர் துடைத்துக் கவலை யொழித்திடுவாய்

பெண்ணே விதிவலியை யாரே பிழைத்தனரென்று
உண்ணீர்மை யாலே உறுதுயர மாற்றுவித்தான்

பாஞ்சாலி பாண்டவரிடம் கூறல்

உள்ள துயர மொழிந்து முளங்கொதித்துக்
கள்ளிதழ்த்தார் ஐவரையும் பார்த்துக் கனங்குழலாள்
பிள்ளைகளைக் கொன்ருேன் சிரத்திற் பிறந்தமணி
கொள்ளி லன்றோ என்னுயிருங்கூட்டி லிருப்பதென்றாள்.

வீமன் கோதித்தெழல்

ஆங்கதனைக் கேட்டங்கு அடல்வீம ஞயுதங்கள்
பூங்கமலக் கையிற் பொருதண் டுடனேந்தி
ஓங்கியதேர் மேற்கொண்டு உருத்து நடக்கலுற்ருன்

கண்ணன் அறிவுரை

பாங்கருணை மாயோனும் ஏகல்பழு தாகுமென்ருன்

அவ்வார்த்தை கேளா தவனேகத் தன்னைநிகர்

பாண்டவர் செல்லல்

ஒவ்வாத் தருமனுடன் உற்றதேர் விசையன்
செல்வான் அனையதொரு தேரேறிச் செல்லலுற்றான்
கைவார மென்னும் அவன்மேற் கருத்துடையோர்
முன்சென் றவனு முனிமகனைக் கண்டவன்மேல்,
மின்சென் றனையவிறல் வாளி யேவுதலும்,
பொன்சென்ற மேனியனும் புல்லெடுத்துப் பூசித்துப்

---

1 மிக்க துக்கம்

பின்சென் றடர்த்தும் பிரமசர மாக்கினனே,
ஆக்கித் தனதுகரத் தம்பா ஸதைப்பார்த்துத்
தாக்கி வருமைவர் தலையும் பெருங்கிளையும்

போக்கி வண்மீள்கென்று போகவிட்டான் பூசுரனும்
பாக்கியம் போனின்ற பசுந்துளபத் தான்பார்த்தான்
கண்டு விசையனுடன் கண்ணன்முனி கையதனில்
கொண்ட பிரமசர மீதென்று கூறுதலும்
அண்ட ரெவரு மதிசயிக்க வில்வளைத்துத்

அருச்சுனன் அம்பு தொடுத்தல்

தண்டலிலா வாளி தொடுத்தான் றனஞ்செயனே.
இருவர் கணையு மெதிர்ந்து பொரவெரிகள்
பரவி யுலகுத்தி பாதலமு மீதலமும்
விரியுந் திசைமுகடும் வெந்தழலும் வெம்புகையாய்ச்
செருவுற்று மண்டுதலாற் றேவர் செயல்மறந்தார்.

ஈறுபடும் நாளாய் எல்லாச் சராசரமும்[1]
நீறுபடு மெனவே நெஞ்சயர்ந்தார் யாவர்களும்
வேத வியாசர் வியன்நா தர்முதலோர்
போத முனிகள் புரவலர்பால் வந்தடைந்தார்
வந்து சரண்டொழுத மன்னவரைத் தான்பார்த்
இந்த விதஞ்செய்வ தியல்போ மனவீறோ
கங்கைமகன் வின்முனிவன் கையிலுங்கள் கைச்சாரம்போல்
அங்கவர்க்குக் கிட்டாமல் ஆவி யழிந்தனரோ
இக்கணையை விட்டவுடன் எல்லா மளிக்குமென்று
மிக்கவர்க ளெல்லோரும் வீய்ந்த தறித்திருந்தும்

கல்வி சமத்தாகக் காசினிவிண் டானழிக்க
வில்வித்தைக் கற்றீரோ வீராதி வீரியரே
விட்ட சரத்தை விரைவில் இருவீரும்
இட்டமுள மந்திரத்தா லேயழைப்பீர் என்றுரைத்தீர்
சும்மா வருமோ தொடுத்த பிரமசரம்[2]
அம்மா தவன்சிரசி லாயுதித்த வின்மணியை
பறித்து வருமெனவே பார்த்த னுரைத்தளவில்,

---

1 அசையும் பொருளும், அசையா பொருளும்
2 பிரமாத்திரம்

குறித்த படிவிற் குருமகனுஞ் சம்மதித்தான்

விசயனும், குருமகனும் அம்பு விடுதல்

வில்விசையன் விட்டசரம் வேதியன்சேய் மிக்கசிர
நல்விசைய மாமணியை நாடியே தான்பறித்து
மீண்டு செயமாய் விசையன்கைக் கெய்தியதே.
பூண்ட பரித்தாமன் போட்டசரம் வாளபிமன்
தார முருத்திரையாள் தன்கருப்பந் தள்ளுமனம்
வார நெடுமாலு மாய்கையாற் றான்காத்தான்.
அக்கருப்பங் காற்று அனிலமதை மாய்கையினால்
தக்ககருப்ப மெனத்தான் அமைத்தா னங்கதனை
தள்ளியே விட்டசரந் தான்றிரும்பி மீண்டதுவே

விசயன் குருமகன் இருவரும் போர் தவிர்தல்

வள்ளிய துய்யமறை மாமுனிவர் யாவர்களும்
அப்பா லிருவரையு மன்றுசெருத் தான்மாற்றி,
இப்பால் அவரவர்சார்பு ஏகுமென்று தானனுப்பி.

பஞ்சவர் பாடி வீடு அடைதல்

பஞ்சவரு மாயவனும் பாடிவந்தார் பூசுரன்சேய்
வெஞ்சந் தவிர்ந்து வியன்றலசி லேபுகுந்தான்.

துரௌபதி துயர் நீங்கல்

முனிசேய் தலையில் முளைத்த சுடர்மணியை
நனிசேர் துரோபதியாள் நன்கரத்திலே விசையன்
ஈய்ந்தான் புதல்வ ரிறந்த துயரமெல்லாம்
தீந்தாள் மகிழ்ச்சி செறிந்தாள் முகமலர்ந்தாள்.
பஞ்சவர் களன்பான் பண்பாம் விதுரனிரு
கஞ்சமலர்த் தாள்தொழுது காதலுறப் புகழ்ந்து,
கூட வழைத்துக் கொடுசென்று கொற்றவர்கள்,
வீடருளும் வேத வியாசமுனி தாள்தொழுது,
எந்தை கண்ணில்லா னிடத்தே யிருவீரும்
சிந்தை தெளியத் தெளிந்தருளு மென்றுரைப்ப.

திருதராட்டிரனைக் காணல்

நன்றென் றிருவோரும் நாடியே தானேகிச்

சென்றந் தகனைத்[1] தெரிசித்தா ரம்மானை.
வேந்த னெழுந்து வியாச னடிதொழுது
சாந்தமணிச் சிங்காச னத்தில்வைத் தானம்மானை.

வியாசர் கூற்று

மூர்த்தி வியாச முனியிருந்து மன்னனையும்
ஆற்ற லுடனே யருகிலே தானிருத்தி
மக்கள் மனைவி மகிவாழ்வு நட்புடையோர்
ஒக்கலி வையனைத்து மோர்கனவென்றே பெரியோர்

சிந்தையி லெண்ணித் தெளிந்திருப்பார் தேன்பரவு
கந்தமலர் மார்பர் காவலர்கள் கோமானே,
மாயத் தொடர்ச்சி வலையுள் தயங்குமக்கள்
காயத்தி லுற்றசுக[2] துக்கங் கடக்கரியார்
நீய்முற்று கேள்வி நிறைந்தோய்நீ நீற்றினென்றான்
சேயிற் சிறந்த பெருஞானத் தெய்வமுனி
அருள்வாரி யன்னமுனி சொல்லகத் தடக்கிப்

திருதராட்டிரன் உரை

பெருவா ருதியா[3]ந் துயர்நீங்கிப் பேசலுற்றான்
சுருளேதி[4] சோரத் துயர்கூருங் காந்தாரி
உருகாது தேர்ந்துவப்ப ஏகியுரைத்தி டென்றான்

அவ்வா றவனு மவள்பா லேகிடவே
மைவார் விழியாள் மருகியரோ டுங்குழுமி
செவ்வாய் புலம்பத் திரண்டழுது தாடொழுதார்
வெவ்வான் இடியொலிபோல் வேலை[5]யொலி
போலிரைந்தார்

பாதத்தில் விழ்ந்து பதைபதைப்பு மாறாத
மாதர்க் கரசை முகனோக்கி வாய்மலர்ந்தான்
பேதைக் கருத்தோ பிறப்பெடுக்கும் பேய்மயக்கோ
கேதத்[6] தயாலுற்றாய் கேள்வியிலார் போலானுய்
ஞானக் கமல மலரோன்[7] தலைநாளில்

---

1 குருடன் ஆகிய திருதராட்டிரன்
2 உடம்பில் பொருந்தும் இன்பங்கள்
3 கடல்
4 சுருண்ட கூந்தல்
5 கடலொலி
6 துன்பம்
7 பிரமன்

கோளிப் படியாய்க் குறித்த விதிவலியால்
மாளக் கருத்தாய் முதியோர் மொழிமறுத்தான்
மூளச் செருமுடித்தது மூத்தமகன் பின்னிறந்தான்
விதியாற் புகுந்த வினையிலது மேன்மையிற்றம்
மதியாற் புகந்ததிது வென்று மதிக்கரிது
செய்யாது செய்யச் செகங்கலங்கு மாகையினல்
மெய்யா யுன்சேயர் விதிவலியால் மாண்டுவிட்டார்
தேனொழுகும் வாய்மொழியாய்ச் செற்றோர் கதிசேர
ஆன சடங்கியற்றி ஆறுதுயர் என்றுரைத்தான்

காந்தாரி கூற்று

தீதிலா மாற்றஞ் செவிப்பட்ட காத்தாரி
பேதியாச் சேயர்களைக் கொன்றபிழை பொறுக்கேன்
ஏதமாய் ஐவரையு மின்றே யெரித்திடுவேன்
கோதிலா தாயெனவே கும்பிட்டகங் கொதித்தாள்
ஐவர் தனையொழிய ஆன குருகுலத்தில்
தெய்வ விரதன்முதற் சேரமடிந் திறந்தார்

மிச்சமுள்ள ஐவரையு மின்னே யிழந்துவிட்டால்
கச்ச மிருளமுங்கிக் காசினி வானாகிவிடும்
என்ற முனியோ டெழுந்தரசு தன்னிடத்தில்
சென்றென் பதியுடளே சேரவே தானெழுந்து

களங்காணப் புறப்படல்

கோக்குலங்க ளெல்லாங் குலையுண்ட போர்க்களத்தைப்
பார்க்க மனதுற்றுப் பதறி யெழுந்தனளே.
காந்தாரி தன்னுயிராங் காந்தனுடன் சேர்வதன்முன்

பாண்டவர் கண்ணனுடன் வந்து திருதராட்டிரரிடம் கூறல்

வேந்தான ஐவர்களும் வெண்ணையுண்ட மாயோனும்
வெஞ்ச முடையான் விழியிரண் டிலான்தாளில்
பஞ்சவர் வந்து பணித்தார் பணிந்தவிதம்
அங்கிருந்தோர் சொன்னளவில் அந்தகன்வன் நெஞ்சினனாய்
பொங்கழல் வேந்தைப் பொருந்துகுடிவைத்த னெஞ்சாய்

திருதராட்டிரன் வீமனை அழைக்கக் கண்ணன் இரும்புப் பதுமையைத் தள்ளுதல்

விகடித்த நெஞ்சினனாய் வீமன்றனைக் கூவச்
சிகடுற்று உதைத்தோன் அத்தன்மை தனையறிந்து
சரும்பொற் பதுமைதனைக் கண்ணன்முன்பு தள்ளிடவே
இரும்புப் பதுமை யெனவறியான் வீமனெனச்
கந்தை வயிரச் சினத்தால் தடக்கரத்தால்

கருர்புப் பதுமை நொறுங்கல்

உந்தி யுறுக்கி யுறுக்கி யுறநெருக்கிக்
கையாற் கசக்கக் கரும்பொற் பெரும்பதுமை
நொய்யாய்த் தவிடாய் நொறுங்கி விழும்பொடியாய்ப்
பற்ப வணுவாய்ப் பறந்தாற்பு நீருகி
அற்பமாய்ப் போனது அவன்சினமுந் தான்தீர்ந்து

தெளிவு பெற்ற திருதராட்டிரன் வீமனுக்காக துயரகூறல்

மீண்டு தெளிந்து விழிநீரெழச் சோர்ந்து
மாண்டு விழுந்தனையோ மால்வீமா வென்றயர்ந்து
என் செய்தேன் பாவி யெழுந்த மனத்துணிவால்
முன்செய்த தீவினையால் முன்னும் விழியற்றேனே
விழியிழந் தேன்முன்பு விதியால் மதியிழந்தேன்
பழியன் கரத்திற் படவோ மிகவளர்ந்தாய்
பிலனா யிருந்தபல பிள்ளையெல்லா முன்னிழந்து
வலிய வுனையும் வதைத்தேனே வான்பாவி
சீறு மருவார்கள்[1] சிங்கமே பங்கமுற
வீறி னொடுவதைத்து விட்டேனே கெட்டேனே
என்செய்வேன் ஆவி யினித்தரியே னுன்னுடனே
வன்சினத்தா லாவி வழங்குவே னென்றுரைத்து
மண்மே லயர்ந்து மயங்கிவாய் விட்டரற்றிக்

கண்ணன் உண்மை கூறல்

கண்மா சடைந்திடைந்த காவலனைத் தான்பார்த்துக்
கண்ணன் நெடியோன் கரியோன் மலர்க்காயா

1 பகைவர்கள்

வண்ணன் படியளந்தோன் மன்னனைப்பார்த்
தேதுரைப்பான்
மைந்த ரிறந்த மயக்கான பேதலிப்பால்[1]
மைந்தி லுயர்ந்தோய் வயிரப் பெருஞ்சினத்தால்
இந்தவிதஞ் செய்தா யிறந்திலான் வீமனைய்யா
சிந்தை விரகு[2] தெரிந்துன் சினந்தீர
அரவக் கொடியோன் அனிலன் சுதன்போல
விரகுற் றமைத்துவைத்த வெஃகுப் பெரும்பாவை
தன்னை யுனதிடத்தில் தள்ளினேன் நீயதனை
வின்னப் படுத்திவிட்டாய் வீய்ந்திலான் வீமனென்று

திருதராட்டிரனும் மற்றவரும் மகிழ்ச்சியடைதல்

சொன்ன தமிர்தஞ் செவியிற் சொரிந்ததென
கன்னங் குளிர்ந்து கமலஇதை யங்குளிர்ந்து
வீமன் பிழைத்த தெனவே வலம்புரிப்பூந்
தாமனுடன் நூற்றுவருந் தான்பிழைத்தார் போற்றேறி
அன்பா யுகந்தமைக்கு ஐவரையு தான்றேற்றி
முன்பாக வுச்சி முகந்து முகந்தணைந்து,
கீறின கீற்றுக் கடவாதென்கீழ் மொழியும்
மாறிலா வேந்தன் மனதிசையும் புத்திரரே
ஆகாத மக்கள் அழிந்தா ரெனக்கிசைந்த
வாகான புத்திரரே வாழுமென வாழ்த்திவிட்டு

ஆயன் முகம்பார்த்து ஐவரையுங் காக்குதற்கு
நீயலால் வேறு நிலைநிறுத்த வல்லருண்டோ

காந்தாரி கோபத்திலிருந்து காக்கவெனக் கண்ணனிடம் கூறல்

என்கோபத் துக்கு யிவர்பிழைத்தார் காந்தாரி
தன்கோபத் துக்குமிவர் தன்னையே காத்திடென்று
காந்தாரி பாலனுப்பக் கண்ணனுடன் பஞ்சவர்கள்

காந்தாரி காலில் தருமன் வீழுதல்

போந்தா ரெதிர்ந்தவடன் பொற்பதத்திலே தருமன்
வீழ்ந்தான் மருங்கில்நின்றோர் வேந்தன்வணக் கபகரச்
சூழ்ந்தாள் பெருந்துயர்த் துக்கந்த ல் வெங்கோபம்

---

1 வேற்றுமை
2 தந்திரம்

காந்தாரி கோபம்

கொண்டா ளிதையங் கொதித்தாள் மதுபானம்
உண்டா ளெனத்தீ யுமிழ்ந்தாள் விழிவாயால்

உள்ள நடுங்க உடலெல்லாந் தானடுங்கக்
கள்ளவீழ்தார் கூந்தலெல்லாங் காசினியி லேபுரளச்
சோர்ந்தா ளழுதாள் சுழன்றாள் பரதவித்தாள்
சேர்ந்தாயோ யென்னிடத்தும் தீங்காயென் சேயர்களைக்
கொன்றா யுனைநான் கொழுந்தீ யெழச்சினந்து
இன்றே சபிப்பே னெனவே மிகவுருத்தாள்[1]

தருமன் வேண்டுதல்

அன்னை சினம்பார்த்து அம்புதல்வன் தாடொழுது
என்னையேபூ வாழ்வே விரும்பிச் செய்யாத
வஞ்சனையுஞ் செய்தேன் வழக்கழிவுந் தானுரைத்தேன்
நெஞ்சிற் கபடம் நிரம்பினேன் நீதியற்றேன்

கரைகொள்ளாச் சேனைகளைக் காவலரைச் சுற்றமதை
விரைவிற் றுணைவர்களை வெங்களத்தி லேஅறுத்தேன்
பாவஞ் சுமந்தேன் பழிசுமந்தேன் பாதகமாய்க்
கோவஞ் சுமந்தேன் குடும்பமறக் களைந்தேன்
சொல்லுறுதி மாறிநின்றேன் தூய்யோர் மொழிமறுத்தேன்
நல்லதுணை செற்றுலகை நாளுள வேதுணிந்தேன்
ஈசிலேன் நாணம் இரக்கமிலேன் மானமிலேன்
ஆசு[2] நிரம்பும் அத்தன் வதனியான
மானிலத்திலே யுதித்த மக்கட் பிறப்புகளின்
யான் மிகுத்தபாவி யவதரித்தேன் இவ்வையத்தில்

கண்டபலன் இவ்வளவாய்க் காசினியெல்லாம் நகைக்க
மண்டுலக மாதா வனையநீ யுஞ்சினக்கத்
தக்கதாய் நானுஞ் சரீர மெடுத்தமையால்
இக்கணம்நீ சபித் தெரித்தாலு மேற்றதொன்று
சீயம் வகிர்வலையில் சிக்குண்டு அரற்றுதல்போல்
தாயன்று கட்டு கயத்தாலே யுரலோடே,
ஆயன்று அடித்தவடி யால்தேகஞ் சோரி[3]சிந்த

1 கோபித்தாள்
2 குற்றம்
3 இரத்தம்

மாயன் பொறுத்திலனோ மன்னுலகெல்லாம் நிறைந்தோன்
மூவரு மொன்ருன மூர்த்தி யெனுமுகுந்தன்
கோவித்த தாய்சொற் கொழுகி வெருவியதால்

புல்லரிற் புல்லனியான் போதவே நீமுனிந்தால்
அல்லவெனச் சொல்வேனோ யாருனைக்கோ பிக்கவல்லோர்
பொய்யான தெல்லாம் பொருந்தினேன் பூவாழச்[1]
செய்யாதுஞ் செய்தேனுன் சேவடியும் வந்துகண்டேன்
பிள்ளைதனைத் தாய்சினந்தால் பெற்றிடுஞ் சேயல்லாது
தள்ளிவிக்க மூவர் தனக்குமிய லாததனுல்
சம்மதித்தேன் நின்சாபந் தானேற்பேன் பின்வாங்கேன்
சம்மதித்த சாபந் தாவென்று கையேற்றான்

காந்தாரி சினந்தணிந்து வாழ்த்துதல்

குற்றமில்லா வுன்னைக் குறித்தே சபித்தாலும்
மற்றெனையே சுற்றுமல்லால் வந்திடுமோ வுன்னிடத்தில்

தான்செய்த தீவினையாற் சந்ததிகள் மாய்ந்தார்கள்
நான்செய்த தீவினையை நானே யனுபவித்தேன்
அவரவர் செய்வ தவரவர்க்கே யல்லாமல்
தவறியே வேறொருவர் தன்னிடத்தி லெய்தாதே
என்றே யுருகி யிரங்கித் தருமனையே
அன்றே தழுவிமிக வன்பாய் முகந்துகந்து
விம்மு சினங்கலக்கம் எல்லா மிகத்தவிர்ந்து
செம்மையுடன் றயவாய்ச் சீர்பெறுவா யென்றுரைத்தாள்
கோபத் தவிர்ந்த குணமறிந்து நால்வர்களும்
சாபந் தரித்த தடக்காத்தால் தாள்தொழுதார்.

வந்து பதம்பணிந்த மக்கள் தனைத்தழுவிச்
சிந்தை மகிழ்ந்து சிறப்பாகத் தான்வாழ்த்தி,
அன்பாய் மனமறுக்கம்[2] அற்றிருந்து வாழுமென்று,
முன்பான சேயர் முகம்பார்த் துகந்துரைத்தாள்
ஐவரையுங் காந்தாரி யன்பாக வாழ்த்தியபின்

ஏனைய பெண்டிர் பேரொலி

தெய்வகன்னி மார்போல் தெரிவையர்க ளெண்ணரிதாய்

---

[1] உலகம் வாழ
[2] மாறுபாடு

மின்னற் குலம்போலும் விண்மீன் கணம்போலும்
கன்னல் மொழியார் கடல்போலி ரைந்தனரே.
சற்றுருவாய்[1] மித்துகுவாய்த் தானே யிருதிறத்து
உற்றிறந்த மன்னனக் குரித்தான தேவியர்கள்
கட்டலேழ் அடர்ந்தே கறங்குந் தொனிபோல
இடியூதை[2] மேக மிரையுந் தொனிபோலக்
காந்தாரி காதிற் கனற்காய் கதிர்போலப்
போந்தே சுட்டவே புழுங்கினாள் மீண்டயர்ந்தாள்.
சேல்விழிகளே புரளச் செங்கைவளை போலமிட
நூலிடைகளே துவள நூபுரங்களே[3] கதற
பால்மொழிக ளேகுளறப் பம்பரத்தி லாறோட
மயிலெனுஞ் சாயல் மடவா ரழுமோதை
குயில்கிளி பூவை[4] குலத்தோதை போன்றதுவே.
காந்தையர் இவ்வாறாய்க் கதறவே காந்தாரி
மாந்தி வெயிலின் மலர்போல் முகங்கருகி
இந்த விசார மெனக்கும் பதிதனக்கும்
வந்து நசல்ாய்[5] மருவி யளிக்குமென்று
கண்ணினாற் கண்டு கருத்திலே வையாமல்
மண்ணில் விழுந்தழுது வாய்விட்டே யரத்தவென்று

காந்தாரி தேற்றுதல்

கருகி யுருகிக் கனிந்துநின்ற பஞ்சவர்கள்
பெருகுங் கலக்கமெல்லாம் பெண்ணரசி தான்மாற்றிக்

காந்தாரி கண்கட்டு அவிழ்த்துப் போர்க்களங் காணச் செல்லல்

கற்பிற் சிறந்தவொரு காந்தாரி கண்பொதிந்த
பொற்பட்டந் தன்னைப் பொருந்தவே தானவிழ்த்துத்
தீர்க்கமுள்ள மன்னவர்கள் சேரவிறந் தழிந்த
போர்க்களம் பார்க்கப் புறப்பட்டாள் அம்மானை.

---

1 எதிரி
2 ஊதைக்காற்று
3 காற்சிலம்பு
4 நாகணவாய்ப்பறவை
5 நோயாக

கங்கை மகன்முதலாய்க் காவலரெல் லாமிறந்த
வெங்களத்தின் சேதி விரித்துரைப்போ மம்மானை.

களத்தின் காட்சிகள்

பைந்துளவோ யென்சேயர் பாரியர்கள் பாரிடத்தில்
செந்தளிர்ச் செய்யவடி நோவத் திரளோடும்
தந்தமர் கேள்வர் அடையாளந் தானோக்கி
முந்துற மார்பில் முயங்கும் முறைபாராய்!
மாதவர் யெந்தன் மகன்றே வியர்மயல்போல்
காதலர் மெய்யிற் கழுகுகொத்தக் கைகளோடு
பாத மசையப் பரிந்தின்னுயிர் உண்டெனவே
ஆதரத் தொடுந்தழுவும் ஆவல் தனைப்பாராய்!
குன்றெடுத்தோ யென்னாவிக் கொப்பாவா ளின்கொழுநன்
தன்றலைகாணாள் பதக்கந் தன்னிலவன் நாமம்
துன்றெழுத்தைக் கண்டுமிகச் சார்ந்த துயரோடு
பொற்றினள் போல்மார்பில் முயங்கும் பொறைபாராய்!
மருது தைத்தோய், ஓர்மயிலென் மனமனையாள்
பொருதளிகேள் வன்[1]கை யொன்று புறம்போக்கி
ஒருகரிக் கையை யுறவே பொருத்திவைத்துத்
தெரிதர மேவி யணையுஞ் செயல்பாராய்!
கஞ்சனை வென்றோய், கருத்தென் னுயிர்போல்வாள்
அஞ்சுமன் னாள கரிக்கையான் துடைதனிலே
துஞ்சிய காலைத் துடையோடு தான்பிணித்தே
நெஞ்சழிந்து வொன்றிப் பொருந்தும் நிலைகாணாய்!
கைவேறு கால்வேறு கந்தரமுந்[2] தான்வேறாய்
மெய்வேறாய்த் தான்கிடந்த வேட்டோன்[3] உறுப்பனைத்தும்
ஒன்றாய்ப் பொருத்தி யெனதூன்வாழ் உயிர்போல்வாள்
சென்றே யனைத்துருகுஞ் செவ்விதனைப் பாராய்!
மன்றற் றுளசி மணிமார்பா மல்வீரன்
வென்றி யராவானும் வீடுமனாலே வியந்து
பொன்றிய மேனி பொருகளத் திலேகவிழ்ந்து

---

1 கேள்வன் - கணவன்

2 கழுத்து

3 கணவன்

தன்றலைவே றாய்க்கிடக்குந் தன்மை தனைப்பாராய்!
கோடு தரித்தருள்வோய் கொற்றக்குரு குலத்தின்
வீடும னென்றுரைக்கும் வெந்தழலா வான்சேனை
காடுவெட்டிச் சுட்டதெனக் கண்ணடங்காத் தூரமெல்லாம்
பீடுகெட்டுப் பட்டோர் பெருங்களத்தைத் தான்பாராய்
பஞ்ச சயனப் பலமெல்லணை வெறுத்து
விஞ்சு கங்கைமைந்தன் விசையன் தொடுத்துவிட்ட
சரப்பே ரணை[1]யே தனக்கான பேரணையாய்
புரப்போன் தவசிருப்பான் போலிருப்போ னைப்பாராய்!
வெண்ணைத் தயிரள்ளி விழுங்கு மிடற்றோனே,

எண்ணிறந்த மன்ன ரிறந்தகளம் பாராய்!
கேகயன்[2] தேவியொரு கேகயமே[3] யொப்பாக
வாகிள் புருடனுடன் மார்பில் முயங்குதல்பார்
கலிங்கன் றலையோர் கரிக்கழுத்திற் சிக்கியதால்
கலிங்கன் மனையாள் கரிக்கோ டிடைநுழைந்து
ஏன மருப்பி னிடைதவழ்ந்த மாலெனவே
தானப் புருடன் றலையெடுக்குந் தன்மையைப்பார்!
கந்தாட் டதிபர்கோன் காசிபதி தலையைப்
பந்தா டியதொருபேய் அப்பேய் பதம்பணிந்து
செந்தா மரைமான்போல் தேவிகெஞ்சி யேயிரப்ப

நொந்தா குல[4]த்தோடு நல்கும்படி நேக்காய்
சகடுதைத் தோனேதொல் சாயும் பிணமிடையே
மகதன் றலைதேடு மங்கையெழில் வடிவம்
புகைதங்கு மேகம் புகுமின்போற் புண்ணுன
சிகை[5]கண்டா ளோர்பாதி சென்றேந்துங் கைபாராய்!!
பெருகு புகழ்துவரை யாளும் பெரியோயுன்
மருகன் திறலபிமன் மாமுகச்செம் பங்கயத்தை[6]
முருகுத் தரைதன் முகம்வைத் திணைபிரியாது
உருகுந் திருவினுயிர் ஒன்றாயினள் பாராய்!
இசைக் குழல் வாயில் இருத்துந் தொழிலிறைவா

1 அம்புப்படுக்கை
2 கேகய நாட்டுமன்னன்
3 கேகயம் என்னும் பறவை
4 ஆகுலம் - மனத்துயர்
5 சிகை - குடுமி
6 தாமரை

விசைக்கணைவில் வாளபிமன் வெங்கணையாற் றானிறந்த
அரவக் கொடியோன் அருமைப் பெருங்குமரன்
பரடு[1]கணைக் கால்முழங்கால் பண்பாந் தொடையிடையும்
அரிந்து கிடக்கும் அபகீர்த்தி தான்பாராய்!
துச்சாதனன் முதலோர் தொண்ணூற்று ஒன்பதின்மர்
மெய்ச்சான புத்திரர்கள் வீய்ந்த பெருங்களம்பார்!
சகுனி சுதன்முதலோர் சல்லியன்றன் சேய்முதலோர்
பகரு மரசர்தவப் பாலரெல்லா மாய்ந்ததுபார்
பூரி மனைவி பிரிந்த வொருகரத்தை
மாரின் முலைமேல் மருவித் தழுவிவைத்து

அரிந்த தலையை யவள்முகத்தோ டேயணைத்து
இரங்கி யழுவாளோடு இருந்தழுவா ளைப்பாராய்!
மோகஞ்செய் பூத முலையுண் டுயிரழித்தோய்,
சோகங்கொண் டெந்தன்மகள் துச்சளையாள் எய்த்தழுதே
தாகமாய்ச் சிந்துபதி தன்றலையைக் காணாமல்
பாகங்க ளெங்கும் பதறியே தேடுதல்பார்!
புள்ளின்வாய் பன்னாள் பிளந்தோய்க டோற்கயனைத்
தெள்ளிய யானைச் செவிகொண்டு தான்வீசி
வள்ளி நிகராக்கி வண்ண முலைமலைமேல்
வெள்ள மாய்க்கண்ணீர் விழவே யிரங்குதல்பார்!

வீரர்க்கு மிக்கான வீரவிரா டன்றலையும்
சூரர்க்குச் சூரன் றுருபதன்றன் சென்னியுமே
ஒன்றா யிருந்தமையால் உவையா மனவியர்கள்
குன்றார் தலைமாற்றிக் கொண்டிரங்குந் தன்மையைப்பார்
சீர்வின் முனிதாளிற் சீஷர் வணங்குதல்போல்
சூர்செய் நரிநாய் தொகுதி தொகுதியாய்ப்
பாதத்தில் வந்து பரவ, அவன்மனையாள்
கேதத்துடன் விரட்டிக் கிட்டி யழுந்துயர்பார்!
இந்த விதமா யிறந்தோர்கள் தேவியர்கள்
நொந்தழுவ தெல்லா றுவன்றிரங்கி யேகையிலே

மன்னர்க்கு நேரிலைய வாதுறுதுச் சாதனன்றான்
வின்னத் துடனிறந்த வெங்களத்தைக் கண்டனளே!
கண்டாள் இதையங் கலங்கிக்கண் ணீர்சோரக்
கொண்டாள் மெய்சோகங் கொடிது கொடிதிதென

1 புறங்கால

விண்டாள் தலைநாள் விதியோ வெனவயர்த்தாள்
தண்டா லிவனைச் சதித்தோன்[1] வலியனென்றான்
மன்னர்க் கிளைய மகனே மகத்துதித்த
மின்னைக் குழற்குழற நீமெய் தீண்ட
என்னைப் பிடித்தயர்ந்த மாதுக் கிரங்காமல்
உன்னைச் சினக்காம லுன்னிற் கொடியவளாய்ப்

பின்னுக்கு வார பெரும்பிழையும் பாராமல்
வன்னிக்குள் வந்தாளை[2] மாருது தள்ளிவிட்டேன்
என்னிற் கொடியோர் இருநிலத்தில் வேறுமுண்டோ
கூந்தல் தனைப்பிடித்துக் கொள்ளாத கோட்டிகொண்டாய்
வேந்தரவை யேற்றுவிற்றாய் மின்னைத் துகிலுரிந்தாய்
இந்த விதமா யிடறுசெய்தல் யானறிந்தால்
உந்தனுட கைவசத்தி லொண்ணுதலை யீவேனே!
ஏதோ விளையாட்டு எனமதியி னானிருந்தேன்
கோதாக நாசங் குலத்துக் கெனவறியேன்
குரவர் மதியுரைக்கக் கூறுவதுங் கேளாமல்

விரகி லிதுபடவோ வேண்டிவினை செய்தாயே!
மானமழியவரில் எவருஞ் சாய்ப்பாரோ
உங்கள் குலமெல்லாம் ஒழிந்து குலைவதற்கோ
கொங்கு[3] மலர்க்கூந்தல் குலைத்தாய்நீ அந்நாளில்
பாற்றிருந்த பேர்களுட பாரியர் எல்லாமழவோ
வேற்றவையி லேற்றியந்த மின்னையழச் செய்தீர்கள்
பாவிகாள் உங்களுட பாரியர்நாண் வாங்குவதற்கோ
தாவியாள் உத்தரீகந்[4] தானன்று வாங்குவித்தீர்
என்னப் பலவாய் இயம்பியிட ருற்றழிந்து
தன்னை மறந்து தயங்கி யயர்ந்தனளே!

கண்ணன் தேற்றக் காந்தாரி தெளிந்துரைத்தல்

அயர்ந்து விழுந்தாளை அச்சுதனுந் தான்றேற்ற
உயர்ந்த பெருவாழ் வுடையாளுந் தேறினளே
வருத்தஞ் சிலநீங்கி மாமயில்போற் காந்தாரி
கருத்து வேருகிநின்ற கண்ண னுடன்சொலுவாள்
உருத்தென் சுதன்மார்பி லோடுசெந்நீர் வீமனுண்டு

---

1 மாய்த்தவன்
2 பாஞ்சாலி
3 தேன், வாசனை
4 மேலாடை

திருத்தாள மணிநீராற் செந்நீரைப் போற்காண்மின்
உரலோ டழுதகள்வா வோங்கியதுச் சாதனன்கை
விரலொரு பத்து விரைந்தறுந்து வெம்பானுக்கு
இரையாய்க் கொடுத்ததுமுன் ஏழைகுழ லுந்துகிலும்
சரியத் தொடுமா றெனுந்தகைமை தான்காண்மின்!

சங்காழி[1] யேந்துகரத் தைய்யாவே கன்னனென்பான்
வெங்கா னெரிந்த விசையன் கொடுங்கணையால்
மெய்யெல்லாம் பொத்துஉயிரு வீய்ந்தா னவன்றேவி
கையால் முகந்துடைத்துக் கண்ணீர் சொரிந்தழல்பார்!
கன்னன் களங்காட்டிக் கன்னன் சுதன்நால்வர்
வின்ன முடனிறந்த வீரக் களங்காட்டி
உற்றசுதன் தொண்ணூற்று வொன்பது பேருக்குமுன்னோன்

துரியோதனன் உடலைக் காணல்

செற்ற கொலைக்களத்தைத் தேடிந டந்தனரே
தண்ணமுனி மூவேழ் தலைமுறையாய் மன்னர்களை
மண்ணி லறுத்த மடுத்தடத்தி னோர்சார்பில்

சீரரசர் தங்கண்முடி சேர வுரஞ்சுபதன்
பாரர்சர் கோமான் பணிக்கொடியோன் றால்கிடந்தான்

கண்ட காந்தாரி அழுதல்

பாற்ற வுடனிரண்டு பார்வை நெருப்பெரிய
ஏற்ற மகன்மே லி ங்கியே வீழ்ந்தாள்
உறுப்பொன்றி னுக்கனந்தம் ஒப்பாரி தான்கூறிக்
கறுப்பின் குழலாள் கறுத்தாள் மனமழன்றாள்
வாரி யெடுத்தாள் மடிமீதினிற் றரித்தாள்
சோரியும்[2] நீருஞ் சொரிந்தா ளிருவிழியால்
அறைந்து விழுந்தழுதா ளாவியற்றாப் போலயர்ந்தாள்
இறந்த மகனோடு இறக்காது யின்னமுயிர்

வைத்து யிருந்தேன் மதியிலேன் பாவியென்பாள்,
சித்தங் கலங்கித் திகைத்தாள்உள் உயிர்ப்பெறிந்தாள்
இப்பாடு கண்டுமினி யெப்பாடு யான்படவே
துப்பா யெனதுயிருந் துஞ்சாதிருந்த தெனபாள்.

---

1 சங்கசக்கரம்

2 இரத்தம்

சீரழிந்து பேரழிந்து செங்கோல் நிலையழிந்து
பாரிழந்து தேவர் பதி[1]புரக்கச் சென்றாயோ!
தர்மர்க்குத் தீங்கு தனைநாளும் நீவிளைத்து
வர்மித்த நெஞ்சாய் மதத்தா லழிந்தாயோ!
என்றவள் தேக மிடராய்த் துடிதுடிக்கக்
முன்றி நல்லாவி குறைந்தயர்ந்தா ளம்மானை.

கண்ணன் தேற்றல்

மாய னெடுத்தே மனச்சலிப்புத் தான்தீர
நேய மொழிகள் நிகழ்த்தித் துயர்தீர்த்தான்
தன்சலிப்புத்தான் தீர்த்த தாமன் முகம்னோக்கி

காந்தாரி கண்ணனைச் சினந்து கூறல்

வஞ்சினங்கள் மேலாடி வர்மித்தே யேதுசொல்வாள்
தனதறக்கு மிந்திரர்க்குந் தான்சிறந்த வாழ்வுடையான்
எனதுற்ற மைந்த னியல்வாழ் வெல்லாமடிய
நீயே கெடுத்தாய் நிருபன் றனைவெறுத்துத்
தீயோய்நீ பஞ்சவரைச் சார்ந்தா யெனதுமகன்
உந்தன் விரகால் வொழிந்ததன்றி வேறுமுண்டோ?
படைத்துணைக் காவுந்தன் பாலடைந்து, பண்பாயுன்
புடைதங்கி யதுகண்டு பொய்த்துயில் கொண்டே விசையன்
அடையும் பொழுதுநின்னை யல்லா தெவையும்நல்கி
விடையளித்துப் பலபடையும் வேண்டே னெனவிடுத்தாய்
தூத னெலைந்து சுடர்மகனைத் தான்பிரித்தாய்,
காதலுறு தந்தை கரச்சிலையுந் தான்முறித்தாய்
கோதில் முனிமகனைக் கூவளைத்துக் கொடுபோய்
ஏதமுற மாய்கையினா லேந்தல் மனமுறித்தாய்
கவசமுங் குண்டலமுங் கண்ணனுக்கு மாற்றிவித்தாய்,
துவசப் பணிமுரசத் தோன்றல்[2] இருவரையும்
பகைக்கும் படியான பாதையெல்லாம் நீவிளைத்தாய்
வகைக்குள் உயர்குலத்தார் மாளச்சதி விளைத்தாய்

---

1 தேவர் பதி - இந்திரன் நகர்
2 பாம்பையும் முரசத்தையும் முறையே கொடியாகக் கொண்ட துரியோதனனும் தருமனும்

காந்தாரி உரைத்த சாபம்

தானுன் குலங்களெல்லாந் தம்மிலே தான்மடிய
கானிலே நீயுங் கழியக் கடவதென்றாள்
என்றே அவள்சபிக்க வேற்கும்நாள் ஈதெனவே
நன்றே யெனவேற்று நாராயண மூர்த்தி

கண்ணன் அதனை ஏற்று உறுதி கூறித் திருதராட்டிரனுக்குப் பார்வை அளித்தல்

ஒன்றான மூர்த்தி யுறுதி பலவுரைத்து
அன்றே விழியும் அரசனுக்குத் தானீய்ந்தான்
பிறவிக் குருடன் விழிபெற்றே களமனைத்தும்
திறமுற்றுப் பார்த்துத் திகைத்தழுது சோபமுற்று
மண்மேற் புரண்டு மறுகிக் கிடந்தலறிக்
கண்மீதி லாறு கனிந்திரண்டு தானோட
வாடிய மன்னன் மனச்சலிப்புந் தான்மாற்றிச்

களங்கண்டபின் மீண்டும் குருடனாக்கல்

சேடின்[1] விழிமுன்போல் தெரியாது மாற்றினனே.
கண்கொடுத்து மாயவன்பின் கண்மாற்றி விட்டதற்பின்
மண்கொடுத்துத் தானறிந்த மக்களுக்குத் தான்சடங்கு
செய்யும் பொருட்டால் திறல்திரித ராட்டிதனும்

திருதராட்டிரன் விதுரனிடம் கூறல்

வைய மதிக்கும் வரிவில் விதுரனையே
அன்பி னுடனே யருகிலழைத் தாதரவாய்
முன்புநீ சொன்ன முறைநெறியும் புத்தியையும்
மாறினேன் புன்மதியால் மக்களையுந் தோத்துவிட்டேன்
தேறும் விதியைச் செயிக்கயெவர் வல்லாரே!
போனத்தை யாம்நினைந்து புண்ணாக நொந்தாலும்
மானச் செருக்களத்தில் மாய்ந்தார் பிழைப்பாரோ!
செய்தபல தீவினைகள் செய்தவர்க்கே யெய்தியதால்
வெய்தின் விலக்க விதிக்கும் முடியாதே!

---

1 பெருமை

ஈமக்கிரியைச் செய்ய ஏவுதல்

சாந்தகில் வாசத் தருக்கள் தனையடுக்கி
இந்தக் களத்தி லிறந்தோர்கள் யாவரையும்
வேத வியாசரெனு மிக்கோனு ரைப்படிக்கு
ஓதுவாயி மத்திசைந்து தகனஞ் செய்கென்றான்
சொன்னபடி செய்வனெனத் துங்க வியாசருடன்
உன்னு கரும முளதெல்லாம் முற்றியபின்,

ஈமக்கடன் இயற்றல்

தன்னிக ரில்லான் தழலெழும்ப மூட்டினனே.
சென்னிற வானம்போற் செழித்த செழுஞ்சுடரே
அண்டமுந் திக்கு மகிற்புகையாய் மூடியதால்,
சண்டன் மயானத் தழற் புகையி லேமூழ்கித்
தொல்லை யமரில் தொலைந்தமன்னர் சுற்றமென
எல்லவனு மேற்கடலி லேபோய் முழுகினனே.
வெங்களத்தில் தானிறந்த வேந்த ரடங்கலுமே
தங்கு மழற்கொழுந்தாற் றங்களுரு மாறினரே.

காலைப் பொழுது தோன்றுதல்

பொங்கு கிரணம் பொலியக் குணதிசையில்
செங்கதிரோ ராயிரந்தோன் தேருதையஞ் செய்தனனே
சங்கங் களங்காணச் சருக்கந்தனை முகித்தே,
கங்கைச் சருக்கங் கவலுவோர்[1] மம்மானை,

ஸ்ரீராமஜெயம் வீரய்யன்

முன்னிற்க வேண்டியது

---

1 ஒலியாமல் கூறுவோம்

கங்கையாடிய சருக்கம்

திருதராட்டிரன் ஏனைய மகளிர் எல்லோரும் கங்கை அடைகின்றனர். கங்கையின் இனிய காட்சிகளைக் காண்கின்றனர். முனிவர்கள் வருகின்றனர் இறந்தோருக்குப் பிண்டம் அளிக்கப்படுகிறது. கங்கையில் நீராடித் தானம் வழங்குகின்றனர். அனைவரையும் வணங்க, அனைவரும் வாழ்த்துகின்றனர். அனைவரும் தலைநகர் அடைகின்றனர்.

ஹரி ஓம் நன்றாக, குருவாழ்க, குருவே துணை

சங்க ரன்றிருக் கரத்தனு வொடித்தகை
மங்கை கோபியர் தனமருவி வாழ்ந்தகை
அங்குயர் சமரி லாதவன் மறைத்தகை
மங்கிடா தடியரை வளர்க்க வந்தகை
கங்கை யுற்பத்தி யாய்க்கமழ வந்ததாள்
வெங்கயம் வேண்டமுன் விரைவில் வந்ததாள்
மங்கையா விலங்கையைப் பிடித்து வந்ததாள்
எங்களைக் காக்கவந் தெழுந்த தாளதே

காலையில் ஏனையோர்களோடு திருதராட்டிரன் அடைதல்

போது விடிந்ததற்பின் புங்கவி யாசன்முதல்
நாதந்தரு நாரதன் தவுமியன் பலரும்
சுற்றத் தவருந் துடர்பஞ்ச வர்விதுரன்
மற்றுத் தவரோடு மன்னர்மன்னன் தானடைந்தான்
கற்பிற் சிறந்தகுந்தி காந்தாரி தீய்ப்பிறந்தாள்

பெண்டிர் போர்க்கள வழி நடந்து கங்கை சேர்தல்

பொற்புள்ள மங்கையுடன் பூவையர்க ளெல்லாரும்
கூந்தல் விரித்தாற்றிக் கூந்தன் மயில்போலச்
சேந்து நடப்பவடிச் செந்நீரிலே தோய்ந்து
இசைந்த வடிச்சுவடு மேசுமந்து கண்டமையால்
பசைந்த கொடியனையார் பாதபரி சொன்னமதாம்

பொன்முலைப் பாரம் பொறுக்கா திடைதுவள
நொன்மலர்ப்பூம் பாதமதில் நூபுரங்கள் தானலற
பஞ்சினு மேன்மைப் பதங்கள் சிவப்பேற
அஞ்ச[1] மெனவே யருட்கங்கை சேர்ந்தனரே

சோலை கண்டு துயர் தீர்தல்

வண்டருப் பூந்தேன் மழைபொழியப் பலவாசம்
எண்டிசையுந் துன்ன இளந்தளிர்ப்பூங் காய்கனிகள்
கொண்ட பொழில்வண்டு குமுற மயிலாடத்
தண்டலையைக் கண்டார் தணந்தார்[2] துயரடங்கச்

---

1 அன்னம்

2 பிரிந்தவர்

கங்கைக் காட்சி

சேந்த பொழிலருகிற் சீரான கங்கைநதி
சாந்த குணத்தோர் தனைப்போல்நீர் பொங்கியதே

பட்சி விகற்பம் பகீரதி[1]யெங் கும்பரவ
மட்ச விகற்பம் மலைகள்மலை போலுலவ
ஒளிர்கயற் கண்ணாக வோதியே[2][3] சைவலமாய்[4]
நளின[5] முகமாய் நறைத்துளி[6] கண்நீராய்ப்
புளின[7] முலையாகப் புள்ளினொலி புலம்பக்
குளிரலைக் கைகளொடு கங்கையெதிர் கொண்டழைத்தாள்

முனிவர்கள் சேர்தல்

முனிவர்கள் தத்தம் முறையிலிற் சேர்ந்துமொய்ப்ப

பிண்டக்கிரியை புரிதல்

இனமொடு வேத வியாசன் சடங்கியற்ற
முரசக்கொடி வேந்தன் முன்னமே கன்னனுக்குப்
பரிசமுடன் நினைந்து பிண்டம்நேர்ந் திட்டனனே

பின்னரவக் கேதன்முதற் பின்னவர்க்கும் நேர்ந்தனனே
மன்ன ரெவவர்க்கு மற்றதற்பின் நேர்ந்தனனே
முன்னு பிதிர்க்கடவுள் மொய்த்தவைவந்து எற்றதுவே
மன்னு தருமனையும் வாழ்த்தியும்பின் னேகினரே

கங்கையாடித் தானம் வழங்கல்

துக்க மகன்றுகங்கைத் தூயநீ ராடிவந்த
தக்கவர்க்கு எண்ணிரண்டாந் தானம்[8]வழங் கிப்பாவை
பக்கமுறு மீசன்[9] பதம்பணிந்து மால்மாயன்

---

1 கங்கை
2 வில் மீன்
3 கூந்தல்
4 நீர்ப்பாசி
5 தாமரை
6 தேன் துளி
7 மணல் மேடு
8 பத்துவகைத் தானம் (எட்டு + இரண்டு)
உப்பு, எள், நெய், நெல், பசு, பூமி, பொன், ஆடை, வெல்லம், வெள்ளி ஆகியன கொடுத்தல்
9 பாவை பக்கமுறும் ஈசன் — சிவன்

செக்கர் மலர்ப்பாதந் திருமுடியினாற் பணிந்தான்
தம்பிய ரோடுந் தருமன் பெருந்தகப்பன்

வணங்கலும் வணக்கம் ஏற்றலும்

செம்பதுமத் தாள்போற்றிச் சிற்றப்பன் றாள்போற்றிக்
காந்தாரி குந்தி கழற்பாதந் தான்வணங்கிச்
சாந்துதன துகளற்ற தாளிலே தான்வீழ்ந்து
தன்னை வணங்குமின்னார் தன்வணக்கந் தானேற்றுப்
பரிதேர் இபங்கள் பதாதி யெதிர்வரவே
விரிவான வாகனத்தின் மீதேறிப் பல்லியங்கள்
வேலையொலி போல வேமுழங்க வெவ்விருதும்

தலைநகர் அடைதல்

சாலவே முன்பின் சலதிப்[1] படைசூழ
வானோர் மதிக்க வளநகரி[2] தான்குறுகித்
தேனார் மலர்மார்பர் சேர்ந்தனர்கா ணம்மானை

கங்கைச் சருக்க முற்றிற்று
ஸ்ரீராமஜெயம் ஸ்ரீ கிருஷ்மூர்த்தி பாதார
விந்தமே துணை தருமராசாக்கள்

வீரய்யன் துணை

---

1 கடல்
2 செழிப்பு மிக்க அத்தினாபுரம்

அபிடேக மன்னர் முடி சூட்டுச் சருக்கம்

அத்தினாபுரி நகரத்தின் மதில், அகழிச் சிறப்புக் கூறுதல். மாளிகைகள் சிறந்து விளங்குகின்றன. பாண்டவர் அரண்மனை சேர்கின்றனர். திருதராட்டிரன், முடி சூட்டுமாறு வியாசரிடம் வேண்டல். பலநாட்டு மன்னரும் வருகின்றனர். நகர் அலங்கரிக்கப்படல். மகளிர் ஒப்பனை செய்து திகழ்தல். தருமன் ஒப்பனை செய்து விளங்குதல். முடியினை வியாசர் சூட்டுதல். வாழ்த்து. தருமன் நல்லாட்சிப் பயன்.

நீல மேனியை நீள்கழல் வில்லியைப்
பால னாகப் படைத்த பரமனே
சால சந்ததி யிவனு மாகினான்
கால னாதத லெனக்கே கடவதே

கடவுள் வாழ்த்துக்காப்பு முற்றும்

அத்தினாபுரி நகரத்தின் சிறப்பு

அநதநகர்த் தோற்றமதை அனந்தன்[1]தன் நாவுகொண்டு
எந்தத் தினமு மியம்பவென்னால் முற்றாதே
முந்தையோர் சொன்ன முதுமொழியா லேயானும்
புந்தியா ரச்சிரசில் புகலத் துணிந்தேனே.

புரிசை இயல்பு

அனந்தஞ் சேனாமதி யொன்றாகச் சுடரெழும்பிக்
கனந்தங்கு மேழ்வான் கடந்துமேற் றானெழும்பித்
தனந்தங்கள் கையும் தன்பதியும் தானகைத்து
இனங்கொள் பெரியோ ரிதையம் போலெப்பொருளும்
உள்ளடக்கி மாயோன் உதரம்போ லாதரித்து[2],
எள்ள லறக்காக்கு மெழில்புரிசை[3] யம்மானை,

பொற்புரிசைச் சாளரத்திற்[4] போதமுட னென்னாளும்
விற்பரிதி இந்து[5] மிகச்செல்வ தம்மானை.

அகழிச் சிறப்பு

சத்த சமுத்திரங்கள்[6] தானேழை யுந்திரட்டி
வைத்த தெனலாய் வளைந்தவர்கள் அம்மானை
அவ்வகழி லேயோர் அருமலையைத் தள்ளிவிட்டால்
வெவ்வற லிற்போர் விசையவே தான்றேய்ந்து
அந்நீரில் நீராய் அதுபோவ தல்லாமல்

---

1 ஆதிசேடன்
2 அன்பு கூர்ந்து
3 மதில்
4 பலகணி - (சன்னல்)
5 விற்பரிதி இந்து = ஒளியுடைய சூரிய சந்திரர்
6 ஏழு சமுத்திரங்கள்

கன்னே ரொருகா செடைநிலமும் காணாது
ஓடை யதனில் உலவுங்கார் நிலத்தில்
சாடையா யொன்றருத்துந் தானா யிரம்கரியை

அக்கார வாயிரகு மாரன்கயற் பருகும்
மிக்ககயல் ஆயிரத்தை ஆனைபெரு மகரம்
பச்சன[1] மாகப் பருகிவிடு மம்மானை

அத்தினாபுரம்

அந்தப் புரிசைதிகழ் அத்தினாபுரி நகரம்
இந்துதிகழ் ரெண்டா யிரத்தெண்ணூற் றிருங்காதம்
நாலு திசையும் நலஞ்சிறந்த நன்னகரம்
சாலவே செல்வம் ததும்பும் பெருநகர்காண்
அளகை[2] தனையும் அமரா பதி[3]தனையும்
வளமையி னால்வென்ற மகாநகர்கா ணம்மாணை

மாளிகைகள்

வேள்வி முயலுகின்ற வேதியர்தன் மாளிகையும்

சூழ்விசைய மன்னர் சுடர்மணியார் மாளிகையும்
வாழ்வினால் மிக்க உழவர்திரு மாளிகையும்
உழவியர்பின் மிக்க உழவர்திரு மாளிகையும்
மற்றுமுள்ள சாதி முறைமன்னர் மாளிகையும்
தேர்த்துகள் ஓங்குஞ் சிறப்பான வீதிகளும்
எல்லாங் கடந்து வியல்பான கோயில்[4]முனம்

பாண்டவர் அரண்மனை சேரல்

வல்லான ரதங்கள்தங்கள் வாகனங்கள் விட்டிழிந்து
வெற்றி பரவுதிறல் வேந்தருடன் பஞ்சவரும்
கொற்றமுடி வேந்தன் கோயிலிற்சென் றெய்தினரே
எய்தி யிருந்து யியல்பாய் முனிவோரை

மெய்திகழும் தனமணிந்த மேதினியெல் லாம்புரக்கத்
திருவபி டேகந் திருமா முடிசூட்ட

---

1 பலராமன்
2 அளகாபுரி - குபேரன் தலைநகர்
3 இந்திரன் தலைநகர்
4 அரண்மனை

திருதராட்டிரன் முடிசூட்டுமாறு வியாசரிடம் கேட்டல்

அருளுமெனத் திரித ராட்டிதனும் தான்கேட்க
வேத வியாசருடன் மிக்கோரும் தானிசைந்து
போத வொருநாள் புகன்றனர்கா ணம்மானை
பாமுனிவோர் சோதர் படிமுரச கேதனர்க்கு
பாமுடி சூட்ட வளர்தேச மன்னருக்கு
ஓலையுந் தூது முரவோ லனுப்பிடவே

பன்னாட்டு மன்னர் வருதல்

சீலமுடன் எண்ணேழு தேயந்தனில்[1] வாழ்ந்த
மன்னவர்கள் மன்னர்களு மற்றுமுள்ள வேந்தர்களும்

தன்னிதையங் கூர்ந்து சலதியென வந்துமொய்த்தார்
விண்ணா டுறைந்திருக்கு மெல்லியர்கள் யாவரொடும்
உண்ணாடு மேன்மை[2]யுள்ள வும்பர் முனிவரொடும்
கண்ணா யிரம்படைத்த காட்சியுள்ள காவலனும்
மண்ணாட்டில் மிக்க வளநகரில் வந்துமொய்த்தார்

— — — —

— — ... —

... — — —

... — ... —

மங்கையர் மற்றுளோர் வந்து கூடுதல்

பாலோதனம்[3] தேன்சோறு பயிலுகின்ற பாவையரும்
சாலப்பெரு வாழ்வு தங்களுக்கே வந்ததென
மேலத் தினபுரியில் மேவி யடைந்தனரே

முடிசூட்டு பற்றி முரசறைதல்

யானைத் திறன்மேல் அதிர்முரசம் தானேற்றி
மானத் துடனிசைந்த வள்ளுவர்க ளெத்திசையும்

ஞானத் தருமனுக்கு நன்மகுடஞ் சூட்டலென்றே

1 ஐம்பத்தறு தேசங்கள்
2 அத்தோடு நோக்கு யோகச் சிறப்பு
3 பகற்சோறு

ஏனத் துடன்முழக்கி யெத்திசையுங் கூறினரே
முரசோதை பொற்கேட்டு முன்னமே யாவர்களும்
கரைசேரும் வீதி கன்னல் நிரைத்திடுவார்

நகர் அலங்காரம்

வரைதோ ரணங்களுடன் வாழை வரிக்கமுகும்
நிரை நிரையாய் வீதி நிரைத்தார்கள் நீள்நகரோர்
பூரித்து அணியணியாய்ப் பொற்குடங்கள் தானிறைப்பார்
வேரித் தொடையல்[1] விளக்குடன் நிறைப்பார்
பாரித்த வாசப் பனிநீர்கள் வீசிநிற்பார்
வாரிச் செழுங்களபம்[2] வாயிலெங்குந் தானிறைப்பார்

தேரிபங்கள்[3] வாரியெல்லாஞ் சிங்கார மாகநிற்கும்
சாரமுடன் பூண நல்ல தார்மணிகள் தான்பூட்டிப்
பாரோ ரதிசயிக்கப் பல்கால லங்கரித்தல்
ஆரே பிரித்துவிரித்து ஆய்ந்துரைக்க வல்லாரே
பொன்னகரி லந்தகரம் பொற்பா யலங்கரித்தார்
எந்நகரி லிந்நகர மேற்றமென்றான் இந்திரனும்

ஆடவர் பெண்டிர் ஒப்பனை செய்தல்

ஆடவர் மைந்தர் அரிவை முதலானோர்
சேடு மணிபணியால்[4] தேமெழில் செய்தனரே
ஒன்னா ருயிருண்டு உறங்குங் கதிர்வேலான்
மன்னோர் பணிதருமன் வளமை யெடுத்துரைப்பாம்

தருமன் செயல்

ஏழு நதிப்புனல் எந்தெந்த நதிப்புனலும்
சூழுந் திரைப்புனலுஞ் சொன்ன நல்ல வோரை[5]தன்னில்
வேள்வித் தொழிலோர்கள் வேந்தன் றனையிருத்தி
ஊள்வெற்றி வேதத் தொலிமுழங்கச் சூட்டினரே[6]
பூவாழத் தர்மன் புனல்மூழ்கி முந்நூலும்[7]
மாவாழு மார்பில்[8] வரிசையுடன் புனைந்து

---

1 வேரித் தொடையல் = தேன் துளிக்கும் மாலை
2 மணப்பொருள்
3 தேர்களும் யானைகளும்
4 மணிகள் பதித்த ஆபரணம்
5 நன்முகூர்த்தம்
6 நீராட்டினர்
7 பூணூல், முப்புரிநூல்
8 இலக்குமி வாழும் மார்பு

வேதியர்க்கும் மிக்கோர்க்கும் மிக்காய் புலவோரார்க்கும்
சாதகமாய் எந்நாளுந் தானே யிரப்போர்க்கும்
மங்கைய பூபன் மகிழ்ச்சிபெற யீவதுபோல்
பொங்குங் கனகப் புயல்போல வேதருமன்

சொரிந்த நிதியே தோன்றுந் தனமலைபோல்
பொருந்திய வாழ்வும் புகழ்படைத்து வாழ்ந்திருந்தார்
இச்சித் தவரவர்கள் ஏதேது இரந்ததெல்லாம்
மெச்சித் தருமபிரான் வேண்டுவதெல் லாமீய்ந்தான்

ஆசனத்தில் இருத்தல்

தேவர் கம்மியோன் சிறப்பஊர் பண்புசெய்து
ஓவியந் தீட்டி யுவமை யுரைக்கரிதாய்த்
தாவிக் கதிர்பாயந் தங்கத் தவிசிருத்தி
மேவினர்கள் சிங்காரம் செய்யும் விறற்றொழிலோர்

அணிகள் புனைதல்

உதய கிரியில்உதயன் என்னத் துலங்கும்
கதிர்க்குண மிரண்டு காதுக்குந் தானணிந்தார்,

மார்பி லிரவி மதிக்கிரணம் கொப்பளிக்கும்
சீர்பணியின் மாலைச் சிறப்பாக வேபுனைத்தார்.
தூணியி[1] னோடு துலங்கவே நற்பதக்கம்
வேணபணி யுமெழில் விற்றிகழ வேபுனைந்தான்
கற்பகத்தைச் சுத்துங் கனபொற் கவைநாவின்
சர்ப்ப மெனவாகு வலையங்கள்[2] தரரினொடும்
வெற்பனைய தோளணிந்து மிக்கவள வில்லாத
பொற்புறுசெம் பட்டாடை போத மருங்கணிந்தான்,
தொடுகடல் மன்னர் சுடர்மகுடந் தான்றோய்ந்து
விடுசுடர் மிக்கான வீரமணிக் கிண்கிணியும்[3]

அடியிற் புனைந்தனந்த மாதவனொன் றானதுபோல்
வடிவின் கிரண மணிமா மவுலிதனை[4]
மங்கல மேழ்வகைப் பல்லிய[5] முழங்கத்
துங்கமறை யோர்சொல் சுருதியொலி முழங்கத்
தங்கத்தில் மிக்கபல சங்கத் தொனிமுழங்க

---

1 அறம்பறாத்தூணி, அஸ்புப் புட்டில்
2 தேளணி
3 காலணி
4 கிரீடம்
5 பல இசைக்கருவிகள்

துங்கமாம் பஞ்சத் தொனியி னிசைமுழங்க
முறைசாய் மரைகவரி[1] முற்றிருபாரத் தானிரட்ட
விறல்கொள் முழுமதிய வெள்ளைக்குடை நிகழ்த்த
அறைகழால் தம்பியர்கள் அந்நால் வருஞ்சூழ
கறையற்ற சற்பணங்கு காவலர்கோ மான்றருமன்

அரியா சனமீ தாசர் சிகாமணியாய்[2]
விரைவாக வந்திருப்ப வேதவி யாசமுனி
திருமா தனையவெழிற் றேவி துரோபதியாள்

முடியிணை உரியோர் கொடுக்க வியாசன் சூட்டல்

தரவே யவனியெல்லாந் தான்வாழ்த்த வேணுமென்று
மங்கைய பூமன் மரபுளோர் தாங்கொடுக்க
அங்கையில் வாங்கி யவனியெல்லாந் தான்வாழ்க
சுருதி மறையோர் கபசோ பனம்[3]கூறத்
தருமன் சிரசு தனில்மவுலி சூட்டினரே

வாழ்த்து

பூமாது வாழ்க புயல்மாதுந் தரன்வாழ்க
நாமாதும் வாழ்கமகி னமாது மேவாழ்க

வேதங்கள் வாழ்க விரும குலம்வாழ்க
தாதொன்று பூமார்பர் சத்திரியர் தான்வாழ்க
வாழ்வில் முகிந்த வைசியர் குலம்வாழ்க
சூழ்வினையுஞ் செல்வமுடன் சூத்திரர்கள் தான்வாழ்க
எக்குலமும் வாழ்க வியல்பாய் மழைபொழிந்து
மைக்குலமுலம் வாழ்க மதிகதி ருந்[4]தான்வாழ்க
எறும்பு கடைமத் திபமே[5] முதலாக
உறும்பல் உயிரும் உயரூழி தான்வாழ்க
செங்கோலும் வாழ்க செகமெங்குந் தான்வாழ்க
எங்கோன் தருமன் எழில்துணையுந் தான்வாழ்க

நாவலர்கள் பல்லூழி நன்மையுடன் தான்வாழ்க

---

1 வெண் சாமரம்
2 முடி மணி
3 சுப வாழ்த்து
4 சந்திர சூரியர்
5 யானை

தன்னுயிரின் மிக்காகத் தாங்கிச் செகம்புகழ்ந்து.
செவிகைப்பச் சொற்பொறுத்துச் சீத மணிமதிய
கவிகை[1] நிழலில் உலகங்கள் குடியிருப்ப,
சீர்விளங்க நாளுஞ் செகம்விளங்க வேமேழி
ஏர்விளங்கப் பஞ்சவர்க ளெண்டிசையு மேபுனைந்தார்.
நாடு செழிக்க நகர்செழிக்க நற்குடிகள்
வீடு செழிக்க விறலாக வாழ்ந்திருந்தார்

வெட்டென்பார் வாலி[2]களை மிக்கவறஞ் செழிக்கக்
கட்டென்பார் கோயில் கரைசந் திரங்கடன்னைத்
தட்டென்பார் வட்டமுடன் தான்சேர்ந்த வஸ்துகளைத்
திட்டென்பார் பொன்மணியைச் சேத்தொதுக்குங் குப்பைகளை.
பரியென்பார் மீனைப் படுக்கும் பரிகளினை
வெரியென்பா ராட்டை, வினையென்பார் நல்வினையை
மறி[3]யென்பர் மானசமும்[4] மாவின் குருளையையும்
சொறியென்பார் பாகற் சுளைமுட் புறக்கனியை
காயென்பர் பனைமரத்தின் காயை நெடுநாளை
நோயென்பர் வேறுமொரு நோயில்லை யந்நகர்க்கே.

பஞ்சமென்பர் பாஞ்சுகளைப்[5] பஞ்சமோரு நாளுமில்லை
கொஞ்சமென்பார் மாதரிடை[6] கோதிலது கொஞ்சமில்லை
நஞ்சமென்பார் மாதர் நயனமன்றி நஞ்சுமில்லை
குஞ்சமணித் தொங்க[7]லன்றி குஞ்சமெனுஞ்[8] சொற்இல்லை
அடிப்பது காத்து அடிவேதனை களில்லை
முடிப்ப தலர்கள் முருக்கென்பர் கிஞ்சுகத்தை[9]

குலையென் பதுகுரும்பைக் கொல்லென்பது இரும்பை
அலையென்பது திரையை யகமென்பது மனையை
கலையென்பது பனுவல் கழலென்பது மதுவை
இலையென்பது இலையை இல்லென்பது வீட்டை
மலையென்பது வரையை மையென்பது அஞ்சனத்தை
உலையென்பது வுலையை யோதமென்பது சாகரத்தை[10]

---

1 குடை 2 குறம் 3 மறி - ஆடு மான் முதலியவற்றின் பெண் விலங்குமாகும்
4 மானசம் - (மான் + அசம்) மானும் ஆடும் 5 பஞ்சு 6 பெண்களின் இடை
7 மாலை 8 கோள் சொல்லல் 9 முள் முருக்கு 10 கடல்

காய்தல் வெயில்நிலவ[1], கண்ணல் மனதுணர்வு
பாய்தல் புனல்பரிமான் பாய்வே தனைகளில்லை
சாய்தல் நிழற்சாய்கைச் சாய்வு தளர்வுமில்லை
தேய்தல் பவம்பகைகள்[2] செம்மையொன்றுந் தேய்வதில்லை
ஆகாத தொன்றுமில்லை ஆனதொன்றுஞ் சேதமில்லை
சாகாப் பகைஞரில்லை சற்குணமில் லார்களில்லை
இன்பங்க ளெல்லாம் இசைந்தே தழைத்தோங்கத்
துன்பங்க ளெல்லாஞ் சுடர்ப்பனிபோ லேதுலைய
மண்ணெல்லாம் வாழ்க மனு[3]வெல்லாந் தான்தழைக்கக்
கண்ணெல்லாஞ் செல்வங் கதிக்கக் களித்திருந்தார்
எண்ணேழு தேம்[4]புரக்கு மிராசர் திறையளக்க
மண்ணே ழையும்புரந்து வண்மையுடன் வாழ்ந்திருந்தான்
வண்ணஞ் சிறந்த மணிமகுட லர்த்தினரும்
எண்ணஞ் சிறந்த வெழிற்பட்ட வர்த்தினரும்
பற்பல தேசம் பாரரசர் வர்க்கமெல்லாம்

தம்பியர் சூழத் தருமன் ஆளல்

அற்புதமாய்ச் சூழ வரியாசன மீதில்
தம்பிமார் நால்வர் தனக்கோ ரொருபடிக்கீழ்க்
கெம்பீரமாய்ச் சூழக் கேசரிபோ லேதருமன்
தன்தார தார பிறதார புத்திரனாம்
பொன்தார் தருமபிரான் பூபால கன்தருமன்
பூபால கன் தம்பை புண்ணியநன் னாடதிபன்
மாபால கன்எனவாழ் மங்கைய பூபாலனணி
பொற்குவளை மாலைப் புயமார் பகந்துலங்க
நற்கனகச் செங்கோல் நடத்தியுல காண்டிருந்தான்
மதிய நிலவுமிழும் வண்ணக் குடைநிழற்ற
பதிமதிக்குஞ் சாய்மரையீர் பாலுங் கவரியிடத்
தெள்ள முதமானகவி செந்தேன் கலிசொரிய
தள்ளரிய ராகந் தமிழ் காதினிற்சொரிய
மிக்கபஞ்ச வாத்தியங்கள் மேன்மேலு மேமுழங்க
தக்கமணிச் சிங்கா சனமீ தரசிருந்தான்.
பஞ்சவரும் வாழி பலதேச மும்வாழி,
மிஞ்சும் நெறிநீதி மிக்கோர் களும்வாழி,

---

1 கதிரொளியும் நிலவொளியும் 2 பிறப்பும் பகையும்
3 மக்கள் குலம் 4 தேயம்

சீர்வாழி பார்வாழி செங்கோலுந் தான்வாழி.
கார்வாழி ஏர்வாழி கற்றோர் மிகவாழி.
பல்லுயிரும் வாழி பகர்கா வியம்வாழி,
பூபதியா மங்கையபூ பாலனரு ளும்புதல்வன்
தாபரமாஞ் சக்கபூந் தாருவென வேவாழி
இக்காவியந்தா னெழுதினோர் பேணி வந்தோர்
சிக்காமல் அர்த்தம் தெளிந்துரைப்போர் தான்வாழி
படித்துக் கொடுப்போர் படிப்போர் களும்வாழி
தொடுத்து நிதங்கேட்போர் துங்க முடன்வாழி
கூலி கொடுத்தெழுதிக் கொள்கையுடன் பேணிவைப்போர்
சாலவே செல்வந் தழைந்தோங்கிந் தான்வாழி
முக்காலுங் கேட்போர் முயற்சியுடன் ஆராய்வோர்
எக்காலுஞ் செல்வமுடன் இந்திரனைப் போல்வாழி!
படிக்கத் தெரிந்தோரைப் டண்பாக ஆதரித்துத்
திடத்தினுடன் கேட்போர் சீர்பெருகி யேவாழி
உறுதியாய்ச் சித்தம் உகந்துகளித் தேகேட்போர்
வறுமைத் துயரகன்று வாழ்விசைந்து தான்வாழி
எந்தப் பிணியும் இசைந்திக் கதைகேட்டால்
இந்துவைக் கண்ட விருள்போ லகன்றொழியும்
எப்பவமுந் தாளீங்கு மெப்பிணியுந் தானீங்கும்
துப்பரவி னோடே துடர்ந்துகதை கேட்போர்க்குத்
துன்ப மகலுந் துடர்ந்துகதை கேட்போர்கள்
அன்புடனெக் காலமொன்றச் சமமாய் வாழியவே!
இந்திர னிடையூ றகத்திச் சந்திர குலத்தரசர்
    குரவியல் பெண்வேண்டத்
தந்தருள் செய்யெனப் பிரமன் சமைத்த
    அளவா கிள்ளிய தலைக்குலிண்டு
பிந்தியனுள் துவாபரத்தில் பலிதருவோம்
    விலக வென்று பிழைத்தோர்க் காக
வந்துயர் பாரத முகிந்த மாயவன்சீர்
    சரண மென்று வாழிதானே!
வாழிவசுதேவன் மகன்வாழி தேவகிமைந்தன் வாழிஐவர்
வாழி திரௌபதி யம்மைவாழி பரராசனருள்மகன்
வியாசன் வாழி - புவிவாழி யரண்வாழி யுமையைங்
கரன்மலர்த்தாள் வேதன்வாழி - வடிவேல் திருவாணி
பாரதத் தமிழும் வாழிதானே

பாரத அம்மானை முற்றும்

சுநவநாரி வருடம் ஆனி மாதம் 17தேதி

பதினேழாந் தேதி சுக்கிரவாரத் தினத்திற்
கூடிய சுபயோக சுபதினத்திற் தொண்டைமண்டல
முதன்மை வேளாளர்களுக்கு ளகரப்பட்டி
சிதம்பர முதன்மையார் புத்திரன் முத்தைய
முதன்மையார் அவர்குமாரன் சிதம்பர
முதன்மையான் மகாபாரத அம்மானை
பாலகாண்டம் யுத்தகாண்டம் இரண்டும்
ஸ்ரீகிருஷ்ண சுவாமி கிருபா கடாட்சத்தினாலே
யெழுதிமுடிந்தது முற்றும்.

தருமராசாக்கள் வீரய்யன் அம்மணிமார் துணை

ஸ்ரீராம ஜெயம்

இந்தப்புத்தகங்களை வாங்கி வாசிக்கின்ற
விவேகசாலிகள் வித்வான்கள் பிழைகள்
இருந்தபோதிலும் யோசித்துத் திருத்தல் செய்து
இதற்குடையவர்களாகிய சிதம்பர முதன்மையார் குழந்தை
வேலு முதன்மையார் புத்திர பௌத்திராதிகளிடத்திற்
கொடுத்துவிடுவார்களா மென்று உறுதியாக
நம்புகின்றனம். முத்தய்ய முதன்மையார் புத்தகம்
எழுதுகின்ற எட்டின்துகைகள் களசயரு
முற்றும். சருக்கங்கள் துகை காய. விகாரி
வருடம் கார்த்திகைமாதம் ௩௰ (முப்பதாந்தேதி) 10

வேங்கட குளத்திலிருக்கும் முருகப்பஉடையார்
மகன் சுப்பிரமணிய உடையானுக்கு இந்த
உயுத்த காண்டம் அறுதியாய்க் கொடுத்து
விட்டேன்

பாரத அம்மானை முற்றும்

அபிதான விளக்கம்

அசுவசேனன்: தட்சனின் புதல்வன். காண்டவவனம் எரியுண்டபோது அங்குப் பாம்பாக இருந்த இவன் அத்தீயில் அகப்பட்டுத் துன்புற்றபோது இந்திரனுல் காக்கப்பட்டவன். பாண்டவருள் அருச்சுனனைக் கொல்ல கர்ணனிடம் நாகாத்திரமாக இருந்தவன். கர்ணன், அர்ச்சுனன் மீது அந்த அந்த அத்திரத்தை ஏவியபோது, கண்ணன் விரகினல் அருச்சுனன் உயிரைக் கவராது, முடியைக் கவர்ந்து வந்தவன். இறுதியில் அருச்சுனனுல் கொல்லப்பட்டவன்.

அசுவத்தாமா : துரோணரின் மகன், தாய் கிருபி. மயில் கொடியுடையவன். பாரதப்போரில் துரியோதனனுக்குத் துணையாகி பஞ்சசிரத்தால் பாண்டவரை கொல்ல முற்பட்டவன். கண்ணன் சக்கரப்படையால் அதனைத் தடுத்துக் காத்தான். மாவீரனை இவன் பாண்டுபுத்திரரால் அவமானம் அடைந்தான். பாண்டவர்படையில் பலரைக்கொன்றவன், பாண்டவர் ஐந்து ஊர் வேண்டத் துரியோதனன் மறுத்ததற்குச் சாட்சி யானவன். கண்ணனால் மோதிரம் வீழ்த்திப் பேதிக்கப்பட்டவன். சிவனருளால் தோன்றியவன்.

அசுவிநிதேவர்கள் : ஆயுர் வேதம் அறிந்த தேவ மருந்துவர்கள் மந்திர ஆற்றலால், இவர்கள், நகுலன், சகாதேவன் இருவரையும் மாத்திரியினிடம் தோற்றுவித்தார்கள்.

அபிமன்னு : அருச்சுனனுக்கு, சந்திரன் அம்சத்தால், சுபத்திரையிடம் தோன்றியவன் மனைவி உத்தரை, பாரதப்போரில் இவன், எதிரியின் படையமைப்புள் புகுந்து வேறு படுத்தித் துன்முகன், விடசேனன் முதலானோரை, அழித்தான். இறுதியில் சயந்தனால் கொல்லப்பட்டவன்.

அருச்சுனன் : பாண்டுவிற்குக் குந்திதேவியிடம், இந்திரனின் மந்திர ஆற்றலால் தோன்றிய மாவீரன். விசயன் காண்டீபன் முதலிய பலபெயர்களால் குறிக்கப்பட்டவன். இவன் குரங்குக் கொடியுடையவன். பஞ்சபாண்டவரில் தருமன், வீமன், ஆகியோருக்குப்பின் பிறந்தவன். கண்ணன் தேரோட்டியாக இருக்கும் பேறு பெற்றவன். வில் வேதத்தில் தலைசிறந்தவன். நாககன்னியை மணந்து இராவானைப் பெற்றவன், சுபத்திரையை மணந்து அபிமனைப் பெற்றவன்.

இந்திரன் : தேவர்களின் தலைவன். வச்சிரபடையுடையவன். கொண்டல் வாகனன். இவன் அருளால் அருச்சுனன் குந்திதேவியின் பால் பிறந்தான், போரின்போது கண்ணன் வேண்டுதலால், அந்தண உருவொடு சென்று கண்ணன் செய்த புண்ணியத்தை ஈரந்து பெற்றவன் அதனால் அவன் போர்க்களத்தில் இறந்துபடும் நிலையினை உண்டாக்கியவன்.

இராசசூயம் : பல மன்னர்களைப்போரில் வென்ற வேந்தன் இயற்றும் ஒரு யாகம். இதனை, பாண்டவர் தலைவனான தருமபுத்திரன் இயற்றி மன்னர் மன்னராகச் சிறப்புற்றிருந்தான். இந்தயாகம் வெற்றிகொள்ளப் பெற்ற வேந்தர்கள் அளிக்கும் திறைப்பொருள் கொண்டு செய்யப்படும் பெரும் வேள்வியாகும்,

இராவான் : இவன் அர்ச்சுனனுக்கு உலூபியிடம் பிறந்த புதல்வன். இவனை அராவான் என்றும் குறிப்பிடுவர். பாரதப்போருக்கு முதற்களப்பலியாகுமாறு துரியோதனனால் வேண்டப்பெற்றவன். பாண்டவருக்குச் சாதகமாம் வகையில் முதற்களப்பலியாகியவன். கண்ணனால் அருளப்பெற்றவன். கண்ணனோடு ஒத்த உத்தம இலக்கணம் அமையப்பெற்றவன். தன்னைப்பலியாக அளித்தும் சில நாள் உயிரோடிருக்கக் கண்ணனிடம் வரம் பெற்றவன் உறுப்புகள் அனைத்தும் பலி கொடுத்தும், மலர்ந்த தீபம் என முகம் கவின் பெற விளங்கி நின்றவன்.

உத்தமோசா : துருபதனுக்கு மகன்; திட்டத்துய்ம்மனின் தம்பி. பாசறைப் போரில். உறக்கத்திலிருந்த காலை அசுவத்தாமனால் கொல்லப்பட்டான்,

உத்தரன் : விராடனின் இளைய புதல்வன். தாய் சுதட்சணை. பாண்டவர் அஞ்ஞாதவாசம் நடத்தியபோது, துரியோதனாதியர் பாண்டவர்களின் இருப்பினை அறிந்து பசுக்கூட்டங்களை கவர முற்பட்டனர். அப்போது உத்தரன் பேடியைச்சாரதியாகக் கொண்டு படையெடுத்துச்சென்றான். படைகண்டு அஞ்சிய நிலையில் பேடி உருவிலிருப்பவன். அருச்சுனன் என்று அறிந்து, அவனுக்குத் தேரோட்டியானான். அவ்வாறு பசுக் கூட்டத்தை மீட்டான். முதல் நாள் போரில் சல்லியனால் இறந்தான்.

உதாமன் : உதாமந்யு எனப்படுவான். துருபதனுக்கு உறவினன்.

உலூகன்: தருமன் கூறியபடி தூதாகச்சென்றவன், விராடனின் புரோகிதன். நான்மறை வல்லவன். பிரமனைப் போன்றவன். சகுனியின் முதல் மைந்தன். பாரதப்போரில் சகாதேவனால் இறந்தான்.

கடோற்கசன் : வீமனுக்கு இடும்பியினிடம் பிறந்தவன். இந்திரன் கண்ணனுக்குக்கொடுத்த வேலால் எறியப்பட்டு இறந்தவன். இவன் புதல்வன் அஞ்சனவர்மன்.

கிருதவர்மா : யதுவமிசத்து கிருதிகன் குமாரன். துரியோதனனுக்குத் துணையாகக் கொடுக்கப்பட்ட யாதவசேனைக்குத் தலைவனாகக் கண்ணனால் அனுப்பப்பட்டவன். சாத்தகியால் பாரதப் போரில் இறந்தான். பாசறைப் போரில் இளம் பஞ்ச பாண்டவரைக் கொல்ல அசுவத்தாமனுக்கு உதவி புரிந்தவன்.

கிருபன் : கௌதமர் வமிசத்தில், ஏகாதசருத்திரர் அமிசமாகப் பிறந்தவன். சதாநந்தருக்கும் அரம்பைக்கும் பிறந்தவர் என்றும். சாத்துவந்த மகரிஷி புதல்வர் என்றும் சிரத்துவான் புதல்வர் என்றும் கூறுவர்.

முதலில் கௌரவ பாண்டவர்களுக்கு வில்வித்தை பயிற்றிய ஆசிரியர். துரி-யோதனனுக்குத் துணையாக்கப்பட்டவர். சமரசத்தலைவராக மதிக்கப்பட்டவர்.

குந்தி : குந்திபோசனின் விருப்ப புதல்வி. தேவமீடனுக்கு மாரிசையிடம் பிறந்-தவள் இளமையில் விசுவாமித்திரரை உபசரித்து அவரால் 6 மந்திரம் பெற்றாள். தனித்திருந்த போது மந்திரத்தைச் சோதிக்க எண்ணி உச்சரிக்க, சூரியன் முன்தோன்றினான். அவன் குந்தியைக்கூட கவச குண்டலத்துடன் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதனைத் தன் ஆடைப்பகுதியுடன் பெட்டியிலடைத்து ஆற்றில் விடுத்தாள். அவன் கன்னன் என்ற பெயருடன் தேர்ப்பாகனால் வளர்க்கப்பட்டான். பின் பாண்டுவை மணந்தாள், ஏனைய ஐந்து மந்தி-ரங்களின் பலனைக் தருமன் முதலியவர்களை பெற்றாள். கண்ணன் ஏவலால் கன்னனிடம் சென்று சில வரம் பெற்று மீண்டாள். கன்னன் இறந்தபோது அவனுக்குத் தாயந்தன்மையைக் கூறி மெய்ப்பித்தாள். வசுதேவர்க்கு உடன் பிறந்த முறையினள் ஆவாள்.

குந்திபோசர் : யாதவ மன்னன் குந்தியை வளர்த்தவன். பாரத முதல் நாள் போரில் அசுவத்தாமனொடு போர் செய்தவன்.

சகாதேவன் : பஞ்சபாண்டவர் ஐவருள் இறுதியில் எண்ணப்படுபவன். குந்தி உபதேசித்த அச்சுவனிதேவ மந்திரத்தால், மாத்திராதேவியிடம் பிறந்-தவன். இவன் மனைவி விசையை. சுகோத்ரன், சுதகர்மா இவன் மக்கள்.

இவன் புகலரிய உணர் உடையவன். முகூர்த்தம் வல்லவன்.

சகுனி : கொடுமைக்கும் வஞ்சனைக்கும் எடுத்துக்காட்டாகத் தக்கவன். காந்தார தேச மன்னனான சுபலன் அல்லது சௌபலனுக்குப் புத்திரன். துரியோதனனுக்கு மாமன் ஆவான். துரியோதனன் மனத்தை வேறுபடுத்தி பாண்டவர்களைச் சூதாடத் தூண்டுவித்தவன். பாரதப் போர் நிகழ்வதற்கு

மூலகாரணமாய்த் துரியோதனனைக் கெடுத்துப் போரில் ஈடுபடச் செய்தவன். இவன் நகுலனால் இறுதி நாள் போரில் இறந்துபட்டான்.

சஞ்சயன் : கவன்கணன் புதல்வன். திருதராட்டிரனுக்கு மிகவும் இனிய நண்பன் குருகுலத்தார்க்கு நல்ல குரு. பாண்டவரிடம் தூதாகச் சென்றவன். வேதமுனி எனப்படுவான். இரவில் திருதராட்டிரனுக்குப் போர் நிகழ்ச்சிப்பற்றிக் கூறியவன்.

சதானிகன் : விராடனின் உறவினன்.

சயத்திரதன் : சிந்து நாட்டு மன்னன். சயிந்தவன் எனப்படுவான். சிவனருள் பெற்றவன். அபிமன்யு கொலையுண்ணக் காரணமாக இருந்தவன். மனைவி துரியோதனன் உடன் பிறந்த துச்சனை. கொடி பன்றிக்கொடி. பாரதப் போரில் ஓர் நாள் அரிச்சுனன் ஒழிந்தவர்களை வென்றான். தன் மகன் அபிமன்னியு கொலைபடக் காரணமாயினமை அறிந்த அரிச்சுனன் மறுநாள் கதிரவன் மறைவதன் முன் இவன் தலையை அறுப்பதாகச் சூளுரைத்தான். கண்ணன் செய்த உபாயத்தினால் அவ்வாறே இவனது தலையை அறுத்து வீழ்த்தினான். சமரதத் தலைவன் என்னும் தகுதி பெற்றவன்.

சல்லியன் : மத்திர தேசத்து மன்னன். துரியோதனன் வஞ்சனையாக அளித்த விருந்தை உண்டு, பின் அவனுக்கே போர்த்துணைவன் ஆனான். சமரதந்தலைவர் தகுதி பெற்றவன். நகுலசகாதேவர்க்கு அம்மான். இவனுக்கு யானை கொடியாகும். கன்னனுக்குத் தேர்ச் சாரதியாக இருந்தவன் இறுதிநாட் போரில் தருமனால் இறந்துபட்டான்.

சாத்தகி : பலராம கிருஷ்ணர்க்குத் தம்பி. பலராமனைப் பழித்தவன். பூரிச்சுவரனால் தள்ளப்பட்டு அருச்சுனனால் தப்பியவன். கிருதவன்மனைக் கொன்றவன்.

சிகண்டி : அலிவடிவாகத் துருபதனிடத்துப் பிறந்தவன். வீடுமனை விண்ணுலகேற்றும் ஆற்றல் பெற்றவன்.

சுவேதன் : விராடனுக்கு மூத்த மைந்தன். தருமனால் சேனாபதி ஆக்கப் பெற்றவன். உத்தரனுக்கு அண்ணன். வீடுமரால் வஞ்சனை செய்து கொல்லப் பெற்றவன்.

தருமன் : பஞ்சபாண்டவரில் மூத்தவன். குந்தி தேவியிடம் கயமன் மந்திரப் பயனாகத் தோன்றியவன், அறத்திற்கும் நேர்மைக்கும் எடுத்துக்

காட்டாவான். இறுதில் அறமே வெல்லும் என்னும் மொழிக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவன். முரசம் இவனது கொடியாகும். இராச சூயயாகம் செய்த பெருமை சார்ந்தவன். அறத்தின் மை ந் த ன் எனப்படுபவன். பாண்டவர் படைக்கு மார்பு போன்றவன்.

திட்டகேது: திட்டத்துய்மன் மகன்

திருதராட்டிரன்: துரியோதனாதியரின் தந்தை. கண்ணிலா அரசன் மனைவி காந்தாரி, வஞ்ச நெஞ்சினள். மூன்று தேசத்திற்கும் தலைவனாதலின் இப்-பெயர் பெற்றான்,

திரௌபதி: பஞ்ச பாண்டவர் மனைவி. கனலிப் தோன்றியவள். பாஞ்சாலி எனப்படுபவள். பெருங் கற்பினள். பெண்ணீர்மை குன் றா த பெருந்திரு என்று புகழப் பெற்றவள். துருபதன் யாகத்தில் தோன்றியவள். அதனால் இப்பெயர் பெற்றாள் சுயம்வரத்தில் அருச்சுனனால் கொணரப்பட்டு. குந்தியின் சொற்படி ஐவருக்கும் மனைவியானாள். சபையில் துச்சாதனன் செய்த அவமானத்தால், அவனையும் துச்சாதனனையும் பாண்டவர் வென்றழிக்கும் வரை கூந்தல் முடியேன் என்று ச ப த மி ட் ட வ ள். இவள் மக்கள் ஐவரும் பஞ்சபாண்டவர் எனப்பட்டனர். தருமனுக்கு பிரதிவிந்தன் வீமனுக்குச் சுருதசோமன் அருச்சுனனுக்குச் சுருதகீர்த்தியும், நகுலனுக்குச் சதா நீகனையும் சகாதேவனுக்குச் சுருதசேரனையும் ஈன்றாள்.

துச்சாதனன் : புயவலியால் திரௌபதியின் துயிலுரிந்தவன். துரியோதனனுக்குத்தம்பி. துசுவசன் எனவும் கூறப்படுவான்.

துரியோதனன் : திருதராட்டிரன் ம க் க ள் நூற்றுருவருள் தலையாயவன், தருமனை சகலையின் போதனையால் சூதில் வென்று அவன் நாட்டைப் பல்-லாண்டு ஆண்டவன். அறம் பிறழிந்தவன், ஐவருக்கு ஐந்து ஊரும், வீடுகளும் கூட கொடுக்க மறுத்தவன். மறம் இறுதியில் தோற்கும் என்னும் மொழிக்கு இலக்கியமானவன். பாம்பினைக் கொடியாக உடையவன். குருநில மன்ன-னானவன். திரௌபதியினை அரசவையில் அவமானப்படுத்தியவன்· வஞ்சகம் நிறைந்தவன். பாசறைப்போரில் அசுவத்தாமனை ஏவி இளம் பஞ்சபாண்ட-வர்கள் கொலையுண்ணுமாறு செய்தான். இவன் மனைவி பானுமதி. மகள் இலக்குமணை. ஓர் இருடி சாபத்தால் தொடையில் அ டி ப ட ச் சாவான் என்னும் சாபம் பெற்றவன்.

துரியோதனனுக்கு துணையானோர் சிலர்: வி ந் த ர ன், விந்தன், சோமதத்தன், கௌசிகன், போசன், ஆதிகேகயன், திசுத்தபூபன், கவுடமன்னன், மாளவன், சோழன், சேரன், ஒகநீகன் நாராயண கோபாலர் பதினாயிரவர்

பூரி சுரவசு, கௌரிமா, துச்சாதனன் முதலியோர். தம்பியர் தொண்ணூற்றொன்பதின்மர். விசுத்தசேனன், பகதத்தன் முதலியோருமாவர்.

துருபதன்: பாஞ்சால மன்னன், யாகசேனன் எனப்படுவான். திரௌபதியின் தந்தை. திட்டத்துய்மன், சிகண்டி, சுமித்திரன், பிரியதரிசனன், சித்திரகேது, சுகேது. துவசநேசன் ஆகியோர் புலவராவர்.

துருவாசமுனி: குந்திதேவி கன்னியாயிருந்த காலத்தில், அவளுக்கு ஐந்து மந்திரங்கள் உபதேசித்து, மகப் பேற்றினைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறிச் சென்ற முனிவன்.

துரோணன்: பரத்துவாச குமாரன்; தாய் மேனகை. சுக்கிரன் அந்தணர் அமிசம் குலத்தோன். துரியோதனாதியர் பாண்டவர் ஆகியோருக்கு வில்வித்தை பயிற்றுவித்த குரு. சுருதியால் உயர்ந்தவன் மனைவி கருபி. பாரதப் போரில் (15ஆம் நாள்) தருமன் கூறிய ,'அசுவத்தாமா அதாகுஞ்சர' என்னும் சத்தம் கேட்டு திட்டத் துய்ம்மனால் உயிர் நீங்கப் பெற்றான்,

துரௌபதர்: துரௌபதியிடம் தோன்றிய ஐந்து மக்கள். இவர் உப பாண்டவர் எனப்படுவர். அவர்கள் பெயர்கள்: விந்தன், சோமன், வீரகீர்த்தி, புண்டலன், செயசேனன்.

நகுலன்: பஞ்சபாண்டவருள் நான்காமவன். அக்கினி எனத்தக்க திறலுடையோன் பாண்டவர் படைக்குக் கால் போன்றவன். பாண்டுவின் மனைவியாகிய மித்ராதேவியிடம் அசுவினி தேவர் மந்திரத்தால் தோன்றியவன்.

பட்டவர்த்தனன்: மகுடவர்த்தனன் எனப்படும் மன்னர்க்கு மேற்பட்டவன். மகுடவர்த்தனன் ஒரு கோடி கிராமந்திற்கும் மேற்பட்ட பகுதியை ஆள்பவன்

பாண்டவர்: பாண்டுவிற்குப் பிறந்த மக்களாவர். அவர்கள் தருமன், வீமன் அருச்சுனன் நகுலன், சகாதேவன் எனப்படுவர் ஐவரும் திரௌபதியை மணந்தனர் துரியோதனன் சூதினால் நாடிழந்து, காடு புகுந்து வாழ்ந்து. பின் கண்ணன் உதவியினால் பாரதப்போர் புரிந்து வெற்றி பெற்று நாடாண்டவர்கள். அறவழிச் செல்பவர்கள்.

பாண்டு: பஞ்ச பாண்டவர்களின் தந்தை. திருதராட்டிர மன்னரின் உடன் பிறந்தவர். குந்தியின் கணவர்.

மகுடவர்த்தனன்: ஒருகோடி கிராமம் ஆள்பவன். பட்டவர்த்தனனுக்குக் கீழ்ப்பட்ட தகுதியுடையவன்.

வராக கேது: விராதனுக்குச் சுரதையிடம் பிறந்த புதல்வன்

விகன்னன்: துரியோதனனின் கடைசித் தம்பி. நீதிகளை நன்குணர்ந்து பேசுபவன். பதினான்காப் நாட்போரில் வீமனுடன் பொருது மாண்டான்.

விதுரன் : துரியோதனனுக்குச் சிறிய தந்தை பாண்டவர் பக்கம் மெய்யன்பு உடையவன்· வில்வித்தை வல்லவன். தந்துவ ஞான மிக்கவன். கண்ணன் தன் இல்லத்தில் இருநாள் தங்கியதைப் பெரும்பேறாகக் கருதியவன். பாரதப் போரின்போது பலராமருடன் தீர்ந்த யாத்திரை சென்றவன். தந்தை வியாசர் கயமன் அம்சம். பாண்டவர்க்கு நாடு கொடுக்குமாறு துரியோதனனிடம் கூறியவன்.

விராடன் : மச்ச நாட்டார் மன்னன். சுவேதன் உத்தரன் ஆகியோருக்குத் தந்தை. அபிமன்யுவுக்கு மாமன் உத்தரையின் தந்தை. இவன் நாட்டில், பாண்டவர் அஞ்ஞாதவாச காலத்தில் மறைந்து வாழ்ந்தனர்.

விருடசேனன் : கன்னனின் புதல்வருள் மூத்தவன்

வீடுமன் : பீஷ்மர் எனப்படுவார். பெறோர் சந்தனு, பாகீரதி ஆவர். பாரதப் போரில் துரியோதனன் சார்பில் போரிட்டு சிவேதனைக் கொன்றான். பத்தாம் நாள் போரில் தம்மைக் கொல்ல உருமாறிச் சிகண்டி முன்னிற்க ஆயுதம் தொடாது நின்று அர்ச்சுனன் பாணத்தால் மூர்ச்சை அடைந்தார். பாரதப் போர் முடியும் வரை உயிர் விடாது சரப்படுகையில் கிடந்து பின் உயிர் நீங்கப் பெற்றவர்.

வீமன் : பஞ்சபாண்டவருள் தருமனை அடுத்து, இரண்டாமவனாகப் பிறந்தவன். குந்தியிடம் வாயுதேவனின் அம்சமாகத் தோன்றியவன் பெருவீரன். அதற்குத் தகுந்த பேருடம்பினன். இவன் சிங்கக் கொடியுடையவன் இவனுக்கு இடும்பியிடம் கடோற்சகன் பிறந்தான்.

பிழை — திருத்தம்

பக்	வரி	பிழை	திருத்தம்
1	9	கனங்காட்டித்	இனக்காட்டித்
	15	ஒவியம்	ஓவியம்
4	16	ஆயிரங்கணக்ாதன	ஆயிரக்கணக்கான
	30	அடிதளமாக	அடித்தளமாக
	31	போர்களத்தில்	போர்க்களத்தில்
5	2	மலர்ந்தன்றோ	மலர்ந்ததன்றோ
6	1	பற்றியக்	பற்றிய
	4	உதைபொருகளமே	உளதப்பொருகளமே
	7	தமிழ் கல்வெட்டுக்கள்	தமிழ்க் கல்வெட்டுக்கள்
	12	னும் சிறப்பான	றும் சிறப்பான
	16	கால போக்கில்	காலப்போக்கில்
	17	கூறுகின்றன.	கூறுகின்றனர்.
7	11	விருத்தங்களாகிய	விருத்தங்களாலாகிய
	12	பெந்று விளங்குகிறது	பெற்று விளங்குகிறது
	14	ஒரே	ஒரோ
	31	பாடப்பட்டது	பாடப்பட்டன
8	10	ஓசையுடை போன்ற	ஓசையுடைமை போன்ற
9	18	கொடுக்கும்	கெடுக்கும்
	33	நூலில்	நூல்
10	4	சிறப்புடையராயினும்	சிறப்புடையதாயினும்
	7	ஒன்றாக	ஒன்றாகவும்
	24	பாரத பதிப்பு	பாரதப் பதிப்பு
	32	குறிப்பிடதக்கது	குறிப்பிடத்தக்கது
11	6	பாரதங்	பாரத
	7	போர்ச்சருக்கத்தின்	போர்ச்சருக்கத்தில்
	11	மதிப்பினை புலப	மதிப்பினைப் புலப்
	13	பகுதிகளை	பகுதிகள்
	17	அறியலமாயினும்	அறியலாமாயினும்
	31	தம்மை	தம்மைப்
	33	தம்மை புரந்த ஒரு வள்ளளை	தம்மைப் புரந்த ஒரு வள்ளலை
12	2	முடிசூட்டுதலையுமக்	முடிசூட்டுதலைக்
14	2	கபம்	இபம்
15	12	தெல்லால்	தெல்லாம்
	18	பொழிவுற்று	பொலிவுற்று

பக்	வரி	பிழை	திருத்தம்
	30	சருவதார்	சருவதாரி
16	22	கண்டுள்ளார்	தொண்டுள்ளார்
	30	கற்கின்றார்	கூறுகின்றார்
	32	கண்டுள்ளார்	கொண்டுள்ளார்
18	3	தேனா	தேறா
	37	[1]இவ்வடி	[4]இவ்வடி
23	6	குத்தமே[1]	குத்தமே[2]
	8	ஷத்[2]துற்று	ஷத்[3]துற்று
	17	சங்கரித்தா[3]	சங்கரித்தா[4]
	19	பாழி[4]யுடன்	பாழியுடன்
	20	முரசொல்லிக்கும்	முரசொலிக்கும்
	22	துழாயோன்[5]	துழாயோன்
	27	மேனிவண்ணன்[4]	மேனிவண்ணன்
	31	[1]இவ்வடி	இவ்வடி
24	13	எறிருந்தான்	என்றிருந்தான்
25	7	ஆவியுனும்	ஆவியுணும்
	33	[3]பார்த்தன்	[5]பாத்தன்
26	27	இவன்கார்	இவள்கார்
	29	யாதவனே[2]	யாதவனே[3]
	32	கேரடரி	கோடரி
27	5	விறகறிந்து	விரகறிந்து
	23	தலைவன்	தளைவன்
28	17	கண்ணணை	கண்ணனை
	29	கனகன்[1]	கனகன்
	30	கற்றானிடை	கற்றூணிடை
29	28	வீமனெறும்	வீமனெனும்
	30	முடுப்போம்காண்	முடிப்போம்காண்
30	34	தேங்கு	தேக்கு
31	20	மந்தாசிலைத்	மந்தாகினித்
32	9	வாரணங்கள்	வாரணங்கள்[3]
	13	தானரிய	தானறிய
33	21	சிந்தைக்	சிந்தை
	32	[1]பஞ்சாயுதன்	[2]பஞ்சாயுதன்
	38	[2]மஞ்சாள்	[3]மஞ்சாள்
34	15	யவனோக்கத்	யவனோக்கத்
	16	வருதினிக்கும்	வருதினிக்கும்

பக்	வரி	பிழை	திருத்தம்
	22	நீள்களபப்	நீள்களபச்
	26	பூராணமாம்	பூரணமாம்
	29	[1]அனந்தன்	[4]அனந்தன்
	30	நூல்வேதம்	நால்வேதம்
35	8	கழித்தோறாண்	கழித்தோராண்
	30	[1]ஆதிகேசன்	[1]ஆதிசேடன்
37	10	கொண்டிருந்தன்	கொண்டிருந்தான்
38	5	வந்தானா	வந்ததானா
	7	ஞுடர்விளைக்கும்	கிடர்விளைக்கும்
	23	நாடுமழிந்து	நாடுமளித்து
39	21	யாசிலென்ன	யாகிலென்ன
	33	[1]கொருமை	கொடுமை
40	14	துரியோதனனை	துரியோதனனைப்
		போருக்கு	போருக்குக்
42	6	அன்பினுடை	அன்பினுட
	21	வாய்ச்சோல	வாய்ச்சோரி
	29	மாகுமன்	மாமென்
43	18	தானெழிந்தால்	தானழிந்தால்
45	21	உண்ணுவர்கள்	உன்னுவர்கள்
		னுன்னார்கள்	றுன்னார்கள்
46	5	மொழிப்பகர்ந்து	மொழிபகர்ந்து
	33	காணன்	கர்ணன்
47	31	[1]அருச்சுணன்	[1]அருச்சுனன்
48	10	வம்பன்[1]	வம்பன்[2]
49	22	கணணன்	கண்ணன்
50	11	முலையிட்	முறையிட்
	21	விற்றுணி	விற்றூணி
	35	[6]கழுத்தணி	[6]உடைவாள்
52	26	நீங்கச்	நீங்கிச்
	31	அதர்வனம்	அதர்வணம்
53	13	ஒன்டு கண்டாய்	ஒன்று கண்டாய்
54	18	கென்றாசன்	கென்றரசன்
55	6	சொன்னவைக்	சொன்னவை
	20	மாமுனியன்	மாமுனிவன்
57	3	தருவன்னெ	தருவன்என
58	4	கானசைந்தான்	கானடைந்தான்

பக்	வரி	பிழை	திருத்தம்
	9	வரவுக்கர்ண	வரவுகர்ண
	13	பெருகிவின்	பெருகிவிழி
	31	[7]சூரியன்	[1]சூரியன்
59	6	எதிர்வருந்தாம்	எதிர்வருந்தாய்
	13	ஊதாரி[2]	ஊதாரி
	20	என்றுரைத்தான்	என்றுரைத்தாள்
60	22	செருகுமுலைப்	பெருகுமுலைப்
	32	உரைத்தான்	உரைத்தாள்
62	9	உரியயரையும்	உரியாரையும்
63	1	மீண்டன்புடன	மீண்டன்புடன்
	16	நெடிதுப்	நெடிது
64	10	பலபாசை	பலபாசை[1]
65	25	முாசம்	முரசம்
66	2	சதேவன்	சாதேவன்
	16	நாலைமீ	நரலைமீ
	31	மன்னர்க்கோ	மன்னர்கோ
67	23	உருதுகாண்	உறாதுகாண்
70	26	திறிகரட	திரிகரட
74	16	தொகையின	தொகையின்
76	3	உணர்த்த	உணர்த்தி
	22	வீடுமர் தன்	வீடு மர்தன்
78	25	யெல்லால்	யெல்லாம்
	29	பாளிதற்பின்	பானிதற்பின்
79	14	அசலம்[1]	அசலம்
	32	[1]அம்பு	அம்பு
	33	[2]மனத்	மனத்
81	6	வென்றிடுங்கான்	வென்றிடுங்காண்
	8	கவலறம்	காவலறம்
	29	ஏத்தான்	ஏத்தான
82	20	குந்தது[4]மே	குந்தமு[4]மே
83	24	கொய்யுணையின்	கொய்யுளையின்
	29	முரனாய்ப்	முரணாய்ப்
85	5	கற்சி[1]யினம்	கற்கி[1]யினம்
86	11	வாள்பிமன்	வாளபிமன்
	31	[3]எட்டுத்	[1]எட்டுத்
87	26	மெலிவுத்	மெலிபுத்
	31	பரிகாலான்	பரிகாலாள்

பக்	வரி	பிழை	திருத்தம்
88	6	வில்வறுத்து	வில்லறுத்து
90	10	மாவறுந்துத்	மாவறுத்துத்
	11	தேர்க்காலைந்	தேர்க்காலைத்
	12	தேறுந்து	தேரறுத்து
92	31	கைபிடித்த	கைப்பிடித்த
100	22	வியூகம்[3]	வியூகம்
	30	கொண்ட[4]லுடன்	கொண்ட[3]லுடன்
		கோடை[5]	கோடை[4]
101	29	சல்லி யனும்	சல்லியனும்
102	14	தேருடைக்	தேருடையக்
103	24	மேலாள	மேலாள்
104	5	ஒருவேனலை	ஒருவேலை
	17	வனையான	வனையான்
	29	முகம்	முகம்[1]
	30	அருச்சுணன்	அருச்சுனன்
105	15	ரதாந்துணித்துத்	ரதந்துணித்துத்
106	14	தைத்திடவ	தைத்திடவே
	22	தட்டுருவே	தட்டுருவக்
107	28	கொல்லுவே	கொல்லுவேன்
108	4	ஏலெட்டு	ஏழெட்டு
110	19	கள்சருக்கம்	களச்சருக்கம்
111	15	காத்து	காத்துப்
	18	கழிக்கின்றனர்.	கழிக்கின்றன.
113	9	மூண்டதுகான்	மூண்டதுகாண்
114	30	மைந்தன்[2]	மைந்தன்
115	22	விந்ததி	விந்தத்
	35	உற்மலம்	உற்பலம்
116	8	கர்ப்பம் என	கற்பமென
	11	உற்பனமாய்	உற்பலமாய்
117	27	கோல்ததுவக்	கோல்கதுவக்
118	16	ஆகம்[3]	ஆகம்[1]
	20	தக்கணை	தக்க கணை
	23	மெய்முயசி	மெய்முயற்சி
	24	பாணமழை[2]	பாணமழை[3]
121	3	கொழி எழும்ப	கொதி எழும்ப
123	15	பங்கபபட	பங்கப்பட

பக்	வரி	பிழை	திருத்தம்
	19	இதழ் கரித்தான்	இதழ் கறித்தான்
126	9	ககனகப்	ககனப்
	22	எடதிர்கரிது	டெதிர்க்கரிது
127	6	பேபரிடல்	போரிடல்
	22	வென்போறதன்	வென்போர்தன்
	31	²அம்பு	அம்பு
128	19	சுய²மெல்லாம்	சுயமெல்லாம்
	31	தூற்றிலே	நூற்றிலே
130	2	பூபான்ல	பூபாலன்
	8	நாலானாள்	நாலாநாள்
132	1	தன்னந்துழாய்	தண்ணந்துழாய்
	19	வாலாவ்	வாலால்
	32	நின்று	னின்று
135	24	போர்பொருதாள்	போர்பொருதான்
136	1	கற்சி	கற்கி
	4	டவர்கவராய்	டவர்க்கவராய்
	18	வாளியேர்	வாளியோர்
137	26	பெருஞ்சேணை	பெருஞ்சேனை
138	9	நீராக்கி	நீருக்கி
140	19	பொருக்கு	பொறுக்கு
	30	தெனசொலுவாம்	தென்சொலுவாம்
142	7	முதலியரோடு	முதலியவரோடு
146	6	தங்காது	தாங்காது
147	1	தெறிகெட்டனோ	தெறிகெட்டனரே
	19	காமபோசன்	காம்போசன்
148	7	நச்சாடவு	நச்சாடரவு
150	11	கார்க்குனங்கள்	கார்க்குலங்கள்
154	20	பகற்தந்	பகர்தந்
	24	மேயிளந்து	மேபிளந்து
155	6	வேந்தமனர்	வேந்தனமர்
156	23	கனுஷ்டர்²	கனுஷ்டர்
157	15	னோக்கும்	நோக்கும்
159	27	துரோனனேத்	துரோணனேத்
160	13	இலக்கணக்	இலக்கண
162	24	பசிரண்டமும்	பகிரண்டமும்

பக்	வரி	பிழை	திருத்தம்
164	11	வேளால்	வேலால்
165	16	உடைப்பட்	உடைபட்
167	8	தேனும்வய	தேறும்வய
168	24	நிகுபன்	நிருபன்
	29	விசையறுமுன்	விசையனுமுன்
169	19	வணளந்து	வளைந்து
170	18	போர்மூழ	போர்மூள
173	3	நராண	நாரண
	10	காத்திடுமே	காத்திடுவே
	52	கனம்	சணம்
174	1	நீராக்கி	நீருக்கி
175	33	தளர்க்கிக்	தளர்ச்சிக்
176	5	கதிர்முன	கதிர்முன்
	10	சிலைவிதுரன	சிலைவிதுரன்
	11	நினறோர்கள்	நின்றோர்கள்
	12	முணனிட்டார்	முன்னிட்டார்
	30	சகுனிபுரம்	சகுனிபுறம்
177	2	பலசுணையால்	பலகணையால்
	18	வானகக்	வாகனக்
180	1	அரணமும்[2]	அரணமும்[1]
	5	நடலை	நடலை[2]
	24	சுழற்பொறிக	அழற்பொறிக
181	24	துரோட்டி[2]	துரோட்டி
186	27	சிதைவுப்	சிதைவு
	32	மும்முறைத்	மும்முறை
186	6	மருது	மறாது
	7	பேரொளி	பேரொலி
187	20	ரன்சேய்	றரன்சேய்
188	28	திண்சிலைத்	திண்சிலை
189	2	பகழித்தெதிர்	பகழிக்கெதிர்
	3	கோலிகலே	கோலிகல
	25	வெங்கொடுத்தான்	வென்கொடுத்தான்
191	8	தணியனியாய்	தணியணியாய்
192	19	களும்பிளத்து	களும்பிளந்து
	23	பிளத்து	பிளந்து

பக்	வரி	பிழை	திருத்தம்
193	2	சவனைக்கொண்	சீவனைக்கொண்
197	4	கோலியிகள்	கோலியிகல்
198	28	அஞ்சுவே	அஞ்சவே
1!9	11	மாய்சையு	மாய்கையு
206	25	சிந்தாசை	சிந்தரசை
212	4	புகுந்திருந்தான	புகுந்திருந்தான்
	20	படாததெல்லாம	படாததெல்லாம்
213	17	யோசனைதான	யோசனைதான்
214	22	பொற்றோர்	பொற்றேர்
216	7	காமும்	கரமும்
219	1	யிாக்களத்தோன்	யிரக்களத்தோன்
	17	காத்தும்	கரத்தும்
220	2	பாணி:	பாணி₁
	9	சிரமறுத்து	சிரமறுத்த
221	11	காயிரபேர்	காயிரம்பேர்
222	16	அரன்வடிவாம்	அரன்வடிவம்
223	11	நிரை	நிரை
	27	தான்விளங்ச	தான்விளங்க
	30	இருப்புக்கம்பி	நாரைவகை
	35	ல்யிம	மயில்
224	21	கானா	காணா
225	25	ளோர் பகலில்	லோர் பகலில்
	,,	சிந்தாசை	சிந்தரசை
228	31	கன்னன்	கண்ணன்
229	34	மணக்கவலை	மனக்கவலை
230	19	வேந்தன்	வேந்தன்²
232	8	விண்ணனும்	வின்னாணும்
	26	பகைதிறந்துச்	பகைதிறத்துச்
236	25	சினந்தனி	சினந்தணி
237	2	பங்கயபூச்	பங்கயப்பூச்
	21	விண்னோர்	விண்ணோர்
239	11	பினனர்	பின்னர்
240	22	சூரன்கு மரன	சூரன்கு மரன்
243	12	விள்ளோணா	விள்ளொணா
244	11	கியமற்று	புயமற்று

பக்	வரி	பிழை	திருத்தம்
	14	திர்வரனால்	திர்வாளால்
246	9	துச்சனையாள்	துச்சளையாள்
	23	எங்கனுமே	எங்கணுமே
	26	மிட்டார்	மிட்டார்[3]
250	7	மகல் வீமன்	மால் வீமன்
	,,	செய் தேன்	செய்தான்
	14	வெரும்	எவரும்
251	3	மகன்சட்	மகன்பட்
	14	வீழ்ந்தாக்கன்	வீழ்ந்தரக்கன்
	27	கொல் வேஎன்று	கொல்வேனென்று
252	22	வாஸ்வீண்	வாய்வீண்
253	23	போர்மூண்டா	போர்மூண்டான்
254	14	ஞுயோங்கும்	வையோங்கும்
	22	போர்	போர்க்
	30	விந்கணையும்	விற்கணையும்
255	30	நிசா சார்கள்	நிசா சரர்கள்
259	24	நீனானும்	நீநானும்
262	8	சிரணக்	கிரணக்
266	31	நல்லியன்	சல்லியன்
	32	கழல்போர்	கழல்போற்
268	16	விரதம் விறாப்	விரதம் விருப்
270	22	ததத்தனு வாசான	தத்தனு வாசான்
271	26	முற்பட்ட	முற்பட,
273	2	வாள்விரையன்	வாள்விசையன்
276	4	போதகு	போதவு
	28	மீமன்	வீமன்
277	4	யிறையனைய	பிறையனைய
280	15	றுதலுருவ	நுதலுருவ
284	32	நின்றனேவி	நின்றனனே
287	1	அண்ணலவன	அண்ணல்வன

குறிப்பு: 286, 287 ஆம் பக்கங்களிலுள்ள அருஞ்சொற்களின் எண்களும் அவற்றிற்கான பொருள்களின் அடிக் குறிப்பெண்களும் மாறுபட்டுள்ளன. உரிய சொல்லையும் பொருளையும் கண்டு படிக்கவும்.

பக்	வரி	பிழை	திருத்தம்
288	9	சுவேதமா[3]	சுவேதமா[4]
	25	தானமடிந்தா	தான்மடிந்தா
	30	[2]அட்பு	[3]அம்பு
289	3	ஞாளி[1]	ஞாளி
292	3	அசனி	அசனி[1]
	26	ஆழ்ந்ததிரை	ஆழ்ந்ததிரை[2]
294	29	வீமனேடு	வீமனேடும்
296	1	குரளாய்	குறளாய்
	6	நில்நிற	நீல்நிற
298	1	வல்லாண்	வல்லாண்மை
	10	ஓர் அளி	ஓர் அளி[1]
303	24	கண்ணன்	கன்னல்
310	9	அஞ்சிமும்	அஞ்சிமுகம்
311	6	சேனைப்	சேனே
312	4	மகர த்தத்	மகரந்தத்
	6	மாசிப்	மாகிப்
	11	கன்னபோல்	கனன்போல்
314	25	முடிதிகழும் மேல்	திகழும் முடிமேல்
		மூ ஐ வந்து	ஐந்து
318	17	மாறாதமாய்	மாருதமாய்
319	13	யரக்கண்[3]	யரக்கன்[3]
	24	கனையே	கனேயே
320	3	ஒடினனே	ஓடினனே
	21	தான்சொரித்த	தான்சொரிந்த
321	28	வியந்தாளன்	வீய்ந்தானென்
324	16	புவியோர்	புலியோர்
	20	ரசேந்திரன்	ராசேந்திரன்
	25	சராமிலாய்	சாரமிலாய்
325	29	கண்போர்	திண்போர்
327	29	லயனையானும்	லனையானும்
	30	அந்தோனின்	அந்தோ நின்
328	8	காண்பனெைன்று	காண்பனென்று
329	28	எழுகணை	ஏழுகணை
330	16	எய்திருற்	எதிருற்
	11	யெய்தின்னகா	யெய்தினன்கா

பக்	வரி	பிழை	திருத்தம்
	30	மெருக்காக	பெருக்காக
331	3	ரேதையினால்	ரோதையினால்
	4	மண்டுடியை	மண்டிடியை
	5	தத்தும்பமத்	தத்தும்பதத்
332	22	குகுலு	குடலு
334	19	பறதைக்	பறவைக்
336	10	செனறான்	சென்றான்
	23	அநதரும்	அந்தரும்
337	9	சற்றுமணத்	சற்றுமனத்
338	7	எததிர் நடந்தே	எதிர் நடந்தே
	24	எயவர்க்கு	யெவர்க்கு
339	25	சேடன டலை	சேடன் தலை
341	17	தும்பைபத்	தும்பைத
	32	துனைக்கப்	துளைக்கப்
342	5	உயிர்பெறியக்	உயிர்ப்பெறியக்
	15	பாமிரண்டாய்ச்	பரமிரண்டாய்ச்
	18	திரனுமனித்	திரனுமணித்
	27	கிலையு	சிலையு
343	20	மாண்டி	காண்டி
344	6	பொகுவிலா	பொருவிலா
	8	முன்விடன	முன்விடென
	14	நேக்கி	நோக்கி
	15	இச்சாபம்1	இச்சாபம்
	17	யுன்னங்	யின்னங்
	23	கணைக	கணைக1
346	11	கதிர்மளிய	கதிர்மதிய
	26	சேய1	சேயன்1
348	3	சருமேகம்	கருமேகம்
	5	பெருறெப்ப	பெருநெருப்ப
349	5	குறுசி	குறுகி
	20	நீரெண்கலைசேர்	ஈரெண்கலைசேர்
	29	நிலத்தான்	நிறத்தான்
351	7	றுயல் விழ	றுடல் வீழ
	22	ணுக்களித்தால்	ணுக்களிந்தால்
352	7	எமனையேவு	எனையேவு

பக்	வரி	பிழை	திருத்தம்
353	3	தேரருக்கல்	தேரருக்கன்
357	3	வந்தத	வந்த
359	4	யனல்மெழுகத்	யனல்மெழுக
	17	தான்பார்த்து	தான்பார்த்
360	29	கண்ணன்	கன்னன்
361	14	கமலத்திற்	கமலத்தில்
	21	கனைதனக்குந்	கணைதனக்குந்
	28	நிசங்	நிசம்
	30	ஆட்கனைச்²	ஆடகனைச்²
	,,	இராவணணை	இராவணனை
	31	வென்ற	வென்று
362	7	நின்றோரு	நின்றொரு
	,	மற்றோருபம்	மற்றோரும்
363	21	தம்பியரை	தம்பியர்
366	2	குறளாய்	குறளாய்⁴
367	15	வத்து	வந்து
	23	அதிரத்தின்	அதிரதத்தின்
368	24	தானறியன்ா,	தானறியான்
369	8	விரரெல்லா	வீரரெல்லா
	21	திறல்போவுன்	தியல்போவுன்
	22	மூத்தோணை	மூத்தோனை
370	31	வுந்தி அங்கங்கு	உந்தி அங்கங்கே
		வுறு	உறு
371	3[illegible]	பன்மணியன்	பல் மணியின்
373	13	முளையுடன்	மூளையுடன்
	15	தம்பியிடன்	தம்பியுடன்
	29	அருக்கல்	அடுக்கல்
	33	உக்கி	உக்கிர
374	7	சேய்தித்	சேய்சித்
	23	கண்ணனையால்	கண்ணனையாய்
	30	நிலைப்பாடல்	நிலைப்பட்டால்
375	8	மாதரித்திக்	மாதரித்துக்
378	9	தெடியவரி	நெடியவரி
380	17	யினியலவத்	யினியவலத்
381	29	லறுத்து	லறுத்

பக்	வரி	பிழை	திருத்தம்
383	24	முனிநானும்	முனிநாணும்
387	7	உதிரட்டனும்	உதிட்டிரனும்
387	10	மைநன்	மைந்தன்
389	31	கொத்தான்	கொடுத்தான்
390	33	போர்முகமாய்ச்	மோர்முகமாய்ச்
391	14	டிழந்தே	டிழிந்தே
396	7	அயில்வேளே	அயில்வேலை
	31	ஆண்டனக்	ஆண்டகை
397	6	கரிபயிற்	தரிபரியிற்
399	1	னனைவும்	னினைவும்
400	15	உந்தாரஞ்	உத்தாரஞ்
401	1	மறைனேர்	மறைநேர்
402	6	துட்புதைந்தாய்ச்	துட்புதைந்தாய்
403	1	மண்ணோ	மன்னோ
	9	சீவனமே:	சீவனமே:
	13	கெதியன்	கெதியென்
407	4	பஞ்ரவர்கள்	பஞ்சவர்கள்
408	13	நகைந்துத்	நகைத்துத்
	29	அரினாதம்	அரிநாதம்
411	25	உயிர் நிலைக்	உயிர் நிலை
	31	வேபுடைந்து	வேபுடைத்து
413	4	றெறிந்தடித்தால்	றெரிந்தடித்தால்
	10	லெக்குலைத்து	லெக்குவைத்து
	17	ளும்பரெல்லாம்	உம்பரெல்லாம்
	24	டலன்றுடையிற்	டவன்றுடையிற்
414	32	னாடதிபன்	நாடதிபன்
416	21	அரலத்	அரவத்
418	27	பரதலித்து	பரதவித்து
	30	யிவ்விரலிற்	யிவ்விரவிற்
419	7	எறுடன்	ஏறுடன்
	14	றேலர்	றேவர்
	21	ணுடன்பூதம்	னுடன்பூதம்
424	7	சுவத	அசுவத்
	24	னிமைந்தெரிந்து	ளிமைந்தெரிந்து

பக்	வரி	பிழை	திருத்தம்
	25	புதல்வர்க்கிணே	புதல்வர்க்கிளை
426	30	ளம்மானை	னம்மானை
	34	அமுதான்	அழுதான்
427	4	னவலர்	வைவர்
429	19	ருவெனுங்	றானவனுங்
	24	மார்பரைல	மார்பரைவ
430	26	செல்வான்	செவ்வான்
431	20	இந்த	திந்த
	30	லாயுதித்ந	லாயுதித்த
432	18	வியன்றலசி	வியன்றவசி
433	8	ஓக்கலி	ஒக்கலி
	18	சுருளேதி4	சுருளோதி4
434	11	காத்தாரி	காந்தாரி
435	4	சிகடுற்று	சகடுற்து
	5	சரும்பொற்	கரும்பொற்
	7	கந்தை	சிந்தை
	8	கரும்புப்	இரும்புப்
436	30	கபகரச்	கம்பகரச்
441	13	வாகிள்	வாகின்
	20	நேக்காய்	நோக்காய்
443	14	என மதியி	எனமதியில்
444	3	தறுந்து	தறுத்து
445	6	முன்றி	குன்றி
447	5	ஓதுவாயி	ஓதுவாயீ
449	8	விலங்கையைப்	லிலங்கையைப்
450	6	ஒளிர்கயற்	ஒளிர்கயற்2
	16	பின்னரவக்	பின்னரவ
453	4	னாதத	னாத
	17	புரிசை8	புரிசை3
	22	வளேந்தவர்கள்	வளேந்தார்கள்
454	6	பச்சன1	பச்சன
	21	கோயில்	கோயில்4
455	25	அத்தோடு	அகத்தோடு
	26	பகற்சோறு	பாற்சோறு
457	22	தரரிஞெடும்	தாரிஞெடும்
	31	தங்கத்தில்	சங்கத்தில்

பக்	வரி	பிழை	திருத்தம்
	32	அன்புப்	அம்புப்
	33	தேளணி	தோளணி
458	4	அறைகழால்	அறைகழல்
459	8	வாலி²களை	வாவி²களை
	22	சொற்	சொல்
	31	குறம்	குளம்
460	13	லர்த்தினரும்	வர்த்தினரும்
461	20	தாளீங்கு	தானீங்கு
	21	துப்புரவி	துப்புரவி
	35	திருவாணி	திருவாழி
463	5	அந்த	அரவ
	18	அபிமன்னு	அபிமன்யு
465	21	முறையினன்	முறையினள்
	27	உடையவன்	வுடையவன்
466	6	நிகழ்ச்சிப்	நிகழ்ச்சி
	10	துரியோதன்	துரியோதனன்
	,,	துச்சனே	துச்சனை
	18	சமரதந்தலைவர்	சமரதத்தலைவர்
	29	கயமன்	இயமன்